மூலிகைமர்மம்

(நான்கு பாகங்கள்)

"பிரபஞ்ச உற்பத்தி, வைத்தியசிகாமணி, இன்பசரக்கோவை
நாரதர் கலகம், சுகந்த பரிமள சாஸ்திரம், விஷவைத்திய
சிந்தாமணி, கனக சாஸ்திரம், சரீர சாஸ்திரம்
கொழுத்த சிரிப்பு" முதலிய நூல்களுக்கு
ஆசிரியராகிய ஆயுர்வேத வைத்தியர்

சிறுமணவூர் முனிசாமி முதலியார்
இயற்றியது.

சென்னை:
சிறுமணவூர் முனிசாமி முதலியார் ஸன்ஸ்
அவர்களாற்றமது
சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

Copyright] 1924. விலை ரூபா 2-8-0.

786

மூலிகை மர்மம்.

முதற் பாகம்

விநாயகர் துதி.

சித்தர் மூலிகைச் செய்தொழி லோதிட
அத்தி முகத்த னருங்கழல் போற்றுவாம்.

மால்மருகன் துதி.

சித்தரொடு நேராய்ச் சிரித்தே விளையாடித்
தத்தமது வல்லமையைத் தானுரைத்த—பத்திரியாம்
மூலிகையின் போக்கை முழுது மினிதுரைக்க
மாலின் மருகன் றுணை.

சித்தர் துதி.

கற்றுலும்ஞானக் கருத்தறிந்தோர்கள் கமலபதம்
பெற்றுலுஞ்சித்திப் பேரின்பக்கல்வி பிறவாதமுத்தி
வைத்தாலும்வெற்றி யுற்றாவர்பதம் வணங்கவுய்யான்
சித்தாதிசித்தர் பதினெண்மர்தந்த திரவியமே.

மூலிகை சாப நிவர்த்தி.

ஓம் குருப்ப்ரஹ்மம், ஓம் குருவிஷ்ணு, ஓம் குருமஹேஸ்வரம், ஓம் குருசாக்ஷாத் பாரப்ரஹ்மம்ஜகத், குருமூலி, சிவமூலி, சத்திமூலி, விஷ்ணுமூலி, ப்ரஹ்மமூலி, ஓம் குருசாபம்நசி, சிவசாபம் நசி, சத்திசாபம் நசி, ப்ரஹ்மசாபம் நசி, அகஸ்தியரிட்ட சர்வசாபமும் நசி மசி, மசி நசி, ஓம் சுவாஹா:

இந்த மந்திரத்தை ஓடுகிற ஜலத்தில் நின்று ஆயிரத்தெட்டு உருக்கள்ஜெபித்து உருவேற்றி வைத்துக் கொள்ளவேண்டியது.

விபரம்.

எவ்விதமூலிகையாவது எடுக்கவேண்டியவர்கள் ஞாயிற்றுக் கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை இந்த வாரங்களில் சூரியவுதயத்தில் மனமும் தேகமும் சுத்தமுடையவராய் மூலிகையினருகிற்சென்று கிழக்குமுகமாயிருந்து சூடம்கொளுத்தி மேற்கூறிய குருவாக்கியத்தை ஒன்பதுதரம் ஓதி சூரியனை நினைத்து மூலிகையை யெடுத்துக் கொள்ளவும்.

அ

நாபிரணத்திற்கு.

அறுகு என்னும் வெள்ளறுகின்வேரைக் கொண்டுவந்து பசுந் தயிர்விட்டரைத்து புன்னைக்காயளவெடுத்து அரைக்காற்படி பசுந் தயிரிற் கலக்கி அதிகாலையில் சாப்பிடவும். இப்படி காலை மாலை இருவேளையும் 3-நாள் சாப்பிட மனிதனுக்கு ஆதாரமாகிய நாபியிலெழுந்த சூட்டையும் வெட்டையையும் ரணத்தையுந் தணித்து வெள்ளை முதலிய ஒழுக்குகளை நிவர்த்தியாக்கும்.

மேகசுரத்திற்கு.

அறுகு சமூலங் கொண்டுவந்து ஒருபிடியெடுத்து அதனுடன் 13-மிளகு சேர்த்திடித்து அரைப்படி ஜலத்திலிட்டு அரையாழாக்காகச்சுண்டும்படி கியாழமிட்டு காலையில்சாப்பிடவும் இப்படிகாலைமாலை இருவேளையும் 10நாள் சாப்பிட மேகசுரம், உள்ளனல், உடம்பு சூடு முதலியனயாவுந் தீரும்.

மருந்தை முறிப்பதற்கு.

அறுகம்வேர் ஒருபங்கும் மிளகு ஐந்துபாகமுமெடுத்து மிளகை ஒன்றிரண்டாயிடித்து கியாழம்வைத்து இறக்கி அதில் பனங்கற்கண்டு மாதுளம்பூ கூகைநீறு இவைகள் கொஞ்சங்கொஞ்சமெடுத்து நெய்விட்டரைத்து முன் கியாழத்துடன்கலந்து சாப்பிடவும். இப்படி 3-நாள் கொடுத்தால் எவ்விதமருந்து சாப்பிட்டு அதனால் உடம்பில் அனல்மீறி கடுப்பு பேதியுண்டானாலும் நிவர்த்தியாக்கும்.

அஸ்தி வெட்டைக்கு.

அறுகம்வேரை பசும்பாலி லரைத்து மண்டலக்கணக்காக இருவேளையுஞ் சாப்பிட்டுவந்தால் அஸ்திவெட்டை, மூலவெட்டை நீர்க்கடுப்பு இவைகளியாவும் நீங்கும். தேகத்திலுள்ள நரம்புகளியாவும் நன்றாயிறுகி பலப்படும். சகலவிஷமுந் தீரும். (விஷவைத்திய முழுமையும விஷவைத்திய சிந்தாமணியில்) காணலாம்.

வெள்ளைக்கு.

X அறுகஞ்செடி சமூலமும் மிளகும் சமஎடையெடுத்து வெண்ணெய்போலரைத்து முழுக்கொட்டைப்பாக்களவு சாப்பிடவும்,

இப்படி காலை மாலை இருவேளையும் 5-அல்லது 10-நாள் சாப்பிடவும். பத்தியம் சுட்டபுளி, வறுத்த உப்பு வெள்ளை யென்னும் ரோகம் நிவர்த்தியாகும்.

தேகம் தணிவதற்கு

அறுகங்கிழங்கு சூரணித்து சமஎடை வெள்ளைச்சர்க்கரை கலந்து மண்டலக்கணக்காய் இருவேளையும் புசித்துவந்தால் முத்தோஷமும் நீங்கித் தேகந்தணிந்து மேனியுண்டாகும்.

பெரும்பாட்டுக்கு.

அத்திப்பட்டை ஒருபங்கு, கடுக்காய்ப்பூ கால்பங்கு கூட்டி பசும்பால் விட்டரைத்து காலை மாலை புசித்துவந்தால் பெண்கள் பெரும்பாடு, ரத்தக்கடுப்பு, சீதக்கடுப்பு மேகம் முதலியவைகள் நீங்கும்.

மலச்சிக்கலுக்கு.

அத்திக்காயை பாகப்படி சமைத்து உண்டியுடன் உபயோகப்படுத்திவந்தால் மலச்சிக்கல் தேகவனல் சரீரவெப்பம் நீங்கும்.

மேக ஒழுக்குக்கு.

அத்திக்கள்ளு மண்டலக் கணக்காய் ஒரேமுறையாக விடாமல் அருந்தினவர்களுக்கு மேகவொழுக்கு, அதிகமயக்கம் சூடு முதலியவைகள் தணியும். கண் பிரகாசிக்கும்.

சீதபேதிக்கு.

அத்திக்காயை யிடித்து அரைப்படி ஜலம்விட்டு அரையாழாக்காக கியாழம்வைத்து அரைவிராகனெடை மிளகு பொடித்துப்போட்டுக் கொடுக்கவும். இப்படி இருவேளைகொடுக்க சீதபேதி நிவர்த்தியாகும்.

பித்த ஓக்காளத்திற்கு.

அத்திப்பட்டை ஒருபிடி அருநெல்லிக்காய் ஒருபிடி வாழைப்பழம் 4-இவைகளையிடித்து ரசம்பிழிந்து அதில் சீனிகற்கண்டு கொஞ்சம் போட்டுக்கொடுக்க பித்த ஓககாளம உடனே நிவர்த்தியாகும்.

பிரமியத்திற்கு.

அத்திப்பிஞ்சை தேங்காய்ப்பால் விட்டிடித்து சாறுபிழிந்து வெள்ளைக் குங்கிலியத்தூள் ஒருவிராகனெடை போட்டு ஒருவேளைக்கு அரைக்காற்படிவீதம் கொடுத்துவர பிரமியம் அதாவது வெள்ளை நிவர்த்தியாகும்.

வயிற்று கடுப்புக்கு.

அத்திப்பிஞ்சு மாதுளம்பிஞ்சு வில்வப்பத்திரி இவைகள் சமனெடை யெடுத்தரைத்து கெச்சைக்காயளவு எடுத்து (பார்வதி பாணியம் என்னும் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும்) பிராணசஞ்சீவிமாத்திரையில் ஒருமாத்திரையைப்பொடிசெய்து வைத்துக்கொடுக்க ஒரேவேளையில் வயற்றுக்கடுப்பு நிவர்த்தியாகும்.

சீழ்பிரமியத்திற்கு

அத்திப்பட்டை, ஆவாரம்பட்டை, நாவல்பட்டை இவைகளை சமனெடையெடுத்துச் சூரணித்து தேனிலிழைத்து இருவேளையும் 5-அல்லது 10 நாள் தின்றுவர சீழ்பிரமியம் நிவர்த்தியாகும்.

வாய் ரணத்திற்கு.

அத்திமரத்தின்பாலை அதிகாலையிலும் மாலையிலும் மூன்றுநாளருந்தினல் வாய்ரணம் வாய்ப்புண் இவை நிவர்த்தியாகும்.

நீரில்ரத்தம்வருவதற்கு.

அத்திப்பட்டையை கியாழம் வைத்து இருவேளையுஞ் சாப்பிட்டால் மூத்திரத்தோடு இரத்தம் வருகிற வியாதி நிவர்த்தியாகும்.

வெள்ளைக்கு.

அத்திப்பட்டை, மாம்பட்டை, நாவற்பட்டை இவைகளை சம எடையெடுத்து புளிப்புத்தயிரில் ஒருநாளூரிய பிறகு இடித்து சாறுபிழிந்து அதிகாலையில் சாப்பிடவும். இப்படி இருவேளையுஞ் சாப்பிட்டால் ஓட்டமாயோடுகிற வெள்ளை நீங்கும்.

பற்றுப்போட.

அத்திப்பட்டையை சூரணஞ்செய்து நல்லெண்ணெய் விட்டு அரைத்து பிளவை முதலியவைகளுக்குப் பற்றிட குணமாகும்.

மூத்திர எரிவுக்கு.

அத்திவிரையை பாலில்காய்ச்சி சாப்பிட்டுவந்தால் மூத்திர எரிவு, நீர்க்கடுப்பு, எலும்புருக்கி, சதையுருக்கி இவ்விதரோகம் நீங்கும் ரத்தகாசமும் பித்தகாசமும் நிவர்த்தியாகும்.

கர்ப்பங் தரிக்க.

அத்திவிரையை பாலில்காய்ச்சி மண்டலக்கணக்காய் பெண்கள் சாப்பிட்டுவந்தால் கெர்ப்பந்தரிக்கும். நீர்க்கடுப்பு மேக கல்மிஷம் நீங்கும். கர்ப்பந்தரிக்க அனுபோகமான எண்ணெய்முறை (பார்வதிபரணியத்தில்) சொல்லியிருக்கின்றது.

மேகச்சூட்டுக்கு.

அரசங்கொழுந்தை பாலிலரைத்து காலை மாலை சாப்பிட்டு வந்தால் மேகச்சூடு முதலியவைதணியும். தைரியமுண்டாகும்.

பெரும்பாட்டுக்கு.

அரசமரத்தின் சமூலமாவது பட்டையாவது கொண்டுவந்து உலர்த்தி அரிசி யிரண்டுபங்கும் மேற்படி பட்டைத்தூள் ஒருபங்கும் எடுத்துயிடித்து மாவாக்கி களிகிளறி தின்றுவந்தால் பெண்களுக்குண்டாகும் பெரும்பாடு வியாதி நீங்கும்.

ரசமருந்தை முறிக்க.

அகத்திக்கீரையும் மிதிபாகற்பிஞ்சும் சமனுயெடுத்திடித்து எட்டுக்கொருபங்காய் கியாழம்வைத்துக் கொடுத்துவந்தால் ரச மருந்தினுலுண்டான கெடுதிகளும் மூக்குவியாதியும் நீங்கும்.

வாய்ப்புண்ணுக்கு.

அகத்திக்கொழுந்தை சூரிய உதயமாகுமுன் ஒருபிடி யெடுத்து மென்று தின்றுவந்தால் வாய்ரணம் வாய்ப்புண் யாவும் நீங்கும், சூடு தணியும்.

சூட்டுக்குத் தைலம்.

அகத்திக்கீரைச்சாறும் நல்லெண்ணெயும் சமனுய்க்கூட்டி அடுப்பிலேற்றி வெந்தயத்தை பாலிலரைத்துப்போட்டு தைலபதமாய்க் காய்ச்சியிறக்கி தலைமுழுகிவந்தால் சகல சூடுந்தணியும். தேகம் குளிர்ச்சியுண்டாகும்.

உடம்பு எரிவுக்கு.

அகத்திவேர் ஒருபங்கு, மிளகு கால்பங்கு, அதிமதுரம் கால் பங்கு இவைகளைபிடித்து கியாழமிட்டு இருவேளையும் புசித்துவந்தால் ஆண்குறியெரிவு பெண்குறியெரிவு ஐம்பொறியெரிவு கைகாலெரிவு முதலியவைகள் தீரும்.

பித்த மயக்கத்திற்கு.

அகத்திக்கீரையை யாவரேனும் வாரத்திற்கிருமுறை சமைத்து உண்டியோடு உபயோகித்துவந்தால் பித்தம், பித்தாதிக்கம், பித்தமயக்கம் இவை அணுவேனும் அணுகாது.

மேகவெள்ளைக்கு.

அருநெல்லிக்கா யென்னும் சிறுநெல்லிக்காய்ச்சாறும் பச்சைத்திராட்சை சாறும் வெள்ளை வெங்காயச்சாறும் மூன்றும் சமாச எடை கலந்து படிகாரபஸ்பம் இரண்டு சிட்டிக்கைகலந்து சர்க்கரை மூன்று சிட்டிக்கை போட்டு கலக்கி சாப்பிடவும். உஷ்ண சம்பந்தமான மேகவெள்ளை தீரும்.

வெப்பந் தணிய.

அகத்திப்பூவில் ஒருபலமெடுத்து இரண்டுபலம் பசுநெய்யிற் போட்டு கால் விராகனெடை குங்குமப்பூ இழைத்துக்காய்ச்சி யிறக்கி அந்திசந்தி யிருவேளையும் உட்கொள்ள புகையினாலும் அனலாலும் உண்டாகிய வெப்பமும் பித்தமுந் தணியும்.

காமாலைக்கு.

அருநெல்லியிலையை ஒருபின்னைக்காயளவு அரைத்து கால்படி புளித்தமோருடன் கலந்துகொடுக்கவும்; இப்படி மூன்று நாள் காலையில் கொடுக்க காமாலை தீரும். வெள்ளாட்டுப்பால் விட்டு சாதம் தின்னவேண்டும். உப்பு கூடாது.

வாந்தி நிறுத்த.

அருநெல்லிவேர், துத்திப்பூ, அதிமதுரம், இவை கியாழம் வைத்து கொஞ்சம் தேன்விட்டுக் கொடுக்க வாந்தி நிற்கும்.

பித்தசாந்தி.

அருநெல்லியை வடகஞ்செய்து வைத்திருந்து துவையல் முதலியவைகளான காரசாரத்துடனுபயோகித்துவந்தால் பித்த சாந்தியுந் தேககுளிர்ச்சியும் நேத்திர பிரகாசமும் உண்டாகும்.

வாந்தி நிற்க.

அருநெல்லிக்காய் வற்றலுஞ் சீரகமும் நெற்பொரியும் திப்பிலியுங்கூட்டி கியாழமிட்டு கொஞ்சஞ் சர்க்கரையிட்டுக் கொடுக்க வாந்தி நிவர்த்தியாகும்.

தினவு நிற்க.

அம்மாப்பச்சரிசியென்னும் மூலிகையுங் கொஞ்சம் வசம்பும் இந்துப்புங்கூட்டி அரைத்து உடம்பிற் றேய்த்துக் குளிததால் தினவு, தடிப்பு உடனே மாறிவிடும்.

தேகதடிப்புக்கு.

அம்மாம்பச்சரிசியை புன்னைக்காயளவு அரைத்துபசுப்பாலிலாவது புளிப்புத்தயிரிலாவது கலந்து காலையில் சாப்பிட்டால் மேகத்தடிப்பு, தேககாந்தல், மலக்கட்டு இவைகள் தீரும்.

ரசங்கட்ட.

அம்மாப்பச்சரிசியை அரைத்து குகைசெய்து அதில் சூதத்தைக் கிரமப்படி சுத்திசெய்துவிட்டு உருக்கினல் கட்டிவிடும்.

சீதம் விழுவதற்கு.

அழிஞ்சில்வேர்ப்பட்டையைக் காயவைத் திடித்து அதை வெந்நீரி லரைத்துக்கொடுத்தால் சீதம்விழுவது நின்றுவிடும்.

சிலேத்தும ஜன்னிக்கு

அழிஞ்சில்வேர், சித்திரமூலம், செவ்வியம், பேராமுட்டி, முருங்கைப்பட்டை, பூசினிவேர் வகைக்கு காற்பலமெடுத்து படி தண்ணீரிற்போட்டு எட்டுக்கொன்ருய் காய்ச்சி வடித்துக்கொடுக்கவும் அதிகவேர்வை, வெறுப்பு, மயக்கம், நாக்கு வழுவழுப்பு, மலஜலம்வெளுப்பு முதலியவைகளோடு கூடின சேத்துமஜன்னி தீரும்.

ரணங்களுக்கு

அண்ணெரிஞ்சான் பூண்டுசமூலம் அழிஞ்சில்விரை கார், போகரிசி இவைகளை குழித்தைலமிறக்கி ரணங்களுக்குத் தடவ உலர்ந்துவிடும்.

கரப்பான் வியாதிக்கு

அப்பைக்கோவைக்கிழங்கை கொட்டைப்பாக்களவெடுத்து பசுப்பாலி லரைத்துக்கொடுக்க கரப்பான், மூலேச்குத்து, கடி விஷம் முதலிய வியாதிகள்தீரும். புளிப்பும், கரப்பான் பதார்த் தங்களும் நீக்கி பத்தியமிருக்க வேண்டியது.

அஸ்தி சூட்டுக்கு.

அப்பைக்கிழங்கு 4-பங்கும் சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம் சோம்பு, அதிமதுரம், பெருங்கிழங்கு இவைகள்சேர்ந்த சூரணம் ஒருபங்குங்கூட்டி சரிஎடை சர்க்கரைகலந்து பிரதிதினம் துட்டு எடை கொடுத்துவந்தால் அஸ்திசூடு, அழற்றுகணம், இரத்த கணம், கணச்சூடு, சுழிகணம், மகாகணம் இவைதீரும்.

வங்சம் நீற்ற.

அலரிச்செடியின் சமூலத்தை கத்தையாகக் கட்டிக்கொண்டு வங்கத்தை கிரமப்படி சுத்திசெய்து இரும்புக்கடாயிலுருக்கி மேற்படி கத்தையினல் வறுத்துக்கொண்டு அதாவது கடைந்து கொண்டிருந்தால் வங்கம் பஸ்பமாகும்.

ஈளை இருமலுக்கு.

அரத்தைப்பொடித்து பாலி லுபயோகித்துவந்தால் ஈளை இருமல், நீர்த்தோஷம், வாயு, பீநசம் இவைகள் நிவர்த்தியாகும்.

சிங்ரகுக்கு

அலரிச்செடியின் சமூலமும் கடுக்காயும்சுட்டு கரியாக்கி நல்லெண்ணெய் அல்லது வேப்பெண்ணெயில்குழைத்து சிரங்குகளுக்குத் தடவ உலர்ந்துபோகும்.

விந்து கட்ட

அமுக்கனுங்கிழங்கையிடித்து வஸ்திரகாயஞ்செய்து கா்ற்படி பசுப்பாலுக்கு அரைபலம் கிழங்குத்தூள்போட்டு காய்ச்சி சர்க்கரையிட்டுகுடிக்கவும். இப்படி யிருவேளையு முட்கொண்டுவந்தால் விந்துகட்டும், தேகம்புஷ்டியாகும், அழகுகொடுக்கும், தேகத்தி லுள்ள சூலே, கரப்பான், கபம், வெப்பம், துர்நீர் யாவும் தீரும்.

தாதுபுஷ்டிக்கு.

அமுக்கனுங்கிழங்கு, நீர்முள்ளிவித்து, குருந்தொட்டிவேர், சமனெடையெடுத்து பசுவெண்ணியிலிழைத்து சாப்பிடவும் இப்படி யிருவேளையும் 20-நாள் சாப்பிட தாதுவிர்த்தியுண்டாகும்.

வலிப்புகட்கு

அவிரியிலை, வசம்பு, உள்ளி இம்மூன்றும் சமனெடையெடுத்து சிதைத்து நாசியில் நசியம்செய்தால் வலி, ஜன்னி, புறயிசிவு, கழுத்துவலி இவைகள் தீரும்.

விஷமேறுதிருக்க நசியம்.

அவிரியிலை, தும்பையிலை, வசம்பு, மிளகு, உள்ளி, பெருங்காயம் இவைகள் சரிஎடை எடுதது சிறுநீர்விட்டிடித்து மூக்கில்கொஞ்சம்தட்விமுகாச்செய்து காதிலுபகொஞ்சம்விட்டால் எந்தவிஷமானாலும்சிரசுக்கேறாது. மருந்துகொடுக்குமளவுந்தாங்கும். இந்த விஷவைத்தியங்களை விபரமாய் பார்க்கவேண்டியவர்கள் (விஷவயித்திய)மென்னும்சாஸ்திரத்தில் நன்றாய்த்தெரிந்துகொள்ளவும்.

தேக அனலுக்கு.

அதிமதுரம் அரைப்பலமெடுத்து வெந்நீர்விட் டரைத்துக்கொடுக்கவும். இப்படி அந்திசந்தி இரண்டுநாள் கொடுக்க தேகம் எவ்வளவு அனலாயிருந்தாலும் தணியும்.

சூட்டு இருமலுக்கு.

அதிமதுரம். கடுக்காய், மிளகு மூன்றும் சமனெடை யெடுத்து இளம் வறுப்பாய் வறுத்து சூரணஞ்செய்து ஒருவேளைக்கு திட்டெடை சூரணமெடுத்து தேனிலிழைத்துக் கொடுக்க சூட்டி-ருமல் நிவர்த்தியாகும்.

கசாமூர்ச்சைக்கு.

அரிசிதிப்பிலியை ஆர்க்கப்பொடிசெய்து காற்பலம் சூரணத்தை காற்படி பசுப்பாலில்போட்டு காய்ச்சிக்குடிக்க காசம், வாயு, மூர்ச்சை, ஜன்னி சாந்தியாகும்.

நாவரட்சிக்கு

அக்கராகாரத்தைப் பொடிசெய்து பாலிற்போட்டு காய்ச்சி உட்கொண்டுவந்தால் நாவரட்சி, தாகம், ஜன்னி, தோஷம், வாந்தி, கபம் இவைகள் நிவர்த்தியாகும்.

கர்ப்பவதிகட்கு உதிரங்கண்டால் சாந்தி

அதிமதுரம் சீரகம் சமஎடையாக எடுத்து இடித்து முக்காற்பலம்வரையி லெடுத்து காற்படிஜலத்தில்விட்டு அரைக்காற்படி கியாழமாக இறக்கி காலையில்கொடுக்கவும். இப்படி 3-நாள் கொடுக்க நிவர்த்தியாகும்.

சயித்தியத்திற்கு.

அரிசிதிப்பிலியை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து கம்மாறு வெற்றிலைச்சாறும் தேனுங்கலந்து திருகடிச்சூரணம் குழைத்துச் சாப்பிட சயித்தியம், கோழை, சுரம் இவைகள் தீரும்.

மஞ்சட் காமாலைக்கு

அதிமதுரமும், சங்கம்வேர்ப் பட்டையும் ஓர்நிறையா யெடுத்து எலுமிச்சம்பழச்சாறுவிட்டு மூன்றுநாளரைத்து தேற்றாங் கொட்டையளவு மாத்திரைசெய்து முலைப்பாலிலாவது பசுப்பாலிலாவது மூன்றுநாள்கொடுக்க மஞ்சள்காமாலை நீங்கும்.

ஆன்குறி கெட் டிப்படுவதற்கு.

அபினி, அக்கராகாரம், மருதோன்றிவிரை இவைகள் சமனிடையெடுத்து தேன்விட்டரைத்து ஆண்குறியின்மேல் பற்றுபோடுவதுபோல் தடவிவரவேண்டியது. இப்படி 15-நாள் தடவினால் ஆண்குறிபெருத்து நீண்டு நன்றாய்கெட்டிப்படும். தாதுபுஷ்டியைப்பற்றி விசேஷமான அனேகமுறைகள் (விஷவயித்தியசிந்தாமணியில்) சொல்லியிருக்கின்றன.

பல்நோய்க்கு

அபினி குண்டுமணியளவு எடுத்து அத்துடன் துட்டெடை கற்பூரம்கூட்டி இரண்டையும் நன்றாய்ரேசித்து ஈருவீக்கம் அல்லது நோய்கண்டிருக்கும் பல்லின்மீது பில்லையாய் வைத்திருந்து காலையில் துப்பிவிடவும் இப்படி யிரண்டுநாள்செய்ய சௌக்கியமாகும்.

இளைத்த வுடம்பிற்கு.

அயக்கம்பியை சிவக்கக்காய்ச்சி பசுமோரில்தோய்த்து சாதத்திற்கும் வேண்டியபோது தாகத்திற்கும் உபயோகித்து வந்தால் இளைத்தவுடம்புபெருக்கும். பழையசுரம், தாகம், சகலவித கழிச்சல், பழையபேதி இவைகள் நிவர்த்தியாகும்.

சஞ்சீவி மூலிகை.

அழுகண்ணிச்செடியை ஆதிவாரத்தில் சந்திரன் கடகராசியிலிருக்கும்போது தன்னுடைய நிழல் செடியின்மேல்படாமல் பிடு

ங்கிவந்து ஐந்துநாள் இரவில் பனியில்வைத்தெடுத்து நிழலிலுலர்த்தியிடித்து வஸ்திரகாயஞ்செய்து ஒருவேளைக்கு ஒருவிராகனெடை சூரணமெடுத்து அதற்குச்சமபாகம் கற்கண்டுதூளும்தேனும் சேர்த்து இழைத்து சாப்பிட்டுவந்தால் தேகபுஷ்டி யுண்டாகும் பசியதிகரிக்கும், சகலரோகங்களுந் தீரும். இதனுல் ஒரு பொல்லாங்கும்வாராது. இந்த அழுகண்ணிச்செடியின் நிறமும் குறியும் இலைகளினளவும் கிடைக்குமிடமும் அதினுடையருசிபாகமும் விஷவயித்தியசிந்தாமணியென்னும் சாஸ்திரத்தில் அறியலாம்.

குத்தல் குடைச்சலுக்கு.

அரத்தை, சுக்கு, திப்பிலி, வகைக்கு கால்பலமெடுத்து கியாழம்வைத்து எட்டொன்ருய்க்காய்ச்சி யிறக்கும்போது நொச்சியிலை ஒருபிடிவதக்கி துட்டெடை சாறுபிழிந்து வடிகட்டிக்கொடுக்கவும். இப்படி காலைமாலை யிருவேளையும் 3-நாள் கொடுக்க கைகால் குத்தல், குடைச்சல், சுரம் இவைகள் தீரும்.

மயிர்வேண்டாத இடத்திற்கு.

அரிதாரம் இரண்டுபங்கு சுண்ணும்பு ஒருபங்கு இவ்விரண்டுஞ் சேர்த்து தண்ணீர்விட்டரைத்து மயிர்வேண்டாத இடத்தில் சந்தணம் பூசுவதுபோல் நன்ருய்த்தடவி சற்றுநேரம் பொறுத்து கழுவிப்போடவும் உதிர்ந்துவிடும்.

வயிற்றிலிறந்த பிள்ளை கீழே விழ.

அதிமதுரம், தேவதாரம் வகைக்குப்பலம் -1 வெந்நீர்விட்டரைத்துக் கலக்கி யிரண்டுவேளை உள்ளுக்குக்கொடுக்க பிள்ளை கீழேவிழும்.

பேதிக்கு.

அதிமதுரம் முப்பத்திரண்டு விராகனெடையும், திராட்சை உப்பு எட்டுவிராகனெடையும் இரண்டுமிடித்து கியாழம் வைத்து வடித்துக்கொடுக்க பேதியாகும்.

பித்தத்திற்கு.

அகத்திக்கீரை யிரண்டுபிடி எலுமிச்சயிலை பத்துப்பிடி தனியா பலம் இரண்டரை இருவகையிலையும் இடித்து தனியாவுங் கலந்து மூன்றுபடி ஜலம்வைத்து அரைப்படி கியாழமாக இறக்கி ஆறுபாகமாக்கி மூன்றுநாள் இருவேளையும் கொடுக்க சகலபித்தமும் நிவர்த்தியாகும்.

ஆ

பால் உண்டாக.

ஆலம்விழுதும் ஆலம்விரையும் சமன்கொண்டு பாலில்காய்ச்சியுண்டால் பாலில்லாத பெண்களுக்குப் பால் உண்டாகும் முக தேஜசு உண்டாகும்.

இரத்தக் கக்கலுக்கு

ஆலம்விரையும் அரசம்விரையும் பாலில் அரைத்துக் கலக்கி உண்டுவந்தால் இரத்தக்கக்கல் நிவர்த்தியாகும்.

நரம்புக்குத்தலுக்கு.

ஆளிவிரையை பாலில்கொள்ள நரம்புகுத்தல், வீக்கம், வாந்தி, வலி, வாயுவு, அழலை, ஒக்காளம் இவை நிர்வர்த்தியாகும்.

சிலந்தி வீக்கத்திற்கு.

ஆளிவிரையை முலைப்பால் விட்டரைத்து வெண்ணெயில் மத்தித்து தடவ வீக்கம் வற்றிப்போகும்.

ஆண்குறியெரிவுக்கு.

ஆவாரைப்பஞ்சாங்கத்தை பசும்பாலில் ஒரு மண்டலம் கொள்ள ஆண்குறியெரிவு, நீரிழிவு, பிரமேகம் இவைநீங்கும்.

கற்றுழை நாற்றத்திற்கு.

ஆவாரைப் பஞ்சாங்கச்சூரணம் மூன்றுபங்கும் கோரைக்கிழங்கு, கிச்சிலிக்கிழங்கு சூரணம் ஒரு பங்கும்கூட்டி தினந்தோறும் உடம்பிற்கு தேய்த்து குளித்து வந்தால் கற்றுழை நாற்றம் தீரும்.

பிரமேகத்திற்கு.

ஆனைநெருஞ்சில் சமூலத்தையிடித்து தயிர்விட்டரைத்து தயிரிற்கலக்கி அதிகாலையுண்டு வந்தால் பிரமேகம், வெள்ளை தீரும்.

சுவாசகாசத்திற்கு.

ஆடுதின்னாப்பாளை யிலையை உலர்த்தி பொடியாகக் கத்தரித்து புகையிலையில்வைத்து சுருட்டுசுற்றி புகைபிடித்தால் சுவாச காசம் நிவர்த்தியாகும்.

மேகவாயுவுக்கு.

ஆடுதின்னாப்பாளை பத்துபங்கும் மிளகு ஒருபங்கும் கூட்டி அரைத்துமாத்திரை செய்து இருவேளையும் தின்றுவந்தால் மேக வாயுவுகள் நிவர்த்தியாகும்.

நீர் உடைக்க.

ஆதண்டயிலையை ஆவின்மோர்விட்டு அரைத்து ஊரவைத் துப்பிழிந்து வேளைக்கு அரைக்கால்படி சாறுகொடுக்க நீர்க்கட் டை உடைக்கும்

நேத்திர மறைப்புக்கு.

ஆதண்டையிலை ஒருகுத்துயெடுத்து கால்படி நல்லெண்ணை யில் விட்டு கறிவேப்பிலைபோல் பொறியும்படி காய்ச்சிவடித்து தலைமுழுகிவந்தால் நேத்திரத்திலுண்டான பித்தமறைப்பு, பித்த நீர் இவைகள் தீரும்.

சந்தி சன்னிக்கு.

ஆதண்டங்காய் வத்தலிட்டு உண்டியிடன் உபயோகித்து வந்தால் வாதபித்த சம்பந்த சந்திகத்தைக்கண்டிக்கும். சகலபத்தி யத்திற்கும் உபயோகிக்கலாம்.

இரத்த பிரமியம்.

ஆவாரையரிசி பலம்-1 நற்சீரகம், சந்தணம், சர்க்கரை, வகைக்குக் களஞ்சி-1 இவைகளை எலுமிச்சம் பழச்சாறுவிட் டரைத்துக் கலக்கி மூன்றுவேளை கொடுக்க ரததபிரமியம், கை கால் அசதி, உடல் உஷ்ணம் தீரும்.

ஆவாரைவேரின் பட்டை, விஷ்ணுகாந்தி வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் பிரமாணம் அரைத்து பசும்பாலில் கலக்கி மூன்று நாள் கொடுக்க ரத்தபிரமியம் தீரும்.

இரத்த இருமலுக்கு.

ஆடாதோடையிலையும் தூதுவேளையும் இடித்து பிட்டவியல் செய்து பிழிந்தசாறு உழக்கு இதில் கோஷ்டம், திப்பிலி, சாம்பி ராணி வகைக்கு அரைவிராகனெடை வெதுப்பி யிடித்து தூள் செய்து கலந்துகொடுக்க இரத்த இருமல் தீரும்.

கபாலவலிக்கு.

ஆடுதின்னாப்பாளைச்சாறு $\frac{1}{4}$ படி நல்லெண்ணெய் அரைப் படியில் கலந்து மெழுகுபதமாய்க்காய்ச்சி வாரத்திற்கிருமுறை தலைமுழுகிவந்தால் மண்டைக்குத்து பீனிசம் சிரபாரந்தீரும.

சகலவியாதிக்கும்

ஆடாதோடை, சிறுவழுதலை, தூதுவளை, நன்னாரிவேர், சிற்ருமுட்டி, சுக்கு, பற்பாடகம், கோரைககிழங்கு, சந்தணம், இலுப்பைப்பூ வகைக்குப் பலம் அரையெடுத்து இரண்டுபடி ஜலத்தி விட்டு அரைக்கால் படியாய் காய்ச்சிகொடுத்துவர உடம்பு வெதுப்பு, தலைவலி, அடிக்கடியெழுந்திருப்பது, கண்சிவப்பு, அறிவு, மயக்கம் முதலிய ஜன்னி தீரும்.

மூக்கில் இரத்தம் வருவதற்கு.

ஆடாதோடையிலைச்சாறும் தேனும் சமனெடைகலந்து ஒரு பலம் எடுத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவாயாலும் மூக்கினாலு மிரத்தம் வருவது நிவர்த்தியாகும்.

அரையாப்பு கட்டிக்கு.

ஆடுதின்னாப்பாளை சமூலம், வசம்பு இரண்டும் சமனெடை யெடுத்து நன்ருயிடித்து கட்டியின்மேல் பில்லையாக வைத்து அதனளவுக்கு பானையோட்டை வட்டமாக நருக்கி அதின்மேலே வைத்து கட்டி வைக்கவும். இப்படி மூன்றுகட்டு கட்ட அறையாப்புக்கட்டி கரையும்.

காமாலை சோகை பாண்டுவுக்கு.

ஆவின்பால் ஆவின்தயிர் ஆவின்கோமயம் ஆவின்சாணிப் பால் வகைக்கு ஆழாக்கு இதற்கு சமனெடை நல்லெண்ணெய் கலந்து தயிலபதமாகக் காய்ச்சி ஸ்நானம் செய்துவந்தால் காமாலை சோகை பாண்டு இவைகள் நிவர்த்தியாகும்.

நீரிழிவுக்கு சாந்தி.

ஆவாரந்துள், கல்மதம், கொன்றைப்பட்டை, மிளகு இவை சமன்கொண்டு எட்டுக்கொன்ருய் கியாழமிட்டு காய்ச்சிக் குடிக்க நீரிழிவு சாந்தியாகும்.

உள் மூலத்திற்கு.

ஆவாரங்கொழுந்து, ஆவாரம் பட்டை, ஆவாரம்பூ, அறுகம் வேர் இவைகளை நிழலில் உலர்த்தி சமனெடையெடுத்து சூரணி த்து திருகடிப்பிரமாணம் பசுநெய்யில் குழைத்துச் சாப்பிடவும். இப்படி ஒரு மண்டலம் தின்றால் உள்மூலம் கரைந்துபோகும். இச்சாபத்தியம்.

18-எலி கடிக்கும் சாந்தி.

ஆதளை சமூலத்தைப் பால் விட்டரைத்து பாலில் கலக்கிக் கொடுத்து வந்தால் பதினெட்டு எலிவிஷமும் நிவர்த்தியாகும் (விஷவயித்திய சிந்தாமணியில்) சகலவித சர்ப்பங்களுக்கும் நட்டு வாக்காலி, தேள், வண்டு, நாய், பூனை, எலி முதலிய எல்லா விஷத் திற்கும் அந்தந்த விஷக்கடியின் அடையாளத்துடன் மருந்து களும் மந்திரங்களும் சொல்லி யிருக்கின்றது யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

இரத்தகாசத்திற்கு.

ஆலம்விரை, அத்திவிரை, நிலப்பனங்கிழங்கு, நாவல்பட்டை அரசம்விரை, முருங்கைப்பூ, தூதளம்பூ இவைகளை யிடித்து சூர ணித்து அதிகாலையில் திருகடிசூரணமெடுத்து தேனிலாவது நெய்யிலாவது குழைத்துச் சாப்பிட்டுவரவும் இரத்தகாசம் தீரும்.

முளைமூலக் கடுப்புக்கு.

ஆவாரங்கொழுந்தை சட்டியிலிட்டு விளக்கெண்ணெய்தெளி த்து வறுத்துச் சீலையில் வைத்து ஒற்றடங்கொடுத்தால் முளை மூலத்தின் முனைகருகும் அதனுடைய கடுப்பும் ஊரலுந்தணியும்.

சாதாரண இருமலுக்கு.

ஆனைத்திப்பிலியை இடித்து வஸ்திரகாயஞ் செய்து தேனில் குழைத்துச் சாப்பிட இருமல், ஈளை, கபம், வாய்வு இவைகள் தீரும் ஜீரணசக்தி யுண்டாகும்.

மூலமுளை வெளிவர.

ஆகாசத்தாமரையிலையை உலர்த்தியிடித்து வடிகட்டின தூளும் கருங்குருவை யரிசிமாவும் நன்றாய்க்கலந்து பிட்டவியல் செய்தெடுத்து நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து உள்ளுக்குக் கொடுத்துவிட்டு மாதுளங்கொழுந்தைக் காடியில் அவித்து மூலத் தில் வைத்துக் கட்டினால் முளைவிழுந்துவிடும்.

விஷசுரத்திற்கு.

ஆடாதோடைவேர்க்கு, நிலவேம்புசமூலம், சீந்தில் தண்டு, பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கன்வேர், வெட்பாலையரிசி வகைக்குப பலம் கால் இரண்டுபடி தண்ணீர்விட்டு ஆழாக்கு அளவு கியாழ மாக இறக்கிக் கொடுக்கவும் விஷம் ஏறுவதுபோல் ஜிலுஜிலென்று ஏறுகிற விஷசுரந் தணியும்.

குளிர்சுரத்திற்கு.

ஆடாதோடை, தூதுவளை, பற்பாடகம், பங்கம்பாளை, சிறு வழுதலை, சுக்கு, சந்தனம், நன்னாரி வகைக்கு கால்பலம் எடுத்து இடித்து 2-படி தண்ணீர்விட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி யிருத்துக்கொடுக்க குளிர்சுரம் நிவர்த்தியாகும் (விஷவயித்திய சிந்தாமணி என்னும் சாஸ்திரத்தில்) சொல்லியிருக்கும் சர்வ சுர மாத்திரை கொடுத்து இந்தகியாழம் கொடுத்தால் அறுபத்துநாலு சுரத்தில் எந்தச் சுரமானாலும் உடனே தீரும்.

கருவழலை தண்ணீர்பாம்பு முதலிய சில்லரை விஷத்திற்கு.

ஆடுதின்னாப்பாளைவேர், கவுதும்பைவேர், வெள்ளறுகுவேர், மருக்காரைவேர் இவை சமனெடையெடுத்து அரைத்து உடம் பில் பூசி முருக்கித் துவட்டினால் ஷை விஷங்கள் தீரும்.

இதுவும் விஷத்திற்கு.

ஆனைநெருஞ்சியிலையை சிறு நீர் விட்டிடித்து சாறு பிழிந்து சுமார் அரைக்கால்படி உள்ளுக்குக்கொடுத்தால் ஷை விஷங்கள் நிவர்த்தியாகும். விஷவயித்தியசிந்தாமணி என்னும் சாஸ்திரத்தில் சகலவித சர்ப்பங்களின் ஜாதி, நிறம் குறி, கடிகளினடையாள மும் அதற்கு அனுபோகமான மருந்துகளும் வெகு விபரமாய் சொல்லியிருக்கிறது.

முள் வெளிப்பட.

ஆற்றுநண்டைப் பிடித்திடித்து மொத்தையாக்கி முள்ளு தைத்த இடத்தில் வைத்துக்கட்டி மறுதினமவிழ்க்க முள் வெளி யில் வந்துவிடும்.

குதிகால் வெடிப்புக்கு.

ஆற்று நண்டையிடித்து பில்லைதட்டிக் காயவைத்துச் சுட்டு, அந்தச் சாம்பலைத் தேன் விட்டிழைத்து 2-3-வேளை தடவக் குதி வெடிப்பு, ஆசனவெடிப்பு இவைகள் மாறிவிடும்.

வயிற்றுக் கடுப்புக்கு.

ஆலம்விழுதை எருமைத்தயிர் விட்டரைத்து ஒருபலமெடுத்து எலுமிச்சம்பழரசம் ஒரு பலம் விட்டுக் கலந்துகொடுக்கவும். இப்படி 2-3.வேளைகொடுக்க வயிற்றுக்கடுப்பு தீரும்.

ஆசனக்கடுப்புக்குப் புகை.

ஆமையோட்டையிடித்துப் பொடிசெய்து நெருப்பில் தூவி, அந்தப்புகையை அபானத் துவாரத்தில் பிடிக்க ஆசனக்கடுப்பு தீரும்.

கட்டிகட்கு.

ஆளிவிரையை அரைத்துப் போல்டீஸ்கிளரி கட்டிகளுக்குக் கட்டுவதுண்டு, கட்டிகள் பழுத்து உடையும்.

ஆண்குறிபுண்ணுக்கு, வீக்கத்திற்கு.

ஆதளைப்பாலை ஆண்குறிதோலின் மீதுண்டாகும் புண், ரணம் இவைகளுக்குத் தடவி, அலரிப்பூவைக்கசக்கி அதின்மேல் வைத்துக்கட்டினால் புண் ஆறி வீக்கமும் வாடிப்போகும்.

புழுவெட்டுக்கு.

ஆனைத்தந்தத்தைச் சுட்டுப் பொடியாக்கித் தேனில் குழைத்து புழுவெட்டினாலாவது மற்ற எவ்விதத்தாலாவது மயிர் உதிர்ந்து போனவிடத்தில் எட்டுநாள் தடவிவந்தால் மயிர்முளைக்கும்.

மயிர் கறுப்பாகத்தைலம்.

ஆனைத்தந்தத்தின் பொடி பலம் 5 எட்டுபடி தண்ணீரில் போட்டு ஒருபடியாய்க்காய்ச்சி அதில் ஒருபடி நல்லெண்ணெய் விட்டு சவுரிக்கொடி, அவுரித்தழை கரிசலாங்கண்ணி, சிவந்த ஆலம் விழுது இவைகளின்சாறு வகைக்குப்படி கால் இவைகளை ஒன்றாய்க் கலந்து பதமாய்காய்ச்சி வடித்து மயிர்க்குத் தடவிவந்தால் மூன்றுமாதத்தில் எப்பேர்க்கொத்த நரையும் மாறிவிடும்.

தைலபதம், எண்ணெய்பதம், மெழுகுபதம் இவைகள் விஷவயித்தியசிந்தாமணியில் சொல்லப்படுகின்றன.

ஒக்காளத்திற்கு.

ஆளிவிரை 1-பலமெடுத்து 4-பலம் ஜலத்தில் ஒரு ராத்திரி ஊரவைத்து காலையிலெடுத்து மல்துணியில் கொட்டிப் பிழிந்து ஒருபலம் வெள்ளைச்சர்க்கரைபோட்டு கலக்கிச்சாப்பிடவும் 10-நாள்சாப்பிட ஒக்காளம், அருசி, அழலை, நரம்புக்குத்து, வலி, வாந்தி, வீக்கம், விரைவாதம் இவைதீரும்.

பொருமல் கழிச்சலுக்கு.

ஆமையோடு, அதிவிடயம், அசமதாகம், வட்டத்திருப்பி, பாவட்டை, மிளகு, சுக்கு சமனுய்ச்சேர்த்து வெந்நீர் விட்டரைத்து முலைப்பாலில் கொடுக்க பொருமல் கழிச்சல் நிவர்த்தியாகும்.

கட்டிகளுக்கு.

ஆமணக்கிலையை விளக்கெண்ணெய் தடவி அனலில்வதக்கி கட்டிகளில் வைத்துக் கட்ட பழுத்து உடையும்.

மலச்சிக்கலுக்கு துவையல்.

ஆமணக்குமுத்தைமேற்றோல் நீக்கி காரசாரம் வைத்து துவையல் செய்து கழற்சிக்காயளவு கொடுத்தால் மலச்சிக்கல் நீங்கும். பேதியாகும்.

சூட்டுக்கு.

ஆற்றுமுள்ளங்கியை பில்லைபில்லையாக அறுத்து வஸ்திரகாயம்செய்த மிளகுதூளில்தொட்டு சாப்பிடவும். இப்படி காலையில் தின்றுவந்தால் குடுதணியும், நீர்சுத்தியாகும், சிறு பயறுடன் சமைத்து சாப்பிடுவதும் உண்டு.

குழந்தைகள் வளர

ஆமணக்கெண்ணெயுடன் பேயம் வாழைப்பழத்தைப் பில்லை பில்லையாக அறுத்து ஊரப்போட்டு கற்கண்டுபொடி செய்து கலந்து தினந்தோறும் காலையில் இரண்டுதுண்டு வாழைப்பழமும் கொஞ்சம் எண்ணெயும்கொடுக்கவும் இப்படிவழக்கமாய் கொடுத்துவந்தால் சகலசூடுந்தணிந்து குழந்தைகள் புஷ்டியாய்வளரும்.

இ

கண் ஒளிக்கு.

இருவாட்சி சமூலத்தை பசுவின்பால்விட்டரைத்து புன்னைக்காயளவு எடுத்து அரைக்கால்படி பாலில்கலந்து காலையில் உட்கொண்டுவந்தால் கண்களிலுள்ள மங்கல் நீங்கி நல்ல ஒளி உண்டாகும் மூர்ச்சைரோகம், சுவாசரோகம் இவைகளை வரவொட்டாமல் பாதுகாக்கும். நேத்திரரோகம் தொண்ணூற்றுருறுக்கும் அனுபோகமான தைலமுறை விஷவயித்திய சிந்தாமணியில் சொல்லியிருக்கிறது. அவரவர்களே செய்துகொள்ளலாம்.

நீர்க்கடுப்பு, வெள்ளைக்கு.

இலவம்பிஞ்சும் இலவங்கொழுந்தும் ஒவ்வொருபிடியெடுத்து பால்விட்டரைத்து பாலில்கலந்து காலையில்சாப்பிடவும். இப்படி மூன்றுநாள் சாப்பிட நீர்க்கடுப்பு, வெள்ளைவிழுதல் தீரும், மேகந் தீரும், விந்து கெட்டிப்படும்.

நமைச்சலுக்கு.

இந்துப்பு ஒருபலம் எடுத்து பொடிசெய்து கால்பலம்வசம்பு பொடிசெய்து இரண்டும் கலந்து வெண்ணெய்போட்டுக் குழைத்து காலையில் உடம்பில் முழுமையும் பூசி பகலில் சீக்காய்தேய்த்து உடம்புகுளிக்கவும், நமை, தடிப்பு, சொரி இவைகள்தீரும்.

மூலகணத்துக்கு.

இலவம்பிஞ்சும் சீரகமும் பாலில் அரைத்துப் பாலில்கலந்து கொடுக்கத்தீரும். இப்படி 2-3-வேளை கொடுக்கவேண்டியது.

குழந்தைகட்கு மலஜலம் கட்டிவிட்டால்.

இலைக்கள்ளிவேர்ப்பட்டை 1-எடை சுக்கு, மிளகு, உள்ளிவகைக்கு கால்எடை இவைகளையிடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு முலைப்பாலிலாவது வெந்நீரிலாவது அரைகாசெடை கலந்துகொடுக்கவும். இப்படி மூன்றுவேளைகொடுத்தால மலம் ஜலம் உதயமாகும். பிள்ளைகள்வியாதி சகலத்திற்கும் ஒரே மாத்திரை விஷவயித்திய சிந்தாமணி என்னும் சாஸ்திரத்தில் பார்த்து செய்துகொள்ளவும்.

பெண்கள் பெரும்பாட்டுக்கு.

இலவம்பிஞ்சும் கொழுந்தும் சரியாய்சேர்த்து புளிப்புத் தயிர்விட்டு ஒன்றிரண்டா யிடித்து ஒரு ராத்திரி வைத்திருந்து காலையில் பிழிந்து அந்த ரசத்தைக்குடிக்கவும். இப்படி சிலதினங்கள் குடித்துவர பெரும்பாடுரோகம் தீரும்.

பிள்ளையில்லாதவர்களுக்கு.

இலவஞ்சருகை யிடித்து எட்டுக்கொருபாகமாய் கஷாயம் வைத்து ஒருவேளைக்கு இரண்டுபலம் கியாழத்திற்குக் குறையாமல் குடித்துவந்தால் பித்தம் பயித்தியம் இவைகளைப் போக்கி விடும். கர்ப்பக்குழியைச் சுத்தம்செய்து கருதரிக்கச்செய்யும்.

அதிசாரபேதிக்கு.

இலவவிலையைத் தனியாயிடித்து சாறுபிழிந்து அதிகாலையில் சாப்பிட்டுவந்தால் அநேக மருந்துகளால் தீராத அதிசாரபேதி நிவர்த்தியாகும்.

இஞ்சி ஷர்பத்து.

இஞ்சியை மேல்தோல் சீவிவிட்டு துண்டு துண்டாய் அறுத்து ஆறேகால்ரூபா எடை நிறுத்து பொங்கப்பொங்கக் கொதிவரும்படி காய்ச்சி இறக்கிய அரைக்கால்படிஜலத்தில் ஷை இஞ்சிகளைப் போட்டு 4-மணிநேரம் ஊரவைத்து வடிகட்டி அந்த ஜலத்தை அடுப்பிலேற்றி 75-ரூபா எடை வெள்ளைசர்க்கரைபோட்டு கலக்கி பாகுபதத்தில் எடுத்து சீசாவில்வைத்துக்கொண்டு வேளைக்கு அரைரூபாயெடை சாப்பிட்டுவர, பித்தசாந்தியாய் மனோதையிரியம் உண்டாகும்

ஈளை இருமலுக்கு.

இஞ்சிச்சாறும் மாதுளம் பூச்சாறும் தேனும் சமனுய்க்கலந்து ஒருவேளைக்கு அரைக்கால்படிவீதம் சாப்பிட்டுவர ஷை இருமல் சாந்தியாகும்.

இண்டந்தண்டை ஊறினதண்ணீர் அரைக்கால்படி திப்பிலிப்பொடி திரிகடி, பொரித்த வெங்காரப்பொடி மூன்றுகளஞ்சு, இவைகளை ஒன்றுய்க்கூட்டிக்கொடுக்கவும் இப்படி 4-5-10-வேளை வரையில்கொடுக்க சாந்தியாகும்.

இந்துப்பும் கற்கண்டும்பொடித்து திரிகடிப்பிரமாணம் ஒரு வேளைக்குக்கொடுத்து கொஞ்சம் வெந்நீர்கொடுக்கவும். இப்படி 5-6-10-வேளை வரையில்கொடுக்க சாந்தியாகும்.

பித்தசாந்தி.

இஞ்சி, திரிகடுகு ஏலம், அதிமதுரம், சீரகம், சந்தனத்தூள் வகைக்கு விராகனெடை 1-எடுத்து சிதைத்து ஒருபடி தண்ணீரில்போட்டு அரைக்கால்படியாகக் கஷாயமிட்டிறக்கி கொஞ்சம் சீனிகலந்து கொடுக்கவும். இப்படி 5-6-வேளை சாப்பிட்டால் பித்தசிலுமிஷம் சாந்தியாகும்.

பித்த எரிவுக்கு.

இஞ்சிச்சாறும் கழுதைப்பாலும் ஒரே அளவாய்க் கலந்து வேளை யொன்றுக்கு அரைக்கால்படிவீதம் உள்ளுக்குக்கொடுத்து ஆதளையிலையும் முத்தெருக்கஞ்செவியிலையும் ஓர் நிறையா யெடுத்து ஒருவருஷத்து காடிவிட்டுமைபோலிடித்து உச்சிமுதல்பாதம் வரையில் பூசிவைத்து மாலையில் நீராட்டிவரவும். இப்படிப் பத்து நாள்செய்ய அசாத்தியமான பித்தவுடம்பெரிவு தீரும்.

எரிவாதத்திற்கு.

இலந்தையிலையை அரைத்துக் காடியில் கரைத்து மத்தால் கடைந்து அதில்வருகிற நுரையை உடம்பில்பூச எரிச்சல்மாறிவிடும்.

வயிற்றுநோய் அல்லது கடுப்புக்கு.

இலவங்கப்பட்டை அரைப்பலம் எடுத்து எருமைத்தயிர்விட்டரைத்து அந்தமொத்தையை அரைக்கால்படி எருமைமோரில் கலந்துகொடுக்க வயிற்றுநோய்தீரும்.

அண்ட வாயுவுக்கு.

இலுப்பைப்புண்ணுக்கும் சிவந்தகோழிகாரமும் சுண்டைக்காயளவு எடுத்து அரைத்து பனைவெல்லத்தில் பொதிந்துகொடுக்க அண்டவாயு சௌக்கியமாகும்.

ஆநந்த வாயுவுக்கு

இலுப்பைப்பூ, புண்ணுக்கு எலுமிச்சங்கா யளவெடுத்து ஆழாக்கு ஈருள்ளிச்சாற்றி லூரப்போட்டு வெதுப்பிக்கொடுக்க ஆநந்தவாயு சௌக்கியமாகும்.

இரைப்பு இருமலுக்கு.

இஞ்சிச்சாறு, ஈரவெங்காயச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு இம்மூன்றும் சமனெடைசேர்த்து வேளைக்கு 1-பலமாக 3-நாள்

இருபோதுங்கொடுக்க இரைப்பிருமல் சாந்தியாகும். இச்சாபத்தியம்.

வாத குன்மத்திற்கு.

இஞ்சி, சிவதை, சீந்தில், நிலவாகை, கொடிவேலி, கழற்சிக்கொடி இவைகள் மூலம், முடக்கொத்தான் சமூலம், பூண்டு, திரிகடுகு வகைக்குப்பலம் 1-எடுத்து அரைத்து அரைப்படி சிற்றாமணக்கெண்ணெயில் கலக்கிக்காய்ச்சி வடிகட்டி ஒரு வேளைக்கு ஒரு உச்சிக்கரண்டியளவு கொடுத்துவர, வாதகுன்மம் தீரும்.

அநேக ரோகத்திற்கு.

இஞ்சியைப் பால்விட்டரைத்துக் செச்சைக்காயளவு எடுத்து அரைக்காற்படி பாலில் கலக்கிக்கொடுக்கவும். இப்படிகாலைமாலை கொடுத்துவந்தால் இருமல், இளைப்பு, குன்மசிலுமிஷம், தாபசோபம். மயக்கம், பித்தம், வாயுவு இவைதீரும். பசியுண்டாகும்.

குழந்தை இளைப்பு இருமலுக்கு.

இண்டுசமூலம், தூதுவளை, கண்டங்கத்திரி வகைக்கு ஒரு பிடி திப்பிலி, பூண்டு வகைக்கு துட்டெடை ஒருபடி தண்ணீரில் தட்டிப்போட்டு காய்ச்சி அந்திசந்தி பதமாய்க்கொடுத்துக்கொண்டு வந்தால் குழந்தை இளைப்பிருமல் நிவர்த்தியாகும். பெரியோர்களுக்குமாகும்.

இதுவுமது.

இண்டம்வேர், தூதுளம்வேர் வகைக்குப்பலம்-1 சுக்கு, திப்பிலி, வெந்தயம் வகைக்கு விராகனெடை அரை இடித்து ஒரு படி நீரில்போட்டு காய்ச்சி வடித்து அந்திசந்தி கொடுத்துவர மேற்படி நோய்தீரும்.

இரும்பு சுத்தி.

இரும்பு அரப்பொடியைப் பீங்கானிற்போட்டு அது முழுகும் படி எலுமிச்சம்பழச்சாறுவிட்டு மூன்றுநாள்பொறுத்து எடுத்துக்கழுவ சுத்தியாகும், பிறகு அவிழ்தங்களுக்கு உபயோகிக்கலாம்.

காதில் சீழ் வருதலுக்கு.

இந்துப்பு, சுக்கு இரண்டும் சமனெடை பொடித்து வெண்ணெயிற்போட்டு காய்ச்சி 4, 5 வேளைவிட காதில் சீழ்வடிதல் குணமாகும்.

நாகசுத்தி.

இலுப்ப எண்ணெயில் நாகத்தையுருக்கி சாய்க்கவும் இப்படி பத்து தடவை உருக்கி சாய்க்க நாகம் சுத்தியாகும்.

புறவீச்சுக்கு.

இஞ்சிச்சாறு முலைப்பால் தேன் இவைகள் சமமாகக்கலந்து மேற்படி வியாதிகண்டவுடன் கொடுக்கவும் மிஞ்சினல் வேப்பம் எண்ணெ கொஞ்சம் விட்டுக் கொடுக்கவும் அப்படியும் மிஞ்சினல் விஷவைத்திய சிந்தாமணியில் சொல்லியிருக்கும் சிவநாத த்தைலத்தில் ஒரு காசெடை விட்டுக் கொடுக்க உடனேதீரும்.

புறவீச்சு என்பது நாவுதடுமாறல் பல்கிட்டுதல் திரேகத்தையும் கழுத்தையும் பின்னுக்குவலித்து யிழுக்குதல் வியர்வை முழிமாருட்டம்.

மாலைக்காசத்திற்கு.

இந்துப்பு, மஞ்சள், சாரடைவேர், துத்தம் இவைகளை ஓர் நிறையாக எடுத்து பழச்சார்விட்டரைத்து கயிறுபோல் திரித்து நிழலில் உலாத்திவைத்துக் கொண்டு முலைப்பாலில் இழைத்து கண்ணில் தீட்டிவந்தால் மாலைக்காசம் கண்படலம் தீரும். இந்த கண் வியாதிகள் தொண்ணூற்ருரின் பெயரும், மருந்து முறைகளும் திருநேத்திரசிந்தாமணி என்னும் நூலில் பார்க்கலாம்.

விக்கலுக்கு.

இம்பூராவேரைத்தட்டி பசுப்பால்விட்டு அரைத்துக் கலக்கி இரண்டொருவேளை கொடுத்தால் விக்கல் வயற்றிரைச்சல் பித்தம் இவை தீரும்.

உ

சீழ்முலத்திற்கு.

ஈருள்ளி 5-பலம் எடுத்து சிறுக அரிந்து பண்ணி நெய்யில் பொதிந்து ஐந்து நாள் கொடுக்க சீழ்மூலம் சவுக்கியமாகும்.

இரத்தமுலத்திற்கு.

ஈருள்ளிச் சாறு பசுப்பால் வகைக்கு அரைப்படி பசு நெய் கால்படி ஒருபலம் அதிமதுரத்தை பால்விட்டரைத்து யாவும் ஒன்றுய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி யிறக்கி ஒருவேளைக்கு உச்சிக்கரண்டிவீதம் இருவேளையும் 5-நாள் சாப்பிட்டால் சீழ்மூலம் இரத்தமூலம் சாந்தியாகும். கைப்பு புளிப்பு தள்ளுக.

காதுகுத்சலுக்கு.

ஈருள்ளியை சிதைத்து வெதுப்பி துணியில் முடிந்து பிழிந்து இரண்டு மூன்று துளிகள் காதில்விட்டால் காதகுத்தல் சயித்தியம் தீரும்.

சயித்தியத்திற்கு.

ஈருள்ளியை சிதைத்து 5-துளி முலைப்பால் விட்டு நசுக்கிப் பிழிந்து காதின் பின்புறத்தில் தடவி அனலில் காட்டினுல் சயித்தியம் காதுவலி இவை தீரும்.

இருமலுக்கு கஷாயம்.

ஈயத்தண்டு இலை, தூதுவேளையிலை, நல்லசங்கன் இலை, திப்பிலி, சுக்கு ஐந்தும் சமன் கொண்டு யிடித்து எட்டுக்கொன்ருய் கஷாயமிட்டுக் கொடுத்துவர இருமல் நிவர்த்தியாகும்.

நீர்கடுப்புக்கு

ஈருள்ளிச்சாறு 1-பலம், பொரித்த வெண்காரப் பொடி 1-விராகனெடை இவை ஒன்ருய்க் கலந்து கொடுக்கவும். இப்படி மூன்றுநாள் இருவேளையும் கொடுக்கவும்.

ஈரவெங்காயச்சாறு அரைக்கால்படி பனங்கற்கண்டு ஒரு பலம் போட்டுக்கலக்கி வடிக்கட்டிக்கொடுக்க உடனே நீர் கடுப்பு நிவர்த்தியாகும்.

மேகத்திற்கு.

ஈச்சங்கள்ளு அதிகாலையில் உபயோகித்துவரவும். மேகம், வெப்பம், மேக ஒழுக்கு இவைகள் தீரும். இடைவிடாமல் சதா உபயோகிததால் திரேகம் வீக்கமுண்டாகும்.

பித்தசுரத்திற்கு.

ஈச்சங்குருத்து, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், வில்வவேர், சிற்ருமுட்டி, தாமரைக்கிழங்கு, சந்தனத்தூள், இலுப்பைப்பூ இவை சமன்கொண்டு இரண்டுபடி தண்ணீர் வைத்து கால்படியாக கியாழம்வடித்து இருவேளை கொடுக்க எப்படிப்பட்ட பித்தமும் சாந்தியாகும், சுரந்தணியும்.

கண்சதை வளர்ச்சிக்கு.

ஈருள்ளியும் குறிஞ்சாணிலையும் சமனெடையெடுத்து சிதைத்துக் கண்ணில் 4-5-துளி பிழியவும் இப்படி இரண்டொரு வேளை பிழியக் கண்ணில் சதைவளர்தல் தீரும்.

கணக்கழிச்சலுக்கு.

ஈருள்ளி பத்து திரி, கருவேப்பிலையீர்க்கு ஒருபிடி, சீரகம் விராகனெடை 1, வெந்தயம் விராகனெடை-2, இவைகளை வறுத்துக் கியாழம்வைத்துக் கொடுக்க கணக்கழிச்சல் தீரும்.

வைசூரியினுல் ரத்தபேதிகண்டால்.

ஈருள்ளியை ஆவினெய்யில் வேகவைத்துக் கொடுத்தால் வைசூரியினுல் உண்டாகும் ரத்தபேதிநிவர்த்தியாகும், தேகதிடமறிந்து 3-4-வேளைவரையில் நிதானமாய்க் கொடுக்கவேண்டியது.

ஈருள்ளிச்சாறும் பசுநெய்யும் சமனுய்க் கலந்து வீசம்படி வீதம் மூன்றுபொழுது கொடுத்தால் கடுப்பு, இரத்தம், சீதம் இவைகள் நிவர்த்தியாகும்.

க்ஷயத்திற்கு.

ஈனுத எருமைக் கடாவின் சாணிப்பாலை வடிகட்டி ஆவின் பாலும் நெய்யும் சமன்கலந்து அரைக்காற்படிவீதம், அந்தி, சந்தி கொடுத்துவர க்ஷயம் 96-ம் சாந்தியாகும். புளி நீக்கவும்.

நேத்திரபேதி.

ஈனுத எருமைச்சாணிப்பாலில் சிற்றுமணக்குப் பருப்பையிழைத்து கண்ணில்தடவ நீர்வடிந்து மாசுநீங்கிவிடும். நேத்திரம் சுத்தியாகும்.

உ

ஆமகணத்துக்கு.

உத்தாமணி, பாவட்டை, காவட்டம்புல், சங்கு, முருங்கை, நுணு, பொடுதலை இவைகளின் ஈர்க்கு வகைக்கு ஒருபிடி யிடித்து ஒருபடி தண்ணீர்விட்டு, ஓமம், திப்பிலி, வசம்பு, ஆமையோடு, கருஞ்சீரகம் இவைகளை ஓர்நிறையாய் அரைத்து துணியில் முடிந்து கூடப்போட்டு எட்டொன்றுய் வற்றக்காய்ச்சி ஷெ மருந்தை யெடுத்து அந்தக் கஷாயத்தில் அரைத்து கழற்சிக்காயளவு மூன்று வேளை கொடுக்க ஆமகணந் தீரும்.

உத்தாமணிக்கொழுந்து, வசம்பு, உள்ளி, விளாஓடு ஓமம், ஆமையோடு வகைக்கு இருகழஞ்சு எடுத்து வறுத்து இடித்து விளாங்காய்ப் பிரமாணம் வெண்ணெயில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்க ஆமகணந் தீரும்.

உத்தாமணி, சங்கு, தூதுவளை, பொன்னுங்காணி, இவைகளின்வேர் வகைக்கு ஒருபிடி தண்ணீரில்போட்டு பொடுதலை, வச

ம்பு, ஓமம், திப்பிலி, மிளகு, பூண்டு, ஆமையோடு இவைகளை ஓர் நிறையாய் இடித்து துணியில்முடிந்துபோட்டுக்காய்ச்சி ஷை மருந்தை அரைத்துக் கொடுத்துவந்தால் ஆமகணம், சுரந்தீரும்.

பிள்ளைகள் கழிச்சல் வாந்திக்கு.

உத்தாமணிச்சாறு, எருமை வெண்ணெய் வகைக்கு கால் படி, கருஞ்சீரகம் ஒரு கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி மேற்படி மருந்தை அரைத்துக் கொடுத்துவர பிள்ளைகள் கழிச்சலும் வாந்தியும் தீரும்.

மாந்த கழிச்சலுக்கு.

உத்தாமணி, வேளை, நாய்வேளை, குப்பைமேனி இவைகளைத் தட்டிச் சாறுவாங்கி துட்டெடை உள்ளுக்குக்கொடுத்து மேலுக்குந் துவாலையிட மாந்தக்கழிச்சல் தீரும்.

வாதசுரத்திற்கு.

உத்தாமணி, காவட்டம்புல், கொன்றை, சிற்றாமுட்டிவேர், ஓமம், மிளகு வகைக்குப்பலம் கால்இடித்து இரண்டுபடிதண்ணீர் விட்டு கால்படியாகக் கியாழமிட்டு ஆறுவேளை கொடுக்கவும்.

திரிதோஷம் நீங்க.

உருத்திராட்சத்தைப் பாலில் அரைத்து உபயோகித்து வந்தால் திரிதோஷம், விக்கல், பித்தம், தாகம் இவைகள் தீரும்.

நாவரட்சிக்குக் கஷாயம்.

உருத்திரசடையை பிட்டவியல்செய்து அந்தசாற்றில் மிளகு லவங்கம் தூளாக்கிப்போட்டுக் கொடுத்துவந்தால் தீரும்.

வெப்பத்திற்கு.

உழலாத்திப்படை அல்லது சமூலத்தை பாலில் அரைத்துக் கொடுத்தாலும் அல்லது எட்டொன்றாய் கியாழம்வைத்து சர்க்கரை கூட்டிக்கொடுத்தாலும் வெப்பம், சூடு தணியும்.

ஊ

அக்கி ரணத்திற்கு.

ஊமத்தன் இலையை அரைத்து வெண்ணெயில் குழைத்து அக்கி ரணத்தின்மேற் பூசிவர ரணம் ஆறிப்போகும்.

நீரடைப்புக்கு.

ஊமத்தன் இலையை வெதுப்பி அதற்கு சமன் ஏலரிசிகூட்டி தண்ணீர்விட்டரைத்து அடிவயிற்றில் பற்றுபோட்டால் மூலவாயுவினால் உண்டாகும் நீரடைப்பு உடனே உடையும்.

சுவாசகாசத்திற்கு.

ஊமத்தனிலையை நிழலிலுலர்த்தி சிறுகக் கத்தரித்து புகையிலையில்வைத்து சுவாசம் வரும்போது புகைபிடித்தால் உடனே சுவாசம் சாந்தியாகும். அதிகமாய் உபயோகிக்கக்கூடாது.

கட்டிகளுக்கு.

ஊமத்தன் இலையை விளக்கெண்ணெ தடவி வதக்கி கட்டிகளின்மீது வைத்துக்கட்டினால் பழுத்து உடைவதுண்டு. இரண்டு மூன்று கட்டுகட்டவும்.

கட்டிகள் உடைய.

ஊமத்தன் இலையை அரைத்து அரசிமாவுங் கலந்து காடிவிட்டு போல்டீஸ்கிளரி 1-அல்லது 2-கட்டு கட்ட கட்டி உடையும்.

வாதநோய்க்கு.

ஊமத்தனிலையைச் சாராயத்தில் சற்றுநேரம் ஊறவைத்தெடுத்து வாயுவினால் நோய்கண்டிருக்கிற இடத்தில் வைத்துக் கட்ட வாதவலி நீங்கும்.

பிளவைகட்கு

ஊமத்தங்காயை சாணியில்போட்டு அடுப்பேற்றி, நன்றாய் வெதுப்பி நசுக்கி பில்லை தட்டி துளி விளக்கெண்ணெ தடவி பிளவை, விப்புருதி, கண்டமாலைமுதலிய கரடுவீக்கங்களில் வைத்துக் கட்ட சவுக்கியமாகும்.

கண்பிரிவிற்கு, புழுவெட்டுக்கு, பூவிற்கு.

ஊமத்தங்காயை விரைநீக்கி பாலில்சுத்திசெய்து பூநாகத்தை உள்ளேபோட்டுமூடி சட்டியிலிட்டு எரித்து சாம்பலாக்கி அதற்கு சரிஎடை துத்தம், துரிசுகூட்டி பசும்வெண்ணெபோட்டுக் களிம்புபோல் அரைத்துக்கொண்டு கண்ணில் தீட்டிவர நிவர்த்தியாகும்.

கண் குளிர்ச்சிக்கு.

ஊசிப்பாலையை அரைத்து தயிரில்கலக்கியுண்டுவந்தால் கண்கள் குளிர்ச்சியுண்டாகும். ஆண்குறி துவாரவெப்பம், பிரமேகம் இவைகள் தீரும்.

விஷம் நீங்க.

ஊமத்தம்வேரும் அதின்வித்தும் வகைக்கு ஒருவிராகனெ டையெடுத்து ஆவின்பால்விட் டரைத்துக் கலக்கிக்கொடுக்க எலி கடி, நாய்கடி, நரிகடிமுதலிய விஷங்கள்போகும்.

எ

காதில் சீழ்வருதலுக்கு.

எருக்கு, கள்ளி, இஞ்சி, துளசி இவைகள் சமனெடுத்து சிதைத்து நல்லெண்ணெவிட்டு முறியக்காய்ச்சி வடித்து காதில்-2-3-துளிவிட்டு பஞ்சடைத்துவைக்கவும். சீதளபதார்த்தங்கூடாது. இப்படி 2, 3 நாள் இருவேளையும் விட சீழ் வருதல் நிற்கும்.

குழந்தைகளுக்கு சிறுநீர்கட்டினல்.

எலிபுழுக்கையும், வெள்ளரிவிரையும் சமன்கொண்டரைத்து அடிவயிற்றில்பூசி வெங்காரத்தைப்பொரித்து 2-சிட்டிகை யெடுத்து முலைப்பாலில்கலக்கி உள்ளுக்குபுகட்டவும் நீர் இறங்கும்.

ஒருதலைவலி, மண்டையிடிக்குத் தைலம்.

எருக்கம்பழுப்புச்சாறு அரைக்கால்படி, நல்லெண்ணெ ஒரு படி, சுக்கு, இந்துப்பு, அதிமதுரம், வசம்பு, திப்பிலிமூலம், வெள்ளுள்ளி வகைக்குப்பலம்-½ இடித்துப்போட்டுக்காய்ச்சி வடித்து தலைமுழுகிவந்தால் ஒருதலைவலி, மண்டையிடி நிவர்த்தியாகும்.

எலுமிச்சம்பழச்சாறு, வெற்றிலைச்சாறு, பசுநெய், நல்லெண்ணெய் வகைக்குப்படி அரை, கருஞ்சீரகம் பலம் இரண்டரை பொடித்துப்போட்டு காய்ச்சிவடித்து ஒன்றைவிட் டொருநாள் முழுகிவர ஷிடி நோய்கள் தீரும்.

தேள் விஷத்திற்கு.

எட்டிக்கொட்டையை பாலில் உரைத்துக் கலக்கிக்கொள்ள தேள், நட்டுவாக்காலி விஷமும் மற்றவிஷமும் நீங்கும்.

நீர்கட்டி, புண், படைகளுக்கு.

எட்டிக்கொட்டையை அரைத்து ரத்தக்கட்டி, நீர்கட்டி, சிலந்தி, புண்படைகளுக்கு அரைத்துப்பூசினல் தீரும்.

காயகற்பம்.

எட்டிக்கொட்டையை முதலில் மிளகளவிலிருந்து நாளுக்கு நாள் பயறு பிரமாணம் அதிகப்படுத்திக்கொண்டே தின்றுவந்து கடைசியில் காலையில்-1, மாலையில்-1, ஆக வழக்கத்தில் கொண்டு

வந்து மறுபடியும் தினங்கொஞ்சங் குறைத்துக்கொண்டேவந்து நிறுத்திவிடவும். இப்படி செய்தவா களுக்கு விஷபயமே கிடையாது. தேள், நட்டுவாக்காலி, பாம்பு முதலிய விஷஜெந்துக்களில் எது கடித்தாலும் அது இறந்து போகுமே தவிர தனக்கு விஷமேறுது. குஷ்ட வியாதி இருந்தாலும் நிவர்த்தியாகும் வாதரோகந் தீரும். ஆனால் பித்தம் அதிகரிக்கும்.

பேதிக்கு.

எருக்கம்பால் இரண்டுதுளியை கொட்டைப்பாக்களவு மஸ்டில்லாத புளியை பள்ளஞ்செய்து அதன்நடுவில் விட்டுமூடி தின்றுவிட்டால் நன்ருய்பேதியாகும். இது மூரட்டுடம்புக்குத்தகும்.

அரையாப்பு கட்டிக்கு.

எருக்கஞ்செடியின் வடக்கேபோகிற வேரும் களிமண்ணும் சரிபங்கு வைத்தரைத்து அரையாப்புக் கட்டியின்மேல் பூசிவைக்கக் கரைந்துபோகும். இப்படி மூன்று நாள் பூசவும்.

பாத எரிச்சலுக்கு.

எட்டிப்பழத்தில் 7-8-கொண்டுவந்து புதுசட்டியில் போட்டு அடுப்பேற்றிவெதுப்பி தரையில்கொட்டி சூடாயிருக்கும்போதே பித்தளரிவு, பாதம்ஊரல், நமை முதலிய அருவருப்பு உள்ள பாதங்களினுல் மிதித்துத் தேய்க்கவேண்டும். இப்படி 5, 6-வேளை செய்ய பாதஎரிச்சல் நீங்கும்.

மண்டை யிடிக்கு.

எருக்கம்வேர் அதாவது அடிக்கட்டையை கொண்டுவந்து கொளுத்திக்கரியாக்கி ஒருபலம் கரிக்கி கால்பலம் லிங்கஞ்சேர்த்து ஜாண் அகலமுள்ள சீலையை எருக்கம்பாலில் நனைத்து உலர்த்தி பிறகு முலைப்பாலில் மூன்றுவிசை நனைத்து உலர்த்தி அதில் ஷை தூளைப்பரப்பி திரிபோல்திரித்து ஒருமுனையைக் கொளுத்தி அந்தபுகையை மூக்கில்பிடிக்கவும் 5-நிமிஷம் புகை பிடித்துவிட்டு தூங்கவேண்டியது மறுதினம் ராத்திரி 5-நிமிஷம் பிடிக்கவும் இப்படி மூன்றுநாளைக்கு இரவில்படுக்கும்போது 5-நிமிஷம் பிடித்து வந்தால் மண்டைபிடி, மண்டைக்குடைச்சல், எப்போதும் விடாத்தலைபாரம் இவைகள் தீரும்.

வாந்திபேதிக்கு.

எட்டிமரத்தின் வடவேரின்மேற்றேலை எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து காயவைத்து சூரணம்செய்து சிவன்வேம்பு, தும்பைச்செடி சமூலம் இரண்டும் ஒன்ருய்கியாழம்வைத்து ஷை சூரணத்தில் மூன்று சிட்டிகை போட்டுக் கொடுக்கவும். பேதிநிற்கா

விட்டால் மறுபடியும் கொடுக்கவும். இப்படி 3-4-விசை கொடுக்கவும் அரிசிகஞ்சி காய்ச்சிகொடுக்கவும், பேதி, வாந்தி, காதடைப்பு யாவுந்தீரும்.

மேகப்புண்ணுக்கு.

எட்டிப்பழம் இரண்டு கொண்டுவந்து நல்லெண்ணெயில் வறுத்து அல்லது நன்றாய் வேகவைத்தரைத்து பஞ்சில்துவட்டி மேகப்புண்ணின்மேல்போட ஆறிப்போகும்.

நரம்பு சிலந்திக்கு.

எருக்கமொக்கு 60- கொண்டுவந்து பெருங்காயம் சமனெடை சேர்த்தரைத்து 5-அல்லது 6-வேளை கொடுக்கவும்.

மூலகணத்திற்கு.

எலுமிச்சம்பழச்சாறு, கற்றாழைச்சோறு, வெந்தயம் சமன் கொண்டரைத்து காய்ச்சிக்கொடுத்துவர மூலகணந்தீரும்.

காதிரைச்சலுக்கு.

எருக்கனிலைச்சாறு இரண்டரைபலம், நல்லெண்ணெ இரண்டரைபலம் வசம்பு, கோஷ்டம், சுக்கு, திப்பிலி, இந்துப்பு, கோரைக்கிழங்கு வகைக்கு அரைக்காற்பலம் இடித்துப்போட்டுக்காய்ச்சி காதில் இரண்டுமூன்று துளிகள் இரண்டு மூன்றுவேளை விடவும்.

அரையாப்புக்கு.

எலுமிச்சம்வேர், சத்திச்சாரணை இரண்டுஞ் சமன்கொண்டரைத்து நல்லெண்ணெயில் குழைத்து கெச்சைக்காய் பிரமாணம் சாப்பிட்டுவந்தால் அரையாப்பு தீரும். 3 நாள் சாப்பிடவும்.

வைசூரியின்பேரில் சுரங்கண்டால்.

எலுமிச்சம் வேரின்பட்டை, ஏலம், சீந்திற்கொடி, விலாமிச்சம்வேர், பற்பாடகம், சந்தனத்தூள், கோறைக்கிழங்கு இவைகள் வகைக்கு விராகனெடை-5 நறுக்கிப்போட்டு எட்டொன்றாய்கியாழமிட்டு மூன்றுவேளை கொடுக்கவும்.

வயிற்றுக்கிருமிக்கு.

எலிச்செவி, முருங்கைவேர், திரிபலை இவைநறுக்கி கியாழமிட்டு ஒரு சங்களவுகொடுக்க புழுக்கள் நிவர்த்தியாகும்.

நீர் எரிவுக்கு.

எலுமிச்சம்பழச்சாறும் நல்லெண்ணெயும் சமன்கலந்து ஒரு பலமிருக்கும்படி சாப்பிட்டால் நீர்எரிவு தீரும்.

சர்வ சிரங்குக்கும்.

எலியாமணக்கு சமூலத்தை பழச்சாற்றி லரைத்து வேப்பெண்ணெயில் கலக்கிக் காய்ச்சி எல்லாவித சிரங்குகளுக்குந் தடவலாம்.

நீரொழுக்கிற்கு.

எள்ளுப்புண்ணுக்கும் கோவையிலையும் சரி எடை கூட்டி அரைகாரம் சேர்த்துப்புரட்டி ஒரு குத்து கொடுக்கவும் அப்படி மூன்று நாள் கொடுக்க நீரொழுக்கு சாந்தியாகும்.

உண்ணுக்கு வளர்ச்சிக்கு.

எவாச்சாரம், கல்சுண்ணும்பு இவை சமனெடை யெடுத்து எலுமிச்சம்பழச்சாற்று லரைத்து பயறளவு எடுத்து உண்ணுக்கில் தடவ அது குணமாகும்.

இரத்தம்போல் நீர் இறங்குதற்கு.

எருமைப்பால் இரண்டுபடியில் பொன்னுங்கணிவேர் எலுமிச்சங்காயளவு அரைத்துப்போட்டு நன்ருய்க்காய்ச்சி புரைகுத்திக் கடைந்து வெண்ணெயெடுத்து அந்த வெண்ணெயை அதிகாலையில் மூன்றுநாள் சாப்பிடவும். அந்தமோரை தாகசாந்தி செய்து வாவும் ஷை வியாதிதீரும்.

இரத்த மூலத்திற்கு.

எருக்கங்கிழங்கும் புழுங்கலரிசியும் சரிஎடை உளுந்து கால்பங்குகூட்டி அரைத்து புளிக்கவைத்து தோசைசுட்டுக் கொடுக்க இரத்தமூலந் தீரும். இப்படி 3-நாள் அல்லது 5-நாள் இருவேளையுங் கொடுக்கவும்.

காமாலைக்கு.

எருமைச்சாணிப்பால், எருமைத்தயிர் இரண்டுங்கலந்து சீரகம், வெங்காயம் சமன்சேர்த்து ஷை தயிர்விட்டரைத்து எருமைப்பாலில் கலக்கிக்கொடுக்கவும். இப்படி 5-7-வேளை கொடுக்க காமாலை சாந்தியாகும்.

கல் அடைப்புக்கு.

எருக்கம்பூவின் மொக்கு 7-எடுத்து சுண்ணும்பு சேர்க்காமல் வெற்றிலைப்பாக்குடன்வைத்து தின்னவும். இப்படி 2-வேளை அல்லது 3 வேளை தின்ன கல்லடைப்பு தீரும்.

இருதயவலிக்கு.

எலுமிச்சம்பழம் 5-சாறுபிழிந்துகொண்டு அதில் ரோஜா மொக்குதூள், சந்தனத்தூள், ஜாதிக்காய்த்தூள் வகைக்கு ஒரு

ரூபாஎடை காவிக்கல் ஒருவிராகனெடை கூட்டிக்கலக்கி வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு ஒருரூபா எடை புசித்துவர இருதய காபரா, நெஞ்சு அடிப்பு இவைகள்நீங்கும்.

ஏ

சொறிசிரங்குக்கு.

ஏலம், கார்கோலரிசி, கந்தகம், கற்பூரம், பிராயம்பட்டை, வகைக்கு விராகனெடை-1-எடுத்து பொடியாயிடித்து அரைக் காற்படி நல்லெண்ணெயில்போட்டு காய்ச்சி காலையில் உடம்பில் தேய்த்து மாலையில் சீக்காயரைப்பு தேய்த்து உடம்பு குளிக்க சொறி, சிரங்கு தீரும்.

செம்மேகத்திற்கு.

ஏழிஞ்சில்.சமூலமும், கார்போக அரிசி, சித்திரமூலம், சிறு தகரைசமூலம், ஆவாரம் வித்து இவைகளைக் கிரமப்படி குழித் தைல மிறக்கிப் பூச செம்மேகம் நிவர்த்தியாகும்.

காணுமேகத்திற்கு.

ஏழிஞ்சில் சமூலம்கொண்டுவந்து நிழலிலுலர்த்தி யிடித்து வஸ்திரகாயம்செய்து சர்க்கரை சமன்கூட்டி அந்திசந்தி திரிகடி பிரமாணம் தின்று மிளகு கியாழம் சாப்பிட்டுவரவும் உடம்பிலுள்ள மேகம் முதலான காணுவியாதிகள் தீரும். பத்தியமில்லை.

பருவுகளுக்கு

எரண்டஇலையை விளக்கெண்ணெய்தடவி வதக்கி பருவுகள் கட்டிகளுக்கு வைத்துக்கட்ட 2-3-கட்டில் பழுத்து உடையும்.

ஐ

மேகத்திற்கு.

ஐவேலியை அதாவது ஐவிரலியென்றும் பெயருண்டு அதைக் கொண்டுவந்து அதிகாலையில் பாலி லரைத்துக் கலக்கி சாப்பிட்டு வந்தால் மேகம், மேகவொழுக்கு யாவுந்தீரும்.

லிங்கம் கட்ட.

ஐவேலியின் பிரயோகத்தினுல் லிங்கத்தை சுத்திசெய்து செந்தூரித்து ரோகிகளுக்கு உபயோகித்தால் வெண்மேகம்,செம்மேகம் இவை தீரும். இது பெரியோர்களால் தெரிந்துகொள்க.

ஐங்கூட்டு எண்ணெய்.

ஐங்கூட்டு எண்ணெயில் ஸ்நானஞ்செய்துவந்தால் ஜன்னி, சுரம், பின்னிசிவு, வாய்வு, க்ஷயம் இவைகள் நிவர்த்தியாகும். இதன் முறை விஷவைத்திய சிந்தாமணியில் காண்க.

ஓ

மூலச்சூட்டுக்கு.

ஓட்டுத்துத்தியை சமைத்துத்தின்றாலும் கியாழம் வைத்துக் குடித்தாலும் சூடு, மூலச்சூடு இவைகள் தணியும்.

கிராணிகளுக்கு.

ஓதியம்பட்டையை யிடித்து புளித்த தயிர்விட்டுப் பிசைந்து ஊரவைத்து மறுதினமிடித்து சாறுபிழிந்து பால்விட்டுக் கலக்கிக்கொடுக்க கிராணி, இரத்தபேதி, இரத்தக் கடுப்பு தீரும்.

ஓதியமரத்தின் வேரின்பட்டையை ஆர்க்கப் பொடிசெய்த தூள் கால்பலமும் கடுக்காய்ப்பூவின் தூள் 2-சிட்டிகையும்கலந்து பால்விட்டரைத்து பாலில்கலக்கிக் கொடுத்தால் சீதபேதி, ரத்த பேதி, கடுப்பு, கிராணி இவை இரண்டு மூன்று வேளையில் தீரும்.

தீராதபுண்களுக்கு.

ஓதியம்பட்டையை ஆர்க்கப்பொடிசெய்து வேப்பெண்ணெயிற்கலந்து புண்களுக்கும் தீராத ரணங்களுக்கும் பூசிவந்தால் ஆறிப்போகும்.

நாதம் உண்டாக.

ஒட்டைநெய்யை உண்டியுடன் உபயோகித்து வருவதாலும் ஷை நெய்யினால் பலகாரங்கள்செய்து நீடித்து தின்றுவருவதாலும் அபரிமிதமான இந்திரியத்தை யுண்டாக்கும். வயிறு மந்தப்படும் குணமுண்டு.

வீக்கத்திற்கு.

ஒட்டைலத்தையை கொண்டுவந்து புதுச்சட்டியில் போட்டு வெதுப்பி சுரத்தால் வீக்கங்கண்ட கால்களில் கனமாய் அப்பி துணிக்கந்தையா லழுத்தி கட்டிவைத்து மறுதினம்காலையில் அவிழ்த்துவிடவும். இப்படி 3-கட்டு கட்ட ஷை வீக்கந்தீரும்.

காதுகுத்தலுக்கு.

ஒருதலைப்பூண்டை வெதுப்பி காதில் இரண்டொரு துளிகள் பிழிய காதுகுத்தல் தீரும். இப்படி 2-3-வேளை செய்யவும்.

ஓ

பிரமியத்திற்கு.

ஓரிலைத்தாமரையை யிடித்து சாறுபிழிந்து கொஞ்சம் சீனி சர்க்கரைகலந்து ஒருவேளைக்கு அரைக்காற்படி வீதம் மூன்று நாள் கொடுக்க பிரமியம் சாந்தியாகும் இச்சாபத்தியம்.

சுக்கிலபிரமியத்திற்கு.

ஓரிலைத்தாமரையும் நற்சீரகமும் சமமாய்க்கூட்டி யரைத்து ஒரு வேளைக்கு கொட்டைப்பாக்குப் பிரமாணம் கொடுக்கவும். இப்படி 5-வேளை கொடுக்க சுக்கிலபிரமியம் சாந்தியாகும் இச்சா பத்தியம்.

புள்ளின் தோஷத்திற்கு.

ஓரிலைத்தாமரை, வெந்தயம், விடத்தலைவேர், சுக்கு வால் மிளகு ஓரளவாயெடுத் திடித்துக் கியாழம்செய்து கொடுத்து வரப் புள்தோஷந் தீரும்.

உஷ்ணம் நீங்க.

ஒணன்கொடி அல்லது கொழுந்து கொண்டுவந்து பாலில் அரைத்துக் கலக்கி யுண்டுவந்தால் வெப்பந்தணியும். வெள்ளை விழுதலும நிற்கும்.

அக்கினிமந்தம்தீர.

ஓமம், சுக்கு, சித்திரமூலவேரின்பட்டை இவைகள் சரியெடையாயெடுத்துப் பொடித்து அதற்குச் சரியெடை கடுக்காய்ப் பொடி கூட்டி வஸ்திரகாயஞ்செய்து வேளைக்கு திரிகடிப் பிரமாணம் எடுத்து மோரில்கலக்கிப் புசித்துவந்தால் அக்கினி மந்தம் தீரும் பசியுண்டாகும்.

புகையிருமலுக்கு.

ஓமம், கடுக்காய்த்தோல், சுக்கு, திப்பிலி, மிளகு, அரத்தை, அக்கராகாரம், தேசாவரம் இவைகள் சமனெடைகொண்டு சூரணித்து அதிற்பாதி சர்க்கரைகூட்டி திரிகடியளவு இருவேளையும் புசித்துவந்தால் புகையிருமல் நிவர்த்தியாகும்.

வயிற்றுக்கடுப்புகழிச்சல்தீர.

ஓமம், மிளகு வகைக்குப்பலம் 1, சட்டியிலிட்டு வெதுப்பிக் கொண்டு வெல்லம் ½-பலம் கூட்டி அரைத்து திருகடிப்பிரமாணம் 10-நாள்கொடுக்க வயிற்றுக்கடுப்பு கழிச்சல் நிவர்த்தியாம்.

ஆ

மூலச்சூடுதணிய.

கற்றாழைச்சோறும் ஆவின்பாலும் கலந்து காலைமாலை புன்னைக்காயளவு உண்டுவந்தால் மூலச்சூடுதணியும். விந்து கட்டும். சொரி, நமை, சோகை முதலியவைகள் தீரும்.

வெங்கண்புள்ளுக்கு.

கற்றாழைச்சோற்றில் கடுக்காய்ப்பொடி தூவி வைத்திருந்தால் நீருண்டாகும், அந்த நீரில் திப்பிலியை வறுத்துப் பொடித்ததூள் திரிகடி தூவிக்கொடுக்க பிள்ளைகளுக்குண்டாகும் வெங்கண்புள் தோஷந்தீரும்.

தீராதசூடுவெள்ளைக்கு.

கற்றாழைச்சோற்றை எழுதரம் கழுவி புன்னைக்கா யளவெடுத்து அதில் திருகடி சீனிசர்க்கரையும் ஒரு சிட்டிகை * கல்நார் பஸ்பமும் வைத்து சாப்பிடவும். இப்படி காலைமாலை இருவேளையும் 10-நாள் சாப்பிட தீராதசூடு, வெள்ளை தீரும்.

லிங்கவீக்கந்தீர.

கற்றாழைச்சோற்றை எழுதரம் கழுவியெடுத்து கொருக்குரணம்கண்டு அதற்குமேல் வீக்கமுண்டாயிருக்கும் லிங்கத்தின் மீது ஒருராத்திரி வைத்துக்கட்ட வாடிப்போகும்.

பிள்ளைகளின் அடிதள்ளினதற்கு.

கரிசலாங்கண்ணியும் பழம்புளியும் சரியெடை வைத்தரைத்து கெச்சைக்காயளவு அல்லது புன்னைக்காயளவு எட்டு நாள் கொடுக்க பிள்ளைகள் அடிதள்ளினது தீரும்.

சீதசுரம் நீங்க.

கண்டங்கத்திரி, சிந்தில்தண்டு, தாமரைவளையம் இம்மூன்றும் கியாழம்வைத்து சுக்கு, கோறைக்கிழங்கு பொடிசெய்து போட்டு கொஞ்சம்கொடுக்கவும் இப்படி 2-3-வேளை கொடுக்கவும்.

விக்கல் வாந்தி சுரத்திற்கு.

கண்டங்கத்திரிவிரை, அமுக்குராசமூலம், திப்பிலி இவை சமனெடைபோட்டு கியாழம்வைத்து தேன் முலைப்பால்விட்டுக் கொடுக்க விக்கல் வாந்திசுரந் தீரும்.

---

* கல்நாற்பஸ்பம் செய்யும் அனுபோகமான முறை விஷவைத்திய சிந்தாமணியில் சொல்லியிருக்கிறது. அதன் பிரகாரம் யாரேனும் தாராளமாய்ச் செய்துகொள்ளலாம்.

பல்வலிதீர.

கண்டங்கத்திரி சமூலத்தைச் சுட்டுக் கரியாக்கிப்பொடித்து. வைத்துக்கொண்டு அந்திசந்தி பல்துலக்கிவந்தால் பல்வலிசாந்தி.

பீனசத் தயிலம்.

கண்டங்கத்தரிப்பழம், துளசி, வெற்றிலை இவைகளின் சாறு, கஞ்சாகியாழம், நல்லெண்ணெய் வகைக்குப் படி அரை ஒன்ருய்க் கலந்து காய்ச்சிவடித்து தலைமுழுகிவர ரத்தபீனிசம் சிறுபீனிசம் இவை தீரும்.

சுரத்தின் பேரில் கொடுக்கும் பேதிகஷாயம்.

கற்ருழைச்சருகு, வேம்பின் பட்டை, கடுக்காய், கார்கோலரிசி, இவைகளைச்சிதைத்து கியாழம்செய்துகொடுக்க இரண்டொருவிசை விரேசனமாகி சுரந்தணியும்.

உட்சுரம் கால் எரிவுதீர.

கற்ருழைச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, முசுமுசுக்கைச்சாறு வகைக்கு அரைக்காற்படி, நல்லெண்ணெய் ஒருபடி, அதிமதுரம் ஒருபலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி முழுகிவந்தால் தீரும்.

அண்டவாயுவுக்கு.

கழற்சிப்பருப்பு, வெள்ளுள்ளி, முருங்கைப்பட்டை, சுக்கு. கருங்காணம் வகைக்கு 2-களஞ்சு எதித்திடித்து 1-படி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாகக் காய்ச்சி யிறக்கிக்கொடுக்கவும், இப்படி ஆறுவேளை கொடுக்க அண்டவாயு சாந்தியாகும்.

கழற்சிப்பருப்பு சித்திரமூலவேரின்பட்டை மாவிலிங்கம்வேர்ப்பட்டை வகைக்குப்பலம்-1 எடுத்திடித்துப் பொடித்து அண்ட.வெள்ளைக்கருவால் கிளறி கழற்சிக்காயளவு கொடுத்துவரவும்.

கழற்சிப்பருப்பு, சத்திசாரணைக்கிழங்கு, மிளகு, இந்துப்பு பெருங்காயம், வெள்ளுள்ளி, வசம்பு இவைகள் ஓர் நிறையாயிடித்து வெள்ளாட்டுப்பாலி லரைத்துக் கொடுத்துவரவும்.

அஜீரணவாயுவுக்கு.

கருவேப்பிலையீர்க்கு, சுக்கு, சீரகம், ஓமம், வகைக்கு விராகனெடை-3 ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாக வற்றக்காய்ச்சி வடித்து கொஞ்சம் சர்க்கரையிட்டுக் கொடுக்கவும்.

தலையில் நீரேற்றத்திற்கு.

கருஞ்செம்பையிலையை யிடித்து சாறுபிழிந்துவிட்டு அந்தத் திப்பியை உச்சியில்வைத்துக்கட்டி காலையிலவிழ்த்துவிட தலையில் நீரேற்றம் தீரும்.

தலைப்பாரத்திற்கு.

கருஞ்செம்மைப்பூவை நல்லெண்ணெயிலிட்டு காய்ச்சிமுழுகி வந்தால் தலைபாரம், தலைவலி, ஒற்றைத்தலைவலி, சீதளம் தீரும்.

கொருக்கிஞல்கண்ட வீக்கத்திற்கு.

கருஞ்செம்பையிலையை வதக்கிப் பிழிந்து விட்டு அந்தத் திப்பியை ஆண்குறியின்மேல் வைத்துக் கட்டினல் கொருக்கிஞல் கண்ட வீக்கம் வற்றிப்போகும்.

வாதச்கடுப்புக்கு மேல் பூச்சு.

கள்ளிக்கொழுந்தை வதக்கி சாறுபிழிந்து அந்தச் சாற்றில் பூநீறு, சீரகம் வகைக்கு ஒருசிறங்கைபோட்டு ஊரவைத்து மறுநாள் அந்த ஜலத்திஞல் கடுகை அரைத்து பற்றுபோடவும்.

பித்ததயிலம்.

கரிப்பான்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, வகைக்கு அரைப்படி பசுப்பால் ஒருபடி அதிமதும் ஒருபலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்திலிறக்கி முழுகிவந்தால் சகலபித்தமும் தீரும், மயக்கமும் தீரும்.

காதுமந்தத்திற்கு.

கள்ளியிலையை வாட்டிப்பிழிந்த சாறு, வெள்ளுள்ளிச்சாறு, நல்லெண்ணெய் பசுப்பால் சமனெடைகலந்து கொஞ்சம் முருங்கைவேரும் வசம்பும் நறுக்கிப்போட்டுக் காய்ச்சி காதில் இருவேளையும் பத்துநாள் விட்டுவர காதுமந்தந்தீரும்.

கரப்பான் வாயுவுக்கு.

கடுக்காய் சமூலத்தை பாலில் உட்கொண்டுவந்தால் கரப்பான், குட்டம், கிரந்தி, வங்கு சில்லரைவிஷம் இவைநீங்கும்.

பிளவைகட்கு.

கடுக்காய், சுக்கு, கரியபோளம், நாவிக்கிழங்கு, அபின், கொடிவேலிவேர், எருக்கம்வேர், வாளம் இவைகளை எருக்கம்பாலில் அரைத்து அல்லது எருக்கம்பழுப்புச் சாற்ருலரைத்து பிளவை, கட்டி, பருவு, அரையாப்பு இவைகளுக்குத்தடவ உடையும்.

கபம் கிருமிக்கு.

கருவாகை சமூலத்தை பாலில் அரைத்து எப்போதும் உபயோகித்துவந்தால் கிருமி, கபம், ரிணம், சுரம் இவைகள் தீரும்.

காயசித்தி.

கருநெல்லி சமூலத்தை பாலில் அரைத்துக் கலக்கி இருபோதும் உண்டுவந்தால ஜன்னி வாதசிலுமிஷம், தயக்கம், மயக்கம், தேகக்கடுப்பு இவைதீரும் இடைவிடாமல் நாள்பட உண்டுவந்தால் காயசித்தியாம்.

சிரசுநீர் நீங்க.

கடம்புவிரையை பாலில் அரைத்துக்கலக்கி உட்கொண்டுவந்தால் சிரசிலுள்ள நீர்தோஷம் வாதம், இருமல், இளைப்பு, எலிகடிவிஷம், வாதம் இவைதீரும்.

வெட்டைக்கு.

கல்லத்திவிரையை பசுப்பாலில் அரைத்துக் கலக்கி இருபோதும் உட்கொண்டுவந்தால் இந்திரியத்திலிருக்கும் தோஷத்தை நிவர்த்தியாக்கும், மேகம் மேகவெட்டை இவைநீங்கும்.

அண்டவாதத்திற்கு.

கழற்சிவித்திலுள்ள பருப்பையெடுத்து பசுப்பாலில் அரைத்துக் கலக்கி காய்ச்சி யருந்திவந்தால் அண்டவாதம், பக்க சூலை இவை தீரும்.

தாகசுரத்திற்கு.

கருவாகை மூலத்தை பாலில் அரைத்துக்கலக்கி இருபோதும் உட்கொண்டுவந்தால் தாகசுரம், பெருவிஷம், சிறுவிஷம், அனல், ரணம், நாக்கு அச்சரம் இவைகள் தீரும்.

உடம்புதணிய.

கசகசாவை பாலில் அரைத்துக்கலக்கி சற்று அனலிட்டுக் காய்ச்சி உட்கொண்டுவந்தாலும் காய்ச்சாமல் அருந்தினாலும் மேகவெட்டை, சூடு இவைநீங்கும், உடம்பு தணியும், இடுப்பு வலிவு உண்டாகும்.

நாவரட்சிநீங்க.

கடுக்காய்ப்பூ, திரிகடுகு, சிறுதேக்கு, தாணிக்காய், கோஷ்டம், இந்துப்பு இவை சமன்கொண்டு வெதுப்பிப்பொடித்து திருகடிபிரமாணம் தேனிலாவது முலைப்பாலிலாவது உட்கொண்டு வந்தால் நாவரட்சி, சுரந்தீரும்.

இருமல் சாந்தி.

கடுக்காயை பச்சையாகக் கொண்டுவந்து பாலில் அரைத்து அருந்தினால் இருமல், புகையிருமல், ஈளை, சீதக்கடுப்பு இவை தீரும்.

மூலமுளைநீங்க.

கல்மதத்தை பசும்வெண்ணெயிலரைத்து விரலில் தொட்டு பவனவாயில் சுற்றித்தடவ மூலமுளை நீராய்க்கரைந்துவிடும்.

கண்வலிநீங்க.

கரியுப்பை பொடியாய் நசுக்கி துணியில்முடிந்து நீராகாரத் தண்ணீரில் தோய்த்து இரண்டுநாழிகைக் கொருதரம் கண்ணில் தீட்ட கண்வலி உடனே நீங்கும்.

வண்டுகேடிநீங்க.

கருங்கம்பளி சுட்டசாம்பலையும் சமயல்வீட்டின்மேலே ஒட்டியிருக்கும் புகையூறலும் வசம்பு கறுக்கினகரியும் வேப்பெண்ணெயில் குழைத்து வண்டுகடிமேல் தடவத்தீரும்.

கண்ணோய்தீர.

கற்கண்டை பொடித்து துணியில்முடிந்து புளிப்பு மாதுளம் பழச்சாற்றில் தோய்த்துக் கண்ணில்பிழிய கண்வலிநீங்கும்.

அமரத்திற்கு.

கடுக்காயைத்தட்டி துணியில் முடிந்து ஆமணக்கெண்ணெயில்போட்டு சூரியபுடம்வைத்து கண்ணில்பிழிய கண் அமரம் தீரும்.

மாந்தங்களுக்கு.

கற்பூரவள்ளியிலை பிட்டவித்து சாறுபிழிந்து அதில் குன்றி எடை கோரோசனம் இழைத்து பிள்ளைக்கு வார்த்து வந்தால் மாந்தம், அஜீரணம், சுரம் இவைகள் அணுகா. அத்துடன் சில மாத்திரைகளும் இழைப்பதுண்டு. மாந்தவியாதிகளுக்கு அனுபோகமான மாத்திரையை (விஷவயித்திய சிந்தாமணியில்) பார்த்துச் செய்துகொள்ளவும்.

கபம் அறுக்க.

கம்மாறுவெற்றிலையை தாம்பூலத்திற்கு சதா உபயோகித்து வந்தால் கபம், கோழை அறுக்கும். சீதளம்பிரிக்கும், இதை பிட்டவியல்செய்து சாறுபிழிந்து கஸ்தூரி, கோரோஜனம் சேர்த்து பிள்ளைக்கு வார்க்கிறதும் உண்டு.

ரத்தம்கட்டிய வீக்கத்திற்கு.

கல்லுருவியிலை அரைத்து காயங்கள் இரத்தங்கட்டிய வீக்கங்களுக்குப் போட்டுவருவதால் கரைந்து நிவர்த்தியாகும்.

பலவீனத்திற்கு.

கட்டுக்கொடியை அறுத்துப் பாலில் கலக்கி சாப்பிட்டுவந்தால் இந்திரியம் கட்டும். இடுப்புவலிவு உண்டாகும் நீர் ஒழுக்கு கண்டிக்கும்.

கம்மலுக்கு.

கறுப்பு மணத்தக்காளியை பாலில் அரைத்து இரண்டு மூன்றுவேளை உட்கொண்டுவந்தால் தேக அழலை, வாய்வு இவைகள் போக்கும், குரல்கம்மலை நீக்கும்.

நீர்சுருக்குநீங்க.

கல்சுண்ணும்பை வாய்நீர்விட்டிழைத்து அதிக நீர்சுருக்கு கண்டிருக்குப்போது தொப்புளைச்சுற்றிலும் இரண்டு கால் பெருவிரல் நகத்தின்பேரிலும் தளமாய்ப்பூசினால் உடனே நீர்ச்சுருக்கு தீரும்.

அழுக்குநீங்க.

களாவேரை கஷாயம்வைத்து எட்டுக்கொரு பங்காயிறக்கி 4-5-நாள் கொடுக்க பிரசவித்த பெண்கள்வயிற்றிலுள்ள அழுக்கு நீங்கும்.

பித்தம்தீர.

களாவேரைப்பாலில் அரைத்துக்குடித்துவந்தாலும் அல்லது ஷை வேரையிடித்து சூரணித்து சரிஎடை சர்க்கரைகூட்டி திரிகடிப்பிரமாணம் இருவேளையும்தின்றுவந்தாலும் பித்தம், அரோசகம், தாகம், அதிகவேர்வை, சிலவிஷங்கள் யாவுந்தீரும்.

தொண்டைக்கம்மல்தீர.

கற்பூரவள்ளிச்சாற்றில் கற்கண்டுதூள் ஒருசிட்டிகைபோட்டு சாப்பிட்டால் தொண்டைக்கம்மல் நிவர்த்தியாகும்.

இரத்தக்கடுப்புநீங்க.

கவுதும்பை சமூலத்தை பாலில் அரைத்துக்கலக்கி உட்கொண்டுவந்தால் இரத்தக்கடுப்பு, மூலச்சூடு இவை சாந்தியாகும்.

திடமுண்டாக.

கல்லத்திக்கொழுந்தை பாலிலரைத்துக் கலக்கி இருவேளையும் உட்கொண்டுவந்தால் மனதுதிடப்படும். அசதிநீங்கும். தாது கட்டும்.

சுவாசத்திற்கு.

கரிமுள்ளி சமூலத்தை உலர்த்தியிடித்து வஸ்திரகாயஞ் செய்து சீனிகூட்டி வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு திருகடிப்பிர

மாணம் எடுத்து தேனில்குழைத்து தின்றுவர கபம், கோழை, இருமல், ஈளை, சுவாசந் தீரும்.

பசியுண்டாக.

களாக்காயுடன் இஞ்சிவேர் இவைகளைக்கூட்டி வடகம் அல்லது ஊருகாய்செய்து வைத்துக்கொண்டு உண்டியுடன் அருந்திவந்தால் பசியுண்டாகும். அரோசகம், ரத்தபித்தம்,விடாத்தாகம், பித்தஓக்காளம் இவைகள்நீங்கும். ஆனால்சுரரோகிகட்கு ஆகாது.

திரிதோஷம்தீர.

கலவக்கீரையை மிளகுமுதலிய காரசாரத்துடன் உபயோகித்தால் பித்தம், மலக்கட்டு, குடல்வாதம், அரோசகம், முக்கல்ரோகம் இவைதீரும். அபானவாய்வு சுத்தியாகும். பசித்தீபனமுண்டாகும். திரிதோஷமும்நீங்கும். பத்தியத்திற்கும் ஆகும். பெண்கள் வயிற்று அழுக்குத்தள்ளும்.

சர்வசூட்டுக்கும்.

கலியாணப்பூசினிக்காய் வடகம் செய்தாவது காரசாரத்துடன் அமைத்து உண்டியுடனாவது அடுத்தடுத்து உட்கொண்டுவந்தால் உள்ளனல், உட்சுரம், வெட்டைசூடு, நீர்க்கட்டு இவைதணியும், வாய்வுண்டாகும். இதை லேகியபாகமாகச்செய்து அருந்தினால் சர்வவாயுவும். சூடுந்தணிந்து உடம்பைபுஷ்டியாக்கும். இந்த லேகியம் செய்யும்முறையை (விஷவைத்தியசிந்தாமணியில்)பார்த்துக்கொள்ளவும்.

மதுமேகசாந்தி.

கருங்காலிவேரின் பட்டையைக்கொண்டுவந்து பாலிலரைத்துக் கலக்கியாவது ஷெ பட்டையை யிடித்து வஸ்திரகாயஞ் செய்து சினிகலந்தாவது திருகடிபிரமாணம் இருபோதும் தின்றுவந்தால் மதுமேகம் சாந்தியாகும்.

தேகபலத்திற்கு.

கல்தாமரையை பாலில்அரைத்துக் கலக்கி உட்கொண்டுவந்தால் வீரியவிர்த்தியும் தேகபலமும் உண்டாகும். குட்டவியாதியுள்ளவர்க்கு ஆகாது.

வாந்திநிறுத்த.

கலைமான்கொம்பு, திப்பிலி, அதிவிடையம் இவைகளைச் சமனாக எடுத்துப்பொடித்து வஸ்திரகாரஞ்செய்து திருகடிப்பிரமாணம் எடுத்து தேனில்குழைத்து கொடுக்க வாந்திநிற்கும்.

கா

அதிசாரத்திற்கு.

காட்டாத்திமூலத்தைப் பாலிலரைத்துப் பாலில் கலக்கி அந்திசந்தி மூன்றுநாள் கொள்ள அதிசாரம், மந்தம், காசம், இவை சாந்தியாகும்.

பேதிக்கு.

காட்டாமணக்குமுத்தின் பருப்பை மிதமாயெடுத்து பால் விட்டரைத்து பாலில்கொடுக்க பேதியாகும். ஆனால் சில உடம்புகளுக்கு ஆகாது.

பாண்டு சோகைக்கு.

காட்டாமணக்கன்வேரை பாலிலரைத்துப் பாலில் கலக்கித் தேகத்திற்குத் தக்கபடியுண்டுவந்தால் பாண்டு, சோகை, காமாலை, வீக்கம் இவைகள் சாந்தியாகும்.

சகலமூலத்திற்கும் பொதுப்பிரயோகம்.

காட்டுக்கருணை, கறிக்கருணை, பிரண்டை, மருள்கிழங்கு இவைகள் வகைக்குப்பலம் 1, உலர்த்திச் சூரணித்து வேளைக்கு கொட்டைப்பாக்களவு எடுத்து தேனில் குழைத்துத் தின்றுவந்தால் சர்வமூலமும் சாந்தியாகும். இச்சாபத்தியம்.

முலைக்காம்புரிணத்திற்கு.

காசுக்கட்டி 2-விராகனெடையெடுத்துப் பொடித்து நான்கு திராண் தண்ணீரை நன்றாய்க் கொதிக்கவைத்திறக்கி அதில்போட்டு ஆறவைத்து எடுத்துக்கொள்ளவும், அடிக்கடி முலைக்காம்புகளில் ரணமுண்டாகும் பெண்கள் கற்பமாயிருக்கும்போது பிரசவிக்கிறதற்கு இரண்டுமாதமிருக்கும்போது தினந்தோறும் ஷை தண்ணீரைத்தொட்டு காம்புகளில்தடவிவந்தால் குழந்தைபிறந்து பால்குடிக்கும் சமயத்தில் ரணமுண்டாகாது.

பழையபுண்களுக்கு.

காசுக்கட்டியை முன்போலப் பொடிசெய்து கொதிக்கின்ற தண்ணீரிற்போட்டுக் கலக்கி ஆறவைத்து மிகுந்த நாற்றமும் பழுப்பு நிறமாயுள்ள ஆறாதபுண்களை காலைமாலை மேற்படி தண்ணீரால் கழுவிக்கொண்டுவந்தால் குணமாகும்.

இரைப்புக்கு.

காட்டுத்துளசியைக் கொண்டுவந்து பால்விட்டரைத்து பாலில்கலக்கி யுட்கொண்டுவந்தால்இரைப்புவியாதிசாந்தியாகும்.

வயிற்றுப்போக்கு.

காசுக்கட்டியைப் பொடித்து 5-அல்லது 7-குண்டுமணிஎடை எடுத்து தேனிலாவது வெல்லத்திலாவது மத்தித்து கொடுத்தால் வயிற்றுப்போக்கு நிவர்த்தியாகும். வயிற்றுப்போக்கு கண்டிருக்கும்போது சுரமில்லாதிருந்தால் மேற்படி சிகிச்சை செய்யவேண்டும். சுரமிருந்தால் கூடாது.

வெள்ளைக்கு.

வெள்ளைக்காட்டான்வேர்கொண்டுவந்து தயிர்விட்டரைத்து புன்னைக்காயளவு எடுத்து காற்படி பசுமோரில் கலக்கிக் கொடுத்துவிட்டு ஒருபடி பசுமோர் விளாவிவைத்துக்கொண்டிருந்து ஒருதகுதி பேதியானவுடன் அந்தமோரில் கொஞ்சம் குடிக்கச் சொல்லவேண்டியது. இப்படி 6-அல்லது 8-விசை பேதியாகும். மோரைக்கொடுத்தால்தான் பேதியாகும் பகலில்தயிர்சாதமும், இரவில் பால்சாதமும் சாப்பிடவேண்டியது. ஒரேதினத்தில் வெள்ளை நிவர்த்தியாகும்.

நாபிபேதி.

காட்டானிலையைக்கசக்கி சாற்பிழிந்து வெள்ளைக்குண்டுமனியும் வாளமும் சரியாயெடுத்து ஷை சாற்றால் அரைத்துதொப்புளைச்சுற்றி கனமாகத்தடவினால் 1-2-விசை பேதியாகும்.

தீராதவாந்திக்கு.

காட்டு ஏலத்தைக் கொண்டுவந்து இளம்வறுப்பாய்வறுத்து நெல்லிவற்றல், தாணிக்காய், கடுக்காய் இவைகளை கொஞ்சங் கூட்டி கியாழமிட்டுக்கொடுக்க தீராதவாந்தி, பித்தம், அரோசகம் இவை தீரும்.

பிராயம் சேன்றவர்க்கு வயிற்றுப்போக்கு கண்டால்.

காசுக்கட்டி 8-குண்டுமணியும் கருவாப்பட்டைத்தூள் 4-குண்டுமணியுங் கலந்து தேனிலாவது வெல்லத்திலாவதுகொடுக்க வயிற்றுப்போக்கு குணமாகும்.

மேகவெள்ளைக்கு.

காட்டாமணக்கன்கொழுந்தைப் பால்விட்டரைத்து பாலில் கலக்கிக்கொடுக்க வெள்ளைதீரும். உடம்பில் அடிக்கடி ஜனிக்கிற விரணங்கள், சிரங்கு, கட்டிகள் இவையாவுந்தீரும்.

பல்நோய்க்கு.

காட்டுப்பிராயம்பாலை நோயுள்ள பல்லின் ஈருகளின்மீது விட்டுவந்தால் பல்நோய் நிவர்த்தியாகும்.

உடல்பூரிக்க.

காட்டுவள்ளியை பாலிலரைத்துக் கலக்கி யுட்கொண்டுவந்தால் குளிமை நீங்கும், உடல்பூரிக்கும் நல்ல பலமுண்டாகும்.

விஷஜன்னிக்கு.

காட்டுமுருங்கைச் சமூலத்தை பச்சையாகக் கொண்டுவந்து பாலிலரைத்துக்கலக்கி யுண்டுவந்தால், புறவீச்சு, ஊஷ்ணம் இவை தீரும். கண்குளிர்ச்சியுண்டாகும். ஜன்னி கியாழங்களுடன் ஷெ சமூலம்சேர்த்து பாகப்படுத்தி கொடுத்தால் விஷஜன்னிதீரும்.

நாவரட்சிதீர.

காட்டுமல்லிகை சமூலத்தைக் கொண்டுவந்து சிந்தில், மதுரம் சமன்சேர்த்து கியாழமிட்டுக்கொடுக்க நாவரட்சி, தாகம் சுரந் தீரும்.

இரத்தமூலம் தீர.

காராக்கருணையை வடகம்செய்தாவது இடித்து சூரணித்து சமன் சர்க்கரைகலந்தாவது இருவேளையும் தின்றுவந்தால் ரத்த மூலம், கபம், கனல், தந்தம், முளைமூலம் வாதசோகங்கள் தீரும் பசித்தீபனமுண்டாகும்.

மாந்தங்களுக்கு

காவட்டம்புல் இதுமாந்தவியாதியைக்கண்டிப்பதற்கு முதன்மையான அவுஷதமாயிருக்கிறது. ஊதுமாந்தம், உப்புமாந்தம் முக்குமாந்தம் இவைகளுக்கு ஷெ வஸ்து கொண்டுவந்து எட்டுக் கொன்றாய் கியாஷம்வைத்து கஸ்தூரி கோரோஜன மிழைத்து வார்த்தால் குழந்தைகள் வியாதியாவும் கண்டிக்கும்.

நீர்எரிவுதீர சர்பத்து.

காசினியிலையை யிடித்தசாறு 13-பலம் வெள்ளை சர்க்கரை 20-பலம் இவ்விரண்டும் கலக்கிக் காய்ச்சி பாகுபதமாயிறக்கி வைத்துக்கொள்ளவும். வேளைக்கு 2-தோலா எடுத்து கொஞ்சம் நல்லஜலத்திற்கலந்து சாப்பிட்டுவந்தால் நீர்எரிவு, உட்காய்ச்சல், இவைதீரும். மலம் இளகும், குலைக்கு பலமுண்டாம்.

கி

உதிரகிராணி தீர.

கிராம்பை பாலிலரைத்துக்கலக்கி உட்கொண்டுவந்தால் உதிரக்கிராணி, பித்தசோபம், அதிசாரம், ஆசனக்கடுப்பு தீரும்.

அந்திமாலேக்கு.

கிருஷ்ண துளசியைக் கசக்கி சாறுபிழிந்து நேத்திரத்தில் இரண்டுதுளி விடவும். இப்படிகாலேயில் ஒரேவேளேயாக மூன்று நாள் விடவும் சாந்தியாகும்.

வாந்திவிக்கல்தீர.

கிராம்பு, ஏலம், சீரகம், வெதுப்பி மயிலிறகு சுட்டசாம்பல் சமன்சேர்த்துப் பொடித்து தேனில் குழைத்துக் கொடுத்துவர வாந்தி, விக்கல் தீரும்.

காது எழுச்சி அடங்க.

கிலுகிலுப்பைவேரையரைத்து நல்லெண்ணெய்விட்டுக்காய்ச்சி காதில்விட்டு பஞ்சடைக்கவும், இரண்டு மூன்று வேளேயில் காதெழுச்சி தீரும்.

தலேவலி நீங்க.

கிச்சிலிக்கிழங்கைப் பொடித்து நல்லெண்ணெயிலிட்டுக்காய்ச்சி தலேமுழுகிவந்தால் தலேவலி, சீதளம் இவைபிரியும். தேகம் வாசனேவீசும்.

சுரசாந்தி

கிளியூறல்பட்டையை ஒன்றிரண்டாயிடித்து எட்டுக்கொரு பங்காய் கியாழம்வடித்துண்டால் சுரத்தைசாந்தியாக்கும். தணல் வெப்பம் இவைதணியுப், இத்துடன் சுரசாந்தியான மூலிகையும் சேர்த்து கியாழமிடலாம்.

கரப்பான் கிரந்தி நீங்க.

கிரந்திநாயகமென்னும் மூலிகையைபாலிலரைத்துஒருவேளே யாக உண்டுவந்தாலும் எண்ணெய் பாகங்களுடன் மேற்படி சாற்றைச்சேர்த்து காய்ச்சியுண்டாலும் கருங்கிரந்தி, செங்கிரந்தி,கரப்பான், உஷ்ணம், சீதம் இவைகள் தீரும்.

பொது.

கிளுவை சமூலத்தையும் அனேக வியாதிகளுக்கெல்லாம் வயித்தியர்கள் உபயோகப்படுத்துவதுண்டு.

மேகசாந்தி.

கிட்டிக்கிழங்கை வேகவைத்தாவது பக்சையாகவே உலர்த்திச் சூரணித்து அரைபங்கு சர்க்கரைகூட்டியாவது விடாமல் 40-நாள் இருவேளேயும் தின்றுவந்தால் உடம்பிலிருக்கும் மேகம்சாந்தியாகும், கபத்தையறுக்கும், பசித்தீபனமுண்டாக்கும், பித்தத்தைச் சமனிலேயில் வைக்கும்.

கீ

சோகைக்கு.

கீழாநெல்லி சமூலத்தை பாலில் அரைத்து பாலில் கலக்கி யுண்டுவந்தால் சோகை, காமாலே, பாண்டு, உடல்வெளுப்பு, வாத பித்தம், கிரிச்சரம் இவைதீரும். இரத்தம் உபரியாகும். கண் குளிரும்.

சாம்பல்தின்கின்ற குழந்தைகட்கு,

கீழாநெல்லிவேர் விராகனெடை 1, கடுக்காய்த்தோல் விராக னெடை 2, மிளகு விராகனெடை 3, புளித்தமோரில் அரைத்துக் கலக்கி மூன்றுநாள் வார்க்க மறுபடி சாம்பல் மண் இவைகள் தின்னுது.

புரவீச்சுதீர.

கீழாநெல்லிச்சாறு, கிலுகிலுப்பைச்சாறு, தேன், முலேப்பால் வகைக்குப்பலம் அரை வெள்ளுருள்ளி, காந்தம், சுக்கு வகைக்கு விராகனெடை 1. இவைகளே அரைத்து யாவும் ஒன்ருய் கலந்து கொடுக்க புறவீச்சு நிவர்த்தியாகும்.

இரத்தம்போல் நீர் இறங்குவதற்கு

கீழாநெல்லிசமூலம் ஒருபிடி சீரகம் விராகனெடை-1 இவை அரைத்து எருமைத்தயிரில் கலக்கி 3-நாள் கொடுக்க இரத்தம் போல் நீர் இறங்குவது தீரும்.

பித்தசோகை வீக்கந்தீர.

கீழாநெல்லி 3-பங்கும் ஈருள்ளி ஒருபங்கும் சேர்த்திடித்து சாறுபிழிந்து கால்படிவீதம் 3-நாள் கொடுக்க பித்தசோகை, வீக்கம் நிவர்த்தியாகும்.

கு

காதில் ஈப்புகுந்தால்.

குப்பைமேனியிலேயில் கொஞ்சம் நீர்தெளித்துக் கசக்கிக் காதில் இரண்டு மூன்றுதுளி சாறுபிழிந்தால் ஈ செத்து விழுந்து விடும்.

இதுவுமது.

குப்பைமேனிச்சாறும் கோழியவரைச்சாறும் சமனுய்க் கலந்து காதில்பிழிந்தால் ஈ சாகும்.

எலிவிஷந்திர.

குளப்பாலேயிலேயை ஆவின்பாலில் அரைத்து உட்கொண்டு வந்தால் எலிகடி, விஷகரப்பான், உடல்சுரப்பு, கால்சுரப்பு, சர்வ விஷவிக்கம் இவைகள் தீரும்.

செங்கரப்பான் கருங்கரப்பானுக்கு.

குண்டலமென்று வழங்கும் சங்கம்வேரை பசும்பாலி லரை, த்து அருந்திவந்தால் செங்கரப்பான், கருங்கரப்பான், தமூவணே சொரி, தேமல், கிரந்தி, சிறுசிரங்குயாவுந் தீரும்.

சிராப்பீனிசத்திற்கு.

குப்பைமேனி, ஆடுதின்னுப்பாளே, அழிஞ்சில்முள்ளி இவை களின்சாறு வகைக்கு அரைப்படி நல்லெண்ணெய்ப்படி 2, இவை களைக் கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து தலேமுழுகிவந்தால் சிராப்பீனசம் தீரும்.

உட்குத்தும் புறவீச்சுந்தீர.

குப்பைமேனி, சிறுபுள்ளடி, பொன்னுவாரை இவைகளை ஓர ளவாயெடுத்து வேப்பம்இலேயில் உப்புபோட்டு இடித்துப்பிழிந்த சாறுவிட்டு அரைத்து ஒருவேளேக்கு புன்னேக்காயளவு ஒருநாளே க்கு மூன்றுவேளே கொடுக்க உட்குத்தும், புறவீச்சும் நிவர்த்தி யாகும்.

பலரோகந்தீர.

குங்குமப்பூவை அரைக்கால் விராகனெடை யெடுத்து பால் விட்டரைத்து அரைக்கால்படி பசும்பாலில் கலந்து குடித்துவந் தால் அண்டவாதம், உச்சிவலி, கண்ணிலுண்டாகும் பூ, கபம், கால் வலி, சூலே, தாகம், மேகஜலம், விந்துநஷ்டம், ஜலதோஷம், சுரம், செவிநோய் பித்தம், மதுமேகம் இவைதீரும். பெண்களின் கர்ப்ப உதிரரோகம் இவைகள் தீரும். நீடித்துசாப்பிடவேண்டியது.

குடல்வாதத்திற்கு.

குறிஞ்சானிலேயை பிட்டவித்துப் பிழிந்தசாறு அரைக்காற் படி சுக்கு, மிளகு, உள்ளி, சீரகம், கடுகு, வெந்தயம் வகைக்கு விராகனெடை 1, வெதுப்பிப்பொடித்துப்போட்டுக்கலக்கி மூன்று நாள் கொடுக்க, குடல்வாதம் சாந்தியாகும்.

பேதிகட்ட.

குடசப்பாலே மரத்தின் பட்டையை பாலில் அரைத்து காலே யில் குடித்தால் பேதியைக்கட்டும், நீரிழிவு, வாதம் இவை சாந்தி யாகும்.

பொடிசிரங்குக்கு.

குடியோட்டுப் பூண்டென்னும் கொல்லைப்பல்லியைக் கொண்டுவந்து கொஞ்சம் கந்தகம் சேர்த்தரைத்து உடம்பில் தேய்த்துக் குளித்தால் பொடிசிரங்கு மாறும்.

தினவுதீர.

குதிரைக் குளம்பென்னும் நிலக்கடம்பிலை கொண்டுவந்து மிதமாயெடுத்து பாலிலரைத்துக் கொடுத்தால் குதிரைநடை, வாயுவு, ஜன்னி, தினவு தீரும். இதைக் கியாழ மூலமாயும் உபயோகிக்கலாம்.

கண்மயக்கந்தீர.

குதிரைவாலிப்பூண்டுகொண்டுவந்து பாலிலரைத்து அருந்திவந்தால் கண்மயக்கம், ஈளை, கடுப்பு, கழிச்சல், காய்ச்சல் இவை சாந்தியாகும்.

பலவியாதிகள்தீர.

குறிஞ்சான்பட்டையைச் சூரணித்து சர்க்கரைகூட்டித் திருகடிப்பிரமாணம் எடுத்து தின்றுவரவும். இப்படி நீடித்து தின்றுவருவதால் தேகத்திலுள்ள காணுவியாதிகள் யாவுந்தீரும். நல்ல வலிவையுண்டாக்கும்.

குழந்தைகள் இருமலுக்கு.

குண்டுமணிவேரைக் கொண்டுவந்து புதுவேராய்ப் பார்த்து இரண்டவுன்ஸெடுத்து சிதைத்து அரைபுட்டி ஜலத்தில் போட்டு அரைமணிநேரம்வரையில் வேகவைத்து வடிகட்டி அதில் எட்டவுன்சு கற்கண்டாவது தேனாவது கலந்து மறுபடியும் அடுப்பேற்றிக் காய்ச்சி பாகுபதத்தில் இறக்கிவைத்துக்கொண்டு ஒருவேளைக்கு தேக்கரண்டிவீதம் ஒருநாளைக்கு 4-5-வேளை கொடுக்கலாம் இருமல் சௌக்கியமாகும். குண்டுமணிவேருக்கு நாட்டு அதிமதுரமென்றும் பெயருண்டு

வாந்தியாகும்.

குறிஞ்சான்வேரை அல்லது உலர்ந்த இலையைப் பொடிசெய்து சுமார் 30-கிரையின்வரையில் உள்ளுக்குக்கொடுத்து சுடுதண்ணீர் மிகுதியாய்க்குடித்தால் நன்றாய் வாந்தியாகும்.

குழந்தைகள் மாந்தத்திற்கு, பொது பிரயோகம்.

குட்டி விளாஇலையை வதக்கிச் சாறுபிழிந்து ஆமையோடு, வசம்பு இரண்டும்சுட்டுக்கரியாக்கிபொடிசெய்துகொஞ்சம்போட்டுக் காய்ச்சி 1-அல்லது 2-சங்குவீதம் 3-வேளைகொடுக்கச் சகல மாந்தமும் சாந்தியாகும்.

குழந்தைகள் வாய்ப்புண்ணுக்கு.

குண்டுமணியிலையின்சாற்றை குழந்தைகள் வாயினுள் வெள்ளைநிறமாய்க்காணும் புண்களுக்கு கொஞ்சம்தடவிவிட்டால் குழந்தைகள் வாய்ப்புண் குணமாகும்.

கூ

மகாவாத சாந்திக்கு.

கூத்தன் குதம்பையிலையைப் பாலிலரைத்துக் கலக்கி யுட்கொண்டுவந்தால் சூலையைப்பற்றிய ரோகமும், ஜன்னிபாதரோகமும், மகாவாதரோகமும், ஒழுக்கும்நீங்கும். பித்தத்தை விருத்திசெய்யும் கிரமப்படி யுபயோகித்தால் மண்டூரத்தைச் செந்தூரிக்கும்.

கூழைக்கிழங்கு.

மேனியிடும் வாய்க்கு மிருதுவாகு மாக்கியுண்டால்
தானிருமல் வெப்பதிக தாகமிவை—யேனிருக்கு
மம்பே ரிளங்கிழங்கு யாவருக்கு மாமணப்பூங்
கொம்பே கூழைக்கிழங்கைக் கூறு.

கூழைக்கிழங்கைச் சமைத்து உண்டுவந்தால் தேகபுஷ்டியுண்டாகும். இருமல், சுரம், தாகம் இவைகளைப்போக்கும். தின்பதற்கு இனிப்பாகவும் வாய்க்கு உணவாகவு மிருக்கும்.

கெ

இரத்தவெள்ளைக்கு.

கெச்சைக்காயிலையை யிடித்து சாறுபிழிந்து அரைப்பலமெடுத்து அரையாழாக்கு தயிரில்கலந்து காலையில் கொடுக்கவும், சிறுலவங்கப்பட்டையை அரைத்து கழற்சிக்காயளவு மாலையில் கொடுக்கவும், கடும்பத்தியமிருக்கவும் இப்படி 3-அல்லது 5-நாள் கொடுக்க இரத்தவெள்ளை நிவர்த்தியாகும்.

விரைவாதத்திற்கு.

கெச்சைக்காய்பருப்பு 4-எடுத்து கோழிமுட்டையின் வெள்ளை அம்பிலி விட்டு அரைத்து வடைபோல்தட்டி ஒருபலம் சிற்றுமணக்கெண்ணெயை அடுப்பிலேற்றி ஷை வடையைப்போட்டு நன்றாய் சிவக்கச்சுட்டெடுத்து அதிகாலையில் அந்த வடையைத்

தின்றுவிட்டு அதில் மிகுந்திருக்கும் எண்ணெயைக் குடித்துவிட வும் 5-6-விசை பேதியாகும் இச்சாபத்தியம் இப்படிமூன்றுநாள் கொடுக்கவும்.

விரைவீக்கத்திற்கு.

கெச்சைக்காயிலையைத் துளிவிளக்கெண்ணெய்விட்டு வதக்கி விரையின்மேல்வைத்துக் கட்டிவைக்கவும். காலையில் பேதிக்குச் சாப்பிடவும்.

கே

கேணிஜலம்.

ஆசாரக் கேணிநீ ரருந்தி லதிதாகம்
வீசாகச் சூடுபசி மெய்க்காந்தல்—மாசூலே
மெய்யுள்வலி சந்துளேப்பு வீழ்மயக்கம் சோகைபித்தம்
பையவரு மீளேயறும் பார்.

கேணியென்னும் குற்றமில்லாத கிணற்றுஜலத்தை அருந்து வதினுல் மிகுந்ததாகம், ஊஷ்ணம், தீபனம், தேக அழல், சரீரத் துட் கடுப்பு, இடுப்புக்குடைச்சல், மயக்கம், வீக்கம், பித்ததோ ஷம், சுவாசம் இவை நீங்கும், கண் பிரகாசங்கொடுக்கும். ஆனுல் நீடித்து அருந்தவேண்டும்.

கை

கையாந்தகரை-அல்லது
கரிசலாங் கண்ணி.

பொற்றலைக் கையாந்தகரைப் பொன்னிறமாக்கும் மூடலைச்
சுத்தமுறக் கட்டும் சுரங்கெடுக்கும்—சிற்றிடையாய்
சிந்தூரம் செயலாகும் சிந்தை தனைத்துலக்கும்
முந்திவரு குன்மமொழிக்கும்.

கையாந்தகரை, தும்பை, அம்மான்பச்சரிசி, வகைக்கு ஒரு பிடி யெடுத்து இடித்து சாறுபிழிந்து அதில் பன்னிரண்டு மிளகு எண்ணியெடுத்து அரைத்துக் கலக்கி அத்துடன் வெள்ளாட்டுப் பாலாவது ஆவின்பாலாவது காற்படிவிட்டுக்கலக்கி சீனிசர்க்கரை

ஒருவிராகனெடை போட்டுக்கொடுக்கவும். இப்படி ஆறு நாள் கொடுக்க காமாலை நிவர்த்தியாகும்.

கொ

வாயுவினலுண்டான உடம்பு குத்தலுக்கு

கொடிவேலிவேரின்பட்டை, பறங்கிப்பட்டை, பிரப்பங்கிழங்கு, மிளகுவகைக்கு விராகனெடை 3-எடுத்திடித்து 4-படி ஜலத்திற் போட்டு அரைப்படி கியாழமாக இறக்கி நாளொன்றுக்கு மூன்றுதரம் அரைக்காற்படிவீதம் கொடுத்தால்வியாதிதீரும்.

பித்தமூலகிராணிக்கு.

கொட்டைக்கரந்தையும் சீரகமும் சரியெடையா யெடுத்து அரைத்து பில்லைதட்டி நல்லெண்ணெயில் வேகவைத்துத்தின்றால் மலம் வெண்மையாயும், உதிரமாயும்கழிதல், காற்றுபறிதல் முதலியவை தீரும்.

சுளுக்கு சுரத்திற்கு.

கொத்துமல்லி, சுக்கு, மிளகு, திப்பிலி, பேராமுட்டி வகைக்கு விராகனெடை 3 எடுத்து ஒன்றிரண்டாயிடித்து அரைப்படி ஜலத்திற்போட்டு அரைக்காற்படியாக இறக்கி ஒரு நாளைக்கு 3-வேளை கொடுக்க சுளுக்குசுரம் தீரும்.

அக்கிமுதலிய சிறுவிஷத்திற்கு.

கொல்லங் கோவைக்கிழங்கை வஸ்திரகாயஞ்செய்து சரி எடை சீனிகூட்டி திருகடிப்பிரமாணம் இருவேளையுந் தின்றுவந்தால் அக்கி, அரிப்பு, குடல்நோய், கண்டமாலை, கிரந்தி, சில்லரை விஷங்கள் யாவுந்தீரும்.

கிருமிபேதி.

கொன்றைக்கொழுந்தை உப்பில்லாமல் வேகவைத்து இரவில் படுக்கும்போது தின்றுவிட்டு காலையில் கொஞ்சம் சிற்றுமணக்கெண்ணெய் புசித்தால் பேதியாகும். திமிர்பூச்சிகள் வந்துவிடும்.

சிறுசிறங்கு சொறிசிறங்கு.

கொடிக்கள்ளியை வாட்டிச் சாறுபிழிந்து வயதுக்கும் தேகபலத்திற்குந்தக்கபடி நிதானம்பார்த்துக்கொடுத்தால் சிறுசிரங்கு சொறிசிரங்கு நிவர்த்தியாகும்.

மலச்சிக்கலுக்கு.

கொன்றைக்காய் கொழுந்து இவைகளை கியாழம் வைத்து அருந்தினால் வயிற்றுவலி, வாய்வுதீரும். மலச்சிக்கலைக் கண்டிக்கும். சமமாயெடுத்து கியாழம்செய்து அந்திசந்தி கொடுத்துவரவும். பாலன்னம் உபயோகிக்கவும்.

வெள்ளைக்கு.

கொடிக்கள்ளிக்கொழுந்தை அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து அத்துடன் 32-மிளகுசேர்த்து அரைத்துக் கலந்துவைத்துக்கொண்டு ஒருவேளைக்கு அரை கொட்டைப்பாக்களவாக 3-நாள் கொடுத்து பத்தியம் பசுமோர்சாதங் கொடுக்கவும் உப்பாகாது. வெள்ளை தீரும்.

பசியுண்டாக.

கொஞ்சிவேர் கியாழம்வைத்து அதில் சீனி கொஞ்சம் போட்டு நோயாளிக்குக் கொடுத்துவந்தால் பசியுண்டாகும்,

கோ

மேனியழகு உண்டாக.

கோங்கிலவம்பூவைப் பாலிலிட்டுக் காய்ச்சி யுண்டுவந்தால் நரைதிரைமாறும், கொடியவியாதிகள்யாவும்தீரும், மேனிபொன் போலவும் நல்ல அழகு கொடுக்கும்.

பவழபற்பம்.

கோங்கிலவனிலையை அரைத்து அந்தமொத்தைக்குள் தக்கபடி சுத்திசெய்த பவழத்தைவைத்து புடமிடபற்பமாகும்,க்ஷயம் இருமல் முதலிய வியாதிகட்கு கொடுக்கலாம்.

வெள்ளை.

கோங்கிலவங்கொழுந்தை பாலிலரைத்துக்கலக்கி யுண்டுவந்தால் வெட்டை, சூடு, வெள்ளைவிழுதல் நிவர்த்தியாகும்.

நீர்தாரையில் சுருக்குசுருக்கென்று சுக்கிலம் விழுவதற்கு

கோரைக்கிழங்கு, விஷ்ணுகாந்தி, மிளகு, வகைக்கு ஒன்றரைபலமெடுத்து ஒன்றிரண்டாயிடித்து 4-படி தண்ணீர் வைத்து ஒருபடி கியாழமாக யிறக்கி ஒருவேளைக்கி அரைக்காற்படி விதம்

ஆறுவேளை கொடுக்க நீர்தாரையில் சுருக்குசுருக்கென்று சுக்கிலம் விழுதல் தீரும்.

அதிசாரக்கழிச்சலுக்கு.

கோரைக்கிழங்கு, கொத்தமல்லி, வில்வவேர், திப்பிலி, சிறுநாகப்பூ இவை சமன்கொண்டுநருக்கி கியாழம்வைத்து கொஞ்சம் தேன்விட்டுக்கொடுக்க அதிசாரகழிச்சல் தீரும்.

பலத்திற்கும் பால்சுரக்கவும்.

கோரோசனையைப் பாலில்கலக்கிக் காய்ச்சி யுண்டுவந்தால் முலைப்பால் சுரக்கும், கண்ணோய், சுரம் இவை தீரும். மூலச்சூடு தணியும், நீடித்து உபயோகித்துவந்தால் தேகத்தில் அழகும் பலமும் உண்டாகும்.

விஷசுரத்திற்கு.

கோழியவரைவேர், சித்திரமூலம், வேப்பீர்க்கு, சிறுபுள்ளடி, பற்பாடகம், சுக்கு, செவ்வியம் வகைக்குப் பலம் கால் இரண்டுபடி தண்ணீர்வைத்து அரைப்படியாகக் காய்ச்சியிறக்கி வடிகட்டி முறித்த தேன், முலைப்பால் கொஞ்சம் விட்டு கொடுக்கவும். (அதாவது) வேளைக்கு வீசம்படியாக ஒருநாளைக்கு 3-வேளை கொடுக்க விஷசுரந் தீரும். இத்துடன் இழைக்கவேண்டிய மாத்திரைகள் (விஷவைத்திய சிந்தாமணியில்) பார்த்துக் கொள்ளவும்.

கழிச்சலுக்கு.

கோரோசனை, களிப்பாக்கு, சீரகம், காசுக்கட்டி இவைகள் சமன்கொண்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து பாக்குப்பிரமாணம் எடுத்து முலைப்பாலில் கலக்கிக்கொடுத்தால் கழிச்சல் உடனே நிவர்த்தியாகும்.

காலெரிவு,காந்தல், கற்றாழை நாற்றத்திற்கு.

கோஷ்டத்தைப் பசும்பால்விட்டரைத்து பாலிற்கலக்கி யுட்கொண்டுவந்தால் கைகாலெரிவு, மூட்டுகளில் சீலுகளில்வலி, கற்றாழை நாற்றம் தீரும்.

காமாலை சோகை பாண்டுக்கு.

கோசலமென்னும் பசுவின் கோமயமும் வெள்ளாட்டுப்பாலும் சரியாய்க்கலந்து உட்கொண்டுவந்தால் சோகை, காமாலை, பாண்டு பித்தம் இவைகள் தீரும்,

பாண்டு சோகைக்கு.

கோசலமும், வில்வ இலையும் இடித்து சாறுபிழிந்து மூன்று தரம் வடிகட்டி அரைக்காற்படி வீதம் ஆறுநாள் கொடுக்க ஷெ வியாதிகள் நிவர்த்தியாகும், புளி தள்ளவேண்டியது.

கல்நார் பஸ்பம்.

கோழியவரையிலையை அரைத்து அதனுள் கல்நாரைவைத் துக் கவசம் செய்து தகுந்த புடமிட பஸ்பமாகும். இந்தஇலையை கிரமப்படி உட்கொண்டால் குடல்வாதம், குன்மம், ஆமைக்கட்டி இவைகள் தீரும்.

பித்தவாய்வு மதுமேகம்.

கோடகசாலை யென்னும் மூலிகையை பாலிலரைத்து பாலில் கலக்கி உட்கொண்டுவந்தால் பித்தவாயுவு, கிரந்தி, குட்டம், கொப்புளம், புண், மதுமேகம், வயிற்றுப்புழு, வாய்ரணம் இவை தீரும்.

ச

பிரமியத்திற்கு.

சந்தனமூலம் அதாவது சந்தனமரத்து வேரின் பட்டையை பாலிலரைத்துக் காய்ச்சி யுண்டுவந்தால் மேகம், பிரமியம் தீரும் தேகத்தில் அழகுண்டாகும்.

இதுவுமது.

சந்தனமூலத்தைக் கியாழஞ் செய்து உண்டுவந்தால் மேற் கூறிய வியாதிகள் நிவர்த்தியாகும்.

இதுவுமது.

சந்தன அத்தர் முதல்தரமானது அரைக்கால் ரூபாயெடை யெடுத்து ஒரு செவ்விளநீரைக் கண்திறந்து அதில்விட்டு நன்றாய் குலுக்கி சாப்பிடவும் இப்படி மூன்றுவேளை சாப்பிட்டால் கடூர மான வெள்ளை உடனே தீரும்.

அஸ்திகாங்கை தீர.

சதையொட்டி யிலையை பாலிலரைத்துக் கலக்கி உண்டுவந் தால் வெட்டை, எரிவு, காந்தல் இவை நீங்கும்.

வண்டுகேடி சோறி தேமல் தீர.

சரக்கொன்றைமூலத்தை பாலிலரைத்துக் கலக்கி யுண்டுவந் தால் வண்டுகடி, சொரி, தேமல், விஷநீர் முதலியவை நீங்கும்.

மேகசூட்டுக்கு தைலம்.

சவுரிப்பழம் 2, மிளகு ஒருபலம் இவைகளைப் பசும்பால்விட்டரைத்து சால்படி நல்லெண்ணெயிற் கரைத்துக்காய்ச்சி வடித்து தலைமுழுகிவந்தால் மேகச்சூடு சாந்தியாகும்.

நாடியிறுக.

சத்திசாட்டரணை மூலத்தைச் சூரணித்து சர்க்கரை கலந்து திருகடியளவு உண்டுவந்தால் மேகம், விப்புருதிநீங்கும். நாடியிறுகும், விந்து உண்டாகும்.

பித்தகுன்மசாந்தி.

சத்திச்சாறணை மூலத்தை பால்விட்டரைத்து பில்லைதட்டியுலர்த்தி பொடிசெய்து கொஞ்சம் சீனிகலந்துவைத்துக்கொண்டு திருகடிப்பிரமாணம் நெய்யிலாவது தேனிலாவது உண்டுவந்தால் பித்தகுன்மம் சாந்தியாகும் பத்தியமில்லை.

மேகவியாதிக்கு.

சங்கிகுப்பிச்சாற்றை தனியாயாவது ஆமணக்கெண்ணெயுடன் கலந்தாவது காலையில் ஒரேவேளையாக சுமார் ஒன்றரைப் பலத்திற்குக் குறையாமல் கொடுத்துவந்தால் இரண்டொரு தடவை மலம்உதையும், கண்டமாலை, மேகவெள்ளை சாந்தியாகும்.

மயிர்வளர.

சடாமாஞ்சியிலை எண்ணெயிலிட்டுக் காய்ச்சிவடித்துவைத்துக்கொண்டு தலைமுழுகிவந்தால் மயிர்வளரும், சற்று வாசனையுள்ளதாகவுமிருக்கும்.

மாந்தங்களுக்கு.

சதகுப்பியிலையை சிற்றாமணக்கெண்ணெயுடன் காய்ச்சியாவது ஷை இலைச்சாற்றை தனியாவது குழந்தைகளுக்கு உபயோகித்துவந்தால் மாந்தம் அணுகாது.

கபம் அல்லது சிரசுநோய்.

சதகுப்பையை சூரணித்து சர்க்கரைகூட்டி திருகடியளவு உண்டுவந்தால் கபம், சிரசுநோய், செவிநோய், பீநிசம், மூலக்கடுப்பு இவை சாந்தியாகும்.

தாதுநஷ்டத்திற்கு.

சண்பகமொக்கை கியாழஞ்செய்து பால் சர்க்கரைபோட்டு உட்கொண்டுவந்தால் அஸ்திசுரம், பித்தசுரம், கண் அழலை, மேகம் இவை நீங்கும், தாதுகட்டும்.

தகுந்த ஆகாரம்.

சவ்வரிசியை அரையவுன்செடுத்து நாலுதிரான் தண்ணீரிற் போட்டு 2-மணி நேரம் ஊறியபின் அடுப்பேற்றி கால்மணிநேரம் வேகவைத்து அதன்பின்பு பசும்பாலும் சர்க்கரையுங் கலந்து இறக்கி வாசனைக்காக கொஞ்சம் ஜாதிக்காய்த்தூளாவது கருவாப் பட்டைத் தூளாவது கலந்து சாப்பிட்டால் கொடியரோகம் இருமல் இவைகளால் அவஸ்தைப்படும் பலஈன முடையவருக்கு நல்ல பலனை யுண்டுபண்ணும், கைகாலசதி நீங்கும், இது எத்தனைத்தடவை வேண்டுமானாலும் அப்பப்போது செய்து கொடுக்கலாம்.

நாசிகாபரணம்.

சமுத்திராப்பழத்தை சூரணித்து மூக்கிலுள்ள ரணங்களுக்கு நசியம் செய்து வந்தால் மூக்குரணம் ஆறும். தலைபாரம் நீங்கும்.

வயிற்றுநோய்க்கு.

சப்பாத்திசமூலத்தைக்கொண்டுவந்து எண்ணெயுடன்சேர்த்துக் காய்ச்சி பிரசவவேதனைபோன்ற வயிற்றுநோய்க்குக்கொடுத்தால் வயிற்றுநோய் தீரும்.

சுக்கிலசுத்தி.

காயசித்தியாகும் கடியசிலேஷ்மமறும்
தூயவிந்துநாதமிவை சுத்தியாம்—தூய்வதற்கு
எத்திக்குங்கிட்டும் இலையருந்தில் வாயெல்லாம்
தித்திக்கும் வேம்பதையே தேடு.

சர்க்கரை வேம்பு இஃது தூயவர்களுக்கு எத்திக்கிலும் கிடைக்கும் இந்த (சக்கரைவேம்பு இலையை) விடாமல் மண்டலக் கணக்காய் தின்று வந்தால் காயசித்தியாகும், இரத்தம் இருகும், சுக்கில சுரோணிதங்கள் சுத்தியாகும். இதை தின்றால் வாய்தித்திக்கும்.

காணுவாய்வுகட்கு.

சந்திரமல்லி சமூலத்தை பாலில் அரைத்தருந்தி வந்தால் தனுர்வாதம் முதலியதும், உடம்பை வாதிக்கும் காணுதவாய்வுகள் யாவுந் தீரும்.

உந்திநோய்க்கு.

சந்திரகாந்தி சமூலத்தை பால்விட்டரைத்துப் பாலில்கலக்கி யுண்டுவந்தால் நாபியிலுண்டாகும் தழலெரிச்சல், நீர்கடுப்பு இவை தீரும்.

வியாதியுற்பத்தி.

சர்க்கரைவள்ளிக்கிழங்கை அடிக்கடி யுண்டுவந்தால் வயிறு மந்தம், மூளைமூலம், வயிற்றெரிச்சல், வயிற்றுக்கடுப்பு, மருந்துகள் முரிவு இத்தனை துர்க்குணங்களுண்டாகும்.

சொரிகளுக்கு.

சரக்கொன்றைப்பூவை எலுமிச்சம்பழச்சாறுவிட் டரைத்து உடம்பில்தேய்த்து குளித்துவந்தால் சொரி, கரப்பான், தேமல் இவைதீரும்.

திமிருக்கு

சங்கம் இலைச்சாறும் வெள்ளாட்டுப்பாலும் ஒன்றாய் கலந்து ஒரு வேளைக்கு கால்படி வீதம் 3-நாள் கொடுக்கத் திமிர் தீரும்.

பிரமியத்திற்கு.

சரக்கொன்றைப்பூவையும் கொழுந்தையும்அரைத்து பாலில் கலக்கி யுண்டுவந்தால் பிரமியம், வெட்டை, காமாலை பாண்டு இவைகள் சாந்தியாகும்.

கிருமிகள்நீங்க.

சரக்கொன்றைக் கொழுந்தை அவித்துப் பிழிந்தசாற்றில் சீனிசர்க்கரைகலந்து சுமார் அரைக்கால்படி உள்ளுக்குக் கொடுத்தால் கிருகமிள் திமிர்பூச்சுகள் நீங்கும்.

சகலமூலத்திற்கும் போதுமருந்து.

சதுரக்கள்ளியை துண்டுதுண்டாய்நறுக்கி பானையில்ஒருபடி துண்டுவரையில்போட்டு 4-படி தண்ணீர்விட்டு வாய்ப்புறம்துணியினால் ஏடுகட்டி அடுப்பேற்றி காருங்குருவை அரிசிமாவை துணியின்மேல் பரப்பி புட்டவியல் செய்தெடுத்து 3-நாள் கொடுக்க சகலமூலமும் சாந்தியாகும்.

சா

வெள்ளை, நீர்ச்சுறுக்கு.

சாரப்பருப்பை பால்விட்டரைத்து சாலாமிசிரியூறிய தண்ணீரிற் கலந்து அதற்குத் தகுந்த பால்விட்டு சாப்பிடவும் இப்படி 4-5-வேளை சாப்பிட நீர்க்கடுப்பு, வெள்ளைவிழுதல் நீங்கும்.

ஆரோக்கியத்திற்கு.

சாதிக்காயை தாம்பூலத்துடன் கடலையளவு உபயோகித்து வந்தால் தாபசுரம் போகும், தாதுபுஷ்டி யுண்டாகும், ஆனல் பித்தத்தை யுண்டாக்கும். ஆதலால் பசும்பால் சாப்பிடவேண்டியது.

பிள்ளைகள் நீராமகணத்திற்கு.

சாரணைக்காய், மூக்குரட்டக்காய், பொடுதலைக்காய், துளசி, சீரகம் ஓர்நிறையாய் கட்டிப்போட்டு கஷாயஞ்செய்து வார்க்க நீராமகணம் சாந்தியாகும்.

வாதவலி பிரமேகத்திற்கு.

சாரடைக்கிழங்கை பாலில் அரைத்துக்கலக்கி யுண்டுவந்தால் வாதவலி சீதளம், நீரேற்றம், தடிப்பு, குன்மம், பிரமேகம், சிரங்கு இவை நீங்கும்.

பேதியைக்கட்ட.

சாதிக்காய் ஒன்றை சிறுதுண்டுகளாக நறுக்கி நெய்யில் வருத்து, புளிப்பு மாதுளம்பழத்தோல் அடுப்பிலிட்டு வதக்கிக் கொண்டு, அபினி 1-விராகனெடை ஜாதிக்காய் 4-விராகனெடை மாதுளங்தோல் 5-விராகனெடை இவைகளைக் கல்வத்திலிட்டு தேன்விட்டு பதமாயரைத்து கடலையளவுஉருட்டி பேதிக்குத்தக்க படி முலைப்பாலிலாவது வாழைப்பூ கஷாயத்திலாவது தேனிலாவது இரண்டு மூன்று வேளை கொடுக்க பேதிகட்டும்.

சி

கண்ணோய் உள்மூலத்திற்கு.

சிறுகொன்றை மூலத்தை அரைத்து பாலில்கலக்கி யுண்டு வந்தால் கண்ணோய், ஊஷ்ணம், உள்மூலம் இவை தீரும்.

கீல்வாயுவுக்கு.

சிற்றுழாப்பட்டை கொண்டுவந்து அதற்கு சரிஎடை சுக்கு திப்பிலி, மிளகு, மோடி, சன்னராஷ்டகம், தும்பராஷ்டகம், வாய் விளங்கம் இவைகள்போட்டு இடித்து, காரசாரம்சேர்ந்த கச்சைக் கருவாடு குழம்புகூட்டி,ஷிவஸ்துவைப்போட்டு குழம்புசெய்து ரசத்தைப்போல மிச்சமாய்விட்டுக்கொண்டு சாப்பிடவும்.இரண்டு விசை மலங்கழியும், கீல்வாய்வு உடனே தீரும் 2-3-வேளை சாப பிடவேண்டியது.

அனேக ரோகத்திற்கு.

சிவன்வேம்புமூலத்தை நிழலில்உலர்த்தியிடித்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து சமனெடை சீனிசர்க்கரைகலந்து சீசாவில் வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு திருகடிப்பிரமாணம்தின்று வந் தால் 18-விதமான குஷ்ட உற்பத்தி, பாதத்திலுண்டாகும் வெடி ப்பு, தேகத்திலுண்டாகும் தடிப்பு, படர்தாமரை, நமை, அரிப்பு தேகத்தில் முள்ளுகுத்துவதைப்போல் குத்தல், திமிர்,தலைநோய் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

கண்ரோகமுடையவருக்கு காலில்தேய்க்க தைலம்.

சின்னியிலைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்குபடிகால், நாபி க்கிழங்கு விராகனெடை (கால்) இதைபொடித்து மேற்படி எண் ணெயில் அரைத்து யாவும் ஒன்றாய்க்கலந்து வைத்துக்கொண்டு பாதத்தில் தேய்த்துவந்தால் கண்ணிலுள்ளசகலரோகமும் நிவர்த் தியாகும்.

கால்பிளவைக்கு.

சிவன்வேம்பு மூலத்தை பால்விட்டரைத்து பாலில் கலக்கி யுண்டுவந்தால் சில்லரைவிஷங்கள், கால்வெடிப்பு, கரப்பான், ரணங்கள் யாவுந் தீரும்.

கன்னவீக்கத்திற்கு.

சிற்றகத்தியிலையும் வசம்பு அரிசியும் ஒரே அளவாய் எடுத் தரைத்து பூசினால் கன்னவீக்கந்தீரும்.

மேகசிரங்குக்கு.

சிறு செருப்படையும் ஈருள்ளியும் இடித்து சாறு பிழிந்து ஆறுதரம் வடிகட்டி சாப்பிட பேதியாகும். மேகச்சிரங்கு முதலா லானவை நிவர்த்தியாகும்.

குளுமைதீர.

சிற்றுமுட்டியை துண்டுதுண்டாய்நறுக்கி பசும்பாலில்போட்டுக் காய்ச்சியிருத்து பாலைசாப்பிட்டுவருவதால் சீதளம் குளுமை வாயுவுதீரும் தீபனமுண்டாம்.

தோந்தரோகந்தீர.

சிவகரந்தையை உலர்த்தியிடித்து சூரணம்செய்து சரிஎடை சீனிகூட்டி திருகடிபிரமாணம் இருபோதும் மண்டலக்கணக்காய் தின்றுவந்தால் தொந்தரோகம் யாவுந்தீரும். அரோசகம், இருமல், மந்தம்,வாதம்,வாந்தி இவைதீரும், பசியுண்டாக்கும், அழகு கொடுக்கும், தேகம் பரிமளமுண்டாகும், விந்துகட்டும், சஞ்சீவி யென்று பெயர்.

விஷந்தீர.

சிரியாநங்கை யிலையைத்தின்னும்படி அப்பியாசப்படுத்தினவர்களுக்கு தேள்கடித்தால் ஏருது. மற்ற எந்த விஷத்தாலும் பிராணபயமில்லை. ஆயாசந்தணியும், மேனியழகுண்டாகும், நேத்திரம் பிரகாசிக்கும்.

நீர்கட்ட.

சிறுகட்டுக்கொடியிலையை அதிகாலையில் எழுந்து ஒருபிடியெடுத்து வாய்கொண்டமட்டும் மென்றுதின்றால் நீர்ஒழுக்கு, நீர்தாரைக்கிரிச்சரம், வெள்ளை இவைதீரும்.

பிரயமித்திற்கு.

சிவந்த கொட்டைக்கரந்தை, ஈருள்ளி வகைக்கு ஒருபடியெடுத்து யிடித்து சாறுபிழிந்து அதற்கு சரிஎடை நல்லெண்ணெய் கலந்துகொடுக்க பிரமியம் நிவர்த்தியாகும்.

பித்தவாயுவுக்கு.

சிவதைவேர், திரிகடுகு, சரிஎடைகொண்டு சூரணித்து சர்க்கரை சமன்கலந்து திருகடியளவு இருவேளையும் தின்றுவந்தால் பித்தவாயு நிவர்த்தியாகும்.

இரத்தபித்தத்திற்கு.

சிறுகீரைவேரை பச்சரிசி கழுவிய நீரின்மட்டி விட்டு விட்டு அரைத்துத் தேனில் குழைப்பிக் கொடுக்க இரத்தபித்தம் நீங்கும்.

சகலவாதத்திற்கு,

சித்திரமூலம், மிளகருணை, நொச்சி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 5-பலம் எடுத்து இடித்துசூரணித்து திருகடியளவு குளிர்ந்த தண்ணீரில்கொடுக்க சகலவாதமும் நீங்கும்.

விஷசுரத்திற்கு கஷாயம்.

சிறுவழுதலை, சீந்தில், தாமரைவளையம், கோரைக்கிழங்கு, சுக்கு இவைகள் வகைக்கு ஒருபலம் எடுத்து சிதைத்து 2-படி தண்ணீர்விட்டுக் கால்படிக்கு வடித்து மூன்றுவேளை கொடுக்க விஷசுரம் நிவர்த்தியாகும்.

அதிசாரசுரத்திற்கு.

சிற்றாமுட்டிவேர், வில்வக்காய், சீந்தில்தண்டு, நிலவேம்பு, சுக்கு, கோரைக்கிழங்கு, கஞ்சாவிரை வகைக்குப் பலம் கால் நாலுக்கொருபங்காய் கஷாயம் காய்ச்சிக் கொடுக்க அதிசாரசுரந் தீரும்.

கண்ணில் வியாதி வராதிருக்க.

சிற்றாமணக்கம் வேரை அரைத்து பசும்பாலில் கலக்கி காய்ச்சி புறைகுத்திக்கடைந்து வெண்ணெயெடுத்து அந்தவெண்ணெயை கண்ணில் தீட்டிவந்தால் கண்ணில் யாதொரு வியாதியும் வராது, கண்குளிர்ச்சியாகும்.

ஸ்ரீ

மேகரோகிகளுக்கு உண்டாகும் தாகரோகத்திற்கு.

சீந்தில் தண்டும் நெற்பொறியும் சமனாய்ப்போட்டு தண்ணீரிற் காய்ச்சி வேண்டியபோது தாகத்துக்குக் கொடுத்துவரவேண்டியது.

வெட்டுக்காயத்திற்கு.

சீதாசெங்கழுநீர் இலையை அரைத்து வெட்டு காயத்தில் வைத்து கட்டினால் இரண்டு மூன்று கட்டில் வெட்டுக்காயம் ஆறிவிடும்.

பித்தத்திற்கு.

சீரகம், சுக்கு, ஏலம், நெல்லிவற்றல் இவை சமன்கொண்டிடித்து அதற்குப்பாதிசீனிகலந்து திருகடிப்பிரமாணம் இருவேளையுந் தின்றுவர பித்தம் நிவர்த்தியாகும்.

மந்தவாயுவுக்கு.

சீரகம், ஏலம், பச்சைக்கற்பூரம் ஓர்நிறையாய் சூரணித்து சரிபங்கு சீனிசர்க்கரைகூட்டி திருகடியளவு அந்திசந்திகொடுத்து வர மந்தவாய்வு தீரும்.

குளிர்சுரத்திற்கு கஷாயம்.

சீந்தில், நிலவேம்பு, சிறுகாஞ்சொரி, மல்லி, வட்டத்திருப்பி விலாமிச்சம்வேர், வேலிப்பருத்தி, பற்பாடகம், சுக்கு வகைக்கு ஒருபலம் இடித்துப்போட்டு தண்ணீர்விட்டு அரைப்படியாகக் காய்ச்சி ஆறுவேளை கொடுக்க குளிர்சுரம் சாந்தியாகும்.

இதுவுமது.

சீரகம், குறுந்தொட்டிவேர் ஓர் நிறையாயெடுத்து கஷாயம் செய்து ஆறுவேளை கொடுக்க குளிர்சுரஞ் சாந்தியாகும்.

உடம்புநோய்க்கும், காய்ச்சலுக்கும்.

சீதேவிப்பூண்டையிடித்து பிட்டவித்து சாறுபிழிந்து கடுகு ரோகணியை அரைத்துக்கலக்கி வெள்ளாட்டுப்பாலுடன்கலந்து கொடுக்க உடம்புநோயும், காய்ச்சலும் நிவர்த்தியாகும்.

படர்தாமரைக்கு.

சீமை அகத்தியிலையை அரைத்து தேங்காயெண்ணெயில் குழைத்து படர்தாமரை இடுப்பரணை முதலிய படைகளுக்குத் தேய்த்தால் அவை நிவர்த்தியாகும்.

சு

வாயுமுதலிய சில்லரைவிஷந்தீர.

சுடுதுரத்தி மூலத்தை பாலில் அரைத்து அருந்திவந்தால் வாயுவு, சில்லரைவிஷங்கள், படை, கிரந்தி, கரப்பான் இவை தீரும்.

மூலவாயுவு சாந்தி.

சுக்கையிடித்து வஸ்திரகாயஞ்செய்து அப்போதுகரந்தபால் அரைக்கால்படியில் திரிகடிப் பிரமாணம் போட்டு சாப்பிடவும் இப்படி சிலநாள் சாப்பிட்டால் மூலவாய்வு, உருத்திர வாய்வு தீரும், பசியுண்டாகும்.

நீர்கட்டு உடைக்க.

சுறுமீன் தலையிலிருக்கிற இரண்டு கல்லையெடுத்து உலர்த்தி இளம் வெந்நீரிலுரைத்துக் கொடுக்க உடனே நீர்க்கட்டு உடையும்.

பிரமியத்திற்கு போதுப்பிரயோகம்.

சுண்ணும்பு தெளிவுதண்ணீர் நல்லெண்ணெய் வகைக்குப் படி மாகாணி ஒன்றாய்க் கலந்துகொடுக்க பிரமியந்தீரும்.

இரத்த மூலத்திற்கு.

சுருள்பட்டையைசூரணித்து தேனில்குழைத்துஇருபோது தின்றுவந்தால் இரத்தமூலம் சாந்தியாகும்.

சுண்டக்காய் குணம்.

வெண்பா.

நெஞ்சிற் கபம்போகும் நிறைகிருமி நோயும்போம்
விஞ்சுவா தத்தின் விளைவும்போம்—வஞ்சியரே
வாயைக் கசப்பிக்கும் மாமலையிலுள்ள சுண்டைக்
காயைச் சுவைப்பவர்க்கு காண்.

சுண்டைவற்றல் உபயோகம்.

வெண்பா.

பித்த வரோசகம்போம் பேராப் புழுச்சாகும்
உற்றகிராணியும்போம் உட்பசியாம்—சத்தியமாம்
பண்டைக் குதவாமம் பற்றுமிங்கி யாரையுந்தான்
சுண்டக்காய் வற்றலுண்ணச் சொல்.

சூ

சுகவிரேசனம்.

சூரத்து நிலாவிரையையிடித்து வஸ்தியகாயஞ்செய்து அதற்கு சரியெடை சுக்கு, அதிமதுரம், ரோஜாமொக்கு, விளக்கெண்ணெயில் வறுத்த பிஞ்சுகடுக்காய் இவைகளையிடித்து வஸ்திரகாயஞ் செய்து சேர்த்து அரைபங்கு சீனிகூட்டி புட்டியில் வைத்துக் கொண்டு அரைரூபா எடை எடுத்து வெந்நீரில் கலக்கியுண்டு வந்தால் மலக்கட்டு நீங்கும் இரண்டொருவிசை விரோசனமாகும்,

9

வெப்பந்தணிய.

சூரியகாந்தியிலையை அரைத்து பாலில்கலக்கி யுண்டுவந்தால் சூடு, உஷ்ணம் இவைகளைத் தணிக்கும்.

சூரியகாந்தி சந்திரகாந்தி.

இரண்டின் குணம்.

வெண்பா.

சந்திரக்காந்திக்குத் தழலெரிச்சல் நீர்க்கடுப்பும்
உந்திவலியாவு மொடுங்குங்காண்—சந்திலரும்
பாரியவாதம் பருகுநீ ரேற்றமும்போம்
சூரியக் காந்திக்குச் சொல்.

செ

சீழ்மூலக்கஷாயம்.

சென்னுபுருவி ஒருபிடி கற்றாழஞ்சோறு ஒருபிடி கொஞ்சம் சர்க்கரை இவைகளை சாற்படி நெல்லெண்ணெயிற் போட்டு காய்ச்சி இருவேளையும் பத்துநாளருந்திவர சீழ்மூலம் சாந்தியாகும்.

நீரடைப்புக்கு சாந்தி.

செம்பாளை அதாவது செவப்புப் பசறையை பக்சைப்பயறு கூட்டி கிரமமாய் சமைத்து உண்டால் நீர்க்கட்டு உடையும், அரோசகங் தீரும்.

இரத்தவெள்ளை பிரமியத்திற்கு.

செம்பரத்தம்பூவை புளிப்புத்தயிர்விட்டரைத்து தயிரிற்கலக்கி மிதமாய் உண்டுவந்தால் இரத்தவெள்ளை, பிரமியம், பெரும்பாடு இவைதீரும்.

கண்குளிர்ச்சிக்கு.

செண்பகப்பூவை வேண்டியவரையில் பசும்பாலில்போட்டுக் காய்ச்சி யுண்டுவந்தால் மேகம்போம், அஸ்திசுரம், வாதபித்தம் இவைதீரும். கண்குளிர்ச்சியுண்டாம், தாதுகட்டும், போகம்மிகுதியுண்டாம்.

கீல்வலி காசத்திற்கு.

செந்தொட்டிவேரை பால்விட்டரைத்து பாலில்கலக்கியுண்டு வந்தால் கபம், கரப்பன், கீல்வலி, சுரம், சுவாசகாசம், வாதம் போகும் பெண்கள் உண்டுவந்தால் கட்டுபட்டசூதத்தை உடைக்கும்.

சுரிதோஷசாந்தி.

செந்தாழம்பூவைப் பாலில் அரைத்து உபயோகித்தாலும் சூரணித்து சீனிகூட்டிஉண்டுவந்தாலும் கபம், காசம், நீரேற்றம் சகலதோஷமும் தலைநோயுந்தீரும்.

குறைநோய்களுக்கு.

செவ்வல்லிக்கொடியை சூரணித்துசமனெடை திரிகடுகுசூரணங்கூட்டி யாவுக்கும்அரைபங்குசீனிகூட்டி திருகடியளவுஉண்டு வந்தால் கரப்பான், குட்டஉற்பத்தி, குறைநோய், மூலரோகம் இவை தீரும்.

கட்டிகள் உடைய.

செவப்புக் கீரைத்தண்டு அதாவது செங்கீரைத்தண்டு இலையை அரைத்து கட்டிகள், பருவுகளுக்குத் தடவிவந்தால் பழுத்து உடையும்.

தேக குளிர்ச்சிக்கு.

செவப்புக் கற்றாழைசோற்றை ஏழுதரஞ் சுத்திசெய்து சீனி கூட்டி பிசைந்து உண்டுவந்தாலும் சிலாசத்து, கல்நார் முதலிய பற்பங்கள்கூட்டி யுண்டுவந்தாலும் கூடியசீக்கிரத்தில் உடம்பு குளிர்ச்சியுண்டாகும், வெட்டை, சூடு தணியும்.

அழல்தணிய.

செங்கழுநீர்க்கிழங்கை சூரணித்தாவது அரைத்து பாலில் கலக்கியாவது உண்டுவந்தால் காசம், ஸ்திரீகளால்வந்த தேக அழல், திரிதோஷம், பித்தாதிக்கம் இவைதீரும், கண் குளிர்ச்சியுண்டாகும்.

கரப்பான் ரணங்களுக்கு.

செங்கத்தாரி அல்லது செஞ்சூரைமூலத்தை பாலில் அரைத்து, அந்தப் பாலைக்கொள்ள கிரந்தி, செவ்வாப்புக்கட்டி, செங்கரப்பான், கருங்கரப்பான், கொள்ளிக்கரப்பான், கரப்பான், பலவிஷங்களுந் தீரும்.

இதுவுமது.

செங்கத்தாரிப்பட்டையை அரைத்து உடம்பில்பூச மேற்படிவியாதியாவுந் தீரும்.

அசாத்தியநோய்க்கு தைலம்.

செம்முள்ளி வேண்டியவரையில் கொண்டுவந்து சிதைத்துப் போட்டு எட்டுக்கொருபங்காய் கியாழம் வைத்து சரி எடை நல்லெண்ணெய்விட்டு தாழைவிழுது, ஏலம், கருஞ்சீரகம், கார்கோலரிசி, வகைக்கு கொஞ்சம் எடுத்து பால்விட்டரைத்துக் கலக்கி தயில பதமாய் காய்ச்சி முழுகிவந்தால் க்ஷயம், ஈளை, மந்தாரகாசம், அண்டவாதம் இவைதீரும்.

த

படைகளுக்கு.

தகரையென்னும் சிறிய தாபரத்தின் சமூலத்தைக் கொண்டு வந்து சிதைத்து அத்துடன் கொஞ்சம் கற்பூரம், சாம்பிராணி இவைகள்சேர்த்து குழித்தயிலமிறக்கி படர்தாமரை யிடுப்புக்கடுவன் முதலிய படைகளுக்குத் தடவினல் அவை உதிர்ந்துவிடும்.

குழந்தைவியாதிக்கு.

தழுதாழை யென்னும் மூலிகை தனியாயாவது செருப்படை, கற்பூரவள்ளி, கம்மாறுவெற்றிலே இவை சமன் சேர்த்து பிட்டவித்துப் பிழிந்த ரசத்தில், காரமாத்திரை லிங்கமாத்திரை பேதிமாத்திரை இவைகளில் ஏதேனும் இழைத்தாவது வார்த்தால் மாந்தங்கள் முதலிய குழந்தை வியாதிகள் தீரும்.

இந்திரகோப உபயோகம்.

தம்பலப்பூச்சியென்னும் இந்திரகோபப் பூச்சியை உலர்த்தி பொடித்து தேனில் இழைத்து ஒருவாரந் தின்றால் பெரும்பாடு வியாதியை நிவர்த்தியாக்கும்.

இதுவுமது.

தம்பலப்பூச்சியைப் பொடித்து மூலாணத்தின்மேல் தூவிவந்தால் மூலம் ஆறிப்போகும்.

இதுவுமது.

தம்பலப்பூச்சியை சிவப்பு பட்டுத்துணியில் முடிந்து கழுத்தில் கட்டியிருந்தால் தீராத சுரம் நீங்கும்.

இதுவுமது.

தம்பலப்பூச்சியை உயிருடன்பிடித்து நல்ல வெல்லத்தில் வைத்து உருண்டைசெய்து வாயிற்போட்டு விழுங்கவேண்டியது இப்படி ஒருவருஷத்திற்கு ஒருவாரம்தினம்ஒன்று விழுங்கிவந்தால் மறுவருஷம்வரையில் தாதுவிருத்தி யதிகரிக்கும்.

தாதுபுஷ்டிக்கு.

தண்ணீர்விட்டான்கிழங்கையிடித்து பாலில்போட்டுகாய்ச்சி யுண்டுவந்தால் தாதுபுஷ்டியுண்டாகும், சிலநாள் விடாமல் சாப்பிடவும்.

இதுவுமது

தண்ணீர்விட்டான்கிழங்கை பாலில் உபயோகித்துவந்தால் விந்து கட்டுபடும், சுக்கிலபிரமியம், நீர் எரிவு, காந்தல், கரப்பான் இவை தீரும்.

சூலை சொரிசிரங்கு.

தலைச்சுருளியென்னும் மூலிகையை பாலில் உண்டுவந்தால் அரவுக்கடி முதலிய பழையவிஷம், சூலை, சொரி சிரங்கு தீரும், தேகத்தில் பலமுண்டாகும்.

பல்நோய்க்கு.

தக்காளி அல்லது மணத்தக்காளி சமூலங் கொண்டுவந்து கியாழம்வைத்து நாலுக்கொருபங்காய் இறக்கி வாய்கொப்பளித்து வந்தால் பல்நோய், உண்ணாக்குவளர்ச்சி, தொண்டை நோய் இவைதீரும்.

பொடியிருமலுக்கு.

தவசு முருங்கைச்சமூலம் சூரணஞ்செய்து சமன்சர்க்கரை கூட்டி வேளைக்குதிருகடிப்பிரமாணம் எடுத்து தேனில்குழைத்து தின்றுவந்தால் பொடியிருமல், கபம், கோழை, தொந்தரோகம் இவைதீரும்.

தா

வாயில் நீர் ஒழுக்கலுக்கு.

தாணிக்காயை சுட்டு சூரணஞ்செய்து சமனெடைசாக்கரை கூட்டி நித்தம்ஒருவிராகனெடையெடுத்து வென்னீரில்சாப்பிட்டு வந்தால் வாயில் நீர்ஒழுகுவது பல்வலிதீரும்.

சொரிசிரங்குக்கு சர்பத்து.

தாழம்பூவின்வேரை கஷாயம்வைத்து சர்க்கரைசேர்த்து சர்பத்துபோல் பாகுபதமாய் காய்ச்சி சாப்பிட்டுவந்தால் சொரி' ரரங்கு, தினவு இவைகள் தீரும்.

பல்நோய்க்கு.

தாளிசபத்திரியைப் பொடிசெய்து பல்லில் தேய்த்துக்கொண்டுவந்தால் பல்வலிதீரும்.

கலிதமாகாதிருக்க.

தாழம்பூவின் உள்ளேயிருக்கும் விபூதியையெடுத்து கோழிமுட்டை வெள்ளைக்கருவாலிழைத்து ஆண்குறியில்தடவிப்புணர்ந்தால் விந்து சீக்கிரம் கலிதமாகாது.

குளிர்ச்சிக்கு.

தாமரைக்கிழங்கை பாலில் அரைத்து உட்கொண்டுவந்தால் மேகம், வெட்டை, கிரிச்சரம் இவைதீரும். தேககாந்தியும், கண்பிரகாசமும் உடம்பு குளிர்ச்சியும் உண்டாகும்.

தி

சிறுவிஷங்களுக்கு.

தில்லைவித்தைப் பாலில் அரைத்து உண்டுவந்தால் சில்லரை விஷங்கள், பெருவிஷங்கள் திமிர்வாய்வு, கபம், கோழை, குட்டம் இவை சாந்தியாகும்.

இந்திரியங்கட்ட.

திசைகருடன் என்னும் கட்டுக்கொடி சமூலத்தை பாலில் உட்கொண்டுவந்தால் மலக்கழிச்சல்,பேதி இவைதீரும்.நீர்த்த இந்திரியத்தைக்கட்டும், இதன் இலை தண்ணீரைக்கட்டும்.

அறிவுண்டாக.

திருநீற்றுப் பச்சிலையை பாலிலரைத்துக் கலந்து உட்கொண்டு வந்தால் கபவாந்தியை நிவர்த்தியாக்கும், அறிவு துலங்கும்.

து

கருமேக சாந்தி.

துந்திவிரையை பசும்பாலில் அரைத்துப் பாலில்கலக்கி நீடித்து உண்டுவந்தால் கைகாலில் படருகிற கருமேகம், குட்டம், வெப்பு இவைதீரும்.

மேகச்சூடு தணிய.

துத்தியிலையைக்கஷாயம்வைத்து பாலுஞ்சர்க்கரையுங்கூட்டி காப்பிபோல் சாப்பிட்டுவர மேகச்சூடு தணியும்.

மலச்சிக்கலுக்கு.

துத்தியிலையில் வெங்காயம் சிறுபயறுபோட்டு கிரமப்படி சமைத்துத் தின்றுவந்தால் மலச்சிக்கல் தீரும், மூலச்சூடு தணியும்.

நீர்ச்சுருக்குக்கு.

துத்திவேர் 3-பலம் திராட்சை ஒன்றரைபலம் இரண்டும் கஷாயம் வைத்து கொஞ்சம் நெய்விட்டுசாப்பிடவும், நீர்சுருக்கு தீரும்.

பருவுகள் உடைய

துத்தியிலையை அரைத்து பருவுகள்மேல் தடவிவந்தாலும் அல்லது துத்தியிலையில் காடிவார்த்துக் கிளரிக் கட்டிவந்தாலும் பருவுகள் தீரும்.

தூ

கபரோகந்தீர.

தூதுளங்காயை துவரம்பருப்பிட்டு கிரமப்படி சமைத்து தின்றுவந்தால் கபரோகம், பயித்திய தோஷம், பித்தவாயுவு இவைகள் சாந்தியாகும்.

மந்தவாயுவுக்கு.

தூதுவேளையிலையை குறுக அரிந்து துவரம்பருப்பு மிளகு இவைகளைக்கூட்டி கிரமப்படிகுழம்புசெய்து இரண்டொருவேளை சாதத்துடன் சாப்பிட்டால் உடம்புஆதியந்தமுங் குத்தல்குடைச்சல், தேகபாரம், வயிறுமந்தம், மலச்சிக்கல் யாவுந்தீரும்.

தெ

நாதவிருத்தி.

தென்னம்பாளை மிகவும் இளசியாகக்கொண்டுவந்து அதின் அரிசியெடுத்து பால்விட்டரைத்து எலுமிச்சங்காயளவு சாப்பிடவும் இப்படிகாலைமாலைஇருவேளையும் தின்றுவந்தால் நாதம்விருத்தியாகும் இடுப்புவலிவு உண்டாகும்.

தே

ஈளை இருமலுக்கு.

தேற்றான்வித்தை ஊரவைத்துப் பாலில்அரைத்துப் பாலில் கலக்கி யுண்டுவந்தால் பித்தகாசம், க்ஷயம், ஈளை இருமல், மேகம், பிரமியம், உந்திப்புண், கிரிச்சரம், கண்ணெரிவு, தேகக்கடுப்பு, இவைதீரும், தீபனமுண்டாகும்.

பழஞ்சுரத்திற்கு.

தேவதாரிமூலத்தை பாலில் அரைத்து பாலில்கலக்கி உண்டுவந்தால் பழையசுரம், பீனசம், நீரேற்றம் இவைதீரும்.

தேள்கொட்டின விஷத்திற்கு.

தேள்கொட்டினவுடனே தேங்காயை உடைத்து நசுக்கியாவது திருகியாவது பால்பிழிந்து கொஞ்சங்குடித்தால் உடனே சில்லென்றிருக்கும்.

மூலச்சூடுதணிய.

தேங்காயை வழுக்கையுடன் கற்கண்டு தூள்சேர்த்து தின்று வந்தால் மூலச்சூட்டை கண்டிக்கும், இந்திரியம் விருத்தியாகும்.

வயிற்றுப்பூச்சிகள் விலக.

தேங்காயை நெல்லுடன் போட்டு வேகவைத்து எடுத்து சிறுவர்களுக்குக் கொடுத்தால் வயிற்றிலுள்ள கிருமிகள் வந்து விடும்.

தலைசுண்டுவிலக.

தேள்கொடுக்கிலையை அரைத்து நல்லெண்ணெயில் கலந்து சூரியபுடம் வைத்து தலைக்குத்தடவி ஊரவைத்து முழுகவும் இப்படி செய்வதினால் தலைச்சுண்டு சிரங்குமாறும்.

தை

காதிரைச்சல் நீங்க.

தைவேளையிலையை இடித்துப் பிழிந்தசாறும் நல்லெண்ணெயும் சமன் கூட்டிக் காய்ச்சி பால் பதமாயிறக்கி காதில் விட்டுவர காதிரைச்சல் நீங்கும்.

தொ

மகாரோகங்களுக்கு.

தொட்டால்சுருங்கி யிருக்கும் இடத்தைப்பார்த்து குறிப் பிட்டுக்கொண்டு சூரியன் கடகராசியிலிருக்கும்போது ஸ்நான பானஞ் செய்து பரிசுத்தனாக ஷை மூலிகை இருக்குமிடத்திற் குச் சென்று மதுரமான வஸ்துக்களை நிவேதனஞ் செய்து பறங்கி சாம்பிராணியை யொத்த (சனிக்கிரக) சம்பந்தமான வஸ்துக்களை தூபதீபங் கொடுத்து தன்னுடைய நிழல் செடியின் பேரில் படாமல் வேரோடு பிடுங்கிவந்து நிழலில் உலர்த்திவைத் துக்கொண்டு சூரியன் கடகராசியில் வரும்போது இடித்து வஸ் திரகாயஞ் செய்து ஒரு மிளகளவு சூரணத்தை அப்போதுகறந்த பசுவின்பாலில கலந்து (துலா அமுர்த தூலசனலா தான்றமோ நமோ-கவா) என்ற மந்திரத்தை எழுதரம் ஜெபித்துக் கொடுக்க வும். இப்படி ஒருவாரம் விடாமல் குடித்தால் வயிற்றிலுள்ள வண்டலைப்பற்றிய ரோகங்கள் யாவும் நிவர்த்தியாகும் சகலசளிர் சுரங்களும் தொந்தரோகங்களுந் தீரும்.

மேற்படி சூரணத்தை இரண்டுவாரம் முன் சொன்னபடி சாப்பிட்டால் சகலமூலரோகங்களும் புரையோடுகிற ரணங்களும் காமாலை முதலிய ரோகங்களும் நீங்கும்.

மேற்படி சூரணத்தை முன்கூறியபடியே மூன்று வாரம் சாப்பிட்டால் பெருவியாதிகள், குட்டப்படைகள், பறங்கிப் புண்கள் முதலிய ரோகங்கள் நிவர்த்தியாகும். இதை நித்தியம் உபயோகப்படுத்தி வந்தால் ஆன்மசத்தி யதிகரிக்கும். இந்த மூலிகையின் உபயோகத்தை இந்து சாஸ்திரிகளால் மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. இதில் எழுதியிருக்கும் மந்திரம் பார்ஸி பாஷையிலிருந்து மொழிபெயர்த்ததாகையால் உச்சரிப்பு பேதப்பட்டிருக்கும் என யோசிக்கப்படுகிறது. ஆதலால் தெரிந்தவர்களைக் கொண்டு திருத்திக்கொள்ள வேண்டும்.

ந

குருக்குவலி வாயுவுக்கு.

நருக்குமூலமென்கிற கண்டதிப்பிலியை யரைத்துப் பாலிற் கொள்ள குருக்குவலி, வாயுதோஷம், நாவரட்சி தீரும்.

தேகபலமுண்டாக.

நத்தைச்சூரி வித்தை அரைத்து அல்லது சூரணித்து பாலில் உட்கொண்டு வந்தால் தேகபல முண்டாகும், விந்து அதிகரிக்கும்.

யானைசொரிதீர.

நரிக்கொன்றை மூலத்தை பாலில் உபயோகித்து வந்தால் யானைச்சொரி, கிருமிப்படை, அரிப்படை இவை தீரும்.

பலரோகங்களுக்கு.

நன்னாரிவேர் பச்சையாகக் கொண்டுவந்து கொட்டைப்பாக்களவு எடுத்து அரைக்கால்படி பசும்பாலில் கலக்கி சாப்பிடவும், இப்படி 20-நாள் சாப்பிட்டால் மூலக்கொதிப்பு, அஸ்திகாங்கை, மேகச்சூடு, மேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீர் இற்றுவிழுதல் முதல் மூத்திரக் கிரிச்சரம், உள்வரட்சியினால் காணும் இருமல், இவை தீரும். இந்த வஸ்துவை நாட்பட சாப்பிட்டுவந்தால் நரை மாறும்.

புறஇசிவு, தலைவலிதீர.

நஞ்சறுப்பான்பூண்டு கொஞ்சம் எடுத்து ஒன்றிரண்டாய்த் தட்டி நல்லெண்ணெயிற்போட்டு காய்ச்சி தலைமுழுகி வந்தால் மேற்படி ரோகந்தீரும்.

படைகளுக்கு.

நத்தையைச் சுட்ட சாம்பலில் தேன்விட்டிழைத்து படைகள் ஓரத்தில் வரும் புண்களின் மேல் தடவினுல் அவை குணப்படும்.

பல்வலி நீங்க.

நன்னுரிவேர் கஷாயத்தில் கொஞ்சம் காடிவிட்டு வாய்கொப்பளித்து வந்தால் பல்வலி சௌக்கியமாகும்.

கண்மாசுநீங்க.

நவாச்சாரத்தை முலைப்பாலில் இழைத்து கண்ரப்பைமேல் பூச கண்மாசுகளை யறுக்கும்.

மயிர் உதிராதிருக்க.

நவாச்சாரத்தை தேனில் ஊறவைத்துப் பூச மயிர் உதிர்வதை நிறுத்தும்.

காதுநோய் விலக.

நல்லெண்ணெய் ஒரு பலத்தில் கறுப்பாம்பூச்சி ஒன்று போட்டுக் காய்ச்சி காதில் இரண்டொருவேளை விட காது நோய் தீரும்.

வீக்கம் கரைய.

நத்தைச்சூரி யென்னும் பூண்டை அரைத்துக் கல்லைப் போன்ற வீக்கத்திற்குத் தடவினுலுங் கரைந்துபோகும்.

கண்ணோய்க்கு.

நந்தியாவட்டம் பூவைப்பிழிந்து அந்த சாற்றை கண்ணுக்கு விட்டால் கண்காசம், படலம் இவைதீரும்.

நா

நாள்பட்ட இருமல்தீர.

நர்க்குப்பூச்சி யென்னும் பூநாகத்தை எள்ளெண்ணெயில் போட்டுக் காய்ச்சிக்குடிக்க நாள்பட்ட இருமல் நிவர்த்தியாகும், ரணங்களில் தடவினுல் ஆறிப்போகும்.

கிராணிக்கு.

நாவல்வித்தை பாலில்அரைத்து உண்டால் கிராணி, நீரிழிவு, மூலச்சூட்டின் கிராணி இவைதீரும்.

இதுவுமது.

நாவல்பட்டையை சூரணித்து எருமைத்தயிர் கலந்து உண்டு வந்தால் கிராணி, காசம் நீங்கும்.

முகவசியம்.

நாயுருவி கட்டையினுல் பல்துலக்கிவந்தால் முகவசியம்உண்டாம், லட்சுமிகடாட்ச முண்டாம்.

சூதகம் உடைய.

நாயுருவி மூலமும் வாழைச்சருகும் மூங்கில்குருத்தும் கஷாயம் வைத்து கொடுத்தால் பெண்கள் வயிற்று அழுக்கைதள்ளும் நாவரட்சி நீங்கும்.

சீழ்எடுக்க.

நாகதாளி பட்டையின் முள்ளைச் சீவிப்போட்டு கும்பியில் சொருகி வெந்தபிறகு பிசைந்துருட்டி பில்லைதட்டி துளி விளக்கெண்ணெய் தடவி உடைந்த கட்டிகள்மேல் வைத்துக்கட்டினுல் அதிலுள்ள சீழ்வெளிப்படும்.

உதிரவாதத்திற்கு.

நாய்க்கடுகை கிரமப்படி துவையல் செய்து தின்று வந்தால் உதிரவாதம், சூதகவாய்வு, குன்மம் சாந்தியாகும், மலக்கட்டை யுண்டாக்கும். இதை பேய்க்கு புகை போடுவதும் உண்டு.

நி

உடம்பு சுருங்க.

நிலாவிரைச்சூரணத்தை இருவேளையும் திருகடிப்பிரமாணம் தேனில் குழைத்து உண்டுவந்தால் உடம்பு சுருங்கும்.

உடம்புபூரிக்க.

நிலாவிரை யென்னும் நிலவாகை மூலம் பச்சையாகக் கொண்டு வந்து நிழலில் உலர்த்தியிடித்து சூரணஞ் செய்து வைத்துக் கொண்டு திருகடிப் பிரமாணம் எடுத்து பசு நெய்யில் குழைத்து தின்று வந்தால் உடம்பு பூரிக்கும், இரத்தஞ் சுத்தியாகும்.

எலிகடிக்கு.

நிலாவிரைச் சூரணத்தை சிற்றுமணக்கெண்ணெயில் குழைத்து உண்டுவந்தால் எலிகடி விஷம், பைத்தியம், சில்லரைவிஷம், எப்பம் இவை நீங்கும். பத்திய மிருக்கவேண்டும்.

கிருமிநீங்க.

நிலாவிரைச் சூரணத்தை வெந்நீரில் உட்கொண்டு வந்தால் கிருமிகள், திமிர்பூச்சிகள் யாவும் மலத்துடன் நீங்கிப் போகும்.

சமியாமைக்கு.

நிலாவிரைச் சூரணத்தை பசுவின்மோரில் ஒருவேளைக்கு திருகடிப்பிரமாணம் சாப்பிட்டு வந்தால் பெண்கள் சமியாமை நீங்கும்.

பாண்டுரோகத்திற்கு.

நிலாவிரைச் சூரணத்தை எருமைச்சாணிப்பாலில் திருகடியளவு இருவேளையும் உட்கொண்டுவந்தால் பாண்டு நீர்க்கோவை இவைகள் நீங்கும் பத்தியம்.

உடல் தடிக்க.

நிலாவிரைச்சூரணத்தை பசுகஇலைச்சாற்றில் குழைத்து உட்கொண்டு வந்தால் இளைத்ததேகந் தடிக்கும்.

தேள் விஷத்திற்கு.

நிலாவிரைச் சூரணத்தை குப்பைமேனிச் சாற்றில் குழைத்து ஒரு நாளைககு மூன்றுவேளை யுண்டால் தேள் விஷம் நீங்கும்.

க்ஷயம் ஈளைக்கு.

நிலாவிரைச் சூரணத்தைக் கரிசலாங்கண்ணி, கண்டங்கத்திரி இவைகளின் சாற்றில் குழைத்துத் தின்றுவந்தால் ஈளை, க்ஷயம் இவைகள் தீரும்.

மாறல் சுரத்திற்கு.

நிலாவிரைச்சூரணத்தைக் கொடிக்கள்ளிச்சாற்றில் குழைத்துத் தின்றுவந்தால் நாள்விட்டு நாள் காய்கிற மாறல்சுரம், குளிர் சுரம் இவைகள் நீங்கும்.

பெருச்சாளிகடிக்கு.

நிலாவிரைச் சூரணத்தை ஆலம்பழுப்புச்சாற்றில் மத்தித்து உண்டுவந்தால் பெருச்சாளிவிஷம் நீங்கும், பத்தியம்.

அரணை, வண்டுகடிளுக்கு.

நிலாவிரைச் சூரணத்தை வேப்பம்பட்டைச் சாற்றில் குழைத்து தின்று வந்தால் அரணை, வண்டு இவைகளின் விஷம் நீங்கும்.

செவ்வட்டை கடிக்கு.

நிலாவிரைச் சூரணத்தை வேப்பம்பட்டைச் சாற்றில் மத்தித்து உண்டுவந்தால் செவ்வட்டைகடி தீரும், பத்தியம்.

சகல விஷத்திற்கு.

நிலாவிரைச்சூரணத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் குழைத்து தின்றுவந்தால் சகலவிஷமுந் தீரும், பத்தியம்.

சோகைகாமாலைக்கு.

நிலாவிரைச்சூரணத்தை வெள்ளாட்டு மூத்திரத்தில் கலக்கி யுண்டுவந்தால் சோகை, பித்தசோகை காமாலைநீங்கும், குஷ்ட ரோகமும் தடிப்பும் சாந்தியாகும்.

நீராமைமேகத்திற்கு.

நிலாவிரைச்சூரணத்தை பசுவின்கோமயத்தில் கலக்கியுண்டு வந்தால் சொறிசிரங்கு, பெருவயிறு, மகோதரம், நீர்க்கோவை நீராமை இவைகள் நீங்கும் பத்தியம்.

அஜீரணத்திற்கு.

நிலக்கடம்பு பாலில் அரைத்துண்டால் அஜிரணம், கிருமி, ஜன்னி, நேத்திரநோய், பலவிஷந்தீரும், மண்டையிலுண்டான நீரேற்றத்தை நீக்கும்.

கண்சோருகல் கோட்டாவிக்கு.

நிலக்குமிழ் சமூலத்தை பாலிலரைத்து உண்டு வந்தால் கண் சொருகல், கல்லடைப்பு, கொட்டாவி, சீதளம், பேதி, மாந்தம், வாதவலியும் போம். இது கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஆகாது.

நீ

சிரங்குக்கு.

நீரடிமுத்தின் பருப்பை தயிரில் ஊறவைத்து எலுமிச்சம் பழச்சாறு அல்லது காடிவார்த்தரைத்து உடம்பில் பூசி காய்ந்த பிறகு சாணம் தேய்த்து அல்லது இலுப்பைக்கட்டியா லறைப்பு தேய்த்து குளிக்கவும், நமை, சொரி, யாவும் தீரும்.

இரத்தவிருத்திக்கு.

நீர்முள்ளிவிரையை சூரணித்து பாலிலுட்கொண்டுவந்தால் இரத்தம் விருத்தியாகும், வாந்திநிற்கும், அதிபாரம், நீர்வீக்கம், இளைப்பு, இருமல் இவை தீரும்.

கண்ணோய்க்கு.

நீலாஞ்சனமென்னும் சிறுமாகல்லு, முத்து, கஸ்தூரி இவைகள் சமனெடையாயெடுத்து முலைப்பால் விட்டரைத்து கண்ணில் கலிக்கம் தீட்டிவந்தால் கண்ணோய் தீரும்.

நீர்சுரப்பு, நீர்சிவப்பு.

நீர்முள்ளியிலை, பசளையிலை, குப்பைமேனியிலை இவைகளில் ஒன்றை அவித்துத்தின்றால் நீர்சுரப்பு அல்லது நீர்சிவப்பு இவை நிவர்த்தியாகும்.

நு

மந்தத்திற்கு.

நுணா இலையை கியாழம்வைத்து கொஞ்சம் சர்க்கரைகூட்டி சாப்பிட்டால் மந்தத்தை நீக்கும்.

இதுவுமது.

நுணா இலையை பிள்ளைகளுக்கு கொடுக்கும் மற்ற கியாழங்களுடன்சேர்த்து காய்ச்சுவதுமுண்டு, மாந்தம், புண், சிலேட்டுமசுரம் இவைகளை நிவர்த்தியாக்கும்.

நூ

காயசித்தி.

நூறாண்டு சென்ற வேப்பம்பட்டையை யிடித்து வஸ்திரகாயஞ் செய்து சீனிசர்க்கரை சமன் கூட்டி மண்டலக்கணக்காக இரு வேளையும் திருகடியளவு சாப்பிட்டுவந்தால் தேகத்திலூறிய நாட்பட்ட பித்தம், வாய்வு, உஷ்ணம் யாவும் நிவர்த்தியாகும். கண்கள் பிரகாசிக்கும், புத்தி நுட்பமாகும், காயத்தில் யாதொரு வியாதியும் அணுகாது. ஞானம் துலங்கும்.

நெ

நீர்குருகலுக்கு

நெருஞ்சிக்காயைச் சூரணித்து பாலில் காய்ச்சி யுண்டுவந்தால் நீர்குருகல், நீரடைப்பு, சடையடைப்பு, வெட்டை, எலும்புருக்கி இவை சாந்தியாகும்.

சகலவிஷத்திற்கு.

நெய்க்கொட்டான் மூலத்தை அரைத்துப்பாலில் உட்கொண்டு வந்தால் சகல விஷக்கடிகளும் கரப்பான், கிரந்தி, மேக சூலை இவை தீரும்.

நாதவிருத்தி.

நெய்ச்சிட்டிக் கிழங்கை உலர்த்தி சூரணித்து பாலில் காய்ச்சி யுண்டு வந்தால் நாதம் விருத்தியாகும், சூட்டைத்தணிக்கும்.

பித்தசூட்டிற்கு.

நெல்லிவற்றல் கியாழம் வைத்து சீனிகூட்டி பால்விட்டு அருந்திவந்தால் பித்தசூடு, ஆண்குறியில் சிறுகொப்பளம், வாந்தி, அரோசகம் இவை தீரும்.

நே

நேர்வாளமென்பது வைத்தியரால் கையாட வேண்டுமேயன்றி சாதாரணமானவர்கள் கையாடுவது அசாத்தியமாகும், ஆகையால் அதை விடப்பட்டிருக்கிறது.

நொ

கட்டிகள் அமுங்க

நொச்சிச்சாற்றை கட்டிகளின்மேல் பற்றுபோட்டுவந்தால் கரைந்துபோகும், வீக்கங்களிறங்கும், இந்தஇலையை வீட்டில் சில நெருக்கமான இடங்களில் போட்டுவைத்தால் சில்லரைப் பூச்சிகள் சேராது.

தலைநோய்க்கு.

நொச்சிச்சாற்றை யெடுத்து பின்னிசிப்பு, நரம்பிசிப்பு, தலைநோய்முதலிய சீதளத்தாலுண்டாகும் வியாதிகளுக்குத் தடவி நன்றாய் தேய்ப்பதினால் தலைநோய் நிவர்த்தியாகும்.

ப

சோற்பவாய்வுக்கு.

பறங்கிப்பட்டையை அரைத்து பாலில் கலக்கி யுண்டுவந்தால் சொற்பவாயுவு, சூலே, கரப்பான், குட்டம், கிரந்தி இவை தீரும்.

அஸ்தி காங்கைக்கு.

பர்ப்பாடகத்தை அரைத்து பாலில் உண்டுவந்தால் அஸ்தி காங்கை, வெட்டை, மேகம், எரிவு, காந்தல் இவை தீரும்.

சரஸ்வதி கடாட்சமுண்டாக.

பனங்கோரை, பெருங்கோரையென்கிற குறட்டை மூலிகை இவைகளேப் பாலிலரைத்து உபயோகித்துவந்தால் லட்சுமிகடாட்ச முண்டாகும், நரைதிரைமாறும்.

தழுதணேக்கு.

பழுபாகல் சமூலத்தை பாலில் பிரயோகித்து உண்டுவந்தால் தழுதணே, தொழுதணே, கிருமி இவை தீரும், ஷை மூலிகையின் கிழங்கை பத்தியபாகமாய் நாட்படத் தின்றுவந்தால் தேகம் பலக்கும்.

சகலவிஷத்திற்கு.

பங்கம்பாளேயென்னும் ஆடுதின்னு மூலிகையை அரைத்து கொட்டைப்பாக்களவெடுத்து வெள்ளாட்டுப்பாலில்கலக்கி யுண்டுவந்தால் புண், பிளவை சகலவிஷங்களுந் தீரும்.

இதுவுமது.

பழுபாகலென்னும் ஆடுதின்னு மூலிகையை கருங்குருவை நெல்லுடன் வேகவைத்து அவலிடித்து அந்த அவலே தினம் அரைக்காற்படி வீதம் ஒரு மண்டலங் தின்றுல் சொரி, சிரங்கு, வங்கு, தழுதணே, வண்டுகடி, அரணேகடி, செய்யான்கடி, பூரான் கடி, பேய்ச் சொரி, வெள்ளேப்புள்ளி, கரப்பான் இவை தீரும், 4-நாளேக்கொரு முறை பாலும் மிளகுந் தேய்த்து தலேமுழுக வேண்டும், மூன்று மாதம் வரையில் நல்லெண்ணெய், புணர்ச்சி, யாகாது.

பிளவைகட்டிகட்கு.

பச்சைத் தவளேயை உயிருடன் கொண்டுவந்து பிளவைகள் மேல்வைத்து கட்டிவைக்கவும், அது இறந்த பிறகு எடுத்துவிட்டு வேறே கட்டவும், இப்படிச் செய்வதினுல் பிளவைக் கட்டிகள் விஷம் நீங்கும், நோய்நீங்கும், பிடிப்புகள் வாங்கும்.

பேன்சாக.

படிகாரத்தைப் பொடித்து தண்ணீரில் கரைத்து தலையில் தேய்த்து ஒரு ஜாமம் சென்று ஸ்நானஞ் செய்யவும், பேன், ஈர் முதலியவை சாவும்.

பல்நோய்க்கு.

படிகாரமும் கொட்டைப்பாக்கும் சமனெடை கொண் டிடித்து வஸ்திரகாயஞ் செய்து பல் தேய்த்து வெந்நீரில் வாய் கொப்பளித்துவர பல்நோய் சௌக்கியமாகும்.

பாம்புவிஷத்திற்கு.

பச்சைத்தவளை மாமிசத்தை உப்பு நல்லெண்ணெய் அல் லது வெண்ணெயுடன் கலந்து தின்றால் சகல பாம்பு விஷமும் தீரும். மறுதினம் வரையில் நித்திரை கூடாது.

அஸ்திசுரத்திற்கு.

பச்சைத்தவளையை கிரமப்படி சாறுகாய்ச்சிக் குடிக்க அஸ்தி சுரம், காட்பட்ட ரோகம், தீராத இருமல் இவைகள் தீரும், தேகபுஷ்டி யுண்டாகும், உடம்பு குளிர்ச்சியுண்டாம்.

பா

அரையாப்புகட்டிக்கு.

பாவட்டம்வேரும் பூலாப்பூவும் சமன்கூட்டி அரைத்து கன மாய்ப்பூச அரையாப்புகட்டி கரையும்.

பல்நோய்க்கு.

பாக்கு அதாவது கொட்டைப்பாக்கை துண்டு துண்டாய் நறுக்கி சட்டியிலிட்டு கருகவறுத்து சுற்பூரம் சமன்கூட்டி நசுக்கி பல்துலக்கி வரவும்.

நீர்க்கோவைதீர.

பாம்புத்தோலை அங்கவஸ்திரம்போல் மேலுக்காவது கச்சை யைப்போல் இடுப்பிலாவது கட்டியிருந்தால் பாண்டு, நீர்க்கோ வை இவைகள் நீங்கும், நீரைபிறக்கும்.

அறுபட்ட நரம்புக்கு.

பாம்புத்தோலின் பொடியும் வயல்நண்டு உலர்த்தியபொடி யும் சமன்கூட்டி அறுபட்ட நரம்பின்மேல் தூவிவந்தால் 'அறுப் பட்ட நரம்புகூடி மூன்றுதினங்களில் குணப்படும்.

சீக்கிரத்தில் பிரசவமாக.

பாம்பு தானுரித்து நீக்கிய தோலைக் கொண்டுவந்து இடுப்பிலாவது வயிற்றிலாவது கட்டிவைக்க உடனே பிரசவமாகும்.

தினவுநீக்க.

பாம்புத்தோலை பொடிசெய்து அல்லது சாம்பலாக்கி உடம்பில் தேய்க்க தினவுநீங்கும், மயிரற்ற இடத்தில் மயிர் முளைக்கும்.

பி

மேகவெட்டைக்கு.

பிரமிசமூலத்தை பாலில் உபயோகித்துவந்தால் கிரந்தி, சூலை மேகவெட்டை இவை தீரும் நீடித்து உண்டுவந்தால் சுயம்பாட வல்லமையுண்டாம்.

கரபாதஜன்னிக்கு.

பிரமியிலையை துளிவிளக்கெண்ணெய் குத்தி வதக்கி பெண்களின் பாதத்திலிருந்து கணுக்கால்வரையிலும் கனமாய்வைத்துக் கட்டினல் கரபாதஜன்னி நிவர்த்தியாகும்.

பதினெட்டு வண்டுகேடிக்கு.

பிராயன் சமூலத்தை பாலில் உட்கொண்டு வந்தால் பதினெட்டு எலிகடி, சிராய்போல் உடம்பிலுண்டாகும் சுரசுரப்பு தீரும்.

வாதக்குடைச்சல் மந்தத்திற்கு.

பிண்ணாக்குப் பூண்டைக் கொண்டுவந்து கடுக்காய்த்தோல், மிளகு, சுக்கு, இவைகள் கால்பங்கு கூட்டி கியாழமிட்டு 4-5-வேளை கொடுக்க வாதக்குடைச்சல் தீரும், இதைதனியாய் கியாழமிட்டுக் கொடுக்க மேக அனல் தணியும்.

பீ

வெள்ளைக்கு.

பீச்சங்கிலையை அரைத்து புன்னைக்காயளவு எடுத்துபுளித்த தயிர் அரைச்காற்படியில் கலக்கி காலையில் சாப்பிடவும், இப்படி 2-நாள் சாப்பிட வெள்ளை நீங்கும் உப்பில்லாத பத்தியமிருக்கவும்.

இதுவுமது.

பிச்சங்கிலே, பழம்பாசியிலே, கீழாநெல்லியிலே இம்மூன்றும் சமனுயெடுத்து முன்மாதிரி சாப்பிட்டாலும் வெள்ளை விழுகிற வியாதி தீரும்.

வயிற்றுப்பிடுங்கலுக்கு.

பீதரோகணியை கியாழமிட்டுக் குடிக்க வயிற்றுப்பிடுங்கல் நிவர்த்தியாகும். சிலநாள் விடாமல் சாப்பிட்டால், காமாலை ரோகத்தைச் சாந்தியாக்கும்.

படர்தேமல்நீங்க.

பீதரோகணியை தேனிலுரைத்துப் பூசிவந்தால் படர்தாமரை முதலிய தேமல்களை நிவர்த்தியாக்கும்.

வாயுவுகளுக்கு.

பீநாரிப்பூண்டு என்னும் மூலிகையை சுக்கு, மிளகு கூட்டிக் கியாழமிட்டுஉட்கொள்ள வாயுவுகளைக் கண்டிக்கும்.

பு

எலிவிஷத்திற்கு.

புரசுமூலத்தை பாலில் உட்கொண்டுவந்தால் எலிவிஷம், குன்மம், வாயுவு, வாதம் இவைதீரும்.

வயிற்றுப்பூச்சிக்கு.

புரசவித்தை எருமைச்சாணிக்குள் பொதிந்து காலையிலெடுத்து சுமார் இரண்டுவிரையை தோலநீக்கி அரைதது பாலில்கலந்துகொடுக்க வயிற்றிலுள்ள பெருங்கிருமிகள்வந்துவிடும், வயற்று வலியுந் தீரும்

புண்புரை அரையப்புக்கு:

புங்கமரத்தின் மூலத்தை பாலிலரைத்து உட்கொண்டு வந்தால் புண், புரைநோய், சூலே, அரையாப்புக்கட்டி இவை கரையும்.

மேத்திற்கு அல்லது வெள்ளைக்கு.

புங்கன் கொழுந்து கொண்டு வந்து நெகிழ அரைத்து நல்லெண்ணெயில் கூட்டிக் கொடுக்க வெள்ளை தீரும். கடும்பத்தியம்.

குழந்தைகட்கு பேதிகண்டால்.

புளியாரை, வாழைப்பூ சமன்கூட்டி பிட்டவித்து பிசைந்து பிழிந்து தேன்குத்திக் கொடுக்க சாந்தியாகும்.

பசித்தீபனத்திற்கு.

புதினாசம் ஒருபலம் எலுமிச்சம்பழரசம் 2-பலம் கொஞ்சம் சர்க்கரைகூட்டிக் கொடுக்க பசித்தீபனமுண்டாகும்.

சுக்கிலமேகம் அதிசாரத்திற்கு.

புளியம்வித்தின் மேற்றோலே பாலிலரைத்துக் கலக்கியுண்டு வந்தால் சுக்கிலமேகம், அதிசாரம் இவைதீரும். உந்திப்புண்சௌக்கியமாகும்.

பூ

உடல் புஷ்டியாக

பூசினிவித்தின் பருப்பையெடுத்துப் பொடித்து காய்ச்சிய பாலில் கலந்து உண்டுவந்தால் உடம்பு புஷ்டியாகும்.

இரத்தக்கழிச்சலுக்கு.

பூனைக்காலி விரையை பாலில் காய்ச்சி யுண்டுவந்தால் இரத்தக் கழிச்சல் நிவர்த்தியாகும். விந்து கட்டுப்படும்.

வாதநோய்களுக்கு.

பூதவிருட்சமூலத்தைப் பாலிலரைத்துக் கலக்கி யுண்டுவந்தால் வாத நோய்கள் நிவர்த்தியாகும், பல விஷக் கடிகளுந் தீரும்.

சொரிகிரந்தி கரப்பானுக்கு.

பூவரசமூலத்தை பாலிற்கொள்ள சொரி, கிரந்தி, கரப்பான், வீக்கம் இவைதீரும், சில்லரை விஷம் சாந்தியாகும்.

கைகால் குடைச்சலுக்கு.

பூமிசர்க்கரைக் கிழங்கை தண்ணீர் விட்டரைத்து கை கால் குடைச்சலுக்கு சில தடவைகள் பூசி வந்தால் சௌக்கியமாகும்.

மூச்சடைப்புக்கு.

பூமிசர்க்கரைக் கிழங்கை தேனிலுரைத்து உள்ளுக்குக் கொடுக்க மூச்சடைப்பு தீரும், நாள் பட்ட இருமல் சாந்தியாகும்.

வீரியவிர்த்திக்கு.

பூனைக்காலி வித்து, காரட்டுவிரை இவை சமனெடை கூட்டி ஆலம்பால் அல்லது அத்திப்பாலிலரைத்து 1-வேளைக்கு 2-விராகனெடையாக பசும்பாலில் குழைத்து சாப்பிடவும் இப்படி 7= நாள் 2-வேளையுந் தின்றால் தாது விருத்தியாகும், இடுப்பு வலிவுண்டாகும்.

காதுநோய்க்கு.

பூண்டுதிரிகளைப் பஞ்சுபோல்நசுக்கி, துணியில்முடிந்துவிளக்கில் வாட்டி 2-3-துளி காதில் பிழிய காதுநோய் தீரும்.

பெ

மேக எரிவுக்கு.

பெருங்குமிழ் மூலத்தைப் பாலிற்கொள்ள மேகஎரிவு, சுக்கிலக்கடுப்பு, பித்தசுரம், திமிர், தோஷந் தீரும்.

திரிதோஷத்திற்கு.

பெருவாகை மூலத்தை பாலில் உட்கொண்டு வந்தாலும் கியாழஞ் செய்து உண்டு வந்தாலும் சூலை,பிடிப்பு, வீக்கம் இவை தீருமு சில்லரைவிஷங்கள் சாந்தியாகும்.

ஆறாதமேகரணத்திற்கு.

பெண்கள் மாதவிடாயாகும்போது அந்த உதிரச்சீலையைக் கொண்டுவந்து நெருப்பிலிட்டுக்கருக்கி ஆறாத புண்கள்மேல்தூவினால் ஆறிப்போகும்.

பே

நெஞ்செரிவுக்கு.

பேரீச்சம்பழம் அதாவது உலர்ந்த காய்களை பாலில் உபயோகித்துவந்தால நெஞ்செரிவு, தாகம், பித்தம், மேகம், வாந்தி இவை சாந்தியாகும்.

சிரங்குகளுக்கு.

பேன்கொட்டைப்பருப்பு ஒருபலம் ரசகற்பூரம் அரைப்பலம் ஏலரிசிகால்பலம் இந்தப்படிநிறுத்தெடுத்து தேங்காயெண்ணெய் விட்டரைத்து சிரங்குகளுக்குத் தடவிவந்தால் ஈ எறும்பு முதலியவை சேராமல் ஆறிப்போகும்.

பித்தசுரத்திற்கு.

பேய்ப்புடலும்விஷ்ணுகாந்தியும்கியாழம்வைத்து துளிதேன் முலைப்பால்விட்டுக் கொடுக்கவும், இப்படி ஆறுவேளை ,கொடுக்கச் சாந்தியாகும்.

வாதசுரத்திற்கு.

பேராத்தை யென்னும் தும்மராஷ்டமும், தூதுவேளை,கண்டங்கத்திரி, கோரைக்கிழங்கு, செஞ்சந்தனம் இவைகளை கியாழமிட்டு 3-4-வேளை கொடுக்கச் சாந்தியாகும்.

போது

பேய்மருட்டி யென்னும் மூலிகையும் இன்னும் சிலமூலிகையும் சரக்குகளுடன் கூட்டி மாந்தகியாழமிடுவதுண்டு.

பொ

இருமல்சாந்தி.

பொற்றலைக்கையான் சமூலத்தைப் பாலிலரைத்து உண்டு வந்தால் இருமல் சாந்தியாகும், காசம், சோகை, பாண்டு இவைகள் குணமாகும்.

பகலில் நட்சத்திரம் தெரிய

பொன்னாங்காணி சமூலத்தை ஒருவர்முகங் காணமல் அதிகாலையிலெழுந்து வாய்கொண்டமட்டும் தின்று வரவும், இப்படி மண்டலக்கணக்கணக்காய் அருந்தினல் உடல் குளிர்ச்சியுண்டாகும் கண் குளிர்ச்சியுண்டாம், பகலில் நட்சத்திரந் தெரியும்.

காமாலைக்கும் பாண்டுசோகைக்கும்.

பொற்றலைக்கையான் சமூலமும் அயச்சிட்டம், கடுக்காய் இவைகள் சமனெடை சேர்த்து கியாழஞ் செய்து சாப்பிட்டுவந்தால் சோகை, பாண்டு, காமாலை இவைதீரும்.

அதிமூத்திரத்திற்கு.

பொன் முசுட்டை சமூலத்தைப் பாலிலரைத் துண்டு வந்தால் சுடிவிஷம், 'மலக்கட்டு, விச்சல், அதிமூத்திரம் நிவர்த்தியாகும்.

மேகப்புண்ணுக்கு.

பொடுதலைக்காயும் மஞ்சளும் சமன் கூட்டி மைபோலரைத்து புண்ணின்மேல் வைத்துக் கட்ட 4-5-வேளையி லாறிப் போகும்.

பாமபுகடிக்கு

பொன்னுவாரைவேருடன் மிளகுகூட்டி அரைத்து விழுங்கினல் பாம்புவிஷம் உடனே தீரும்.

படைகளுக்கு.

பொன்னுவாரைவேருடன் சந்தனங் கூட்டியரைத்து படைகளில் தடவிவந்தால் படைகள் உதிர்ந்து மறைந்துபோகும்.

ம

கருந்தேமலுக்கு.

மருந்தோன்றி யிலையுடன் படிகாரஞ் சேர்த்து அரைத்துப் பூசி வந்தால் கருந்தேமல், படைகள், நரம்பிழுப்பு, கால்நோய் தீரும்.

பித்தநீர் வாந்தியாக.

மர்க்காளான் சதையை 2-விராகனெடை எடுத்து இரவில் வெந்நீரிலூறவைத்து காலையில் தெளிவாக இருத்துச் சாப்பிட வாந்தியாகும்.

வாயுவு சீதளத்திற்கு.

மலைத்தேன் 8-பலத்தை முறித்து நீர் சுண்டியபின் அபினி அரைக்கால் தோலா இழைத்து ஓமம் 3-பலம் சாதிக்காய், ஜாபத்திரி, பவளம் வகைக்கு அரைபலம் பொடித்துப் போட்டுக் கிளறி புளியங் கொட்டை யளவு கொடுத்துவரத் தீரும்.

வாய் வேக்காட்டிற்கு.

மருதளையிலையை ஒன்றிரண்டாயிடித்து இரண்டு குத்து போட்டு அரைப்படி ஜலம் விட்டு நாலுக்கொன்ருய் கியாழம் வைத்து இருவேளையும் வாய்கொப்பளிக்க வாய்வேக்காடு சாந்தியாகும்.

சகல கட்டியும் கரைய.

மஞ்சள்மெழுகு ஒருபலம், வெள்ளைப்பாஷாணம் அரைக் காற் பலம், மெழுகை சட்டியிலிட்டு உருக்கினவுடன் பாஷா ணத்தை பொடித்துப் போட்டு கிளறி யிறக்கவும் ஆறிய பிறகு பில்லை தட்டி கட்டியின் மேல் வைத்து கச்சையினால் கட்டவும் இப்படி மூன்று கட்டில் கரையும், பிறகு எண்ணெய் சாப் பிடவும்.

பித்தத்தால்கண்ட உதடு நாக்கு வெடிப்புக்கு.

மறிமாங்காயிலையை அரைத்து புன்னைக்காயளவெடுத்துபசும் பாலில் கலக்கி 3-நாள் காலையில் சாப்பிட உதடு, நாக்கு வெடிப்பு நீங்கும், பத்தியம் பால் சாதம்.

புண்களுக்கு.

மஞ்சள்பொடியை புண்ணின்மேல் தூவிவர சிவந்து ஆறிப் போகும். இலுப்பைக்கட்டி தேய்த்து குளிக்கவும்.

தாதுவிருத்திக்கு.

மகிழம்வித்தை அரைத்து பாலில்கலக்கி யுண்டுவந்தால் தாது விருத்தியுண்டாகும்.

ஓடுவாயுவுக்கு.

மலைவேம்பின் மூலத்தை பாலில் உறவாக்கி யுண்டுவந்தால் மலக்கட்டு, கிருமி, உடலில் ஓடியோடிக்குத்துகிற வாயுவுதீரும்.

நீரிழிவு பிரமேகத்திற்கு.

மருதமரத்தின் சமூலத்தை பாலிற்கொள்ள நீரிழிவு பிர மேகம், மயக்கம், தாகம், கபம், கிருமி, வயிற்றுவலி இவை தீரும்.

நாதம்கட்ட.

மரவீழிக்கிழங்கை பாலிலரைத்துக் கலந்து உண்டுவந்தால் மூலக்கிரிச்சரம், மேகவெட்டை தீரும். காமமதிகரிக்கும், நாதம் கட்டுப்படும், நாவில் அமிர்தமூறும்.

எரிகுட்டம் வண்டுகேடிளுக்கு.

மருள்கிழங்கை பாலிலரைத்துக் கலந்து உண்டு வந்தால் மூலம், கரப்பான், புண், சிலந்தி, எரிகுட்டம், வண்டுகடி இவை தீரும்.

தேகபலமுண்டாக.

மரவீழிக்கிழங்கை பாலிலவித்து உலர்த்தி இடித்து தூள் செய்து, வறுத்து உளுந்து மாவும் எள்ளுப்பொரியும் சமன்

கலந்து திருகடியளவு சாப்பிட்டு வந்தால் தேகம் பலமுண்டாகும்.

மேனியழகுண்டாக.

மகா மூலிகை யென்ற ஆகாச கருடன் கிழங்கை யரைத்து கொட்டைப்பாக்களவு ஆவின்பாலி லுண்டுவந்தால் நரை திரை மாறும் மேனியழகு உண்டாகும, சர்வ நோயும் விஷக்கடிகளுந் தீரும், பத்தியம் பாலன்ன முண்ணவும். புளி, புகை ஆகாது.

மா

மதாவிடாயுண்டாக.

மாவிலிங்கப்பட்டை, உள்ளி, மிளகு இம்மூன்றும் சமனெடை கொண்டரைத்த விழுது கொட்டைப்பாக்களவாக மூன்று நாள் காலையில் கொடுக்க மாதவிடாயுண்டாகும்.

வெட்டுக்காயத்தின் உதிரப்பெருக்கு நிற்க.

மாசிக்காய்களைச்சுட்டு அந்தச் சாம்பலை தளமாய் வைத்து அழுத்த உதிரப்பெருக்கு நிற்கும்.

மேககடுப்புக்கு.

மாதுளம் வித்தை அரைத்துப்பாலில்கலக்கி யுண்டுவந்தால் மேகக்கடுப்பு. சுக்கிலதோஷம் இவை தீரும்.

இரத்தக்கடுப்புக்கு.

மாங்கொட்டைப்பருப்பை அரைத்துப் பாலில்கலக்கி யுண்டு வந்தால் இரத்தக்கடுப்பு சீதக்கடுப்பு இவை தீரும்.

சூதகக்கட்டுக்கு

மாவிலிங்கப்பட்டை, மூங்கிலிலை, சித்திரமூலவேர், சதகுப்பை, சுக்கு, திப்பிலி இவைகள் சமனெடைகொண்டு படிஜலம் வைத்து வீசம்படியாக இறக்கி வடிகட்டி பனைவெட்டு கொஞ்சம் போட்டு 3-வேளை கொடுததால் பிரசவகாலத்தில் தடைபட்டிருக்கும் சூதகத்தை உடைக்கும்.

சுரோணிதக்கட்டுக்கு.

மாவிலிங்கம் மூலத்தை பாலில் கொள்ள சுரம் வெட்டை சூலை சுரோணிதக்கட்டு கல்லடைப்பு நீரடைப்பு தீரும்.

மி

மிளகை சூரணித்து அப்போது கறந்த பசும்பாலில் போட்டு அருந்தி வந்தால் குளிர்சுரம், பாண்டு, கபம், கிராணி, குன்மம், வாயுவு, மூலம், பித்தம், இருமல், பிரமேகம் இவை தீரும்.

அஸ்திசூட்டுக்கு.

ன்னைக்கீரையை மிளகுதூளிட்டு கிரமப்படிகுழம்புசெய்து சாப்பிட்டுவந்தால் அஸ்திசூடு, வெட்டை இவைகள்சாந்தியாகும் கண்குளிர்ச்சியுண்டாகும்.

குளிர்சுரத்திற்கு.

மிளகை கஷாயம்வைத்து எட்டுக்கொருபாகமாயிறக்கி வடிகட்டிக்கொடுத்து சக்திக்கிசைந்தபடி லங்கனம போடச் சாந்தியாகும்.

இருமல் சாந்தி.

மிளகரணையைச் சூரணித்து இந்தச் சூரணத்தில் அரைப் பாகம் (திப்பிலி, கடுக்காய்த்தோல், சுக்கு) இம் மூன்றுஞ் சேர்த்திடித்த சூரணங் கூட்டிக் கலந்து திருகடிப்பிரமாணம் சாப்பிட்டுவர, இருமல், ஈளை, கபம், ஐயம், பித்தஞ் சாந்தியாகும்.

மு

ரத்தகிராணிக்கு.

முள் ளிலவம் பிசினியை தயிரிலரைத்துக் கொட்டைப் பாக்களவு மூன்று நாள் காலையில் கொடுக்க ரத்தக் கிராணி தீரும்.

நீர்ச்சுருக்குக்கு.

முள்ளங் கிழங்கை யிடித்து சாறு பிழிந்து வெள்ளைச் சர்க்கரை கலந்து மூன்று வேளை சாப்பிட நீர்ச்சுருக்கு தீரும்.

காதுசெவிடுக்கு.

முருங்கைவேர், கொன்றைவேர் சமன் கொண்டிடித்து சாறு பிழிந்து காதில் ஒரு துளியாக 3-நாள் விட காது செவிடு தீரும்.

அரையாப்புக்கட்டி கரைய.

முருங்கைவேர்ப்பட்டை, புழுங்கலரிசி, உப்பு இவைகள் சமன்கூட்டி யரைத்து கட்டிமேல் 3-நாள் வைத்துக்கட்ட அரையாப்புக்கட்டி கரையும்.

தாதுபுஷ்டிக்கு.

முருங்கைவித்தை பாலில்போட்டுக் காய்ச்சி யுண்டுவந்தால் இந்திரியம் கட்டுப்படும், தாதுபுஷ்டியுண்டாகும்.

ஸ்தனமில்லாதவர்க்கு.

முத்தெருக்கஞ்செவிமூலத்தை பாலிலரைத்துக்கலக்கியுண்டு வந்தால் சிறிதாயுள்ள ஸ்தனங்கள் பெருத்து விம்மும் கரப்பான் பருவு, பிளவைதீரும்.

உமிழ்நீர் சுரப்பிற்கு.

முசுமுசுக்கையை கஷாயம்வைத்து நாலுக்கொன்று யிறக்கி குடிநீராகக் கொடுத்துவந்தால், பித்தவுபரி, உமிநீர்சுரப்பு, இவை தீரும்.

மூ

அரையாப்புக்கு.

மூக்குரட்டைவேரை அரைத்து புன்னைக்காயளவு எடுத்து காலாழாக்கு நல்லெண்ணெயில் கலந்து சாப்பிடவும், மீன், கருவாடு, புளி, புகை, லாகிரி ஆகாது. இப்படி 3-நாள் கொள்ளத் தீரும்.

இரத்தபித்தத்திற்கு.

மூங்கில்வித்தை பாலில்கொள்ள இரத்தபித்தம், கண்ணோய் இவைகள் தீரும்.

எட்டுவகைக்குன்மம், நரைதிரைமாற.

மூக்கரைச்சாரணைவேரை ஆவின்பாலிலரைத்துக் கலந்து உண்டுவந்தால் ஒருமண்டலத்தில் நரைதிரைமாறும், உடலிறுகும், பகலில் நட்சத்திரந் தெரியும், எட்டுவிதக் குன்மம் சாந்தியாகும்.

வ

பிள்ளைகள் வயிற்றுநோய்க்கு.

வசம்பைச்சுட்டு கரியாக்கி முலைப்பாலிலிழைத்து நாவில்தடவினால் பிள்ளைகள் வயிற்றுநோய் போகும்.

புண்களுக்கு

வல்லாரையிலையைப் பிடுங்கிவந்து பச்சையாகவே நன்றாயரைத்து அந்த ஈரத்துடன் புண்களின்மேல் வைத்துக்கட்டினால் 2-3-கட்டில் ஆறிப்போகும், கண்டமாலை, நாள்பட்ட மேகவியாதி உடம்புமுழுதும் புண் இவை தீரும்.

இவைகளுக்கு.

வல்லாரையிலையை வேண்டியமட்டும் பிடுங்கிவந்து காம்புகளைத்தள்ளி இலையைமாத்திரம் குறுக அரிந்து ஒருபாயின்மேல் பரப்பி நிழலிலுலர்த்திவைத்து முற்றும் நன்றாய் உலர்ந்த பிறகு இடித்து துணியில்வடிகட்டி வஸ்திரகாயஞ்செய்துபுதுகலயத்தில் போட்டு மூடிவைத்துக்கொள்ளவேண்டும், 5-கிறெயின் முதல் 8-கிறெயின் வரையிலும் கொஞ்சம் வெந்நீரிலாவது பசும்பாலிலாவது கலந்து கொடுக்கவும், இப்படி கொடுத்தவரும்போது மேற்படி பொடியை புண்களபேரில் தூவிக்கொண்டுவரலாம், இப்படி ஒரேமுறையாய் சிலவாரங்கள் கொடுத்துவந்தால் வியாதிக்காரன் பலதுன்பமும் நீங்கி விசேஷசுகமடைவான். ஒரு சமயம் உடம்பில் சொரியாவது நமையாவது காணுமாகில் மருந்தை நிறுத்தி ஒரு பேதிக்குக்கொடுத்து அதன்பிறகு ஒருவாரம்பொறுத்து மறுபடியும் மருந்துகொடுத்துவரவும், இப்படியே தடர்ந்து கொடுத்தால் குறிப்பான குணத்தைக்காணலாம். இந்தச் சூரணஞ் செய்யும் போது வெயிலில் சூடுகாட்டி உலர்த்தினால் மூலிகையின் சத்து போய்விடும். ஆகையால் நிழலிலுலர்த்தி சூரணிக்கவேண்டும்.

காணுக்கடிசோரி.

வன்னிமரத்தின் சமூலத்தை பாலிலரைத்துக் கலக்கி யுண்டுவந்தால் வாதம், ஜன்னிதோஷம், காணுக்கடிவிஷம், கபம், சொரி இவை தீரும்.

மருந்தீடு தேகவூரலுக்கு.

வல்லாரை சமூலத்தைப் பாலிலரைத்துக் கலக்கி யுண்டுவந்தால், இருமல், ஈளை, மருந்தீடு, கைகால்களிலுண்டாகும் ஊரல் நீங்கும் நெடுநாளுண்டுவந்தால் நரைதிரைமாறும்.

கிரந்தி வண்டுகடிக்கு.

வக்கணுவின் மூலத்தைப் பாலிலரைத்துக் கலக்கி யுண்டுவந்தால் கிரந்தி, வண்டுகடி, சிலவிஷம், கரப்பான் இவைதீரும்.

வயிற்றில்மரித்த பிள்ளைக்கு.

வசம்பும்பெருங்காயமும் முலைப்பால்விட்டரைத்து அடிவயற்றில் தடவினால் வயிற்றில்மரித்தபிள்ளை கீழேவிழும்.

ஆண்மையுண்டாக்கவும் தேகபலத்திற்கும்.

வாராகிமூலமென்ற நிலப்பனங்கிழங்கைச் சூரணித்து காய்ச்சிய பாலில் பிரயோகித்து உண்டுவந்தால் விந்துகட்டும், தாது உண்டாகும், ஆண்மை அதிகரிக்கும், தேகம் இறுகும்

பல்வலிக்கு.

வாராகிமூலமென்ற நிலப்பனங்கிழங்கை குப்பைமேனிச் சாற்றாலரைத்து நல்லெண்ணெயிற்காய்ச்சி பல்நோய்க்கு அந்தப்பாகங்களில் துளிதுளியாய்விட்டால் பல்வலிதீரும், புழுக்கள்சாகும்.

கோசம்பூரிக்க.

வாராகிகிழங்கும் பூமிசர்க்கரைக்கிழங்கும் பூனைக்காலி வித்தும் சமனெடையெடுத்து சூரணித்து பாலில்காய்ச்சி யுண்டுவந்தால் கோசம் பூரித்துவிம்மும், விந்துகட்டும்.

வா

மேனியுண்டாக.

வாலுழுவையரிசியை சூரணித்தாவது பால்விட்டரைத்தாவது பாலில்கலந்து உட்கொண்டுவந்தால் மேனியழகுண்டாகும், சகலநோயுந் தீரும்.

கபம், மூலச்சூட்டிற்கு.

வால்மிளகைச் சூரணித்து திருகடியளவு பாலிற்கலந்துஉண்டுவந்தால் கபம், மூலச்சூடு, வெட்டைநீங்கும்,

போகம் அதிகரிக்கும்.

வாதுமைப்பருப்பை பாலில் உட்கொண்டுவந்தால் போகம் அதிகரிக்கும், விந்துகட்டும்,ஷைதைலத்தினால் கண்படலந்தீரும்.

வி

காசசுவாசத்திற்கு.

விளாமரத்து வேரின்பட்டையை பாலிலரைத்துக் கலக்கியுண்டுவந்தால் காசசுவாசம், அரோசகம், தாகம், பித்தந்தீரும்.

வெ

வெள்ளைப்புண்ணுக்கு.

வெள்ளைக்குங்கிலியத்தைப்பொடித்துவஸ்திரகாயஞ்செய்து திருகடியளவு பாலிற்கலந்து உண்டுவந்தால் வெள்ளை, புண், பிரமேகம், வெட்டை இவை தீரும்.

உதிரநோய் மூலத்திற்கு.

வெள்ளைப்பூண்டை பாலில் வேகவைத்து வெந்தபிறகு அந்தப்பூண்டைத்தின்று பாலைக்குடிக்கவும், வாய்வு உதரரோகம், மூலரோகம், நெஞ்சடைப்பு இவைகள் நிவர்த்தியாகும்.

நீரடைப்புக்கு.

வெள்ளரிவித்தை பாலிலரைத்தாவது வஞ்திரகாயஞ்செய்து கலந்தாவது உட்கொண்டுவந்தால் நீரடைப்பு, கல்லடைப்பு,சதையடைப்பு, நீர்த்தாரையெரிவு இவை நிவர்த்தியாகும்.

கரப்பான் வண்டுகேடிக்கு.

வெட்பாலையை பாலில் அரைத்துக் கலக்கி யுண்டுவந்தால் கரப்பான், வண்டுகடி முதலிய வியாதிகள் நிவர்த்தியாகும்.

ஆறுபுள்ளி வண்டுகேடிக்கு.

வெள்ளெருக்கின்மூலத்தை பாலிலரைத்துக் கலக்கி யுண்டுவந்தால்,சில்லரைவிஷம், பிரமேகம்,கிரந்தி, வண்டுகடி,செய்யான்கடி,ஆறுபுள்ளிவண்டுகடி, மாவட்டைகடி நிவர்த்தியாகும்.

உஷ்ணமேகத்திற்கு.

வெள்ளறுகுசமூலத்தை பாலிலாவது தயிரிலாவது அரைத்துக்கலக்கி உண்டுவந்தால் சொரிசிரங்கு, கிரந்தி, வெட்டை, பிரமேகம், உஷ்ணமேகம், வெள்ளை நிவர்த்தியாகும்.

நீர்கட்டையுடைக்க.

வெள்ளைச்சார்வேளை இலையின்சாறு 9-விராகனெடை பசும்பால் 12-ரூபா எடை இவ்விரண்டுங்கலந்து குடிக்க நீர்க்கட்டை உடனே உடைக்கும்.

வெண்குட்டம்சாந்தி.

வெள்ளைப்பூண்டு, நவாச்சாரம் இரண்டும்சரிஎடைகொண்டு அரைத்துவெண்குட்டத்தின்மேல் தடவிவர வெண்மைமாறும்.

தாதுபுஷ்டிக்கு.

வெங்காயவிரை கால்பலமெடுத்து கோழிமுட்டையின் வெண்கருவில்கலக்கிக் குடித்துவர வீரியம் அதிகரிக்கும், மேற்படி விரையை தேனிற்கலந்து குடித்தால் தாதுபுஷ்டியாகும்.

இதுவுமது.

வெள்ளைவெங்காயத்தை அறுத்து நெய்யில்வறுத்துச் சாப்பிடவும். இப்படி ஒருவேளைக்கு ஒருவெங்காயமாகஇருவேளையும் 20-நாள் சாப்பிடவும்.

புண்ணுக்கும் கடிக்கும்.

வெள்ளாட்டுப்புழுக்கையை சிறுபிள்ளைகள் மூத்திரம்விட்டு அரைத்து ஆராதபுண்களின்மேல் வைத்துக்கட்ட ஆறிவிடும்.

வே

குத்திருமல்ஈளைக்கு.

வேங்கைமூலத்தை பாலிலரைத்துக் கலக்கி யுண்டுவந்தால் குத்திருமல், ஈளை, உளமாந்தை, புண், சீழ்வடிதல், மலக்கட்டு நீங்கும்.

பலவகைக்கிரந்தி.

வேலிப்பருத்திசமூலத்தை பாலிலரைத்துக்கலக்கி யுண்டுவந்தால் பலவகைக்கிரந்தி. மருந்தீடு,கைகால்பிடிப்பு,வாயுவுதீரும்.

தீச்சுட்ட புண்ணுக்கு.

வேப்பங்கொழுந்தை சிதைத்து ஆமணக்கனிலையில் பொதிந்து உமிகாந்தலில்பொதிந்து வெந்தபதத்தில் எடுத்து மேற்படி புண்மேல் வைத்துக்கட்ட தீச்சுட்டபுண் ஆறிவிடும்.

கிருமிகள்விழ.

வேப்பீர்க்கு 10-விராகனெடை கடுக்காய்த்தோல் 4-விராகனெடை பிரண்டைச்சாற்றில் மைபோலரைத்து சுண்டைக்காயளவெடுத்து விளக்கெண்ணெயில் மத்தித்துக்கொடுக்க கிருமிகள் வந்துவிடும்.

மூலிகைமர்மம் முதற்பாகம்.

முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை.

உயிரெழுத்து

மூலிகை மர்மம்

இரண்டாம் பாகம்.

சிரரோகங்களுக்கு.

சிரசுநோய்க்குப் புகை.

1-வது—தும்பயிலை 4, மிளகு 2, லிங்கம் 1-குண்டுமணி யிடை, நவாச்சாரம் 1-குண்டுமணியிடை இவைகளை பஞ்சுபோல் யிடித்து சமயல் பாத்திரங்களை பிடித்தெடுக்கும் கரித்துணியின் கந்தையில் பரப்பி திரிபோல் திரித்து விளக்கில் கொளுத்தி மூக்கில் புகை பிடிக்க தலையிடி, தலைபாரம், மூக்குநீர்பாச்சல், முக நோய், கழுத்துநோய். இவைகள் 2-வேளையில் நிவர்த்தியாகும்.

2-வது—ஜாதிலிங்கம் விராகனிடை 1. வெள்ளெருக்கம் வேரின் பட்டை விராகனிடை 3, கரிமஞ்சள் விராகனிடை 1, இவைகளை மைபோல் பவுடராக்கி கருப்புக் கந்தையில் பரப்பி திரிபோல் சுருட்டி நெருப்பில்காட்டி அந்தப்புகையை காலை மாலை இருவேளையும் ஒவ்வொரு நிமிஷம் நாசியில் புகை பிடித்து வந்தால் மண்டையிடி மண்டைக்குத்து கபாலச்சூலை தலை நோய் விடா தலைநோய் பிடரிவலி பின்னிமுழுப்பு நெத்திச்சூலை முதலிய கழுத்துக்கு மேற்பட்ட வியாதியெல்லாம் தீரும். பத்தியம்—

பெண்படுக்கை, கள்ளு, சாராயம், குளுமைப்பண்டம் மோர் தயிர் இவைகள் மட்டும் ஆகாது. 2-3-நாள் வரையில் காலைமாலை புகைபிடித்தால் போதுமானது.

3 வது—சந்தணம்-விலாமிச்சம்வேர் - பெருங்காயம் இவைகள் சமயிடை யெடுத்து மாதர்கள் முலைப்பாலில் விட்டரைத்து பழயசீலையில் தடவி திரிபோல் திரித்து நல்லெண்ணையில் தோய்

த்து தீபத்தில் கொளுத்தி ஆற்றி அந்தபுகையை நாசியில் பிடிக்க 2-3-வேளையில் மேற்படி வியாதிகள் தீரும் பத்தியமில்லை ஸ்திரீ போகம் மட்டும் ஆகாது.

4-வது—எருக்கன் கட்டை அல்லது வெள்ளெருக்கன் கட்டை எது கிடைத்த போதிலும் கொளுத்தி கரியாக்கி (அந்தகரி) விராகனிடை 1, சித்திரைமூலம்வரின்பட்டை உலர்த்தியது விராகனிடை 1, கருங்குங்கிலியம் விராகனிடை 1, நெல்லிக்காய் கெந்தகம் விராகனிடை $\frac{1}{2}$. இவைகளை எருக்கம்பழுப்புச் சாற்றால் ஒரு ஜாமம் குப்பைமேனிச்சாற்றால் ஒரு ஜாமம் அறைத்து பழயதுணியில் தடவி திரிபோல் திரித்து உலர்த்தி விளக்கில் கொளுத்தி ஆற்றி அந்த புகையை நாசியில் 1-நிமிஷ பிரமாணம் 1-3-4-வேளை பிடிக்க தலைநோய் தலை பாரம் புரடி நோய் நெற்றி நோய் புருவநோய் கன்னம் தாடை முதலிய கண்டத்திற்கு மேற்பட்ட வியாதி எல்லாம் தீரும் பத்தியமில்லை பெண்படுக்கை மட்டும் ஆகாது.

5-வது—மலையாளத்து கெட்டி மிளகு தலைச்சுருளியென்னும் மூலிகையின் வேர் இவ்விரண்டும் சமயிடையெடுத்து முலைப்பாலில் விட்டரைத்து பழய சீலையில் தடவி திரிபோல் திரித்து உலர்த்தி விளக்கில் கொளுத்தி ஆற்றி அந்த புகையை நாசியில் பிடித்தால் 2 3-4-வேளையில் மேற் சொன்ன வியாதியெல்லாம் தீரும். பத்தியம் பழயசாதம் தயிர் முதலிய குளுமை பண்டங்கள் பெண்படுக்கை ஆகாது.

6-வது—வெள்ளெருக்கம் வேர் அகப்பட்டால் (அல்லது சாதாரண யெருக்கம் வேரைக்) கொணர்ந்து உலர்த்தியது விராகனிடை 27-அரிதாரம் விராகனிடை 2 இவைகளை கலுவத்திலிட்டு எலுமிச்சம் பழச்சார் விட்டு மைபோல் அறைத்து பழய துணியில் தடவி திரித்து உலர்த்தி தீயிற்கொளுத்தி நாசியில் புகை பிடிக்க மேற்படி வியாதிகள் தீரும் பத்தியம் முன் மாதிரியேயாம்.

7-வது—கவுதும்பைவேரும் கரிமஞ்சளும் சமயிடையெடுத்து பஞ்சு போல் யிடித்து சீலையில் பரப்பிச் சுருட்டி தீயிற் கொளுத்தி புகை பிடிக்க மேற்படி வியாதிகள் குணமாகும்.

8-வது—செந்தொட்டி யென்னும் மூலிகையின் வேரைக் கொண்டு வந்து பஞ்சிபோல் இடித்து சீலையில் பரப்பிச் சுருட்டி ஒரு முனையில் கொளுத்தி ஆற்றி அந்தப் புகையை 2-3-4-

வேளை பிடித்துவர மேற்படி சிரசு நோய்யாவற்றும் நிவர்த்தி யாகும்.

9-வது களச்சிப்பருப்பு அல்லது கெச்சக்காய்பருப்பு கோழி முட்டைத் தோல் கருஞ்சீரகம் இவைகள் சமயிடை யெடுத்து நொச்சிலிச்சார் விட்டரைத்து சீலையில் தடவி திரிபோல் சுருட்டி உலர்ந்த பின் கொளுத்தி ஆற்றி புகை பிடிக்க மேற் சொன்ன சிரசுநோய் யாவற்றும் நிவர்த்தியாகும்.

10-வது—சுக்கு, திப்பிலி, மிளகு, மஞ்சள் கரிமஞ்சள் சத குப்பை சூடன் இவைகள் யாவும் ஓர் நிரையாய் நிருத்தெடுத்து குண்டுமணி யிலைச்சாற்றால் மைபோல் அறைத்து துணியிற்தடவி திரிபோல் சுருட்டி யுலர்த்தி தீயாற் கொளுத்தி நாசியிற் புகை யிட மேற்படி வியாதிகள் தீரும்.

ஒரு தலைவலிக்கு நசியம்.

1-வது—ஒருதலைப் பூண்டும் முருங்கையிலையும் சரியிடை யெடுத்து பஞ்சிபோல் இடித்து வலதுபக்கம் தலைவலிக்கு இடது நாசியிலும் இடதுபக்கத் தலைவலிக்கு வலதுநாசியிலும் 3-4-துளி விட்டு நசியம்பண்ணத் தலைவலி குணமாகும்.

2-வது—முருங்கைவேரின் பட்டையும் வெள்ளைப் பூண்டும் சமநிடை யெடுத்து பஞ்சுபோல் சிதைத்து வலதுபக்கத் தலை வலிக்கு இடது நாசியிலும் இடதுபக்கத் தலைவலிக்கு வலது நாசியிலும் 2-3-4-துளிகள் விட்டு நசியம்பண்ணத் தலை வலி தீரும்.

3-வது—பூண்டு, வசம்பு, குப்பைமேனிவேர் இவைகளை சம நிடை யெடுத்து முலைப்பால் விட்டு சிதைத்து 2-3-துளி வீதம் நாசியில் நசியம் பண்ணத் தீரும்.

தலைவலிக்கு காதில் பிழிய.

1-வது—வெள்ளைப்பூண்டும் தைவேளைவேரும் சமநிடை யெடுத்து அம்மியில் வைத்து சிதைத்து 4-5-துளி வீதம் காதில் பிழிந்தாலும் தலை வலி தீரும் 2-3-வேளை பிழிய வேணும்.

2-வது—வெற்றிலையும் பெருங்காயமும் சமநிடை யெடுத்து சிதைத்து வெதுப்பி காதில பிழிந்தாலும் தலைவலி தீரும் 2-3-வேளை பிழிய வேணும்.

தலைவலிக்கு நசியம்.

1-வது—மஞ்சள் மரமஞ்சள் சுக்கு திப்பிலி மிளகு கடல் நுரை வெண்காரம் இலுப்பைக்கட்டி வகைக்குவிராக நிடை 1 கால்படி நல்லெண்ணெயில் போட்டுக் காச்சி வடித்து சீசாவில் வைத்துக்கொண்டு நாசியில் நசியமிட்டுவரத் தலைவலிகள் நிவர்த்தியாகும்.

2-வது—இந்துப்பு வாய்விளங்கம் மிளகு செவியம் சுக்கு அரேனுகம் வகைக்கு விராகநிடை 1-இவைகளை கரசலாங்கண்ணிச் சாற்றால மைபோல் அறைத்து அரிக்கால்படி பசும் நெய்யில் போட்டுக் காச்சி வடித்து நாசியில் நசியமிட்டுவர தலைவலிகள் நிவர்த்தியாகும்.

3-வது—ஒரு பலம் சுக்கை யிடித்து 2-படி தண்ணீரில் போட்டு கால்படியாய் வற்றக் காச்சி அதில் கால்படி தேங்காய் நெய் விட்டு குங்குமப்பூ 1-விராகனிடை மேற்படி நெய்யாலரைத்து யாவும் கலந்து நாசியில் நசியமிட்டு வர மேற்படி வியாதிகள் தீரும்.

ஒருத்தலைவலி மண்டையிடி கபாலவாயுவு கபாலவலி இவைகளுக்குத் தைலம்.

1-வது—மலைவேம்பு செவ்வலரி ஆதண்டை கருநொச்சி இவைகளின் சாறு வகைக்குப் படி அரைக்கால் நல்லெண்ணெய் படி (௨) ஒன்றாய்க் கலந்ததில் கருஞ்சீரகம் வால்மிளகு ஒருத்தலை வெள்ளைப்பூண்டு வகைக்குப் பலம் (க) அறைத்துப் போட்டுக் காச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

2-வது—ஆவின் பால் கரிப்பான் சாறு இளநீர் நல்லெண்ணெய் வகைக்குப்படி (க) மிளகு பலம் (உ) சந்தணம் பலம் (க) அதிமதூரம் பலம் (௨) இவைகளை ஆவின்பாலி லரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவரத் தீரும்.

3-வது—பொடுதலைச்சாறு சவிரியிலைச்சாறு ஆவின்பால் நல்லெண்ணெய் வகைக்குப்படி (க) ஒன்றாய்க்கலந்து அதில் மிளகு பலம் (உ) அறைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

4-வது—நல்லெண்ணெய் குப்பைமேனிச் சாறு வகைக்குப் படி (க) ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

5-வது—நாலுபலம் பச்சைக் கொடுவேலிவேர் பட்டையை கற்ருழஞ் சாற்றிலரைத்து ஒருபடி நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

6-வது—ஒருபடி நல்லெண்ணெயில் அதிமதுரம் சுக்கு வசம்பு வகைக்குப் பலம் (உ) சிதைத்துப்போட்டுச் சிவக்கக்காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

7-வது—நல்லெண்ணெய் படி (க) எருக்கம்பழுப்புச்சாறு படி அரைக்கால் சுக்கு இந்துப்பு அதிமதுரம் வசம்பு திப்பிலி திப்பிலி முலம் வெள்ளுள்ளி வகைக்குப் பலம்(க)இடித்துப்போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

8-வது—கரிப்பான்சாறு ஆவின்பால் நல்லெண்ணெய் வகைக்குப் படி(க)சிற்ருமணக்கின்வேர் பெருஞ்சீரகம் பிச்சியிலை விளாவரிசி அதிமதுரம் சுக்கு இந்துப்பு வகைக்குப் பலம் (க) மேற்படி பாலிலரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகி வரத் தீரும்.

9-வது நல்லெண்ணெய் ஆவினெய் வெற்றிலைச்சாறு எலிமிச்சம் பழச்சாறு வகைக்குப்படி (க) கருஞ்சீரகம் படி (கால்) பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒன்றைவிட்டொரு நாள் முழுகிவரத் தீரும்.

10-வது—நல்லெண்ணெய் படி (க)பசுமஞ்சட்சாறு ஆதண்டைச் சாறு ஆவின் தயிர் வடிக்கட்டிய தண்ணீர் வகைக்குப் படி (வ) ஒன்ருய்க் கலந்து அதில் குறுந் தட்டி முள்ளி கண்டை வேளை கிழ்க்காய் நெல்லி இவைகளின் வேர் கோஷ்டம் தேவதாரம் மிளகு சுக்கு வகைக்குக் கழஞ்சு (உ) குக்கில் கழஞ்சு (க) அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

சிரரோகம் - முற்றுப் பெற்றது.

கண் வியாதிகளுக்கு

கண்ணில்வரும் புண்ணிற்கு.

1-வது—சேவலின் தலையில் வளர்ந்திருக்கும் (பூவை) அல்லது கொண்டையை அருத்து அந்த உதிரத்தை கண் புண்க

ளுக்கு தடவினால் உலர்ந்து போகும் காலை மாலை இருவேளையும் மூன்று நாள் தடவவேண்டும்.

2-வது கண்ணில் துடப்பமர்வது ஊவாமுள்ளாவது பட்டாலும் பொத்தினாலும் அதினால் கண்வீங்கினாலும் மேற்படி கோழிக் கொண்டையை அருத்து அந்த இரத்தத்தை காலை மாலை இருவேளையும் இரண்டு நாள் கண்ணில் விட்டு வந்தால் வீக்கம் முதலானதும் தீர்ந்துப்போகும்.

3-வது—துத்தம் துருசு வகைக்கு விராகனிடை 1, இரசம் அரைவிராகனெடை மிளகு கால்விராகனிடை இவைகளை மறுபடியும் கலுவத்திலிட்டு பசும் வெண்ணை கூட்டி களிம்பு போல் அறைத்து கண்ணிற்கு தடவிவந்தால் நிவர்த்தியாகும்.

கண்பூவிற்கு

1-வது—தேள்கொடுக்கிலையும் நந்தியாவட்டைப் பூவும் சமநிடை யெடுத்து நன்றாய் கசைக்கிப் பிழிந்து அந்தரசத்தை கண்ணில் விட்டு வந்தால் 4-5-வேளையில் நிவர்த்தியாகும்.

2-வது—சிறுகளாவேர், கடுக்காய், இந்துப்பு பழம்புளி இவைகளை சமநிடை யெடுத்து பஞ்சுபோல் இடித்து மெல்லிய சீலையில் முடிந்து முலைப்பாலில் ஊரவைத்து நாளொன்றுக்கு மூன்றுவிசை கண்ணில் பிழிந்து வந்தால் கண்பூ மாரிவிடும் இப்படி மூன்று நாளைக்கு அன்றாடம் வெவ்வேறு முலைப்பாலில் ஊரவைத்து பிழியவேணும்.

3-வது—வரப்பூலாம்பூ அந்தமல்லிகைப்பூ நந்தியாவட்டைபூ ஓரிலைத்தாமரை இவைகளின் பூவும் வேரும் துத்தம் துருசு ஆமையோடு வெந்தலை மண்டையோடு வகைக்கு இரண்டுவிராகநிடை யெடுத்து பனைமட்டைச் சாற்றால் மைபோல் அறைத்து கயருபோல் நிகள வசமாய் உருட்டி காயவைத்து உலர்ந்தபின் மோற்படி சாற்றினால் இழைத்து கண்ணில் தீட்டிவந்தால் கண்பூ குணமாகும்.

4-வது—முசுமுசுக்கை யிலையும். சீரகமும் சரியிடையா யெடுத்து சிதைத்து துணியில் முடிந்து முலைப்பாலில் தோய்த்து கண்ணில் பிழிந்துவந்தால் கண்பூமாரிவிடும் ஒருநாளைக்குமூன்று தரம் பிழியவேணும்.

5-வது—உத்தாமணிப்பூ நெருஞ்சிப்பூ முருங்கைப்பூ வெள்ளைச்சாரணைக் கொழுந்து நாய்வேளைக் கொழுந்து சீரகம் இவை

கள் சரிபங்காயெடுத்து சிதைத்து முடிந்து முலைப்பாலில ஊர வைத்து கண்ணில் பிழிந்து வந்தால் 2-3-தினத்தில் குணமாகும் ஒருநாளைக்கு மூன்றுதடவை பிழியவேணும்.

கண்ணில் புழுவெடுப்பதற்கும் புருவமயிர் உதிர்வதற்கும் கண் புண்ணிற்கும்.

1-வது—விரால்மீனை குடல் சினை சிலம்பு முதலியவை நீக்கி துண்டு துண்டாயரிந்து காயவைத்து பொடித்துக்கொண்டு கண்ணிமை (அல்லது) புருவத்தின் மீது பனைவெல்லத்தைப்பூசி மெல்லியமல் துணியில் வெண்ணெயைத் தடவி கண்ணின் மேல் மூடி அம்மனிதனை மல்லாந்து படுத்திருக்கச்செய்து அந்த வெண்ணெ தடவிய துணியின்மேல் முன் பொடி செய்திருக்கும் வஸ்துவைத்தூவி ஓரிரவு முழுதும் அப்படியே படுத்திருந்து காலையில் அந்த துணியை யெடுத்துப்பார்த்தால் புழுக்களெல்லாம் அந்த துணியில் வந்து ஒட்டியிருக்கும் அந்த துணியை தண்ணீரில் போட்டால் புழுக்களெல்லாம் தண்ணீரில் மிதக்கும் நன்ருய்ப்பார்க்கலாம் இந்தப்படி மூன்றுநாள் செய்து அப்பால் சுவற்றில் ஒட்டியிருக்கும் பழய யெலும்பு அல்லது சுடலை மண்ணில் பதிந்து புதைந்துக்கிடக்கும் பழய யெலும்பு கொண்டுவந்து முலைப்பாலிலாவது தேனிலாவது இழைத்து புருவத்தில் போட்டு வந்தால் புழுவெட்டு மாறும் புண் ஆறி மயிர் முளைக்கும்.

2-வது—துத்தம், துருசு, வெள்ளை பாஷாணம் இவைகளை சமனிடை யெடுத்து பொன்னுங்கணிச்சார் சிறுகீரைச்சார் இவைகளில் ஒருநாளரைத்து வில்லை தட்டிக் காயவைத்து மேற்படி மூலிகையின் வேர்களை அறைத்து விளாங்காய் பிரமாணம் யெடுத்து அந்த மூத்தைக்குள் மேற்படி பில்லையை வைத்து மூடி புளியம்பரணியை முழஉயரங் கொட்டி அதன் மத்தியில் மேற்படி முத்தையைவைத்து புடம் போட்டு ஆரியபின் யெடுத்து பசும் வெண்ணை கூட்டி களிம்புபோல் அறைத்து புருவத்தில் தீட்டி வந்தால் புழுக்கள் செத்து புண்ணாறும் மயிர் முளைக்கும்.

3-வது—ஒரு வெள்ளைச்சீலையில் வெள்ளெருக்கம் பாலையூட்டி உலர்த்தி இப்படி இரண்டொருவிசை எருக்கம் பால் ஊட்டி உலர்த்தி திரியாகத் திரித்துக் கலசத்திலிட்டு பசு வெண்ணை போட்டு தீபமேற்றி ஊமத்தஞ்சாறு பூசிய அகண்ட சட்டியைக் கவிழ்த்து மூடி மை பற்றியபின் எடுத்து மேற்படி மை

யை உதிர்த்து விளக்கெண்ணெயிற் குழைத்து கண்ணின் புருவத்தில் தீட்டி வந்தால் மயிர் முளைக்கும்.

4-வது—மூத்தெருக்கஞ் செவிமூலத்தை முலைப்பாலினுரைத்துக் கண் புருவத்தில் தீட்டிவந்தால் புழுவெட்டு மாறி மயிர் முளைக்கும்

ஆணிப்பூவுக்கு.

1-வது—தேற்றங்கொட்டை, துத்தம், மனோசிலை, பலகாரை, சேவல் நெஞ்செலும்பு, மிளகு, தலையோடு, திப்பிலி இவைகள் வகைக்கு ஒரு விராகனிடை எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றா லரைத்துக் கயருபோல் திரட்டி நிழலில் உலர்த்திச் சாடியினால் உரைத்துக் கண்ணில் போட்டு வந்தால் ஆணிப்பூ மாறும்.

2-வது—கடல்நுரை, துருசு, மிளகு, துத்தம்,சீரகம், மனோசீலை, அதிமதுரம், அரிதாரம், திப்பிலி, கடுக்காய்,செம்புப்பொடி இவைகள் சமனிடை யெடுத்து எலுமிச்சம்பழச்சாற்றால் அறைத்துக் கயருபோல் திரட்டி முலைப்பாலில் உரைத்துக் கண்ணில் போட்டுவந்தால் ஆணிபபூ மாறும்.

3-வது—ஆமையோடு-நத்தையோடு - முதலைப்பல்லு - பன்றிக் கொம்பு-சேவல் நெஞ்செலும்பு-புலிநகம்-திப்பிலி—வெள்ளிப் பொடி இவைகள் சமனிடைக் கொண்டு முலைப்பால் விட்டரைத்துக் கயருபோல் திரித்து தேனில் உரைத்துக் கண்ணில் தீட்டி வந்தால் ஆணிப்பூ வற்றி முளை மாறிவிடும்.

வெள்ளழுத்திற்கு வெண்ணெய்.

1-வது ஒரெலுமிச்சம்பழத்தைக் கபிற்றிற்கோர்த்து அதின் மேல் நூற்றெட்டு கிராம்பை ஊன்றி விளாங்காய்ப் பிரமாணம் டசுவின் வெண்ணெக்குட் பொதிந்துமூடி அதைப் புது சட்டியில் அடியிற் படாமல் தொங்கவிட்டு அன்றூடம் வெவ்வேறே சுத்த ஜலம் வார்த்துவந்து நாற்பதாம் நாளெடுத்து லவங்கத்தையும் பழத்தையும் நீக்கிச் செப்புச்சிமிளி லடைத்துக் கொண்டு சத்திச் சாரணைச் சாற்றில் கொஞ்சம் வெண்ணெயை மத்தித்து நாற்பது நாள் வரை போட்டுவர வெள்ளெழுத்தும் மற்ற கண் ரோகங்களும் குணமாகும்.

2-வது—மேற்படி வெண்ணெ பலம்-1, பீதரோகணி பலம் (கால்) இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றால் ஒருநாளரைத்து செப்புச் சிமிளிலடைத்துக்கொண்டு விழியிற் போட்டுவர வெள்ளெழுத்து முதலாகிய கண்ரோகங்கள் நிவர்த்தியாகும்

3 வது—மேற்படி வெண்ணை பலம்-1, மிளகு விராகனிடை அரை, இவைகளைக் கல்வத்திலிட்டு மைபோலரைத்துக் கொண்டு நேத்திரத்தில் தீட்டிவர வெள்ளெழுத்து முதலான கண்ரோகங்கள் நிவர்த்தியாகும்.

4 வது—புரசம்பாலை 4-5-நாள் நேத்திரத்திற் போட்டாலும், அல்லது தும்பை-நந்தியாவட்டம்-காரெள்-புளி இவைகளின் பூவும், திப்பிலியும் தேன்விட்டு மைபோலரைத்துக்கொண்டு நேத்திரத்திற்போட்டு வந்தாலும் தீரும்.

5 வது—ஓரிலைத்தாமரைவேர்-சங்கு-தலையோடு-துத்தம்-துருசு-வெள்ளைக்கற்பொடி இவைகளை யோர்நிறையாய் எலுமிச்சம்பழச் சாற்றிலும் முருக்கையிலைச் சாற்றிலும் வகைக்கொருநாளரைத்து கயிறுபோல் செய்து முலைப்பாலிலுரைத்து கண்ணில் நாற்பதுநாள் போட்டுவர நிவர்த்தியாகும்.

மேற் காட்டிய பிரயோகங்களிலொன்றை உபயோகப்படுத்தி இதனடியில் வருகிற தைலத்தையும் முழுகிவரக் கண்ணைச் சார்ந்த பிணிகள் நிவர்த்தியாகும்.

வெள்ளெழுத்து முதலான கண்ரோகங்களுக்கும் உடம்புவலிக்குந் தைலம்.

பொன்னுங்கணிரசம்-பொற்றலைக் கரிப்பான்ரசம்-நெல்லிக்காய்ரசம்-நல்லெண்ணை வகைக்கு படி-1 முசுமுசுக்கை-நெருஞ்சி-கண்டங்கத்திரிக்காய்-முள்ளிகத்திரிக்காய்-தென்னம்பூ-வில்வம்-வாதநாராயணயிலை இவைகளின்சாறு, இளநீர் வகைக்கு படி $\frac{1}{8}$-இவைகளை ஒன்றாய்க்கலந்ததில் நன்னாரிவேர் பலம்-15, தாமரைப்பூ-மிளகு-அதிமதுரம்-சந்தனம்-அன்னுசிமொக்கு வகைக்குப் பலம் $\frac{1}{4}$, சீரகம் கொத்தமல்லி வகைக்குப் பலம்-$\frac{1}{2}$, கஸ்தூரிமஞ்சள்-வெட்டிவேர்-சோம்பு-கல்லுப்பு-விலாமிச்சம்வேர்-மல்லிகை புட்பம் வகைக்கு பலம்-$\frac{1}{8}$, இவைகளை எட்டுப்படி ஆவின்பாலில் அரைத்துப்போட்டுப் பதமாய்க் காச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

மாலைக்கண் வெள்ளெழுத்து புகைச்சலுக்கு.

மிளகு-திப்பிலி வகைக்குக் கழஞ்சு 5-கடுக்காய்விரை கழஞ்சு-3 இவைகளைத் தனித்தனி மூன்று வெள்ளாட்டுப் பித்துக்குள் அடைத்துப் புகைபடுகிறவிடத்தில் ஒருமண்டலங்கட்டிவைத்திருந்தெடுத்துப் புளியம்பூச்சாற்றிலும் பனைமட்டைச் சாற்றிலும் அரைத்துக் கயிறுசெய்து முலைப்பாலி லுரைத்துக் கண்ணில் தீட்டிவரமாறும்.

2 வது—சுழல்வண்டு - சுட்டசாம்பல்-வெள்ளுள்ளி - மிளகு இவைகளை ஓர்நிறையாய்க் கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறும் நீர்முள்ளிச் சாறும் நல்லெண்ணெயும்விட்டுக் களிம்புபோலரைத்து அந்திசந்தி மூன்றுநாள் கண்ணில் தீட்டி விளக்கெண்ணையை தலைக்குத்தேய்த்து நாலைந்துநாள் முழுகினல் அருந்ததி கண்ணிற்றோன்றும்.

3 வது—பொன்னங்கணி—சிறுகீரை - சீந்திற்கொடி- எலுமிச்சம்பழம் நாரத்தம்பழம் இவைகளின்சாறு, நல்லெண்ணெ வகைக்குபடி -1 முத்தக்காசு—கோஷ்டம்—அதிமதுரம்-ஏலம்-சண்பகப்பூ-சிறுநாகப்பூ-லவங்கம் வகைக்குப் பலம் (கால்) யாவுமரைத்துப்போட்டுக் காச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

கண்வலி சிகப்பு கடுப்பு தினவு நீர்வடிதலுக்கு.

தான்றிக்காய்-மாசிக்காய் கடுக்காய்-காசுகட்டி வகைக்கு விராகனிடை-1. அபின் பொரித்த சீனிக்காரம் வகைக்கு விராகனிடை (கால்) கரண்டியிற் பொடித்துப்போட்டு அதில் வரட்பூலாயிலை-கருவேலிலை வகைக்கு ஒருபடிவீதம் இடித்துப்பிட்டவித்துச் சாறுபிழிந்து கொதிக்கவைத்து செப்புத்தடியால் மைபோலரைத்து விழியிற் புறவளயமிட்டுப் புளியிலையை வேகவைத்த தண்ணீரால் கண்ணைக்கழுவி 2-3-வீசை போடத்தீரும்.

2 வது—புளியைக்கரைத்து நேத்திரத்தில் ஒருநாளைக்கு 4-5-விசைபிழிந்து, துளசி-புண்ணாக்கிலை-புளியிலை இவைகளையோர் நிறையாயிடித்துச் சீலையிற்கட்டி விழியில் ஒத்தணஞ்செய்து ஆவாரம் பூவையரைத்துச் சிரசிற்றளமிடத்தீரும்.

3 வது—இருப்புத்தகட்டை நெருப்பிற் சிவக்கக்காச்சியெடுத்து அதில் எலுமிச்சம்பழச் சாற்றையாவது, புளியிலைச்சாற்றையாவது விட்டுக் கரிபோளம் - கடுக்காய்தோலும் சீனிகாரமும் பொடித்துப்போட்டு இருப்புக்குழவியாற் களிம்புபோல் நன்றாயரைத்துப் புறவளயமிட்டுக் கருவேலிலை-புளிவேரிலை-தாமரையிலை -பொன்னங்கணி சிறுகீரை—பஞ்சதிரவியம்-கமபிப்பிசின்-மிளகு-கஸ்தூரி மஞ்சள் இவைகளை யோர்நிறையாய்க் காடிவிட்டரைத்தக் குழம்பாய்க்காச்சி சிரசில் தளமிடத்தீரும்.

4 வது—கொடுப்பை -ஓரிலித்தாமரை வெள்ளைக்காக்கணன் சிறுகீரை இவைகளின் வேர்களை ஓர் நிறையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் மயனமாய் அரைத்து உலர்த்திப்பின்பு வெண்ணெயைக் கூட்டிக் களிம்புபோலரைத்து நேத்திரத்தில் தீட்டிவரத்தீரும்.

5 வது—சங்கு-புளி-வெள்ளைச்சாரணை பெண்ணுங்கணி- சிறு கீரை-கரிப்பான் இவைகளின் இலைச்சாற்றை ஓர் நிறையாய்க் கலந்து அதிற்சீலையை 6-7-வீசை நனைத்துலர்த்தித் திரித்து நண்டுகொழுப்பிற்றுவைத்துத் தீயிற்கொளுத்திச் சாம்பலாக்கி அதில்வெண்ணையைக் கூட்டிக்களிம்பு போலரைத்து நேத்திரத் தில் தீட்டிவந்தாலும் ஷை வியாதி தீரும்.

கண்வீக்கம் எரிவு தினவு படலம் சிவப்பு கடுப்பு நீர்வடிதலுக்கும் புறவளையம்.

கடுக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, அதிமதுரம், தேற்றான் விரை, கருவேலியிலை, புளியங்கொழுந்து, இவைகளை யோர் நிறை யாய்ச் சற்றாழை மடலுக்குள் பொதிந்து உமிக்காந்தலிற் புதை த்து வெந்தபதத்தில் மருந்தை எடுத்து முலைப்பால் விட்டுக் களிம்புபோலரைத்துக்கொண்டு நேத்திரத்திற் புறவளைய மிட்டும், காயம், வாட்பூலா, புளி இவைகளிலைச்சாறுவகைக்குப்படி (கால்) ஒன்றாய்க்கலந்து, அதில் நெல்லி முள்ளி சந்தனம் தேற்றான் விரை-ஆமையோடு இவைகளை ஆவின்பாலில் மைபோலரைத்துப் போட்டுக் குழம்பாய்க்காச்சி சிரசிற் காலையிற்றளமிட்டு மாலையில் சுடுதண்ணீரில் ஸ்நானஞ்செய்துவர நீங்கும்.

மேற்படிவியாதிகட்கு ஒத்தணம்.

கையாந்திலை-கருவேலிலை-கடுக்காய்-கற்றாழைச்சோறு இவை களை ஒன்றாய்ச்சிதைத்தாவது, அல்லது, மருதம்பட்டை-சீரகம்-ம்துரம் இவைகளைச்சமமாய் சிதைத்தாவது துணியில் முடிந்து அதைக் காண்டியில் நெய்விட்டு வெதுப்பி அதில் ஒத்தணஞ் செய்தாலும் தீரும்.

2 வது— ஒருபடி ஆவின்பாலில் ஒருபடி புளியங்கொழுந் தும் நாலு கடுக்காயும் தட்டிப்போட்டு வேகவைத்து விழியில் ஆவிபிடித்து அதை சீலையில்முடிந்து ஒத்தணஞ் செய்துவரில் மிகுந்த நன்மையுண்டாம்.

3 வது—ஆவின்பாலில் உத்தாமணிவேரை அரைத்து மேற்படி நெய்யிற்போட்டு வேகவைத்து வடித்து இமையைச் சுற்றிப்பூசி உலர்ந்தபின்பு சந்தனத்தைப் புறவளயமிட்டு இர வில் மேற்படி நெய்யைப்பஞ்சிலூட்டி, இமையின்மேற் போட்டு நித்திரை செய்யவும்.

மேற்படி வியாதிகட்குத் தாரை புரவளையம்.

சிற்றாமணக்கின்வேர் கடுக்காய்த்தோல் வகைக்குகழஞ்சு-4 இடித்து இரண்டுபடி தண்ணியிற்போட்டு அரைக்காற்படி

யாய் வற்றவைத்து வடிகட்டி நேத்திரத்தில் தாரைவிட்டாலும் தீரும்.

முசுமுசுக்கையிலை ஒருபிடி அதிமதுரம் மாமஞ்சள் வகைக்குக்கழஞ்சு 1, இவைகளைச் சிதைத்து ஆவின்பாலிலரைத்து மேற்படி நெய்யிற்போட்டு வேகவைத்து வடிகட்டி நேத்திரத்தில் தாரையிடத் தீரும்.

கண்ரோகங்களுக்கு மை.

1 வது—பீதரோகணிமனோ சிலைவகைக்கொரு கழஞ்சுவீதம் ஆவிநெய்யிலும் பாலிலு மரைத்து புதுசட்டித் தூறிலப்பிவிளக்கில் நெய்விட்டு தீபமேற்றி மைபற்றவைத்து அதற்கு நிகர் துணி சுட்டக் கரி சேர்த்து வெண்ணெயில் மத்தித்து நேத்திரத்தில் தீட்ட சகல கண்ரோகங்களும் போகும்.

2 வது—வேம்பு - தேட்கொடுக்கு - புளி கையாந்தகரை-வெட்பூலா-வெள்ளைச்சாரணை-முருக்கு-சங்கு இவைகளின்சாறுகளை ஓரளவாய்க்கலந்து அதில் துணியை 6-7 வீசை நனைத்து உலர்த்திதிரித்து விளக்கிட்டு நல்லெண்ணெய்விட்டு தீபமேற்றி புதுசட்டித்தூறில் மேற்படி சாறுகளைப்பூசி மைபற்றவைத்து அதற்கு நிகர் துத்தம் அஞ்சனக்கல் புளியமலர் கடுக்காயரிசி அதிமதுரம் இந்துப்பு இருப்புப்பொடியுங் கூட்டி ஆவின்வெண்ணெயாலரைத்துக்கொண்டு விழியில் தீட்டிவர அழிகண் பில்லம் கருப்பு நீர்வடிதல் படலம் நிவர்த்தியாகும்.

3 வது—வேம்புயிலை - கையாந்தகரையிலை-விளாயிலை தேட்கொடுக்கு யிலை-உப்பிலை-சங்குயிலை-இவைகளி னிலைச்சாறு ஓரளவாய்க் கலந்துமுன்போற் றுணியில் ஊற்றிமைபற்றவைத்து அதற்குநிகர் துத்தம் துருசு வெங்கலப்பொடி திப்பிலி இந்துப்பு கூட்டி எலுமிச்சம்பழச்சாற்றி லரைத்துலர்த்தி பின்பு ஆவின்வெண்ணெய் கூட்டி அரைத்துக்கொண்டு நேத்திரத்தில் தீட்டிவர விழி சிகப்பு படலம் எழுச்சி கண்பிரிதல் புழுவெட்டு புகைச்சல் இமைத்ததடிப்பு நீர் முட்டல் தீரும்.

4 வது—சிறுகீரை - ஆவாரை - பொன்னாங்கணி - துளசி-வேலிப்பருத்தி-தூதுளை - கரிப்பான்-புளியாரை-மூவிலை-விஷ்ணுகாந்தி-மின்னி இவைகளின் சாறுகளை புதுசட்டிதூறில் பத்துதபா உலரஉலரப்பூசி மேற்படி சாறுகளில் வஸ்திரத்தை நனைத்துலர்த்தித் திரித்து நெய்விட்டு தீபமேற்றி சட்டிதூறில் மை பற்றவைத்து துத்தம் துருசு குன்றிமணிப் பிரமாணங்கூட்டி ஆவின்வெண்ணெயாலரைத்துக்கொண்டு விழியில் தீட்டிவர சகலமான கண்ரோகங்களும் நிவர்த்தியாகும்.

5. வது—பொன்னுங்கணி, புளி, சிறுகீரை, கீழ்க்காய் நெல்லி, கரிப்பான், வேம்பு, பொடுதலை, எருக்கிலைப்பழுப்பு, குப்பைமேனி, நாயுருவி, ஊமத்து, வேலிப்பருத்தி, முருங்கை, துளசி, அகத்தி, இவைகளின் சாறுகளை முன்போற் சட்டித் தூரிலும் துணியிலும் ஊட்டி திரிதிரித்து நல்லெண்ணெய்விட்டுத் தீபமேற்றி மைபற்றவைத்து துத்தம், துருசு, படிகாரம் வகைக்கு விராகனிடை-1, கூட்டி பொன்முசுட்டை, சென்னுயுருவி எலுமிச்சம்பழம் இவைகளின் சாற்றி லறைத்துலர்த்தி வெண்ணெய்சேர்த்து அறைத்துக்கொண்டு கண்ணிலிட்டுவரச் சகலமான கண்ரோகங்களும் நிவர்த்தியாகும்.

கண்ரோகங்களுக்கு விழியில்தீட்ட நெய்

ஆவிநெய், பால் வகைக்குப்படி 1, ஒன்றாய்க்கலந்து அதில் மூடக்கொத்தான், சந்தனம், பூமிசக்கரைக்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, அதிமதுரம், அலரிவேர், தாமரைக்கிழங்கு வகைக்கொரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அறைத்துப்போட்டு பதமாயக் காய்ச்சி வடித்து விழியிற்றீட்டிவர நீலகாசம், கண்வலி, வானப்படலம் தீரும்.

2 வது—நந்தியாவட்டப்பூ, முருங்கைப்பூ பனைமட்டை, பொன்னுங்கணி, சிறுகீரை, பச்சைமஞ்சள் எலுமிச்சம்பழம் இவைகளின் சாறு, கிளிஞ்சல்நீர் வகைக்குப்படி வ, ஆவிநெய் படி அரை, இவைகளை ஒன்றாய்க்கலந்து அதில் அதிமதுரம், கோஷ்டம், எலம் லவங்கம், சண்பகப்பூ வகைக்குக் கழஞ்சு 2, அறைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து மூன்று துளிவீதம் விழியிற்கட்டிவர பூ, இரத்தப்படுவன், சதைவளர்த்தி நிவர்த்தியாகும்.

3 வது—ஆவிநெய்யில் பனைமட்டை, மருட்கிழங்கு இவைகளின்சாறு கிளிஞ்சில்நீர் வகைக்குப் படி 1, ஒன்றாய்க்கலந்து அதிமதுரம் பலம் 1, ஆவின்பால்விட் டறைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து விழியிற் கட்டிவர கண் வேக்காடு, ரிணம், சுக்கிரன், கண்ணோயின் பேரிற் கண்டவெள்ளை வாங்கும்.

4 வது—ஆவிநெய், முலைப்பால் வகைக்குப் படி அரைக்கால், கலந்து அதில் அதிமதுரம், பொன்னுங்கணிவேர் சிறுகீரைவேர் வகைக்குக் கழஞ்சு 1, அறைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து விழியிலிட்டுவரக் கண்ணெரிவுமாறி கண் குளிரும்.

5 வது—நற்சீரகம், வேழம், ஏலம், அதிமதுரம், திப்பிலி, அத்திப்பிஞ்சு, மூத்து, பருத்திப்பிஞ்சு, இவைகளை ஓர் நிறையாயறைத்து ஆவிநெய்யிற் போட்டுக்காய்ச்சி மூன்றுநாள் விழியிற்

கட்டி அப்பால் நெல்லிப்பருப்பை முலைப்பாலிலறைத்து புறவளை யமிட கண்விதனம்மாறும்.

6 வது—ஆவின்பால், நெய், முருங்கைப்பூச்சாறு, உத்தம தாளிச்சாறு வகைக்குப் படி ௨, மஞ்சள் அதிமதுரம், சந்தனம், சீரகம், ஏலம், இவைகளை அறைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து விழியிற் கட்டிவர சுக்கிரன் போகும்.

7 வது---முடக்கொத்தான் சமூலமும், ஆவின்பாலும் விட்டிடித்து பிழிந்த சாறு படி 1, நெய் படி ௨, ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதுரம் பலம் 1, அறைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து கண்ணில் கட்டிவர படலகாசம், திமிர், அத்தி கோபம் நிவர்த்தியாகும்.

8 வது—இளநீர், ஆவின்நெய், வகைக்குப்படி கால், ஒன்றாய்க்கலந்து அதில் நன்னாரி, இருவேலி, நெய்தற்கிழங்கு, சந்தனம் மஞ்சிட்டு வகைக்கு விராகன் 1, அறைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து விழியிற் கட்டிவரக் கண்ணின் புண், சீழ்வடிதல் மாறும்.

கண்ரோகமுடையவர்களுக்கு காலிற்றேய்க்கத்தைலம்

சின்னிச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப் படி 1, ஒன்றாய்க்கலந்து அதில் நாபிக்கிழங்கு விராகனிடை 1 சிதைத்துப் போட்டு காலிற்றேய்த்துவர நன்மையுண்டாகும்.

விழியில் வியாதி வராதிருப்பதற்கும் குளிர்ச்சிக்கும் வெண்ணை

சிற்றாமணக்கின் வேரை அறைத்து ஆவின்பாலிற் கலக்கிக் காய்ச்சி புரைகுத்தி கடைந்து வெண்ணையெடுத்து விழியில் தீட்டிவர நன்மையாகும்.

விழிநோய்கட்கு மருந்தரைக்கும் பாத்திரம்

வெங்கலக்கலவமாயும் செப்புக்குழவியுமா யிருக்கவேண்டும் அதிலரைத்தால் உத்தமம்.

1 வது—மேற்காட்டிய விழிரோகமருந்துகள் அனைத்தும் இந்தக் கல்வத்திலரைக்கவேணுமே யல்லாது மற்றொன்றிலு மரைக்கலாகாது.

3 வது—காலையிற் போடவேண்டிய மருந்தை இரவிலும், மாலையில் போடவேண்டிய மருந்தை காலையிலும் அதற்குரிய அனுபானங்களில் வெள்ளிக்கிண்ணத்தி லுரைத்து விழியில் தீட்டவும்.

விழியில் மருந்திடத் தகுந்த காலம்

மேற்படி ரோகஸ்தர்கள் நெடுந்தூரம் வெய்யிலில் நடந்துலுத்திருக்கும்போதும் லாகிரிவஸ்துக்களை புசித்திருக்கும்போதும் தைலஞ் செய்துக்கொண்டதினத்திலும் கண்வலியுள்ள தினத்திலும் விழியில் மருந்திடக்கூடாது

விழியில் மருந்த்துடபின் நடக்கவேண்டிய கிரமம்

காற்று வெயிலில் - லாகிரிவஸ்தக்கள் - குளிர்ந்த தண்ணீர் - கைப்பு-புளிப்புகரப்பன் பதார்த்தம் நீக்கி, வெந்நீர் ஆவின்பால்-நெய்-துவரை - பாசிப்பயறு- சிறுகீரை - பொன்னுங்கணி-முருங்கைக்கீரை - வாழைக்கச்சல் இவைகளை அனுசரித்துவந்தால் நண்மையுண்டாகும்.

நாசிரோகங்களுக்கு

நாசியிலுண்டாகும் பீனசரோகங்களானது வாத பீனசம் பித்தபீனசம் சிலேத்ம பீனசம் நீர்ப்பீனசம் இரத்தபீனசம்சீழ் பீனசம் சிராய்ப்பீனசம் மூலபீனசம் என யெண்வகைப்படும்.

சிருய்ப்பீனசகுணம்

நாசிவழி சிருய்போலும் ஈருள்ளிக்கூடுபோலும் சீ திரண்டுவிழும், பிணம்போல்நாறும். மணந்தெரியாது, விடாமற்றலை வலிக்கும்.

ஷை வியாதிக்கு தைலமும் புகையும்

கையாந்தகரை ஆதண்டை குறட்டைப்பழம் வெற்றிலை நெல்லிக்காய் எலுமிச்சம்பழம் நாரத்தம்பழம் முசுமுசுக்கை முடக்கொத்தான் இவைகளின் சாறுவகைக்குப்படி (வ) நல்லெண்ணெய் படி (க) ஒன்ருய்க்கலந்து அதில் மிளகு பலம் (வ) அதிமதுரம் கோஷ்டம் சண்பகப்பூ நற்சீரகம் வாய்விளங்கம் கொத்தமல்லி வால்மிளகு கஸ்தூரிமஞ்சள் ஏலம் லவங்கம் தாளிசபத்திரி லவங்கப்பட்டை வகைக்கு வராகனிடை (ந) கோரோசனை வராகனெடை (ங) இவைகளைப் பொடித்துப் போட்டுக் காய்ச்சிப்பதமாய்வடித்து மூன்றுநாளைக் கொருதரம் முழுகியும், மிளகைக்கொட்டைப்பாக்குப் பிரமாணம் வெற்றிலைச்சாற்றிலரைத்து வெள்ளைத்துணியில் தடவி அப்பால் குறட்டைப்பழச் சாற்றில் அ-தரம் நனைத்து நிழலிலுர்த்தித்திரித்து நாசியிற் புகை பிடித்தும்வரத் தீரும்.

நாரத்தம்பழம் எலுமிச்சம்பழம் புளியாரை தண்ணீர்விட்டான்கிழங்கு அருகுவேர் வல்லாரை கரிப்பாலை கரிப்பான் பொன்னாங்கண்ணி இவைகளின் சாறு வகைக்கு படி (வ) ஆவின்பால் சிற்றாமணக் கெண்ணெ வகைக்கு படி (உ) சந்தனம் சதகுப்பை மஞ்சிட்டி ஆனைத்திப்பிலி லவங்கம் லவங்கப் பத்திரி தாளிசபத்திரி லவங்கப்பட்டை சண்பகப்பூ வகைக்குப் பலம் (க) சீரகம் கிராம்பு அதிமதுரம் வகைக்குப் பலம் (₰) நெல்லிமுள்ளி பலம் (ச) செங்கழுநீர்க்கிழங்கு பலம் (உ) இவைகளையாவின் பாலிலரைத்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து மூன்றுநாளைக் கொருதடவை தலையிற்றேய்த்து உசிலிலை பாசிப்பயறு மதுக்காரை வேர்ப்பட்டை இவைகளின் அரைப் பிட்டு ஸ்நானஞ் செய்து சாதிலிங்கம் பரங்கிப்பட்டை மிளகு கருஞ்சீரகம் துருசு இவைகளை யோர் நிறையாய்ப்பொடித்துக் காகிதத்திற் சுருட்டித் தீயிற்கொளுத்தி நாசியிற் புகைபிடித்து வரத்தீரும்.

ஷை வியாதிக்கு தைலம்.

கரிசாலை அவுரி கஞ்சா பொன்னாங்கணி வெற்றிலை முசுமுசுக்கை ஆயிற்பட்டை எலுமிச்சம்பழம் குறட்டைப்பழம் அத்திப்பட்டை இவைகளின் சாறு ஆவின்பால் வகைக்குப்படி (க) ஆதண்டைச்சாறு பிச்சியிலைச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப் படி (உ) இவைகளை ஒன்றாய்க்கலந்ததில் கருஞ்சீரகம் கடுகு ரோகிணி கஸ்தூரிமஞ்சள் தான்றிக்காய் அதிவிடயம் அரத்தை சுக்குகோஷ்டம் சதகுப்பை சூரோசாணியோமம் சிறுநாகப்பூ தாளிசப்பத்திரி திப்பிலிமூலம் சித்திரமூலம் பெருங்காயம்நெல்விமுள்ளி பிச்சிவேர்ப்பட்டை மிளகாணைப்பட்டை அழிஞ்சிப் பட்டை கீழ்க்காய் நெல்லிவேர் வகைக்குக்கழஞ்சு (ந) இவைகளை யெலுமிச்சம் பழக்சாற்றிலரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துச் சூட்டுடன் அதிலொருபிடி முருங்கைப் பூவைப் போட்டுவைத்துக்கொண்டு தலைமுழுகிவரத் தீரும்.

2.வது—சருகெண்ணெய் படி (க) குறட்டைப் பழம்வெற்றிலை ஆதண்டை உசிலம்பட்டை இவைகளின்சாறு வகைக்குப் படி (வ) ஒன்றாய்க் கலந்ததில் மிளகு வாள்மிளகு சீரகம் சண்பகப்பூ வகைக்குப் பலம் (க) இவைகளைப் பொடித்துப்போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

3-வது—குப்பைமேனி ஆடு தீண்டாப்பாளை அழிஞ்சில் வேர் முள்ளி இவைகளின் சாறு வகைக்குப்படி (இ) நல்லெண்ணெய்படி (உ) இவைகளை ஒன்றாய்க்கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து முழுகிவரத்தீரும்.

4-வது—நல்லெண்ணெய்படி (க) கரிப்பான் சாறு கரு நொச்சிச்சாறு வகைக்குப்படி (௨) ஒன்ருய்க்கலந்ததில் மிளகு பலம் (௨) சாம்பிராணி பலம் (க) பொடித்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து அதில் நல்ல அபின் வராகனெடை (௪) போட்டு வைத்துக்கொண்டு முழுகிவரத் தீரும். நல்ல அபின் கிடையாத பட்சத்தில் (௨) பலம்சதகுப்பையை அரைத்துமுன் மருந்துகளுடன் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளலாம்.

மூல பீனிசக் குணம்.

நாசியிற் கோழிச் சதைபோலும் அதின் சூடுபோலும் வளரும்.

கண்ட பீனிசக் குணம்.

நாசியிற் சுண்டைக்காய்போல் சதைவளர்ந்து அடைக்கும் சிரசு நீர் நெஞ்சிலிறங்கிக் கபங்கட்டும்

ஆயிற்பட்டை மலாக்காச் சந்தணம் வகைக்கு வராகனிடை (உ) மட்டிப்பால் சாம்பிராணிவகைக்கு விராகனிடை (க௨) மிருதார்சிங்கி சாதிலிங்கம் அரிதாரம் வகைக்கு விராகனிடை (க) இலுப்பைப் புண்ணாக்கு விராகனிடை (வ) ஊமத்திலைச் சாற்றிலரைத்து எருக்கம்பாலும் சதுரக்கள்ளிப்பாலும் ஒரு துணியுலூற்றி உலர்த்தி யப்பால் ஷை மருந்தை அதிற்பூசிக் காயவைத்துக் கொஞ்சம் கத்தரித்துச் சுங்கானில்வைத்து புகையை நாசியிலேற்ற மூலபீனிசம் கண்ட பீனிசம் சிருய்ப் பீனசம் கபாலசூலை வலி ரணமுதலானவை தீரும்.

நீர்ப்பீசனத்திற்கு தைலம்.

நொச்சிச்சாறு நல்லெண்ணெய் வெள்ளாட்டுப்பால்வகைக்குப்படி (க) செவியம் திரிகடுகு வாய்விளங்கம் கருஞ் சீரகம் அரத்தை கஸ்தூரிமஞ்சள் திப்பிலி மூலம் நொச்சிப்பட்டை வகைக்குப் பலம் (க) இவைகளை அறைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

2-வது நொச்சி கரிசாலை வெற்றிலை ஆதண்டை பச்சை மஞ்சள் இவைகளின்சாறு வகைக்குப்படி (வ) சருள்ளிச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி (க) மிளகு படி (வ) உடைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

3-வது நல்லெண்ணெய் ஆவின்பால் இளநீர் கற்ருழை முசுமுசுக்கை கற்பூரவல்லி எலுமிச்சம்பழம் இவைகளின் சாறு வகைக்குப்படி (க) இவைகளை ஒன்ருய்க்கலந்து அதில் நாயுருவி சந்தனம் விலாமிச்சைவேர் வெட்டிவேர் ஏலம் ஓமம் அரத்தை

தேவதாரம் மஞ்சள் கிளியூரல்பட்டை தான்றிக்காய் சண்பகப்பூ சிறுநாகப்பூ கஸ்தூரி மஞ்சள் மரமஞ்சள் விளாவரிசி சிறுதேக்கு வாலுளுவையரிசி வகைக்கு வராகனெடை (ரு) அரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத் தீரும்

4-வது பூவரசு வெள்ளெருக்கு மலைதாங்கி இவைகளின் வேர் கஸ்தூரி மஞ்சள் சிறுநாகப்பூ வெடியுப்பு புனுகு இவைகளை ஓர் நிறையாய்ப் புகையிலைச் சாற்றாலாட்டித் துணியிலாட்டித் திரித்துப் புகையை நாசியிலேற்ற நீர்ப்பீனச முதலானவைதீரும்.

பீனசம் சலம் வடிதல் தலையுரிப்பு துமலுக்குத் தைலம்.

ஆயிற்பட்டை பலம் (சல) சங்கவேர் அரத்தை மிளகு வகைக்குப் பலம் (கo) மஞ்சள் பலம் (ரு) இவைகளை யிடித்துப் பதக்கு நீரிற்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத் திருத்து அதில் நல்லெண்ணெய்படி (ச) நொச்சி முசுமுசுக்கை ஆயில் கரிசாலை இவைகளின்சாறு வகைக்குப்படி (உ) ஆவின்பால் படி (க) கூட விட்டு அதிமதுரம் சதகுப்பை அரத்தைகோஷ்டம் கடுக்காய் சீரகம் வேலிப்பருத்திவேர் வகைக்குப் பலம் கால் இவைகளை யரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

இரத்தபீனசம்சிறுய்ப்பீனசத்திற்கு தைலம்.

ஆதன்டை ஆடாதோடை கையாந்தகரை நொச்சிபசுமஞ்சள் நாரத்தம்பழம இவைகளின்சாறு வகைக்குப்படி நல்லெண்ணெய்படி (உ) இவைகளை யொன்றாய்க் கலந்ததில் கொத்தமல்லி மிளகு சுக்கு உள்ளி மாமஞ்சள் கருஞ்சீரகம் வகைக்குப் பலம் அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

2 வது—அறுகுவேர் நெல்லிக்காய் பொன்னாங்கணி சிறுகீரை தாழைவிழுது இவைகளின்சாறு ஆவினெய்பால் சிற்றாமணக்கெண்ணெய் நல்லெண்ணெய் வகைக்குப்படி (க) ஒன்றாய்க் கலந்ததில் மிளகுபடி (க) பொடித்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

3 வது—பொன்னாங்காணி கையாந்தகரை முசுமுசுக்கை வெற்றிலை கஞ்சா இவைகளின்சாறு நல்லெண்ணெய் வகைக்குப் படி(க) ஒன்றாய்க்கலந்ததில் மிளகு மதுரம் நற்சீரகம் வால்மிளகு வகைக்குக்கழஞ்சு (ச) அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவர சிறுய்ப்பீனசம் கபாலசூலை ஒருத்தலை வலிதீரும்.

4 வது- கண்டங்கத்திரிப்பழம் துளசி வெற்றிலை இவைகளின்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி (வ) ஒன்றாய்க்காய்ச்சி வடித்து முழுகிவர ஷை ரோகங்கள் தீரும்.

5 வது—திரிகடுகு மஞ்சள் வகைக்குக்கழஞ்சு (ரு) இந்துப்பு கழஞ்சு (க) இவைகளைக்கண்டங்கத்திரிப்பழச் சாற்ருலாட்டித் துணியிற்றடவித் திரியுருட்டித் தீயிற்கொளுத்தி ஆற்றி நாசியிற் புகையைப்பிடிக்கச் சிருய்ப் பீனிசந் தீரும்.

பீனசம் மண்டையிடி கபாலசூலைகுத் தைலம்.

முற்றின ஆயிற்பட்டை பலம் (ருய) சிற்றரத்தை பலம் (உரு) நிலக்குமிழ் வில்வம் தழுதாழை காட்டாமணக்கு பாதிரி கோங்கிலவு கூத்தன்குதம்பை மின்னிகண்டங்கத்திரி நெருஞ்சி நொச்சி கொடுவேலி சங்கு அமுக்குரூசாரணை முருங்கைதூதுளை முட்குறண்டி வேலிப்பருத்தி இவைகளின் வேர் சுக்கு கருங்காணம் உழுந்து கோதும்பை வகைப்பலம் (க) இடித்து கய-மரக்கால் நீரிற்போட்டு நாலிலொன்ருய் வற்றவைத்திறுத்ததில் நல்லெண்ணெய்படி(அ)தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறுபடி (க) ஒன்ருய்விட்டு தேவதாரம் பொன்முசுட்டைவேர் இந்துப்புமாஞ்சில் அதிமதுரம் கோஷ்டம் நன்னரிவேர் ஊமத்தம்வேர் மாகாளிக்கிழங்கு சதகுப்பை நெருஞ்சிவித்து சந்தனம் மரமஞ்சள் மஞ்சள் குளப்பாலைவேர் விலாமிச்சம்வேர் வகைக்கு பலம் (௨) குங்குமப்பூ வராகனெடை (க) கஸ்தூரி வராகனெடை (௨) இவைகளை நாலுபடி ஆவின்பாலி லரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவர கண் தெளிவாகும் பித்தங் கீழ்நோக்கும்.

2 வது—ஒரு துலாம் இஞ்சியையிடித்துச் சாறுபிழிந்து அதில் நல்லெண்ணெய்படி (க) நொச்சிசாறு ஆவின்பால் வகைக்குப்படி (௨) ஒன்ருய்க்காச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

பீனசம் மண்டையிடி வாதம் கடுப்புகுத் தைலம்.

ஆயிற்பட்டை புங்கம்பட்டை சேவன்கிழங்கு செம்முள்ளிவேர் வகைக்குப் பலம் (ய) இடித்துப் பதக்குநீரிற்போட்டு நாலிலொன்ருய் வற்றவைத்திருத்து அதில் நல்லெண்ணெய்படி (உ) செமமுள்ளிவேர் கொடுவேலிவேர் நிலக்குமிழ்வேர் வாகைவேர் கோஷ்டம் மதுரம் வாய்விளங்கம் அரத்தை இந்துப்பு குங்கிலியம் சதகுப்பை வகைக்கழஞ்சு (க) அரைத்துப்போட்டு நசியம் செய்து தலைமுழுகிவரத் தீரும் உள்ளுக்குங்கொள்ளலாம்.

நொச்சிச்சாறு நல்லெண்ணெல் வகைக்குப்படி (க) ஒன்ருய்க்கலந்ததில் ஈருள்ளி இரண்டுசிறுங்கை தட்டிப்போட்டுக்காய்ச்சி முழுகிவரத் தீரும்.

கபாலவலி பீனசத்திற்குத் தைலம்.

ஆதண்டைசெங்கொன்றை சடைக்கஞ்சாதைவேளை வெற்றிலை குறட்டைப்பழம் பச்சைமஞ்சள் இஞ்சி முசுமுசுக்கை கஞ்

சாங்கோரை இவைகளின் சாறு வகைக்குப்படி (க) நல்லெண் ணெய் படி (2) இவைகளை ஒன்ருய்க் கலந்ததில் எட்டிசகொ ழுந்து சதகுப்பை சுக்கு வசம்பு உள்ளி தேவதாரம் அரத்தை கடுக்காய் வகைக்குக் கழஞ்சு (உ) வீதம் நொச்சிச் சாற்ரு லரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத்தீரும்.

மண்டையிடி கபால சூலை பீனசம் நாசிட்புண்ணுகுத் தைலம்.

எலுமிச்சம் பழச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி (க) நத்தைச் சூரிவேர் பலம் ஒன்றரை ஆவின்பாலிலரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத் தீரும்.

கபாலவலி குத்துசூலை பீனசம் நேத்திர நீர்கடுப்பு மேகச்சூட்டுக்குத் தைலம்

சவுரிப்பழச்சாறு நல்லெண்ணெய் பொடுதலைச்சாறு ஆவின் பால் வகைக்குப் படி (க) ஒன்ருய்க்கலந்து அதில் ஒருபலம் மிளகை மேற்படி பாலி லரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

பீனசம் மண்டையிடி சிரோபாரத்திற்குத் தைலம்:

அமுக்குருங்கிழங்கு பலம் (ய) இடித்து பதக்குநீரிற் போ ட்டு எட்டொன்ருய்க் கியாழஞ்செய்து அதில் பழச்சாறுபடி (க) காடித்தண்ணீர் நொச்சிச்சாறு எருக்கம்பூச்சாறு வகைக்குபடி வ) கூடவிட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத் தீரும்.

2 வது—தேங்காய்ப்பால் நல்லெண்ணெய் ஆவின்பால் எலு மிச்சம் பழச்சாறு வகைக்குப்படி முக்கால் இவைகளை ஒன்ருய்க் கலந்து அதில் கார்கோலரிசி சிற்றரத்தை வலம்புரிக்காய் வகைக்கு வராகனெடை (ங) செவ்வள்ளிக்கொடி வராகன் இரண்டரை குங்குமப்பூ வராகனெடை (சு) இவைகளை ஆவின் பாலிலரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவர சகல பீனசமும் மண்டைக்குத்தும் நீங்கும்.

3 வது—கையாந்தகரைச்சாறு நல்லெண்ணெய் ஆவின் பால் வகைக்குப்படி (க) ஒன்ருய்க்கலந்து அதில் திரிகடுகு இந் துப்பு வசம்பு வாய்விளங்கம் அதிமதுரம் வகைக்குப் பலம் (ங) ஒடி பாலிலரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்து வாரத்திற்கு இரண்டு முறை முழுகிவரத தீரும்.

4 வது—ஆடுதின்னுப் பாளைச்சாறு படி (வ) நல்லெண் ணெய் படி ஒன்ருய்க்கலந்து மெழுகுபதமாய்க்காய்ச்சிவடித்து

வராத்துக் கிரண்டுமுறை தலையிற்றேய்த்து மதுக்காரைவேர் அரைப்பிட்டு ஸ்நானஞ் செய்துவரத் தீரும்.

5 வது—அரைக்கீரைச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப் படி (க) ஒன்றாய்க்கலந்து அதில் கஸ்தூரிமஞ்சள் மிளகு கருஞ் சீரகம் வகைக்குப் பலம் (வ) ஷை சாற்றிலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துத் தலைமுழுகி ஷை கடுகைத் துணியில்வைத்துத் திரித்துப் புகை பிடித்துவர பீனசம் மண்டையிடி குத்துசிரோ பாரம் நீங்கும்.

பீனசம் இரத்தபீனசம் சிறுய் அழுகப்பீனசம்

பித்த பீனசத்திற்கு நசியம்.

ஆவினெய் படி வ) அறுகன்வேர்ச்சாறு முலைப்பால் வகைக் குப்படி (வ) இவைகளை யொன்றாய்க் கலந்ததில் மதுரம் கோஷ் டம் மஞ்சள் வாய்விளங்கம் குங்குமப்பூ கோரோசனை வகைக்கு வராகனெடை (க) கஸ்தூரி கிராம்பு வகைக்கு வராகனெடை (வ) கரிசாலைச் சாற்றி லரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து மூக்கில் நசியஞ்செய்து உச்சியிலுந் தேய்த்துவரத் தீரும்.

2 வது—நாலைந்து கொப்பறைத் தேங்காய்ப்பூவைச் சட்டியி லிட்டு அதில் புளியங்கொட்டை மேற்றோல் ஒரு சிறங்கை பொடி த்துத்தூவிப் பிசைந்துவைத்து மூன்றுநாழிகை சென்ற பின்பு பிழிந்தால் நெய்வரும் அதைச் சீசாவி லடைத்துக்கொண்டு நாசி யில் பத்துநாள் நசியமிடத் தீரும், அல்லது ஷை நெய் படி-வ- வில் துருசு வெளிச்சிப் பிசின் வகைக்கு வராகனெடை (உ) பொடித்துப் போட்டுக் காய்ச்சி நசியஞ்செய்து வரத் தீரும்

3 வது— ஆவினெய் மாதுளம்பூச்சாறு வகைக்குப் படி அரைக்கால் ஒன்றாய்க் கலந்ததில் கோஷ்டம் ஏலம் குங்குமப்பூ லவங்கப்பட்டை அதிமதுரம் கருஞ்சீரகம் லவங்கப்பத்திரி வகைக்கு வராகனெடை (1) இவைகளை ஆவின் பாலிலரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்து நாசியில் நசியமிட சகல பீனசமு தீரும்.

பீனசம் நச்சுதலை யிடிக்குப் பற்று.

அரத்தை மிளகு வகைக்கும் பலம் (வ) அபின் வாராக னெடை (க) இவைகளை காற்படி வெற்றிலைச்சாற்றி லரைத் துக் கொதிக்க வைத்துத் தலையிற்பற்றுப் போட்டுக் காய்ச்சி வடித்து நாசியில்விட சகல பீனசமுந் தீரும்.

தந்த ரோகங்களுக்கு.

பல்லு நோய்க்கு கியாழம்.

வெண்பா.

மருக் காரைசுக்கு மருதந்தோல் வெள்வேல்
மருக்காவாரைப் பிரம்பேடேழும்—நறுக்கி
நாலிலொன்ருய்க்காச்சி நாலுநாள் கொப்பளிக்க
பாலன் பல்லாங்கிழவன் பல்.

மருக்காரைவேர்-சுக்கு-மருதம்பட்டை-வெள்வேலம் பட்டை-யெருக்கம் வேர்-ஆவாரம்பட்டை - பிரப்பம்வேர் இவை எழுதினுசும் வகைக்கு பலம் 1, யெடுத்து பஞ்சுபோல் இடித்து ஒருபடி தண்ணியில்போட்டு கால்படியாகக் காச்சி காலே மாலே வாய் கொப்பளித்து வந்தால் பல்லுநோய் தீரும் வாய்பொருக்கும்படியான சூட்டுப்பதத்தில் கொப்பளிக்கவேணும்

2 வது பிராயம்பட்டையைக் குழித்தயில மிறக்கி அதில் சுக்குகடுக்காய் அரப்பொடி ஓர் நிரையாகப் பொடித்துப்போட்டுக் களிம்புபோலரைத்துச் சிமிழிலடைத்துக்கொண்டு பல் விளக்கிவரச் சகல தந்தரோகமுந் தீரும்.

நன்ஞரிவேரும் மனத்தக்காளி கழலமும் சரிபங்கு போட்டு தண்ணீர்விட்டு நாலில் ஒரு பங்காக கிஷாயஞ்செய்துவாய் கொப்பளித்துவந்தால் பல்வலி தீரும்.

2 வது—தாளிசபத்திரி லவுங்கப்பட்டைலவுங்கம் மிளகு கற்பூரம் இவை சமநிடை யெடுத்து பொடித்து பல் துலக்கி வெந்நீரில் வாய் கொப்பளித்து வந்தால் பல்லுநோய் தீரும்.

தேங்காய் நெய் பொடுதலேச்சாறு வகைக்குப்படி (க) ஒன்ருகக்கலந்து அதில் நெல்லி தான்றி தேவதாரம் வேலம்பட்டை வகைக்கு வராகனெடை (ந) அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துச் சற்றுநேரம் வாயில் வைத்திருந்து கொப்பளிக்க, பல்லடிப்புண் இருந்தால் ஷடி தயிலத்தைத் தொட்டுத் தேய்க்க மாறும்.

பல்நோய்க்கு பால்.

காட்டுப் பிராயன் பாலே பல்லுநோயுள்ள பாகத்திலும் மீருகளின் மீதும் 2-3-துளிவிட்டு வந்தால் பல்லுநோய் குணமாகும்.

பல்லு நோவுக்கு பொடி.

வெள்ளை காசுக்கட்டி-படிகாரம் - கொட்டைப்பாக்கு இம் மூன்றும் சம எடையெடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து காலை மாலை பல் துலக்கிக்கொண்டு வெந்நீரில் வாய் கொப் பளித்துவந்தால் பல்லுநோய் தீரும.

2 வது—மிளகு - உப்பு-லவுங்கம் - கற்பூரம் இம்மூன்றும் இடித்து வஸ்திரகாயம்செய்து அல்லது பொடிசெய்துகொண்டு பல் துலக்கி வெந்நீரில் வாய் கொப்பளித்து வந்தால் பல்லு நோய் தீரும்.

கண்டங்கத்திரி சமூலத்தை சுட்டுக் கரியாக்கி அந்தி சந்தி பல் துலக்கிவந்தால் பல்லுநோய்குணமாகும் நாட்பட துலக்க வேணும்.

சோத்து உப்பை பொடிசெய்து புதிய அகலில் நிரம்பப் போட்டு எருக்கன்பாலை உப்புநனையும்படி கலசத்தின் நிரம்பப் பிடித்து வெய்யலில் வைத்து உலர்ந்த பிறகு மேல் கலசம்மூடி 2-3-சீலை மண்செய்து 10-வரட்டியில் புடமபோட்டு ஆரியபின் யெடுத்து கவசத்தை நீக்கி உப்பை கலுவத்திலரைத்து சீசாவில் வைத்துக்கொண்டு காலை மாலை 2-3-சிட்டிகை பல் துலக்கிக் கொண்டு வெந்நீரில் வாய் கொப்பளித்து வந்தால் பல்லு நோய் குணமாகும்.

அரபொடி பலம் (க) கடுக்காய் தான்றிக்காய் மாசிக்காய் சீனிக்காரம் கொருக்காய்ப்புளி துருசு காசுக்கட்டி வகைக்கு வராகனெடை (ரு) இவைகளைப் பொடித்து மாகாணிப்படி எலு மிச்சம்பழச் சாற்றிற் போட்டுக்கிண்டி ரவியிற் காயவைத்து அப்பால் ஷை சாற்றால் மயனமா யரைத்துலர்த்திப் பொடித் துப் பல் விளக்கிவர சகல தந்தரோகங்களுந் தீரும்.

2 வது—கொப்பாக்கு சீனிக்காரம் துருசு மாசிக்காய் வகைக்கு வராகனெடை (க) கடுக்காய் தான்றிக்காய் அரப்பொடி வகைக்கு வராகனெடை (ரு) இகைகளைப் பொடித்து ஐந்து எலுமிச்சம் பழச்சாற்றில் விரவி ரவியிலுலர்த்தி பொடித்துப்பல் விளக்கிவர சகலதந்த ரோகமுந் தீரும்.

சேங்கொட்டை பலம் (ய) கரியுப்பு பலம் (ரு) ஒரு கல சத்திற்போட்டு அவை முழுங்கும்படி எருக்கம் பால்விட்டு வாயில் ஓடுபோட்டு மூடி சந்துவாய் சீலைமண்செய்து முழப் புடம்போட் டெடுத்துப் பொடித்துப் பல்விலக்கிவர தந்தவாயு தீரும்.

விரை நீக்கி வருத்திடித்த கடுக்காத்தூள், விரைநீக்கிவருத் திடித்த பொன்னுங்கொட்டை தூள், விரைநீக்கி வருததிடித்த

சீக்காய்தூள், வருத்திடித்த மிளகுதூள், சுக்குதூள், லவுங்கத் தூள், எலரிசித்தூள், அக்கிராகாரத்தூள், வெள்ளைகுங்கிலியத் தூள், இந்துப்பு, விபூதிபோல்வருத்த சோத்துப்புத்தூள், இவை கள் யாவும் ஒன்ருய்க்கலந்து நன்ருய்மிஸ்ரமித்து சீசாவில்வைத் துக் கொள்ளவம் பல்லு நோயுள்ளவர்கள் காலே மாலே இந்தப் பொடியை, பிரதிதினம் துலக்கிவந்தால் ஆயுசுமட்டும் பல்லு நோய் வராது.

துரிசு வீசை அ, சோரங்கொட்டை வீசை அ, கடுக்காய்த் தோல் வீசை அ, களிப்பாக்கு வீசை அ, பொரித்த சீனுகாரம் வீசை க, காசிகட்டி வீசை க, ஏலம் வீசை ச, மிளகு வீசை-ச கோரைக்கிழங்குவிசை ச, இவைகளெல்லாவற்றையும் வறுத் துப் பொடிசெய்து ஒரு தேங்காய் குடுக்கையில் நிரப்பி வைத் துக்கொள்க நாள்தோறும் அதைக்கொண்டு பல்தேய்த்தால் தந்தரோகம் சொஸ்தமாகும்.

மிளடி 1-இடை, சோத்துப்பு 1-இடை இரண்டையும் ஆர் க்கப் பொடிசெய்து 5-6-சிட்டிக்கையெடுத்து பல்துலக்கி தலே யை சாய்த்திருந்தால் பல்லிலுள்ள தூர்நீரெல்லாம் வெளியாய் ப்போகும் உடனேகடுக்காயாவது வேலம்பட்டையாவதுகிஷா யம் செய்து வாய் கொப்பளிக்கவும் இப்படி 2-3-வேளைசெய்க.

பல் நோய்க்கு கலநார்.

நாட்டுக் கல்நார கொண்டுவந்து மருதம்பட்டை கிஷாயம் வைத்து அறைத்து பில்லேதட்டி காய்ந்தபின்பு ஷை திப்பியை அரைத்து பில்லேக்கு கவசம்செய்து ஒட்டிவிட்டு மேலோடுமூடி 10-வரட்டியில் புடம்போட்டு ஆரியபின் யெடுத்து பொடித்து வைத்துக்கொண்டு காலே மாலே பல் துலக்கிவந்தால் குணமாகும்.

பல்நோய்க்கு வாயிலடக்கம்.

சீயக்காயை பில்லேயாக நசுக்கி நோயுள்ள பல்லில் படும் படி தாடையில் அடக்கி படுத்துக்கொள்ள வேண்டியது அதி னுல் சுரக்கும் தூர்நீரை உமிழ்ந்துவிட வேண்டியது காலேயில் கடுக்காயும் படிகாரமும் கிஷாயம் செய்துவாய் கொப்பளிக்கவும்.

அபினி 4-குண்டுமணியிடை கற்பூரம் 4-குண்டுமணியிடை இவ்விரண்டும் உள்ளங்கையில் வைத்து நசிக்கி ஒன்ருய்க் கலக் கும்படி நீமிட்டி சிறிய பில்லேயாகச்செய்து வலியுண்டாயிருக் கும் பல்லில் படும்படி தாடையில் அடக்கிக் கொண்டிருந்தால் பல்லிலுள்ள தூர்நீரெல்லாம் வந்துவிடும் ஏறு வீங்கியிருந்தா லும் கரையும் வாயில் சுரக்கும் தூர்நீரை விழுங்கக்கூடாது.

விபூதிபோல்வருத்த-காட்டுக்கல்நாறு தூள், வெள்ளைக் குங்கிலியத்தூள், மாசிக்காய் தூள், கிச்சிலிக்கிழங்குத் தூள், சாம்பிராணித் தூள், ஏலரிசித்தூள், சுக்குத்தூள், இவைகளை யாவும் ஒன்ருய்க் கலந்துசீசாவில் வைத்துக்கொள்ளவும். வேண்டியபோது பல் துலக்கிக்கொண்டு வென்னீரில் வாய்கொப்பளிக்கவும்.

நன்ருய் வெளுக்கும்படி வருத்த அன்னபேதித் தூள், நன்ருய் வெளுக்கும்படி வருத்த மயில் துத்தம் தூள், காசுக்கட்டி தூள், அக்கிராகாரம் தூள், மிளகுத்தூள், இவைகளை கலுவத்திலிட்டு எலுமிச்சம்பழச்சார்விட்டு அரைத்து காலணு அளவுக்கு பில்லைகள்செய்து உலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும். வேண்டியபோது 2 பில்லைகள்யெடுத்து பொடிசெய்து பல்துலக்கி வென்னீரில் வாய் கொப்பளிக்கவும் இப்படி காலை மாலை 4-5-நாள் துலக்கினுல், பல் அசைவு, பல் ஆட்டம், ஈறுகள் வீக்கம், வாய்நாற்றம் யாவும் தீரும்.

புழுங்கலரிசியைக் கோவைமிலைச் சாற்றில் மூன்றுதரம் பொதும்ப வைத்து உலர்த்தி நல்லெண்ணெயிற் பிசறி வாயிலொதுக்கிக்கொள்ள பல்லீறின் கீழ் இரத்தங்காணுதல் நீங்கும்.

பல்நோய்க்கு தைலம்

கண்டங்கத்திரிப்பழத்தை உமிக்காந்தலிற் சுட்டு பாகலிலைச் சாற்ருலாட்டி நல்லெண்ணெயிற்போட்டுச் சூரியபுடம் வைத்துப் பல்விற்றடவ பற்பூச்சி மாளும்.

ஆக்கிராணப்பொடி

சுண்டைவேர், தும்பைவேர், இலுப்பைக்கட்டி, இலுப்பைக்கட்டியை மாத்திரம் சுட்டுக்கொண்டு இருவகை வேரும் வெய்யலில் உலர்த்தி யாவும் ஒன்ருயிடித்து வஸ்திரகாயம் செய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும், இதில் ஒரு சிட்டிக் கையெடுத்து மூக்குத்தூள் போடுவதுபோல் முகர்ந்தால் 5-6 தும்பல் வரும் சிரசில் நீர் தங்கும் வியாதிகள் தீரும் தலைபாரம் மூக்கடைப்பு நீங்கும் பத்தியமில்லை.

தந்தவாய்க்குப்பொடி

சேராங்கொட்டை-ௗய, களிப்பாக்கு பலம் க, கொட்டைப்பாக்கு ௗய, துரிசு பலம் க, காசிகட்டி பலம் க, உப்புபடி அரைக்கால், இலுப்பையிலை தூக்கு-க, உப்புசேர்ந்த பழைய மாங்கொட்டை-ௗய, எருக்கம் பழுப்பு சேர் க, காசிகட்டியும், துரிசும் பொடிசெய்து வைத்துக்கொண்டு மீதி சாக்குகளையெல்

லாம் கரி பக்குவமாய் வறுத்துக் கொண்டு, பிறகு பொடி செய்து, திரிசு, காசிகட்டி இவைகளின் பொடியை மற்ற சரக்குகளுடைய பொடியோடு சேர்த்து ஒரு டப்பியில் நிரப்பி வைத்து நாள்தோறும் அந்தப் பொடியைக்கொண்டு பல் தேய்த்தால் பல்வலி நீங்கும்.

பல்நோய்க்கு இலை

தொவஞ் செடியின் யிலை பஞ்சுபோல் நசுக்கி களச்சிக்கா காயளவுயெடுத்து இரவில் படுக்கும்போது நோயுள்ள பாகத்தில் படும்படி தாடையில் அடக்கிக்கொண்டிருந்தால் 2, 3 வேளையில் குணமாகும்.

பல்லுநோய்க்கு திராவகம்

லவுங்கப்பட்டை தைலத்தை பஞ்சிலைல்தொட்டு நோயுள்ள பல்லிலும் யீருகளின் மீதும் 4, 5 துளிகள் விட்டு ஒருமணி நேரம் பொருத்து கடுக்காய் கிஷாயத்தால் வாய் கொப்பளிக்கவும் 2, 3 வேளையில் குணமாகும்.

சுர ரோகங்களுக்கு

வாதசுரத்திற்கு கிஷாயம்

பாவட்டைகொன்றை சிற்றாமுட்டி வேலிப்பருத்தி இவைகளின்வேர் ஓமம் மிளகு வகைக்குப்பலம் (வ) இடித்து இரண்டுபடி தண்ணீரிற் போட்டுக் காற்படியாய் வற்றவைத்து இந்தப்படி (௬) போது கொடுக்க வாதசுரம் தீரும்.

2 வது—சிற்றரத்தை பேராத்தை சதகுப்பை சிறுதேக்கு சுக்கு திப்பிலி செவியம் கோஷ்டம் திப்பிலிமூலம் சித்திரமூலம் சங்கு வெள்ளறுகு நிராய் அப்பை நிலவேம்பு முருக்கு கழற்சி கண்டங்கத்திரி பேராமுட்டி மாவிலிங்கு சிறுகாஞ்சோரி விஷ்ணுகிரந்தி இவைகளின்வேர் வகைக்குப்பலம் (க) இவைகளையிடித்து (உக) பங்குசெய்து ஒருவேளைக்கு ஒருபங்கு தூளை மூன்றுபடி தண்ணீர்போட்டு (௩௰) நாழிகை ஊறவைத்து (வ) படியாய் வற்றவைத்து அதில் வாதராட்சதன் குளிகையில் இரண்டு பணவெடை உரைத்து தேன் கழஞ்சுவிட்டு இருவேளை கொடுக்க நடுக்குவாதம் (ச) ம் வாதசுரம் (௯உ) ம் தீரும்.

3 வது—பற்பாடகம் சீந்தில் மலைதாங்கி கண்டங்கத்திரி செம்முள்ளி முன்னை இவைகளின் வேர் முத்துக்காசு சுக்கு வகைக்குக்கழஞ்சு (௨) இடித்து நாழி நீரிற் போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும் இந்தப்படி (௬) வேளை கொடுக்கத் தீரும்.

முள்ளி கண்டங்கத்திரி பேராமல்லி சிற்றுமல்லி இவைக ளின்வேரும் சுக்கும் வகைக்குக் கழஞ்சு (உ) இடித்து (ச) படி நீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்து வடித்து அதில் உழக் கு அரிசியை வறுத்துப்போட்டுக் கஞ்சிகாய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

பித்தசுரத்திற்கு கியாழம்

ஏலம் அதிமதுரம் வெட்டிவேர் விலாமிச்சம்வேர் கலைக் கொம்பு இலுப்பைப்பூ நன்னாரிவேர் ஆடாதோடையிலைபேய்ப் புடல் கோரங்கிழங்கு சீந்திற்றண்டு பற்படாகம் முன்னைவேர் வில்வவேர் மல்லி நெல்லிமுள்ளி இவைகளை யோர் நிறையாய் இடித்துத் தூட்செய்து வேளையொன்றுககுக் காற்பலத்தூளை இருநாழி ஜலத்திற்போட்டுச் காற்படியாய் வற்றவைத்து ஆறு போது கொடுக்கத் தீரும்.

2 வது—நற்சீரகம் இந்துப்பு திப்பிலி அசமதாகம் கருஞ் சீரகம் சுக்கு இவைகளை ஓர் நிறையாய் இடித்து வடிகட்டி வேளை யொன்றுக்குத் திரிகடிப் பிரமாணம் ஆறுபோது சாப் பிட்டு வெந்நீர் குடிக்கத் தீரும்.

3 வது—பேய்ப்புடல் கோஷ்டம் மல்லி சுக்கு சீரகம்நெற் பொரி வில்வவேர் சிற்றுமுட்டிவேர் இவைகளை யோர் நிறை யாய் இடித்து வேளை யொன்றுக்கு ஒருபலத்தூளை இரண்டுபடி தண்ணீரிற்போட்டு (வ) படியாய் வற்றவைத்து (சு) போது கொடுக்கத்தீரும் விலாமிச்சை சிறுகாஞ்சோரி வில்வம் பாதிரி தும்பை செவ்வள்ளி நன்னாரி நிலவாகை இவைகளின்வேர் அதி மதுரம் கோஷ்டம் சீரகம் மல்லி பேரீச்சங்காய் ஆனைத்திப்பிலி நெல்லி முள்ளி சுக்கு வகைக்குப்பலம் (க) இடித்து அதை (கஉ) பங்காகச்செய்து வேளை ஒன்றுக்கு ஒருபங்குவீதம் மூன் றுபடி சலம்விட்டுக் காற்படியாய் வற்றவைத்து அதில் கோ ரோசனைக் குளிகை யொன்று உரைத்து தேன்கழஞ்சு விட்டு இருபோதுகொடுக்கப் பித்தசுரம் (உக) ம் தீரும்.

4 வது—சீந்தில் கொடுவேலி சிறுகாஞ்சோரி இவைகளின் வேர் பற்படாகம் முத்தக்காசு மல்லி நிலவேம்பு இவைகளை யோர் நிறையாயிடித்து ஆறுபோது வேளையொன்றுக் கொரு பலத்தூள் வீதம் இரண்டுபடி தண்ணீரிற் போட்டுக் காற்படி யாய் வற்றவைத்துக் கொடுக்கத்தீரும்.

5 வது—பங்கம்பாளை சிறுகாஞ்சோரி இவைகளின்வேர் முத்தக்காசு இவைகளை யோர் நிறையாயிடித்து முன்போற் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

6 வது—ஈச்சங்குறுத்து நெய்தற்கிழங்கு வெட்டிவேர்விலாமிச்சைவேர் அதிமதுரம் வில்வவேர் சிற்றாமுட்டிவேர் தாமரைக்கிழங்கு சந்தனம் இலுப்பைப்பூ இவைகளை யோர் நிறையாயிடித்து முன்போற் கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்.

7 வது—பேய்ப்புடல் பலம் (க) கிராம்பு சுக்கு கோரங்கிழங்கு நிலவேம்பு மல்லி வகைக்குப் பலம் (வ) இவைகளையிடித்துக் கஷாயஞ்செய்து கொஞ்சங் தேன்விட்டுக் கொடுக்க மாறும்.

8 வது—தூதளைவேர் சீந்தில்வேர் சுக்கு அதிமதுரம் மாஞ்சி பாசிப்பயறு சிற்றாமுட்டி வகைக்குப் கழஞ்சு 2-இடித்து ஒருபடி தண்ணீரில்போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்து இந்தப்படி ஆறுபோது கொடுக்கத் தீரும்.

9 வது—வில்வவேர் மதுரம் சுக்கு இலுப்பைவேர் சிற்றாமுட்டி வகைக்குக் கழஞ்சு (வ) ௪-படி தண்ணீரில்போட்டு ஒருபடியாய் வற்றவைதது இறுத்து அதில் பொரியரிசி படி (வ) போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

10 வது—சிறுகாஞ்சோரி வேலிப்பருத்தி சீந்தில் ஆடாதோடை வன்னி சிறுவழுதலை சுக்கு இவைகளின்வேர் வேளையொன்றுக்கு வகைக்குப் பலம்-வ-வீதமிடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்து ஆறுபோது இந்தப்படிகொடுக்கத் தீரும்.

11 வது—கையாந்தகரை துளசி தூதுளை நொச்சி ஆடாதோடை வகைக்கொருபிடி யிடித்துப் பிட்டவித்ததில் (ரு) திப்பிலியை முடிந்துவைத்து வெந்தபின் சாற்றைப்பிழிந்ததில் ஷை திப்பிலியை அரைத்துக்கலக்கி யிந்தப்படி-௬-போதுகொடுக்கத் தீரும்.

சிலேத்தும சுரத்திற்கு

தூதுளை சிறுவழுதலை சிறுகாஞ்சோரி கண்டங்கத்திரி ஆடாதோடை இவைகளின் வேர் கற்றாழஞ்சருகு இம்பூரல் சுக்குமுத்தக்காசு இவைகளை வேளையொன்றுக்கு அரையே யரைக்கால் பலம் வீதமிடித்து உ-படி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்து திப்பிலி வராகன் (க) வெதுப்பிப் பொடித்துப் போட்டுக் கொஞ்சங் தேன் விட்டுக் கலந்து ஆறுபோது கொடுக்கத் தீரும்.

2 வது—பிரண்டை கண்டங்கத்தரி ஆத்தை சிறுகாஞ்சோரி வெட்பூலா பொன்முசுட்டைமுள்ளி இவைகளின் வேர்

அரத்தை சுக்கு இவைகளை ஓர்நிறையாய் வேளை யொன்றுக்கு அரைப்பலவிதம் சிதைத்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டு முன்போற் கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்.

3 வது—சுக்கு திப்பிலி கிராம்பு கடுக்காய் முந்திரிகை கச்சந்திராய் அப்பை கறிமுள்ளி கண்டங்கத்தரி ஆடாதோடை கர்ப்பூரவல்லி வகைக்குப் பலம் (க) இடித்துத் தூட்செய்து பதினைந்து பங்குசெய்து வேளையொன்றுக் கொருபங்கு வீதம் இரண்டுபடி சலத்திற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்து அதில் சந்திரோதய மாத்திரையுங் கோரோசனைக் குளிகையொன்றும் உரைத்துக்கழஞ்சுதேன் விட்டுக்கொடுக்க சிலேத்துமசுரம் மயக்கந்தீரும்.

4 வது—தூதளை கண்டங்கத்தரி செம்முள்ளி சுண்டை இவைகளின்வேர் சுக்குவகைக்குக் கழஞ்சு (ங) ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்கால்படியாய்க் கஷாயஞ்செய்து திப்பிலித் தூள்போட்டு ஆறுபோது கொடுக்கத் தீரும்.

5 வது—பாதிரிவில்வம் பெருங்குமிழம்வேர் வகைக்குக் கழஞ்சு(உ) ச-படிநீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்தவடித்து அதிற்காற்படி பொரியரிசியைப் போட்டுக்கஞ்சிகாச்சிக் குடிக்கத்தீரும்.

மந்தசுரத்திற்கு

சீந்திற்றண்டு கடுக்காய் சிவதைவேர் களிப்பாக்கு சுக்கு கடுகுரோகிணி சிறுவழுதலைவேர் வகைக்குப்பலம் (வ) இவைகளைச் சிதைத்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்துக்கொடுக்கத் தீரும்.

2 வது—சுக்கு நறுக்குமூலம் முசுமுசுக்கைவேர் வகைக்குப் பலம் (வ) இவைகளை யிடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டு வற்றவைத்து மூன்று போது கொடுக்க தீரும்.

ஜீரண சுரத்திற்கு

கற்றாழஞ்சருகு ஆலஞ்சருகு முக்காவேளைவேர் முருங்கை வேர்ப்பட்டை வகைக்குப்பலம் (ங) நொச்சிவேர் பலம் (ச) இவைகளை இடித்து ச படி தண்ணீரிற் போட்டு ஒருபடியாய் வற்றவைத்து வேளை ஒன்றிற்கு அரைக்காற்படி வீதம் மூன்று போது கொடுக்கத் தீரும்.

2 வது—திரிகடுகு திரிபலை திப்பிலிமூலம் சங்கவேர் சித்திரமூலம் வசம்பு ஓமம் வகைக்குப் பலம் (வ) இவைகளை முன் போற் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

3 வது—திரிபலை பேய்ப்பாச்சோற்றி கடுகுரோகிணி சுக்கு பேராமுட்டி சிற்றாமுட்டி வகைக்குப்பலம்-வ-முன்போற்கஷாயஞ் செய்து கொடுக்கத் தீரும்.

அஸ்திசுரத்திற்கு

பேய்ப்புடல் முத்தக்காசு பற்படாகம் பாடாவரை கடுகுரோகிணி சுக்கு பேய்ப்பாச்சோற்றி வகைக்குப்பலம் (வ) இவைகளை இடித்து -உ-படி தண்ணீரிற்போட்டுக் கஷாயஞ் செய்து கொடுக்கத்தீரும்.

இரத்தத்தைப்பற்றின சுரத்திற்கு

தாமரைவளையம் அமுக்கினாக் கிழங்கு கொடுவேலிவேர் பேராமுட்டி வசம்பு சுக்கு வகைக்குப்பலம் (வ) இவைகளை இடித்து இரண்டுபடி தண்ணீரிற் போட்டுக் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

மாமிசத்தைப்பற்றின சுரத்திற்கு

பேராமுட்டி நாகமல்லி சுக்கு திரிபலை கடுகுரோகிணி மாட்கிழங்கு சிற்றாமுட்டி பாலைவேர் பேய்ப்பாச்சொற்றி வகைக்குப்பலம் (வ) முன்போற் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

விடாச் சுரத்திற்கு

ஒரு சுண்டைக்காய்ப் பிரமாணம் அவிரிவேருடன் ஐஞ்சுமிளகைக்கூட்டி வெந்நீரிலரைத்துக் கலக்கி அதில் சுண்ணாம்பைக்குன்றிப் பிரமாணம் கரைத்துக் கொடுக்கவும் இந்தப்படி ங-போது கொடுக்கத் தீரும்,

மூன்றாமுறைக் குளிர் சுரத்திற்கு

சிறுதேக்கு பற்படாகம் முத்தக்காசு சீந்திற்றண்டு நன்னாரி சிறுகாஞ்சோரிவேர் தேவதாரம் கோஷ்டம் பேய்ப்புடல் சுக்கு வகைக்குப்பலம்-க-இடித்து இரண்டுபடி தண்ணீரில் போட்டு வற்றக்காய்ச்சி இந்தப்படி சு-போது கொடுக்கத் தீரும்.

ஒன்றைவிட்டொருநாள் வரும் மாறற் சுரத்திற்கு

பற்படாகம் பேய்ப்புடல் அதிமதுரம் சீந்திற்றண்டு அதன் வேர் கொடுப்பைவேர் மூத்தக்காசு மல்லி சுக்கு வராகன் (ங) இவைகளைச்சிதைத்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து அதில் தேன்விட்டுக்கொடுக்கத் தீரும் இந்தப்படி-சு-நாட்கொடுக்கத்தீரும்.

தாபசுரத்திற்கு

பேராமுட்டி சிற்றாமுட்டி சிறுகாஞ்சோரி நன்னாரி சிறுகீரை பொன்னாங்காணி ஆவரை நிலவேம்பு முத்தக்காசு சிறுதேக்கு மல்லி இவைகளை வேளைக்கு வகைக்குக்காற்பல வீதம் இடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் கஷாயஞ்செய்து பகலிலு மிரவிலும் கொடுக்கத் தீரும்.

2 வது—முந்திரிப்பழம் சிறுநாகப்பூ அதிமதுரம் செங்கழுநீர்க்கிழங்கு நன்னாரிவேர் இவைகளை வகைக்குக் கழஞ்சு வீதம் சிதைத்து ஒருபடி தண்ணீரிற்போட்டுக் கஷாயஞ் செய்துகொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாட் கொடுக்கத்தீரும்

3 வது—முத்தக்காசு மாவீர்க்கு ஷடி வேர் விலாமிச்சம் வேர் பற்படாகம் நெற்பொரி சிறுபயறு வகைக்குக் கழஞ்சு (உ) சு-படி தண்ணீரிற்போட்டு க-படியாய் வற்றவைத்து அடை கஷாயமாய் வைத்துக் கொண்டு ஒருவேளைக்கு அரைக்காற்படி வீதம் சந்தனம் பச்சைக்கற்பூரம் உருத்திராக்ஷம் வகைக்கு வராகன் (௧) அரைத்துக்கலக்கி-ரூ-போது கொடுக்கத்தீரும்.

4 வது—கோஷ்டம் அதிமதுரம் நெல்லிமுள்ளி விலாமிச்சம்வேர் வெட்டிவேர் முத்தக்காசு சந்தனம் நெற்பொரிவகைக்குக் கழஞ்சு (உ) அரைப்படி இளநீரிற்போட்டு அரைக்கால்படியாய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

தாபசுரம் நாவறட்சிக்கு

வில்வவேர் விலாமிச்சம்வேர் நெரிஞ்சிவேர் நன்னாரி மதுரம் சோம்பு விளாவரிசி முத்தக்காசு நெற்பொரி முந்திரிப்பழம் நெல் இவைகளைச் சிதைத்துக் கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்

சுரத்தின்பேரில் உடம்பு வீக்கங்கண்டால்

சங்கு நன்னாரி தூதுளை துளசி கஞ்சாங்கோரை நீர்முள்ளி வெதுப்படக்கி இவைகளின்வேர் பிரமி கையாந்தகரை வகைக்கு ஒருபிடி சுக்குத்தேர் (உ) கடுக்காய் (ய) இவைகளை இடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் கஷாயஞ்செய்து மூன்றுபோதுகொடுக்கத் தீரும்.

இராவிற்காணுஞ் சுரத்திற்கு

பேராமுட்டி விஷ்ணுகிராந்தி பாலை பேய்ப்பாய்ச்சோற்றி நாகமல்லிகை சிற்றாமுட்டி இவைகளின் வேர் கடுகுரோகணி சுக்கு இவைகளை வகைக்குப்பலம் (வ) வீதம் சிதைத்து இரண்டு

படி தண்ணீரிற் போட்டு அரைக்கால்படியாய் வற்றவைத்து-சு-போது கொடுக்கத் தீரும்.

2 வது—திப்பிலி மரட்கிழங்கு சுக்கு நிலவேம்பு கடுகுரோகணி நெல்லி பேய்புடல் பாவட்டைவேர் இவைகளை முன்போற் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

நளிர்சுரம் நடுக்கல் சுரத்திற்கு.

மிளகைக் கஷாயஞ்செய்து சாப்பிட்டாலும் அல்லது தேவதாரம் பற்பாடகம் கடுக்காய் சுக்கு கண்டங்கத்திரி கோஷ்டம் குமிழ்வேர் சிறுதேக்கு வகைக்கு ஒருபலம்வீதம் இரண்டுபடி தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்துக் கொடுத்தாலும் தீரும்.

2 வது— சீந்தில் வழுதலை நிலவேம்பு குமிழ் இவைகளின் வேர் சுக்கு கடுக்காய் கடுகுரோகணி கோஷ்டம் சிறுதேக்கு தேவதாரம் பற்பாடகம் ஆடாதோடை வகைக்குப்பலம் (வ) வீதம் இடித்து இரண்டுபடி தண்ணீரிற் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வேளை யொன்றுக்கு அரைக்காற்படி வீதம் திப்பிலிப்பொடி வராகனெடை (க) கூடப்போட்டு ஆறுபோது கொடுக்கத் தீரும்.

பழஞ்சுரத்திற்கு.

சிறுகாஞ்சோரி சிறுவழுதலை சீந்தில் இவைகளின் வேர் பற்பாடகம் பேய்ப்புடல் சுக்கு முத்தக்காசு வகைக்குப் பலம் (வ) இடித்து மூன்று பங்குசெய்து வேளைக்கொருபங்கு வீதம் இரண்டுபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து தேன்விட்டுக் கொடுக்கத் தீரும்

2 வது—நன்னாரிவேர் விலாமிச்சம்வேர் முத்தக்காசு திரிகடுகு மல்லி செந்தொட்டி வேர் பற்பாடகம் பேய்ப்புடல் வகைக்குக் கழஞ்சு (உ) இடித்து -ஙு-பங்குசெய்து வேளை ஒன்றுக்கு ஒருபங்கை இரண்டுபடி தண்ணீரிற்போட்டு வற்றவைத்து அதில் தேனும் திப்பிலிப்பொடியும் போட்டு கொடுக்கவும். இந்தப் படிக்கு சு-போது கொடுக்கத் தீரும்.

3 வது—சிறுதேக்கு சீந்திற்கொடி பற்பாடகம் கோஷ்டம் திப்பிலி நிலவேம்பு சுக்கு சிறுகாஞ்சோரி முத்தக்காசு ஆடாதோடை வகைக்குப்பலம் (வ) வீதம்-உ-படி நீரிற்போட்டு எட்டொன்றாய்க் கஷாயஞ்செய்து-சு-போது கொடுக்கத் தீரும்.

சத்திசுரம் நடுக்கல் தவனத்திற்கு

நெற்பொரி வறுத்தபாசிப்பயறு பற்பாடகம் பெரும்பூசணிவேர் வில்வேர் வகைக்கு கழஞ்சு (கO) இடித்து இரண்டு படி

தண்ணீரிற் போட்டுக் கஷாயஞ்செய்து கொடுக்கவும் தாகம் அதிகமாயிருந்தால் காற்பலம் அதிமதுரத்தைக்கூட்டிக் கஷாயஞ்சொய்து கொடுக்கத் தீரும்.

சளிசுரம் மலபந்தத்திற்கு

பேய்ப்புடல் கடுக்காய் நெல்லிமுள்ளி ஆடாதோடை கண்டங்கத்திரி மரமஞ்சள் கடுகுரோகணி செம்முள்ளிவேர் கட்டுக்கொடிவேர் சந்தனம் வேலிப்பருத்தி திப்பிலி வகைக்குக்கழஞ்சு (௩) இடித்து மூன்று கூறுசெய்து வேளை ஒன்றுக்கொருபங்கை இரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் கஷாயஞ்செய்து கொடுக்க சளிசுரம், மலபந்தம் நீங்கும்

சுரத்திற்குக்கொடுக்கும் விரோசனம்

கற்ருழஞ்சருகு கடுக்காய் கருவேம்பின் பட்டை கார்கோலரிசி வகைக்குப்பலம் (௨) இவைகளைச் சிதைத்துக் கஷாயஞ்செய்துகொடுக்க விரோசனமாகி சுரம் மட்டுப்படும்.

சுளுக்குச் சுரத்திற்கு

கொத்தமல்லி திரிகடுகு பேராமுட்டி வகைக்குக் கழஞ்சு ௩-வீதம் இடித்து நாழிநீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்து இந்தப்படி 3-நாட் கொடுக்கத் தீரும்.

அதிசாரசுரத்திற்கு

பங்கம்பாளை சுக்கு முத்தக்காசு சிறுகாஞ்சோரிவேர் இவைகளையோர்நிறையாய்க் கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

2 வது—மாம்பட்டை அதிவிடயம் முதியார்கூந்தல் சுக்கு முத்தக்காசு இவைகளை வேளையொன்றிற்கு காற்பலம் வீதம் சிதைதது ஒருபடி நீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து அதில் இலவம்பிசின் வராகன் (௧) பொடித்துப் போட்டுக் கொடுக்கத் தீரும்.

3 வது—மின்னிசமூலமும் பொன்னுங்காணிவேர் நன்னரிவேர் பற்பாடகம் கோரைக்கிழங்கு கஞ்சாங்கோரை வெட்டிவேர் விலாமிச்சைவேர் மல்லி சந்தணம் சுக்கு இவைகளை ஓர் நிறையாய்க் கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்

4 வது—கோரைக்கிழங்கும் மாம்பட்டையுஞ் சமனாய் இடித்துப் பிட்டவித்து அரைக்காற்படி சாறு பிழிந்து அதில் இலவம்பிசின் அதிவிடயம் வகைக்கு வராகன் (௧) பொடித்துப் போட்டுக் கொடுக்கத் தீரும்.

5 வது—பெருமாத்துப்பட்டை வில்வப்பிஞ்சு செங்தொட்டி மாதுளம் பிஞ்சு அதிவிடயம் சுக்கு முத்தக்காசு வகைக் குப்பலம் (வ) இவைகளை சிதைத்துக் கஷாயஞ்செய்து கொடுக் கத்தீரும்.

6 வது—மாம்பட்டை வில்வப்பழச்சதை முத்தக்காசு நில வேம்பு பெருமாத்துப்பட்டை சுக்கு வகைக்குப்பலம் (வ) இவை களைக் கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்,

7 வது—மலராத மாதுளம்பூ அதிவிடயம் பிராயம்பட்டை மாதுளங்தோல் வில்வப்பழச்சதை குச்சப்பாலை சுக்கு முத்தக் காசு ஆவாரம்பூ வகைக்குப்பலம் (வ) இவைகளைக் கஷாயஞ் செய்து கொடுக்கத் தீரும்.

8 வது—சிற்றாமுட்டிவேர் வில்வக்காய் சீந்திற்றண்டு குச் சப்பாலை சுக்கு முத்தக்காசு நிலவேம்பு கஞ்சாவிதை வகைக்குப் பலம் (வ) இவைகளைக் கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்.

அதிசாரசுரத்திற்குக் குளிகை.

திரிகடுகு சாதிக்காய் கிராம்பு இலவம்பிசின் விளாம்பிசின் வில்வப்பிசின் அதிவிடயம் கழற்சிப்பருப்பு சீரகம் ஓமம் கற்கடகசிங்கி சிறுதேக்கு மாதுளம்பிஞ்சு வில்வப்பழச்சதை பொன் முசுட்டைவேர் இவைகளை யோர்நிறையாய் நல்லெண்ணெய் விட்டு மணக்கவறுத்து தயிர்த்தண்ணீர் விட்டரைத்து ஒருபாக் களவு உண்டைசெய்து வடிதயிரில் ஒருண்டைக் கொடுக்கத் தீரும்.

அசாத்திய சுரத்திற்கு

சுக்கு கொத்தமல்லி தேசாவரம் வகைக்குப்பலம் (வ) வீத மிடித்து நாழிநீரிற் போட்டுக் கஷாயஞ்செய்து மூன்று நாட் கொடுக்கத் தீரும்.

தீராச்சுரத்திற்கும் மாறற்சுரத்திற்கும்

பெருங்குமிழ்வேர் நன்னாரிவேர் தாமரைக்கிழங்கு இலுப் பைப்பூ முந்திரிப்பழம் வெட்டிவேர் விலாமிச்சைவேர் கோரங் கிழங்கு சுக்கு சிறுகாஞ்சோரிவேர் மதுரம் நெல்லிப்பருப்பு வகைக்கு கழஞ்சு (௧) இடித்துப்போட்டுக் கஷாயஞ்செய்து தேன் விட்டு மூன்று நாட்கொடுக்கத் தீரும்.

விஷசுரக்குணம்

ஒருபுறங் குளிரும் ஒருபுறங்காயும். தேகத்தில் விஷம் ஏறுவது போறறேன்றுப்.

விஷசுரத்திற்கு

1 வது—நெல்லி தான்றி வேப்பீர்க்கு சீந்திற்றண்டு மல்லி முத்தக்காசு இவைகளை வேளையொன்றுக்குக் காற்பலம் வீதம் சிதைத்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் கஷாயஞ் செய்து கொடுக்கத் தீரும்.

2 வது—சிறுவழுதலை சீந்தில் தாமரை இவைகளின்வேர் சுக்கு இவையெல்லாம் வகைக்குப் பலம் (க) சிதைத்து இரண்டு படி தண்ணீரிற்போட்டுக் கஷாயஞ் செய்து கொடுக்கத்தீரும்.

3 வது—கோழி யவரைவேர் சித்திரமூலம் வேப்பீர்க்கு சிறுபுள்ளடி பற்படாகம் சுக்கு செவியம் வகைக்குப்பலம் (வ) இவைகளை முன்போற் கஷாயஞ் செய்து கொடுக்கத் தீரும்.

4 வது—சுக்குகடுக்காய் நிலவேம்புவேப்பம்பட்டை சீந்தில் பேய்ப்புடல் வகைக்குப் பலம் (வ) முன்போற் கஷாயஞ் செய்து கொடுக்கத் தீரும்.

5 வது—ஆடாதோடையீர்க்கு நிலவேம்பு சீந்திற்றண்டு பேய்ப்புடல் பேய்ப்பீர்க்கன்வேர் வெப்பாலையரிசி வகைக்குப் பலம் (வ) முன்போற் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

கெர்ப்பகாலத்திற்கா ணுஞ் சுரத்திற்கு

சீதாசெங்கழுநீர்வேர் வேப்பீர்க்கு சிறுவழுதலைவேர் கோங்கிலவின் வேர் சுக்கு மல்லி வகைக்கு (வ) பலம் வீதங் கஷாயஞ்செய்து சர்க்கரை கலந்து கொடுக்கத்திரும்.

குளிர்சுரத்திற்கு

கோஷ்டம் திப்பிலி கண்டங்கத்திரிசிறுதேக்கு நிலக்குமிழ் சுக்கு நிலவேம்பு முத்தக்காசு சிறுகாஞ்சோரி சீந்தில் பற்படாகம் வகைக்குப்பலம் (க) இடித்து இரண்டுபடி தண்ணீரிற் போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும் இந்தப்படி (சு) போது கொடுக்கத்திரும்.

2 வது—பெருந்தும்பையை யிடித்துப் பிட்டவித்து மாகாணிப்படி சாறுபிழிந்து அதற்கு நிகர் தேன்விட்டு இந்தப்படி மூன்றுதரங் கொடுக்கத்திரும்.

3 வது—ஆடாதோடை தூதுளை முத்தக்காசு சிறுவழுதலை பற்படாகம் பங்கம்பாளை சுக்கு சந்தனம் நன்னாரிவேர் வகைக்குப் பலம் (க) இடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டு காற்படியாய் வற்றவைத்து இந்தப்படி (சு) போது கொடுக்கத்திரும்.

4 வது—சிந்தில் நிலவேம்பு சிறுகாஞ்சோரி மல்லிவட்டத் திருப்பி விலாமிச்சம்வேர் வேலிப்பருத்தி வெட்டிவேர்பற்படாகம் சுக்கு வகைக்குப்பலம் (க) இடித்துப்போட்டு முன்போற் கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்

5 வது—பேய்ப்புடல் முத்தக்காசு பற்படாகம் சீந்திற்றண்டு வகைக்குப் பலம் (க) இடித்துப் போட்டு முன்போற் கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்.

6 வது—தூதுளைச் சமூலம் நன்னாரிவேர் முத்தக்காசு திரிபலை வீழிப்பட்டை வெட்டிவேர் விலாமிச்சம்வேர் தாமரைக்கிழங்கு இவைகளை வேளை ஒன்றுக்கு வராகனெடை மூன்று வீதம் இடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்து ஆறுபோது கொடுக்கத் தீரும்.

7 வது—சுக்கு செவியம் மல்லி கற்கண்டு பரங்கிப்பட்டை பேய்ப்புடல் திப்பிலி மூலம் லவங்கம் அதிமதுரம் முத்தக்காசு வெட்டிவேர் விலாமிச்சைவேர் கண்டங்கத்திரி சீந்தில்பற்படாகம் நன்னாரி தூதுளை ஆடாதோடையிலை வகைக்கு வராகனெடை (க) வீத மிடித்துப்போட்டு முன்போற் கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்.

8 வது—சண்பகப்பூ சாத்திரபேதி வெட்டிவேர் விலாமிச்சைவேர் தக்கோலம் நெற்பொரி சுக்கு இவைகளை வகைக்கு வராகனெடை (க) வீதம் காற்படி மாதுளம்பழச் சாற்றிலரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

9 வது—சீரகமுங் குறுந்தட்டிவேரும் ஓர் நிறைபாய்க்கஷாயஞ் செய்து-கூ-போது கொடுக்கத்தீரும்.

10 வது—மிளகாயிலை (கூ) மிளகு (எ) வெள்ளைப்பூண்டு (க) இவைகளையரைத்து-கூ-போது கொடுக்கத்திரும்.

விடாக்குளிர் சுரத்திற்கு

கரிப்பான் ஒருபிடி வேப்பீர்க்கு ஒருபிடி நன்றாய் நறுக்கிக்காய்ந்த சட்டியிற் போட்டுப் பொன்னிறமாக வெதுப்பி அதில் ஒருபிடி மிளகுபோட்டு வறுத்து வெள்ளுள்ளி ஒருபூண்டு கிள்ளிப்போட்டு கரிப்பானிலை நொச்சியிலை வகைக்கொரு கொட்டைப்பாக்களவு அரைத்துப்போட்டு நாழித்தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும். இந்தப்படி மூன்று நாள் இருபோது கொடுக்கத் தீரும்.

செவி நோய்களுக்கு

காதில் சீழ்பாய்ச்சலுக்கு

சத்திச்சாரணைகிழங்கு களாவேர் நெல்லிவேர் கையாந்தகரை செப்புநெருஞ்சி இவைகளை யோர்நிறையாகத் தட்டி வேப்பெண்ணெயி லெரித்துக் காதில் விட்டடைக்கத்தீரும்.

2 வது—எலுமிச்சம்பழச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி அரைக்கால் ஒன்றாகக் கலந்து அதில் பூநாகம் (உ0) பூண்டு வசம்பு வகைக்கு வராகனெடை (க) சிதைத்துப் போட்டுக் காச்சி வடித்துக் காதிலடைக்க நீங்கும்.

3 வது—பெருங்காயம் உள்ளி வசப்பு இவைகளை யோர் நிரையாகச் சிதைத்து வேப்பெண்ணெயிற் காய்ச்சிக் காதிலடைக்க மாறும்

4 வது—இஞ்சி எருக்கு கள்ளி முருங்கை துளசி திருநீற்றுப்பச்சை மிதிபாகல் கருவாழைக்கிழங்கு இவைகளின் சாறு வகைக்குப் படி மாகாணி நல்லெண்ணெய் படி (வ) ஒன்றாகக் கலந்து காய்ச்சிக் காதிலிடத் தீரும்.

5 வது—மனோசிலை தாளகம் சேங்கொட்டை வகைக்கு வராகனெடை (க) சிதைத்து மூன்று பலம் நல்லெண்ணெயிற் போட்டு வெள்ளாட்டுநீர் படி (க) கூடவிட்டுப் பதமாகக்காய்ச்சி வடித்துக்காதில் விட்டடைக்கப்புண் ஆறும்.

6 வது—வில்வப்பழச் சதையை நல்லெண்ணெயில் வேகவைத்துக் காதிலடக்கமாறும்

7 வது—வெள்ளுள்ளி முருங்கைவேர்ப்பட்டை எருக்கம்பூ கள்ளிப்பால் வகைக்கு வராகனெடை (க) நண்டு (க) இவைகளைச் சிதைத்து கா்ற்படி வேப்பெண்ணெயிற் போட்டுக் காய்ச்சிக் காதில் விட்டடைக்கத் தீரும்

காதிரைச்சலுக்கு

தைவேளைச் சாறும் நல்லெண்ணெயும் ஓரளவாகக் காய்ச்சி காதிலடைக்க மாறும்.

காதெழுச்சிக்கு

சுக்கு உள்ளி வசம்பு குன்றிப் பருப்பு கோஷ்டம் இந்துப்பு திப்பிலி இவைகளை யோர்நிறையாக எருக்கம் பழுப்புச் சாற்றாலாட்டி நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வடித்துக்காதிலடைத்துவரத் தீரும்.

2 வது—கிலுகிலுப்பை வேரையரைத்து நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதிலடைக்கத் தீரும்.

காதிரைச்சல் வலிக்கு

முசுமுசுக்கை யிலையும் வெள்ளுள்ளியும் சிதைத்துக் காதிற் பிழியத் தீரும்.

2 வது—காத்தட்டிக் கொழுந்து உள்ளி வசம்பு ஓர் நிறையாக அரைத்து நல்லெண்ணெயிற் போட்டு வேகவைத்துக் காதில் விடத் தீரும்.

காதப்புழு விழுதலுக்கு

செம்பொனெரிஞ்சி பேய்ப் பீர்க்கம்வேர் காயம் கருஞ்சீரகம் வசம்பு இவைகளை யோர் நிறையாக வேப்பெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வடித்து காதிலடைத்தாலும், ஆடுதீண்டாப் பாளையை சிதைத்துக் காதிற் பிழிந்தாலும், முருக்கிலைச் சாறும் நல்லெண்ணெயும் ஓரளவாகக் கலந்து காதிலடைத்தாலும் புழுசெத்து விழும்.

காதுமந்தத்திற்கு

கள்ளியை வாட்டிப் பிழிந்தசாறு நல்லெண்ணெய் வெள்ளுளிச்சாறு ஆவின்பால் வகைக்குப்படி (க) ஒன்றாகக்கலந்து அதில் முருங்கைவேர் வசம்பு வகைக்குக் கழஞ்சு (ச) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து இருபதுநாள் காதில்விட்டடைக்க மாறும்.

2 வது—கையாந்தகரை காயுருவி சங்கு தூதுளை வேலிப் பருத்தி இவைகளினிலையும எருக்கம் பூவும் ஓர் நிறையாகதத ட்டி யரைத்து (கம) நாள்வரை காலையில் சிரசில் அப்பிவைத் திருந்து மாலையில் ஸ்நானஞ் செய்துவர மாறும்.

3 வது—வெள்ளுள்ளி தாளகம் முள்ளங்கிக் கிழங்கு இவைகளை யோர் நிறையாகத் தட்டி நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சிவடித்துக் காதிலடைத்து வரத்தீரும். குதிரைலத்திச் சாறும் இஞ்சிச்சாறும் ஓரளவாகக் கலந்து காதில் விட்டடைத்து வரத்தீரும்.

4 வது—ஒருபடி ஆவின் வெண்ணெயைச் சட்டியி விட்டு உருகும்போது ஒருபடி சங்கிலியைப் போட்டுக் காய்ச்சி வெந்தபதத்தில் அரித்துப் போட்டு மூன்று வராகனெடை பெருங் காயத்தைப் பொடித்துப் போட்டு இறக்கிவைத்துக் கொண்டு மூன்று நாள்வரை காலையிலும் மாலையிலும் சிரசிற் றேய்த்து நாலாநாள் பாசிப்பயறு தேய்த்து ஸ்நானஞ் செய்யவும், இந்தப்படி ஒருமண்டலஞ் செய்யத் தீரும்.

5 வது—சித்திர மூலம் கழஞ்சு (உ) முலைப்பாலா லாட்டி காற்படி நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு மண்டலஞ் சிரசிற் பதமிட்டு நாலுநாளைக் கொருதரம் ஸ்நானஞ் செய்து வரத் தீரும்.

6 வது—பன்றி முள்ளைச் சிதைத்துப் புங்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதில் விட்டடைத்துக் காற்றுப் படாமல் மூன்று நாள் வரையிருக்கத் தீரும.

7 வது—மிளகாய் துலாம் (க) தூணிநீரிற் போட்டு எட் டொன்ருக வற்றவைத்து வடித்து அதில் நல்லெண்ணெய் படி (க) கூட விட்டு மிளகு பலம் (க) அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவர காதடைப்பு குத்து மண்டைக்குத்து மேல்வலி சொரிசிரங்கு புடைசூலை மேகவாயு சோகை திமிர் வாதந் தீரும்.

காதிரைச்சல் குத்தல் மந்தம் எழுச்சி முதலான செவிநோய்கட்கு

ஒருபடி நல்லெண்ணெயில் முருங்கைப்பூ மஞ்சள் மலராத நாணற்பூ மிளகு வகைக்குப் பலம் (க) வலம்புரிக்காய் வராக னெடை (கூ) அதிமதுரம் தக்கோலம தாரம் சடைக்கஞ்சம் வகைக்குக்கழஞ்சு (க) பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித் துக் காதிலடைத்து ஒன்றை விட்டொருநாள் ஸ்நானஞ் செய் துவரத் தீரும்.

2 வது—ஆவினெய்படி (வ) நல்லெண்ணெய்படி (க) ஒன்ருக்கலந்து அதில் இரசம் அபின் கெந்தகம் வெள்ளைப் பாஷாணம் வகைக்கு ஒருகழஞ்சு வீதம் பொடித்துப் போட்டுக்காய்ச்சி வாரத்திற் கிரண்டுமுறை ஸ்நானஞ் செய்து ஒருதுளிகாதில் விட்டடைத்துவரத் தீரும்.

3 வது—காற்படி வேப்பெண்ணெயில் மஞ்சள் பலம் (க) வசம்பு ஈருள்ளி வகைக்குப் பலம் (௨) சிதைத்துப் போட்டுக்காய்ச்சி வடித்துக் காதிலடைத்து உச்சியிற் றேய்த்து வரத் தீரும்.

4 வது—நல்லெண்ணெய் படி ஒன்றில் நொச்சிப்பூ கொடுவேலி வேர்ப்பட்டை மிளகு கற்ருழை வேர் வலம்புரிக்காய் வெளுச்சிப்பிசின் கடுகுரோகணி வகைக்கு வராகனெடை (ச) இவைகளைச் சாராயத்தா லாட்டிப்போட்டு முள்ளுக்கு ராசர்ளி (அ) பிச்சுப்போட்டுக் காய்ச்சி வடித்துக் காதிலடைத்துச் சிரசிற் றேய்த்து முழுகிவரத் தீரும்.

5 வது—ஒரு படி நல்லெண்ணெயில் ஒருபல நிலப்பனைக் கிழங்கை யரைத்துப்போட்டு வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

6 வது—இலைக்கள்ளி புனல் முருங்கை இவைகளின் சாறு வகைக்குப்படி மாகாணி ஆவினெய் வெண்ணெய் வகைக்குப் படி (வ) ஒன்றாகக் கலந்து அதில் மாமஞ்சள் வெள்ளைப்பூடு சுக்கு வலம்புரிக்காய் கரியசீரகம் நண்டிறைச்சி நத்தை முசுறு முட்டை வகைக்கு வராகனெடை (க) சிதைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக்கருங்கோழி முட்டைத் தயிலம்வராகனெடை (க) கூடவிட்டுக் கலந்துகொண்டு பன்னிரண்டு நாள்வரைகாதில் விட்டுப் பஞ்சுகொண்டு மூடிவைத்திருக்கத் தீரும்.

7 வது—முசு முசுட்டை பூநாகம் நண்டிறைச்சி வெள்ளுள்ளி கோழிமுட்டை மஞ்சட்கரு குக்கில் வசம்பு வகைக்குக் கழஞ்சு (க) சிதைத்து அரைக்காற்படி வேப்பெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதில் விட்டடைக்க மாறும்.

காதில் ஈப்புகுந்தால்

முத்தெருக்கஞ்செவி யிலையைக் கசக்கிக் காதிற் பிழிந்தாலும் அல்லது கோழி யவரை யிலையையும் குப்பை மேனி யிலையையும் கசக்கிக் காதிற் பிழுந்தாலும் அல்லது கோழி யவரை யிலையையும் கசக்கிக் காதிற் பிழிந்தாலும் ஈசெத்து விழும்.

ஜன்னி ரோகங்களுக்கு

ஜன்னிகளின் பெயர்

அந்தகன், சீதாங்கம், கண்டகுச்சம், பொக்கநேத்திரம், அபிணியாசம், உருத்திரதாகம், பீர்த்தட்டி, தாந்திரிகன், சித்தவிப்பிரமை, பிரலாபம், கருனியாசம், விக்கநாதம், ஆக 13-வித ஜன்னிகளாம்.

அந்தகஜன்னிக்கு நிவர்த்தி

கொடுவேலிவேர் பலம் (உ) வாய்விளங்கம் சுக்கு திப்பிலி மிளகு வகைக்குப் பலம் (உ) இரண்டுபடி தண்ணீரிற் போட்டுக் காற்படியாய்க் கஷாயஞ்சொய்து மூன்றுபோது கொடுக்க அந்தகசன்னி முதலான் 13-சன்னியுந் தீரும்.

2 வது—கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் கொத்தமல்லி வாய்விளங்கம் குறுந்தொட்டிவேர் முத்தக்காசு தூதுளை இவைகளை வகைக்குப் பலம் (வ) வீதம் இடித்து இரண்டுபடி தண்ணீரிற் போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்துக்கொண்டு அடிக்கடி கொடுத்துக் கொண்டிருந்தால் தாகம் வாந்தி விக்சல் தீரும்.

3 வது—நெருஞ்சி நொச்சி சித்திரமூலம் சுக்கு பேய்ப் புடல் மிளகு திப்பிலிமூலம் செவியம் வகைக்குப் பலம் (வ) இடித்து ஒருபடி ஜலத்திற்போட்டு அரைக்கால்படியாய் வற்ற வைத்துக் கொடுக்கத் தீரும்.

சீதாங்க ஜன்னிக்கு நிவர்த்தி

திப்பிலி திப்பிலி மூலம் செவியம் சித்திரமூலம் மிளகு சுக்கு இலவவேர் கடுகு ரோகணி உமுரிவேர் பற்பாடகம் சிறுதேக்கு பேய்புடல் வகைக்குப் பலம் (வ) வீத மிடித்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

2 வது—நன்னாரிவேர் வில்வவேர் முத்தக்காசு கடலிராஞ்சிப்பட்டை பேய்ப்புடல் செங்கழு நீர்க்கிழங்கு பற்பாடகம் பேராமுட்டி சிறுதேக்கு செவியம் வகைக்குப் பலம் (க) நாலு படி தண்ணீரிற் போட்டு எட்டொன்ருய் வற்றவைத்து வேளையொன்றுக்கு அரைக்காற்படி வீதம் ௬-போது கொடுக்கத் தீரும்.

3 வது—ஏலம் லவுங்கம் சந்தனம் பூசணித்தண்டு சுரைத்தண்டு தூதுளைவேர் சுக்கு வகைக்குப் பலம் (வ) வீதம் இடித்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற் படியாய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

கண்டகுச்ச ஜன்னிக்கு நிவர்த்தி

திரிகடுகு திரிபலை வெப்பாலையரிசி கடுகுரோகணி ஆடாதோடை வேர் மஞ்சள் மரமஞ்சள் இவைகளை வகைக்கி (வ) பலம் வீத மிடித்து ஒருபடி தண்ணீரிற் போட்டுக் கஷாயஞ் செய்து கொடுக்கத் தீரும்

2 வது—கடுக்காய்ப்பூ நாயுருவிவேர் முத்தக்காசு நிலவேம்பு சிறுதேக்கு மஞ்சள் மரமஞ்சள் கடுகுரோகணி கோஷ்டம் கொடுவேலி செவியம் திரிகடுகு பெருங் குமிழ் நெல்லி முள்ளி தான்றிக்காய் தேவதாரம் பிரமி வசம்பு இவைகளை முன்போற் கஷாயஞ்செய்து கொடுத்துத் திப்பிலியும் நாயுருவி யிலையும் ஒன்ருய்ச் சிதைத்து நாசியில் நசியமிடத் தீரும்.

3 வது—நொச்சியிலை சந்தனம் பற்படாகம் கடுகுரோகணி வட்டிவேர் விளாமிச்சம்வேர் பச்சை நாராசரந்தை பாவட்டைநன்னாரி கூவிளம் முன்னை இவைகளை வேளை யொன்றுக்கு உ பலம் வீதமிடித்து இரண்டுபடி தண்ணீரிற் போட்டுக் காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

4 வது—சித்திரமூலம் உமரிவேர் இலவவேர் திப்பிலிசுக்கு குங்கிலியம் செவியம் திப்பிலி மூலம் வகைக்குப் பலம் (வ) வீதம் இடித்து ஒருபடி தண்ணீரிற் போட்டு அரைக்காற் படியாய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்

பொக்கநேத்திர ஜன்னிக்கு நிவர்ந்தி

ஆடாதோடை சந்தனம் தூதுளை சுக்கு இலுப்பைப்பூ சிற்றுமுட்டி சிறுவழுதலை முத்தக்காசு பற்பாடகம் இவைகளை வகைக்கு க பலம்வீத மிடித்து நாலுபடி தண்ணீரிற் போட்டு எட்டொன்றாய்க் கஷாயஞ்செய்து வேளைபொழுக்குக் காற் படி வீதம் ௩-போது கொடுக்கத் தீரும்.

2 வது—பாதிரி சுக்கு எருக்கம்வேர் பற்பாடகம் பேய்ப் புடல் சித்திரமூலம் திரிகடுகு வகைக்குப் பலம் வ வீத மிடித்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற் படியாய் வற்றவைத் துக் கொடுக்கத் தீரும்.

அபினியாச ஜன்னிக்கு

வாதமடங்கி நிலவேம்பு சுக்கு வசம்பு ஓமம் திப்பிலி பேய்ப்புடல் பற்பாடகம் இவைகளை வகைக்கு வ பலம் வீதமிடித்து க படி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய்க் கஷாயஞ் செய்து கொடுக்கத் தீரும்

வாதமடக்கிவேர் கம்மந்திராய்வேர் தேசாவரம் கோஷ்டம் சடாமாஞ்சி சீந்திற்கொடி சிறுதேக்கு வெட்டிவேர் விலாமிச்சம்வேர் இவைகளை முன்போற் கஷாயம்செய்து கொடுக் கத் தீரும்.

உருத்திரதாக ஜன்னிக்கு நிவர்த்தி

இலந்தையிலை நன்னாரி சீந்திற்றண்டு வெட்டிவேர் விலாமிச்சம்வேர் பூநாகம் முசுறுமுட்டை ஆடாதோடை முத்தக்காசு சுக்கு பேய்ப்புடல் இவைகளை முன்போற் கஷாயஞ்செய்துகொண்டு ஷை கஷாயமும் இஞ்சிச்சாறும் ஓரளவாய் ஒன்றுய்க்கலந்து அதில் கொஞ்சம் முலைப்பாலுந் திப்பிலிப்பொடியுஞ் சேர்த்துக் கொடுக்கத்தீரும்.

2 வது—வேப்பம்பட்டை சங்கு உமரிவேர் உப்பிலிவேர் சித்திரமூலம் சுக்கு சம்பங்கி வகைக்குப்பலம் (வ) வீத மிடித்து ஒரு படி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத் துக் கொடுக்கத்தீரும்.

பீர்த்தட்டி ஜன்னிக்கு நிவர்த்தி

பூசனித்தண்டு முத்தக்காசு சுக்கு கச்சந்திராய்வேர் தூதுளை கண்டங்கத்திரி பற்பாடகம் மல்லிசிறுவழுதலை இவை வகையொன்றுக்கு (௱) பலம் வீதமிடித்து ஒரு படி தண்ணீரிற்போட்டுக் கஷாயம் செய்து ௬-போது கொடுக்கத்தீரும்.

2 வது—அழிஞ்சிவேர் சுக்கு சித்திரமூலம் பேய்ப்புடல் மரமஞ்சள் சீந்திற்றண்டு வகைக்குப்பலம் (வ) வீதமிடித்து ஒரு படி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கத்தீரும்.

தாந்திரிக ஜன்னிக்கு

பிரமியிலை முந்திரிப்பழம் முத்தக்காசு வசம்பு தண்ணீர்விட்டான் கிழங்கு கொன்றைப்பட்டை கடுக்காய் கடுகுரோகணி நெல்லி தான்றி சிற்றாமுட்டி வேப்பம்பட்டை பேய்ப்புடல் நிலவேம்பு திரிகடுகு கொடுவேலி தேவதாரம் இவைகளை வேளையொன்றுக்கு (வ) பல வீதமிடித்து (உ) படி தண்ணீரிற்போட்டு காற்படியாய் வற்றவைத்து இந்தப்படி ஆறுபோது கொடுக்கத் தீரும்.

2 வது—முத்தக்காசு சந்தனம் சுக்கு பற்பாடகம் விலாமிச்சை இருவேலி இவைவகைக்கு (வ) பலவீதமிடித்து ச-படி தண்ணீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்திறுத்து அதில் காற்படி பொரித்த அரிசிபோட்டுக் கஞ்சிகாய்ச்சிக் கொடுத்து அகிற் சந்தனம் குங்கிலியம் சாம்பிராணி தேற்றாவிதை தகரவிதை தேவதாரம் கற்பூரம் தேன் இவைகளை யோர்நிரையாய் நெருப்பிற்போட்டு புகை பிடிக்கத்தீரும்.

3 வது—நெல்லிப்பருப்பு கடுக்காய் நிலவேம்பு பற்பாடகம் கண்டங்கத்திரி கடுகுரோகணி கச்சோலம் சுக்கு திப்பிலி வகைக்கு பலம் (வ) இடித்து ஒருபடி தண்ணீரிற் போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

4 வது—திப்பிலி முத்தக்காசு பேய்ப்புடல் சுக்கு சீரகம் கொத்தமல்லி கூவிளவேர் கொட்டாங்கரந்தை சீந்தில் இவைகளைமுன்போற் கஷாயஞ் செய்து கொடுக்கத் தீரும்,

சிந்தவிப்பிரம சன்னிக்கு நிவிர்த்தி

கடுக்காய் பற்பாடகம் கடுகுரோகணி நிலவேம்பு முந்திரிப்பழம் தேவதாரம் தண்ணீர்விட்டான் கிழங்கு முத்தக்காசு கொன்றைப்பட்டை பேய்ப்புடல் தேசாவரம் இவைகளை வே

ளையொன்றுக்கு (வ) பலவீத மிடித்து ஒருபடி தண்ணீரிற் போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும் இந்தப் படி கூ-போது கொடுக்கத் தீரும்.

2 வது—முந்திரிப்பழம் பற்பாடகம் நன்னாரிவேர் பேரிச்சம்பழம் சுக்கு திப்பிலி இவைகளை வேளை யொன்றுக்கு காற்பல வீத மிடித்து உ-படி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

3 வது—நொச்சி யிலை முள்ளியிலை. கஞ்சாங் கோரையிலை வெள்ளுள்ளி திரிகடுகு வகைக்குப் பலம் (வ) வீதஞ் சிதைத்து ஒருபடி நீரிற்போட்டு அரைக்காற் படியாய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

பிரலாப ஜன்னிக்கு நிவர்த்தி.

நிலவேம்பு வட்டத்திருப்பி முத்தக்காசு சிறுவழுதலை சிறுகாஞ்சோரி கண்டங் கத்திரிவேர் சிறுதேக்கு திப்பிலி இவைகளை வேளையொன்றுக்குக் காற்பல வீதமிடித்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற் படியாய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

கண்ட மாலைக்கு

உள் மருந்து.

காரெள்ளெண்ணெய் படி காலில் சித்திர மூலப்பட்டை பலம் (௭) அரைத்துப் போட்டு எண்ணெய் காய்ந்து வரும் போது மூன்று விராகனிடை கருப்புக்கட்டியைத் தட்டிப்போட்டு மெழுகு பதத்திலிறக்கி வைத்துக்கொண்டு மூன்றுநாள் வரை வேளையொன்றுக்கு ஒருகாண்டி விதம் உப்புப்புளித்தள்ளிப் பத்தியமா யிருக்க கண்டமாலை அரையாப்புத் தீரும்.

2 வது—நல்லெண்ணெய் படி காலிய் சித்திரமூலப்பட்டை கொடு வேலிவேர்ப்பட்டை விஷ்ணுகாந்தி வேர் பட்டட வீடு வகைக்குப் பலம் (க) சங்கு நாரிருவி சிறுபூனை இவைகளின் வேர்ப்பட்டை வகைக்குப்பலம் (௭) வசம்பு விராகனிடை (உ) இவைகளை யரைத்துப் போட்டு ஒருநாள் ரயில்வைத்து மறுநாட்காய்ச்சி வேளையொன்றுக்கு ஒரு காண்டிவீதம் ஏழுநாள் உப்புப் புளி நீக்கிச் சாப்பிட்டுவரத் தீரும்.

கண்டமாலை முதலான ரணங்களுக்கு மேற்பூசம் களிம்பு.

துத்தம் கெந்தகம் சூதம் காசுக்கட்டி துருசு குங்கிலியம் குக்கில் மிருதாரசிங்கி தாரம் மேம்பாடம் பட்டைவேர்தோன்றிக் கிழங்கு இவைகளை யோர் நிரையாய் ஈருள்ளிச்சாற்றால் ஒரு நாளாட்டி உலர்த்திப் பின்பு வேப்பெண்ணெய் விட்டுக் களிம்பாகும்வரை அறைத்துப் புண்ணிற் போட்டுவரத் தீரும்.

2 வது—வெள்ளைப்பாசாணம் மனோசிலை காரீயம் வேர்தோன்றிக் கிழங்கு சூதம் கெந்தகம் அரிதாரம் மிருதாரசிங்கி துத்தம் துருசு இவைகளை யோர் நிறையாய் வெற்றிலைச்சாற்றாலாட்டி உலர்த்திப் பின்பு வெண்ணெய் படி காலில் நரிவிரட்டி பெருந்தும்பை எட்டி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்குப் பலம் (க) வீதம் அறைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து கல்வத்திட்டுக் களிம்புபோலரைத்துப் புண்ணிற்போட ஆறும்.

ஷை ரணங்களுக்குத் துவர்ச்சீலை.

உதியம் பெருமாம் வேம்பு செங்கத்தாரி பூதகரப்பான் இவைகளின் பட்டை தேவதாரம் வகைக்கு விராகனிடை (உ) கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் மிளகு பூடு வெள்ளைக்குங்கிலியம் காசுக்கட்டி வகைக்கு விராகனிடை (க) துருசு விராகனிடை (வ) இவைகளை யரைத்துக் காற்படி நல்லெண்ணெ யிலாவது வேப்பெண்ணெய்ருலாவது போட்டுக் காய்ச்சிவடித்துச் சீலையிலூட்டி ரணங்களிற்போட்டு வரத் தீரும்

கண்டமாலை விப்புருதி அரைசிராப்பு மூலைக்குத்து கட்டிகளுக்கு மேற்பூச்சு.

ஆவினெய் பால் வகைக்குப் படி (೭) சதிரக்கள்ளிப்பால் படி அரைக்கால் விஷ்ணுகரந்தி வட்டத்திருப்பி கொடுவேலி இவைகளின் சாறு வகைக்குப் படி (வ) ஒன்றாய்க்கலந்து பூடு வசம்பு வகைக்குப் பலம் (வ) வீதம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு காசிடை உள்ளுக்குங் கொடுத்து மேலிலும் பூசத் தீரும் உப்புப்புளி நீக்கிப் பத்தியங் கொள்ளவும்.

2 வது—காற்படி வேப்பெண்ணெயில் வலம்புரிக்காய் கஸ்தூரி மஞ்சள் ஏலம் கருஞ்சீரகம் துருசு துத்தம் வகைக்குக் கழஞ்சு (உ) மாவிலிங்கம் கொழுந்து கொடுவேலி வேர்ப்பட்டை வகைக்குப் பலம (க) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துப் பூசவாறும்.

அரையாப்பு கட்டிக்கு

1-வது—ஆடுதிண்ணுப்பாளை சமூலமும் வசம்பும் சமனிடை யெடுத்து பஞ்சிபோல் இடித்து கட்டியளவுக்கு பில்லை தட்டி கட்டியின்மேல் வைத்து அதற்கு மேல் ஓட்டுபில்லை நருக்கிவைத்து காச்சாவினால் கட்டிவைக்கவும் இப்படி 2 - 3- கட்டு கட்டினால் அரையாப்பு கரைந்துபோகும்.

2-வது—முருங்கைவேர் பட்டையும் புழுங்கலரிசியும் சமமாக யெடுத்து கொஞ்சம் உப்பு சேர்த்து அரைத்து பில்லை தட்டி கட்டியின்மேல் வைத்து கட்டினால் 2-3-கட்டில்கரைந்து போகும்.

3-வது—காஞ்சிரங்கொட்டை விரையும் மிளகும் மஞ்சளும் சீரகமும் சேர்த்து அரைத்து கட்டியின்மேல் தளமாய் பூசினால் 2-3-வேளையில் கரைந்துபோகும்.

4-வது—பாவட்டம் வேரும் பூலாப்பூவும் அறைத்து கட்டியின்மேல் தளமாய் பூசிவர 2-3-வேளையில் கட்டி கரைந்து போகும்.

5 வது—எருக்கன்செடி வடக்கேபோகிற வேரும் களிமண்ணும் அறைத்து கட்டியின்மேல் பூசிவர 2 3-பூசலில்கரைந்து போகும்.

6 வது—வெள்ளை பாஷாணம் 2-விராகநிடை மஞ்சள் மெழுகு 1–பலம் மெழுகை அடுப்பிலேற்றி உருகும்போது ஷெபாஷாணத்தை பொடிசெய்துப் போட்டுக் கிளரியிறக்கி ஆரியபின் பில்லை தட்டி கட்டியின்மேல் வைத்து மேலே ஓட்டுபில்லை வைத்து காச்சாவினால் கட்டிவைக்க இரண்டு வேளையில் கரைந்துபோகும்

7 வது—பழம்புளி 1-அல்லது $1\frac{1}{2}$-பலம் யெடுத்து 10–சேராங்கொட்டை சேர்த்து பஞ்சுபோல் யிடித்து பில்லைதட்டி கட்டியின்மேல் வைத்து காச்சாவினாலாவது சாதாரணதுணியினாலாவது அழுத்தமாய் கட்டி மூன்றாவது நாள் அவிழ்த்துவிடவும் கட்டிகரைந்து போயிருக்கும் மறுநாள் முதல் பேதியாகக் கூடிய பேதியெண்ணை 3-நாள் சாப்பிட உலர்ந்துபோகும்.

8 வது—வெள்ளைப்பூண்டும் வெள்ளருகும் சமநிடை யெடுத்து அரைத்து கட்டிகளின்மீது வைத்துக் கட்ட வீக்கம்கறைந்து போகும்.

9 வது—முடக்கொத்தானிலை ஒரு பிடி களச்சிக்கா யளவு நல்லவெல்லம் களச்சிக்காயளவு சுண்ணாம்பு இவைகளை அரை

த்து பில்லையாக்கி கட்டியின்மேல் வைத்துக்கட்ட கரைந்து போகும்.

10 வது—எருக்கம்பிஞ்சும் வெள்ளைப்பூண்டும் சமனிடை யெடுத்து உமிக்காந்தலில் வெதுப்பி அறைத்து கட்டியின்மீது தளமாய் பூசினால் 2-பூசலில் கரைந்துபோகும்.

11 வது மஞ்சள் மெழுகு ஒருபலம் வெள்ளை பாஷாணம் அரைக்கால் பலம் புதியபானை யோட்டை அடுப்பிலிட்டு மெழு கைப்போட்டு உருகினவுடன் பாஷாணத்தைப் பொடித்துப் போட்டுக் கிளரியிரக்கி ஆரியபின் யெடுத்து கட்டி யெவ்வளவு பரவியிருக்கிறதோ அந்த அளவுக்கு பில்லை தட்டி கட்டியின் மேல் வைத்து கச்சுப்பட்டையினால் இருகக் கட்டவும் இப்படி 3-இரவு கட்டினால் எப்பேர்பட்ட கட்டியும் கரைந்துப்போகும் பிறகு எண்ணையாவது பேதிக்காவ சாப்பிட வேணும்.

12-வது அமுக்கனுங்கிழங்கு மைசாட்சி சுக்குபெருங்காயம் பளிங்கு சாம்பிராணி இவைகள் சமனிடை யெடுத்து எருக்கன் பழுப்புசாற்றாலரைத்து கட்டியின்மேல் தடவி அனல் காட்டவும் இப்படி மூன்று பத்து போட்டு நாலாநாள்பேதிக்கு கொடுக்கவும் இதேபத்து திடைவாழைக்கும் போடலாம்.

இங்கனம் கூறிய மேற்பூச்சு வகையாராக்களில் சிலதேகத் திற்குகட்டிகள் கரைந்துபோவதுமுண்டு சிலதேகத்திற்கு கரைந் து புண்ணாகும் பட்சத்தில் அடியிற்கூறியிருக்கும் களிம்பு அரை த்து ஷை ரிணத்தில் தடவிவந்தால் ஆரிப்போகும் இந்தக்களிம் பை தடவிவரும்போதே கீழ்கூறியிருக்கும் எண்ணையை காய்ச்சி 5-நாள் 7-நாள் வீதம் காலை ஒரேவேளை சாப்பிட்டு பத்தியமா யிருந்தால் கண்டமாலை முதலிய எல்லா ரிணங்களும் ஆரிப் போகும்.

அரையாப்பு ரிணத்திற்கு களிம்பு

லிங்கம் ரசகற்பூரம் மிருதார் சிங்கி வெள்ளை குங்கிலியம் கடுக்காய் தோல் மாசிக்காய் இவைகளை சமனிடையாய் நிருத் தெடுத்து பசும் வெண்ணை போட்டு (கண்மையைப்போல்) அதி மிருதுவாயரைத்து அந்தமுத்தையை பில்லைதட்டி நல்ல ஜெலத் தில் ஒருநாள் மிதக்கப்போட்டு மறுநாள் யெடுத்துரிணங்களின் மீது தடவிவந்தால் உலர்ந்துப் போகும் இதன் கீழ் சொல்லியி ருக்கும் எண்ணையை காச்சி 5-நாள் சாப்பிட்டால் தேசம் பரி சுத்த மாகும்

அறையாப்பு வந்தவர்களுக்கு எண்ணெ.

பச்சை கொடிவேலி வேரின்பட்டை பலம் 2. இவைகளை அரைத்து (கால்படி) அல்லது 10-பலம்நல்லெண்ணெயில்போட்டுக் கலக்கி பொடுதலைச்சாறு (கால்படி) அத்துடன் விட்டு வெள்ளைப்பூண்டு பொன்னிறமாய் வருகிற சமயத்தில் இரக்கி அப்படியே ஆரவைத்து ஒருகரண்டி எண்ணெயும் அடியில் நின்றிருக்கும் கடுகு ஒரு கரண்டியும் சாப்பிட்டு உப்பு புளி நீக்கி பத்தியமாக 7-நாள் சாப்பிடவும். மறுபத்தியம் 7-நாளும் சுட்ட புளி வருத்த உப்பு கூட்டவும் கத்திரி முருங்கை அவரை துவரை வெள்ளாட்டுக்கரி இதுகள் சேர்க்கவும் அரைக்கீரையாகும் பளிங்கு சாம்பராணிபோட்டு காச்சிய நல்லெண்ணெயில் தலை முழுகவும் பரிசுத்தமாய் விடும்.

பிரமியம்--அல்லது

மேகவெள்ளைக்கு

மூங்கிலுப்பு, மாசிக்காய், வால்மிளகு, சமநிடை, யெடுத்து (கொப்பாப்பியா) என்னும், குங்கிலிய எண்ணெ விட்டு லேகியம் போல் பிசைந்து-காலை மாலை இருவேளையும் மூன்று நாள் கொடுக்க ரத்தவெள்ளை பால்வெள்ளை இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

2 வது—வெடியுப்பு, பொரித்தபடிகாரம், வால்மிளகு-வகைக்குப் பலம் (க) இவைகளை யிடித்து பவுடர் செய்து பசும் வெண்ணெபோட்டு மெழுகுபோல் அறைத்து 1 வேளைக்கு புன்னைக்காயளவு இருவேளையும் கொடுக்க மூன்றுநாளில் மேக வெள்ளை ஒழுக்கு தீரும் சுட்டபுளி வருத்த உப்பு, மறுபத்தியத்தில் பச்சைபுளி சேர்க்கலாம் பளிங்கு சாம்பிராணிபோட்டு காச்சிய எண்ணெயினால் தலைமுழுகவும்.

மூன்றுவித வெள்ளை அல்லது ஐந்துவித வெள்ளைக்கு மருந்து

வெடியுப்பு சாலாமிசரி பனங்கற்கண்டு வகைக்கு ரூபாயிடை 1 இம்மூன்றும் மெழுகுபோல் இடித்து-3-பங்காக்கி-3-நாள் காலையில் கொடுக்கவும் வெள்ளாட்டிரைச்சி நெய் வெங்காயம் ஆகும் மிளகு உப்பு வருத்துக் கூட்டவும் புளிகூடாது.

2 வது—முலைப்பாலில் மூன்றுநாள் ஊரவைத்த இரசக்கற்பூரம்விராகனிடை 2 வெள்ளைகுங்கிலியம் விராகனிடை 3 கெந்தகம்

விராகனிடை 2 கற்கண்டு விராகனிடை 5 பசும்பால் துளி துளியாய் விட்டு அறைத்து 14 பாகமாக்கி வைத்துக்கொண்டுகாலை மாலை இருவேளையும் 7 நாள் சாப்பிட சகலமேகமும் தீரும். இச்சா பத்தியம்

3 வது-பூரம் விராகனிடை 2ஏலரிசி விராகனிடை 1லவங்கம்விராகனிடை 1வால்மிளகுவிராகனிடை 1இவைகளை பவுடர் செய்து கலுவத்திலிட்டு 6பலம் விளக்கெண்ணெயை அருகில் வைத்துக்கொண்டுதுளி துளியாய்யெண்ணெவிட்டு இரண்டுநாள் வரையில் கைவிடாடல் அறைத்து ஒருநாள்சூரியபுடம் வைத்தி யெடுத்துக்கொண்டு அந்த எண்ணெ 7நாளைக்கு காலையில்சாப்பிடவும் வெள்ளைமேகம் கிரந்திசிரங்கு கைகால் பிடிப்புயாவும் தீரும். குழந்தைகள் சிரங்குகளுக்கு 1-2 காசுயிடை கொடுக்கலாம். பெரியவர்கள் சிரங்கு சொரிகிரந்தியதுகளுக்கு அரை பலம் வீதம் கொடுக்கலாம் இச்சாபத்தியம் வெள்ளை கண்டவர்கள் சுட்டப்புளி சேர்ந்தால் நலம் மறுபத்தியம் ஆனபிறகு எண்ணெ காய்ச்சி முழுகவும்.

4 வது-பசும்பால் ஆழாக்கு சப்ஜாவிரை கால்பலம் பொடி செய்து அதிற்போட்டு மிட்டாயிக்கடை பூந்தி 2 பலம் லிங்கம் 1 குன்றுமணியிடை காராங் கண்ணிச்சார் அரையணு விடை இவைகள் யாவும் ஒன்றாய்க்கலந்து மூன்றுபங்காக்கி மூன்றுநாள் காலையில் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

5 வது—சோராங்கொட்டை 5 யெடுத்து இரண்டுதுண்டுகளாகவெட்டி 3 பலம்நெய்யிற்போட்டு அகலக்கரண்டி அல்லது சட்டியில்பெய்து அடுப்பேற்றி ஷை கொட்டைகள் சிவந்து முரியும்பதத்தில் வெண்காரம் 1 விராகனிடைபொடித்துப் போட்டு யிரக்கிவைத்துக்கொண்டு நெய்யில் வெந்து முரிந்துக் கிடக்கும் கொட்டையை யெடுத்து விட்டு நெய்யை மாத்திரம் 3 பங்காக்கிமூன்றுநாட் காலையில் கொடுக்கவும் நாட்பட்ட வெள்ளை யாவும் தீரும் இதற்குப்பத்தியம் நெய் வெங்காயம் பச்சைப் பயரு அரிசி யாவும் சேர்த்து கிச்சடிபோல்செய்து சாப்பிடவும் தயிர், மோர் பால் ஆகும்.

இரத்த வெள்ளைக்கு.

பொடுதலைச்சாறு (கவ) பலம், நல்லெண்ணெ, (கவ) பலம் இவ்விரண்டும் கலந்து 2 பங்காக்கி காலைமாலை இருவேளையும் சாப்பிடவும் இப்படி 3 நாள் சாப்பிட சகலமேகமும் தீரும் இச்சாபத்தியம்.

இருவகை வெள்ளைக்கும்

வால் மிளகு பலம் 1 மாசிக்காய் பலம் 1 படிகாரம் பலம்

1 கம்பியுப்பு பலம் ½ இவைகளை யிடித்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு கால் ரூபா யிடை யெடுத்து வெண்ணெயில் குழைத்து சாப்பிடவும் இப்படி காலை மாலை இருவேளையும் 10-நாள் சாப்பிட்டால் சாதாரண வெள்ளை பால்வெள்ளை ஒழுக்கு இவை தீரும் இந்த பவுடரை குங்கிலிய எண்ணெயில் குழைத்து முன்மாதிரி இருவேளையும் 5-6-நாள் சாப்பிட்டால் மஞ்சள் வெள்ளை இரத்த வெள்ளையும் தீரும். மீன் கருவாடு கள்ளு சாராயம் ஆகாது சூடான பண்டங்களும் ஆகாது.

வெள்ளைக்கு முன் ஜாக்கிரதை நீர்பேதி.

பொரித்த படிகாரத்தூளும் கம்பி யுப்பும் சரியிடையெடுத்து மைபோல் பவுடர்செய்து எந்த மோரிலாவது கால்படி யெடுத்து அதில் ஷை பவுடர் கால்பலம் போட்டு நன்றாய்க் கலக்கி அதிகாலை சாப்பிட்டால் நீர் சுருக்கு நீர் தாரை யெரிவு இவைகளைத் தணித்து பிரயாசை யில்லாமல் மூத்திரம்வரும் காபிரிணத்தின் மீதுள்ள மாசுகளையும் அழுக்கையும் வெளிப்படுத்தும் 5-6-வீசை ஆரோக்கியமாய் நீர்போகும் இதற்கு நீர் பேதியென்று பெயர். மாலை 3-மணிக்கு ஒருவிசை முன்போய் மோரில் சாப்பிடலாம் சுரமாவது அதிககுளுமையாவதுவந்து இருந்தால் காலையில் சாப்பிடக்கூடாது இப்படி 3-நாள் சாப்பிட்டால் வெள்ளைரோகத்தின்சத்து ஒடிங்கிப்போகும் அதன் பிறகு எந்தமருந்து சாப்பிட்டாலும் அதிசீக்கிரத்தில் நிவர்த்தியாகும் நீர் பேதியென்பது பொட்டிலுப்பைப் பொடித்து வாழைக்கிழங்கு சாற்றில் 3-காசியிடை போட்டு சாப்பிட்டால் இன்னும் விசேஷமாய் நீரிரங்கும்.

நீர்வியாதிகட்கு

நீர்கடுப்பு எரிவுக்கு.

எருள்ளிச்சாறு அரைக்கால் படி வெங்காயம் விராகனிடை (க) பொரித்துப்போட்டு மூன்றுநாட்சாப்பிட நீர்கடுப்பு எரிவு தீரும்.

2 வது—இளநீரைக் கண்திறந்து அதில் சீரகம் சீனி பாசிப்பயறு வகைக்கு விராகனிடை (சு) போட்டு ஓரிரவுஊரவைத்துக் காலையிலந்த மருந்தை யெடுத்து அரைத்து இளநீரிற் கரைத்துச் சாப்பிடவும் இந்தப்படி மூன்று ஆறுவேளை சாப்பிட நீர் கடுப்பு எரிவு தீரும்.

3 வது—கீழ்க்காய் நெல்லியிலை ஒருபிடி சீரகம் விராகனிடை (க) அரைத்து எருமைத்தயிரிற் கலக்கி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

கடுக்காய் (க) சுக்கு (க) சீரகம் விராகனிடை (க) சுருளிப்பூடு (க) கீழ்க்காய் நெல்லி சமூலம் இவைகளைக் கஷாயஞ்செய்து சாப்பிட நீர்கடுப்பு எரிவு தீரும.

4 வது—அரைக்காற்படி வெந்நீரில் சந்தனம் ஆவின்வெண்ணெய் வகைக்கு ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் போட்டுச் சாப்பிட உடனே நிற்கும். வெந்நீரில் எலுமிச்சம்பழம் பிழிந்து கற்கண்டு கலந்து சாப்பிட நீர்கடுப்பு எரிவு தீரும்.

5 வது—எலுமிச்சம் பழச்சாறும் நல்லெண்ணெய்யுங் கலந்து சாப்பிட நீர் கடுப்பு எரிவு தீரும்.

6 வது—முத்தக்காசு ஆவரைவிரை தேற்றுவிரை புளியங்கொட்டை மேற்றோல் இவைகள் வகைக்குப் பலம் (க) பொடித்து ஒருபடி இளநீரில் ஓரிரவு ஊரவைத்துக் காலமே மூன்றுதபா சாப்பிட நீர் கடுப்பு எரிவு தீரும்.

7 வது—மூன்று விராகனிடை நீர் முள்ளி விரையை ஆவினெய்விட்டு வெதுப்பிப் பொடித்து அரைக்காற்படி தேங்காய்ப்பாலிற்கலந்து மூன்றுவேளை சாப்பிட நீர்கடுப்பு எரிவு தீரும்.

8 வது—ஒரு சிரங்கை ஆவின்பாலில் ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் புத்தான் சோற்றை அரைத்துக் கலக்கிச் சாப்பிட நீர்கடுப்பு பிரமேகந் தீரும் எலுமிச்சங்காய்ப் பிரமாணம் கட்டுக் கொடியிலையை அரைத்துக் காற்படி தண்ணீரிற் கலக்கி அதில் சீரகம் ஏலம் வகைக்கு ஒரு விராகனிடை பொடித்துப்போட்டு ஒரு துட்டிடை சீனிகலத்தண்ண நீர்கடுப்பு எரிவு தீரும்.

நீர்த்தாரை யெரிவு கடுப்பு சதைவளர்த்திக்கு.

ஆலவிழுது இரண்டுபிடி பரித்தி வேர்த்தோல் அசுவகெந்திக் கிழங்கு ஆவரை வேர்பட்டை முற்றின வெள்வேலாம் பட்டை வகைக்கொருபிடி பரித்திப் பிஞ்சு பரித்திவிரைப்பருப்பு வகைக்கொரு சிரங்கை ஏலம் அதிமதுரம் வகைக்குவிராகனிடை (ய) செங்கழு நீர்க்கிழங்கு கோஷ்டம் கிராம்பு சாதிப்பத்திரி சாதிக்காய் வகைக்கு விராகனிடை (ந) திப்பிலிவிராகனிடை (ச) பொரிகாரம் சாதிலிங்கம் வகைக்கு விராகனிடை (உ) முந்திரிப்பழம் தேன்மெழுகு வகைக்குப் பலம் (இ) பேரீத்தம்பழம் விராகனிடை (அ) நெஞ்சிக்காய் ஒரு எலுமிச்சங்கா

யப் பிரமாணம் இவைகளை ஆவின்பாலிற் கரைத்து அதில்நெல் லிக்காய்ச் சாறுபடி (வ) ஆவினெய்படி (ரு) கூடவிட்டுக் காய்ச் சிக் கிருதஞ்செய்து வேளையொன்றுக்கு மாகாணிப்படி விதஞ் சாப்பிட்டுவர நீர்கடுப்பு எரிவு தீரும்.

கல்லடைப்புக்கு.

சங்கிலை ஈருள்ளி பச்சைநெல்லுமி இவைகளையோர் நிறை யாய் இடித்துச் சாறுபிழிந்து வேளையொன்றுக்குக் காற்படி சாறு கொடுக்க உடனே கல்தெரித்து நீரிறங்கும் ஒருபல வெடியுப்பைச் சட்டியிலுருக்கி ஒருபடி தண்ணீர்விட்டு அரைப் படியாய் வற்றவைத்து வடித்து அதில் கோவைத்தண்டை யிடி த்துப் பிசைந்து வடிகட்டி ஒரு விராகனிடை வெங்காரத்தைப் பொரித்துப்போட்டு வேளையொன்றுக்குக் காற்படியாக இரு நேரங்கொள்ள கல்தெரித்து நீரிறங்கும் நெரிஞ்சிவோ சிறு பூளைவேர் சிறுகீரைவேர் சீரகம் வகைக்குப்பலம் (க) சிதைத் துப்போட்டுக்கசாயஞ்செய்து கொடுக்க நீர்கடுப்பு எரிவுதீரும்.

2 வது—கோவைத்தண்டை யிடித்துப்பிழிந்த சாறுபடி கால்பொரித்த சீனிக்காரம் சுண்ணும்பு வகைக்கு விராகனிடை (க) பொடித்துப்போட்டுக் கொடுக்க கல்தெரித்து நீரிறங்கும் நெரிஞ்சி சிறுபூளை மாவிலிங்கு பேராமுட்டி இவைகனின்மூலம் வகைக்குப்பலம் (ய) இடித்துப் படி நீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்து வேளையொன்றுக்குக் காற்படி விதம் கொடுக்க நீர்கடுப்பு எரிவு தீரும்,

3 வது—முள்ளிலவு நாவல் பூலா வெப்பூல முத்தக்காசு நன்னரி முல்லை சீந்தி செந்தாமரை சிற்றாமுட்டி சீதாசெங்கழு நீர் சிறுகீரை விராலி வெட்டிவேர் விலாமிச்சம்வேர் பொன்னாக் காணிவகைக்குப் பலம் (க) நாலுபடி இளநீரிற்போட்டு அரைப் படியாய்க் கசாயஞ்செய்து கொடுக்க நீர்க்கடுப்பு தீரும்.

சதை யடைப்புக்கு.

முற்றினகோழிக் கல்லீரலிலிருக்கிற சிறுகல்லும் வெள் ளரி விரையும் பூநாகமும் வெல்லமும் வகைக்கொரு கொட்டைப் பாக்குப்பிரமாணம் அரைத்து ஆவின்பாலிற் கலக்கி (சு) வேளை கொடுக்க நீரடைப்பு கல்லடைப்பு தீரும்.

2 வது—நாயுருவி சிறுநெருஞ்சி வாழைச்சருகு ஈருள்ளி சிறுபூளை இவைகளின் சாம்பல் வகைக்குப்படி அரைக்கால் தண்ணீரிற்கலக்கித் தெளிவிறுத்த அதில் பொரிகாரம் அதிமது ரம் வகைக்கு விராகனிடை (இ) பொடித்துப்போட்டு வேளை

ஒன்றுக்கு (வ) படி வீதம் மூன்றுநேரங்கொடுக்க நீரடைப்பு நல்லடைப்பு சதையடைப்பு நீர்கடுப்பு எரிவு தீரும்.

3 வது—ஆவினெய்படி (க)-ல் மூக்குவெட்டிச் சுத்திசெய்த செங்கொட்டை (௰௫) நறுக்கிப் போட்டுக் காய்ச்சி கருப்பாய் வருகிற பதத்தில் இறக்கிவைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு ஒரு காசிடைவீதம் (௫) நாட்கொள்ள நீர்கடுப்புதீரும்.

நீரடைப்புக்கு

கற்றாழஞ்சோற்றில் கடுக்காயைப் பொடித்துப் போட்டுக் கொஞ்சநேரம் வைத்திருந்து பிழிந்து வடிகட்டின தண்ணீர் படி (வ) வில் பொரித்த வெங்காரம் விராகனிடை (க) கருப்புக் கட்டி பலம் (வ) சிதைத்துப்போட்டுக் கொடுக்க விரோசனமாகி நீரிறங்கும். பசலி, நீலக்கத்திரியிலை வகைக்குப்பலம் (௰) இடித்துக்கசாயஞ்செய்து காற்படிவீதம் கொடுக்க நீர்கடுப்பு எரிவு தீரும்.

2 வது—குருஞ்சாவிலை கல்லத்திப்பட்டை கடுகுரோகணி திரிகடுகு நாயுருவி கொழுஞ்சிவேர் வகைக்குப்பலம் (க) இடித்து ஒருபடி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கவும் இந்தப்படி (௩) வேளை கொடுக்க நீர்கடுப்பு எரிவு தீரும்.

3 வது—ஆதண்டஇலையை ஆவின்வேர் விட்டிடித்து ஊறவைத்துப் பிழிந்து கொடுக்க நீர்கடுப்பு எரிவுதீரும்.

4 வது—சுறாமீன் தலையிலிருக்கிற இரண்டு கல்லையெடுத்து உலர்த்தி இளவெந்நீரி லுரைத்துக் கொடுக்க உடனே நீரிறங்கும் கோவைத்தண்டுச்சாறு தேங்காய்ப்பால் வகைக்குப்படி அரைக்கால் ஒன்றாய்க்கலந்து நற்சீரகம் விராகனிடை (க) பொடித்துப் போட்டுக் கொடுக்க நீர்கடுப்பு எரிவு தீரும்.

5 வது—அண்டத்தோல் வெள்ளரிவித்து எலிப்புழுக்கை வெங்காயம் இவைகளைச் சற்றுவெதுப்பிப் பொடித்து (வ) படி சுரையிலைச்சாற்றில் கலந்து கொடுக்க நீர்கடுப்பு எரிவு தீரும்.

6 வது—நீராகாரத்திற் பழங்கூரை வைக்கோலை ஊறவைத்துப் பிசைந்து வடிகட்டிக் காற்படி சாப்பிட நீரடைப்பு கல்லடைப்பு சதையடைப்பு நீங்கும்

7 வது—வெங்காரம் கர்ப்பூரசிலாசத்து வகைக்குப்பலம் (க) எலுமிச்சம்பழச்சாற்றுலாட்டி வில்லைதட்டி சுண்ணாம்புக்

குகையில் வைத்துச் சிறுபுடம்போட்டு ஒருவிராகனிடைவீதம் தேனிற்கொடுக்க நீரடைப்பு கலலடைப்பு சதையடைப்பு வெட்டை நீர்ச்சிறுப்பு கடுப்பு பிரமேகம் நீரடைப்பு முதலானவை தீரும்.

வெள்ளை வெட்டையின் குணம்.

வெள்ளைக் குங்கிலியம் கற்கண்டு வகைக்கு பலம் (எ) பொடித்துக்கொண்டு வேளையொன்றுக்கு ஒரு பலம் வீதம் அரைப்பல நல்லெண்ணெயில் மத்தித்து நாளொன்றுக்கு இருநேரமாக 7-நாட் சாப்பிட்டுவர நீரிழிவு வெட்டைத் தீரும்.

2 வது—தேங்காய்ப்பால் பரித்திவிரைப்பால் ஆவின்பால வகைக்குப் படி (க) ஒன்ருய்க்கலந்து அதில் பரங்கிப்பட்டை சுக்கு மிளகு நற்சீரகம் வகைக்குப் பலம் (க) பொடித்துப் போட்டு ஒன்றரைப்படியாய் வற்றவைத்துக்கொண்டு வேளையொன்றுக்குக் காற்படி வீதம் சாப்பிட்டுவரத் தீரும்.

3 வது—புங்கம்வேர் பால் படி (வ) தேங்காய் பால்ஆவின் பால் வகைக்குப்படி அரைக்கால் ஒன்ருய்கலந்து ஓரிலைத் தாமரை வேரை யரைத்து ஒரு எலுமிச்சம் காயளவு கரைத்து இந்தப்படி மூன்றுநாட் சாப்பிடத் தீரும்.

மேக நீரிழிவுக்கு

1 வது—மரமஞ்சள் கருவேலம் பிசின் வகைக்குப் பலம் அரைக்கால் மஞ்சள் தேற்ருவிரை வகைக்குப் பலம் (வ) ஆவரை விரை பலம் (உ௳) சூரணித்துத் திருகடிப் பிரமாணம் தேனில் (௧௰) நாட் கொள்ள மேகநீரிழிவு தீரும்.

2 வது—மரமஞ்சள் சுக்கு கடுகு வகைக்குப்பலம் அரைக்கால் கருவேலன் பிசின் பலம் (வ) ஆவரையரிசி பலம் (உ௳) இவைகளை ஆவரைவேர் கசாயத்தாலாட்டி மோரிற்கொள்ளவும் இந்தப்படி நாளொன்றுக்கு இருநோமாக இருபது நாள் வரை அன்ருடம் அரைததுச் சாப்பிட மேகநீரிழிவு தீரும்.

3 வது—ஆவாரங்கொழுந்து கல்மதம் கொன்றைவேர் இவைகளை சமமாய் புளித்த மோர்விட்டு எலுமிச்சங்காய் பிரமாணம் அரைத்து மோரிற் கலக்கி நாளொன்றுக்கு இருநேரமாக இருபதுநாட் கொள்ள மேகநீரிழிவு தீரும்.

4 வது—காரீயம் கழஞ்சு (ம) ரசம் கழஞ்சு (ச) ஒன்ருய்த் தொந்தித்துக் கல்வத்திட்டு காந்தம் கழஞ்சு (கஉ) சாதிலிங்கம்

(சு) இவைகளை மோர்விட்டரைத்து உழுந்துப் பிரமாணம் உண்டைசெய்து வேளையொன்றிற்கு ஒருண்டைவீதம் மோரில் மண்டலங்கொள்ள வேக நீரிழிவு தீரும்.

5 வது—சாதிக்காய் காந்தம் சாதிப்பத்திரி அபின் கோரோசனை காசுக்கட்டி இவைகளை ஓர் நிறையாய்ப் பொடித்துத் தேனில் ஒருமண்டலங்கொள்ள மேகநீரிழிவு தீரும்.

6 வது—மருளுமத்தம்விரை கருஞ்சீரகம் நற்சீரகம் காந்தம் ஓமம் திரிசாதம் லிங்கம் திப்பிலி பாற்கெருடக்கல் வகைக்குக் கழஞ்சு (க) அபின் கழஞ்சு (சு) இவைகளைத் தேன்விட்டரைத்துச் சிமிழில்வைத்துக்கொண்டு, வேளை யொன்றுக்குக் காற்கழஞ்சு வீதம் சாப்பி 'டுவர மேகநீரிழிவு தீரும்.

7 வது — ஆவாரங்கொழுந்து ஆவாரம்பூவரிசி கீழ்க்காய்நெல்லி சிற்றிலைப்பாலாடை ஆவரையிலை இவைகளைச் சமமாய்ச்சிதைத்து நாழி எருமைமோரிற்போட்டு அரைப்படியாய் வற்றவைத்து அதிமதுரத்தை அரைத்து ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் கல்மதம் நெல்லிப்பருப்பு வகைக்குப் பலம் (வ) தேற்றான்விரை (சு) இவைகளை ஷை மோரிலரைத்துக்கொண்டு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் ஷை மோரிற் கலக்கிக்கொடுக்கவும் இந்தப்படி (0) நாட்கொள்ள நீரிழிவு தீரும்.

8 வது—சாதிக்காய் பத்திரி கிராம்பி அபின் காந்தம் சாதிலிங்கம் ஆவரை விரை மருளுமத்தம்விரை பொரித்த பொரிகாரம் இவைகளை ஓர்நிரையாய் பொடித்து வேளையொன்றுக்கு ஒருகழஞ்சு வீதம் தேனிற் கொடுக்க மேகநீரிழிவுதீரும்.

9 வது— விடத்திலை விளா கட்டுக்கொடி இவைகளின் கொழுந்து ஆவரம்பட்டை வகைக்கொரு பிடி இவைகளை எருமைமோர் வார்த்தரைத்து வேளையொன்றுக்கு கொட்டைப்பாக்கு பிரமாணம் எருமைமோரிற் கரைத்து இருபதுநாளிருநேரஞ் சாப்பிட மேக நீரிழிவு தீரும்.

10 வது—எரங்கலரிசி சாமையரிசி வரகரிசி அமலையரிசி வகைக்குப்படி (க) பொரித்துத் திரித்துக்கோண்டு வேளையொன்றுக்கு ஒருபடி மாவீதம் காற்படி கோவைத்தண்டுச் சாற்றில் (கக) நாட்கொள்ள மேகநீரிழிவு தீரும்.

முளை மூலத்திற்கு

1 வது—எருக்கம்பஞ்செடுத்து கயிறுதிரித்து அதன்மேல் செங்கோட்டைப்பாலைத் தடவிமூலமுளையில் கட்டிவைக்கமுளை

அற்றுவிழும் விழுந்தவுடன் நொச்சியிலையை வதக்கி ஒத்தணஞ் செய்து தயிருஞ் சோரும் வைத்துக்கட்டத் தீரும்.

2 வது—எருமைக்கொம்பைச்சீவிக் குகையிலிட்டு ஊதிக் கரிக்கி ஆவின்வெண்ணெய்யிலரைத்து மூலமுளையில் மூன்று நாட் பூசிவைக்க முளை அற்றுவிழும் பிரண்டையும் மாவிலிங் கிலையும் வெதுப்பி ஒத்தனஞ்செய்யத் தீரும்.

3 வது—புரகமேற் புல்லுருவியை உலர்த்திச் சூரணித்து திரிகடிப் பிரமாணம் மூன்றுநாட்கொள்ள மூலமுளை வெளி யில் வரும் வந்தவுடன் நீர்ப்போக்கின எருமைத்தயிரை மூலத் தில் ஆறுநாட்கட்ட முளை கரைந்துபோகும்.

4 வது—வேப்பமுத்தின் பருப்பு ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்துச் சற்றே வெதுப்பி வில்லைதட்டி மூன்று நாள் கட்ட புழுவிழும் முளைகரையும்.

5 வது— பேய்ப் பீர்க்கவிரை துருசு கொடுவேலிவேர்பட் டை வகைக்கொரு பணவிடை எலுமிச்சம்பழச்சாற்றால் அரை த்து ஆவின் வெண்ணெயிற் குழைத்து முளையில் மூன்றுநாள் தடவி வெந்நீரிற் ஸ்நானஞ்செய்ய முளை கரையும்.

6 வது—செங்கொடி வேலிவேர் மஞ்சள்பொன்னரிதாரம் சமன்பொடி செய்து முளையிற் றடவக் கரையும்.

7 வது—எருக்கலம்பட்டை வெள்ளுள்ளி வகைக்குப்பலம் (வ) மைபோலரைத்து வேளை யொன்றுக்கு ஒரு பாக்களவு மேதித் தயிரில் ரு-நாட்கொடுக்க மூலமுளை அடியோடு அற்று விழும்,

8 வது—வெடியுப்பு சுண்ணும்பு துருசு வகைக்கு விராக னிடை (உ) ஆவின் நெய் விட்டரைத்து முளையில் ங-நாள் தட வி நாலாம் நாள் ஆதண்டை யிலையைக் காடியிலவிழ்த்துக் கழு வத் தீரும்.

9 வது—பொரிகாரம் வெங்காரம் சவுக்காரம் சமமாய் எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்து மூலமுளையிற்றடவக் கரைந்து போகும் சாமைத் தவுட்டை அனலிற்றூவிப் புகை பிடிக்கவும் தீரும்.

10 வது—பழைய மாங்கொட்டைப் பருப்பு பலம் (ச) மணத்தக்காளிச் சாற்றாலரைத் துலர்த்திச் சூரணித்துப் பாக்க ளவு எருமைக் தயிர்த் தண்ணீரில் சு-நாட் கொடுக்க மூலம் கரைந்துவிழும் நீர்மேல் நெருப்பையும் பாம்புச் சட்டையையும் பொடித்து நெருப்பிற்றூவிப் புகைபிடிக்கவும்.

11 வது—முத்தெருக்கஞ் செவிசமூலம் சுக்கு மிளகு திப்பிலி ஓமம் சீரகம் வகைக்குப்பலம் (க) சூரணித்துப் பாக்களவு இருபோது (எ) நாள் வெந்நீரில் உள்ளுக்குங் கொடுத்து ஷை பொடியை எருக்கலம்பாலில் மைப்போலரைத்து மூலமுளையிற் றடவவிழுந்துபோகும்.

பவுத்திரங்களுக்கு

நிவர்த்தி.

குப்பைம்மேனிச் சூரணமும் திப்பிலிச் சூரணமும் சமன கலந்து திரிகடிப் பிரமாணம் ஆவினெய்யில் மண்டலங் கொள்ளத் தீரும்.

2 வது— பரங்கிப்பட்டை பலம் (அ) கெந்தகம் பலம் (ச) ஆவிநெய்யால் வறுத்து குக்கில் பலம் (ச) திரிகடுகு திரிபலை திரிசாதம் அரிதாரம் அதிவிடயம் நவச்சாரம் வெங்காரம் கருஞ்சீரகம் நற்சீரகம் ஓமம் குரோசாணி ஓமம் சிவதை கடுகுரோகணி வெள்ளைக் குங்கிலியம் வகைக்குக் கழஞ்சு (ச) இவைகளை யிடித்துச் சூரணித்து அதற்கு நிகர் சீனிசேர்த்துத் திரிகடிப் பிரமாணஞ் சாப்பிட்டுவரத் தீரும்.

3 வது—பச்சைக் கொடுவேலி வேர்ப்பட்டையும் கொன்றையும் ஓர் நிறையாயவித்து நீர்சுண்டின பின்பு அரைத்து வேளையொன்றுக்கு ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரை மண்டலம் புளிதள்ளிச் சாப்பிட்டுவர பவுத்திரம் கண்டமாலை தீரும்.

ஷை வியாதிக்குக் கெந்தகவடகம்.

கெந்தகத்தை ஆவினெய்யில் பத்துதரம் உருக்கி ஆவின் பாலிற் சாய்த்தெடுத்து சங்கம்பழச்சாற்றால் மூன்றுநாளாட்டி ரவியில்வைத்து நன்றாகக்காய்ந்த பின்பு முருங்கைப்பூச் சாற்றால் ஒரு நாளாட்டிக் காயவைத்து அப்பால் மிளகு தக்காளிச் சாற்றால் ஒரு நாளாட்டிக் காயவைத்து மணல்மறைவில் புடம் போட்டு நான்காம் பாகத்தில் 'கண்டிருக்கிற அனுபானங்களில் வைத்துண்ண மூலம், ரிணபவுத்திரம், கொடி பவுத்திரம் முதலான ரோகங்கள் தீரும்

பவுத்திரம் கண்டமாலை கிரந்தி முதலானவைகட்குப் புகை.

ரசம் பாசாணம் துருசு துத்தம் கெந்தகம் வகைக்கு வராகனெடை (உ) கொடுவேலி வேர்ப்பட்டை (க) கரிப்பான் சாற்

ருலொரு சாமமாட்டி துணியிற்றடவி திரிபோலுருட்டி உலர்த்தி தீயிற்கொளுத்தி ஆற்றிப் புண்களிற்புகைக்காட்ட ஆறும்.

மேற்படி ரணங்களுக்குக் களிம்பு.

காசுக்கட்டி துத்தம் ரசம் வெள்ளைக் குங்கிலியம் வகைக்கு வராகனெடை (க) சுண்ணும்பு வராகனெடை (ச) வெண்ணெய் வராகனெடை (அ) இவைகளை யரைத்து களிம்புசெய்து துணியை நனைத்து வைத்துக்கொண்டு அதைக் கத்தரித்துப் போட சகல புண்ணும் ஆறும்.

பவுத்திரம் கண்டமாலை விப்புருதி பிளவை
அரையாப்பு முதலான வீக்கத்திற்கு மேற்பூச்சு.

மருதோன்றி நீலி கார்த்திகைக்கிழங்கு குன்றிமணி எட்டி பெருமரததுப் பட்டை கஞ்சா வசம்பு காயம் வெள்ளுள்ளி இவைகளை யரைத்துப்பூசத் தீரும்.

விக்கலுக்கு

1 வது—ஒரு விளாம்பழச் சதையில் வறுத்த திப்பிலிப் பொடி அமுக்குறாவேர்ச் சுட்டகரி வகைக்குக் கழஞ்சு (க) இந்துப்பு கழஞ்சு (வ) இவைகளை பால்விட்டரைத்துத் தேனில்மத்தித்துச் சாப்பிடத் தீரும்.

2 வது—திப்பிலி வெந்தயம் நெற்பொரி நெல்லிப்பருப்பு சிற்றரத்தை இவைகளை ஓர் நிரையாகப் பொடித்துச் சீனிகலந்து நெய்யில் மத்தித்துச் சாப்பிட்டுவரத் தீரும்.

3 வது—அரைப்படிபருத்தி விதைப்பாலிற் காற்பலவெல்லத்தைப் போட்டுப் பாகுசெய்து திப்பிலி ஏலம் அதிமதுரம் நெற்பொரி வகைக்குக் கழஞ்சு (க) பொடித்துத் தூவிக் கிண்டிச் சாப்பிட்டுவரத் தீரும்.

4 வது—தேங்காய்ப்பால்படி (வ) தேன் படி அரைக்கால் ஒன்றாகக் கலந்து அதில் கால் வராகனெடை அபினைக்கலந்து கொடுக்கத் தீரும்.

5 வது—தாமரை விதைப் பருப்பை வெந்நீரிலரைத்துகலக்கிக் கொடுக்கத் தீரும்.

6 வது—செருப்பைச்சுட்ட சாம்பலும் மிளகைச்சுட்ட சாம்பலும் திப்பிலிச் சாம்பலும் ஓர்நிறையாக்த்தேனில் மத்தித்து நாவில் தடவ நாவின் சுரசுரப்பு விக்கல் தீரும்.

7 வது—இந்துப்புந் திப்பிலியும் பொடித்து தேனில் மத்தித்துக் கொடுக்கத் தீரும்.

8 வது—கலங்கொம்பு சடாமாஞ்சி திரிகடுகு சிறுதேக்கு பூசணிவித்து இவைகளைசூரணித்து சருக்கரை கலந்து திரிகடிப் பிரமாணஞ் சாப்பிடத் தீரும்.

9 வது—கொடுவேலிவேர் சண்பகப்பூ சிறுநாகப்பூ சுக்கு வளையலுப்பு இவைகளை யோர் நிறைளாகக் கஷாயஞ் செய்துண்ணத் தீரும்.

10 வது—திப்பிலியும் நெற்பொரியும்பொடித்துத் தேனில் மத்தித்துக் கொடுக்கத் தீரும் சீந்திக்கொடியும் நிலவேம்பும் கஷாயம்செய்து கொடுக்கத்தீரும்.

11 வது—மெழுகு சாம்பிராணி ஆவினெய் மனோசிலைமயிவிறகு இவைகளை யொன்றாகக் கூட்டித் தீயிற்போட்டுப் புகைபோட சுரத்தின்பேரிற்காணும் விக்கல்மாறும் மஞ்சள்பொன்மெழுகு தேவதாரம மனோசிலை அகில் சடாமாஞ்சில் அமுக்குருவேர் இவைகளைப் பொடித்துத் துணியிலூட்டித் திரித்துத் தீயிற் கொளுத்தி ஆற்றி நாசியிற் புகைபிடிக்கத் தீரும்.

12 வது—ஆவினெய்முலைப்பால் ஆமணக்கெண்ணை இவைகளை யோர் நிறையாய் மத்தித்துப் பஞ்சிலூட்டி நெஞ்சிற்போடத் தீரும்.

13 வது—கோழிமுட்டை வெள்ளைக்கருவில் துணியை நனைத்துத் தொண்டைக் குழிமேற் போடத் தீரும்.

வயிற்றுவலிகளுக்கு

ஒரு பிடி பிரண்டையைக் குறுகநறுக்கிச் சிதைத்துசட்டியிற்போட்டு வறுத்து நாழித்தண்ணீரும் அரைப்படி மோரும் விட்டு திப்பிலி வெள்ளுள்ளி வகைக்கு வராகனெடை (ரு) தட்டிப்போட்டு ஒரு சிரங்கையாக வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

2 வது—முருங்கை கழற்சி சிவன்வேம்பு மூக்கரைச்சாரணைகொடுவேலி இவைகளின் வேர்ப்பட்டை வெள்ளுள்ளி

பெருங்காயம் வகைக்கு வராகனெடை (உ) இரண்டுபடி தண்ணீரிற் போட்டுக் காற்படியாக வற்றவைத்து வேளையொன்றுக்கு அரைக்கால்படி வீதம் இரண்டுநேரங் கொள்ளத் தீரும்.

3 வது—ஓமம் கருப்புக்கட்டி இந்துப்பு உள்ளி சுக்கு திப்பிலி வகைக்குக் கழஞ்சு (க) புங்கு வேம்பு இவைகளின் கொழுந்து வகைக்கு ஒரு படி இவைகளை நன்றாயரைத்துப் பாக்களவா யுருட்டிவேளை யொன்றுக்கு ஒருண்டைவீதம் வெந்நீரி லுரைத்துச் சாப்பிட்டுவரத் தீரும.

4 வது—அரைப்படி ஆவினெய்யில் ஆறுபலசீனியைப் போட்டுக்காய்ச்சி ஒன்பதுபலசுக்குத்தூளைத் தூவிக்கிண்டு கம்பிபோல் வரும்போது மறுபடி ஆறுபல சீனியைப்போட்டுக் கிண்டி வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம சாப்பிட்டுவரத தீரும்.

5 வது—ஒருபடி கோவைக்காயை இரண்டாகக்கீறிக் காற்படி உப்புப்போட்டு ஊறவைத்துப் பத்துநாட்சென்றபின்பு அசனத்துடன் சேர்த்துப் புசித்துவர நெடுநாளை வயிற்றுவலி நீங்கும.

6 வது—முருங்கைப்பூ முற்றினபிரண்டை வகைககு ஒரு பிடி, கொப்பரைத்தேங்காய் (க) இவைகளையிடித்துப் பிட்டவித்துப் பிழிந்து கொடுக்க வயிற்றுவலி தீரும.

7 வது—ஒருபடி பிரண்டைச்சாற்றைக்காற்படியாக வற்றவைத்துக் கல்வத்திட்டு இலுப்பையரைப்பைச் சுட்டகரிபலம் (உ) கருப்புக்கட்டி பலம் (௭) கூடப்போட்டு மெழுகுபோலரைத்துக் கழற்காய்போலுண்டைசெய்து வேளையொன்றுக்கு ஒருண்டைவீதம் ஒருமண்டலங் கொள்ளத்தீரும்.

தாருட்டிய விருத்திக்கு

தண்ணீர்விட்டான் கிழங்கை நிழலில் உலர்த்தி இடித்து சூரணம் செய்து காலபடி பசும்பாலில் ஒருபலம் சூரணத்தைப் போட்டுக் காய்ச்சி இரவில் புசித்துவந்தால் சுக்கிலம் பிரமேகா நீர்யெரிவு காந்தல் கரப்பான் இவ்வை தீரும் விந்தூரும் தாதுபுஷ்டி யுண்டாகும்.

2 வது—கத்தாழைச்சோற்றை சிறு பில்லைகளாக அரிந்து ஏழுவிசை நல்ல ஜலத்தில் அலம்பி எலுமிச்சங்காயளவு யெடு

த்து கால்படி பசும்பாலிற்போட்டு காலையில் 10-நாள்சாப்பிட்டு வந்தால் சொரி சோகை காமாலை மூலச்சூடு ஆசனயெரிவு கண்ணெரிவு இவைகள் தீரும். தாதுபுஷ்டியுண்டாகும்.

3 வது—செங்கழுநீர்கிழங்கை சூரணித்து காலையில் பச்சைப்பாலிலும் இரவில் காய்ச்சியபாலிலும் கால்பலம்வீதம் கால்படி பாலில்போட்டு சாப்பிட்டுவந்தால் உடல் குளிரும் தாது புஷ்டி யுண்டாகும் இதை நாட்பட சாப்பிட்டால் தேகத்தில் யாதொரு வியாதியும் உண்டாகாது.

4 வது—அமுக்குராக்கிழங்கை சூரணித்து காலையில் பச்சைப்பாலிலும் இரவில் காய்ச்சியபாலிலும் கால்பலம் சூரணத்தை கால்படிபாலிற் கலந்து சாப்பிட்டு வந்தால், தேகத்திலுள்ள துர்நீர் கபம் சூலை கரப்பான் பாண்டு வீக்கம் இவைதீரும் நாத மிறுகும் தாதுபுஷ்டியுண்டாகும்.

5 வது—நிலைப்பனைக் கிழங்கை, நிழலில் உலர்த்தி சூரணம் செய்து ஒருவேளைக்கு கால்பலம் வீதம் காலையில் பச்சைப் பாலிலும் இரவில் காச்சியபாலிலும் போட்டு 10-20-நாள் சாப்பிட்டுவந்தால் சொரிசிரங்கு தினவு தீரும் கண்ணொளிரிண்டாகும் விந்துகட்டும் தாதுபுஷ்டியுண்டாகும்.

6 வது—வெங்காயவிரை காலைமாலை இருவேளையும் காச்சிய பசும்பாலில் கால் அரைபலம் வீதம் போட்டு சாப்பிட்டு வந்தால் தேகந்தணியும் இரத்தம்பெருகும் துர் நீர்விலகும் போதுமான தாது புஷ்டியுண்டாகும்.

7 வது—சிசப்புமுள்ளங்கியை பில்லைபில்லையாக அரிந்து விளாங்காயளவு யெடுத்து ஆழாக்கு பாலில்போட்டு நன்றாய் குழையவெந்தபிறகு 2-பலம் வெள்ளைச்சக்கரையும் 2-பலம் நெய்யும் விட்டு லேகியம் போல் கிளரி காலைமாலை புன்னைக் காயளவு சாப்பிட்டுவந்தால் தாதுபுஷ்டி யுண்டாகும்.

8 வது—மகிழம் விரையை சூரணித்து வேளைக்கு கால் பலம் வீதம் காலையில் பச்சைப்பாலிலும் மாலையில் காச்சிய பாலிலும்போட்டு சாப்பிட்டு வந்தால் வெப்பு விஷம் மலக் கட்டு தீரும் தாது விர்த்தியுண்டாகும்.

9 வது—நத்தைச் சூரிவிரையை சூரணித்து வேளைக்குகால் பலம் வீதம் காலையில் பச்சைப்பாலிலாவது கால்படிபாலில

போட்டு இருவேளையும் சாப்பிட்டு வந்தால் நீர்கடுப்பு வெள்ளை விழுதல் இவைதீரும் தேக புஷ்டியுண்டாகும்.

10 வது—முருங்கைப்பூவை ஒருபிடியெடுத்து கால்படி பசும்பாலிற் போட்டு பூவுகள் நன்றாய் வெந்து குழையும்படி காச்சி யிரவில் ஒரேவேளைசாப்பிட்டு வந்தால் தாதுபுஷ்டியுண்டாகும்.

11 வது—நீர்முள்ளிவித்தை சூரணித்து வேளைக்கு கால் பலம் வீதம் இருவேளையும் பச்சைப்பால் கால்படியில்போட்டு புசித்து வந்தால் உடம்பிலுள்ள வீக்கம் இளைப்பு இருமல் அதிசாரம் இவைகள்தீரும். விந்தூறும் இரத்தவிருத்திபுண்டாகும்.

12 வது—துத்திவிரையை சூரணித்து காற்பலம் வீதம் கால்படி காச்சிய பாலில் சாப்பிட்டுவர கருமேகம் படர்தாமரை இதுகள் தீரும் தாதுபுஷ்டியுண்டாகும்.

13 வது—பூசணிவிரையை சூரணித்தாவது பால்விட்டாவது அரைத்து புன்னைக்காயளவு கால்படிபாலில் போட்டு புசித்துவந்தால் தாதுபுஷ்டியுண்டாகும்.

14 வது—வெள்ளரிவிரையை சூரணித்து காச்சியகால்படி பாலில்போட்டு புசித்துவந்தால் நீரடைப்பு நீர்கட்டு சதையடைப்பு நீர்யெரிவு இவைதீரும் தாதுபுஷ்டியுண்டாகும்.

15 வது—சாலாமிசரியை சூரணித்து இருவேளையும் பாலில் சாப்பிட்டு வந்தால் தேகம்பிறுகும் தாதுபுஷ்டியுண்டாகும்.

16 வது—சாரப்பருப்பை அரைபலம் முதல் 1-பலம்வரையில் கால்படி பாலில் போட்டுகாச்சி பருப்பைத்தின்றுபாலைக் குடித்து வந்தால் தேகந்தனியும் தாதுபுஷ்டியுண்டாகும்.

மூலிகைமர்மம் இரண்டாம்பாகம்

முற்றுப்பெற்றது.

மூலிகைமர்மம்

மூன்றும் பாகம்

எலிகடிக்கு.

குளப்பாலை சமூலத்தை அறைத்து புன்னைக்காயளவு அரைக் கால்படி பசும்பாலிற்கொள்ள விஷம் கால்கையில் நீர் சுரப்பு வீக்கம் இவைதீரும் 3-நாள் சாப்பிடவும் உப்பு புளிபாகா.

சித்தாமணக்கு வேரின்பட்டையை அறைத்து களச்சிக்கா யளவுக்குக் குறையாமல் அரைக்கால்படி பசும்பாலில் கலந்து கொடுக்கவும் இப்படி 3-நாள் காலையில கொடுத்து சுட்டபுளி வருத்தவுப்பு பத்தியம் பதினெட்டு எலிகடிவிஷமும் தீரும்.

சர்வ தோஷத்திற்கு.

விஷக்கடி அம்மை ஒட்டுநோய்கள் தோஷங்கள் பிணிகள் முதலிய சர்வ தோஷத்திற்கும் வேப்பிலையைத் தண்ணீரில் நனைத்து சுழட்டி மந்திரித்தாகிலும் அல்லது சும்மாவாகிலும் அவாள் முகத்தில் விசரியடிக்கவும், அன்றியும் வேப்பிலைக் காற்று பட்டாலும், அம்மரநிழலி லிருந்தாலும் தேமசொல்லிய வனைத்துந் தீரும். இதை அம்மன் பத்திரியென்றுஞ் சொல்லுவர்.

சீவின சுக்கு பலம்-கால், சீனகாரம் பலம்-கால், இவைக ளிரண்டையுந்தூள்செய்து வடியிட்டுசூரணித்து காவிக்கல்விராகனிடை-1, பொடிசெய்து சேர்த்து விளக்கவும்.

நீரிழிவிற்கு.

எள்ளு ஆழாக்கில் கல் மண்ணில்லாது நோம்பி அதில் பனைவெல்லஞ்சேர்த்து இடித்து காலைமாலை இரண்டுவேளையும் எலுமிச்சம்பழவீத முட்கொண்டுவரவும் நீரிழிவு சுவஸ்தமாகும் இச்சாபத்தியம் ஒருவேளை நீரைக் கட்டிவிடின் நாட்டுச் சர்க்கரை யுட்கொள்ளவும் நீர் தாராளமா யிறங்கும்.

கல்மதம் கொன்றைப்பட்டை ஆவாரந்தூள் மூன்றையுங் காச்சி ஒருவாரம் இருவேளையும் உட்கொண்டு வரவும் நீரிழிவு நின்றுவிடும். இச்சாபத்தியமா யிருக்கவும்.

எள்ளுப் புண்ணுக்கு கோவையிலை சரியிடைகூட்டி அரை காரமிட்டு புரட்டி மூணுநாள் கொடுக்கவும் சாந்தியாகும்.

ஆவாரம்பட்டை பலம் 10-ஒருபானையிற்போட்டு பசுவின் பால் படி 1-விட்டு அது வேடுகட்டினதின்பேரில் அபினி விராகனிடை 1, வைத்து சட்டியைமூடி பால் சுண்ட எரித்து காய வைத்து இடித்து அபினியுஞ் சேர்த்து வஸ்திரகாயம்செய்து திரிகடி பிரமாணம் 20-நாள்சாப்பிடவும் இச்சாபத்தியம்.

ஆவாரம்பட்டை அத்திப்பட்டை மருதம்பட்டை சரக்கொண்ணைப்பட்டை சமநிடைக் கூட்டி நாலுக்கொன்றாய் கிஷாயம் வடித்து காலைமாலை சாப்பிட்டுவந்தால் நீரிழிவு அதிமூத்திரப் பிரமேகம் தீரும்.

நாவல்பட்டையை அரைத்துபுன்னைக்காயளவு பசும்பாலிற் கலந்து கொடுக்க 5-7-நாளில் நீரிழிவு வெகுமூத்திரம் இவைகள் தீரும் நாட்பட சாப்பிட்டால் நலம்.

பசி யகல்வதற்கு.

ஔவையின் மூலியாவது கஞ்சா. அதைப் பசுவின்பாலிலவித்து நன்றாய்ச் சுத்திசெய்து அதற்குச்சமன் புழுங்கலரிசிசேர்த்து அரைத்து அடைசுட்டு இரண்டொரு அடை தின்னவும் அதுமுதல் ஒருவாரத்திற்கு பசியெடுக்கமாட்டாது அதன்பின் பேதிக்குச் சாப்பிட அது வெளிபட்டு பசியெடுக்கும் இதை கோரக்கர் மூலியென்றுஞ் சொல்லுவர்.

நாக்குப்பூச்சி விழ.

அஃகமென்பது நெல்லு அதில் ஒரு தேங்காய் பத்தையைப்போட்டு வேவித்து அதை இறக்கியபின்னெடுத்து சிறுபிள்ளைகட் களிக்கவும். அதைத்தின்றவுடனே பேதியாகி அதில் நாக்குபூச்சிகள் வந்துவிழும் அதினாலுண்டாகிய கோடுரமனைத்தும் நீங்கிவிடும்.

மேகத்திற்கு.

தினந்தோறும் அதிகாலையில் கற்றாழைமடலை பத்தை ஒவ்வொன்றைத் தின்றுவரவும் அதினால் மேகமானதகலும் தேக வழற்சியை நீக்கும், இன்னுஞ்சில நோய்களையும் பற்றறுக்கும் பத்தியமென்பதில்லை. இது காயகர்ப்பங்களிலொன்று.

மூவருடஞ்சென்ற வன்னிமரத் திலையை எருமைத் தயிரினி லரைத்து அத்தயிரிற் கலக்கி கால்மண்டலம் காலையிலுட்கொண்டு வரவும் மேகமான தகன்றுவிடும்.

தேங்காய்ப்பாலில் சிறு குரிஞ்சான் வேளையரைத்து புன்னைக்காய் வீதம் 7-10 நாள் தின்னவும் மேகசாந்தியாம்.

பொடுதலைச்சாறு காலாழாக்கு நல்லெண்ணை காலாழாக்கு இதுக ளிரண்டுங்கலந்து இரண்டுவேளையாக 3-நாள் சாப்பிட்டு வர சகல மேகங்களும் தீரும் இச்சாபத்தியம்

திரிகடுகின் குணம்.

நகரவெழுத்தைப் போல திரிகடுகாகிய சுக்கு, மிளகு திப்பிலி, இம்மூன்றும் எல்லாமருந்து பாகங்களிலும் சஞ்சரித்துக் கூடிவரும். இது மெய்யெழுத்தாகிய (ங்) என்று கொள்ளவும்.

விக்கலிற்குத் தூள்.

சந்தனக்கட்டையும் பளிங்கு சாம்பிராணியும் வெவ்வேருய்த் தணல்படஇளவறுப்பாய் வறுத்து அதையார்க்கப்பொடித்து வெறுகடி அதாவது (மூன்றுவிரல் பிரமாணம்) உண்டு வரவும். சத்தியாகிய வாந்தியும், விரோசன மாகிய பேதியும் நிற்கும் வரையிலும் ஓர்மணிச் சோராவர்த்தி யுட்கொள்க.

லவங்கப்பட்டை, ரூமஸ்த்தகி இவ்விரண்டும் கூட்டி கஷாயம் செய்துவடித்து மணிநேரத்திற் கொருதரம் கொடுத்துவர விக்கல் தீரும்.

மருளிற்கு

ஞகர வெழுத்தைப்போல தாம்பூலத்திற் போடுஞ் சுன்னத்தில் கொஞ்சம் சுண்ணும்பு சோப் வேகவைக்க அது சற்று நேரத்திற்கெல்லாம் கரைந்துவிடும், அதிற் கொஞ்சமெடுத்து தேக மாதியந்தமும் மருளிருப்பவர்களுக்கு முதலில் எவ்விடத்திற் கிளம்பியதோ அதையறிந்து அதினமேல்வைத்து மற்ற மருள்களுக்கு அதன்பின்ளுல் வைக்க யாவுங் கரைந்துவிடும் அதைப்பார்த்திருந்து தட்சணங் கழுவிவிடவும்.

காது நோய்க்கு.

வெள்ளைப்பூண்டும் மிளகும்சுக்கி வேளை யிலையில்வைத்து அதை நன்ருய்க் கசக்கிக் காதிற் பிழியவும் கொஞ்சநேர மெரியும் அதன்பின் குளிர்ந்துவிடும். காதுநோய், குத்தல், கூவுதல் சீழ்வருதல் யாவும் தீரும், இரண்டொருவேளை பிழியவும்.

சுக்கு, திப்பிலி, கோஷ்டம், சயிந்தவலணம், முத்தக்காசு வசம்பு, உள்ளி, கசூர்காய், யெருக்கிலைச்சார், இவைகள் வகைக்குப் பலம் உளுந்திடை (க) நல்லெண்ணை ஒருபலம் யெடுத்து ஷெ சார்விட்டு மற்ற மருந்துகள் யாவும் யிடித்து வஸ்

திரகாயம் செய்துபோட்டு காச்சி யிரக்கி காதில் ௨-௩ துளி விட எவ்வித காதநோயும் தீரும் ௨-௩ வேளை விடவும்.

பண்ணிநெய்யைச் சுடவைத்து துளி துளியாக காதில் இரண்டுவேளையும் மூன்றுநாள்விடத் தீரும். மேற்படி நெய்யைக் கரப்பானுக்கும் தடவலாம்.

செம்பருத்தி யிலையின் ரசமும் பொரித்த வெண்காரமும் சமனிடை போட்டு சுடவைத்து 3-வேளை காதில் விடத்தீரும்.

பருத்திக்காயை அறைத்து நல்லெண்ணெயில் கொதிக்க வைத்துக் காதில் 10-நாள் விடவும் சிலந்திபண்டம் ஆசாது.

அபினியை வாதமை யெண்ணெயி லிழைத்து அனலில் சற்றுகாட்டி காதில் 1-2-துளிவிட காதுவலி நீங்கும் அரையவுன்சு எண்ணெய்க்கு நாலு குண்டுமணியளவு அபினி போதும்.

தேன்கொடுக்கிலை ரசம் ஆழாக்கு, நல்லெண்ணெ பலம் இரண்டரை இவ்விரண்டும் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி கடுகு திரளக்காச்சி தைல பதமாயிரக்கி காதுக்கு விட்டுவரவும் காதடைப்பு தீரும்,

கள்ளிப்பழுப்பு அகத்திப்பழுப்பு வெற்றிலை, எருக்கன் பழுப்பு முருங்கைப்பட்டை வசம்பு பூண்டு வேப்பெண்ணெயிலாகிலும் நல்லெண்ணெயிலாகிலும் எரித்து சுடச்சுடக் காதில் விட்டு பஞ்சடைக்கவும் இப்படி 7-நாள்விடத் தீரும்.

நல்லெண்ணெ படி-கால், கொடிவேலிபட்டை பலம்-கால் முலைப்பால் விட்டறைத்து எண்ணெயில் கலக்கி பிரதிதினம் சிரசில்கொஞ்சம் ஒருமண்டலம் தேய்த்துவர காதடைப்பு நீங்கும்.

நாயுருவிச்சாற்றை ரோஜாப்பு எண்ணெயுடன் சரிபாகஞ் சேர்த்து நீர் சுண்டுகிறவரையில் யெடுத்து வடிக்கட்டி சீசாவில் வைத்துக்கொண்டு காதில் இரண்டொரு துளிகணக்காய் விட்டுக்கொண்டுவந்தால் காதுவலி நிற்கும்.

மகோதரத்திற்கு,

பீர்க்கங்காயை யிடித்துச் சார்பிழிந்து அதில் பெருங்காயஞ்சேர்த்து உண்டுவர மகோதரம், பெருவயிர் நீராம்பல், நீர்க்கோர்வை முதலியன தீரும் வறுத்தவுப்பு சுட்டபுளி கூட்டவும்.

காமாலை தீர.

நெல்லிக்காய் வற்றலும் சீரகமும் உலர்த்தித் தூளிடித்து திரிகடிப் பிரமாணம் உண்டு வரவும், ஒருவாரம் இருவேளையுங்

கொள்ள காமாலே, சோகை, பாண்டு முதலியவை தீரும். வறுத்தவுப்பு, சுட்டபுளி கூட்டவும்.

சித்தாமணக்குப்பருப்பில் முலைப்பால்விட்டரைத்துக்கண்களிற் றீட்டவும் காமாலேக் கண்ணுனது மாறிவிடும் கண் துலங்கும் பிரகாசத்தைக் கொடுக்கும்.

எருமை சாணியின்பால் எருமைத்தயிர் இரண்டுங் கலந்து சீரகம் வெங்காயம் சமன்சேர்த்து ஷ டி தயிராலரைத்து எருமைப்பாலில் கலக்கி சாப்பிடவும்.

திராட்சப்பழத்தை காடிவிட்டரைத்து கொஞ்சம் காடியை குழம்புபோல் குழைத்து வேளைக்கு கால்பலம் வீதம் இருவேளையும் புசித்துவந்தால் காமாலே ரோகம் குணமாகும்.

பீதரோகணியை தேவையான வரையில் யெடுத்து ஆழாக்கு ஜெலத்திலிட்டு காலாழாக்காக கியாழமிட்டு உதயத்தில் குடித்துவர காமாலே கண்வெளுப்பு கண்மஞ்சள் இவைதீரும்.

சுரத்திற்கு.

கழனிகளிலுள்ள நண்டுகளே யிடித்துச்சார்பிழிந்து மிளகு பூண்டு மஞ்சள் கூட்டி சாறுகாச்சி காலேமாலே இருவேளையும் மூன்றுநாள் உள்ளுக்கேற்றிவர தீராத நளிர்சுரங்கள், ஒழிந்துவிடும். வறுத்த வுப்பு, சுட்டபுளி கூட்டவும்.

பார்வையுண்டாக.

பற்பாடகத்தை யிடித்துச் சார்பிழிந்து அதில் பசும்பால் சேர்த்தாகிலும் அல்லது சும்மாவாகிலும் சாலேசுரம், கண்மத்திபம், கண் தெரியாதவர்கள், தலேயில் அறக்கிதேய்த்து முழுகிவர எழெட்டு முழுக்கில் பார்வை நன்ருய்த்தெரியும்.

கர்ப்ப வேதனேக்கு

நாக்குப்பூச்சியை மோரிற்போட்டு வைக்க மண்ணக் கக்கிவிடும், அதை வெற்றிலேயில் வைத்து மடித்துச் சுருட்டி வாயிற்போட்டு மென்று தின்னவும் அக்கெர்ப்பிணி உடனே பிரசவிப்பள்.

கருஞ் சீரகத்தை தேன்விட்டரைத்து அடிவயற்றில் பூச கெற்பவதிகளுக்கு உண்டாகும் வயற்றுவலி தீரும்.

இருமலுக்குக் கியாழம்.

ஆத்தியிலேயைக் கியாழமிட்டு அதிற் கற்கண்டுசேர்த்து காலே மாலே குடித்துவரவும், இருமல் தீரும், இன்னும் கண்டங்

கத்திரிவேர், கருப்புப்பூனைக் காஞ்சிவே ரிவைகளையு மிவ்வா றுண்டு வரவும், இருமல் நின்றுவிடும்.

தூதுவேளை சொடி இலையை உபயோகிக்க உண்டியைத் தூலக்கும், பூவை யுபயோகிக்க தாதுவிர்த்தியை யளிக்கும், காயை யுபயோகிக்க வாதபித்த ஐயத்தைமாற்றும், வேரை யுப யோகிக்க அனந்த நோய்களையகற்றி வைக்கும். இது காயகர் ப்பத் தொன்றுகையால் இதை தினசரி உபயோகிக்க ஈளை இருமல் தீரும்

கண்டங்கத்திரி வித்து-தேத்தான்வித்து - தும்ராஷ்டகம் திப்பிலி இவைகள் வகைக்குப்பலம் நான்கு, இவை நான்கும் சூரணித்து (௨0) பலம் தேன் அடுப்பேற்றி இச்சூரணத்தை கொட்டிக்கிளரி யிரக்கவும் தேன் போதாவிட்டால் துளிதுளி யாய்விட்டுக் கிளரவும் கொட்டைப்பாக்கு விதமாய் இருவேளை யும் (ய) நாள் கொள்ளவும்.

ருதுவாக.

கொள்ளுவேவித்து அந்தத்தண்ணியில் பெருங்காய முரை த்துக்கலந்து அந்தத்தண்ணீரைக்குடிக்கு கொள்ளைத்தின்னவும், இரண்டு மூன்று பொழுதில் அந்தப்பெண் ருதுவாகும், அப்படி ருதுவாகாவிடின் மறுபடியும் அவ்வாறே கொடுக்கத் திரளுவள்.

புளியாரணைக்கிழங்கு, ஒரு எலுமிச்சங்காயளவு அறைத்துத் தவுட்டில் பிரட்டி 7-நாள் கொடுக்கவும்.

எள்ளு கழுவின ஜலத்தை 3-நாள் சாப்பிட பெண்திரளும்.

வளையலோடு பனவெல்லம் நல்லெண்ணைவிட்டு அறைத்து நெகிழினபிறகு மிளகுபிரமாணம் உள்ளுக்குக் கொடுக்கவும்.

பனங்குருத்தோலை நரம்புதள்ளி துண்டுதுண்டாக நறுக்கி நசுக்கி கியாழம்செய்து மேல் கொடுக்கவும்.

நாவாரோகியத்திற்கு.

இலவங்கம், சாபத்திரி, சுக்கு, ஏலம், வால்மிளகு, இவை களைத் தாம்பூலத்துடன் தரித்துக் கொள்ளவும் பலம் இந்திரிய விர்த்தி, தேககாந்தி, தீபனசக்தி, முகவசிகரத்தைத் தரும்.

உன்மத்திற்கு

கொன்றைவிரையைக் குழித்தைல மிறக்கி அதிற்கொஞ் சம் நாசியில்நசியம் பண்ணவும். உன்மத்தமென்னும் மோன

நோய் நீங்கிவிடு, உன்மத்தமாவது-யாதொன்றிலும் பிரவேசிக்காது சுமமா பேசாமலிருப்ப தெனக் கொள்க.

அழலிற்கு.

அழல்கொண்ட சூட்டிஞல் இரும்பலான துண்டாயின் அதற்கு அதிமதுரப்பாலானதை வாயிற்போட்டு சப்பி அச்சாரத்தை விழுங்கிவர அந்நோய்விரைவில் அகன்றுவிடும்.

பாலதோஷத்திற்கு.

அமாவாசை கழித்த திரிதிகைதிதியின் அந்நேரத்தில் தங்கதகட்டில்மூன்ரும் பிறைஜனிக்கையில் அப்பிரையைப் பார்த்து அவ்வேளே அப்பிரையைப்போல தகடடித்து கத்தரித்து காது பற்றவைத்து தோஷம்பிறந்துள்ள குழந்தைகள் கழுத்தில்கட்டி விட அப்பால் அத்தோஷங்கள் பற்றறும்.

கண்நோய்க்கு

எலுமிச்சம் பழத்தை இரண்டா யறுதது ஒருபத்தையுள் அறப்பொடித்தூளேப். போட்டு சற்றுநேரம் பொருத்து இரு கண்களிஞம் பிழியவும் இப்படி இரண்டொரு வேளேயில் கண்ணேயானது நீங்கிவிடும், சிவந்தநிறமு மாறிவிடும்.

பீதரோகணியை மூலேப்பாலிலறைத்து அதை கண்களிற் பிழிந்துவரவும். கண்களிலுற்ற ரோகங்களானவைதீரும். கவிச்சு சிலந்தி பதார்த்தங்களே நீக்கவும்.

கடுகுரோகணியை இடித்து மையைப்போல் பவுடர்செய்து சிறுகுச்சியிஞல் தொட்டு சிருமா போடுவதுபோல் கண்ணில் தீட்டிவந்தால் கண் மாசுகளேயருக்கும கண் துலாம்பரமாகும்.

மழைக்காலத்தில் நாட்டுகளின் குப்பைமேட்டுகளி லுண்டாகும் (குடைக்காளான்) கொண்டுவந்து கசைக்கி சாறுபிழிந்து 2-3 துளிகள் கண்ணில் பிழிய கண்மாசுகளே யறுக்கும் கண்ணில் நீர்வடிவதை நிருத்தும் கண் ஒளியுண்டாகும்

கலேமான் கொம்பை வெண்மையாக பஷ்பம்செய்து நீரிற் கரைத்து தெளியவைத்து நீரைவடித்து பஸ்பத்தை நிழலில் உலர்த்தி சீசாவில் வைத்துக்கொண்டு சிறுமா போடுவதுபோல் கண்ணில் தீட்டிவந்தால் கண்படலம் நீர்வடிதல் கண் ரிணங்கள் சதை வளருதல் முதலிய கண்வியாதிகள் தீரும்.

சிறுதுத்தியிலேயுடன் உப்புசேர்த்தரைத்து கண்ணில் உண்டாகும் பருவுகள் புண்களுக்கு தடவிவந்தால் குணமாகும்.

கண்சிவப்பிற்கு அபினி 2 குண்டுமணி இடை குங்குமப்பூ 2-குண்டுமணியிடை இவ்விரண்டும் கோழிமுட்டை மஞ்சட் கருவினலரைத்து கண்ணில் தடவிவர 2-3-வேளையில் கண் சிவப்பு மாறும்.

காடியும் நல்ல ஜலமும் சரிபங்குகூட்டி விளாவிவைத்துக் கொண்டு கண்களை கழுவிக்கொண்டு வந்தால் கண்வீக்கம் சிகப்பு நீர்வடிதல் முதலியவை குணமாகும்.

குங்குமப்பூவை முலைப்பாலிலுரைத்தி கண்ணில் துளிதுளி விட்டால் கண்ணில் நீரொழுகு கண்ணருவருப்பு முதலியகண் வியாதி சகலமும் தீரும்.

சன்ன லவுங்கப்பட்டையை முலைப்பாலினல் இழைத்து கண்ணில தீட்டிவந்தால் கண்ணொளி யதிகரிக்கும் கண்துடிப்பு நிருத்தும் நடுக்கலை மாற்றும்.

வெள்ளைச்சாறு வேளைச்செடியின் முத்தினவேரைக்கொண்டு நிழலில் உலர்த்தி முலைப்பாலில் உரைத்து கண்ணில் தீட்டிவந்தால் நேத்திர ரோகங்களனைத்தும் நிவர்த்தியாகும் இருவேளையும் 10-நாள் தடவிவரவும் குணங்கண்டால் நீடித்துதடவலாம்.

சொரிக்கு.

நூறுவருடஞ் சென்ற பூவரசபட்டையை வேர்பாணிபோக்கி இடித்து வஸ்திரகாயஞ்செய்து நிசித தண்ணீரிற் கொஞ்சம் போட்டுக் கலக்கி ஒருவாரம் காலையிற் குடித்துவரவும், சொரி, சிரங்கு, மேகப்படை யாவுந்தீரும.

கற்பூர சிலாசத்து பஸ்பம்.

கற்பூர சிலாசித்துக்கு வெந்தயத்தைத் தண்ணீரி. லூரவைத்து அரைத்து அதிற் கவசஞ்செய்து 15-எருவிற் புடமிடவும் பஸ்பமாம், இதில் தம்படியிடை அரையாழாக்குப் பசும்பாலிற் போட்டு ஐந்துநாட் காலையிற் குடித்துவரவும். தேகவழற்சி, வெட்டைவெள்ளை, இருமல் இரைப்பு வயர்வலி முதலியவை தீரும், இச்சாபத்தியம்.

சங்கு சுன்னம்.

மேக நிறத்தையுடைய மகாவிஷ்ணு அணியப்படா நின்ற துளசியை யரைத்து பாலாடையாகிய சங்கினுக்குப் பதிந்து கவசஞ்செய்து குக்கிடப்புடம் அதாவது 10-எருவிற் புடமிடவும்

பஸ்பமாம், அதில் 2-அரிசி யிடை தேன், நெய், வெள்ளை சர்க்கரை, அனுபானத்திலிடவும் பலவினைகளும் பற்றறும்.

கல்லடைப் பிற்கு

வெங்காயச் சாறும் கெச்சைக்கா யிலைச்சாறும் ஒன்றாய்க் கலந்து 2-அவுன்சு வீதம் வெடிகாலையி லுண்டுவரவும், கல்லடைப்பானது புரண்டு வெளிப்பட்டு தடைபடாது நீரிறங்கும்.

திராட்சப்பழத்துடன் மிளகு சேர்த்தரைத்து கெச்சக்காயளவு இருவேளையும் தின்றுவந்தால் கல்லடைப்பு தீரும், நீரொழுக்கு சாந்தமாகும்.

பித்த சோகைக்கு

முள்ளங்கியிலையின் காம்பு நரம்பின்சாறு, 2-அவுன்சில்-$\frac{1}{2}$ பலந்தேன்விட்டுசாரித்து அதிகாலையி லுண்டுவரவும், பித்தசோகையானது நிவர்த்தியாகும், வறுத்தவுப்பு சுட்டபுளி கூட்டவும்.

குன்ம கட்டிக்கு

தும்பையிலையை ஆய்ந்து இடித்துச் சார்பிழிந்து மூன்றுநாள் காலையில் குடித்துவரவும் குன்மக்கட்டி, குன்மவலியாவுந் தீரும் கடும்பத்தியம் வைக்கவும்.

செருப்படையும், கரிசலாங் கண்ணியும், குப்பை மேனியும், இம்மூன்றையும் சூரணஞ்செய்து அதிற்சர்க்கரைசேர்த்து உண்டுவரவும் குன்மமானது அகலும் இச்சாபத்தியம், இருபது நாள் காலை மாலை சாப்பிடவும்.

வெள்ளைச் சாரணைவேர் பெருங்காயம் இரண்டையும் வெந்நீரிற்கலக்கி நாலைந்து நாள் காலை மாலை யுண்டுவரவும் குன்மவலியானது உடனே அடங்கிவிடும்.

பொன்னம்பர் 5-குன்றி மணியிடை வாயிற்போட்டு ஆழாக்குபால் சாப்பிடவும் இப்படி மூன்றுநாள் சாப்பிட குன்மவலி நீங்கும்.

முத்தினமரு தோன்றிவேரைக் கொண்டுவந்து ஒரு வராகநிடை நிறுத்தெடுத்து பன்னிர் விட்டரைத்துக் குடிக்கவும் இப்படி இருவேளையும் 3-நாள் குடிக்க குன்மரோகம் வேரோடறும்.

குளிர்ச்சிக்கு

வில்வப்பழத்தை விறைபோக்கி அதின் சதையை நல்லெண்ணையிற் கலக்கி அதற்குசமன் பசும்பாலுஞ் சேர்த்துக்காச்சி

பதத்திலிறக்கி வடிகட்டி வாரத்திற் கிருமுறை தலைமுழுகி வரவும், கண்குளுத்தியாய் பார்வை யுண்டாவதுமன்றி தேகவழலை யும் போக்கும்.

பேதனு வென்பதை ஓர் படிகப் பாத்திரத்தில் தண்ணீர் விட்டு அதிற்போட்டு விரலாற்சிலுப்ப நுங்குபோல்வரும் அதிற் சர்க்கரைசேர்த்து உண்ணுகையில் கண்கள் சிலிர்க்கும் தேகமுங் குளிர்ச்சியாகும்.

நல்ல கெட்டி மிளகானதைச் சிறு நீரி லூரப்போட்டுலர்த்தி மறுபடியும் அவ்வாறே 4-5-விசைசெய்து உலர்த்தி தினம் ஒன்றுக்கு ஒவ்வொன்றுயர்த்தி 108-நாளைக்கு 108 - ஆகிடின் மறுபடியும் ஒவ்வொன்றாய்க் குறைத்துத தின்னவும தேகத்தி லுள்ள அழல் வெப்பம் சூடு முதலிய பலவினைகளுமாறும் இது காய கர்ப்பத்தொன்று.

சீத பித்தத்திற்கு.

அதிமதுரத்தைப் பற்பாடகச் சாற்றிற்கலந்து கியாழமிட்டுக் குடித்துவரவும் சீதபித்தமானதுதீரும் வறுத்தவுப்பு சுட்ட புளி கூட்டவும் அக்கியாழத்திற் கொஞ்சம் தேன் கலக்கலாம்.

தலைவலிக்கு.

நாய்ப்பாகல் சார்பிழிந்து அதில் சல்லாதுணியைத்தோய்த்து உலர்த்தி மறுபடியும் நனைத்து வுலர்த்தி இப்படி ஐந்தாறு விசைசெய்து அதைத் திரி திரித்துக் கொளுத்தி மூக்கிற்புகை பிடிக்க உடனே தலைநோய் நிவர்றிவிடும்.

வாய்விளங்கம் மிளகு சயிந்தலவணம் ரேணுகம் சுக்கு கடுகு இதுகளைச் சமமாய் பொடிசெய்து பசுநெய்யில் குழைத்து நசியமிட தலைவலி தீரும்.

கடுகுரோகணியை மைபோல் யிடித்து வஸ்திரகாயம்செய்து மூக்கில் நசியம் செய்தால் தும்பலுண்டாகும் மூக்கடைப்பு தலைவலி குணமாகும்.

குட்டத்திற்கு.

கொன்றை விறையானதை பூமியிற் பள்ளம்வெட்டி குழித்தைலமாயிறக்கி அத்தைலத்தை குட்டம் பிடித்தவர்களின் கைகால்களிலுள்ள ரிணத்தின்மேற் பூசிக்கொண்டுவரவும் அவ்விரணங்கள் மாறிவிடும்.

வாதந்தீரப் பேதிக்கு.

கோவைக் கிழங்கு அல்லது அதின்பெருங் கொடியைக் கணுவுகளை யகற்றி நடுகண்டங்களை நறுக்கி தண்ணீர்விட்டுக்

காச்சி அதிற்பாதி விளக்கெண்ணெவிட்டு, மிளகு நீர்போல உப்பு புளி மிளகாய் திட்டமாய்க் கூட்டி தாளிதஞ்செய்து அந்த ரசத்தைக் குடிக்கவும், பேதியாம் அதில் வாதம் விம்மல், வலி முதலியயார்வு மகலும்.

பித்தந்தீரப் பொடி.

சீரகம் நெல்லி முள்ளி சுக்கு, ஏலம், இவைகளைச் சூரணஞ் செய்து சர்க்கரைகலந்து, தேனிலிழைத்து, வெருகடிவீதம்இரண்டுவேளை அரைமண்டல முண்டுவரவும், பித்தத்திஞலுண்டாகிய கொடூரமனைத்தும், நீங்கிவிடும்.

சீரகம் கழஞ்சு 3 அதிமதுரம் கழஞ்சு 3, இஞ்சி உலர்த்தியது கழஞ்சு 2, திப்பிலி கழஞ்சு 2, ஏலம் கழஞ்சு 1, இவைகளையிடித்து சூரணித்து வஸ்திரகாயம்செய்து சர்க்கரை 4-கழஞ்சு கூட்டிகலந்து சீசாவில் வைத்துக் கொள்ளவும் திரிகடி சூரணம் யெடுத்து தேனிற் குழப்பித் தின்னவும் பித்தம் காற்பதும் பறந்தோடிப்போம இருவேளையுமாக 10-20-30-40-நாள் வீதம் கொள்ளவும் இச்சாபத்தியம்.

நெல்லிக்காய் ரசம் படி 1, காசலாங் கண்ணிச்சாறு படி, 1, எள்ளெண்ணெ படி 1, அதிமதுரம் பலம்-1 பசும்பால் படி 4, இதுகளைக் காய்ச்சி பதத்தில் வடித்து முழுக மெய்யெரிவு மேகம் பீனிசம் மூலரோகம் முதலியவைகள் தீரும்.

தலைப் புத்திற்கு

நிலக்கடம்பை பசும்பாலிலரைத்து மூன்றுதினம் தலையில் அப்பிவைத்துக் கட்டவும் தலைப் புத்தானது மாறிவிடும் அதிலுள்ள கிருமிகளியாவும் வெளிப்பட்டு நசிந்துவிடும்.

வாளச் சுத்தி.

நேர்வாளமானதை மூட்டைகட்டி எருமைச் சாணியிற் போட்டு தண்ணீர்விட்டு குழம்பாக்கி வேவித்த பிறகு அதை உடைத்து ஓடுமுளை போக்கி உலர்த்தியபின் பசுநெய்யில் அல்லது விளக்கெண்ணெயில் வறுத்து பலவித மருந்துகட்கும் சேர்க்க நன்மையாம்.

கற்பூரச் சுன்னம்.

ஆலாத்தி கற்பூரத்தை கற்பூரவல்லிச் சாற்றிலரைத்து ஓட்டில்வைத்து உலர்த்தி மேலோடுமூடி சீலைமண் ஐந்துசெய்து குக்கிடப் புடத்தில் வைக்கவும் பஸ்பமாகும், இதைச் சுன்னத்திற்கலந்து தாம்பூலத்துடன் தரித்துக்கொள்ளவும், சீதளம், சன்னி, சுரமுதலியவை தீரும்.

இலிங்கக்கட்டு.

இலிங்கமானதை அடுப்புமூட்டி ஓட்டில்வைத்து அலரிப் பூச்சாற்றை இரண்டுசாமஞ் சுருக்கிட்டு எடுக்கவும், கட்டாகும் அக்கட்டை மெழுகாவது, செந்தூரமாவது, சுன்னமாவதுசெய்து வெள்ளி செம்பின்மீது கொடுக்கவும் வர்ணிக்கும் அனுபான விசேஷத்தி லிட்டால் பலநோய்கள் விலகும்.

சேங்கொட்டை முறிவு

சேராங்கொட்டையைத் தின்றபேர்க்கு புரசம்பூ பட்டையை காடியிலரைத்து காடியிற் கலக்கி உள்ளுக்கேற்றவும், அது உடனே வாந்தியாகி மருந்து வெளிப்பட்டு சுகுணமாய்விடுவர்.

சன்னிக்கு.

துளசிச்சாற்றில் ரச கற்பூரம் மூன்றுநாளரைத்து பயர் வீதங் குளிகைசெய்து சிறுவர்கட்கு 1-பெரியவர்க்கு 2, ஆக தேனிலிழைத்து காலைமாலை 1-2-3, நாள் இழைத்துக் கொடுக்கவும், சைத்தியம், சீதளம, சன்னி, சுரமுதலியவை தீரும், வறுத்தவுப்பு சுட்டபுளி சேர்க்கவும்.

நொச்சி, பசுபத்திரி, முருங்கை, மாவிலிங்கை, ஈசுரவேரு இவ்வைந்தும் பசும்பாலி லரைத்து அப்பாலினிற் கலக்கி இரண்டொரு பொழுது உண்டு வரவும், சன்னியானது தீரும், பத்தியமா யிருக்கவும்.

கடுகை அறைத்து துணியில் தடவி கால்களுக்கும் கைகளுக்கும் போட்டால் அதிக சீதளத்தையும் அசாத்தியமான குளுமையையும் தடுத்து உடனே சூட்டை யுண்டாக்கும்.

அம்பரை கலப்பில்லாத நல்லெண்ணெயில் இழைத்து ஒரு நாளைக்கு மூன்றுவேளை மூக்கில் நசியம் பண்ணிவர கபாலத்தைப் பற்றிய ஜன்னி சயித்தியம் பறந்துபோகும்.

புங்கன்கொழுந்து நொச்சிக்கொழுந்து மிளகு சமனிடை எடுத்து சிறுவர்கள் மூத்திரம்விட்டு பஞ்சுபோல் நசுக்கி நசியமிட 2-3 வேளையில் தீரும்.

துப்பைப்பூ பலம் 1-லவுங்கம் 1-வால் மிளகு பலம் 1-இவைகளை முலைப்பால்விட்டரைத்து வெள்ளைத்துணியில் தடவி திரிபோல் திரித்து உலர்த்தி ஒரு முனையை விளக்கில் காட்டிக் கொளுத்தி அந்தப் புகையை மூக்கில் பிடிக்கத் தீரும். 2-3-வேளை செய்யவும்.

கருஞ்சொரிக்கு.

சொத்தைக் கிளாயிலே அதாவது-பாமபுகிளா யிலேயைச் சூரணஞ்செய்து அதைப்பனைவெல்லத்திற் பிசைந்து 40-நாள் ஒருமண்டலம் காலைமாலை வெறுகடிப் பிரமாணமுண்டு வரவும் கருஞ்சொரியானது தீரும். பத்திய மொன்றுமில்லை.

சோகைக்கு

கீழாய்நெல்லிச் சாரை மூன்றுநாள் காலையினில் மாறுது உட்கொண்டுவரவும் சோகையானது தீரும். கடும்பத்தியம்வைக் கவும் துவரை, பசுமோர் பசும்பாலாகும், மற்றதொன்றுமாகாது

காசத்திற்கு.

கண்டங்கத்திரி வேரைச்சும்மா யரைத்தாகிலும் அல்லது கியாழங் காச்சியாகிலும், உண்டுவரவும், காசமானதகலும் காலை மாலை இருபது நாள் கொள்ளவும் அரைப்பத்தியம் வைக்கவும்.

இரசப் பிடிப்பிற்கு.

விடத்தேறு சமூலமானதைக் கியாழமிட்டுக் காச்சி காலை யில் குடித்துவரவும் இரசவேக் காட்டாலுண்டாகிய கைகால் பிடிப்பனைத்தும் நிவர்த்தியாய் விடும்.

அருகம்வேர் கொட்டைப்பாக்குப் பிரமாணம் அறைத்து அரையாழாக்கு பசும்பாலில் இரண்டுவேளையும் 5-நாள் சாப்பிட்டு பத்தியமிருக்க ரசப்பிடிப்பு நீங்கும்.

தேள் விஷத்திற்கு.

நவரச் சாரத்திற் கொஞ்சம் சுண்ணும்பை வைக்கவும் அது தண்ணீராய்க் கரைந்துவிடும், அதை தேள்கொட்டிய கடிவாயில் வைக்கவும் விஷமற்று குளிர்ந்துவிடும்.

சிறுசின்னியிலையை அறைத்து கொட்டினவாயில் பூசவும்.

நாயுருவியிலையை மைபோலரைத்து தேள்கொட்டிய விடத்தில் தடவித் தேய்க்கவும் உடனே சாம்பிராணிபுகையை முகத்திலும் மூக்கிலும் ஆக்கிராணிக்க விஷமகலும்.

பவுத்திரத்திற்கு.

எட்டியிலையானதை மைபோலரைத்து ஒருதுட்டளவேயெடுத்து பில்லைதட்டி அதைபவுத்திரமுள்ளவிடத்திற் கட்டிவரவும், அதிலுள்ள பூச்சிகள் வெளிப்பட்டு மடிந்துவிடும் அப்பொழுது பவுத்திரமானது உலர்ந்துவிடும்.

வேளையிலையும் தும்பைவேரும் ஈரவெங்காயமும் ஒன்றாய்ச் சேர்த்தரைத்து பவுத்திரமானதில் வைத்துக் கட்டிவரவும் அப் பவுத்திரமானது தீரும் வருந்தவுப்பு சுட்டபுளிசேர்த்துண்ணவும்.

கர்ப்பமுண்டாக.

கெச்சைக்காயிலையுடன் கொஞ்சம் மிளகு பூண்டுஞ்சேர்த்த ரைத்து தின்றாலுந் தின்னலாம், அல்லது முன்விழுதில் ஆமணக் கெண்ணெ விட்டுகுழப்பிக் குடித்துவந்தாலும் வரலாம், இதில் கர்ப்பமுண்டாகும், பத்தியமாயிருக்கவும்.

மார்புச்சளிக்கு.

தேற்றான் விதையை தண்ணீர்விட் டுரைத்திட சந்தனம் போலிருக்கும் அதையப்படியே 2-3-விசை உட்கொள்ள மார் புச்சளி கோழைக்கட்டுகள் இளகி வெளிப்பட்டுநின்று விடும்.

மூர்ச்சை வாய்வுக்கு.

தைவேளை யானதைச் சார்பிழிந்து அதில்கொஞ்சம்தேனை விட்டுச் சாரித்து ஐந்துவேளை உட்கொண்டு வரவும் மூர்ச்சை வாய்வானது நின்றுவிடும் வறுத்தவுப்பு சுட்டபுளி கூட்டவும்.

பலநோயிற்கு.

கடுக்காயும், தாதளம்பூவும் அரசிலைச்சார் விட்டரைத்து அச்சாற்றில்கலக்கி நசியம்பண்ணி வரவும் பல நோய்களுந்தீரு ம், பத்தியப் பரிகாரமாயிருக்கவும்

சுரோணித வாதத்திற்கு,

சத்தகராதியில் சொல்லியபடி தசமூலமாகிய பத்து தினு சையும் பசும்பாலிற் போட்டு எட்டி லொன்று யிருகக்காச்சி வடி கட்டிக் குடித்து வரவும், சுரோணிதவாத மானது தீரும்.

இரத்த சீதபேதிக்கு.

நன்னாரிவேர், பேதானம் வேப்பிலையீர்க்கு குமிளன் இந் நான்கில் கற்கண்டுஞ் சேர்த்தரைத்து, மூன்றுநாள் ஆறுவேளை உட்கொள்ளவும் இரத்தபேதி சீதபேதி, முதலியவை தீரும்.

கலைமான் கொம்பை மெல்லியதூளாகசீவி (க) பணவிடை யெடுத்து பசும்பால் ஆழாக்கில் போட்டு காச்சி எலுமிச்சம் பழம் ஒருபத்தை பிளந்து சாப்பிடவும் இப்படி (உ) நாள் கொ ள்ளவும் இரத்தக்கழிச்சலாகும்.

அழிஞ்சிவேர் பட்டையை காயவைத்திடித்து அதைவென் னீரிலரைத்துக் குடிக்கையில் சீதம் நீங்கும்.

இரத்த மூலத்திற்கு.

மாவட்டையை உலர்த்தி பொடிசெய்து படை நெருப்பிற் போட்டு அபானத்திற் புகைபிடிக்கவும் இப்படி இரண்டு மூன்று வேளையில் இரத்தமூல மானது நின்றுவிடும்.

எருக்கின் கிழங்கு பலம் க, புழுங்கலரிசிபலம் க, உளுந்து பலம் உ, இம் மூன்றும் அரைத்துப் புளிக்கவைத்து தோசை சுட்டு இருவேளையும் கொடுக்கவும் 3-5-நாள் கொள்ளத்தீரும்.

மேல் சுவாசத்திற்கு.

கருங்கோழியைக் காச்சிச் சாரிறக்கி அதை ரசஞ்செய்து குடித்துவரவும், மேல் சுவாசமானது நீங்கிவிடும் கருங்கோழி யானது அதினுடம்பில் ஒரு ஊசியைக்குத்தவும் உள்ளுறங்கிய வூசிகரைந்து வெளியிலிருக்குமூசிதான் கையில்வரும்பரிட்சை.

இரைப்பிருமலிற்கு.

சடாமாஞ்சி யானதை எலிமிச்சம் பழச்சாற்றி லரைத்து தேனிற்குழப்பி ஐந்துநாள் காலை மாலையில் உட்கொண்டு வரவும் இருமல் இரைப்பு முதலியவை தீரும்.

உயர்ந்த பிரந்தி ஒருபாயிண்டு வாய் சிறுசாயுள்ள புட்டியிலூற்றி நாட்டு வெண்காரம் இரண்டுபலம் பொடித்துகஸ்தூரி அரை விராகநிடை போட்டுகுலிக்கி பிகுவாய் கார்க்கடைத்து வைத்துக்கொண்டு மறுநாளுதையத்தில் தேக்கரண்டி யளவு யெடுத்து சாப்பிடவும் இப்படி ஒருமண்டலங்கொள்ள இரைப் பிருமல் சுவாசம்காசம் இவை தீரும் இச்சாபத்தியம்.

பிரமதண்டி கிழங்குச் சூரணம் மிளகுச் சூரணம் வெள்ளைச் சக்கரை வகைக்கு சரியெடை யெடுத்து கலந்து சீசாவில் வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு திரிகடி பிரமாணமாக 21–நாள் காலையில் சாப்பிட்டுவர இரப்பு தீரும். இச்சாபத்தியம்.

வாந்தியடங்க.

நெல்லிவத்தலும், திப்பிலியும், நெற்பொரியும், சீரகமும், ஆகிய நான்கையும் கியாழம்வைத்துக் காச்சி வடிகட்டி உட்கொள்ளவும வாந்தியடங்கும் மீறிடின், மறுப்டி குடிக்கவும்.

சேத்துமபாண்டிற்கு.

கரிசலாங் கண்ணியிலையும் மிளகும் அரைத்து புன்னக்கா யளவு ஐந்துநாள் அந்திசந்தி யுட்கொண்டு வரவும் சேத்தும பாண்டு தீரும், கடும்பத்தியம் வைக்கவும்.

மருந்துண்ணும் நாள்.

நோய்கட்கு அவிழ்தப் பிரயோகஞ் செய்யில், ஞாயர், செவ்வாய், வியாழமாகிய இவ்வாரங்களில் மருந்தேற்றவும் அந் நோய் விரைவிற் றீர்ந்துவிடும், மற்றவாரங்கள் கூடாவாம்.

வாயி லிரத்தம் வருவதற்கு.

பருத்தி யிலையோடு சீரகமுஞ் சேர்த்து இரண்டும் வெவ் வேறு வறுத்து கியாழம்வைத்து இரண்டு மூன்றுவிசை யுட் கொள்ளவும் வாயிலிரத்தமானது வருவது அடங்கிவிடும்

மலட்டு வயர்வலிக்கு

பாவையிலைச்சாறைப் பிழிந்து காலையில் மாரளவு தண்ணீ ரிலிருந்து குடிக்கவும், இப்படி மூன்றுநாட் குடிக்க அவள் மல ட்டு வயர்வலி நீங்கி கர்ப்பமுண்டாவள்.

பீநசத் திக்கு.

முயலானதின் கட்டம் அதாவது அதன் புக்கையை ஆர்க் கப் பொடிசெய்து இருநாசிகளிலும் நசியமேற்றவும் இவ்வாறு 2-3-நாள் செய்யவும் பீநசங்கள் எட்டு விதமும் அகன்றுவிடும்.

தேவதாரிப்பட்டை பச்சையாகக் கிடைத்தால் நலம் அல் லது ஷை கட்டையை இடித்து வஸ்திரகாயஞ்செய்து பால்விட் டரைத்து பாலிற் கலந்துகொடுக்க 2-3 தினத்தில் குணமாகும்.

மிளகு கடுக்காய்த்தோல் நெல்லிவற்றல் கஸ்தூரிமஞ்சள் வேப்பம் விரை நான்கும் வகைக்குப்பலம் 1-கரசலாங்கண்ணிச் சாற்றால் 4 ஜாமம் அறைத்து 10 பில்லைசெய்து நிழலில் உலர்த் திக்கொண்டு அதிகாலையில் ஒரு பில்லையை பசும்பாலிலரைத்து தலையில்தேய்த்து சற்று ஊரியபின் முழுகவும் இப்படி 10-பில்லை யும் நாலுநாளைக் கொருமுறை முழுகிவர பீனிசம் தீரும்.

புழுவெட்டிற்கு

நேர்வாளத்தை வெண்ணெயில் உரைத்து புழுவெட்டாகிய ரோமங்க ளுதிர்ந்த விடங்களிற் றடவிவா, அப்புழுக்களான வை வெளிப்பட்டு வருவதில் அவைகள் புண்ணாகிவிடும். அந்த புண்ணிற்கு (கால்மல்) என்னும் ரசபஸ்பத்தை வெண்ணெயில் குழைத்து பூச உலர்ந்துபோகும்.

பூரபஸ்பம்.

அடுப்பின்மீது ஒரோட்டில் ரசக் கற்பூரத்தை வைத்து அதின்மேல் படிகாரத்தூளைப் போட்டுயெரிக்க இப்படி கார

முருகி ரசகற்பூரத்தை வெளியி லோடவொட்டாது அழுத்திவிடு வதில் அவ்விரண்டையும் கிளரி இரக்கிடவும் பஸ்மமாம் இப்பஸ் மத்தில் குன்றியளவு தேங்காய் நீரில்போட்டு 10-நாள் உட் கொள்ள அழல்சூடு இருமல்முதலியதை நிவர்த்திசெய்யும்.

பெரும் பாட்டிற்கு.

குருவரிசியானதை மாவிடித்து கவுதும்பைத்தூளையும் சேர்த்துப்பனைவெல்லத்திற் பிசைந்து ஆறுநாள் இருவேளை உண்டுவரவும் பெரும்பாடானது தீரும். இச்சாபத்தியம்.

தென்னம் பாளையின் பூவெடுத்து அதில் பசும்பால்விட் டிடித்து பிழிந்து (அரைக்கால்) படியாக ௩ நாள்குடிக்கவும்.

கௌதும்பையும் குருவரிசியும் சமநிடைகொண் டிடித்து மாவாக்கி பனைவெல்லம்போட்டு பிசைந்து புன்னைக்காய் வீதம் ௩-நாள் ஆறுவேளை தின்னவும் தீரும்

நாவல்மரத்தின்றோல் ஒதியன் மரத்தின்றோல் வகைக்கு ஒருபிடி கொண்டுவந்து பஞ்சுபோல் நருக்கி அரை-படி ஜலத்தி லிட்டு அரைக்கால்படியாகக் காச்சிவடித்து சாப்பிடவும் இப் படி ௩-நாள் ௬-வேளை கொள்ள சாந்தியாம்.

நாவல்பட்டை ஒருபிடி யெருமைமோரில்போட்டு யிடித்து பிழிந்த நீரில் அகில்பட்டைத் தூள் ஐந்துவிராக நிடை கலந்து மூணுநாள் ஆறுவேளை சாப்பிட தீரும்.

பாம்பு கடிக்கு-

தும்பையிலைச் சாறும் பூனைக்காஞ்சொரி யிலைச்சாறும் இர ண்டு ஒன்றாய்க்கூட்டி உள்ளுக்கேற்றவும், அப்பாம்பு கடியின் விஷமானது மீண்டு சுகுணப்படுவர், அல்லது உச்சியிற் கீறி அச்சாற்றைவிட்டு அரக்கி தேய்த்திடினும் அவ்விஷமிறங்கும்.

புரைக்குழிக்கு.

பூமிக்குள்ளிருக்கும் ஆழிக் கிளிஞ்சலைத் தண்ணீரிலரைத் துக்கரைத்து அப்பொரைக் குழியின்மேல் வைக்க அது கொஞ்சநேரத்திற்கெல்லாம் கரைந்துவிடும், இதற்குத் தேங் காயெண்ணை அதன்மேற்றடவி அப்புண்ணை யாற்றிவிடவும்.

நீர்க்கோவைக்கு

கருவேப்பிலையையிடித்து வஸ்திரகாயஞ்செய்து சர்க்கரை கலந்து தினசாரி வெறுகடியளவு அந்தி சந்தி யுட்கொள்ள நீர்க்கோவை சூதகவாய்வு முதலிய தீரும்பத்தியமில்லை.

மண்டூரச்செந்தூரம்.

நூறுவருடஞ்சென்ற சிட்டமானதையும் அயப்பொடியை யும் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து 10-கைவிரட்டியிற் புட மிடவும் இப்படி 21-தரம் புடமிட செந்தூரமாம் இதில்குன் றியிடை தேனிலிட சோகை காமாலை பாண்டு விஷபாண்டு நீர்ப்பாண்டு முதலியவை தீரும்.

வசிய மூலிகை.

மாவிலிங்கப்பாவை யென்பது காட்டுப்பாவை அதில்லிங்க மானவைகள் அடுக்கடுக்காயிருக்கும் அவ்விலையின் சாரோடு தன் சிறு நீறுங் கலந்து எதிரி தலையிற் றேய்த்துத் தலைக்கு வார்க்க வசியமாவார்.

தீராப் பேதிக்கு.

வாழைப்பூவும் புளியாரையும் புட்டாகச்செய்து தேனில் மத்தித்து இரண்டொரு வேளை உட்கொள்க.

மஞ்சள் வெள்ளைக்கு.

முத்தலாயிருக்கப்பட்ட பிரண்டையைச் சார்பிழிந்து ஆம ணக்கெண்ணையுஞ் சேர்த்து மூன்றுநாள் குடிக்க மஞ்சள் வெள்ளை யானது நிவர்த்தி கடுபத்தியங் கொள்க.

மூலப் பிரமியத்திற்கு.

முருங்கைப்பூ குமரிச்சோறு இரண்டும் வெண்ணையிலரை த்து எலுமிச்சம்பழ அளவு ௩-நாள் உட்கொள்ள மூலப் பிரமிய மானது நிவர்த்தி கடுபத்தியங் கொள்க.

நீர்க் கட்டிற்கு

தக்காளிச்சாறு நல்லெண்ணெயில் கலந்து 7-நாள் காலையில் உட்கொள்க. நீர்கட்டு நிவர்த்தி கடும்பத்தியங் கொள்க.

அசீரணத்திற்கு.

வெள்ளை காக்கண வேரும் மிளகு மரைத்து வெந்நீரினில் இரண்டுநாள் ௪-வேளை உட்கொள்க. அசீரணம் செரியாமந்தம் முதலியவை நிவர்த்தி. இச்சாபத்தியமாய் வைக்க.

முருங்கப்பட்டை வெள்ளுள்ளி, சுக்கு, ஓமம், கற்றாழைச் சோறு, இவைகள் வகைக்குப்பல மரை, ஒருபடி நீர் சட்டியி லூற்றி ஷை மருந்துகளை யிடித்துப்போட்டு ஆழாக்கு அளவாக சுண்டக்காய்ச்சி கடுகு உளுந்து வகைக்கு ஒருவிராகனிடை தூள் போட்டு கூழுபோல்கிளரி சாப்பிடுக, அஜீரணம் மலபந்தமிவை தீரும்.

பித்த சுரத்திற்கு.

நெருஞ்சில் வேரானதை யுலர்த்தி வஸ்திரகாயஞ்செய்து அப்பொடியில் தேன்விட்டுப் பிசரி புன்னைக்காயளவு மூன்று நாள் ஆறுபொழுதேற்றப் பித்தசுரமானது அகலும் வறுத்த வுப்பு சுட்டபுளி.

எருக்கின்பால் முறிவு

மொச்சைக்கொட்டையானதை காடியிலரைத்து காடியிற் கலக்கி உட் புகட்ட எருக்கின்பால் முறிவுபடும்.

இந்த மொச்சைக் கொட்டையின் விழுதை உள்ளேற்ற கள்ளிப்பாலின் விஷமுங் கக்குவிச்கும். இதற்கு கடுக்காயும் அரைத்துக் காடியிற் புகட்டவு முறியும்.

நீர்ச் சுருக்கிற்கு.

மோரானதில் கல்நாரையரைத்து அதை புதுவோட்டில் தெளித்து உலர்ந்தபின் அவைகளைச் சுரண்டி அடுப்பிற் சட்டி வைத்து அதிற்போட்டு வறுத்து எடுக்க பஸ்பமாம் அதிற் கொஞ்சந் தேனிலிழைத்து உட்கொள்க. ஏழெட்டு வேளையில் நீர்ச் சுருக்கானது நிவர்த்தி.

துத்திவேர் பலம் 3-திராட்சிப்பழம் பலம் $1\frac{1}{2}$-நல்ல ஜெலத்தில் கியாழமிட்டுக் கொடுக்க. இப்படி 2-3-வேளையில் நீர் சுருக்கு தாகமிவை நிவர்த்தி.

கவுரி பாஷாணக்கட்டு.

கவுரிப் பாஷாணத்தை பேய் பீர்க்கன் சாற்றில் இரண்டொருசாமஞ் சுருக்கிட அதுகட்டிவிடும் அக்கட்டினை தேனிலுரைத்து உள்ளுக்கேற்ற சுரமுதலியவை தீரும்.

வாழை ரசக்குணம்

வாழைப்பட்டையின் சாற்றில் இரும்புமுதலியது மடியும் போர்தையேறியவர்க்கு உள்ளுக்கேற்ற அவ்வெறி யகலும். அல்லது அந்தமரத்தில் அச்சமாகிய கெட்டப் பாரையைச் செருகிவைத்து ச-நாள் பொறுத்து அதையொடிக்க ஒடிந்துவிடும்.

வீர பஸ்மம்.

வீரமானதை தலைமண்டை யோட்டினுடைய தூளை அகலில் பரப்பி நடுவில் வீரத்தைவைத்து மேலு மத்தூளைப் போட்டு மேலகல்மூடி சீலையண் 5-செய்து 2-எருவில் புடமிட நீல நிறமாகிய பஸ்மமாம், அதை தேனில் இரண்டொரு அரிசியிடை யிழைத்து நாக்கிற்றடவ சன்னிமுதலியவைதீரும்.

இரத்த காசத்திற்கு

கலியாணமுருங்கிலை மிளகு அரிசி இவை சேர்த்து அரைத்து அடைசுட்டு அதை சுடசுட செய்யிற்றுவைத்து உட்கொண்டு வர இருமல் இரைப்பை இரத்தகாசந் தீரும் கடும்பத்தியமா யிருக்க.

எரி குன்மத்திற்கு.

கரந்தையும் திப்பிலியும் அரைத்து சுக்குக் கியாழத்துட் கொண்டிட எரிகுன்ம மானவை தீரும் கர்ப்பஸ்திரீகளுக்கு முக்கியமானவை வறுத்தவுப்பு சுட்டபுளி கூட்டவும்.

வெள்ளைக்கு.

வெள்ளறுகு மிளகு வெள்ளைப்பூண்டு மூன்றுஞ் சேர்த்தரைத்து கெச்சைக்காயளவு உட்கொண்டுவரவும் வெள்ளையானது தீரும் மூன்றுநாளுண்டு கடும்பத்தியமா யிருக்கவும்

மிளகும் வெள்ளருகும் சமன்கொண்டரைத்து புளியங் கொட்டை பிரமாணம் இருவேளையும் ரு-ல நாள் தின்னவும் வருத்த உப்பு சுட்டபுளி கூட்டவும்.

முத்தின பிரண்டையை யிடித்து சார்பிழிந்து அதற்கு சமன் நல்லெண்ணெவிட்டு கலந்து வீசம்படி பிரமாணம் சாப்பிடவும் இப்படி மூணுநாள் கொள்ளவும் கடும்பத்தியம்.

சங்கங் குப்பியிலை ரசம் அரையாழாக்கு அதில் பசுந்தயிரின் ஏடுபோட்டுப் பிசைந்து காலையில் மூன்றுநாள் தின்று கடும்பத்திய மிருக்கவும்.

அந்திர வாயுவிற்கு.

பச்சையாகிய புகையிலையும் சீரகமும் சேர்த்து தண்ணீரில் அரைத்து மூன்றுநாள் இருவேளை கடும்பத்தியமாய் உட்கொண்டுவரவும் அந்திரவாய்வு தீரும்.

நூலருமை.

ஒன்பது கண்ணுள்ள ஓட்டைப் பாண்டமாகிய இவ்வுடலி லுண்டாகிய பலவகை நோய்களையும் தங்கவொட்டாது கானகத்தில் துறத்திக்கொண்டுபோய் விட்டுவிடுமென இந்நூலை சத்தியமாய் நம்பி செய்பவர்களுக்கு எல்லாம் சித்தியாகும்.

வாத குன்மத்திற்கு.

பாப்பாரமுள்ளி தும்பை நொச்சி திப்பிலி பூண்டு காயம் நல்லவெல்லம் ஓமம் இவைகளை சமன்கொண்டு மிதிபாவல்

சாறுவிட்டு அரைத்து கெச்சக்காய் வீதம் இருவேளையும் 5-7 நாள் கொள்ளவும்.

சீத சுரத்திற்கு

மிளகு ½ விராகனிடை பொடித்து தயிர்விட்டு பிசைந்து பிறகு கொஞ்சம் நெய்விட்டு மத்தித்து மூன்றுவேளையாக பாகித்துத் தின்னவும் உடனே வென்னீர் சாப்பிடவும்.

சூசிக வாய்விற்கு

பருத்திக்கொட்டை - கையான்யிலை - ஏலம் - கௌதும்பை- சுக்கு-திப்பிலி மிளகு-எவாச்சாரம்—இவைகள் வகைக்குப் பலம் உ, இவை யாவும் யிடித்து வஸ்திரகாயஞ்செய்து இஞ்சி சூரணத்தில் காலு சொருபங்கு ஊமத்த விதை சூரணம் கூட்டிசலந்து வைத்துக்கொண்டு பனைவெல்லத்தில் கழற்சிக்காயளவுசூரணத்தைபிசைந்து 5-நாள் கொள்ளவும் இச்சாபத்தியம்.

நளிர் குளிருக்கு

பசுமோரில் ஊரினமிளகு அறைபலமெடுத்து துளசியிலை ஒரு பிடி, கற்பூரம் விராகன் 1, இதை வென்னீர்விட்டறைத்து இருவேளையாக பாகித்து கொடுக்கவும். இப்படி 2-3-நாள் இச்சாபத்தியமாகக் கொள்க.

மேக சுரத்திற்கு.

நிலக்கமிழ்வேர் சுக்கு பனைவெல்லம் மூன்றும் சமன் போட்டு கியாழமிட்டு யெட்டொன்றாக்கி இருவேளையாக ச-ரு நாள் உண்க.

நேத்திர வாய்வுக்கு.

வெள்ளுள்ளி வசம்பு குப்பைமேனியிலை இவைகளை ரவியிவிட்டு யிடித்து சாறுபிழிந்து உச்சியில் தேய்த்து சீயக்காய் கொதிப்பித்தெடுத்து தலைக்கு வார்க்கவு மிப்படி ரு-நாட்கொரு தகுதி ரு-சூ-விசை வார்ப்பது உத்தமமாம்.

கண்புகைச்சலுக்கு

புளியாரையிலை வெங்காயஞ் சீரகம் இதையிடித்து சாறு பிழிந்து கண்ணிற் குத்திவரவுந் தீரும்.

நமைசொரிக்கு.

பூவரசம்பட்டை 1-பல மெடுத்து நெகிழ வறைத்து அறைக்கால் படி நீராகாரத்திற் கரைத்துக் கொடுக்கவும் இப்படி ரு-நாளீய சொரி நமை யிவை தீரும் ஆனால் உ-ரு-விசை பேதியாகும்.

பேய்சொரிக்கு.

இந்துப்பு பொடித்து நெய்விட்டரைத்து தலைமுதல் பாத மட்டில் பூசிவைத்து மருநாள்காலை சீக்காய் கொதிப்பித்து அல்லது இலுப்பைக்கட்டி சுட்டரைத்து தலைமுழ்கச்செய்ய தீரும்.

கால்வெப்புச்கு.

ஆலம்பால்-மெழுகு-கல்லுப்பு மஞ்சள்-அரக்கு-புரா வெச்சம்-கடல் நுரை, இவைகள் வகைக்குப் பலம் (வ) இவையாவுங் காடிவிட்டரைத்து பீங்கான் கோப்பையில் வைத்துக்கொண்டு ரு-தினம் பூசிவர வெடிப்புமாறும.

காலிற் புண்ணுக்கு.

வங்காளப்பிச்சை - ஆவாரம்பட்டை-பற்பாடகம் யீருள்ளி சூதம், இவைகள் வகைககுப் பலம் உ-இவையாவுங் கல்வத்தி விட்டு மைபோலரைத்து வெண்ணெயிற் குழப்பி சீலையில் தடவி காலிற்காணும் ரிணங்களின்மேற் போட்டுவா ஆறிவிடும்.

ஒட்டினப்புண்ணுச்கு.

செங்கொட்டை விராகநிடை க-மயில் துத்தம் விராக நிடை—க வசம்பு-உ இவைகள் வகைக்குப் பலம் விராகநிடை-க இவைகளை யிடித்துப் பொடித்து நல்லெண்ணெயிற் குழப்பி புண்களின்மேற் றடவிவரத் தீரும்.

வெள்ளை கொருக்கு அரையாப்பு கட்டிக்கு.

சரக்கொன்றை பட்டை சீரகம் இரண்டுஞ் சமன்கொண்டு அறைத்து புன்னைக்காய் வீதந் தின்று ஆழாக்குமோர் சாப்பிடவுங் கடும்பத்தியம்.

நரம்புசிலந்திக்கு.

எருக்கன மொக்கு சுய-யெடுத்துவந்து பெருங்காயஞ்சம நிடைகூட்டி அறைத்து ரு-எ-நாள் கொள்ளநரம்புசிலந்திமாறும்.

அதி சுவாசத்திற்கு.

நாரத்தம்பழ மேற்றோல் நீக்கி நடுப்பழத்தின் சதையை யெடுத்துப் பிழிந்து அந்தசாற்றில் திப்பிலியைப் பொடித்துப் போட்டு மத்தித்து தின்னவும் ரு-எ-ய நாள் தின்ன சுவாசகாசு யிரும்ல் சுவஸ்தமாம்.

ஊமத்த யிலையை சிறுகக் கத்தரித்து புகையிலையோடு சேர்த்து சுருட்டு சுருட்டி புகையிலை சுருட்டுபோல் பிடித்தால் உடனுக்குடன் சுவாசங் குணமாகும்.

கால்வெடிப்புக்கு.

சுண்ணும்புகல் ஒருபடி கொண்டுவந்து பாண்டத்திலிட்டு பசும்பால் நல்லஜெலம் வகைக்கு உ-படிவார்த்து அடுப்பேற்றி கொதிக்கவைத்திரக்கி காலுக்கு வேது பிடிக்கவு மிப்படி இரு வேளையும் மூன்றுநாள் ஆறுவேளையாக வேது பிடிக்கையில் கால் வெடிப்பு மாறும்.

புணர்ச்சியில் பிரியமில்லாதவர்க்கு.

உடைக்காத பச்சைக்கடலையை நல்லெண்ணெயில் நன்ருய்வூரவைத்து ௰-உ௰-௩௰ கடலை வீதம் அந்திநோத்திற்றின்று வரவும் இப்படி ௰-உ௰-௩௰-நாள் தின்னவும்.

சீரகமும் தேத்தான்கொட்டையுஞ் சிறுகீரை வேருஞ் சமனிடை கொண்டுவந்து இளநீரில் ஊரவைத்தறைத்து கெச்சக்காய் வீதம் தின்னவு மிப்படி ௰-உ௰ இருவேளையுங் கொள்ள வெள்ளை முதலானதும் நீங்கும் சூடு அகலும் புணர்ச்சிக்கு மகா ஆவல் கொடுக்கும்.

சீழ் பிரமியத்திற்கு.

அத்திப்பட்டை ஆவாரம்பட்டை பூவரசம்பட்டை நாவல் பட்டை கொன்றை மரப்பட்டை இவைசமனிடை கொண்டுவந்திடித்து சூரணித்து தேனில் குழைத்துத் தின்னவு மிருவேளையும் ரு-௰ நாள் கொள்ள தீரும்.

சகல பிரமியத்திற்கு.

ஷை மருந்துகள் சூரணமாயாவது அல்லது சார்களாகவாந்து சமனிடை விளக்கெண்ணெவிட்டு பரக்கிச் செக்கை தூள் ஒருபலம் போட்டுகலந்து காச்சிவடித்து எ-கூ நாள் வீதமாக சாப்பிடவும் இச்சாபத்தியம்.

சிறுநீரில் இரத்தங்கண்டால்.

நெருஞ்சிவிரை ஒருபிடியெடுத்து செவ்விளநீரிலூரி அரைத்து கரைத்துகுடிக்கவு மிருவேளையாக ரு-௰ நாள்கொள்ளவும்

வெகு மூத்திரத்திற்கு.

வெள்ளாட்டிரச்சியை கொண்டுவந்து ஷை நோயாளியின் மூத்திரத்தில் ஒரு ஜாமம் ஊரவைத்து பின்யெடுத்து கழுகி காரசாரமிட்டு கரிசமைத் துண்ணவும் இப்படி வி[illegible]ாமற் றினம் (௰-கரு) நாள் தின்னவும்.

படுக்கையில் சிறுநீ ரிறங்கலுக்கு

படுக்கையிடத்தில் அரிசிதெளித்து அதன்மேல்பாய்போட்டுபடுக்க சுறுநீர் விட்டால் அந்நீரிலூரிய அரிசியை காலையிலெடுத்து அறைத்து அடைதட்டிச் சுட்டுத் தரவும் அப்படி (ரு-ரு) நாள் கொடுக்கவும்.

வெட்டைக்கு.

தேங்காய் ஒன்றுகொண்டுவந்து வோடுநீக்கி புங்கம்வேர் ஒரு பலம்போட்டு உரலிலிட்டுயிடித்து பால்பிழிந்து கால் அரையாழாக்கு வீதம் 3-நாள் கொடுக்கவும்.

பக்க சூலைக்கு.

கள்ளிக்கொழுந்தின்சார், பூண்டுதயிலம், காயம், இவைகள் வகைக்குப் பலம் விராகனிடை க மூன்றுங் குழைப்பி இச்சர் பத்தியமாக (ரு) நாள் கொடுக்கவும்

மேக சூலை.

பச்சைவெள்ளருகு, பழய புழுங்கலரிசி, இவைகள் வகைக்குப்பலம் (உ) இவையிரண்டுமறைத்து அடைசுட்டு வென்னீர் ஊத்திக்கொண்டு ஒரு அடை தின்னவும் இதை இரட்டையாக யிருவேளையுங் குளிக்கும்போதெல்லாங் தின்னவும் இப்படி (20) (40) நாள் தின்று வரத் தீரும்.

இருவாய் கட்டுக்கு.

துருஞ்சிப்பட்டையை யிடித்துக் காயவைத்து சூரணித்து வென்னீரிற் பிசைந்து நாழிஜெலத்திற் கரைத்துக் காச்சி ஆழாக்கு கியாழமாகக் காச்சி யிருவேளையுங் குடிக்கவும்.

கெணக் கழிச்சலுக்கு

மாதளம்பிஞ்சு தென்னபிஞ்சு மாயிலைக்கொழுந்து ஆக மூன்றும் சமனிடைகொண்டு அறைத்து புன்னக்காய் வீதங் கொடுக்கவும் உடனே காரமில்லாத சாதம் ஊட்டவும் இப்படி இருவேளையுஞ் செய்ய கணக்கழிச்சல் நீங்கும்.

சீதபேதிக்கு.

கலியாண முருக்கன்பட்டையை அறைத்து கன்னிடையன் தயிரிற் குழப்பி மூன்றுவேளையுங் தின்னவும் இப்படி ரு-நாள் ஒன்பதுவேளை கொள்ளவும்.

தேகக் கழிச்சலுக்கு.

பேதாளு (கால்பலம்) கொண்டுவந்து ஜெலத்தில் போட்டு ஊரியபின் அவை சிலுப்பி நுரையேரியபின் தொட்டால்பிசின்

போலாகும் கற்கண்டுபொடி ௨-பலம் கூட்டி குச்சியினுல் நன்ருய் கிளரி மெல்லிய சல்லாவில் வடிகட்டி சாப்பிடவும் இப்படி ஒருமண்டலம் சாப்பிடவும்.

வெள்ளோக் காளத்திற்கு.

சர்க்கரை களஞ்சி ச, ஏலம் களஞ்சி ௩, மதுரம் களஞ்சி ௩, திப்பிலி சழஞ்சி ௨, இஞ்சி சழஞ்சி ௨, இவை பொடித்து ஆவின்பாலில் கலந்து சாப்பிடவும் தலைச்சுற்று வெள்ளோக்காளம் மயக்கம் பித்தம் இவை தீரும்.

அபானக் கடுப்புக்கு

துத்தியிலை, தராக்லை, வெங்காயம் இது மூன்றும் பொடியாயரிந்து வெண்ணையாகிலும் சித்தாமணக் கெண்ணையாகிலும் விட்டு வதக்கி ஆசனத்தில்வைத்து கட்டவும் உள்ளுக்குஞ் சாப்பிடவும்.

பிள்ளைபெற்ற அழுக்கு விழுக.

பளிங்குச்சாம்பிராணி புளியங்கொட்டைப் பிரமாணம் பனவெல்லம் பின்னக்காய்ப் பிரமாணம் இதுகளிரண்டையும் 3-வேளை கொடுக்கவும்.

துராயிலை உப்புபோடாமல் கடைந்து 3-வேளை கொட்டைப் பாக்களவு 3 உருண்டை சாப்பிடவும்.

மண்டையிடிக்குத் தைலம்.

சிறுகீரை ரசம் படி-கால், எள்ளெண்ணை படி-கால், கருஞ்சீரகம் வெள்ளை மிளகு பளிங்குசாம்பிராணி பூண்டு கஸ்தூரி மஞ்சள் கொம்பரக்கு கிச்சிலிக்கிழங்கு மதுரம் வகைக்கு பலம் கால் சேர்த்துக் காய்ச்சி முழுகவும் இச்சாபத்தியம்.

படர்தாமாரைக்கு மருந்து

கொண்ணைத்துளிர் புளியந்துளிர் மிளகு சமனிடைகூட்டி அறைத்து படர்தாமரையின்மேல் இன்றைக்குத் தடவ நாளைக்கு ஆறிப்போகும்.

கண்டமாலைக்கு வெள்ளைமாத்திரை.

பாஷாணம் விராகன் 5, கல்வத்திலிட்டு கண்டங்கத்திரியிலைச் சாற்ருல் 8-ஜாமம் அறைத்து பயிரளவு மாத்திரைகள் செய்து 5-நாள் நெய்யில் கொடுக்கவும் பத்தியம் கறி நெய்கிச்சடி, புளி தள்ளி உப்பை வறுத்துக் கூட்டவும் கண்டமாலை ஆருத புண்கள் கொருக்குப்புண் தீரும்.

பாண்டுவகை 12 க்கு அயச்செந்தூரம்

அரப்பொடி பலம்-1, கெந்தகம் பலம் 1,2-பலம் கெஞ் சாயிலே ரசம் விட்டரைத்து பில்லைதட்டி காய்ந்தபிறகு ஓட்டில் சீலைமண்செய்து வாராக புடம் போடவும் முருக்கம் பூப்போல் நீரும். பணவிடை தேனில் கொள்ளவும் மேற்சொன்ன நோய் கள் தீரும் 10-நாள் இச்சாபத்தியம்.

நிகள முளைமூலத்திற்கு

கடையில் விற்கிற ரசபற்பம் நல்லெண்ணையி விழைத்து முளையின்பேரில் தடவை கறைந்துபோகும் கைகண்டது.

முன்மருந்து கொஞ்ச மாறினவுடனே இரவில் சித்திரமூல யிலையை அறைத்து முளையின்பேரில் வைத்துக்கட்டிக்கொண்டு படுத்துக்கொள்ளவும் காலையி லவிழ்த்துப்போட்டு மருந்து மாத்திரம் தடவவும்.

சகலவித மூலத்திற்கு

களச்சிவிரையில் முளையை எடுத்துப்போட்டு நெய்யில் பொன்னிறமாய் வறுத்து ஷ்டி நெய்யைவிட் டறைத்துசுண்டற் காய்ப் பிரமாணம் 12-உருண்டைகள்செய்து அந்தி சந்தி 6-நாள் கொடுக்க சகல மூலமும் சுருங்கி வாடிப்போகும் உபாய மான பத்தியம்.

புறங்கழுத்து ஜன்னி 13-க்குத் தைலம் ராக் காமாலைக்கு

பாவயிலைச்சாரும் நல்லெண்ணையும் மத்தித்து கண்ணில் விட கண் துலாம்பரமாய்த் தெரியும்.

விழிக்கண் குருடுக்கு

குப்பைமேனி யிலையைக் கசக்கி ரசத்தைக்கையில்பிழிந்து இரண்டுகையையும் தேய்க்க குழாம்பாய் வரும், அப்படியே பீங் கானில் வழித்துவைத்து கண்ணிலிடவும் தைலம் ஸ்நானஞ் செய்யவும் அன்று தீட்டவேண்டாம்.

கண் ஆணி பூ வெள்ளெழுத்துமறைப்புக்கு மருந்து

மகிழம்பருப்பு காடிவார்த்தறைத்து உருண்டைசெய்து நிழலில் உலர்த்தி காடியில் உரைத்துப்போட ஆணி பூ வெல் ளெழுத்து மாறும்.

காது கேளாதவர்க்கு காதுக்குத்தேய்க்க தைலம்

நல்லெண்ணை படி-கால், நிலப்பனகிழங்கு பலம் கால் பொடித்துப் போட்டு காய்ச்சி கால்; இரண்டிற்கும் ஒரு மண்ட லம் தேய்க்கவும் காது செவிடு நீங்கும்.

அதிசாரத்திற்கு.

விளாம்பிசினியை பொடித்து வேண்டியமட்டில் யெடுத்து சரியிடை நெற்பொரி பொடித்துப்போட்டு தேனில் குழப்பித் தின்னவும் இருவேளையும் கொள்ளவும்.

சைவர் வாதத்திற்கு.

பச்சைதுவரை சமூலங் கொண்டுவந்து யிடித்து சார்பிழிந்து ஷை செடியின்வேர் ஒருபிடியெடுத்து சாற்றுலரைத்து குடித்துவர 10-நாளில் வாதம் தீரும் இச்சாபத்தியம்.

விப்புருதிக்கு.

சித்தாமணக்குப் பருப்பு மஞ்சள் யீருள்ளி மூன்றும் சமமிடை கொண்டரைத்து எருக்கன்பாலில் குழைப்பித்திரட்டி உமிக்கும்பியில் புதைத்து வெந்தபிறகெடுத்து உண்ண விப்புரிதிபோம்.

மேக கற்பம்.

கற்றாழைமடல் சோற்றையெடுத்து நல்லஜெலத்தில் யேழுவிசை கழுவி புன்னைக்காயளவெடுத்து பள்ளங்கோவி பணவிடை கல்னார் பஸ்பம் வைத்துத் தின்னவும் இபபடி 7 - நாள் காலையில் தின்னவும் மேகச்சூடு தணியும்.

உஷ்ணவாய்விற்கும் பித்தத்திற்கும் புதினாச் சூரணம்.

புதினாபலம் 1, சிச்சிலிக்கிழங்குபலம் 1, லாகூர்உப்புபலம்1, சூரத்து நெல்லிப்பருப்பு பலம் 1, மிளகு பலம், கருப்புப்பு பலம் அரை இவையெல்லாஞ் சேர்த்து சூரணஞ்செய்து சமனிடை சர்க்கரை சேர்த்து 20-நாள் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

ஊஷ்ணபேதிக்கு இஞ்சிச் சூரணம்.

இஞ்சி பலம் 10-சுக்கு திப்பிலி ஏலம் மிளகு லவங்கம் கோஷ்டம் அக்கிராகாரம் அதிமதுரம் ஜாதிக்காய் ஜாபத்திரி சீரகம் சடுக்காய் வகைக்குப் பலம் $\frac{1}{4}$ இஞ்சியை வருத்து மற்ற சரக்கையுஞ் சேர்த்திடித்து சூரணஞ்செய்து சமனிடை சர்க்கரை கலந்து திருகடி பிரமாணம் 20-நாள் சாப்பிடவும்.

வயிற்றுவலி வாய்விற்குச் சூரணம்.

பிரண்டைவேர் பலம் 5 - சவுக்காரம் இந்துப்பு கல்லுப்பு வளையலுப்பு பாறையுப்பு வகைக்கு $1\frac{1}{2}$ இதுகளெல்லாஞ் சேர்த்து இடித்து சூரணம்செய்து படி ஜெலத்தில் 3-நாள் ஊறவை

த்து இறுத்துப்போட்டு வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு ஒருகடி பிரமாணம் 20—நாள் சாப்பிடவும் இச்சா பத்தியம்.

அறையாப்பு கட்டிக்கு தொடைவாழைக்குப் பத்து.

அமுக்கிராக்கிழங்கு மைசாக்ஷி பளிங்குசாம்பிராணி சுக்கு பெருங்காயம் இவையெல்லாம் எருக்கம் பழுப்புச் சாற்றில் அரைத்து கட்டியின்மேல் போட்டு அனல் காட்டவும் இப்படி மூன் றுநாள் பத்துபோட்டு நாலாநாள் பேதிக்கு கொடுக்கவும்.

முளைமூலத்திற்குப் பத்து.

சுக்கு மேல்தோல் சீவி அறைத்து கொதிக்கவைத்து இரவில் பூசி காலையில் பார்க்கக் கரைந்துபோகும் வெற்றிலையை வதக்கி மேலேபோடவும் ஊசிகாந்தத்தை தொப்புளில் வைத்து துணியினல் கட்டவும்,

வெளிமூலத்திற்குப் பத்து.

மாட்டுக்கொழுப்பை மூலத்தைச் சுற்றிலும் பூசி மாட்டுக்கொழுப்புத்துளை நெருப்பிலிட்டு அடியில் புகைபிடிக்கவும்.

மார்முலை எழும்புகிறதற்குப் பத்து.

வெள்ளிக் குண்டுமணிவேரை காடியினலரைத்து 10-நாளைக்கு மார்மேலே பூசப்பெருகும்.

வெள்ளை யுதட்டிற்கு.

குண்டுமணியை அவுரிச்சாற்றி லறைத்து வெள்ளை யுதட்டிற்குப் பூச கருக்கும்.

கருந்துளசியை பிரதிதினம் காலையில் கெச்சைக்காய்ப் பிரமாணம் சாப்பிட்டு ஜலம் சாப்பிடவும் இப்படி 30-நாள் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

ஊதுகாமாலைக்கு மருந்து.

எருக்கன் கொழுந்தை வெற்றிலையில்வைத்து மூன் றுநாளைக்குக்கொடுக்கவும் கடும்பத்தியம் உப்பு புளி தள்ளவும்.

நாய் ஈ காதில்விழுந்தால் அது சாகிறதற்கு மருந்து.

தொட்டாச்சிணுங்கி வசம்பு வெங்காயம் இந்த மூன்றையும் நசுக்கிக் காதில் பிழிந்தால் சாகும்.

குழந்தைகளின் கழுத்தில்காணும் கண்டமாலைக்கு மருந்து.

குஞ்சுபொரித்த கோழிமுட்டை யோட்டின் ஜவ்வெடுத்து ஓட்டைக் காயவைத்து ஒரு சின்ன குடுவையில்போட்டு பழச்சாற்றை மிதக்கவிட்டு ஓடுமூடி சீலைசெய்து 20-விரட்டியில் புடம் போட பஸ்பமாகும் இந்த பஸ்பத்தை ரிணத்தின்பேரில் அப்பி தேங்காயெண்ணெவிட ஆறிப்போகும் ஆறுகிற பரியந்தம் எண்ணெயை விட்டுக்கொண்டு வரவும்.

கண் மறைப்புக்கு மருந்து.

புளிப்பு மாதுளம்பழச்சாறும் சீனுகற்கண்டும் சமனிடையா யறைத்து ஒரு சீசாவில் வைத்துக்கொண்டு கண் வியாதிக்கு ஒரு துளி கண்ணில்விடவும் ஆணிமுதலான துகள் நீங்கிப்போகும்.

சிறங்கிற்கு மருந்து.

மிளகைக்கருக்கி தேங்காயெண்ணெயில் அறைத்துக்கலக்கி சிரங்கில் தடவிவர குணமாகும் கருஞ்சீரகத்தை கருக்கி நல்லெண்ணெவிட் டறைத்துத் தடவிவர சிரங்கு நீங்கும்.

வாந்தி அரோசிகத்திற்கு.

பச்சைப்பயற்றின் தோல்பிடி 1-இளநீர் தண்ணி ஆழாக்கில் போட்டு அரையாழாக்காகக் காய்ச்சிவடித்து கொஞ்சம் சர்க்கரை போட்டு 3-பொழுது கொடுக்க அரோசிகம் தீரும்.

தாகத்திற்கு.

நெற்பொரி சுக்கு வில்வவேர் குட்டி விளாம்பிலையை பொன் வறலாய்வறுத்து எல்லாவற்றையும் சட்டியிலிட்டு ஒருபடி ஜலம் விட்டு உழக்கிருக்க வடியிட்டு மூன்றுநாள் கொடுத்துவர வாந்தி அரோசிகம் தாகம்தீரும் இச்சாபத்தியம்.

நீர் இரத்தம்போல் வருகிறதற்கு.

துத்தியிலை எலுமிச்சங்காயளவு அறைத்து எருமைத்தயிரில் குழப்பி 3-அல்லது 5-நாள்கொடுக்க இரத்தம்போலிருக்கிற சிறுநீர் தெளியும் மேகம் தீர்ந்துப்போகும் இச்சாபத்தியம்.

ரசகர்ப்பூரம் விராகனிடை 2, வெள்ளைக் குங்கிலியம் வி-3, கற்கண்டு வி-5, கெந்தகம் வி-2, இதுகளை அறைத்து 14-பங்கு செய்து பொட்டலங்கட்டி அந்தி சந்தி 2-பொட்டளமாக 7-நாள் சாப்பிட வெள்ளை கண்ட மேகங்களெல்லாம் தீரும்.

மேகரிணம் ஆற.

வரப்பூலாங்கியிலேயை காடியிலரைத்து ரிணங்களின்மேல் போட நெடுநாள் ஆறுதிருந்த ரிணங்களும் ஆறும். சினேப்பு தள்ளவும்.

எல்லாவித புண்ரிணத்திற்கு மேல்பூசு மருந்து.

முகிழ்விரியாத பூவரச மொக்கு 4, காசிக் கட்டி வி-கால, பாக்கு 1, இதுகளை உமிழ்நீரிஞ லரைத்துப்போட்டு வரவும் துத்தியிலைத் தண்ணீர் விட்டு கழுவிவரவும் சினேப்பண்டமாகாது.

புண்சேஷ்டைகளுக்கு.

மிளகு துட்டிடை 1, பூண்டு 3, கலியாண முருக்கன்சாறு விட்டரைத்து நல்லெண்ணை துட்டிடையில் குழைத்து காலையில் கொடுக்கவும் இப்படி 5 நாள் காலையில் கொடுத்துவர புண்ணோடு கூடின கிரந்திகளும் தீரும்.

புண்கள் ஆற

சித்திரமூலம் நல்லவெல்லம் வகைக்குப் பலம் 1, அரைத்து நல்லெண்ணை உழக்கில் கரைத்து கொதிக்கவைத்து அந்திசந்தி வேளைக்கு இரண்டு விராகனிடை வீதம் 5-நாள் கொடுத்துவர சகலவித புண்களும் தீரும் சினேப்பாகாது.

கரடுகட்டின புண்களுக்கு.

வெள்ளுள்ளி பலம் 1, இலந்தைவேர்ப் பட்டை, பலம் 1 இதுகளை யரைத்து நல்லெண்ணை பலம் 1-ல் குழைத்து மூன்று பிரிவாய்ப் பிரித்து மூன்றுவேளை காலையில் கொடுத்துவர கரடு கட்டின புண்கள் கிரந்திகள் தீரும் இதுகளுக்குப் பத்தியம்.

அரையாப்பு கரைய உடைய.

நத்தைச் சூரிவேர் எலுமிச்சங்காயளவு காலாழாக்கு நல்லெண்ணையில் குழைத்து காலையில் 5-நாள் கொடுத்துவரவும் அரையாப்புக்கட்டி நீராகக் கரையும் பத்தியம்.

கட்டி உடைய.

ஊமத்தன் தண்டைச்சுட்டு விளக்கெண்ணையில் குழைத்து கட்டியின்மேல் பத்துபோட கட்டி வாய்விடும்.

கருஞ் சீரகத்தை வெண்ணீர்விட்டாவது காடிவிட்டாவது அரைத்து கட்டிகள்மீது பூசிவந்தால் பழுத்து உடையும் வீக்கங் கரையும்.

சவுக்காரத்தை புறாவின் மலம் சரிபங்குசேர்த்து அறைத்து கட்டியின்மேல் பூசிவந்தால் 2-3-வேளையில் கட்டிவுடையும்

பெருகாஞ்சோரி யிலையை அறைத்து கட்டிகளின்மேல் தளமாய்ப்பூசி கட்டிவைக்க்க் கரைந்துபோகும்.

தோஷசுரங்களுக்கு நசியம்.

அகத்தியிலைச்சாற்றில் சுக்கு திப்பிலிமிளகு சயிந்தலவனம் வகைக்கு விராகனிடைகால், அறைத்து நாசியில் நசியமிடதோஷசுரங்கள் தீரும்.

உத்தாமணிச்சாற்றில் திப்பிலிமிளகு விராகனிடை அறை அறைத்து நாசியில் நசியமிட தோஷசுரங்கள் தீரும்.

சீதசுர நசியம்.

பாவயிலைச்சாற்றில் வெள்ளுள்ளி திரி 2, சயிந்தலவனம் விராகனிடை கால இதை அறைதது நாசியில் நசியமிட சீதசுரம் தீரும்.

முறைசுர நசியம்.

நல்லெண்ணெயில் சீக்கிளுந்தூளைக் குழைத்து நாசியில் நசியமிட முறை முறையாய் வருகிற சீதசுரம் தீநம்.

முறைசுர தலைவலிக்கு.

எருக்கிலைசாற்றில் ஓமம் சயிந்தலவணம் சமமாயறைத்து நாசியில் நசியமிட முறைசுரம் தலைவலி தீரும்.

புரவாத ஜன்னிகட்கு.

பூனைவணங்கியும் மரக்காண உப்பும்கசக்கி பின்கழுத்தில் தேய்க்க குணமாகும் முழங்கால் வாதத்திற்கும் போட்டால் குணமாதும.

மேகச் சூட்டுக்கு.

துத்தியிலையை கியாழம் செய்து பாலும் சக்கரையும் கூட்டி காப்பிபோல்செய்து காலைமாலை சாப்பிட்டுவரவும் திரேகத்தில் சீதளம் பாவினுலும் குளிருண்டானுலும் காலையில் மாத்திரம் சாப்பிடவும்.

துத்தியிலையும் பச்சைப்பயரும் வெங்காயமும்கூட்டி சமைத்து போஜனத்துடன் சாப்பிட்டு வந்தாலும் சூடுதணியும்.

அருகம்வேர் ஒருபிடியும் மிளகு 21-இவ்விரண்டும் கிஷாயம் செய்து பால் சக்கரை கூட்டி காப்பிபோல் காலை மாலை இரு வேளையும் சாப்பிட்டுவந்தால் மேகச்சூடு தணியும மருந்தின் வேகமெல்லாந் தணியும்

மலம் உதைய.

சரக்கொன்றைபுளி பின்னக்காயளவு, சக்கரை 3-சிட்டிக்கை கொஞ்சம் உப்பு புளி முளகாய் கூட்டி துவையல் செய்து அன்னத்தோடாவது வெரும் வயற்றிலாவது புன்னைக்காயளவு சாப்பிட்டால் மலம் உதையும்.

சரக்கொன்னைக் கொழுந்தை வதைக்கி புளி உப்பு காரம் சேர்த்து துகையல்செய்து காலையில் சாப்பிட்டுவந்தால மலச்சிக்கல் நீங்கும் 2-3 நாள் சாப்பிட்டால் வாய்வு கலையும்.

சரக்கொன்னை புளியுடன் முளகாய் உப்பு புளி இஞ்சி இவைகள் சேர்த்து துகையல்செய்து போஜனத்துடன் கொட்டைப்பாக்களவு சாப்பிட்டால் மலப்பிரவர்த்தி தாராளமாய் வரும்.

மேகத்திற்கு அல்லது வெள்ளைக்கு.

சீந்திலுப்பு மூங்கிலுப்பு கற்கண்டு ஏலக்காய் அரிசி இவை நான்கும் சரியிடை கூட்டி அறைத்து களாச்சிக்காயளவு காலை மாலை தின்னவும்.

சாராய வெரிநீங்க.

கொத்தமல்லி விரையை காடிவிட்டரைத்து புன்னைக்காயளவு உள்ளுக்குச்கொடுத்து கொத்தமலி விரையை கிஷாயம் வைதது கொஞ்சம் பனங்கற்கண்டு போட்டுக்கொடுக்க சாராய மயக்கந்தீரும்.

முள்ளாங்கிக் கிழங்கை யிடித்து சாறுபிழிந்து அதில் 2-3 சிட்டிக்கை படிகாரத்தூள் போட்டுக்கொடுக்க வெரி தீரும்.

ஜரீஷ்பழத்தை சர்பத்து செய்துக்கொடுத்தாலும் சரி அல்லது ஜரீஷ்பழத்தை கிஷாயம் செய்து வடிக்கட்டி நாட்டுச் சக்கரைபோட்டுக் கொடுத்தாலும் சாராயவெரி தீரும்.

பல்கூச்சுக்கு.

புதினாவிரையை வாயில்போட்டு கூசுகிறபல்லினால் கடித்து மெல்லவும் இப்படி காலை மாலை 2-3 பொழுது மெல்ல பல் கூச்சு நீங்கும்.

குழந்தைகள்வயற்றுக்கிருமிகள் வெளிப்பட.

புரசம் விரையை நிழலில் உலர்த்தி பொடிசெய்து பாலும் சக்கரையும் சேர்த்து அடுப்பேற்றி பாகுசெய்து அதில் ஷை பொடியைப்போட்டு லேகியம்போல் செய்து இரவில் படுக்கும் போது அல்லது காலையில் களச்சிக்காயளவு கொடுத்தால் வயற்றிலுள்ள கிருமிகள் வெளிப்படும்.

பசிதீபனத்திற்கு.

புதினாரசம் பலம் 1-எலுமிச்சம்பழரசம் பலம் 3-ஒன்றாய்க் கலந்து கொஞ்சம் சக்கரை கூட்டிக் கொடுக்க பசி தீபனமுண் டாகும் காலைமாலை மூன்றுநாள் கொடுக்கவும்.

வாய்வேக்காட்டிற்கு.

மருதணியிலையை மூன்றுபிடியெடுத்து பஞ்சுபோலிடித்து உ-படி தண்ணியிற்போட்டு அரிக்கால்படியாய்க் காய்ச்சி வாய் கொப்பளித்தால் உதடுவெடிப்பு நாக்குவெடிப்பு இவைகள்தீரும்

வெட்டுகாயம் உதிரப்பெருக்கு இவைநிறுத்த.

மாசிக்காயை சுட்டு சாம்பலான தூள் ஒருபங்கு வருக்கா மல்யிடித்து வஸ்திரகாயம்செய்த கடுக்காய்தூள் ஒரு பங்கு இவ்விரண்டும் கலந்து வெட்டுகாயத்தின் மீது தூவினால் உதிரப் பெருக்கு உடனே நின்றுவிடும்.

பல்லில்உதிரம் வருவதற்கு.

சோத்துப்பு ஒருபிடியெடுத்து அரைப்படி தண்ணியில் போட்டு ஆழாக்கு தண்ணியாக சுண்டக்காச்சி வாய் கொப் பளித்துவந்தால் பல்லில் இரத்தம் வருவதை நிறுத்தும் பல்வலி கள் தீரும் பல் யிருகும்.

படைகளுக்கு.

கலியாண முருக்கன் சாற்றிலாவது சீமை அகத்திசாற்றி லாவது சோத்துப்பு மிச்சமாய் கூட்டிக்கரைத்து அல்லது அரைத்து படைகளின்மீது தடவினால் உதிர்ந்துபோகும்.

கடுகுரோகணியைக் காடிவிட்டரைத்து படைகளின்மீது தடவிவந்தால் சீக்கிரத்தில் குணமாகும்.

தேமல்போலவும் தடிப்புகளாகவும் தோலின்மீ துண்டா கும் படைகளுக்கு கருமஞ்சீரகத்தை காடியிலரைத்துப் பூசிவர மாறிப்போகும்.

நத்தைசுட்ட சாம்பலை தேன்விட்டுக் குழைத்து படைகளின் மீதும் கண் ஓரங்களில் வரும் புண்களுக்கும் தடவிவந்தால் சொஸ்தமாகும்.

பீதரோகணியை தேனில் உரைத்து அல்லது அரைத்து தேமல்-படை படர்தாமரை இதுகளில் தடவிவர அதிசீக்கிரத்தில் மாறிப்போகும்-

பொன்னுவாரைவேர் பச்சையாகக் கொண்டுவந்து அறைத்துவந்த விழுதுக்குச் சமஎிடை சந்தணம் யிழைத்துக்கூட்டி மத்தித்துபடைகள்தேமல் இதுகளின்மேற்பூசிவரமாறும்.

வாய்வுகளுக்கு அல்லகு வாய்வு நோக்காட்டிற்கு.

கருவூமத்தஞ் சாற்றில் உப்பு மிச்சமாய் கூட்டி அறைத்து வாய்வுகளுக்கு பைத்து போட்டுவர குணமாகும்.

நேத்திர வியாதிகட்கு.

கல்லுப்பை பொடித்து படிக்கு-படி தண்ணீர் வார்த்து நீரெல்லாம் சுண்டும்படி காச்சியெடுத்து உலர்த்தி மறுபடியும் ஒருபலம் உப்புக்கு ஒருபலம் பசும்நெய்விட்டு காச்சி நன்ருய் உருகினபின்பு கம்பிபோல் வார்த்து ஆரியபின் யெடுத்து முலைப்பாலிலாவது பழரசத்திலாவது இழைத்து கண்ணில் தீட்டிவந்தால் நேத்திரமரைப்பு நீர்வடிதல்முதலிய கண்வியாதிகள் தீரும்.

பல்வலிக்கு.

மேற்சொல்லிய கம்பியுப்பை பொடித்து பற்றுலக்கிவர பல்லிலுள்ள சிறுகிருமிகள் சாகும் பல்வலி தீரும் பல்யிருகும்.

பனைமரத்தின்வேறு பத்துபலம் சேராங்கொட்டை இரண்டரைபலம் இவ்விரண்டும் சுட்டு கரியாக்கி பவுடர்செய்து 2-பலம் துருசு பொடிசெய்து கடாயில போட்டு சாம்பலாகும்படி வருத்து யெடுத்து மூன்றும் ஒன்ருய் கலந்து பல் துலக்கிவந்தால் பல் வியாதிகள் 17-ம் தீரும் இந்துப்பு 1-பலம் தூள் செய்து கலந்து கொள்ளவும்.

வெள்ளாட்டுக்கொம்பை சுட்டுக்கலக்கிய பவுடர் 5-இடை சேராங்கொட்டையை சுட்டுக் கரிக்கியபவுடர் 1-இடை இரண்டையும் கலுவத்திலிட்டு மைபோல் பவுடராக அறைத்து பல் துலக்கிவந்தால் பல் ஆட்டம் நீங்கும் பல்யிருகும் வேலம்பட்டை கிஷாயத்தால் வாய் கொப்பளிக்கவும்.

படிகாரம் கொட்டைப்பாக்கு மாசக்காய் இம்மூன்றும் சம நிடை சொண்டு யிடித்து பவுடர்செய்து பல் துலக்கிவரில் பல்நோய் நீங்கும்.

ஸுரிஸ்மக்கி வேரையும் அக்கிராகாரமும் சமனிடைகூட்டி அறைத்து பல் துலக்கினுல் அப்பொழுதே குணங்காட்டும்.

நாயுருவிச்சாறும் மருதோன்றி யிலேச்சாறும் சமநிடைக் கலந்து பூசிவரில் கால்நரம் பிழுப்பு குணமாகும் முதற் பூசின தைக்கழுகாமலே உலரஉலர மேலும் 5-6-பூசை பூசிவரவேண்டும்.

இறைப்புக்கு.

ஊமத்தன் இலேயை கொண்டுவந்து சுடச்சுட வெந்நீர் காச்சி அதில் மேற்படியிலேயைப் போட்டு அந்த ஆவியை உள் ளுக்கு பிடித்தால் இறைப்பு மேல்மூச்சு உடனே குணமாகும் இந்த ஊமத்தன் யிலேயின் பிரயோகத்தை அதிகமாய் உபயோ கிக்கக் கூடாது வயது தளர்ந்தவர்களுக்கு இது செய்யகூடாது.

மூர்ச்சை தலேவலிக்கு.

ஏலக்காயின் அரிசியெடுத்து பவுடர்செய்து நசியமிடுவது போல் நாசியிலேற்ற மூர்ச்சை சுபாவந் தெரியாமை தலேவலி உடனே தீரும்.

பல் கிட்டல் தீர.

ஏலரிசியும் உப்பும் சரியிடை யெடுத்து பவுடர்செய்து பல் லில் தேய்த்தால் உடனே பல்லுகிட்டல் விட்டுவிடும் மயக்கம் மூர்ச்சை தெளியும் வாய்மூடிக்கொண்டிருந்தாலும் உதட்டை நீக்கி பல்லில் தேய்க்கவும்.

தொண்டை நோயுக்கு,

கடுகைகிஷாயம் செய்து தேன்விட்டு உள்ளுக்குக் கொடுத் தால் தொண்டைநோய் நாவுயிழுப்பு நாவுதடிப்பு இவைதீரும்.

மூக்கில் இரத்தம் வருவதற்கு.

காபுலிக்கடுக்காய் அல்லது சூரத்துக்கடுக்காயைத் தட்டி விரையை நீக்கிவிட்டு உரலில்போட்டு யிடித்து மைபோல்வஸ்திர காயம்செய்து நசியமிடுவதுபோல் மூக்கிலேற்றிவந்தால் இரண்டு மூன்றி சிட்டிகையளவில் உடனே ரத்தப்பாச்சல் நின்றுவிடும்.

தந்தத்தில் இரத்தம்வருதலுக்கு.

காபுலிக்காயை முன்போல் பொடித்து மைபோல் பவுடர் செய்து அதற்கு சரிபங்கு உப்புபொடிசெய்து கூட்டிக்கொண்டு

இரத்தம் வருகிற பல்லின்மீது நன்ருய்தேய்த்து உப்புச்சேர்த்து காச்சிய வென்னீரினல் வாய்கொப்பளித்தால் பல்லில் இரத்தம் வருதல் நின்றுவிடும்.

கத்தாழைநாற்றத்திற்கு

கண்டங்கத்திரியிலையை இடித்துப் பிழிந்த சாற்றிலாவது கண்டங்கத்திரியை பஞ்சுபோல் இடித்துக் காச்சிய கிஷாயத்திலாவது சரியிடை நல்லெண்ணெகலந்து நீர் சுண்டுகிறவரையில் காச்சி தைலபதத்தில் யிரக்கிவைத்துக்கொண்டு அக்குளில் பூசி வந்தால் கறருழை முதலிய துற்நாற்றங்கள் தீரும்.

கீல்வாதம் தலைவலிக்கு.

கண்டங்கத்திரி கிஷாயம் 5—பலம் நல்லெண்ணெ 5-பலம் பளிங்குசாம்பிராணி $\frac{1}{2}$ பலம் பச்சைக்கற்பூரம் $\frac{1}{2}$ விராகனிடை தைலபதமாய் காய்ச்சி இரக்கும்போது சாமபிராணியும் பச்சை கற்பூரமும் பொடித்துப்போட்டு யிரக்கி நெற்றிக்கன்னப்பொரி இதுகளில் தடவித்தேய்த்தால் தீரும் கீலுகளிலும் தடவித் தேய்க்கவும்.

அக்கிரிணத்திற்கும் செவ்வாப்புக்கும்.

கரியபோளத்தை பச்சைகொத்தமலி சாற்றிலரைத்துப் பூசிவரில் குழந்தைகளுக்குக் காணும் செவ்வாப்பு அக்கிபீசிய ரிணம் இவை தீரும்.

மூக்குப் புண்ணிற்கு.

கரிய போளத்தையும் சுரக்காயின் வித்திலிருக்கும் பருப்பும் சரியிடை யெடுத்து மூலைப்பாலிலரைத்து மூக்குரிணம் மூக்குப் புண்களுக்குக தடவிவரில் ஆறிப்போகும்.

வெளுத்தமயிற் கருக்க.

கரியபோளத்தை நெல்லிக்காயின் சாற்ருல் அறைத்துப் பூசிவந்தால் மயிர்கள் கருத்துவளரும் செம்பட்டை மயிர்களுக்கும் மீசைதாடி கருக்கும தடவலாம்.

மயிர் உதிர்வதை நிருத்த.

கரியபோளத்தை காடிவிட்டரைத்து மயிர் உதிர்ந்து வழுக்கையான யிடங்களில் தடவிவந்தால் மயிர் முளைக்கும்.

பவுத்திரத்திற்கு.

கரியபோளத்தை மக்கிப்போன மனிதர் எலும்பு அதாவது சுடலைமண்ணில் புதைந்துக் கிடக்கும் பழய யெலும்பு கொண்டு

வந்து ஷெ மருந்துடன் சரியிடை சேர்த்து வெண்ணெ கூட்டி யரைத்து பவுத்திரப் புண்களின் மீது தடவிவர ஆரிப்போகும் ஆண்குறியின்மீ துண்டாகும் கொருச்கு ரிணங்களுக்கு பூசிவந் தாலும் ஆறிப்போகும்.

பேய் நாய்கடி முதல் சில்லரைவிஷங்களுக்கு.

கருஞ்சீரகத்தை யிடித்து வஸ்திரகாயம் செய்து 2-விராக னிடை யெடுத்து 2-அவுன்சு காடியிற் கலந்து குடிக்கவும் இப் படி 3-நாள் 5-நாள் 7-நாள் வீதம் சாப்பிட்டால் பேய் நாய் கடி முதல் சில்லரை விஷப் பூச்சிகடிகள் விஷந் தீரும்.

வயற்றுக்கிரிமிகளுக்கு.

ஆத்துத் துமட்டிக்காயை இடித்து சாறுபிழிந்து அந்தச் சாற்றினல் கருஞ்சீரகத்தை யரைத்து விலாவில் பூசினல் வயற்றி லுள்ள கிருமிகள் கொட்டுண்டுபோகும்.

வண்டுகடிக்கு.

வெட்பாலையின் இலை கொடி-வேர் முதலிய சமூலம் அறை த்த விழுதுபுன்னைக்காய் அல்லது எலுமிச்சங்காயளவு யெடுத்து அரிக்கால்படி பசும்பாலில் கலந்து சாப்பிடவும் 3-நாள் காலையில் சாப்பிட கரப்பான் வண்டுகடி இவை தீரும்.

சிலந்திவிஷத்திற்கு.

முத்தெருக்கன் செவிமூலத்தை புன்னைக்காயளவு அறைத்து பசும்பாலிற் கலந்து 3-நாள் கொடுக்க சிலந்தி கறப்பான் முத லிய சில விஷங்கள் தீரும் பத்தியமாயிருக்கவும்.

மேகதடிப்புகிரந்திகளுக்கு.

நூறுவருஷத்திய பூவரசம் பட்டையை களச்சிக்காயளவு அறைத்து அரிக்காற்படி பசும்பாலிற் கொடுக்க சொரிசிறங்கு தடிப்புபடை விஷகரப்பான் வீக்கம் இவைதீரும் தேகத்திற்கு தக்கபடி கடும்பத்தியம் அல்லது இச்சாபத்தியமா யிருக்கவும் 3-5-7-நாள் சாப்பிடவும்.

வெட்டைசூட்டுக்கு.

அருகம் வேரை புன்னைக்காயளவு அறைத்து அரிக்காற் படி பசும்பாலிற்கலந்து கொடுக்கவெட்டை சூடுதணியும் நாள் பட புசித்துவந்தால் நரைதிரைமாரும் திரேகம் இருகும்.

வெட்டைசூடு கண்ணெரிவு நீர்சுருக்கிற்கு.

அருகம்வேர் அறைத்தவிழுது புன்னைக்காயளவு மிளகு சீரகம் அதிமதுரம் மாதுளம்பூ இந்த நாலும்சேர்த்து அரைத்த விழுது புன்னைக்காயளவு இவ்விரண்டும காற்படி ஜெலத்தில் போட்டு வீசம்படியாகக் கிஷாயம் செய்து அதில் பசும் வெண்ணை களச்சிக்காயளவு போட்டுக்கொடுக்க ஷை வியாதிகள் தீரும். 10–20-நாள் சாப்பிட்டால் திரேகம் ஆரோக்கியமாகும்.

நீர்துவாரயெரிவுக்கு.

ஆவாரம் இலை பூ பட்டைவேர் இவைநாலுங்கூட்டி பால் விட்டரைத்து பாலிற்கலந்து சாப்பிட்டுவநதால பிரமேகம் நீரிழிவு ஆண்குறியெரிவு இவைதீரும்.

இரத்தமூலத்திற்கும் சீதபேதிக்கும்.

முத்தின ஆவாரம்பட்டை பச்சையாகக் கொண்டு வந்து விளாங்காயளவு பஞ்சுபோல் இடித்து ஒருபடி ஜெலத்தில்போட்டு அரிக்கால்படியாகக் காச்சி 3-மணிநேரத்திற் கொருமுறை 2-அவுன்சு கியாழம் கொடுத்துவர இரத்தபேதி சீதபேதி உடனே நிற்கும்.

சோகைகாமாலைமுதலிய அனேகவியாதிக்கு.

காட்டாமணக்கு வேரின்பட்டை கெச்சைக்காயளவு அறைத்து ஆழாக்குபசும்பாலிற் கலந்து கொடுக்க பாண்டு சோகை காமாலை வீக்கம் வயற்றுக்கட்டி பெருவயரு குஷ்ட ஆரம்பம் இவைதீரும் நாட்படசாப்பிட்டு வந்தால் வச்சிரகாயமாகும் பத்தியமில்லை.

வெள்ளைக்கு.

கொடிக்கள்ளிக் கொழுந்தை கெச்சைக்காயளவு அறைத்து பாலிற்கொடுக்க விரோசனமாகும் வெள்ளை சொரிசிறங்கு படைகள் தீரும் 3-நாள் கொடுக்கவும் சுட்டபுளி வருத்தவுப்பு.

பெருவயரு மகோதரத்திற்கு.

கொடிக்கள்ளி சமூலத்தை களச்சிக்காயளவு அறைத்து அரிக்காற்படி பாலிற்கலந்து கொடுக்க விரோசனமாகும் பெருவயரு மகோதரம சோகைபாண்டு சில்லரை விஷங்கள் வீக்கம இவை தீரும் 3-5-நாள் ஒவ்வொரு வேளை கொடுக்கவும் இச்சா பத்தியம் விளக்கெண்ணை தேய்த்து தலை முழுகவும்.

தேமல் சொரிகட்கு.

சரக்கொண்ணைவேரின் பட்டையை அறைத்து பசும்பாலிற் கொடுக்க தேமல் சொரி விஷநீர் வாதசூலை கரப்பான் வண்டு கடிகள் தீரும்.

சூரத்து நிலாவிரை கிஷாயத்தினல் அறைதிட்டம் சீமை காடிசேர்த்துக் குலிக்கி சூரியபுடம் வைத்து உடம்பிற் பூசிவந்தால் தேமல் அழுக்குத்தேமல் சொரி சிரங்கு முதலிய படைகளும் ஆரிப்போகும்.

நாயுருவியிலைச் சாற்றுல் ஜாதிக்காய்களை அறைத்துமேல் படைகள் முகத்து மங்குகளில் தடவிவரில் 5 - 6 - வேளையில் குணமாகும்.

பிரமியத்திற்கு.

சரக்கொண்ணைகொழுந்தும் பூவும் புன்னைக்காயளவு அறைத்து அரிக்காற்படி பாலிற்கொடுக்க பிரமியம் வெட்டை காமாலை பாண்டு பித்த கிருகிருப்பு தீரும் பத்தியமில்லை.

உதிரக் கட்டுக்கு.

மாவிலிங்கன் கிழங்கை அறைத்து அரிக்காற்படி பாலிற் கலந்து கொடுத்துவந்தால் பெண்களுக்குண்டாகும் சுரோணிதக் கட்டுவீக்கம் வாயுவுபுண்பிளவை இவைகட்டீரும் பத்தியமில்லை.

சூலை பிடிப்புகளுக்கு.

பெருவாகை மூலத்தை களச்சிக்காயளவு அறைத்துபசும் பாலிற் கலந்து கொடுக்க சூலைபிடிப்பு சில்லரைவிஷங்கள் தீரும்.

சூலைபிடிப்பு வீக்கங்களுக்கு.

காட்டுவாகை இலையை யிடித்து சாறுபிழிந்து கற்சுண்ணம்பைக் கறைத்து வடிக்கட்டி சாரளவுக்கு சேர்த்து முருங்கைப் பட்டை புன்னைக்காயளவு அறைத்துப்போட்டுக் கலக்கிகொதிக்கவைத்து வீக்கத்தின்பேரில் தடவினல் 2-3-வேளையில் ஷியாதி குணமாகும்.

கைகால்பிடிப்புக்கு.

முருங்கைப்பட்டை உசிலம்பட்டை இரண்டும் சமனிடை யெடுத்து இடித்து பிடிப்புகளிற் றடவிவந்தால் குணமாகும்.

நண்டைச்சுட்டு சாம்பலாக்கி அந்த சாம்பலை தேன்விட்டுக் குழைத்து குதிக்கால் வெடிப்புக்கு தடவ ஆரிப்போகும்.

ரத்தக்கக்கலுக்கும் பிரமியத்திற்கும்.

சந்தணமரத்தின் பச்சைப் பட்டையை புன்னைக்காயளவு அறைத்து பாலிற்கலந்து காலை மாலை கொடுக்க ரத்தகக்கல் வெள்ளை இவை தீரும் தேகம் அழகுண்டாகும்.

ரத்தவாந்திக்கு.

ஆலம் விழுதின் துளிரும் அரசம் விரையும் சமனிடை கொண்டு பசும்பால் விட்டறைத்து புன்னைக்காயளவு யெடுத்து அரைக்காற்படி பசும்பாலிற்கொடுக்க இரத்தவாந்தி நிவர்த்தியாகும் காலை மாலை கொடுக்கவும்.

உள் மூலத்திற்கு.

சிறுகொன்னைவேரின் பட்டையும் கொழுந்தும் சமனிடை யெடுத்து பால்விட்டரைத்து பாலிற்கலந்து 3-நாள் இருவேளையும் கொடுக்க உள்மூலம் கண்ணோய் உஷ்ணம்யாவும் தீரும்.

குடல்வாதத்திற்கு.

மைக்கொன்னை வேரின்பட்டையும் கொழுந்தும் சமனிடை யெடுத்து பால்விட்டரைத்து பாலிற்கலந்து இருவேளையும் 3-5-நாள் கொடுக்க குடல்வாதம் சூலை மேகச்சூடு தீரும்.

ஆனைசொரிக்கு.

நரிக்கொன்னை வேருங் கொழுந்தும் பால்விட்டரைத்து பாலிற் கலந்துகொடுக்க யானைச்சொரி தினவும் பட்டை இவை தீரும் அழகுண்டாகும் 2-வேளையும் 3-5-7—நாள் கொடுக்கவும்.

வெண்குட்டம் கருங்குட்டத்திற்கு.

கலைமான்கொம்பை கிரமப்படி பஸ்பம்செய்து சீமைகாடி விட்டரைத்து வெண்குஷ்டம் கருங்குஷ்டங்களின்மீது பூசிவியர்வை பிறக்கும் வரையில் பிரதிதினமும் ஒரேவேளையாக சிலதினங்களி வெய்யலில் உட்கார்ந்திருக்கவேண்டும் வெளுப்பு கருப்பு மாறிப்போகும்.

கைகால் வெடிப்பிற்கு.

மான்கொம்பை கிரமப்படி பஸ்பம்செய்து பசும்நெய்யிற் குழைத்து வெடிப்புகளிற் பூசினால் ரிணங்கள் மாறிப்போகும்.

சூட்டினாலுண்டான இருமலுக்கு.

சீமைதுத்திவிரையை சாயரட்சை பசும்பால்விட்டு ஊரவைத்து காலையில் சீனிசக்கரை சிறிதுகூட்டி பிசைந்துண்ணவும்.

பிடிப்புவீக்கங்களுக்கு.

சிறு துத்தியிலையை தூளி விளக்கெண்ணெவிட்டு வதைக்கி ஒத்திடம் செய்ய கட்டி கொப்பிளம் ரிணங்கள் கீல்வாய்வு இரத்தக்கட்டுகள் நோய்களையும் வீக்கங்களையும் குணமாக்கும்

சூட்டினலுண்டான பருவுகளுக்கு.

சிறுதுத்தியிலையை அறைத்து சூட்டினலுண்டான பருவுகளின்மீது 2-3-பைத்து போட பருவுகள் உடையும் வீக்கந் தணியும்.

திராட்சப்பழத்துடன் ஆட்டுக்கொழுப்பு சேர்த்தரைத்து பருவுகளின்மீது தடவிவந்தால பருவுகள் பழுத்து உடையும்.

பச்சைமஞ்சள் கிழங்கை பஞ்சுபோல்யிடித்து நல்லெண்ணெயில் வதைக்கி பருவுகளின்மீது வைத்துக்கட்ட பருவுகள் கட்டிகள் அதிசீக்கிரத்தில் உடையும.

தலைப்புண்ணுக்கு.

சிறுதுத்தியிலையை நிழலில் உலர்த்தி சிறுநீர் விட்டரைத்து தலையிற்பூசினல் தலைச்சுண்டு தலைப்புண்ணு இவைகள் ஆறும்.

சூட்டிருமலுக்கு.

சிறுதுத்திவிரையை பால்விட்டு ஊரவைத்து காலையில் யெடுத்து அந்தகோழையுடன் கற்கண்டுதூள் கொஞ்சம் சோத்து சில தினம் சாப்பிடவும் சூட்டினல் வந்தயிருமல் குணமாகும்.

இரத்தபேதிக்கும் நீரெரிவுக்கும்.

சிறுதுத்திவிரையை முன்போலவே காலையில் ஊரவைத்து மாலையிலும் மாலையில் ஊரவைத்ததை மறுநாட்காலையிலும் கற்கண்டு தூள்சேர்த்துபிசைந்துண்ண இரத்தபேதிவயற்றுக்கடுப்பு நீர்சுருக்கு நீர்தாரை ரிணங்கள் வயற்றில் எரிவுமுதலியனதீரும்.

கத்தாழை நாற்றத்திற்கு.

குண்டுமணியிலையும் அதிமதுரமும் சரியா யரைத்து உடம்பிற்பூசி 2-மணிநேரம பொருத்துதண்ணீரில்குளிக்கவும் அல்லது இரவில் பூசி காலையில் குளிக்கவும் இப்படி சில தினம் செய்ய கற்றாழைநாற்றம் தேகநாற்றம் சொரிசிறங்கு தீரும்.

உதிரபேதி உதிரக்கடுப்புக்கு.

அபினியை முலைப்பால் விட்டறைத்து சீலையில் தடவி திரி திரித்து ஆசன துவாரத்தில் சொருகிவைக்கத்தீரும்.

குழந்தைகள் தலைப்புண்ணிற்கு.

ரோஜாப்பூவின் எண்ணெயினால் மட்டிப்பாலை இழைத்து குழந்தைகள் தலைப்புண்ணில் தடவிவந்தால் ஆறிப்போகும்.

சவுக்காரத்தை ரோஜாப்பூ வெண்ணெயில் இழைத்து பூசினால் குழந்தைகள் தலையிலுள்ள சிறுசிறு சிரங்குகள் உலரும்.

நெருப்புபட்டபுண்ணிற்கு

தேங்காயெண்ணெயினால் மேற்படி மட்டிப்பாலை யிழைத்து நெருப்புபட்ட புண்களுக்கு தடவிவந்தால் ஆறிப்போகும்.

மூலவலிகளுக்கு.

ஆட்டுக்கொழுப்பிலாவது மாட்டுக்கொழுப்பிலாவது மட்டிப்பாலை யிழைத்து மூலமுளைகளிலும் சுத்துப்பாகங்களிலும் தடவ மூலத்தாலுண்டான நோக்காட்டை நிவர்த்தியாக்கும்.

மயிர்வளர.

மரக்கள்ளியிலையின் தைலத்திற் மட்டிப்பாலையிழைத்து தலையிற் பூசிவர மயிர்வளரும் அதை உதிராமற் காக்கும்.

மருதோன்றியிலையும் சூரத்து நிலாவிரையும் அழைத்து தலையில் பூசிவரக் கூந்தலானது மிகவும் கருத்துவளரும்.

சூரத்துநிலாவிரை கிஷாயத்தினால் ஜடாமாஞ்சியை அரைத்து ஷை கிஷாயத்தில் கரைத்து கொஞ்சம் காடிவிட்டுக் குலிக்கி மயிருதிரும் யிடங்களில் அல்லது தலைமுழுதும் தடவினால் மயிர் உதிர்வதைநிருததும் கருப்பாகவும் வளரும்.

நவாச்சாரத்தை தேனிலிழைத்து மயிர்உதிரு மிடங்களில் பூசிவந்தால் மயிர்கள் உதிருங் குணத்தை மாறும்.

மருதோன்றியிலையை பஞ்சுபோல் யிடித்து விளாங்காய்ப் பிரமாணத்திற்கு 10-பலம நல்லெண்ணெ கலந்து அடுப்பேற்றி ஷை யிலையின் சத்து சிவந்தவுடன் இரக்கி அல்லது அதிகமாய் பொரித்த கருகாதமுந்தி யிரக்கிவைத்துக்கொண்டு தலைக்கு தடவிவர அதை தலைமுழுகவும் மயிர்கருத்து செழித்துவளரும்.

கெற்பச்சூட்டினால் வாய்நாற்றத்திற்கு.

அறைபுட்டி சீமைக்காடியில் காட்டுவெங்காயம் 5-பலம் அரிந்துப்போட்டுக் கொதிக்கவைத்து அந்தபாண்டத்தை ஒரு வாரம் வரையில் வெய்யலில் வைத்தெடுத்து அதன்பின்பு நித்

தியம் ½-விராகனிடை வீதம் காலையில் ஒரேவேளை யுட்கொண்டு வந்தால் நாபி ரிணம் வாய்நாற்றம் மேகச்சூடு இவை தீரும்.

தினவுக்கு.

காடியும் வாதுமையெண்ணெயும் சரிபங்கு ஒன்றாய் சேர்த்துக் குலுக்கி ஒருநாள் சூரியபுடம்வைத்து பிரதிதினமும் காலை காலையில் கொஞ்சம் யெடுத்து உடம்பிற் பூசிவரவும் தீரும்.

அதிகவியர்வைக்கு.

காடியும் நல்லஜெலமும் சரிபங்கு சேர்த்து குலுக்கிவைத்துக்கொண்டு தாகத்திற்கு சாப்பிடுவதுபோல் காலைமாலை அல்லது தினத்திற்கு மூன்றுவேளை சாப்பிட்டுவரத் தீரும்.

இரத்த ஒழுக்கலுக்கு.

காடியை மெல்லிய சலவைத் துணியில் நனைத்து ரத்தம்வடிகிற மூலரிணம் பவுத்திரரிணம் இவைகளின்மேல் ஷை துணியை போட்டுவைக்க இரத்த ஒழுக்கை நிறுத்திவிடும்.

ஆசன இரத்த ஒழுக்கலுக்கு.

பெருங்குடலிலிருந்தாவது மூலச்சூட்டினாலாவது ஆசன வழியாய் இரத்தம் வருதலுக்கு சீமைக்காடியும் நல்லஜெலமும் சரிபங்காய் விளாவி பீச்சாங்குழலினால் பிடித்து ஆசனத்தில் உட்புக அடித்தால் ஷை ஷை ரத்த ஒழுக்கு நின்றுவிடும்.

சொற்பனம் உண்டாக்க.

காரீயம் 5-விராகனிடை யெடுத்து பில்லையாகத் தட்டி நித்திரை செய்பவன் தலையின்கீழ் புதைத்துவைத்தால் அல்லது தலையணை பாய் இவற்றின்கீழ் வைத்துவிட்டால் விகற்பமான கினவுகண்டு மருண்டு யெழுந்திருப்பான்.

உப்பல் மாந்தத்திற்கு.

குப்பைமேனியும் உப்பும் கசைக்கி சார்பிழிந்து (இரண்டு காசு) யெடைவீதம் மூன்றுநாள் காலை மாலை கொடுக்கவும்.

கணமாந்தத்திற்கு.

சிறுபுள்ளடியிலை களச்சிக்கொழுந்து அவுரி பொடுதலை வகைக்கு ஒரு பிடி யெடுத்து பஞ்சுபோல் யிடித்து கால்படி நல்லெண்ணெயில் போட்டு சூரியபுடம் இரண்டுநாள்வைத்து உச்சிக்கரண்டி வீதம் உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசிவரவும்.

முடகுத்தைலம்.

வெள்ளைப்பூண்டு 10-பலம் கடுகு 10—பலம் இவ்விரண்டும் பஞ்சுபோல் யிடித்து அடியில் சிறிய துவாரங்கள் செய்த பாண்டத்திலிட்டு அதற்கடியில் பாத்திரம்வைதது குழித்தயில மிரக்கி உரம்வீழ்ந்த குழந்தைகட்கு துவாலையிட வலிப்பு முதலிய தீரும்

குழந்தைகள் சீதக்கடுப்புக்கு.

பருத்திப்பிஞ்சு ஜாதிக்காய் நன்னாரிவேர் வட்டத் திருப்பி சீரகம் கிராம்பு இவை சமநிடை யெடுத்து சூரணஞ்செய்து சிறுபுள்ளடிச்சாற்ருல் அறைத்து பட்டாணியளவு பொன்வருப்பாய் வருத்து காலை மாலை கொடுக்கவும் இச்சாபத்தியம்.

குழந்தைகள் மூக்கல்வயிற்றுக் கடுப்பு.

பருத்திப்பிஞ்சு ஜாதிக்காய் கிராம்பு அதிவிடையம் அரத்தை ஓமம் இலந்தம்விதை சமநிடை யெடுத்து வருத்து சூரணித்து திரிகடி பிரமாணம யெடுத்து கன்னிடையன் தயிரில் மத்தித்து 2, 3 வேளை கொடுக்கவும்.

குளைமாந்தம் உட்சுரத்திற்கு.

புல்லுருவியும் கருப்பங்கட்டியும் சமநிடை நல்லெண்ணைவிட்டரைத்து ஒரு வேளைக்கு சுண்டைக்காயளவு கொடுக்கவும்.

குழந்தைகள் மாந்தவலிப்பு காக்கை வலிப்புக்கு.

கொடிவேலி வேர் பட்டை சங்கன்வேர் பட்டை எருக்கன் வேர்பட்டை வகைக்கு விராகநிடை-3 குங்குமப்பூ விராகநிடை 1 ஷை மூன்று பட்டைகளையும் வென்னீர்விட்டு மைபோல் அறைத்து கரைத்து வடிக்கட்டியெடுத்து அதில் குங்குமப்பூவை யிழைதது குழந்தைகள் திடத்திற்கும் வியாதியின் நோக்கத்திற்கும் தக்கபடி 2, 3 காசு யிடை வரையில் கொடுக்கவும்.

மாந்தம் வயற்றுவலி செரியாமாந்தம் இவைகட்கு

உத்தாமணி யிலையை யிடித்து ஆழாக்குச் சார்பிழிந்து வடிகட்டிக்கொண்டு அதில் திரிகடுகு கோரோசனை வகைக்கு விராகநிடை 2 உத்தாமணிக்கொழுந்து விராகநிடை 4 இவைகள்யாவும் ஷை சாற்றினலரைத்து குழந்தைகளுக்கு தக்கபடி கொடுக்கவும்.

அழுக்கு வெளிப்பட.

பிள்ளை பிறந்தபின்பு ஒவ்வொரு பணவிடை குங்குமப்பூவை சோம்பு கிஷாயத்தில் கரைத்து கொடுக்க மூன்று வேளைக்குள் வயற்றிலுள்ள அழுக்கெல்லாம் வந்துவிடும்.

பித்தசாலேசுரத்திற்கு.

நிலவிளாயிலையை அரைத்து விளாங்காயளவு யெடுத்து சீரகம் பலம் 1, ஒரு வில்வப்பழம சதை இதையும் அரைத்து ஒரு வீசை நல்லெண்ணெயில் போட்டு பதமாய் காய்ச்சி முழுகிவர பித்தசாலேசுரம் கண்மறைப்பு யாவும் தீரும்.

உள்ளெரிவு பித்தயெரிவு நெஞ்சடைப்பு இவைகட்கு.

ஏலரிசித்தூள் ஒரு சிட்டிகை சோடாமாவு ஒரு சிட்டிக்கை இவ்விரண்டையும் ஒரு அவுன்ஸ் எலுமிச்சம்பழச் சாற்றிற் கலந்து கொடுக்கவும் 1, 2 வேளையில் தீரும்.

பூச்சிக்கடிக்கு.

ஊமத்தன்வேர் பில்லைபில்லையாக அருத்து நெல்லெண்ணெயில் போட்டு சூரிய புடம் வைத்து தேக முழுதும் தடவினுல் வண்டு பூரான் சிலந்தி முதலிய விஷங்களும் உடம்பெல்லாம் சொரிபோல உண்டாகிற சில்லரை விஷங்களும் தீரும் ஷை எண்ணெயை தினந்தோறும் சூரியபுடம் வைக்கவேண்டும்.

முழங்கால் வாதத்திற்கு.

வீழியிலை பிண்ணாக்குப்பூண்டு ஆவாரம்யிலை வகைக்கு ஒரு பிடி தாணிக்காய் கடுக்காய் நெல்லிவற்றல் வகைக்கு அரை பலம் இம்மூன்றையும் பஞ்சுபோல் இடித்து ஷை இலைகளுடன் போட்டு சட்டியிலிட்டு விளக்கெண்ணெ குத்தி சிவக்க வதைக்கி துணியில் முடிந்து ஒத்தணம் செய்து அப்படியே வைத்துக் கட்டவும் இப்படி ஆறுநாள் கட்ட முழங்கால்வாதம் வீக்கம் தீரும் சகல வீக்கத்திற்கும் ஒத்தடஞ் செய்யலாம்

மலை அலரியிலையை சிறுவர்கள் மூத்திரங்விட்டு நன்ருய் வதக்கிக் கட்டினுலும் முழங்கால்வாதம் தீரும்.

சகல பீனிசத்திற்கும்

நிம்ப எண்ணெ பலம் 5, அதில் கடுக்காய் தாணிக்காய் மிளகு கஸ்தூரிமஞ்சள் கார்கோலம் வேப்பம்வித்து வகைக்கு களஞ்சி அரைபொடித்து எண்ணெயில் போட்டு ரவிபுடம் 7-நாள் போட்டு 8-ம நால் வாசலில் வைத்து சூரிய நமஸ்காரஞ் செய்து முன்றுதரம் 3-துளியாக மூன்றுநாள் விடவும் தீரும் இச்சாபத்தியம்.

மூக்கில் இரத்தம் விழுகிற பீனிசம்

மாதுளம் பூவும் வெள்ளெருக்கன் பழுப்பும் வதக்கிக் கசக்கி மூக்கில் பிழியவும் இரத்தபீனிசம் தீரும்.

மூலக்கிராணி வகைகள்

படிகாரமும் மிளகும் சமனிடையாய் தூள்செய்து முள்ளங்கிச்சாற்றில் ஒரு விராகனிடை கொடுக்கத் தீரும்.

தீராத சீதபேதிக்கு

ஆவாரம்பட்டைவிராகனிடை 1, தூள்செய்துகன்னிடையன் தயிரில்குழப்பிக்கொடுக்க ஒருவேளையில்நிற்கும் இச்சாபத்தியம்.

வாந்தியாகிறதற்கு

துருசு பலம் 1, பொடுதலை யிலையை யிடித்து ரசம்பிழிந்து பீங்கானில்விட்டு துருசை அந்த ரசத்தில்போட்டு வெய்யலில் வைக்க வெளுக்கும் காடியில் அரிசியிடை உள்ளுக்குக்கொடுக்க கபத்தை யறுக்கும் வாந்தியாகும்.

நல்ல பாம்பின் விஷத்திற்கு

பச்சைப்புகையிலை அறைவீசை யிடித்து தண்ணீர்வார்த்து வைத்து ரசம்பிழிந்து உழக்குரசம் சாப்பிடவும் வாந்தியும் பேதியுமாய் விஷமிறங்கிவிடும்பிறகு கஞ்சிகாய்ச்சி சாப்பிடவும்.

காட்டு புதினசாற்றில் போதுமான சோத்துப்பைப் போட்டு கரைந்தவுடன் உள்ளுக்குக் கொடுக்கவும் ஷை விஷந்தீரும்.

தலைப்பேன்கள் சாக

சூதம் கழஞ்சி வாங்கி குப்பைமேனிச் சார்விட்டாட்டி நூலில்பிரட்டி சிகையில் சிக்கம்போலச் சொருகிவைக்க தலைப்பேன்கள் சாகும்.

கரடுகட்டின முழங்கால் வாதத்திற்கு

மிளகு பலம் 1, ஜாதிக்காய் பலம் கால் கிராம்பு பலம் கால் இதுகளை அருகங்கட்டை கியாழம்விட் டரைத்து 14-உருண்டையாய்த் திரட்டி வேளைக்கு ஒரு உருண்டையாக 14 பொழுது சாப்பிட சகலவாதமுந் தீரும் இச்சாபத்தியம்.

பித்தத்தினல்வந்த சகல எரிவுக்கும் மருந்து

தண்ணிவிட்டான் கிழங்கின் சாறு அறையாழாக்கு சர்க்கரை பலம் அறை இதுகளைக்கூட்டி காலமே உள்ளுக்குங் கொடுத்து கிழங்கின் திப்பியை மேலுக்குத் தடவிவிட 5-நாளில் சகல எரிவும் தீரும இச்சாபத்தியம்.

வெள்ளி பலம் அரை, காலாழாக்கு நெய்யில் கொதிக்க வைத்து காலையில் 5-நாள் சாப்பிடவும் சகல எரிவுந் தீர்ந்து தீபனமுண்டாகும் சரீரபுஷ்டியு முண்டாகும் பால் தயிர் பொன்னாங்கனிக் கீரையுஞ் சாப்பிடலாம்.

கிராம்பு திப்பிலி ஓமம் இந்துப்பு இதுகளைச் சூரணித்து 60 நாழிகை புளித்தமோரில் ஊறவைக்கவும் விடியகாலையில் உழக்குமோரில் கால் பலம் சூரணம்போட்டு இழைத்து சுட வைத்துக்கொடுக்க 3-அல்லது 5-நாளில் பைத்திய முதலான பித்தங்கள் தீரும் இச்சாபத்தியம்

பைத்தியத்திற்கு

பருத்திவிரை ஏலம் திப்பிலி நெற்பொறி இதுகள் வகைக்கு பலம் 1, வஸ்திரகாயம்பண்ணி இதற்குச் சரியாக சர்க்கரை கூட்டிக் கலந்து அந்தி சந்தி காலபலம் சூரணம் 15 நாள் சாப்பிட பைத்தியம் நீங்கும் இச்சாபத்தியம்

நிலையவாரை சமூலம் மஞ்சள் மிளகு கடுக்காய் வேப்பந்துளிர் வகைக்கு பலம் ஒண்ணரை இதுகளைச் சூரணித்து அந்தி சந்தி வேளைக்கு கால்பலம் சூரணம் தேனில் குழைத்து 15-நாள் சாப்பிட பைத்தியம் பித்தவாய்வு பித்தவுணத்தல் முதலியவைகள் நீங்கும் இச்சாபத்தியம்.

நண்டுத்துரகாய்க்கு

கிளாயிலையை மென்றுத்தின்ன விஷம்யிறங்கி சுகமாகும்.

வயறெரிவுக்கு

கோவைப்பூ எலுமிச்சங்காயளவு அறைத்து பசும்வெண்ணையில் இழைத்து 3-நாள் கொடுத்துவர சகல எரிவுகளும் தீரும் இச்சாபத்தியம்.

வயற்றில்மரித்த பிண்டம் வெளிப்பட.

குங்குமப்பூவை பன்னீர்விட்டரைத்து புளியங்கொட்டையளவு உள்ளுக்குக் கொடுத்துவிட்டு உடனே ஒரு குண்டுமணியளவு கற்பூரம்போட்டுக் காச்சிய இரண்டவுன்சு வென்னீர்குடிப்பாட்டினால் வயிற்றில் மரித்த பிண்டம் உடனே வெளிப்படும்.

சவுக்காரத்தை யரைத்து மெல்லிய துணியில் தூவைத்து உலர்த்தி திரியாகத்திரித்து உலர்த்தி யோனியில் சொருகிவைக்க மரித்தபிண்டம் வெளிப்படும் உதிரச்சிக்கலறும்.

தீராத ஒருதலைவலிக்கு.

அபினி, விளாம்பிசினி. பனைவெல்லம், குங்குமப்பூ, வகைக்கு 1-குண்டுமணி, இவைகளை அரைத்து மெல்லிய காயிதத்தில் தடவி கன்னப்பொரியில் ஒட்டவும் ஷெ தலைவலி தீரும.

மேகச்சூடு தணிய.

சீந்தில் சக்கரையும் மூங்கிலுப்பும் சமனிடை கூட்டி ஏலக்காயின் அரிசி கற்கண்டு இவைகளின் பவுடர் அதற்கு சரியிடை கூட்டி காலைமாலை திரிகடி பிரமாணம தின்றுவர மேகச்சூடு தணியும் நீர்தாரை சுத்தமாகும்.

நீர்வுடைக்க.

கற்பூரமும் வெள்ளெருக்கன் பூவின் இதழ்கள் இரண்டும் கசைக்கி வெற்றிலையில்வைத்து மடித்துக்கொடுக்க நீருடையும்

வெள்ளைச்சாறுவேளைச்சாறு 4-விராகனிடை பசும்பால் 12 ரூபாயிடை இவ்விரண்டும் கூட்டிக்கலந்து குடிக்கக் கட்டுபட்டநீரை உடைக்கும் 1-தினத்திற்கு 2-வேளை குடிக்கவும் சமுசயமாயிருந்தால் மறுநாளும் குடிக்கவும்.

வயர்முட்டுக்கு.

சீக்காயை வேசவைத்து காலாழாக்கு தண்ணீர் யிருத்து அதில் ஒரு எலுமிச்சம்பழம் பிழிந்துக்கொடுக்க உடனே மலஜெலம் உடையும.

கண்டமாலைக்கு.

நாகப்பாம்பு தோலை சுட்டுக்கருக்கி வெண்ணையில் குழைத்து ரிணத்தின்மேல் இரும்வளையும் 10-நாள் பூசிவரில் உலரும்.

கண்மாசுநீங்க.

படிகாரப்பவுடரும் முத்துசுட்டச் சுன்னமும் கருப்புச் சக்கரையும் இவைகளை ஒன்றாய்ச் சேர்தது கழுதைலததியைபிழிந்த சாற்றினல் இழைத்து கண்களில் தீட்டிவந்தால் கண்ணிலுள்ள மாசுகள் நீங்கும் கண் பிரகாசிக்கும்.

காது செவிட்டுக்கு.

படிகாரத்தை பொடிசெய்து கொஞ்சமாக ஜெலம் விட்டு முலைப்பாலைப்போல் இறுகும்படி சீசாவில் விட்டுவைத்துக்கொண்டு பிரதிதினமும் காலை மாலை 1-2-துளிகள் காதில் விடவும்.

தீராத வெள்ளைக்கு.

படிகாரத்தைப் பொரித்த பவுடர் நெல்லிவற்றல் யிடித்து வஸ்திரகாயம்செய்தபவுடர் இரண்டும் சரியிடைகூட்டி கற்கண்டு தூள் அறைப்பங்கு கூட்டி ஒருவேளைக்கு ஒரு வராகநிடை யெடுத்து ஆழாக்கு பசுமோரில் போட்டு சாப்பிடவும். இப்படி ஒரு நாளைக்கு மூன்றுவேளையாக 7-நாள் சாப்பிட்டால் தீராத மேக வெள்ளை நீர்கடுப்பு யெரிவு தீரும் பல்லிருகும்.

தந்திமேகத்திற்கு.

பொரித்த படிகாரத்தை நீராகாரம் அதிக ஜெலம்விட்டுக் கரைத்துக்கொண்டு புட்டியில் நிரப்பி வைத்துக்கொண்டு பீச்சாங்குழலினுல் நீர்துவாரத்தில் புகும்படி தினம இரண்டுவேளை யடித்து உள்ளுக்கு மேற்சொன்னபடி சாப்பிடக் குணமாகும்.

கீல் வாதத்திற்கு.

ஸாரீஸ்மக்கி என்னும் இலையை அறைத்து இரண்டொரு தினம் பூசிவந்தால் கீல்வாதம் நரம்பிழுப்பு இவை தீரும்.

வெள்ளைச்சாறு வேளைச்சார் நல்லெண்ணே இரண்டும் சமநிடை கூட்டி நீர்சுண்டி தைலபதமாய்காச்சி கீல்வாதங்கள் பிடிப்புகள் இவைகளுக்குப் பூசித் தேய்த்துவர குணமாகும்.

காயகற்பம்.

பெருஞ்சீரகம் அல்லது சோம்பு இதையிடித்து சூரணமாக்கி அதற்குச் சரியிடை சக்கரைக் கூட்டிக்கலந்து சீசாவில் வைத்துக்கொண்டு சித்திரைமாதம்முதல் ஆனிமாதம் கடைசி வரையில் யாதொரு வியாதியும் அணுகாது.

பெண்டுகள் வெள்ளைக்கு.

மணத்தக்காளிசெடி சமூலமும் இடித்து கிஷாயம் வைத்து பெண்குறியிற் படும்படி ஒருநாளைக்கு மூன்றுவிசை காலலம்பிவரவும் பொரித்த படிகாரம் மாசிக்காய் வால்மிளகு சரியிடை சேர்த்து யிடித்து வஸ்திரகாயம் செய்து வெண்ணெயில் குழைத்து ஒருவேளைக்கு கால்ரூபாயிடை காலை மாலை தின்றுவரவும் 7-தினத்தில் வெள்ளை நிவர்த்தியாகும் நீர்சுருக்கு கடுப்புதீரும்.

வாயில் நீரொழுக்கு அரோசகத்திற்கு.

தாணிக்காயின் மேற்றேலை இடித்து வஸ்திரகாயம் செய்து அதற்குச் சமநிடை சக்கரைச்சேர்த்து நித்தியம் ஒரு விராக

னிடை வாயிற்போட்டு ஒரு முணர் வென்னீர் சாப்பிடவும் இப்படி இருவேளையும் தின்றுவந்தால் நிவர்த்தியாகும்.

பக்கவாதத்திற்கு.

சிவதைவேரும் காபுலிக் கடுக்காயும் சமனிடை சேர்த்து யிடித்து வஸ்திரகாயம் செய்து இருவேளையும் ஒவ்வொரு விராகனிடை சாப்பிட்டு ஒரு முணர் வென்னீர் சாப்பிடவும் இப்படி சிலதினம் தின்றுவந்தால் அன்றூடம் மலம் உதையும் வாயுவுகளை அதிசுகமாய் கண்டிக்கும் பக்கவாயு தீரும்.

பற்களின் உபாதைக்கு.

சீமைதுத்திவேரை பஞ்சுபோல் யிடித்து இரவில் கிஷாயம்போட்டு அடுப்பில்வைத்திருந்து காலே திரும்பவும் சற்று சுடவைத்து அறைத்திட்டம் காடிவிட்டு வாய்கொப்பளிக்க பற்களின் வலியை நிவர்த்தியாக்கும் இருவேளையும் செய்துவர.

நாயுருவிசமூலமும் கண்டங்கத்திரியும் பஞ்சுபோல்யிடித்து 2-விளாங்காயளவு யெடுத்து 2-படி தண்ணீர் விட்டு அறைப்படி கிஷாயமாகும்படி சுண்டக்காச்சி அடைகிஷாயம்போல் அடுப்பின்மீது வைத்திருந்து அப்பப்போது சுடவைத்திருந்து வாய் கொப்பளித்துவநதால் பல்கடுப்பு பல் சிலுசிலுத்தல் பல்நோதல் தீரும் ஒரு தினத்திற்கு மூன்றுவேளை செய்யவும்.

முள்ளெடுக்க.

ஆற்றுநண்டு அல்லது வயல்நண்டையிடித்து முள்ளுதைத்தயிடத்தில் வைத்து 1-2 கட்டுக்கட்ட முள் வெளிப்படும்.

முறைசுரத்திற்கு.

நண்டுகண்ணைப்பிடுங்கி மெல்லியதுணியில் முடிந்து கையில் கட்டிவைக்க முறைசுரம் தணியும் குளிசமாகவும் கட்டலாம்.

அஸ்திசுரத்திற்கு.

நண்டுகளைப்பிடித்து கால்களையும் வயற்றைப் பிளந்து உள்ளிருக்கும் பிச்சு முதலிய அசுத்தமும் போக்கியிடித்து படி தண்ணீர் வைத்து அறைப்படியாய் காய்ச்சி யிறுத்து வடிக்கட்டி அந்த ஜலத்தில் கோதுமை நொய்போட்டுக் காச்சி உப்பிட்டு குடித்துவரில் ஈளை இருமல் உடல் உலர்ந்துபோதல் அஸ்திசுரம் நீங்கும் ஆனல் சிலதினம் இவ்வாறு செய்துவரவேண்டும்.

மூலை சிலந்திக்கு.

நண்டின்காலை மாத்திரம் ஒடித்தெரிந்துவிட்டு அம்மியி விட்டு மைபோல் அரைத்து மூலையின்மேல் வைத்துக்கட்ட மூலைச்சிலந்தி ரிணம் ஆறிப்போகும் ரிணமாறுகிற வரையில் செய்து வரவேண்டும்.

கடூரமான சுரத்திற்கு.

நண்டுகளைப்பிடித்து யாதொன்றும் செய்யாமல் அப்படியே உரலில் போட்டு யிடித்து விளாங்காய் பிரமாணம் யெடுத்து மிளகு பூண்டு கரிமஞ்சள் இவை தாராளமாய் கூட்டி கொஞ்சம் புளி கொஞ்சம் கடுகுதூள் உப்புமாத்திரம திட்டமாய் போட்டு நன்றாய் கொதிவருமபடி சூப்புபோல் செய்து அந்த சூப்பு அரை யாழாக்கு யெடுத்து அதில் 1-திராம் பிராந்திவிட்டுக் கொடுத்து விட்டு துப்பட்டியினால் முக்காடிட்டு போர்த்தினால் வியர்வை விடும் உடனே ஷை மிகுதி சூப்பில் சாதம் சுடுகையுடன் கொடுக்கவும் தூக்கம் வந்தால் தூஙகலாம் ஷை சூப்பின் அடியில இருக்கும் முத்தை இராப்போஜனத்திற்கு உபயோகப்படுத்த வும் இப்படி 3-நாள் செய்தால் நாபியில் பிடித்த சீதளத்தை வரட்டும் சுரம் தணியும்.

காமாலைக்கும் வீக்கங்களுக்கும்.

வெள்ளைச்சாறு வேளையிலையை யிடித்து சாறுபிழிந்து காப் பியோடாவது பசும்பாலோடாவது காலை ஒரேவேளையாக நீடித்து சாப்பிட்டுவந்தால் குன்மம் வயற்றுளைச்சல் காமாலை வீக் கம் சிறுவிஷங்கள் இரத்தம் பித்தம் இரசம் இவைகளாலுண் டான சகலதீங்குகளையும் நிவர்த்தியாக்கும் பசிதீபனமுண்டாக் கும் வேளைக்கு 10-விராகனிடைசாறு குடிக்கலாம்.

நெரிக்காச்சல் முதலிய அனேக ரோகத்திற்கு.

வெள்ளைச்சாறு வேளை வேர் நன்றாய் முத்தினதாய்க் கொண்டுவந்து நிழலில் உலாத்தி குண்டுமணிப்பிரமாணம் துண்டு துண்டுகளாய் யேராளமாய் நருக்கி சுரகுடுக்கையிலாவது சீசாவி லாவது வைத்துக்கொண்டு இதை தின்ன ஆரம்பிக்கும்போது முதல் நாள் 1-துண்டு இரண்டாவது நாள் 2-துண்டு மூன்றாவது நாள் 3-துண்டு இப்படி அன்றாடம் ஒவ்வொரு துண்டு அதிகப் படுத்திக்கொண்டே நாற்பது துண்டு சாப்பிடவேண்டும் முன் உயர்த்தித் தின்றுவந்தமாதிரியே 41-வது நாள் 39-துண்டு 42-வது நாள் 38-துண்டு 43-வது நாள் 37 துண்டு இப்படி 80-வது நாள் முடியும்போது 1-துண்டில் முடிக்கவேண்டும் இம்

மாதிரி உயர்த்தி ஒரு மண்டலமும் குறைத்து ஒரு மண்டலமும் வரிசையாக சாப்பிட்டு வந்தவர்களுக்கு ஒருவிதத்திலும் தீராத வாதரோகங்கள் சுரங்கள் முக்கியமாய் நெரிக்காச்சல் பீனிச ரோகங்கள் கால்களிலும் கைகளிலும் நீரேற்றம் வீக்கம் நீர் வியாதியா லுண்டாகும் உபாதிகள் யாவும் நிவர்த்தியாகும். இந்த 80-நாளும் ஸ்ரீபோகம் லாகிரி புகை பொடி கூடாது வாய் வான பண்டங்கள் மீன் கருவாடு நல்லெண்ணெ கடுகு எருமைத் தயிர் இவைகள் கூடாது.

☞ துவரை பருப்பு, கத்திரி, முருங்கை, அவரை, வணடை, சருணைக்கிழங்கு, முள்ளங்கி, சிறுகீரை, அறைக்கீரை, வேளைக்கீரை தூதுவேளைக்கீரை முருங்கைக்கீரை முள்ளங்கித் தழை கடுகு மிளகு கொத்தமல்லி மஞ்சள் கொத்துமலி இஞ்சி பச்சைமுளகா வெங்காயம் கருவேப்பிலை சீரகம் பூண்டு நெய் பசும்பால் பசுந்தயிர் பசும்மோர் யெலிமிச்சை நாரத்தை ஆதண்டை மருமாங்காய் இவைகளின் ஊருகாயும் ஆகும் குழம்பு ரசங்களுக்கு உலர்ந்த முளகாய் பச்சைப்புளி பச்சை உப்பு யாவும் சேர்த்துக்கொள்ளலாம். இச்சாபத்தியமென்க.

ஆராத மேகப்புண்களுக்கு

நத்தையை மெல்லீசு கம்பியில் கோர்த்து விளக்கில்காட்ட தைலமிரங்கும் அந்த தைலத்தை பிடித்து சீசாவில் வைத்துக் கொண்டு கரியபோளம் வாலேந்திரபோளம் இவ்விரண்டும் சம நிடை யெடுத்து ஷ தைலத்தில் அறைத்து தீராத மேகப்புண் பருவுகளின்மேற் பூசவும் ஆறுமளவும் 4-5-விசை பூசவேண்டும்.

இரத்தபீனிசத்திற்கு.

நத்தைசுட்ட சாம்பலை காடிவிட்டுக்குழைத்து மூக்கில் ஆக்கிராணித்துவந்தால் ரத்தபீனிசம் நாற்றம் இவைகளை சொஸ்தப் படுத்தும்.

மூலத்திற்கு.

நத்தைமாமிசத்தை நெய்யில்பாகம்செய்து கொஞ்சம்மிளகு தூள் உப்பு ஒருபத்தை எலிமிச்சம்பழ ரசம்விட்டு இளம்பதமாய் சமைத்து இருவேளையும் 3-நாள் கொடுக்க ரத்தமூலம் சீழ்மூலம் தீரும்.

தொண்டைப்புண்ணிற்கு.

நவாச்சாரத்தை கோழிமுட்டை வெள்ளைக்கருவா லிழைத்து நெஞ்சுக்குழியில் தடவினால் தொண்டை நோவு நெஞ்சுப் புண் இவை தீரும் படைகளின்மேற் பூசினலு மாறிப்போகும்.

பழய யிருமலுக்கு.

ஒருபங்கு நன்னாரிவேருக்கு நாலுபங்கு தண்ணீர் விட்டு நாவில் ஒருபங்காய் காச்சி வடிக்கட்டி யெடுத்து அதற்கு சம பாகம் சக்கரைசேர்த்து சர்பத்துகாச்சி 10-20-நாள் குடித்துவர பழய யிருமல மூச்சடைப்பு பாரிசவாய்வு முதலியதும் தீரும்.

நாயுருவிசமூலத்தை யிடித்து சாறு பிழிந்து 1-அவுன்சு யெடுத்து அதனுடன் ஒரு துட்டிடை சக்கரைபோட்டு குழப்பிச் சாபபிடவும் இருவேளையும் 5-7-நாள் உட்கொள்ளவும்.

நீரடைப்பு கல்லடைப்புக்கு.

பூனைகத்தை மிச்சமாய்பிடித்து மோரில் போட்டு 10-நிமிஷம் வைத்திருந்தால் மண்ணைக் கக்கிவிடும் அதை ஜெலத்தில் அலம்பி உலர்த்தி சூரணம்செய்து வைத்துக்கொண்டு பச்சை திராட்சைப்பழம்சார் ஒருகிராணில் 3-விராகனிடை ஷெசூரணம் போட்டுக் குடிக்க நீர் துவாரத்தில் கல்லடைப்பு சதையடைப்பு உடனே நிவர்த்தியாகும் தாராளமாய் நீரிறங்கும் உடனே நீரிறங்காவிட்டால் 1—மணிநேரததிற்குள் திரும்பக் கொடுக்கவும்.

அறுபட்ட நரம்பு கூடுவதற்கு.

பூனைகத்தை பச்சையாகப்பிடித்து அறைத்துஅறுபட்டநரம்பின் காயத்தின்மேல பூச நரம்புகூடி குணமாகும் பூசலின்மேற் பூசல் அடுத்தடுத்து பூசவேண்டும்.

மூட்டுப் பிசகுக்கு.

பூண்டும் கருங்கல்லைச் சுட்டு பொடித்தபொடி சரிபங்கு சேர்த்தரைத்து மூட்டுபிசகுகளில் தடவ குணப்படும் இரண்டொருபூசல் அடுத்தடுத்து அதன்மேலேயே பூசிவரவேண்டும் அடிப்பட்ட காயத்தினலுரைந்த ரத்தவீக்கத்தினமேற் பூசினலும கரைத்துவிடும்.

கட்டி கொப்பளத்திற்கு.

நாயுரிவிச் சாற்றில் ஈயவெள்ளையைக் கலந்து மத்தித்து கட்டி கொப்பளம் இவைகளிற் றடவினல் கரையும் ஷெ ரிணங்களிற் பூசினலும் உலரும்.

சொரி சிரங்குகளுக்கு.

நிலப்பனைக் கிழங்கை மேற்றேல் சீவிப்போட்டு வேகவைத்து ஒருவேளைக்கு 5-விராகநிடையாக இருவேளையும்தின்று

வரில் சொரி சிரங்கு மேகவூரல் இடுப்புவலி மாரடைப்பு மூல ரோகம் இவைகளை நிவர்த்தியாக்கும் தாதுபுஷ்டி யதிகரிக்கும்.

தீலயாத மேகஊரலுக்கும் சொரி சிரங்குக்கும்.

நீரிடி முத்துக்களைத் தட்டி மேலோட்டை நீக்கி பருப்பு களையெடுத்து தயிர்விட்டரைத்து எலிமிச்சம்பழச் சாற்ருலாவது காடிவிட்டாவது குழைத்து தேகத்திற் பூசி உலர்ந்தபின்பு சாணந்தேய்த்து உடம்பு குளிக்கவும் இப்படி 3 தினம்செய்யவும்.

புதிய குட்டத்திற்கு.

ஆமணக்கு முத்தில் அல்லது வாதுமைப் பருப்பில் எண்ணை யெடுப்பதுபோல நீரிடி முத்துகளை யுடைத்து மேற்ருேல் நீக்கி எண்ணை யிரக்கி ரணத்தின்மீது தடவவும்

இருதயத் துடிப்புக்கு.

பன்னீரை தாழம்பூ ரோஜா பழவர்க்கம் முதலிய சர்ப்பத்து களுடன் சேர்த்து (2 அவுன்சு சர்ப்பத்துக்கு கால் அவுன்சு பன்னீர்) குடித்துவந்தால் இருதயத் திடிப்பு மார்நோய் மார் துடிப்பு இரத்த வெளுப்பு கத்தாழைநாற்றம் வியர்வை நாற்றம் இவை நீங்கும் சந்தோஷ மதிகரிக்கும் தைரியங் கொடுக்கும.

மூக்கில் நீர் வடிதலுக்கு.

பன்னீரை சுடவைத்து யிளஞ்சூடாக யெடுத்து 1 அல்லது 2 அவுன்சு வீதம் இருவேளையும் குடித்துவந்தால் மூக்கில் நீர் வடிதல் நாவரட்சி தொண்டைவரட்சி மார்பு எரிவு வயற்றுநோய் வயற்றுக்கடுப்பு ஈரலைப்பற்றிய நோய்கள் யாவும் தீரும்.

மூச்சடைப்புக்கு.

பூமிச் சக்கரைக்கிழங்கை யிடித்து வஸ்திரகாயம் செய்து தேனில் மத்தித்துக்கொடுக்க மூச்சடைப்பு நாட்பட்ட யிருமல் இவை தீரும் தாதுபுஷ்டி யுண்டாக்கும்.

கைகால் குடைச்சலுக்கு.

பூமி சக்கரைக்கிழங்கை முருங்கைப்பட்டைச் சார்விட் டரைத்து பத்துபோட கைகால் குடைச்சல் வாய்வு வீக்கம்தீரும்.

மூக்கில் இரத்தம் வருதலுக்கு.

பெருகாஞ்சோரி யிலையை அறைத்து புன்னைக்காயளவு யெடுத்து மெல்லிய துணியில் முடிந்து நாசியில் ஆக்ராணிக்க உதிரப் பீனிசத்தை நிறுத்தும்.

பெண்குறி வெளிப்பட்டதற்கு.

பெருகாஞ்சோரி யிலையை அரைத்து யோனியின்மேற் பூசிவர யோனிவாதத்தால் வெளிப்பட்ட தசையை உள்ளுக் கிழுத்துக்கொள்ளும் பிறகு கடுக்காய் காசுகட்டி மாசிக்காய் இவைகள் கூட்டி கிஷாயம் செய்து கால் அலம்பி வரவும்.

வெரிநாய்கடியின் ரிணத்திற்கு.

பெருகாஞ்சோரி யிலையை அறைத்து வெரிநாய் கடித்து புண்ணுகிய ரிணத்தின்மேல் தடவினுல் உலர்ந்துப்போகும்.

கோசம் பெருக்க.

பெருகாஞ்சோரி விரையை தண்ணீர்விட்டு மைபோல் அறைத்து இரவில் படுக்கும்போது கோசத்தின்மேற் பூசிவரவும் கோசம் பூரித்து பெருக்கும் பலம் அதிகரிக்கும் ஆனுல் ஒரு வாரம் பூசவும் அதுவரையில் புணர்ச்சி செய்யக்கூடாது.

உண்ணுக்கு வீக்கத்திற்கு.

பெருகாஞ்சோரி விரையை ஆர்க்கப் பொடிசெய்து சுடு தண்ணீரில்போட்டு ஆரியபின் வாய்கொப்பளிக்க உண்ணுக்கு வீக்கந் தீரும்.

மார்யெரிவுக்கு.

பேதாஞ விரையை காலஞ யிடை யெடுத்து யீயம் பூசிய கிண்ணதிலாவது கிளாஸ் பாத்திரத்திலாவது போட்டு காலாமூக்கு தண்ணீர்விட்டு ஊரவைத்து காலையில் யெடுத்தால் கத்தாழை சோருபோல் கோழையாயிருக்கும் அதை யெடுத்து கன்னிடையன் தயிரை துணியில் முடிந்து நீரைப் பிழிந்துவிட்டு கெட்டி வெண்ணெபோலெடுத்து ஷை கோழைக்குச் சரியிடைக் கூட்டி நன்ருய் கலக்கும்படி ரேகித்து மொத்தம் ஒரு எலுமிச் சங்காயளவுக்கு சாப்பிடவும் இதேபிரகாரம் காலையில் ஊரப் போட்டு மாலையில் சாப்பிடவும் இப்படி 3 நாள் தின்றுவந்தால் தொண்டைவாட்சி மார்யெரிவு மார்வரட்சி சூட்டைப்பற்றிய பிருமல் கைகால் எரிவு வெய்யல் வெட்பத்தாலுண்டான சூடு வெள்ளை யொழுக்கு நீர்சுருக்கு நீர்யெரிவு சொட்டு மூத்திரம் இவையாவும் தீரும் முதல்தினமே குணங்காட்டும்.

சீதரத்தத்திற்கு.

பேதாஞுவிரை கால்பலம் யெடுத்து இரண்டு சுரங்கை தண்ணீர்விட்டு ஊரவைத்து காலையில்யெடுத்து அதிக நீரிருந்தால்

வடித்துவிட்டு அந்த கோழையை மாத்திரம் யெடுத்து நாலு சிட்டிக்கை கற்கண்டு தூள் சேர்த்து மத்தித்து சாப்பிடவும் இதேப்பிரகாரம் காலையில் ஊரவைத்து சாயரட்சை சாப்பிடவும் இந்தப்படி மூன்றுநாள் தின்ன மலத்துடன் இரத்தம் வருதல் சீதம் வருதல் இவை தீரும்.

குஷ்ட ஆரம்பத்திற்கு கைகண்டது.

மருதோன்றிவேர் முத்தினதாக கொண்டுவந்து நிழலில் உலர்த்தி 3 களஞ்சி யெடுத்து பஞ்சுபோல் நருக்கி 150 களஞ்சி ஜெலத்தில்போட்டு ஐந்தில் ஒரு பங்காய் சுண்டும்படிக் காய்ச்சி யிரக்கி வடிக்கட்டி வைத்துக்கொண்டு ஒரு வேளைக்கு 1 அவுன்சு கிஷாயம் சாப்பிடவும் இந்தப்படி இருவேளையும் 40 நாள் சாப்பிட்டால் குஷ்ட வியாதி நீங்கிப்போகும் ஆரம்பமாகிற புதிய குஷ்டத்திற்கு இதைவிட வேறே மருந்து கிடையாது.

வுதிர்ந்துபோன நிகம் முளைப்பதற்கும் சொத்தைவிழுந்த நிகத்திற்கும்.

மேற்கூரிய மருதோன்றிவேரின் கிஷாயத்தை அளவு பிசகாமல் காய்ச்சி வைத்துக்கொண்டு ஒரு வேளைக்கு 10-களஞ்சி வீதம் இருவேளையும் 10 நாள் சாப்பிட்டால் சொத்தை விழுந்த நிகம் உதிர்ந்துபோய் வேறே புதிய நிகம் முளைக்கும்.

வாய்ரணத்திற்கு.

முத்தின மருதோன்றிவேரை பஞ்சுபோல் யிடித்து எலிமிச்சங்காயளவு யெடுத்து $\frac{1}{4}$-படி தண்ணீர்விட்டு அரைக்கால்படியாகக் கியாழமிட்டு வாய் கொப்பளிக்க வாய்ப்புண்ணு வாய் நாற்றம் நாக்கு வெடிப்பு இவை தீரும்.

ஆராத புண்ணுக்கு.

மருதோன்றியிலையை அரைத்து ஆராத புண்களின்மேற் பூசிவர ஆறிப்போகும் தோலில் படரும் கருப்பு மாசிகளுக்குத் தடவ மாரிப்போகும்.

யெச்சிற்றழும்புக்கு.

மிளகு மூன்று பங்கு, ஜாதிக்காய் 1 பங்கு, இவ்விரண்டும் ஆவாரம் யிலைச் சார்விட்டரைத்து எச்சிற்றழும்பு படை தேமற் படை யிவைகட்குத் தடவ குணமாகும் 5, 6 வேளை தடவிவரவும்.

முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

உயிரெழுத்து

மூலிகை மர்மம்

நான்காம்பாகம்.

நீண்டவரைமீது நிறைகுணத்தோன் சொல்பனுவல்
பூண்டதனி மருட்பாரம் புனைந்தெழுதி நினைந்ததெல்லாம்
மீண்டவரும் பழவடியார்க் கின்பருளப் புவிமுழுதும்
ஆண்டகண பதிதுணைத்தா ளம்புயங்கள் வணங்கிவாழ்வாம்.

மூலிகையின் விசேடமும் - சாபநிவர்த்தியும்.

ஆதியிலே சிவபெருமான் கருணைதேக்கி
அயனார்க்கு சொன்னபடி யறிவைநீட்டி
சோதியிலே சிருட்டிவகை தோற்றமெல்லாம்
சொல்லவென்றால் வெகுகோடி தொந்தமாகும்
நீதியிலே தவிர்ந்தோரை நெருக்குநோய்கள்
நான்குநூ றாயிரத்து நாநூற்றெட்டும்
ஈதுலுகில் வினைகவரப் பொருந்துகவென்
றீசனுரை யிலைமூலங் கற்கமாச்சே.

இலையென்றுந் தழையென்றுங் கொடிதானென்றும்
எங்குமுள வரப்பூடு யிதுவோவென்றும்
துலையென்றும் செடியென்றும் தோப்பிதென்றும்
துரைதோறுங் கிடக்குமிது தெரியுமென்றும்
தலையென்றுங் காலென்று மறியாமற்றான்
தன்வாயில் வந்தபடி பிதற்றுவார்கள்
கலையறிந்தும் பொருளறியார் கழுதைமாந்தர்
கண்ணிருந்தும் குருடரவர் கதிகாணாரே.

கதிகாண வேணுமென்றால் கருணைவேண்டும்
காசினியில் பலநூலுங் கருதவேண்டும்
பதிகாண வேணுமென்றால் ஆசான்வேண்டும்
பற்றொழிக்க வெகுநெறியாய்ப் பழகவேண்டும்
மதிகாண வேணுமென்றால் மவுனம்வேண்டும்
மன்னுயிரைத் தன்னுயிராய் மதித்தல்வேண்டும்
இதுகாண விட்டகுறை முன்னேவேண்டும்
யில்லாட்டால் சாபமென்ற தொழிற்பேராச்சு.

சிவசாபம் மால்சாபம் பிரமசாபம்
சிவத்தோடே கலந்தாடும் சத்திசாபம்
நவமான விருடியொடு கிரகசாபம்
நரைமலரில் வீற்றிருக்கும் வாணிசாபம்
தவமியற்று முனிவரொடு சித்தர்சாபம்
தான்விலக்கஞ் செய்வதுவே தீட்சையாகும்
இவையறிந்து முறையோடே யிலையைத்தொட்டால்
எத்தொழிலும் பலிக்குமடா வெழுத்தைக்கேளே.

பலிப்பதற்கு மூலிகையை முன்னேபூர்த்து
பகலவன்சேய் குருநாளில் சுத்திசெய்து
ஜொலிப்பதற்கு தீபமோடு தூபங்காட்டி
சுந்திரம்போல் சுழிமுனையில் மதியைநாட்டி
கெலிப்பதற்கு கன்னிநூல் காப்புகட்டி
கேசரமாம் பதினெண்மர் கிருபைவேண்டி
தலைப்பிலுள்ள மூலமரு தெடுக்குமுன்னே
தாரணையைத் தோரணையாய்த் தலையிலூட்டே.

சாபநிவர்த்தியின் கிரமம்

ஞாயர்-செவ்வாய்-வியாழம் இந்த வாரங்களில் அதிகாலையில் மூலிகையின் அருகிற்சென்று சுத்தம்செய்து நீர்தெளித்து ஒரு வெற்றிலையில் மஞ்சள் பிள்ளையார் பிடித்துவைத்து அருகு சூட்டி சிறிது வெல்லம்-ஒருவாழைப்பழம்-தாம்பூலம் வைத்து சூடன் கொளுத்தி நமஸ்காரம் செய்தபின்னர், மஞ்சள் - சந்தனம்-குங்குமம் கலந்தநீரை செடியின்மீது தெளித்து ஊதுவத்தி சாம்பிராணிப் புகைகாட்டி, மஞ்சள்நூல் 9- அங்குலத்திற்கு மேற்பட்ட நிகளமுடையதா யெடுத்து அதன் நடு நடுவில் 3- அங்குல நீளமுடைய ஒருமஞ்சளைமுடிந்து மூன்றுமுடிபோட்டு அதற்கு சந்தனம்பூசி குங்குமமிட்டு தூபதீபங்காட்டி கையில் வைத்துக் கொண்டு மூலிகையின் அருகில் சூடங்கொளுத்தி வைத்து (கீழ்குறித்த மந்திரத்தை) ஒன்பது தரம் சொல்லி, மாங்கல்லிய தாரணம் செய்வதுபோல வலதுபக்கமாகச் சுற்றி காப்புக்கட்டவும் (அதாவது) 3-முடி 5-முடி அல்லது 7-முடி போடவேண்டியது. பிறகு தேங்காயுடைத்து சூடன் கொளுத்தி அம்மூலிகையின் நேரில் எதிர் முகமாக உட்கார்ந்து கீழ் குறித்த மூலமந்திரத்தை 21-விசை ஜெபித்து கணேசமூர்த்தியை நினைத்து நமஸ்காரம்செய்து பின்பு அச்செடியின் கீழ்சுத்திலும் கெல்லி முதலாவது கண்ணில் அகப்படுகிற வேரைமாத்திரம் முனை அறுபடாமல் அப்புறம் யெப்படியாவது மூலிகையை பிடுங்கிக் கொள்ளவும்-சுபம்.

சாபநிவர்த்தி மூலமந்திரம்.

ஓம்மூலி, மகாமூலி, அஷ்டமூலி, தெய்வமூலி, கிரகமூலி, ராக்கதமூலி, ஓம்ரீம்-ஸ்ரீம்ரீம், எழுந்திரு எழுந்திரு, அரியும்சிவனும் முன்னின்று சகலசாபமும் சகலதடையும் விலக்கிக்கொடுக்கச் சுவாஹா-ஓம் சத்தி, ஓம் காளி சர்வசாபமும் நசி- மசி-படு-சுவாஹா.

சர்வதொழிலுக்கும் உடற்கட்டு.

ஓம். உமாமஹேஸ்வரன் முன்னிற்க பாதமிரண்டும் பூமாதேவிகாக்க கணுக்காலிரண்டும் கணபதிகாக்க, துடையுமுந்தியும் துர்க்கைகாக்க, வயறுமார்பும்வயிரவன்காக்க, கழுத்தும் புஜமும் கதிர்வேல்காக்க, கண்ணும் புருவமும் காளிகாக்க, முகமும் கபாலமும் மும்மூர்த்திகாக்க, ஓம்-அம்-உம்-சம்-வம்-சிவ சிவா-கட்டு கட்டு - என் திரேகமுழுதும் சங்குச் சக்கரம் காக்க பகைவரைக்கட்டு, பசாசுகளைக்கட்டு,எதிரிகளைக்கட்டு. ஏவலைக்கட்டு இந்திரன் முதல் ஈசானியங்கட்டு நான் தொட்ட மந்திரம், நீதொட்ட மந்திரம், நான்தொட்ட மூலி, நீதொட்ட மூலி, எட்டுத்திசையும் பதினறுகோணமும் என்முகமாக ஓம் சிவயநம-சிவயநம-சிவயநம.

☞ இந்த மந்திரத்தை ஓடுகின்ற தண்ணீரில் நின்று, 108-தரம் படிகமணியால் ஜெபித்து மறுநாள் வீட்டிற்குள் வசதியானயிடத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து அருகு சூட்டி பால் பழம், தாம்பூலம், தூபதீபம் வைத்து படிகமணியால் ஒரு நாளைக்கு 108-வீதம், 11-நாள் ஜெபிக்க சர்வமந்திர சித்தியும், சர்வ மூலிகை சித்தியுமாம் சுபம்.

பின்கண்ட சக்கரத்தை சதுரத்திற்கு சதுரம் 5-அங்குலஅளவில் சந்தனப் பலகையிழைத்து அதில் அக்ஷரபின்ன மில்லாமல் ஐந்து அறைகளும் ஈடுகுறையில்லாமல் சரிவரயெழுதி சோடசோபசாரத்துடன் பூசை முகத்தில் வைத்து குங்குமப்பூ கோரோஜனம் சேர்ந்த சந்தனந் தெளித்து (வ-ய-ந-ம-சி) முதலாக ஐந்து வரைகளையும் 1008-உரு செபித்து தூபதீபங் கொடுத்து எடுத்துக்கொண்டு வியாபாரசாலை, வர்த்தக சாலைகளில் ஸ்தாபிக்கலாம் பணப் பெட்டிகளிலும் வைத்துக் கொள்ளலாம். சுத்தமான வீடுகளிலும் ஸ்தாபிக்கலாம். ஆனல் வெள்ளிக்கிழமைதோறும் கற்பூரதீபங் கொடுக்கவேண்டியது. சர்வ அனுகூலமும் உண்டாகும்.

வசியச் சக்கரம்.



குளிசமாடி கையில்கட்டிக் கொள்வதற்கு

சூட்சும வசியச் சக்கரம்.

வ 15	ய 12	ந 9	ம 11	சி 4
ந 9	ம 11	சி 4	வ 15	ய 12
சி 4	வ 15	ய 12	ந 9	ம 11
ய 12	ந 9	ம 11	சி 4	வ 15

இவ்வசியச் சக்கரத்தை கஉ - அங்குலம் சதுரமுள்ள காரீயத் தகட்டிலெழுதி குங்குமப்பூ கோரோஜனம் சேர்ந்த சந்தணம் பூசி மேற்காட்டிய ஸ்தூல சக்கரத்தை தாம்பாளத்தில் விபூதி பரப்பி அதின் மேல்வைத்து அத்துடன் சூட்சும யெந்திரத்தையும் வைத்து ஊதுவத்திகொளுத்திவைத்து கற்பூரத்தை சிறுகயெரித்துக்கொண்டு கீழ்குறித்திருக்கும் மூலமந்திரத்தை இலட்சம் உருவு ஜெபித்து தேங்காயுடைத்து தூபதீபங் கொடுத்து ஷை சக்கரத்தை யெடு

த்துக்கொண்டு தாம்பாளத்திலுள்ள விபூதியை ஒன்றுய்க்கலந்து இதிற் கொஞ்சம் தூவிச் சுருட்டி தங்கத்தாயித்துக்குள் செலுத்தி புஜத்திலாவது கைகளிலாவது கட்டிக்கொள்ளவும் இதனுல் சென்றவிட மெல்லாம் தாட்க்ஷணிய முண்டாகும் மனேவியாகூலமனுகாது சர்வசித்தியு முண்டாகும்.

வசிய மூல மந்திரம்.

ஓம், றீயும், ஸ்ரீயும், ஐயும், கிலியும், சவ்வும், வயநமசி, சர்வலோகவசிகராய சுவாஹா,

(இந்தப்படி லட்சம், உருவு) ஜெபிக்க வேண்டும் இதற்கு பூஜை, பால்பழம் தேங்காய் அவல் கடலைசத்தி முக்தி மாவிளக்கு பாயசம் இவைகளேயாம். ஷெ மந்திரத்தை ஒரே முறையில் லட்சம் உருவு ஜெபிக்க வேண்டு மென்று அவசிய மில்லை பூஜை முகத்திலிருக்கும்போது முதலில் கொஞ்சம் கற்பூரம் கொளுத்தி ஆரம்பித்து ஊதுவத்தி மாத்திரம் புகைத்துக்கொண்டு (1008) ஆயிரத் தெட்டுக்குக் குறையாமல் செய்யவேண்டியது இதற்குமேல் எவ்வளவு கூடுமானுலும் செய்யலாம் முடிவுலட்சம் உருவான பிறகுதான் வசியஸ்தூல சக்கரத்தையும் எவ்விடத்திலேனும் ஸ்தாபிக்கலாம் சூட்சும சக்கரத்தையும் ஷெ பூசையுடன் வைத்து உருவு முடிந்த பிறகுதான் குளிசமாடி தேகத்தி லணிந்தால் நன்மையு முண்டாகும்.

ஸ்தம்பனம்.

பூவரசம் பலகை 5-அங்குலம் சதுரத்திற்கு சுத்தமாக யிழைத்து அதில் பின்கண்ட ஸ்தம்பன சக்கரத்தை ஒவ்வொருஅரையும்ஈடுகுறையில்லாமலும், அக்ஷரபின்ன மில்லாமலும் யெழுதி விபூதி பரப்பிய தாம்பாளத்தின் மேல்வைத்து மஞ்சள் - குங்குமம்பூசி சந்தனம் தெளித்து, (நமசிவய) முதல் ஐந்துவரையும் சேர்ந்தபடி 1008-உருஜெபித்த பின் சூட்சும சக்கிரம் வைத்து மூலமந்திரத்தை (100000) உரு ஜெபித்து வீட்டின் வாசற்படியுட்புரத்திலும், பின் கட்டடமிருக்கில் அதன் கடைசி சுவற்றிலும் - படுக்கையரை-கூடம் இவற்றிலும் ஸ்தாபிதம் செய்து வைத்தால், துர்விஷயமான கினவுகாணல், திடுக்கிட்டெழுந்திருத்தல் - பயங்கரமாயிருத்தல் இவை யெல்லாம் சாந்தமாய் விடும். ஸ்ரீகளின் மேல் பிசாசு காட்டேரி முதலிய கிரகாவேச

மிருந்தாலும் வெளிகாணாது. அப்படியே பந்தனமாய் விடும். யாதொரு துர்க்குணமுங் காட்டாது. வசியத்திற் காட்டிய சூட்சும சக்கரம்போல் $1\frac{1}{2}$-அங்குல சதுரத்தில், தாம்பரத் தகட்டில், ஐந்துவரைகள்கீறி, அக்ஷரமும் அந்தந்த அட்சரத்திற்குரிய இலக்கமும் மட்டில் எழுதி ஷை பூசையுடன் வைத்து ஜெபித்து வெள்ளிக்குழையில் அடைத்து பெண்கள் கழுத்திலணிந்திருந்தால் கிரகசேட்டை வெளிகாணாது.

ஸ்தம்பனச் சக்கரம்.

அ-ந. ஐயும் ஸம் 9 வட்டம்.	இ-ம. கிலியும் வம் 11 ஐங்கோணம்.	உ-சி. சௌவும் ரம் 4 அறுகோணம்.	எ-வ. றீயும் யம் 15 நாற்கோணம்.	ஒ-ய. ஸ்ரீயும் ஹம் 12 முக்கோணம்.
உ-சி. சௌவும் ரம் 4 அறுகோணம்.	எ-வ. றீயும் யம் 15 நாற்கோணம்.	ஒ-ய. ஸ்ரீயும் ஹம் 12 முக்கோணம்.	அ-ந. ஐயும் ஸம் 9 வட்டம்.	இ-ம. கிலியும் லம் 11 ஐங்கோணம்,
ஒ-ய. ஸ்ரீயும் ஹம் 12 முக்கோணம்.	அ-ந. ஐயும் ஸம் 9 வட்டம்.	இ-ம. கிலியும் வம் 11 ஐங்கோணம்.	உ-சி. சௌவும் ரம் 4 அறுகோணம்.	எ-வ. றீயும் யம் 15 நாற்கோணம்.
இ-ம. கிலியும் வம் 11 ஐங்கோணம்.	உ-சி. சௌவும் ரம் 4 அறுகோணம்.	எ-வ. றீயும் யம் 15 நாற்கோணம்,	ஒ-ய. ஸ்ரீயும் ஹம் 12 முக்கோணம்.	அ-ந. ஐயும் ஸம் 9 வட்டம்.
எ-வ. றீயும் யம் 15 நாற்கோணம்	ஒ-ய. ஸ்ரீயும் ஹம் 12 முக்கோணம்.	அ-ந. ஐயும் ஸம் 9 வட்டம்	இ-ம. கிலியும் வம் 11 ஐங்கோணம்	உ-சி. சௌவும் ரம் 4 அறுகோணம்

ஸ்தம்பன மூலமந்திரம்.

ஓம், ஐயும், கிலியும், சௌவும், றீயும், ஸ்ரீயும் சகலலோக ஸ்தம்பனயா சுவாஹா (இந்தப்படி லட்சம் உருவு) ஜெபிக்க வேண்டும் பூஜை முகத்தில் பால் பழம் சக்கரைப் பொங்கல் சுத்தி முத்தி அவல்கடலை இவைகளே யாம்.

மூலிகை முறைகள்.

(முதலாவது)

மாதமுழுக்கில்லாத பெண்களுக்கு.

1-வது. தூதுவேளை, குப்பைமேனி, உருண்டை யுருண்டையாய் கிடைக்கிற குளத்துப்பாசி இவைகள் வகைக்குகொட்டைப்பாக்கு பிரமாணம் யெடுத்து அறைத்து நாட்டுச்சக்கரை கொஞ்சம் போட்டுப் பிசைந்துகொடுக்கவும் இப்படி மூன்று நாள் அருந்தினுல் முழுக்குண்டாகும்.

2-வது. காட்டுக்கருணைக்கிழங்கை பசும்பால்விட்டறைத்து பசும்பாலில் கலந்து கொடுத்தாலும் முழுக்கு உண்டாகும். மூன்று நான்கு நாட்கள், சாப்பிடவேண்டும்.

3-வது. பேய்குமட்டிச்செடியின்வேர் கார்போகியரிசிபுகையூரல், இவைகள் சமநிடை யெடுத்து அறைத்து கண்டங்கத்திரி பழச்சார் விட்டு மத்தித்து கொட்டைப்பாக்களவு கொடுக்கவும் இப்படி 3-4-நாள் கொடுக்க மாதமுழுக்குண்டாகும்.

4-வது. நிலப்பணங்கிழங்கு பறங்கிச் சக்கை வகைக்கு 1-பலம் யெடுத்துசூரணம் செய்துவைத்துக்கொண்டு 1-படிசுத்த ஜலத்தில்கால்படி கொள்ளு போட்டு அடுப்பேற்றி ஆழாக்கு தண்ணீராய் வற்றும்படி வேகவைத்திறக்கி வடிக்கட்டி அந்த தண்ணீரினுல் ஷெ சூரணத்தை மத்தித்து கொட்டைப் பாக்களவு 3-நாள் அந்தி சந்திகொடுத்தால் முழுக்குண்டாகும்.

5-வது. மாவிலிங்கம்பட்டை சூரணம்செய்து தினையரிசியின் தவிடு சமநிடை கலந்து கொள்ளுவெவித்த தண்ணீரினுல் பிசைந்து கொட்டைப்பாக்கு பிரமாணம் அந்திசந்தி 3-நாள் கொடுத்தால் மாத முழுக்கு உண்டாகும்.

6-வது 1-பலம் ஓமத்தை இடித்து வஸ்திரகாயம் செய்து எள்ளை ஒருநாள் முழுதும் ஊறவைத்துப்பிசைந்து கழுவியதண்ணீர் அரைக்கால் படியில் கலந்து 3-நாள் கொடுக்க முழுக்குண்டாகும்.

7-வது. சித்திரமூலவேர் கொட்டைப்பாக்குப் பிரமாணம் அறைத்து கொள்ளுவேகித்ததண்ணீர் அரைக்கால்படியில்கலந்து இம்மாதிரி 3-நாள் கொடுத்தாலும் முழுக்கு உண்டாகும்.

8-வது. சிவந்த நாயுருவிசமூலம் சிறுவிளாம்பிலையும் அறைத்து சுத்த ஜலத்திற்கலந்து 3-நாள் கொடுத்தாலும் சூதகக் கட்டு நீங்கி மாதமுழுக்கு உண்டாகும்.

9-வது. காட்டாமணக்கன் வேர் அல்லது கிழங்கு பச்சையாகக் கொண்டுவந்து நீரில் அலம்பிசுத்தஞ்செய்து காரமில்லாத அம்மியில் வைத்து பசும்பால்விட்டறைத்து கொட்டைப்பாக்களவு ஆழாக்கு பசும்பாலிற் கலந்து கொடுக்கவும் மூன்றுநாள் கொடுக்க சூதகக்கட்டு உடைந்து கிரமமாய் மாதமுழுக்கு உண்டாகும்.

10-வது. செம்முள்ளியிலையை யிடித்து பிழிந்து வடிக்கட்டிய சாறு 2-அவுன்சு, பசும்பால்-2அவுன்சு இதை ஒன்றாய்க் கலந்து காலைவேளையில் மூன்றுநாள் வரையில் கொடுக்கவும் சூதகக்கட்டு உடைந்து கிரமமாய் சூதகமுண்டாகும்.

11-வது. வெண்காரத்தூள்-7½-குன்றியிடை, கிராம்புதிராவகம் 2-கிரையின் அல்லது 2-துளி, வாலேந்திரபோளம் 6-குன்றியிடை, குங்குமப்பூ 1½-குன்றியிடை இவைகளை கலுவத்திலிட்டு துளிதுளியாய் தேன்விட்டு மாத்திரைபதமாய் அறைத்து ஒருவேளைக்கு துவரை அல்லது கடலைப்பிரமாணம் கொடுக்கவும் இப்படி காலைமாலை இருவேளையும் மூன்றுநாள் கொடுக்கவும் சூதகக்கட்டு உடைந்து கிரமமாய் மாதமுழுக்குண்டாகும்.

12-வது. குப்பைமேனி-மஞ்சள் கரசலாங்கண்ணி சிறுசெருப்படை நிலவாகைவேர் இவைகளை உலர்த்தியிடித்து வகைக்கு 20-விராகனிடை சூரணம் ஒன்றாய் சேர்த்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு திரிகடி பிரமாணம் யெடுத்து தேனில் மத்தித்துக் கொடுக்கவும் இப்படிஇருவேளையும் 20 நாள் கொடுக்க சூதகவிரோதங்கள் நிவர்த்தியாகும் கிரமமாக மாதமுழுக்குண்டாகும்.

13-வது. சூதகவயற்றுவலி யுண்டானால் துத்தியிலைவெள்ளைப்பூண்டு மிளகு வகைக்கு விராகனிடை (க) வசம்பு விராகனிடை (க) ஜலம்விட்டறைத்து மூன்றுபங்காக்கி மாதாந்தரம் முழுக்கு வருங்காலத்தில் அந்த மூன்றுநாளும் காலைஒருவேளை கொடுக்கவும் வயற்றுவலி உடனே நிற்கும்.

14-வது. மாவிலிங்கன் கிழங்கை பால்விட்டறைத்து புன்னைக்காயளவுக்கு அரிக்காற்படி பசும்பாலிற் போட்டுகொடுக்கவும் இருவேளையும் 3-4-நாள் கொடுத்துவரில் சூதகக்கட்டு வாயுவு தீரும் முழுக்குண்டாகும் பத்தியமில்லை.

15-வது. ஸுரீஸ்மக்கி, யென்னும் இலையைஅறைத்து இரண்டு விராகனிடை யெடுத்து சாப்பிட்டு 1-அவுன்சு பண்ணீர் குடிக்கவும் உதிரச்சிக்கறும் மாதமுழுக்குண்டாகும்.

கர்ப்ப விருப்புருதிக்கு.

முதியார்கூந்தல் வேரை நரம்புபோக்கி நன்றுயறைத்து அதை மிளகு நீரிற்போட்டுக் கரைத்து மூழ்குநாள் மூன்றுநாளுங் குடித்துக்கொண்டு வரவும் தன்வயற்றிலுள்ள மலட்டுப்புழுக்களெல்லாம் மரித்து வெளிப்பட்டிடும். அதினல் சுரம், குளிர், முதலியதும் நீங்கிவிடும்.

கர்ப்ப வாய்விற்கு.

அந்தரத்தாமரையிலை ஒருபிடி, விஷ்ணுகிரந்தி ஒரு பிடி, இரண்டும் சரிபாகமாய் நறுக்கிச் சாந்துபோலரைத்து திட்டமான மற்றுநாட்காலையில் அதைப் பாலிற் கலக்கிக் குடித்துவிட்டு உடனே திராக்ஷைப்பழம் இருபதுவீதம் மூன்று நாளுந் தின்னவும் பசும்பால் ஆழாக்குவீதம் ஏழுநாள் குடித்துவரவும். இதில்கர்ப்பவாய்வு, கர்ப்பமழிவு, சூதகவாய்வு, வயற்றுவலிமுதலியதுந் தீரும் கர்ப்பமுண்டாகும்.

(இரண்டாவது)

பிள்ளையில்லாத பெண்களுக்கு,

1-வது. களச்சிக்காயிலை ஒருபிடி மிளகு 12-பூண்டு பல்லு 3-இவைகளை அறைத்து புன்னைக்காயளவு தின்று வரவும் இப்படி காலைமாலை 10-நாள் தின்னவும் கருப்ப முண்டாகும்.

2-வது. முன்சொன்னபடி களச்சியிலை மிளகு பூண்டு மூன்றும் சமனிடை கூட்டியறைத்து விளக்கெண்ணை விட்டுக்குழைத்து காலை ஒரேநாள் புசித்து இச்சாபத்தியமா யிருக்கவும் மறுமாதம் கர்ப்பந் தரிக்கும்.

3-வது. ஊக்குரிவியின் தலைமூளையை 1 அவுன்சு சாரா யத்திலாவது பிராந்தியிலாவது அறைத்து 1-அவுன்சு பிராந் தியிற்கலந்து மாதவிடாய் வந்த 5-வதுநாள் துடங்கி 2-3-நாள் குடிக்கவும் முன்னறைத்த மூளையிற் கொஞ்சமெடுத்து பெண்கு ரியிலும் தடவிப்புணர்ந்துவர விரைவிற் கெர்ப்பந்தரிக்கும்.

4-வது அரசன்விரையை பச்சையாகச் சேகரித்துபசும்பால் விட்டறைத்தவிழுது எலிமிச்சங்காயளவு ஆழாக்கு பசும்பாலில் கலந்துக் கொடுக்கவும் இப்படி இருவேளையும் சிலதினம்கொ டுத்துவர மேகம் நீர்கடுப்பு இவைதீரும் பெண்களுக்கு கருப்ப முண்டாகும்.

5-வது. சதகுப்பையும் கருஞ்சீரகமும் சமனிடை யெடுத்து இடித்து கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டு அதற்கு மெல் சோம்பு கிஷாயம் ஒருடிராம் குடிக்கவேணும் இப்படி இருவேளையும் 10-நாள் தின்றுவந்தால் உதிரச்சிக்கலை யறுத்து கருக்குழியை சுத்தப்படுத்தி கெர்ப்பந்தரிக்கச் செய்யும் பத்திய மில்லை.

6-வது. கருப்புக்கழற்காயை முலைப்பாலிலுரைத்து இருவ ரும் பூசிப் புணர கெர்ப்பந்தரிக்கும் கழற்காய்களில் வெள்ளை மஞ்சள் சிகப்பு இந்த மூவித கழற்காயும் உதவாது.

7-வது. மரமஞ்சள் சீரகம் சதகுப்பை சமனிடையெடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து அந்த யிடைக்கு மூன்றுபங்கு புட்டி வெல்லம் சேர்த்துப் பிசைந்து வைத்துக்கொண்டுபெண் களுக்கு மாதமுழுக்குவருகிறதற்கு மூன்றுநாள் முன்னடியாக ஆரம்பித்து வரிசையாய் ஒன்பதுநாளைக்கு தினம்ஒருவிராக னிடை சாப்பிடவும் காலைமாலை இருவேளை போஜனத்துடன் எலுமிச்சங்காய் நாரத்தங்காய் ஊறுகாய் சேர்த்துக் கொள்ள லாம். இப்படி மூன்றுமுறை சாப்பிட்டால் சூதகக்கட்டும் சூதக நோயும் நிவர்த்தி யாகும் கருக்குழியின் கிருமிகள் சாகும் கருப்பக்குழி சுத்தமாகும் நான்காவது முழுக்குடன் கெர்ப்பந் தரிக்கும்.

8-வது. யானை தந்தம் களஞ்சி 1-கற்கண்டு களஞ்சி 2-இவ்விரண்டும் பண்ணீர்விட்டரைத்து மாதவிடா யுண்டான முதல்நாள் துடங்கி வரிசையாய் 6-நாள்கொடுத்தால் கருக்குழி

சுத்தப்பட்டு கருப்பந்தரிக்கும் இப்படியேயானை மூத்திரத்தை ஏழுதிறங்குடிக்க கருப்பந்தரிக்கும்.

9-வது. லவுங்கப்பூவை வெய்யிலில் நன்ருய் உலர்த்தி யிடித்து வஸ்திரகாயம் செய்துபுட்டிவெல்லம் சேர்த்துப் பிசைந்து 1-விராகனிடை வீதம் உருண்டைகள் செய்துவைத்துக் கொண்டுமாதவிடா யுண்டாவதற்கு மூன்றுநாள் முந்தி ஆரம்பித்து முழுகியபின் மூன்றுநாள்வரையில் தின்று வரவும் இப்படி-2-3-முறைசாப்பிட கருக்குழிசுத்தப்பட்டு கர்ப்பந்தரிக்கும்.

10-வது. கழற்சிக்காய் வேரையரைத்து ஒருகொட்டைப் பாக்களவு கோமயத்திற்கலக்கி தான்மூழ்கினதுமுதல் மூன்று நாளும் உட்கொண்டுவரகருதரிக்கும். அப்படித் தரிக்காவிடின் இவ்வாறே மறுமாதமும் உட்கொள்ளவுங் கர்ப்பந்தரிக்கும் அப்பொழுது அவள்முகக்குறியானது பிள்ளை பெற்றவள்போ லிருக்கும்.

11-வது. ஆலின் விழுந்த இளசாய் பார்த்தறுத்துக்கொண்டுவந்து அதை தண்ணீரி லலம்பிவிட்டு பசும்பாலிலரைத்து தீட்டமானதுமுதல் மூன்றுநாளுந்தினம் உட்கொண்டு வரவும் உடனே கருவானது தரிக்கும், அப்படித் தரிக்காவிடின் மறுமாதத்திலும் அவ்வாறே உட்கொண்டுவர அவசியங் கருதரிக்கும்.

12-வது. அதிமதுரம் சுக்கு, திப்பிலி, மிளகு, முக்கணங்கிழங்கு இவ்வைந்தும் சமபாகமாயெடுத்து ஒருபடி தண்ணீரிற் போட்டு உழக்காகக்கியாழங்காச்சி யிறுத்து முழுக்கு வந்த மூன்று நாளும் குடித்துவர மலடுநீங்கி கர்ப்பத்தை யுண்டாக்குவிக்கும். அப்படிக்கில்லாத பக்ஷம் மறுமாதமுந் தப்பாமல்இவ்வாறே செய்து கொண்டு வரவும் அவசியம் கர்ப்பமுண்டாகும் தப்பாது.

13-வது. துத்தியிலையை வாய்பேசாமல் பரித்துக்கொண்டுவந்து அதைநன்ருயலம்பி அதைச்சம்பா நெல்லிற்போட்டிடித்து அதை நல்லெண்ணையிற் போட்டுமத்தித்து முழுகின மூன்றுநாளும் உட்கொண்டுவர ஆண்பிள்ளையைப் பெறுவாள். அதையே நெய்யி லுட்கொண்டுவர பெண்பிள்ளையைப் பெறுவாள்.

14-வது. ஆடாதோடைவேர். கடலைவேர், எருக்கன்பழுப்பு பிரண்டை, சிறுகுறிஞ்சான் இவ்வைந்து வகையும் இடித்து

சிவந்தபசுவின்பால் உழக்கு சிறுபாகயிலைச்சார் உழக்கு கூட்டிக் கலக்கிக்கொடுக்கவும் வயற்றிலுள்ள மலட்டுப்புழுக்கள் வெளியில்வந்து மரித்துவிடும் அதன்பின் சந்தான முதிக்கும் மலடுநீங்கும்.

15-வது. திட்டமான நாலாநாளிராத்திரி உண்ணுமலிருந்து மற்றுநாளைக்கு நமணப்பூவை அதாவது நுணுப்பூவை பசுவின் பால்விட்டரைத்து தான் வடக்குமுகமாய் நின்று குடிக்கவும் பிள்ளையுண்டாம். அதில் கர்ப்பந்தரிக்காவிடில் மறுமாதத்திலும் இவ்வாறே குடித்திடவும் கர்ப்பமுண்டாகும்.

16-வது. அரசன்கொழுந்து கொண்டுவந்து பசுவின்பால் விட்டரைத்து அப்பாலுடன் கலக்கிக் குடிக்கவும் மறுமாதத்தில் முழுக்கு நிற்கும்அப்படி நிற்காவிடின் மறுமாதமும்இதை இவ்வாறே குடித்துவரவும் தப்பாமல் குளிநின்றுவிடும் பிள்ளை பிறக்கும் பலதோஷமுந் தீரும்.

17-வது. உத்தாமணி வடக்குவேரைப் பிடுங்கிக் கரணையாய் தரித்து பசுவின் பால்விட்டரைத்து ஒரு கொட்டைப்பாக்களவு ஷை பாலிற் கரைத்து 15-நாள் காலையில் குடித்துக் கொண்டு வரவும் வயற்றில் சீதம்போல் வந்துவிழும் பயப்படவேண்டாம் கர்ப்ப முண்டாகும்.

18-வது. உத்தாமணிச்சார் இருநாழி, கடலைவுரி, சயிந்தலவனம் பலம் 4, அதில் ஊரப்போட்டு சோர எரிவிட்டு அதைத் தூள்பண்ணி வைத்துக்கொண்டு ஒருதுட்டிடை இரண்டுவேளையும் வெந்நீரில் 20-நாள் சாப்பிட்டு வரவும் கர்ப்பமுண்டாம்.

19-வது கருஞ்சூரைவேர் பட்டை யறைத்து அதில் வெண்ணைசேர்த்து முழுகின நாலாநா ளூட்கொடுக்கக் கர்ப்பமுண்டாம் தப்பினல் மறுமாதமும் இவ்வாறுகொள்ள கர்ப்பமுண்டாம்.

முற்றிற்று.

(மூன்றுவது)

பிள்ளைபெறமாட்டாதவர்க்கு.

1-வது. கலைமான்கொம்பை குளிசமாடி அறையிற்கட்டி வைக்க வேதனையில்லாமல் பிரசவமாகும்.

2-வது. பிள்ளை பெறமாட்டாமல் கெர்ப்பவேதனைப் படுங் காலத்தில் (கவ) விராகனிடை குங்குமப்பூவை ஒருதிராம் சோம்பு கிஷாயத்தில் இழைத்துக் கொடுக்க உடனே சிசுவு வெளிப்படும்.

3-வது. சவ்வாது அரை விராகனிடை, கால் விராகனிடை குங்குமப்பூ வோடரைத்து சேவல் இரச்சியின் ரசத்தில் கொடுத்தால் பிள்ளை பிறக்காமல் உபத்திரவப்படும் பெண்களுக்கு யாதொரு கஷ்டமில்லாமல் உடனே பிள்ளை வெளிப்படும்.

4-வது. (ஸுரீஸ்மல்லி) யென்னும் யிலையை அறைத்த விழுது உஉ-விராகனிடை உள்ளுக்குக் கொடுத்து கொஞ்சம்பன்னீர் குடிப்பித்தால் கருப்பம் வெளிப்படும் பிரசவத்திற்கு கஷ்டமிராது.

5-வது. கழற்காயை ஆட்டின்தோலில் முடிந்துஇடது துடையில் கட்டினுல் உடனே பிரசவமாகும் அல்லது அதைப்பொடித்து நெருப்பிலிட்டு அந்தப்புகையை திரேகமுழுவதும் படும்படி பிடிக்கச்செய்தால் உடனேபிரசவமாகும் (ஆனுல்) கழற்காயில் கருப்புசிகப்பு மஞ்சள்வெள்ளை நான்குவிதமுண்டு இதற்கு கருப்புக் கழற்காய் தான் வேண்டும்.

6-வது. வெந்தயமும் (பரவியாவுஷான்) என்னும் மயிர் சிக்கிப் பூண்டும் சமமாக யெடுத்து பஞ்சுபோல் இடித்து கிஷாயமிட்டு கெர்ப்பஸ்ரீகளின் இடுப்பில் விடவும் அல்லது துணியில் வைத்து இடுப்பிலும் அடிவயற்றிலும் சுடசுட ஒத்தடம் கொடுத்தால் உடனே பிரசவமாகும் வயற்றுக்குள் சிசுவுமரித்துப் போயிருந்தாலும் வெளிப்படும் இரத்தமாசுகளும் வெளி கண்டு போகும்.

7-வது. பற்படாகமும் ஐந்தாறு நாக்குப்பூச்சிகளும் சேர்த்தரைத்து புனைக்காயளவு வெற்றிலையில் வைத்துச்சுருட்டி உள்ளுக்குத் தின்னக்கொடுக்க உடனே பிள்ளையை பிரசவிப்பாள்.

ஆனல் நாக்குப் பூச்சியை மோரில்போட மண்ணைக் கக்கிவிடும் அதின் பின் சேர்த்தரைக்கவும்.

8-வது. நிலக்கடம்பு வேரும் உப்பும் வெங்காயமும்சேர்த்தரைத்து எலுமிச்சன்பழ மத்தனைவிழுது உள்ளுக்கு எற்றவும். உடனே பிரசவிக்காவிடின் மறுபடியும் சற்றுநேரத்திற் கெல்லாம் முன்போல உள்ளுக்கு யேற்ற விரைவில் கர்ப்பமானது வெளிபட்டுவந்துவிடும்.

பிள்ளைபெறமாட்டாதவர்களுக்கு.

முன்ஜாக்கிரதை.

தேய்பிறையில் ஞாயிற்றுக்கிழமை விரதமாக முழிகிக்குளித்து தும்பைச் செடியருகில் சுத்திசெய்து நீர்தெளித்து மெழிகி வளையல் மஞ்சள் குங்குமம் கட்டுக்கயர் மஞ்சள் நூல் இவை வைத்து பிள்ளையார் பிடித்துவைத்து வெல்லந் தாம்பூலம்பழம் வைத்து கற்பூர தூபதீபங்கொடுத்து ஷை மஞ்சள் நூலினல்செடிக்குக் காப்புக்கட்டி மறுபடியும் சூடங்கொளுத்தி கிழக்கே போகிற வேரைப் பிடிங்கி இதற்குச்சமன் அருகம்பால்வைத்து அறைத்து களச்சிக்காயளவு மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்ளவும். பிரசவவேதனைப் படும்போது ஒரு மாத்திரை யெடுத்து நல்லெண்ணெயில் குழைத்து சிரசிலிருந்து இறக்கு முகமாகப் பாதம் வரையில் தேய்க்கவும் அல்லது தடவவும் உடனே பிள்ளை பிறக்கும்.

(நான்காவது)

வயற்றில்மரித்த பிண்டம் வெளிப்பட.

1-வது. நிலக்குமிழி வேரைக் கில்லிக்கொண்டுவந்து அதைத்தண்ணீரில் அலம்பி வேகவைத்த ஜலத்திலாகிலும் அல்லது பசும் பாலிலாகிலும் கரைத்துக் குடிக்கவும் வயற்றில் மரித்த பிள்ளையானது வெளிப்பட்டு வந்து விடும். உடனே அம்மாதர்க்கு காயம் முதலிய பிராந்தி கஸ்தூரி உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

2-வது. மூவலைக்குருந்து வெரும் கோரைக்கிழங்கும் பசும் பாலில் அறைத்து அல்லது மிளகு கியாழத்திலரைத்து அதது

களிலே கலக்கி உள்ளுக்குப் புகட்டவும் அம்மாதர்க்கு வயற்றில் மரித்தபிள்ளையானது உடனேவெளியில் வந்து விழுந்துவிடும். அப்பொழுது காயமுதலியதைக் கொடுக்கவும்.

3-வது. நாலுநாள் புளித்திருக்கும் கஞ்சித்தண்ணியில் அப்ளாகாரத்தூள் வெறுகடிப்பிரமாணங் கொண்டது அதிற்போட்டுக் கலக்கி உள்ளுக்குப் புகட்டவும். தாய் கர்ப்பத்தில் செத்துவிட்டகுழந்தை தானே வெளியில்வந்து விழுந்திடும் உடனே அதற்கு பிராந்தி கஸ்தூரி காயவுருண்டை முதலியது கொடுக்க வேண்டியது.

4-வது. பிரண்டைவேர், கொன்றைவேர் காடியிலரைத்து உள்ளுக்குக் கொடுக்கபிள்ளைப் பிறவிநோக்கும் மீறிடின்மறுபடியும்சற்று நேரத்திற்கெல்லாம் குடிக்கஉடனேபிறவிநோக்கும்.

5-வது. மருதோன்றிவேர் முத்தினதாகக் கொண்டுவந்து நிழலில் உலர்த்தி பஞ்சிபோல் இடித்து 10-பலம் நிருத்தெடுத்து 50-பலம் சுத்தஜெலம் விட்டுக்காச்சி 10-பலந்தண்ணீர் இருக்கையில் இறக்கவேண்டும் (அதாவது) ஐந்தில் ஒன்றாய் சுண்டக்காச்சி யிறக்கி வடிக்கட்டி அதை இருபாகம்செய்து உடனுக்குடன் இரண்டுமுறை கொடுக்க வயற்றில் மரித்தபிண்டம் வெளிப்படும்.

(ஐந்தாவது)

முலைப்பால் நிருத்த.

1-வது. பால்வேண்டாத பெண்களுக்கு மல்லிகைப்பூவை ஸ்தன்னியத்தின் மேல் தளமாகவைத்து பிகுவாகக் கட்டவேண்டியது இப்படி 2-3-இரவு கட்டினால் பால் சுரப்பு நின்றுவிடும்.

2-வது. கலப்பில்லாத சுத்தமான எள்ளெண்ணையை ஸ்தன்னியத்தின் முழுமையும் தளரப்பூசி அனலில் காச்சினால் பால் சுரப்பு நின்று விடும்.

3-வது. வருக்காத பச்சை துவரம்பருப்பு தேவையான வரையில் அறைத்து ஸ்தன்ளியத்தின்மேல் இரண்டு மூன்று

பூசல் பூசிவைக்கவும் நன்ருய்காய்ந்த பிறகு துடைத்து விட்டு மறுபடியும் பூசவும் இப்படி 2-3-பூசல் பூசினல் பால்சுரப்பு நின்றுவிடும்.

4-வது. நல்லெண்ணையையாவது அல்லது மண்ணெண்ணையையாவது கொங்கைகள் மேற்றடவி படை நெருப்பினற் காச்சிவர முலைப்பாலானது வற்றி விடும்.

5-வது. பிறந்த பிள்ளையானது இறந்து விட்டபின் தாய்க்கு முலைப்பால் சுரப்பேறி வாதைப்படின் அவ்வேளையில் வேப்பிலையையாவது மல்லிகைப்பூவையாவது பருத்திப்பஞ்சினையாவது மார்பின்மேல் வைத்துக் கட்டிவர அம்மாதர்க்கு சுரந்துள்ளபாலானது வற்றி வாதனையற்று விடும்.

6-வது. குழந்தை இறந்துவிட்ட யிடத்தில் கொஞ்சந் தண்ணீர் விட்டு அந்தமண்ணை விரலாற்றேய்த்து அதைவழித்து மார்பின்மேற் றடவி படை நெருப்பிட்டுக்காச்சி வரவும் அந்த பால் வற்றி விடும்.

(ஆருவது)

பாலில்லாத பெண்களுக்கு.

தாமரைக் கொட்டையின் பருப்பை பசும்பால் விட்டறைத்து புன்னைக்காயளவு யெடுத்து அறையாழாக்கு பசும்பால்விட்டுக் கலந்து கால்ரூபாயிடை கற்கண்டு தூள்போட்டு காலையில் கொடுக்கவும் இப்படி 10-நாள் கொடுத்தால் பாலில்லாத பெண்களுக்கு கெங்கைபோல் பால் சுரக்கும்.

2-வது. சாதாரணமாய் பெண்கள் வழக்கம் சுராமீன்-புட்டு குழம்பு இவைசெய்து புசிப்பதும் உண்டு ஆனல் சுராமீனில் நாலுஜாதி யுண்டு அதில் பால் சுராயென்பதைத் தான் சமைத்துக் கொடுக்க வேண்டும்.

3-வது. சாதாரணமாய் நாட்டு வழக்கம் யெப்படி யென்றால் காட்டாமணக்கு இலைகளை விளக்கெண்ணை தடவி நெருப்பிலிட்டு வதைக்கி முலையின் மேல் பரித்திக்கட்டுவதும் உண்டு அப்படி செய்தாலும் பால் சுரக்கும்.

4-வது. கால்படி நல்லஜெலத்தை அடுப்பிட்டு நன்ருய் கொதிக்கும்படி காச்சி யிரக்கி அதில் 10-வெள்ளைகாட்டாமண க்கு இலைகளைப் போட்டு இரண்டுநிமிஷம் ஊறியபின் அந்தஜெ லத்தில் மெல்லியதுணியை நனைத்து ஸ்தன்யங்களுக்கு ஒத்தி டம் கொடுத்து அந்தயிலைகளை போஸ்டுகட்டுவதுபோல் ஒன்றி ன்மேல் ஒன்ருக ஸதன்னியத்தின்மேல் அடுக்கடுக்காகவைத்து கட்டவேண்டியது இப்படி 2-3-நாள்செய்தால் பால்சுரக்கும்.

5-வது. அரசமரத்தின்வேர் கொளுந்து அல்லது விழுதின் கொழுந்தை பசும்பால் விட்டறைத்து பாலிற்கரைத்துக் கொடு க்கபாலில்லாத பெண்களுக்குப் பாலுண்டாகும்.

6-வது. பூநாகத்தைப்பிடித்து மோரில் போட்டால் 10-நி மிழத்திற்குள் மண்ணைக்கக்கி சுத்தமாய்விடும் அதையெடுத்து மறுபடியும் நல்லஜெலத்தால் அலம்பிவிட்டு கலுவத்திலறைத்து களச்சிக்காயளவுயெடுத்துஆழாக்குபசும்பாற்கலந்து கொடுக்க வும் ஒருவேளையாக 3-நாள் கொடுக்கபாலுண்டாகும்.

7-வது. தாளியிலையை கொதிக்கிறதண்ணீரில்போட்டு 3-நி மிஷம் வரையில் வேகவைத்து யெடுத்துநீரை வடித்துவிட்டு இலையைப் பிசைந்து எலிமிச்சங்காயளவு கொடுக்கவும் இந்தப் படி காலையில் வெறும் வயற்றிலும் மாலை 6-மணிக்கும், ஆக இருவேளையும் நாலுநாள் கொடுக்கப்பால் சுரக்கும்.

8-வது. பாதிரிவேர் பச்சையாகக் கொண்டு நீரில் அலம்பி சுத்திசெய்து பஞ்சிபோல் யிடித்து காரமில்லாத அம்மியில் வைத்து மைபோல் அறைத்தவிழுது எலுமிச்சங்காயளவு ஆழா க்கு பசும்பாலில் போட்டுக் கலக்கிக் கொடுக்கவும் இப்படிஇரு வேளையும் கொடுத்துவர பால் சுரக்கும்.

9-வது. நெல்லிவேரை பச்சை யாகக்கொண்டு வந்து அலை ம்பி சுத்திசெய்து அறைத்து எலுமிச்சங்காயளவு ஆழாக்கு பசு ம்பாலில் போட்டுக் கலக்கிக் கொடுக்கவும் இப்படி யிருவேளை யும் கொடுத்துவர பால் சுரக்கும்.

10-வது. வெள்ளரி விரையை மேலோடுகளையுரித்து உள் ளிருக்கும் பருப்புகளைப் பசும்பாலிலரைத்து ஸ்திரீகள் குளித் துச் சுசிகரமாய் இதனைத் தங்கள் மார்பிரண்டின் மேற்பூசிக் கொள்ளவும் இப்படியே மூன்ருநாட் பூசிவரக் கெங்கையாய்ப் பால்சுரக்கும்.

11-வது. நிலாவாரைச் சமூலத்தை வேகவரைத்து அதனை பெண்கள் இரண்டு மார்புகளின்மேல் தளரப்பூசிவரவும் இவ்வாறு மூன்றுநாள் விடாமற் பூசிக்கொண்டுவர அம்மாதர்களுக்கு விசேஷமாய்ப் பால்சுரக்கும் வெள்ளைப்பூண்டைப் பதார்த்தங்களில் சேர்த்துச் சமைத்துண்ணவும்.

12-வது. எந்தஸ்திரீக்குக் குழந்தைக்குக் கொடுக்கப்பாலில்லா திருக்கின்றதோ அந்த ஸ்திரீகளுக்கு மனிதர் தலையிலிருக்கும் பென்களில் பத்து பனிரெண்டு பிடித்து அவைகளைவெற்றிலையில் வைத்து மடித்துச் சுருட்டி அம்மாதர் வாயினுட்போட்டுத் தின்னக் கொடுக்கவும் அப்படி மூன்று தினங்கொடுக்கவும் அந்த ஸ்திரீகளுக்கு 1-2-3-நாளில் கட்டாயம் முலைப்பால் சுரக்கும்.

(ஏழாவது)

ஸ்தனமில்லாதபெண்களுக்கு.

1-வது. வெள்ளைக்குண்டுமணி வேரை காடிவிட்டறைத்து 10-நாளைக்கு மார்மேல்தடவிவந்தால் ஸ்தனம் பெருக்கும் அன்றுடம் அரைத்துப் பூசவேண்டியது.

2-வது. முத்தெருக்கன் செவிமூலத்தை பால்விட்டரைத்து புன்னைக்காயளவெடுத்து ஆழாக்குபசும் பாலிற்கலக்கிக்கொடுக்கவும் இப்படிசிலதினம் கொடுத்துவர கரப்பான் சொரிசிரங்கு சிலந்தி முதலியசில்லரை விஷங்களும் தீரும் ஸ்தனம் பூரித்து விம்மியெழும்பும்.

(எட்டாவது)

திரளாதபெண்களுக்கு.

1-வது. சரியானவயதுவந்து (திரளாதபெண்கள்) ருதுவாகாத பெண்களுக்கு, புளியரணைக்கிழங்கை சுத்தஜலம்விட்டு அறைத்த விழுது ஒரு புன்னைக்காயளவு காலையில் கொடுக்கவும் இப்படி 7-நாள் கொடுக்கவும் பத்தியமில்லை சகலமும் சாப்பிடலாம் அந்தமாதம் இருதுவா வார்கள்.

2-வது. நாய் வேளைவேர் 1-பலம் நிருத்தெடுத்து வென்னீர் விட்டரைத்து கொஞ்சம் வென்னீர்விட்டு பாயசம் போல் குழப்பிக் கொடுக்கவும் இப்படி 5-நாள் கொடுக்க பெண்கள் பக்குவ மடைவார்கள் பத்தியமில்லை.

3=வது. அழிஞ்சில் வேர் 1-பலம் யெடுத்து பசும்பால்விட்டு அறைத்து திரும்பவும் கொஞ்சம் விட்டு கரைத்துக்கொடுக்கவும் இப்படி 5-நாள் கொடுத்தால் பெண்கள் பக்குவமடைவார்கள்.

4-வது. முள்ளி லவம்பட்டையை தனியாயிடித்துப் பிழிந்தரசம் 1-பலம் சுயமான கொம்புத்தேன் 1-துலாம் இவ்விரண்டும் கலந்து காலையில் கொடுக்கவும் இப்படி 2-3-4-நாள் கொடுத்து வந்தால் பெண்கள் பக்குவமடைவார்கள்.

5-வது. சுத்தமான கார்யெள்ளு கால்படி கொண்டுவந்து கல்மண்ணில்லாமல் சுத்தப்படுத்தி ஒரு பாண்டத்திலிட்டு மாலை 6-மணிக்கு தண்ணீர்விட்டு ஊறவைத்து காலை 6-மணிக்குயெடுத்து கையினுல் அந்த எள்ளை நன்ருய் பிசைந்து கழுகி அந்த ஜலத்தை இறுத்து வடிகட்டி சுமார் ஆழாக்கு ஜலமிருக்கும்படி காலையில் வெரும் வயற்றில் கொடுக்கவும் இப்படி எள்ளுகழுகின தண்ணீரை 3-நாள் கொடுத்தால் பெண்கள் ருதுவா வார்கள்.

6-வது. லவுங்கப் பட்டையை தண்ணீர் விட்டு இடித்துப் பிழிந்த ஜலம் 2-பலம் பசும்பால் 1-பலம் தேன் உ-பலம் இம்மூன்றும் சேர்த்துக் கலந்து காலையில் கொடுக்கவும் இப்படி 3-5-நாள் கொடுத்தால் பெண்கள் பக்குவ மடைவார்கள்.

7-வது. ஒருபலம் மகிழம் விதையை பசுமோர் விட்டறைத்து கால்படி பசுமோரில் கலந்து காலையில் கொடுக்கவும் இப்படி 7-நாள் 10-நாள் கொடுக்க பெண்கள் பக்குவமடைவார்கள்

8-வது. மாவிலிங்கம்பட்டை மிளகு பூண்டு இம்மூன்றும் சமனிடை யெடுத்து சாந்துபோல் நன்ருயறைத்து கொட்டைப் பாக்கு பிரமாணம் காலைமாலை மூன்றுநாள் கொடுக்கமாதவிடா யுண்டாகும் பத்திய மில்லை.

9-வது. இரச கற்பூரம் ஒரு விராகனிடை யெடுத்து ஒருபீங்கானில் வைத்து அது முழுகும்படி மூலைப்பாலிட்டு ஒருராத்திரி

ஊறவைத்து மறுநாள் காலையில் யெடுத்து நல்ல ஜலத்தில் அலம்பிவிட்டு வேறே முலைப்பால்விட்டு ஊறவைக்கவும் இப்படி ஏழுநாள் ஊரவைத்து அலம்பி யெடுத்துக்கொண்டு வேப்பங் கொழுந்து ஒருபிடி யெடுத்து அத்துடன் ஷை பூரத்தையும் வைத்து சாந்துபோல் நன்ருயறைத்து 18-மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு காலை 1 மாலை 1 ஆக 9-நாள் கொடுத்தால் மாதவிடாயுண்டாகும் கோழிக்கறி ஆட்டுக்கறி உப்புக்கண்டம் ஆகும் புளிமாத்திரம் ஆகாது காரம் உப்பு கூட்டலாம் கால் கை அலம்பும் போதும் சகலத்திற்கும் வென்னீர் உபயோகிக்க வேண்டியது.

10-வது. கொட்டிக்கிழங்கின் மேலேயிருக்கும் மயிரெல்லாம் போக்கிவிட்டு சாந்துபோல் நன்ருய் அறைத்து கொஞ்சம் சுண்ணும்பு சேர்த்து மத்தித்து இரவில்படுக்கும்போது தொப்புளில் தடவிக்கொண்டுவந்தால் மாதவிடாயுண்டாகும்.

11-வது. புளியங்கரணைக்கிழங்கு ஒருயெலுமிச்சங்காயளவு அறைத்து தவிட்டில் பிறட்டி இரண்டாய் பாகித்து காலை மாலை கொடுக்கவும் இப்படி ஏழுநாள் கொடுக்க மாதவிடாயுண்டாகும்.

12-வது. கால்படி எள்ளை ஒருபடி ஜலத்தில் போட்டு ஊரவைத்து மறுநாள் நன்ருய் பிசைந்துகழுகி அந்த ஜலத்தை வடிகட்டி காலையும் மாலையும் மூன்றுநாள் கொடுக்க மாதவிடாயுண்டாகும்.

13-வது. வளையலோடு பனைவெல்லம் இவ்விரண்டும் கலுவத்தி லிட்டு நல்லெண்ணை விட்டு கண்ணில் தீட்டும் மைபோல நெகிழ அறைத்து ஒருவேளைக்கு மிளகுப் பிரமாணம் காலை மாலை 2-3-நாள் கொடுத்தால் மாதவிடா யுண்டாகும்.

(ஒன்பதாவது)

பெண்கள் பெரும்பாட்டுக்கு.

1-வது. அரசம்பட்டை, கல்லத்திப்பட்டை, ஆலம்பட்டை, இவைகளைச் சமஎடை யெடுத்து பஞ்சிபோல் யிடித்து பசும் பால் விட்டறைத்து புன்னைக்காயளவு யெடுத்து. ஆழாக்கு பசு

ம்பாலிற் கலந்து கொடுக்கவும் இப்படி காலை மாலை இருவேளை யும் மூன்றுநாள் கொடுக்க பெரும்பாடு பிரமியம் வெகு மூத் திரம் இவை தீரும்.

2-வது. படிகாரப்பவுடரும் காசுக்கட்டி பவுடரும் சமனி டைகலந்து திரிகடிப்பிரமாணம் வாயிற்போட்டு ஒருமுணர் தண்ணீர் குடிக்கச் செய்யவும் அதற்குமேல் ஒருவாழப் பழத் தைக் கொடுத்து தின்னச்செய்யவும் இப்படி காலை மாலை மூன் றுநாள் கொடுக்க பெரும்பாடு கண்டிப்பாய் நிவர்த்தியாகும்.

3-வது. மாம்பட்டை, மருதம்பட்டை, நாகப்பட்டைஇவை களை மேற்பரணி சீவிவிட்டு சமனிடை நிருத்தெடுத்து. அதற் குச் சமனிடை இலவங்கொழுந்து சேர்த்தரைத்து புன்னைக்காய ளவு ஆழாக்குபசும்பாலிற் கலந்து கொடுக்கவும் இப்படிஇரு வேளையும் மூன்றுநாள்கொடுக்கவும் பெரும்பாடுகுணமாகும்.

4-வது. படிகாரத்தூள் 6-குண்டுமணியிடை அபினி 1-குண் டுமணியிடை இவ்விரண்டும் உள்ளங்கையில் வைத்து ஒன்று யாகும்படி நிமிட்டித் திரட்டி மாத்திரைபோல் செய்து வாயில் போட்டு உடனே 4-சிட்டிக்கை மாசிக்காய்த்தூளை 2-அவுன்சு சுடத்தண்ணீரிற்போட்டுக் கலக்கிக் கொடுக்கவும் இப்படி காலை மாலை இருவேளையும் 3-4-5-தினங் கொடுக்க பெரும்பாடு பூரா குணமாகும்.

5-வது. படிகாரத்தூள் ½-விராகனிடை பசும்பால் அரை யாழாக்கு ஷை தூளைபாலில்போட்டு அடுப்பேற்றி 4-நிமிஷம் காய்ந்த உடன் ஆற்றிக்கொடுக்கவும் இப்படி ஒருதினத்திற்கு மூன்றுவேளையாக இரண்டொருநாள் கொடுக்கபெரும்பாடென் னும் வியாதிகுணமாகும் ஷைபால்குடித்த உடன் 5-நிமிஷம்பொ றுத்து மாசிக்காய்கிஷாயம் 1-டிராம் கொடுப்பது மிகவும்நலம்.

6-வது. காவிக்கல் விராகனிடை 1-மாதளம் பூவின் இதழ் கள் விராகனிடை 2-துளி எருமைப்பால் விட்டரைத்துக் கொடு க்கவும் இப்படி இருவேளையும் 3-4-நாள் கொடுக்கவும் இது கொடுத்த சற்று பொருத்து மாசிக்காய் கிஷாயம் ஒரு திராம் கொடுத்து வந்தால் மிகவும் நலம் சீக்கிரத்தில் பெரும்பாடு குண மாகும்.

7-வது. இளந்தென்னம்பாளையின் பூவையெடுத்து பசும் பால் விட்டிடித்து பிழிந்தாறு 2-அவன்சு அதில் மாசிக்காய்

தூள் 2-சிட்டிகைபோட்டுக் கொடுக்கவும் இப்படி காலைமாலை இருவேளையும் 2-3-நாள் கொடுக்கவும் சூடானபண்டங்களா காது பத்தியமில்லை.

8-வது. நெல்லிமரத்தின் பட்டை நாகப்பட்டை ஒதியம் பட்டை இவைகள் கொண்டுவந்துமேல்பரணி சீவிவிட்டு சம நிடை நிருத்தெடுத்து பஞ்சுபோல் யிடித்து எலுமிச்சம் பழச் சார் சூட்சமாய் தெளித்து அறைத்து புன்னைக்காய்வீதம் காலை மாலை ஆறுவேளை கெடுக்கவும் குணமாகும்.

9-வது. கதம்பைச்சமூலமும் குருவையரிசியும். சமநிடை யெடுத்து இடித்துமாவாக்கி பனைவெல்லம் போட்டுப் பிசைந்து புன்னைக்காயளவு கொடுக்கவும் இப்படி இருவேளையும் மூன்று நாள் கொடுக்க குணமாகும்.

10-வது. நெல்லிப்பட்டை நாவல்பட்டை ஒதியம்பட்டை இவைகள் சமநிடை யெடுத்து எருமைத்தயிர் விட்டு இடித்து பிழிந்த ரசம் அறையாழாக்கு வீதம் இருவேளையும் மூன்று நாள் கொடுக்க குணமாகும் பத்தியமில்லை.

11-வது. படிகாரத்தை பவுடராகப் பொடிசெய்து கலுவ த்திலிட்டு கொஞ்சமாக ஜலம்விட்டு குழம்புபோல் அறைத்து மெல்லிய சீலையில் தடவிப்பிரட்டி பெருவிரல் கனத்துக்கு திரி போல்திரித்து யோனியில் வைத்திருக்க பெரும்பாடு உதிரத்தை நிருத்தும்.

12-வது. புளிப்பு மாதளம பிஞ்சு இலவம் பிஞ்சு மருமா ங்காய்பிஞ்சு இம்மூன்றும் சரியிடை யெடுத்துக் கன்னிடையன் தயிர் விட்டறைத்து ஆழாக்குத் தயிரிற்கலந்து 2-3-ராத்திரி ஊரிய பின் காலையில் யெடுத்து மெல்லிய துணியில் ஊற்றிமுடி ந்துப் பிழிந்து அந்த ரசத்தைக் குடிக்கவும் இப்படி காலையில் செய்து வைத்து சாயரட்சை குடிக்கவும் இவ்வாறு 4-5-நாள் சாப்பிட க்ஷயவியாதி தீரும்.

———

(பத்தாவது)

முலைக்காம்பு ரிணத்திற்கு.

காசுக்கட்டி 3-விராகனிடை சுத்த ஜலம் 6-அவுன்சு அடுப்பேற்றி நன்ருய் கொதிக்கக் காச்சியிறக்கி அதில் ஷை காசுக்கட்டிதூளைப்போட்டு கிளாசில் வைத்துக்கொண்டு மெல்லிய துணியினுல் தொட்டு அடிக்கடி முலைக்காம்புகளுக்கு தடவிக்கொண்டுவர ஆறிப்போகும் பெண்கள் கெர்ப்பமா யிருக்கும்போது எட்டாவது மாதம் துடங்கிமேற் சொன்னமாதிரி செய்துவந்தால் பிரசவித்த பின் குழந்தைகள்பால் குடிக்கும்போது விரணமுண்டாகாது.

2-வது, வேகித்த முத்தெண்ணையில் மெல்லிய துணியை நனைத்து காம்புகளின்மீது போட்டுக் கொண்டுவந்தால் விரணம் உலர்ந்துப் போகும்.

(பதினேருவது)

தலைப்பேன் சாக.

1-வது. இரசத்தை கருவூமத்தன் யிலைச்சாற்றிலாவது குப்பைமேனி சாற்றிலாவது அறைத்து பழந்துணி அல்லது நூலிலாவது தடவி நிழலில் ஆறவைத்தெடுத்து சிரசிலணைத்து மயிருடன் சுத்திமுடிந்திருந்தால் மூன்று ஜாமத்திற்குள் பேனெல்லாம் உதிர்ந்துபோகும்.

2-வது. படிகாரத்தைப் பொடித்து மைபோல் பவுடர்செய்து தண்ணியில் கரைத்து தலையில் தளமாய் தடவிக்கொண்டு ஒருஜாமம் பொருத்து இலுப்பை அறைப்புதேய்த்து ஸ்நானம் செய்தால் பேன் யீர் முதலானதும் உதிர்ந்து போகும்.

3-வது. மிளகும் பேன் கொட்டையும் அறைத்து தலையில் தளமாய் பூசி ஒருஜாமம் பொருத்து தலைமுழுகினுல் பேனெல்லாம் உதிர்ந்து போகும்.

4-வது. சவுக்காரத்தை தண்ணீரிற் குழைத்து தலையில் தேய்த்து 5-நிமிஷம் ஊறியபின் சிக்காயறைப்பிட்டு தலைமுழிகினுல் ஈருகள் பேன்கள் யாவும் சாகும்.

5-வது. படிகாரத்தைப் பவுடராகப் பொடிசெய்து தண்ணீரில் கரைத்து தலையில் தேய்த்து இரண்டுமெணி நேரம் ஊறிய பின் சீயக்காய் அறைப்பு தேய்த்து தலைமுழுகவும் ஈறுபேன் இவைகள் தொலைந்துபோகும்.

(பன்னிரண்டாவது)

வாயிலும் மூக்கிலும்இரத்தங் கக்குவதற்கு.

1-வது. பொரித்தபடிகாரத்தூள் 2-பலம். மாசிக்காய் தூள் 1-பலம். இவ்விரண்டும் கலுவத்தில் போட்டு பஸ்பம் போல் நன்முய் அறைத்து சீசாவில் போட்டுவைத்து ஒருவேளைக்கு கால்ரூபாயிடை யெடுத்துவாயில் போட்டுக்கொண்டு கொஞ்சம் நல்லதண்ணீர் குடிக்கவும் இப்படி 4-மணி நேரத்திற் கொருவிசை கொடுக்கவும் மேற்படி வியாதிநிவர்த்தியாகும்.

2-வது. அரிசிதிப்பிலியை சட்டியில் போட்டு அடுப்பேற்றி கரியைப்போல் வருத்து கலுவத்திலிட்டு மைபோலறைத்த பவுடர் 1-பலம் வண்ணானிடத்தில் சலவை செய்து நலங்காமலிருக்கும் மல்துணியைக் கொளுத்திகரியாக்கிய பவுடர் 1-பலம் மாசிக்காய் தூள் ½-ப்லம் இம்மூன்றும் ஒன்முய்க்கலந்து பசும் வெண்ணை போட்டு மத்தித்து கொட்டைப்பாக்கு பிரமாணம். 3-மணி நேரத்திற் கொருவிசை கொடுத்தால்ஷெ உதிரக்கக்கல் நிவர்த்தியாகும்.

3-வது. வில்வவேரை பஞ்சுபோல் சீவினபொடியை யெலுமிச்சங்காய்பிரமாணம் யெடுத்து பசும்பால்விட்டறைத்து ஆழாக்குபசும்பாலில் கலந்துகொடுக்கவும் இப்படி காலைமாலை இருவேளையும் 3-நாள்கொடுக்க நிவர்த்தியாகும்.

4-வது. சூரத்துகடுக்காயை உடைத்து உள்ளிருக்கும் விரைகளை நீக்கிவிட்டு பஞ்சுபோல் இடித்தபொடி சுமார் 5-பலம் யெடுத்து ஆடாதோடை யிலைச்சாறுவிட்டு பிசைந்து வெய்யலில் வைத்து உலர்ந்தபிறகு மறுபடியும் ஆடாதோடையிலைச் சார்விட்டு பிசைந்து வெய்யிலில் வைக்கவும் இப்படி பதினுறு தடவைசாற்முல் பிசைந்து உலர்த்தி யெடுத்து மறுபடியும் கல்லுரலில் போட்டுமைபோல்இடித்து வஸ்திரகாயம்செய்து வைத்

துக்கொண்டு கெச்சக்காய் பிரமாணம் பொடியை தேன்விட்டு மத்தித்துக் கொடுக்கவும் இப்படி இருவேளையும் 3 5 நாள் தின்றால் இரத்தக்க்கல்திரும்.

5-வது. பெருகாஞ்சோரியிலையை அறைத்துபுன்னைக்காய ளவு யெடுத்து மெல்லியதுணியை துண்டுதுண்டாய் கிழித்து ஷை அறைத்தவிழுதில் புரட்டி திரிதிரித்து நாசியில் சொரிகிவை க்கவும் காலை மாலையும் இந்தப்படி செய்யமூக்கில் இரத்தம்வரு வதை நிருத்தும் அதாவது ரத்தபீனிசம்தீரும்.

6-வது. 4-5 நத்தை பிடித்து வெய்யலில் உலர்த்தி ஒட்டிலி ட்டு மேலோடுமூடி சீலைமண் சுத்தி காய்ந்தபின்பு 8 வரட்டி யில்புடம் போட்டுயெடுத்து அந்தசாம்பலை தேன்விட்டுக்குழை த்து மூக்கில் ஆக்கிராணித்து வந்தால் ரத்தபீனசம் நாசி நாற் றம் இவைகுணமாகும்.

(பதின்மூன்றுவது)
கண்ணோய்க்கு.

1-வது. கல்லுப்பை சுத்திசெய்து பசும்நெய்விட்டு மூன்று சாமம் அறைத்து மூசையில் போட்டு பின்னும் துளிநெய்விட்டு குழம்புபோல்கரைத்து உலையில்வைத்து ஊதினால் உருகும் உரு கிவரும் சமயத்தில் செங்கல்லில் காடியாகச்செய்து கம்பிபோல் வரர்த்து ஆறியபின் யெடுத்துக்கொள்ளவும் இந்தகம்பியை எலுமிச்சம்பழச்சார்விட்டு இழைத்து கண்ணில் கலிக்கம் செய்து கொண்டு வந்தால் கண்ணிலிருக்கும்துர்நீர்கள் நிவர்த்தியாகும். கண்குளிர்ச்சியாகும்.

2-வது. பச்சை கற்பூரம் 1-இடை சீரகம் 2-இடை. தேத் தான்கொட்டை 3-இடை. தானிக்காய், நெல்லிவற்றல் கடுக் காய் இம்மூன்றும் சரியிடையா யெடுத்து பஞ்சிபோல் இடித்து கிஷாயம் செய்து இந்த கிஷாயத்தினால் மேற்படி சரக்கையறை த்து கயருபோல் நீட்டுவசமான மாத்திரைகள் செய்துவைத் துக் கொண்டு பிரதிதினம் காலையில் முலைப்பால்விட்டிழைத்து கண்ணில் தீட்டிக்கொண்டு வந்தால் கண்ணைச்சேர்ந்த எல்லாவி யாதியும் நிவர்த்தியாகும் இதை எத்தனைநாள் கண்ணில் தீட்டி னாலும் யாதொரு கெடுதியுமில்லை பத்தியமும் கிடையாது.

3-வது. கண் சிகப்புக்கு படிகாரம் (காலணாயிடை) சுகர் லெட்டு (காலணாயிடை) சுகர்லெட்டு யென்பது எல்லாமருந் துக் கடைகளிலும் கிடைக்கும்ஷை இரண்டு சரக்கையும் 6-அவு ன்சு நல்லஜலத்தில் கரைத்துகிளாசில் வைத்துக்கொண்டு மெல் லியதுணியினல் நனைத்துகண்களை துடைத்துக்கொண்டுவந்தால் கண் சிகப்பு கண்ணில் நீர்வடிதல் கண் அருவருப்பு இவைதீரும்.

4-வது. கண்வலிக்கு வெள்ளைச்சர்க்கரை 1-டிராம் சுத்தஜ லம் 3-டிராம் இவ்விரண்டும் சீசாவில்கலந்து குலுக்கிவைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு 4-5-துளியாக மணிக்கொரு முறை கண்ணில் விட்டு வந்தால் கண்வலி குணமாகும்.

5-வது. இரண்டவுன்சு எலிமிச்சம் பழரசம் இரண்டவுன்சு கொம்புத்தேன் ஒன்ருய்கலந்து வெண்கலப் பாத்திரத்தில்விட்டு அடுப்பேற்றி ஒருகொதி வந்தவுடன் அதாவது 5-நிமிஷம்வரை யில் தீயின்மே லிருக்கச்செய்து இறக்கி ஆறியபின் சீசாவில் விட்டு வைத்துக்கொண்டு துடப்பக் குச்சியால் தொட்டு கலிக் கம் போடுவதுபோல் கண்களுக்கு காலைமாலை தீட்டிவந்தால் கண்வீக்கம் கண் சிகப்பு நீர்வடிதல் இவை தீரும். கண்ணிலிரு ந்து நீரெல்லாம் வடிந்துப்போகும் தலைநோய் கழுத்து நோய் இவை தீரும் இதை அதிகமாய் காச்சினல் பாகுபோல் சுண்டி ப்போகும் ஜாக்கிரதையாயிருக்க வேணும்.

6-வது. கண்மாசுநீங்க நவாச்சாரத்தை முலைப்பாலில் இழை த்து கண் யிரப்பைகளில் தடவினல் கண்ணில் நீர்வடிந்து கண் மாசுகளை யறுக்கும்.

7-வது. கண்ணோய்க்கு சிகப்பு நந்தியாவட்டை அல்லது வெள்ளை நந்தியாவட்டை புஷ்பத்தை பிழிந்து அந்த ரசத்தை 2-3-துளி கணக்காய் காலைமாலை கண்களுக்கு விட்டுக் கொண்டு வந்தால் கண்ணோய் தீரும்.

(பதினன்காவது)

விக்கலுக்கு.

1-வது. நல்ல வெல்லமும் பால் சாம்ராணியும் சரிபாகம் யெடுத்து அறைத்து சுண்டைக்காயளவு உருட்டிக் கொடுக்க விக்கல் தீரும்.

2-வது. விளாம்பழச் சதை, வருத்த திப்பிலிப்பொடி, அமுக்கனும் வேரைச் சுட்டக்கரி, வகைக்கு இரண்டு காசுயிடை இந்துப்பு ஒரு சிட்டிக்கை சேர்த்து இவைகளை பசும்பால்விட்டரைத்து கொஞ்சம் தேன்விட்டு மத்தித்து கொடுக்கவும் இப்படி ஒருநாளைக்கு மூன்றுவிசை கொடுக்க விக்கல் தீரும்.

3-வது. திப்பிலி, வெந்தயம், நெல்லுப்பொரி, சித்தரத்தை நெல்லிப் பருப்பு இவைகள் சரியிடையா யெடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து வெள்ளைச்சக்கரை சரியிடைகூட்டி நெய் விட்டு மத்தித்து ஒரு வேளைக்கு கொட்டைப்பாக்குப்பிரமாணம் ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுக்க விக்கல் தீரும்.

4-வது. திப்பிலியும் நெல்லுப் பொரியும் சரிபாகமா யெடுத்து பொடிசெய்து தேன்விட்டு மத்தித்து ஒருவேளைக்கு கொட்டைப்பாக்கு பிரமாணமாக தினத்திற்கு மூன்றுவேளை கொடுக்க விக்கல் தீரும்.

5-வது. மயிலிறகு, சாம்பிராணி, மனோசிலை, மெழுகு, பசும் நெய் இவைகள் சரிபாகமாயெடுத்து இடிக்கவேண்டி யவைகளை யிடித்து யாவும் ஒன்ருய்ப் பிசைந்து படை நெருப்பின்மேல் கொஞ்ச கொஞ்சமாய் போட்டு புகை பிடித்தால் சுரத்தின்மேல் வந்த விக்கல் தீரும்.

6-வது. சீந்தில் கொடியும், நிலவேம்பும் கிஷாயம் செய்து ஒரு வேளைக்கு 4-அவுன்சு வீதம் ஒரு நாளைக்கு மூன்றுவேளை கொடுக்க சுரத்தின்மேல் வந்த விக்கல் தீரும்.

7-வது. செருப்படை சுட்ட சாம்பல், மிளகு வருத்தசாம்பல், திப்பிலிவருத்த சாம்பல்இவைகள்சரிபாகமாடெடுத்துதேன் விட்டு மத்தித்து ஒருமணி நேரத்திற்கொருவிசை நாவில் தடவிக்கொண்டு வந்தால் நாக்கு சுரசுரப்பு நாவரட்சி விக்கல்தீரும்.

8-வது. விளக்கெண்ணை மூலைப்பால் பசும்நெய் இவைமூன்றும் சரியிடையாய் கூட்டிமத்தித்து பஞ்சில்துவட்டி நெஞ்சுக் குழியில் போட்டால் மேகசுரத்தினுல் மேகரோகத்தால் வந்தவிக்கல்தீரும்.

9-வது. கோழிமுட்டை வெள்ளைக்கருவை பஞ்சில் துவட்டி அல்லது துணியில் நனைத்து தொண்டைக்குழியில்போட்டு வைத்தால் விக்கல் தீரும்.

(பதினைந்தாவது)

இரத்த விக்கலுக்கு.

1-வது. ஆடா தோடையிலையும் தூதுவேளை யிலையும் இடித்து பிழிந்து வடிக்கட்டிய ரசம் 3-அவுன்சு, கோஷ்டம், சாம்பிராணி, திப்பிலி இம்மூன்றும் சரிபாகமா யெடுத்து இடித்த தூள் மூன்று சிட்டிக்கை யெடுத்து ஷை ரசத்தில் போட்டுக்கலந்து கொடுக்கவும் இப்படி காலை மாலை இருவேளையும் 2-3-நாள் கொடுக்கத் தீரும்.

2-வது. கருப்புக் குங்கிலியம் பனைவெல்லம் இவ்விரண்டும் சரிபங்கா யெடுத்துப் பிசைந்து கோழிமுட்டை வெள்ளைக் கருவும் நல்லெண்ணெயும் சரியிடை கூட்டி முன்மருந்துக்கு தேவையான மட்டில் இதைவிட்டு இளம்பதமாய் மத்தித்து ஒருவேளைக்கு கொட்டைப் பாக்குப்பிரமாணமாக தினத்திற்கு 3-வேளை கொடுக்க இரத்த விக்கல் தீரும்.

3-வது. அத்திப்பட்டை அத்திப்பிஞ்சு தென்னம் பிஞ்சு அரசங்கொழுந்து ஆலம் விழுதின் கொழுந்து முடக்கொத்தான் கொழுந்து வெள் வேலம்பட்டை சிறுநாகப்பூ நன்னாரி வேர் தண்ணிவிட்டான் கிழங்கு நிலப்பனங்கிழங்கு அதிமதுரம் இவைகள் வகைக்கு (அரைபலம்) நிருத்தெடுத்து பஞ்சுபோல் இடித்து பசும்பால் விட்டரைத்து பசும் நெய் 20-பலம் விட்டுக் கலந்து அடுப்பேற்றி பதமாய் காச்சிவடித்து சீசாவில் வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு அரைபலம் வீதம் காலை மாலை இருவேளையும் 5-7-நாள் சாப்பிட்டால் இரத்தவிக்கல் நிவர்த்தியாகும் (பத்தியம்) அத்திப்பிஞ்சி கருவாழைப் பிஞ்சி முருங்கைப் பிஞ்சி வண்டைப்பிஞ்சி துவரம் பருப்பு ஆட்டுக்கரி இவை ஆகும் நல்லெண்ணை கடுகு ஆகாது.

(பதினாறுவது)
பசிதீபனத்திற்கு.

1-வது. இந்துப்பு 5-பலம் ஒரு பாண்டத்திலிட்டு ஒருபடி எலிமிச்சம் பழச்சார் விட்டு ஊரவைத்து மூன்றுநாள் ஊறிய பின் யெடுத்து கலுவத்தில் அறைத்து, தண்ணீர்காச்சிய பழய மண் பாண்டத்தை அடுப்பிலேற்றி அறைத்த மருந்தையும் மீதி ரசத்தையும் அதில் விட்டு நீர் சுண்டுகிறவரையில் வருத்து இரக்கி ஆறவைத்து மறுபடியும்கலுத்தில் பவுடரைப்போல் அறைத்து சீசாவில் வைத்துக் கொள்ளவும் ஒருவேளைக்கு ஒருவிராகனிடை வீதம் வாயில் போட்டுக்கொண்டு கொஞ்சம் நீராகாரம் சாப்பிடவும் 5-10-நாள் சாப்பிட்டால் எரிகுன்மம் பித்த குன்மம் வாதகுன்மம் தீரும் பசி தீபனமுண்டாகும்.

2-வது. நிலவேம்பு சூரணம் விராகனிடை 4-கிச்சிலித்தோல் விராகனிடை 1-தனியா விராகனிடை 1-இவைகளை பவுடர்செய்து சாராயம் விராகனிடை 32-வென்னீர் விராகனிடை 13-இவ்விரண்டும் ஒன்றாய்க்கலந்து அதில் ஷை பவுடரைப்போட்டு இரண்டு நாழிகை ஊறியபின் வேளைக்கு 8-விராக னிடையாகஇருவேளையும் சாப்பிட பசிதீபன முண்டாகும்.

3-வது. சீந்திற்சக்கரை 1-பங்கு சீனாசக்கரை 1-பங்குமூங்கிலுப்பு உ-பங்கு மிளகு ½-பங்கு இவ்விதம் சேர்த்து ஒருவேளைக்கு திரிகடிபிரமாணம் சாப்பிட்டுவர பசிதீபனமுண்டாகும்

4-வது. சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, சீரகம் ஏலம் இவை சமனிடையெடுத்து இளம் வருப்பாய் வருத்து இடித்து மெல்லிய சீலையில் வஸ்திரகாயம் செய்து அதற்கு சரியிடை வெள்ளைச் சர்க்கரைகூட்டி சீசாவில்வைத்துக்கொண்டு திரிகடிபிரமாணம் இருவேளையும் தின்றுவந்தால் பசிதீபனமுண்டாகும்.

5-வது. ஓமம் பலம் 1-குருசானி ஓமம்பலம் 1-நாய்கடுகு பதம்1-இவைகளை இடித்து சூரணித்து 1½ பலம் பனைவெல்லத்தில் பிசைந்து வைத்துக்கொண்டு புங்கங்கொட்டையளவு தின்றுவந்தால் தீபனமுண்டாகும்.

6-வது. இஞ்சியை உலர்த்தி இடித்து சூரணம்செய்து அதிற்பாதி இடை சீரகச்சூரணமும் சீரகத்திற்பாதி ஏலரிசிச்சூரண

மும் சேர்த்து இம்மூன்றும் சேர்ந்தயிடைக்கு சரியானயிடை சீனிசக்கரைகூட்டி வைத்துக் கொண்டு வேளைக்கு திரிகடிப்பிர மாணம் தின்றுவரவும்.

7-வது. ஒருபங்கு புதினாரசமும் மூன்றுபங்கு எலுமிச்சம் பழரசமும் கூட்டி அதற்குத்தகுந்த சீனிசேர்த்து சர்பத்துசெய்து காலை மாலை ஒவ்வொரு அவுன்சு குடித்தால் பசிதீபனமுண்டாகும்.

8-வது. சம்மாறு வெற்றிலை 1-இடை, லவுங்கம் 2-இடை ரோஜாப்பு 3-இடை குலேகாவ்ஜான் 8-இடை இந்தப்படி நிருத்துயிடித்து வாலையில் போட்டு சரியிடை தண்ணீர்விட்டு திராவகமிரக்கி அந்திசந்தி அரை ஒன்று அவுன்சுவீதம் சாப்பிட பசியுண்டாகும் தைரியமுண்டாகும் சந்தோஷமுண்டாகும் உள்ளுருப்புகளுக்கு வலிவுண்டாகும்.

(பதினேழாவது.)

பீநிசத்திற்கு.

1-வது. சூரத்துக்கற்பூறம் அரை பலம், இரசகற்பூரம் அரிக்கால்விராகனிடை, புளியங்கொட்டைதோல் பவுடர் ஒரு பலம் இம்மூன்றையும் கலுவத்தில் போட்டு நன்றாய் கலக்கும்படி அறைத்து ஒருதேங்காயை திரிகி அந்த பூவை ஷை கலுவத்திலிருக்கும் மருந்துடன் போட்டு பிசைந்து அந்த கலுவத்திலேயே ஒரு பக்கமாய் சேர்த்து அணைத்து மருந்து மேல்புரமிருக்கும்படி கலுவத்தை சாய்த்து வெய்யலில் வைத்தால் மஞ்சள் நிறமான தைலமிரங்கும் அந்த தைலத்தை வழித்து சீசாவில் வைத்துக் கொண்டு காலை மாலை பகல் மூன்றுவேளையும் நாசியில் இரண்டொரு துளி விட்டுக்கொண்டு வந்தால் நாசிப்புண் நாசியில் நீர்வடிதல் முதலிய நாசிரோகம் நிவர்த்தியாகும்.

2-வது. ஒரு கொப்பரத்தேங்காயை திருகி அந்த பூவை வெங்கலக் கிண்ணியில் போட்டு மணத்தக்காளி யிலைச்சாறு அறையாழாக்கு விட்டு விரைவில் வெய்யலில் வைக்கவும் அடிக்கடி பார்வையிட்டு அந்த மருந்தை கீழ்மேலாய் கலக்கும்படி கிளரிக்கொடுக்கவேண்டியது தேங்காய்ப்பூவும் மூலிகைச்சாறும்

ஒன்ருய் சுவரிக்கொண்ட சமயம் அந்தபூவில் கொஞ்சமெடுத்து நசுக்கிப் பிழிந்தால் எண்ணெயிறங்கும் அந்த சமயத்தில் எடுத்து கையினுலாவது துணியில் முடிந்துக் கிட்டக்கட்டியாவது தைலத்தை பிழிந்து சீசாவில் வைத்துக்கொள்ளவும். நாசிரோகம் சகலத்திற்கும் இந்த தைலத்தில் 2-3-துளி நாசியில் விட்டால் உடனே நாலைந்து தும்மல் வரும் மூக்கிலிருந்து தாரை தாரையாய் மயிரிழைபோல் தண்ணீர் வடியும் இப்படி காலை மாலை இருவேளையும் 5-நாள் விட்டால் நாசிக்கு மேலிருக்கும் மேகப் புண்கள் நாசிக்கு உள்ளிருக்கும் புண்கள் நாசியைச் சேர்ந்த எல்லா வியாதியும் நிவர்த்தியாகும் சிலப்புப் பதார்த்தங்கள் கூடாது.

3-வது.	போரிக் ஆசிட்	அவுன்சு		1.
	சீமை நவாச்சாரம்	,,	,,	$\frac{3}{4}$.
	கம்அகேஷியா	,,	,,	$\frac{1}{2}$.
	மெந்தால்	,,	,,	$\frac{1}{4}$.

இவை யாவும் கனுவத்திலிட்டு ஒன்ருய்க் கலக்கும்படி பவுடராக அறைத்து சீசாவில் வைத்துக்கொண்டு காலை மாலை இரண்டு சிட்டிக்கை நசியம் செய்துக்கொண்டு வந்தால் பீநிசரோகம் சாந்தியாகும்.

4-வது. கஞ்சாவும் சிலந்திநாயகம் என்கிற மூலிகையும் சரியிடையாய் கூட்டி தண்ணிவிடாமல் நிமிட்டி சிமிளியில் வைத்து மேலே நெருப்புவைத்து கெஞ்சா அடிப்பதுபோல் அடித்தால் 3-4-வேளையில் செக்கை பீனிசம் தீரும்.

5-வது. மிளகு கஸ்தூரிமஞ்சள் நெல்லிப்பருப்பு கடுக்காய் தோல் வேப்பம்விரை வகைக்கு பலம் 1. கரசலாங்கண்ணிச் சாறுவிட்டு 4 மணிநேரம் அறைத்து 10 பில்லைகளாச் செய்து நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு காலையில் சூரிய உதயத்திற்கு முன் ஒரு பில்லையை யெடுத்து பசும்பால்விட்டரைத்து தலையில் தேய்த்துக்கொண்டு இரண்டுமணிநேரம் ஊறியபின் இலுப்பைக்கட்டியை சுட்டு அறைத்து ஸ்நானம்செய்யவும் இப்படி நாள்விட்டு நாள் பத்துமுழுக்கு முழுகினுல் மூக்கடைப்பு மூக்கில் நீர்வருதல் நாற்றம் யாவும் தீரும்.

(பதினெட்டாவது)
மூலமூலத்திற்கு.

1-வது. எருமைக்கொம்பை சுட்டுக் கரியாக்கி அதைபவுடர்போல் நுணிக்கிக்கொண்டு வெண்ணெயில் குழைத்துமுளை மூலத்தின்மேல் தடவினல் கரைந்துபோய்விடும் 3 நாள் 5-நாள் தடவவேண்டியது பிரண்டையும் மாவிலிங்கஇலையும் வெதுப்பி ஒத்தணம் செய்யரிணம் ஆறும்.

2-வது. நன்ருய் புளிப்பேறிய கம்புமாவின் கூழ எலுமிச்சங்காய்பிரமாணம் யெடுத்து அவ்விடை கோவயிலைச்சார்விட்டு பிசைந்து மூளைமூலத்தின்மேல் போஸ்டுகட்டுவதுபோல் கட்டினல் முளை மூலம் அற்றுவிழும் 3 4 பொழுதுகட்டவேண்டும்.

3-வது. கல்மதத்தைப் பொடித்து மைபோலப்பவுடர் செய்து வெண்ணெயில் குழைத்து முளைமூலத்தின்மேல் 2 3வேளையிரவில் தடவிக்கொண்டுவந்தால் கறைந்துபோகும்.

4-வது. வேப்பம்பழத்தை உலர்த்திஉடைத்து பருப்பையெடுத்து எலுமிச்சங்காய் பிரமாணம் அறைத்து பில்லைதட்டி மூன்று இராத்திரி கட்டவும் முளையிலுள்ள புழுக்கள் விழும் முளைகரையும் துத்திஇலைவெதுப்பி ஒத்தடம்செய்யவும்.

5-வது. பேய் பீர்க்கன் விரை துருசு கொடிவேலி வேர்ப்பட்டை வகைக்கு 2-காசி யிடையெடுத்து எலிமிச்சம் பழச்சாற்றல் அறைத்து பசும் வெண்ணெ கொஞ்சம் கூட்டிக்குழைத்து இரவில் படுக்கும்போது மூலமுளையில் தடவி சாலையில் வென்னீரில் ஸ்நானம் செய்யவும் இப்படி மூன்றுராத்திரி செய்யமுளை கரையும்.

6-வது. வெடியுப்பு சுண்ணும்பு துருசு வகைக்கு 2-காசு யிடை யெடுத்து பசும் நெய் விட்டரைத்து முளையில் தடவவும இப்படி மூன்று ராத்திரிதடவி நாலாம்நாள் ஆதண்டம்இலையை காடிவிட்டு அவித்து அந்த நீரினல் கழுவத்தீரும்.

7-வது. படிகாரம் வெண்காரம் சவுக்காரம் வகைக்கு 2-காசுயிடை யெடுத்து எலுமிச்சம் பழச்சாற்றல் அறைத்து மூலமுளையில் தடவவும் இப்படி மூன்றுநாள் தடவி 4-வது நாள் சாமைத்தவுட்டை அனலில்தூவி புகையை ஆசனத்தில்பிடிக்கவும்.

8-வது. வசம்பு 1-இடை, பிரமண்டிக்கிழங்கு 1-இடை, மிளகு 1-இடை இவைகளை சூரணம்போல் செய்து திருகடிப்பி

ரமாணம் காலை மாலை சாப்பிட்டு வரவும் ஷை வியாதிகள் தீரும் புளி கடுகு நல்லெண்ணை ஆகாது உப்பு வருத்து கூட்டவும் புளி சுட்டு கூட்டவும்.

9-வது. பூனைக்கரியை அதிக காரமில்லாமல் கிரமப்படி சமைத்து வியாதியஸ்தனுக்கு தெரிவிக்காமல் போஜனத்துடன் 2-3-வேளை கொடுத்தால் மூலரோகம் நிவர்த்தியாகும்.

10-வது. விலாங்குமீனை தலையையருத்து தலைகீழாய் தொங்கும்படி ஒருராத்திரிக் கட்டிவைக்க விஷநீர் யாவும் சிந்திப்போகும் காலையில் அரிந்து சரியிடை வெள்ளை வெங்காயம்சேர்த்து நெய்யும் விளக்கெண்ணையும் சமநிடை கூட்டி தாளித்துகுழம்பு செய்து வியாதி யஸ்தனுக்கு 10-நாள் வரையில் வைத்திருந்து இருவேளையும் போஜனத்துடன் கொடுக்கவும் வேறே பதார்த்தம் கூடாது. அந்த பதார்த்தத்தை வேறே மனிதரும் ஆசைப் படக் கூடாது இரத்தமூலங் கண்டிப்பாய் நிவர்த்தியாகும்.

11-வது. சுக்கு திப்பிலி மிளகு ஓமம் சீரகம் முத்தெருக்கஞ் செவி வகைக்குப்பலம் 1 யாவும்யிடித்து சூரணித்து ஒரு வேளைக்கு பாக்களவு சூரணம்யெடுத்து வென்னீரில் கொடுக்கவும் இப்படி இருவேளையும் 7 நாள்கொடுக்கவும் மேற்படி பொடியை எருக்கம்பாலில் மைபோலரைத்து மூலமுளையில் தடவிவர விழுந்து போகும்.

12-வது. மிளகருணைப்பட்டை, கருணைக்கிழங்கு பிரண்டைக்கிழங்கு பெருகன்கிழங்கு இவைநான்கும் சமநிடை யெடுத்து சூரணித்து ஒருவேளைக்கு திரிகடிபிரமாணம் நெய்யில்குழைத்து இருவேளையும் 20 நாள் சாப்பிடவும்.

(பத்தொன்பதாவது)

மூலரோகங்களுக்கு மருந்து.

உள் மூலத்திற்கு.

திப்பிலி பலம் (வ) அறைத்து அரைக்காற்படி கோதும்பை மாவிற் கலந்து திருகுகள்ளியை நறுக்கி ஒரு பாண்டத்திற் போட்டு இரண்டுபடி தண்ணீர்விட்டு வேடுகட்டி அதின்மேல் மேற்படி மாவைவைத்துப் பிட்டவித்து நல்லெண்ணெயும் வெல்லமுங் கலந்து (எ) நாள் சாப்பிடத்தீரும்.

மேற்படி வேறுவித மருந்து.

முள்ளிவேர் பிரண்டைவேர் கற்றாழைவேர் கடுக்காய்சுக்கு மிளகு வெள்ளைப்பூண்டு இவைகளை ஓர் நிறையாய் அறைத்து புளித்தமோரிற் கரைத்துக் கொடுக்கத்தீரும்.

சீழ் மூலத்திற்கு.

ஈருள்ளி பலம் 5, சிறுக அறிந்து பன்றிநெய்யிற் பொரித்து 5-நாள் கொடுக்கச் சீழ்மூலந்தீரும்.

மேற்படி வேறுவித மருந்து.

காரெள்ளு கடுகு திப்பிலி சுக்கு வகைக்குப்பலம் 1, இவைகளை வெதுப்பிச் சூரனித்துத் திரிகடிப் பிரமாணம் வெந்நீரில் 2-வேளை 5-நாள் கொள்ளத்தீரும்.

இரத்த மூலத்திற்கு.

ஈருள்ளிச்சாறு ஆவின்பால் வகைக்கு அரைபடி, ஆவினெய்கால்படி, அதிமதுரம் 1-பலம் இவைகளை ஒன்றாய்க்கலந்து அதில் மேற்படி பால்விட்டரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வேளை ஒன்றிற்கு ஒரு கரண்டி விகிதம் இரண்டு வேளையும் 5-நாள் சாப்பிட சீழ்மூலம் இரத்தமூலம் தீரும் பத்தியம் உப்பு புளி தள்ளவும்.

2-வது. திரிகடுகும் கோஷ்டமும் ஓர் நிறையாய்ச் சூரணித்து அதற்கு நிகற் வெளுமை சர்க்கரையும் முந்திரிப்பழமுங்கூட்டி ஆவின் நெய்விட்டு லேகியஞ்செய்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்குப் பிரமாணம் 2-வேளையும் 5-நாள் கொள்ளத்தீரும்.

3-வது. நாயுருவியிலையைக் கொட்டைப்பாக்களவு அறைத்து நல்லெண்ணெயிற் குழைத்து காலைமாலை 7-நாட் கொள்ளத்தீரும்.

4-வது. வாழைப்பூவைத் துவைத்துக் காற்படி சாறுபிழிந்து அதில் சீரகம் பாக்களவு அறைத்துப்போட்டுக் கொடுக்க இரத்தக்கடுப்பு உடனே தீரும்.

மூளை மூலத்திற்கு.

பெருங்காயம் படிகாரம் தேங்காய்க் கொட்டாங்கச்சிக் கரி ஓர் நிறையாய் எலுமிச்சம்பழச்சாற்றால் மைபோலறைத்து

லர்த்தி அப்பால் மேற்படி கொட்டாங்கச்சித் தயிலத்தாற்களிம்பு போலரைத்து அபானவேரிற் பூச 3-தினத்திற் கரையும்.

2-வது. மைக்கொன்றைக்கொழுந்தில் விளக்கெண்ணெய் தெளித்து வறுத்துத் துணியில்வைத்து ஒத்தணஞ்செய்து இளஞ்சூடாயிருக்கிற பதத்தில் வைத்துக்கட்ட வேர்கருகும்.

3-வது. ஆவாரங் கொழுந்தையும் அதுபோல் செய்தாலும் வேர்கருகும் கடுப்பு தீரும்.

4-வது. ஆவாரங்கொழுந்து பூபட்டை அறுகம்வேர் இவைகளை ஓர் நிறையாய் நிழலிலுலர்த்தி இடித்துச் சூரணம் பண்ணிக்கொண்டு திரிகடிப்பிரமாணம் ஆவின்நெய்யில் மண்டலங்கொள்ள உள் அபானவேர் கரையும் இச்சாபத்தியம்.

5-வது. ஆகாசத்தாமரை இலையை உலர்த்திப் பொடித்து வடிகட்டின தாளும் கருங்குருவை யரிசிமாவும் ஒன்றாய்க் கலந்து பிட்டவித்து நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து உள்ளுக்குக் கொடுத்து மாதளங் கொழுந்தைக் காடியிலவித்துக் கட்ட வேர் விழும்.

6-வது. வட்டத்துத்தி யிலையைத் தண்ணீரிலிட்டு நன்றாய்ப் பிசைந்து பிழிந்து அதில் நல்லெண்ணெயாவது ஆவின் நெய்யாவது விட்டுக்கலக்கி 3-நாள் கொடுக்க வேர்விழும்.

7-வது. எருமைத்தயிரில் நீர்ப்பூலா யிலையை அரைத்துக் கலக்கி 6-நாள் கொடுக்க முளைமூலம் கரைந்துவிழும்.

8-வது. புளியங் கொட்டையின் மேற்றோலை எலுமிச்சங் காய்ப் பிரமாணம் அரைத்து ஆவின்பாலில் ஐந்துநாள் கொடுக்கத்தீரும்.

(இருபதாவது)

சகலமூலத்திற்கும் பொதுமுறை.

1-வது. கற்றாழஞ்சருகு முத்தக்காசு கருணைக்கிழங்கு வெருகங்கிழங்கு சுக்குசித்திரமூலம் மருட்கிழங்கு கடுக்காய் பிரண்டை கொன்றைப்பட்டை புளியமடற்கிழங்கு காட்டுக் கருணைக்கிழங்கு இவைகளை ஓர்நிறையாய்ப் பாலில் அவித்துலர்த்தி இடித்துச் சூரணஞ் செய்துசக்கரை கலந்து ஒரு மண்டலங் கொள்ளத்தீரும்.

2-வது அடம்பு நொச்சி பருத்திகள்ளி இவைகளின் இலைகளைச் சமமாயிடித்து (ச) படிசலத்திற் போட்டு மூடிச்சீலைமண் செய்து மேல்சட்டியிற்றுவாரமிட்டுத் துணியா லடைத்துப் பாதித்தண்ணீர் வற்றினதின்பேரில் துவாரத்தின் அடைப்பையெடுத்து அதின் வழியாய் ஆவியைப்பவன வாயிற்பிடிக்க சகல மூலமுந் தீரும்.

3-வது. கரட்டுக்கரணை சரிக்கரணை பிரண்டை கொடிவேலி வெருகு புளியமடல் மருள் இவைகளின் கிழங்குவகைக்குப் பலம் (க) உலர்த்திச் சூரணஞ்செய்து தேனில்பாக்களவு காலைமாலை (எ) நாள் கொடுக்கத் தீரும்.

4-வது. கறுப்புக்கம்பிளியைச் சுட்ட சாம்பல் ஒரு எலுமிச்சங் காய்ப்பிரமாணம் பெருங்காயம் கொட்டைப் பாக்களவு முடக்கொத்தான் விரைபலம் (வ) இவைகளை மேற்படி சாற்றாலரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் உண்டைசெய்து பழச்சாற்றிலாவது மிளகுக் கியாழத்திலாவது (எ) நாள் கொடுக்கத்தீரும். காரவஸ்த்துக்கள் கூட்டலாகாது.

5-வது. சதுரக்கள்ளியை நறுக்கிப் பானையிற்போட்டு (ச) படித் தண்ணீர்விட்டு வேடுகட்டி அதின்மேல் அரைக்காற்படி கருங்குருவை மாவைப்பிட்டவித்து (ந) நாள் கொக்கத்தீரும்.

6-வது. கொட்டைப்பாசி ஆதண்டம்பட்டை கடுக்காய் மிளகு வகைக்குப்பலம் (க) சூரணித்துத் தேனிற்பாக்களவு குழைத்து இருநேரமும் 5 நாள் கொடுக்கசகல மூலமுந்தீரும்.

7-வது. அவித்தெடுத்த நந்தைச்சதை பலம் (ய) செங்கழுநீர்க்கிழங்கு கோஷ்டம் வகைக்குப்பலம் (உ) அதிமதூரம் ஏலம் சீரகம் மிளகு வகைக்குப் பலம் (க) சூரணித்து ஒருபடி நெய்யிற் போட்டுக்காய்ச்சிக் கடுகுடன் பத்துநாளிருபோது சிறுகரண்டி விகிதங்கொள்ள த்தீரும். காரமட்டாய்க்கூட்டவும்.

8-வது, நாயுருவியிலை கருவேப்பிலை கரணைக்கிழங்கு ஆவின்வெண்ணெய் வகைக்கு விளாங்காய்ப்பிரமாணம் விளக்கெண்ணெய்படி அரைக்காவ் ஒன்றாய்க்கலந்து லேகியமாய்க் கிண்டிப் புன்னைக்காய் விகிதம் (ரு) நாள் சாப்பிடத் தீரும்.

9-வது. சுக்கு கடுக்காய் வகைக்குப்பலம் (ரு) திப்பிலி நற்சீரகம் மிளகு வகைக்குப்பலம் (க) சித்திரமூலம் பலம்

(ச) செவியம் பலம் (ந) எவச்சாரம் திப்பிலிமூலம்பலம் (உ) கருணைக்கிழங்கு வற்றல் கோஷ்டம் வகைக்குப்பலம் (அ) சூரணித்துப் பனைவெல்லம் பலம் (ச) கூட்டியரைத்து வேளை ஒன்றுக்குக் கடுக்காய்ப் பிரமாணம் சாப்பிட்டு மோர்குடித்து வரத்தீரும்.

(இருபத்தொன்றுவது)

கிராணிபேதிகளுக்கு மருந்து.

மூலக்கிராணிக்கு.

திப்பிலி சுக்கு மிளகு சாதிக்காய் கிராம்பு இந்துப்பு ஏலம் சீரகம் பெருங்காயம் வேலம்பிசின் மாம்பிசின் இலவம்பிசின் மூத்தக்காசு புளியவிரைத்தோல் மாதுளந்தோல் அபின் வகைக்கு விராகனிடை (க) பொடித்து இதற்குநிகர் சுத்திசெய்த கஞ்சாத்தூள் கூட்டி வேளையொன்றுக்கு (க) விராகனிடை வீதம் தேனிற்கொள்ள மூலக்கிராணிதீரும்.

2-வது. மஞ்சள் பிரண்டை வெள்ளைப்பூண்டு சுக்கு மிளகு வகைக்கு விராகனிடை (உ) மைப்போற்பொடித்து ஒருகோழி முட்டைக் கருவிற் பொரித்துச்சாப்பிடத் தீரும். வியாதி நிற்குமளவும் 5-6-வேளை சாப்பிடவும்.

3-வது. உப்பையறைத்து ஒருதலை வெள்ளைப்பூண்டின் மேற்பூசி உமிக்காந்தலில் வெதுப்பி உப்பையும் தொலியையும் மூளையையும் நீக்கி அறைத்து தயிரிற்கலக்கிக் கொடுக்கத்தீரும் கடுப்பு நிற்கும்.

4-வது. பிரண்டை வேர்ப்பொடி சுக்கு மிளகு கடுகு வெள்ளைப்பூண்டு ஓமம் கருஞ்சீரகம் கருவேப்பிலை பெருங்காயம் இந்துப்பு வகைக்குப்பலம் (ந) ஒரு கருங்கோழியை இறகு குடல்தலைகால் நீக்கிச் சற்றுவேகவைத்து எலும்புகளை ந்தமாமிசம் இவைகளைத் தனித்தனியே பிரண்டைச்சாற்றால் மைப்போலறைத்து ஒன்றாய்ப்பிசரி பில்லைதட்டி நல்லெண்ணெயில் வேகவைத்து அந்திசந்தி சாப்பிட்டுவரத் தீரும்.

5-வது. கொட்டாங் கரந்தையையுஞ் சீரகமும் ஓர் நிறையாய் அறைத்து பில்லைதட்டி நல்லெண்ணையில் வேகவைத்து உண்ணத் தீரும்.

6-வது. அக்திப்பட்டை ஆயிற்பட்டை வரப்பூலாவேர்ப் பட்டை நாவற்பட்டை நெல்லிப்பட்டை இவைகளைச்சமமா யிடித்துப் பிழிந்த சாறுபடி (வ) சாதிக்காய் வசுவாசி கிராம்பு திப்பிலி வகைக்கு விராகனிடை (க) ஏலம் விராகனிடை (உ) சுக்கு மிளகு வகைக்கு பலம் (வ) இவைகளை மேற்படி சாற்று லரைத்து கலக்கி ஆவின் நெய்படி (வ) கூடவிட்டு வேக வைத்து லேகியமாய் செய்துகொண்டுவேளை ஒன்றிற்கு ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் கொள்ளத் தீரும்.

(இருபத்திரண்டாவது)

வாய்வுக்கிராணிகளுக்கு மருந்து.

1-வது. மேற்றோல் சீவியுலர்த்தின இஞ்சிபலம் (10) ஏலம் லவங்கம் மதுரம் திரிகடுகு திரிசாதம் இந்துப்பு ஓமம் அதி விடையம் வகைக்குக் கழஞ்சு (1) இவைகளை ஆவின்நெய் விட்டுப்பொன்னிறமாய் வெதுப்பிச் சூரணித்து அதில் பாதி வெள்ளைச்சக்கரையுங் கூட்டித் திரிகடிப்பிரமாணம் சாப்பிடத் தீரும். புளியும் கரப்பன் பதார்த்தமுந் தள்ளவும்.

2-வது. சேங்கொட்டை திரிபலை கொடிவேலி வகைக்குக் கழஞ்சு (உ) இந்துப்பு கழஞ்சு (ய) இவைகளை யிடித்துச் சிறுசட்டியிற் போட்டுமூடி (எ) சீலைமண்செய்து குக்குடபுடம் போட்டுப் பொடித்துக் காசிடை ஆவின் வெண்ணெயிற் குழைத்துக் கொள்ளத்தீரும் பத்தியமா யிருக்கவும்.

3-வது. அதிவிடையம் பெருங்காயம் சிறுநாகப்பூ திப்பிலி சாதிப்பத்திரி வகைக்குக் கழஞ்சு (ரூ) ஆனைத்திப்பிலிகழஞ்சு (ச) சுக்கு கடுகு வெள்ளுள்ளி வகைக்குக்கழஞ்சு (அ) நாய்க் கடுகு திப்பிலி மூலம் வகைக்குக் கழஞ்சு (ய) அபின்கழஞ்சு (உ) இவைகளை வெதுப்பித் தூள்செய்து வெள்ளச்சக்கரை பலம் (ரு) கூட்டிக் கலந்துகொண்டு அந்திசந்தி திரிகடிப் பிர மாணம் முத்தக்காசும் சுக்கும் சேர்த்துச்செய்த கியாழத்திலா வது இஞ்சிசாற்றிலாவதுகொள்ள ஆறுவகை கிராணியுந் தீரும்.

4-வது. சுக்கு மிளகு வெண்ளைப்பூண்டு கஸ்தூரிமஞ்சள் சீரகம் ஓமம் சத்திச்சாரணைவேர் குப்பைமேனிவேர் வகைக்

குப் பலம் (க) பிரண்டைச் சாற்றலாட்டி நல்லெண்ணெய்விட்டு லேகியஞ் செய்து ஒருகொட்டைப்பாக்குபிரமாணஞ் சாப்பிட்டுவரத் தீரும்.

5-வது. சுக்கு மிளகு வெள்ளைப்பூண்டு கஸ்தூரிமஞ்சள் சீரகம் ஓமம் சத்திச்சாரணைவேர் குப்பைமேனிவேர் வகைக்குப் பலம் (க) பிரண்டைச்சாற்றாலாட்டி நல்லெண்ணெய்விட்டு லேகியஞ்செய்து ஒருகொட்டைப் பாக்குப்பிரமாணஞ் சாப்பிட்டு வரத்தீரும்.

6-வது. சுக்குபலம் (உ) திப்பிலிபலம் (வ) மிளகுபலம் அரைக்கால் ஓமம் பலம் (ச) பூண்டு பலம் (க) இவைகளை ஒன்றாய் வெதுப்பி யிடித்து அவைகண்ட இடைக்குப்பாதி ஆடுதீண்டாப்பாளைச் சூரணங்கூட்டி கழற்காய்ப் பிரமாணம் இரண்டு நேரமும் சாப்பிட்டு வரத்தீரும்.

7-வது. கொடிவேலி திரிகடுகு ஓமம் சிருதேக்கு ஆனைத்திப்பிலி கோஷ்டம் இந்துப்பு வெடியுப்பு வகைக்குப் பலம் (க) பெருங்காயம் வசம்பு சுட்டகரிவகைக்குப்பலம் (வ) கடுகுபலம் (உ) இளவறுப்பாய்ச் சூரணித்து அதற்கு நிகர்வெள்ளைச் சக்கரை கூட்டி திரிகடிப்பிரமாணம் வெந்நீரில் கொள்ளத் தீரும்.

8-வது. சட்டியை நன்றாய்க்காயவைத்து ஒருபிடிஉப்பிட்டுக் கருகவறுத்துக்கொட்டிப் போட்டு அதில் ஒருபிடி பிரண்டைக் கொழுந்தை யரிந்துபோட்டிக் கருவருத்து ஒருபடி எருமை மோர்விட்டு வற்றவைத் திருத்து அதிவிடையம் பூண்டு திரிகடுகு ஓமம் வசம்பு இவைகளை வகைக்கு விரகனிடை (க) வெதுப்பிப் பொடித்துப் போட்டுக் கொடுக்கத் தீரும்.

9-வது. ஓமத்தைக் கருகவறுத்துத் தேய்த்துஉமிப் போக்கிப் பொடித்துத் திரிகடிப் பிரமாணம் தேனிற் கொள்ளத் தீரும்.

(இருபத்து மூன்றாவது)

அதிசாரபேதிக்கு மருந்துகள்.

1-வது. பெருமரத்துப்பட்டை அதிவிடயம் முத்தக்காசு அசமாதகம் குழப்பாலைப்பட்டை இவைகளை ஓர்நிறையா யரைத்துத் தயிரிலாவது காடியிலாவது கரைத்துக் கொடுக்கத்திரும்.

2-வது. மிளகு அதிவிடையம் சாதிக்காய் சாதிபத்திரிசாஸ்திரபேதி லவங்கப்பட்டை மூத்தக்காசு இந்துப்பு நற்சீரகம் காசுக்கட்டி மாதுளம்பிஞ்சு வில்வக்காய்சதை பெருமரத்துப்பட்டை ஆத்திப்பூ மாங்கொட்டைப் பருப்பு அழிஞ்சிவிரைப்ருப்பு வட்டத்திருப்பி வேர்பட்டை இவைகளை லெதுப்பிச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் லேனிலும் மற்ற அனுபானங்களிலும் கொடுக்கத்திரும் இச்சாபத்தியம்.

3-வது. மாங்கொட்டைப்பருப்பு அபின் கருநாவி கஞ்சாவித்து அதிவிடையம் சாதிக்காய் இவைகளை ஓர்நிரையாய்க் கூட்டி சீந்திற்கியாழத்திலாட்டி சிறுபயறுபோலுண்டைசெய்து அனுபானங்களி விடத்தீரும்.

4-வது. கஞ்சா பொரிகாரம் காரீயபற்பம் அபின் சுக்கு கருநாவி சீரகம் குடசப்பாலை கழற்பருப்பு அதிவிடையம் ஓர்நிறையாய் ஊமத்திலைச் சாற்றாலாட்டி கழற்சிப்பிரமாணம் உண்டைசெய்து தேனில் கொடுக்கத் தீரும்.

5-வது. குடசப்பாலை அதிவிடயம் கோரைக்கிழங்கு சாதிக்காய் சுக்கு அபின் கஞ்சா கழற்பருப்பு இலவம்பிசின் சீரகம் மாங்கொட்டைப்பருப்பு வில்வப்பழம் இவைகளை ஓர் நிறையாய் எலுமிச்சம்பழச்சாற்றி லரைத்துக் குன்றிபோலுண்டை செய்து மேற்படி சாற்றிற் கொடுக்கத் தீரும்.

6-வது. கடுக்காய் கரித்துணியைச்சுட்ட சாம்பல் விளாம்பிசின் இலவம்பிசின் இவைகளை ஓர்நிறையாய் அத்திப்பட்டைச்சாற்றாலரைத்து தான்றிக்காய்ப் பிரமாணம் உண்டைசெய்து தேனிற்கொடுக்கத் தீரும்.

7-வது. மலைதாங்கிவேர் கோரைக்கிழங்கு ஆத்திவேர்ப்பட்டை நீர்ப்பூலாவேர்ப்பட்டை நாவல்வேர்பட்டை மாதுளம்பிஞ்சுத்தோல் அபின் ஆத்திப்பிஞ்சு மாம்பருப்பு அதிமதுரம் கோஷ்டம் சுக்கு சீரகம் சாதிக்காய் இவைகளை ஓர்நிறையாய்த் தென்னம்பாளைச் சாற்றால் மூன்றுநாளாட்டி தேற்றாவிரைப் பிரமாணம் உண்டை செய்து வாழைப்பூச்சாற்றில் ஒருண்டை கொடுக்கத்திரும்.

8-வது. மாதுளம்வேர்ப்பட்டை கூவிளைவேர்ப்பட்டை மாங்கொட்டைப்பருப்பு ஓமம் குருசாணிவோமம் சாதிக்காய்

சாதிப்பத்திரி அதிவிடையம் லவங்கம் திரிகடுகு கஞ்சா வெட்பாலையரிசி கடுக்காய்க்கரி கோஷ்டம் நற்சீரகம் காயம்கொன்றைவேர்ப்பட்டை திப்பிலிமூலம் வெந்தயம் சித்திரமூலம் காட்டாத்திப்பூ புளியம் விரைத்தோல் ஊமத்தைவிரை கழற்பருப்பு இவைகளைச் சமமாய்ப்பொடித்துத் திரிகடிப்பிரமாணம் தேனிற்கொள்ளத் தீரும்

9-வது. ஓமத்தை வெதுப்பித் தேய்த்து உமிப்போக்கி அதற்கு நிகர் காட்டாத்திப்பூ கூட்டிதிரிகடி இஞ்சிச்சாற்றிற் கொள்ளத் தீரும்.

10-வது. சாதிக்காய் சாதிப்பத்திரி கிராம்பு கோஷ்டம் சீரகம் அதிமதுரம் அதிவிடையம் அபின் கோரோசனை வகைக்கு விராகனிடை (உ) முலைப்பாலாலரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் உண்டைசெய்துக்கொண்டு ஒருசட்டியில் சுக்கு ஓமம் மிளகு வகைக்கு விராகனிடை (க) வறுத்துக்கொட்டிக் கொண்டு அந்தச்சட்டியில் இலந்தையிலை ஒருபிடிபோட்டு வதக்கி மேற்படி மூன்றுவகை மருந்தையும் தட்டிப்போட்டு ஒருபடி தண்ணீர்விட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து அதில்மேற்படி மாத்திரையொன்று உரைத்துக்கொடுக்கவும். இப்படி மூணுநாள்கொடுக்க அதிசாரந் தீரும்.

11-வது. ஆவாரையிலையை ஒருபிடிவதக்கி சுக்கு ஓமம் மிளகு வகைக்கு விராகனிடை வெதுப்பிக்கியாழஞ்செய்து ஷை மாத்திரை ஒன்று உரைத்துக்கொடுத்தாலும் அல்லது விடத்திலையையும் ஷை முன்போற் கியாழஞ் செய்து (மாத்திரையில்) உரைத்துக் கொடுத்தாலும் வயிற்றுக்கடுப்புத்தீரும்.

(இருபத்திநான்காவது)

அண்டவாய்வுக்கு மருந்துகள்.

மேற்படி வியாதியின் குணம்.

வாயுகுடலிற்றங்கி நரம்பு வழியாய் விரையி லொன்றிலிறங்கிப் பொருமி வலிக்கும். அதுமேல் நோக்கி உடலுள் வாங்கும் அதன்நரம்பு புடைத்துக் காணும்.

சிகிச்சை.

நொச்சி கழற்கொடி சாரணை ஆடாதோடை வேலை வேலிப் பருத்தி கோழியவரை இவைகளின் கொழுந்து எருக்

கலம்பூ வகைக்குப்பிடி (க) வசம்பு சித்திரமூலம் மிளகு திப்பிலி ஓமம் வகைக்கு விராகனிடை (ங) வெள்ளுள்ளி கழற்சிப் பருப்பு விராகனிடை (ரு) பெருங்காயம் விராகனிடை (க) இவைகளை வேலிப்பருத்திச் சாற்றிலரைத்து (க) கழஞ்சுவீதம் உண்டைசெய்து நிழலிலுலர்த்திக் கொண்டு சங்கங்குப்பி நொச்சி உத்தாமணி முருங்கைசாரணை கொடிவேலி வகைக்கு பலம் (எ) வீதம் ஒன்ருய்ச் சிதைத்துக் கியாழஞ்செய்து அதில் ஒருண்டையை உரைத்துக் கொடுக்கவும் இப்படி (யரு) நாள் புளிதள்ளிச் சாப்பிடத் தீரும்.

3-வது. கொடிவேலி சங்கங்குப்பி செங்கத்தாரி காத்தொட்டி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்குப்பலம் (ச) கருப்புக்கட்டி பலம் (ரு) எள்ளுப்பொடிபடி (எ) மிளகு ஓமம் வகைக்குப்பலம் (க) வெள்ளைப்பூண்டு பலம் (உ) சிரகம்பலம் (எ) இந்துப்பு வெடியுப்பு நவச்சாரம் அதிவிடையம் வகைக்கு விராகனிடை (எ) தேங்காய் (க) இவைகளை மெழுகுபோலிடித்துக்கொட்டைப்பாக்குப் பிரமாணம் (உ) வேளை (உய) நாள் உட்கொள்ளவும் புகையிலை புளி தள்ளவும்.

4-வது. குறுணிக் கழுதை விட்டையை நாலு மரக்கால் தண்ணீரிற் கரைத்துவேடுகட்டி அதின்மேல் (சா) எருக்கலங் காயில் பஞ்சு விரை நீக்கி நாட்பட்டவரகரிசிமாவைத்து மூடி நூலாற் கட்டிப் பிட்டவித்துக் காய்வெந்த பதத்திலெடுத்து வேளைஒன்றுக்கு ஒருகாய்ப்பிட்டைச் சாப்பிடத் தீரும். பத்தியம்கைப்பு புளிப்பு தள்ளவும்.

5-வது. சத்திச்சாரணைவேர் முடக்கொத்தான் கொழுந்து கழற்கொழுந்து பூண்டு பெருங்காயம் சுக்கு இவைகளை ஓர் நிரையாய் அரைத்து ஒருஎலுமிச்சங்காய் பிரமாணம் (சா) வேளை கொடுக்கத் தீரும்.

6-வது. வெள்ளுள்ளி சுக்கு நாவற்பட்டை வகைக்குபலம் (க) இடித்து படிநீரிர்போட்டு சரியாகவற்றவைத்து அதில்மூன்று கழற்பருப்பைப் பொடித்து போட்டு மூன்றுநாள் கொடுத்து முருங்கையிலையை அமுரியில் வதக்கிக்கட்ட விரையேறி இறங்குகிறதுந் தீரும். இச்சாபத்தியன்.

7-வது. ஒருதேங்காய்ப் பூவின் மத்தியில் தோல்நீக்கின ஒருபலம் வெள்ளைப் பூண்டை வைத்து பிட்டவித்து பூவைப்

பால் பிழிந்து பூண்டையும் ஒருபலம் முருக்கம் பட்டையையும் நன்றுயரைத்துச் சாறுபிழிந்து ஒன்றுய்க்கலந்து சாப்பிட்டுக் காற்றுப்படாத அறையிற் படுத்துக்கொள்ளவும். இப்படி (௩) நாள்செயயத் தீரும்.

8-வது. கழற்சிப்பருப்பு வெள்ளுள்ளி முருங்கைப்பட்டை. சுக்கு கருங்காணம் வகைக்குக் கழஞ்சு (உ) ஒருபடி சலத்திற் போட்டு அரைக்காற் படியாய்வற்ற வைத்துக் கொடுக்கவும் இந்தப்படி (௬) வேளை கொடுக்கத் தீரும்.

9-வது. புரசவிரை மிளகு வகைக்கு விராகனிடை (௩) வெள்ளைப்பூண்டு விராகனிடை (௬) அரைத்துக் கொட்டைப் பாக்குப்பிரமாணம் (௩) நாள் உதயத்திற் கொடுக்கத் தீரும். புளி புகையிலை தள்ளவும்.

10-வது. கழற்பருப்பு சித்திரமூலம் மாவிலிங்கு இவை களின் வேர்ப்பட்டை வகைக்கு விராகனிடை (௰) அண்ட வெள்ளைக் கருவில் விரவிப் பொரித்துண்ணத் தீரும்.

11-வது. கோழிமுட்டை வெள்ளைக் கருவில் ஒருகழற் பருப்பு ஒரு கொட்டைபாக்குப் பிரமாணம் சிற்றுமுட்டிக் கொழுந்தும் அரைத்து போட்டுப் பொரித்துக் கொடுக்கத் தீரும்.

12-வது. கருவளையல் மிளகு பெருங்காயம் இவைகளை ஓர் நிறையாய்மைப்போற்பொடித்து திரிகடிப் பிரமாணங் கொடுக்கத் தீரும்.

13-வது. திருகுகள்ளியை வாட்டிச்சாறு பிழிந்து அதற்கு நிகர் நல்லெண்ணெய் கூட்டி ஆட்பலத்துக்குத் தக்கபடி (௩) நாள் கொடுத்து ஆறுநாள் பத்தியம்வைக்கத் தீரும்.

14-வது. கழற்சிப்பருப்பு சத்திச்சாரணைக்கிழங்கு இந் துப்பு பெருங்காயம் வெள்ளுள்ளி வசம்பு இவைகளை ஓர்நிறை யாய் வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் கொடுக்கத் தீரும்.

15-வது. புளியிலையை யிடித்து (௩) படிசலத்திற் போட்டு அதில் திரிகடுகு இந்துப்பு ஓமம் காந்தம் காயம் வெங்காரம் வெள்ளுள்ளிவகைக்கு விராகனிடை (க) வாளம் விராகனிடை (௰) கழற்சிப்பருப்பு விராகனிடை (௫) இவைகளைக்கிழிக்கட்டி வேகவைத்து மருந்துகளைக்கழுவி எருக்கம்பூச் சாற்றுலாட்டி தேற்றுவிரைப் பிரமாணம் உண்டைசெய்து விளக்கெண்ணை

யில் ஒருகுளிகையை உரைத்து (ரு) நாள் கடும்பத்தியமாய்க் கொடுக்கத் தீரும்.

16-வது. பெருங்காயம் கழற்சிப்பருப்பு மிளகு இவைகளை ஊமத்திலைச் சாற்றாலரைத்து பருத்திவிரைப் பிரமாணம் உண்டைசெய்து (உ) வேளை (ரு) நாள் ஒருகாசிடை ஊமத்திலைச் சாற்றிலரைத்துக் கொடுத்து மேற்படிசாற்றை விரையிற் பூசி தவிட்டைவறுத்து ஒத்தணஞ் செய்யத் தீரும்.

17-வது. இலுப்பை பிண்ணாக்கும் சிவந்தகோழிக்காரமும் இரண்டும் சுண்டைக்காய்ப் பிரமாணம் அரைத்துக் கருப்புக்கட்டியில் பொதிந்து கொடுக்கத் தீரும்.

18-வது. குட்டித் தக்காளியிலையும் தைவேளை யிலையும் வதக்கி ஒத்தணஞ் செய்து கட்டவும் வசம்பு பூண்டு கழற்சியிலை வறுத்து ஒத்தணஞ் செய்துகட்டவும்.

19-வது. கழுதைலத்தியும் கழற்சியிலையும் வறுத்து ஒத்தணஞ் செய்துகட்டவும். ஆனை குதிரை ஒட்டை கழுதை வெள்ளாடு இவைகளின் லத்தியும் தேட்கொடுக்கு யிலையும் தேங்காயைத் திருகின பூவும் பூவரசம் பூவும் கொடிக்கள்ளிப் பட்டையும் ஓர்நிறையாயிடித்து வறுத்து ஒத்தணஞ்செய்யவும்.

(இருபத்தைந்தாவது)

வயற்றுக்கடுப்போடுகூடிய பேதிகட்டு.

வயற்றுக்கடுப்பின் குணம்.

முந்தி மலங்கழிந்தடங்கும் சீதம்ரத்தம்விழும்இடுப்புக்கடுக்கும் வயிறூளையும் அன்னஞ்செல்லாது அங்கம்மெலிந்துவரும்.

சிகிச்சை.

1-வது. வில்வப்பிஞ்சு திப்பிலி சாதிக்காய் ஓமம் சுக்கு இவைகளை ஓர் நிறையாய் வறுத்துப் பொடித்துச் சில்லுக் கருப்புக்கட்டியும் வெண்ணெயுங்கூட்டி மெழுகுபோ லரைத்து ஒரு கொட்டைப் பாக்குப் பிரமாணங் கொள்ளத் தீரும்.

2-வது. விடத்தலை வெட்பாலா நீர்ப்பூலா இவைகளிட வேர்த்தோல் ஆலவிழுதின் கொழுந்து வகைக்கு ஒருபிடிவீதம்

சிதைத்துக் கியாழஞ்செய்தாவது அல்லது இவைகளையரைத்து எருமை மோரிலாவது தயிரிலாவது கலக்கிக்கொடுக்கத் தீரும்.

3-வது. இளநீரில் எலுமிச்சம்பழச் சாறுபிழிந்து கொடுத்தாலும் எலுமிச்சம்பழச் சாற்றில் சர்க்கரை கலந்துசாப்பிட்டாலும் நெல்லிக்காய்ச் சாற்றில் சர்க்கரைகலந்து கொடுத்தாலும் வெந்தயமும் நெல்லிப்பருப்பும் வறுத்துப் பொடித்துத் திரிகடி புளித்த பழந்தயிரிலாவது நல்லெண்ணெயிலாவது கொடுத்தாலும் நெல்லிப்பருப்பை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துச் சர்க்கரை கூட்டிக் கொடுத்தாலுந் தீரும.

4-வது. நற்சீரகம் பலம் (எ) இளவறுப்புச் செய்து பொடித்து வடிகட்டி சர்க்கரை பலம் (௯) கூட்டித் திரிகடிப் பிரமாணம் ஏரண்டத்தெண்ணெயிலாவது ஆவின்நெய்யிலாவது மத்தித்துக் கொள்ளத் தீரும்.

5-வது. முத்தக்காசை யிடித்து மாவாக்கிப் பிட்டவித்துப் பிழிந்த தண்ணீர்படி அரைக்காலில் ஒரு விராகனிடை ஓமத்தை வறுத்துப் பொடித்துப் போட்டுக்கொடுக்கத் தீரும்.

6-வது. மாதுளங்காயை வட்டமாக நறுக்கி வித்தையெடுத்துப்போட்டு அதற்குள் வெந்தயம் ஓமம் சீரகம் வகைக்கொரு விராகனிடை வைத்து மூடித்துணிசுற்றி சாணிக்குட் பொதிந்து சாணி வெந்தபின் எடுத்துக்கவசம்நீக்கி ஒருவிராகனிடை சேர்ந்திற் சர்க்கரைகூட்டி அரைத்துத் தயிரிற்கலக்கிக் கொடுக்கத் தீரும்.

7-வது. திரிகடுகு சாதிக்காய் சாதிப்பத்திரி அதிவிடையம் அபின் களிப்பாக்கு மாம்பருப்பு முள்ளி இலவம்பிசின் இலவம்பிஞ்சின் மேற்றோல் நெல்லிவற்றல் காட்டாத்திப்பூ கருவேப்பிலை மாதுளம்பூ விளாம்பிசின் காசுக்கட்டி புளியவிரையின் மேற்றோல் தான்றிக்காய் வகைக்கு விராகனிடை (௧) நற்சீரகம் விராகனிடை (௰௯) இவைகளை வெதுப்பிச்சூரணித்து திரிகடியளவு தேனிலாவது தயிரிலாவது கொள்ளத்தீரும்.

8-வது கற்கடகச்சிங்கி விராகனிடை (௨) ஈருள்ளிவிராகனிடை (௧) நற்சீரகம் விராகனிடை (௨) இவைகளை வெதுப்பியரைத்து எருமைத் தயிரிற்கலக்கிக் கொடுக்கத் தீரும்.

9-வது. துத்தம் வரப்பூலா முத்தக்காசு சுக்கு ஓமம் அதிவிடையம் பொன்முசுட்டைவேர் நற்சீரகம் குங்கிலியம் இவை

களை ஓர்கிறையா யரைத்து ஆவின்நெய்யில் வேகவைத் துண்ணத் தீரும்.

10-வது. ஒருகழஞ்சு மிளகை ஆவின்மோரில் மூன்றுநாள் ஊறவைத் தெடுத்து அதனுடன் கீழ்க்காய்நெல்லி வரப்பிலாக் கொழுந்து வகைக்கொரு பாக்களவு அரைத்து மேற்படி மோரிற்கலக்கிக் கொடுக்கத் தீரும்.

11-வது. துத்திவேரை ஒருஎலுமிச்சங் காய்ப் பிரமாணம் அரைத்து எருமைத்தயிரிற் கலந்து கொடுக்கத் தீரும்

12-வது. ஒரு எலுமிச்சம் பழத்தை எருமைத் தயிர் பிழிந்து கொடுக்கத் தீரும்.

13-வது. வெள்ளைக் குங்கிலியம் விராகனிடை (க) பொடித்து மோரிற்போட்டு மத்தாற்கடைந்து வடிகட்டி அரைவீசம்படி தேங்காய்ப்பாலிற் கலந்து கொடுக்கத் தீரும்.

14-வது. வெள்ளைக் குங்கிலியம் மாதுளம்பூ ஓமம்சாதிக்காய் நெல்லி முள்ளி திரிகடுகு வகைக்கு விராகனிடை (க) வெதுப்பிப் பொடித்துத் திரிகடித்தூளும் சர்க்கரையுங் கலந்து எருமைத்தயிரிற் கொடுக்கத் தீரும்.

15-வது. வெண்கிளுவை அத்தி நாவல் இவைகளின் பட்டையைச் சமமாய் இடித்துப் பிட்டவித்துப் பிழிந்தசாறு படி அரைக்காலில் ஒருகொட்டைப் பாக்குப்பிரமாணம் வெண்ணெய் கலந்துகொடுக்கத் தீரும்

16-வது. வெந்தயம் பெருங்காயம் வெள்ளைப் பூண்டு வகைக்கு விராகனிடை (க) முருங்கைவிர்க்கு விராகனிடை (ல) சிவக்கவறுத்து ஒருபடி தண்ணீர் விட்டு ஒருசிரங்கையாய் வற்றவைத்துக் கொடுக்க வாயுக்கழிச்சல் தீரும்

17-வது. கசுக்கட்டி வசம்பு வெள்ளுள்ளி பெருமரத்துப் பட்டை இவைகளை யரைத்து நல்லெண்ணெய்பிற் பொரித்து மூன்றுநாட்கொடுக்கத் தீரும்.

18-வது. சாதிக்காய் காசுக்கட்டி விசுவாசு ஓமம் இலவம் பிசின் லவங்கம் அதிவிடையம் குங்கிலியம வகைக்குக்கழஞ்சு (க) அபின்கழஞ்சு (ச) பருத்தியிலைச் சாற்றாலரைத்துத் தேற்றாவிரைப் பிரமாணமும் பருத்திக்காய் இலந்தைத் தம்பலம் இவைகளை யரைத்து வகைக்குஒரு கொட்டைப் பாக்குப்பிரமாணம் வெண்ணெய்பிற் குழைத்துக் கொடுக்கவும்.

19-வது. சாதிக்காய் அபின் நீர்ப்பூலாவேர்ப் பட்டை வகைக்கு விராகனிடை (க) பொடித்து கோழிமுட்டைகருவிற் கலந்து பொரித்து (சு) வேளைகொடுக்கத் தீரும்.

20-வது. ஓமம்படி அரைக்கால் நற்சீரகம்படி மாகாணி சுக்கு மஞ்சள் அபின்சாதிக்காய் வகைக்கு விராகனிடை (க) கஞ்சாவிராகனிடை (உ) வறுத்துப் பொடித்துத் திரிகடிப்பிர மாணம் இளவெந்நீரிற் கொடுக்க நீங்கும்.

அக்கினிமந்தம்வாயு பொருமலுக்கு.

1-வது. கண்டங்கத்திரி முள்ளிசத்திச்சாரணைஓமம் கொடி வேலிதிரிகடுகு எவாச்சாரம் திரிபலைபஞ்சலவணம்சத்திச்சாரம் சீரகம் கருஞ்சீரகம் வகைக்குப்பலம்(வ)வீதம் பொடித்து அத ற்குநிகர் அசுவகெந்திச் சூரணங்கூட்டித்தேனிலாவது இஞ்சிச் சாற்றிலாவது கொள்ளத் தீரும்.

2-வது. இந்துப்பு விராகனிடை (க) சீரகம் விராகனிடை (உ) ஓமம் விராகனிடை (ந) சுக்கு விராகனிடை (ச) திப்பிலி விராகனிடை (ரு) மிளகு விராகனிடை (சு) பொடித்து அத ற்குநிகர் கடுக்காய்ப் பொடிகூட்டித் திரிகடி வெந்நீரிற் கொள் ளத் தீரும்.

3-வது. ஓமம் சுக்கு கொடிவேலிவேர் இவைகளை ஓர் நிறையாய்ப் பொடித்து அதற்குநிகர் கடுக்காய்ப்பொடி கூட் டித்திரிகடிப்பிரமாணம் மோரிற் கொள்ளத் தீரும்.

4-வது. திரிகடுகு ஓமம் வாய்விளங்கம் வகைக்குவிராக னிடை (ரு) இளம் வருப்பாவருத்து சூரணம் செய்து அதற்கு சரியிடை சக்கரையெடுத்து கொஞ்சம்பால்விட்டு பாகுசெய்து அத்துடன் தக்கபடி நெய்யுந் தேனுங் கூட்டி தேன்போல பாகுபதம்வந்தவுடன் ஷை சூரணத்தைப்போட்டு லேகியம் போல் செய்து கொட்டைப்பாக்களவு இருவேளையும் தின்று வந்தால் அக்கினிமந்த வாய்வு தீரும்.

(இருபத்தாறுவது)

அஜீரணவாயுவுக்கு.

சுக்கு திப்பிலி மிளகு அசுமதாகம் இந்துப்பு நற்சீரகம் பெருங்காயம் இவைகளை ஓர் நிறையாய்ச் சூரணித்துத் திரி

கடிப்பிரமாணம் அசனத்திற் பிசைந்து ஆவின்நெய் விட்டு உண்ணத் தீரும்.

2-வது. சத்திச்சாரணை கண்டங்கத்திரி வில்வம் இவைகளின் வேர் வகைக்குப்பலம் (உ) சுக்குபலம் (ங) பூண்டு (ந) காயம்பலம் (வ) இந்துப்புபலம் (கஉ) இவைகளைச் சிதைத்து ஒருபடிதண்ணீரிற் போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து அசனத்தின்பின் உட்கொள்ளத் தீரும்.

3-வது. மிளகை வறுத்துப் பொடித்துத் திரிகடிப்பிரமாணம் தேனிற் கொள்ளத் தீரும்.

4-வது. கருவேப்பிர்க்கு சுக்கு சீரகம் ஓமம் வகைகக்கு விராகனிடை (உ) ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து உட் கொள்ளத் தீரும்.

மந்தவாய்வுக்கு.

சீரகம் ஏலம் பச்சைகர்ப்பூரம் இவைகளை ஓர் நிறையாய்ச் சூரணித்து அதற்கு நிகர் சீனிச்சர்க்கரை கூட்டித் திரிகடி அந்திசந்தி கொள்ளத் தீரும்.

மேற்றோல் சீவின இஞ்சி பலம் 10, ஏலம் திரிகடுகு கிராம்பு ஓமம் வாலுளுவையரிசி சாதிக்காய் ஆனைத்திப்பிலி சீரகம் அதிமதுரம் குருசாணி ஓமம் அமுக்குரு கசகசா லவங்கப்பத்திரி மோடி மல்லி இவைகளை முந்திரிப்பழம் பேரீச்சம் பழம் இவைகளை நெய்விட்டு வறுத்துச் சூரனித்துத் திரிகடிப் பிரமாண முட்கொள்ளத் தீரும்.

பித்தவாயுவுக்கு.

லவங்கம் திரிகடுகு முத்தக்காசு சிறுநாகப்பூ திரிபலை இவைகளை ஓர்நிறையாய்ச் சூரணித்து அதற்கு நாலிலொன்று ஆவின்பாலிற் சுத்திசெய்த சிவதைச்சூரணங்கூட்டி வேளையொன்றுக்கு முக்கழஞ்சு தேனிற் கொள்ளத் தீரும்.

2-வது. நற்சீரகம் அதிமதுரம் கருஞ்சீரகம் சோம்பு சன்னலவங்கப்பட்டை சதகுப்பைவகைக்குப்பலம் (கூ) மல்லிபலம் (கூ) இவைகளை யிடித்துச்சூரணஞ்செய்து சர்க்கரை கற்கண்டு வகைக்குப்பலம் (கூ) கூட்டித்திரிகடிப்பிரமாணம் வெந்நீரில் இரண்டுவேளை பத்துநாள் கொள்ளத் தீரும்.

3-வது. கடுக்காய் திப்பிலி சுக்கு சீரகம் ஓமம் இந்துப்பு நறுக்கு மூலம் வகைக்குப்பலம் (க) இவகைளைப்பொடித்து

ஒரு பலக்கருப்புக் கட்டியைப் பாகுசெய்து அதிற்றூவிக் கிண்டிவேளை யொன்றுக்கொரு கழற்காய்ப் பிரமாணங் கொள் ளத் தீரும்.

ஆனந்த வாயுவுக்கு.

தும்பையிலையை எலுமிச்சங் காயளவு அரைத்துப் பழச் சாற்றிற் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

2-வது. பதினாறு எருக்கிலைக்குள் தோல்நீக்கின அரைப் பலம் வெள்ளைப் பூண்டை வைத்துக்கட்டிப் பிட்டவித்து இலை வெந்தபருவத்தில் எடுத்துச் சாறுபிழிந்து அந்தச்சாற்றில் பூண்டையரைத்துக் கொடுக்கவும். இந்தபடி (ங) வேளை கொடு க்கத் தீரும்.

3-வது. ஒருஎலுமிச்சங் காயளவு இலுப்பைப்பிண்ணாக்கை ஆழாக்கு ஈருள்ளிச்சாற்றி லூறப்போட்டு வெதுப்பிக் கொடுக் கத்தீரும்.

(இருபத்தேழாவது)

குன்மரோகங்களுக்கு மருந்து.

வாதக்குன்மத்திற்கு.

வெள்ளுள்ளிச்சாறு நெல்லிக்காய்ச்சாறு இஞ்சிச்சாறு இள நீர் நெய்பால் வகைக்கு படி (க) ஒன்றாய்க் கலந்து இரண்டுபடி யாய் வற்றவைத்துஅதில் கோஷ்டம் ஏலம் வெங்காரம்இந்துப்பு நற்சீரகம் திரிகடுகு கொத்தமல்லி கிராம்பு சேங்கொட்டை வகைக்குப்பலம் (க) அரைத்து போட்டுக் காய்ச்சி வடித்து வேளையொன்றுக்கு ஒருகரண்டி வீதங்கொள்ளத் தீரும்.

2-வது. கொடிவேலி புனலி நிலவாகை குமரி இவைகளின் வேர் வகைக்குப்பலம் (ய) இடித்து பத்துப்படி தண்ணீரிற் போட்டு ஒருபடியாய் வற்றவைத்து வடித்து அதில் திரிகடுகு இந்துப்பு வகைக்குப்பலம் (க) பூண்டுபலம் (கூ) அரைத்துப் போட்டு ஆவின் நெய்படி (க) கூடவிட்டுக்காய்ச்சி வேளை ஒன்றிற்கு ஒருகரண்டி வீதம் உண்டுவரத் தீரும்.

3-வது. இஞ்சி சிவதை சீந்தில் நிலவாகை கொடிவேலி கழற்கொடி இவைகளின்மூலம் முடக்கொத்தான் சமூலம் பூண்டு திரிகடுகு வகைக்குப்பலம் (க) இவைகளையரைத்து ஒருபடி சிற்றாமணக் கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிக் கள்

ளிப்பால் கழஞ்சு கூடவிட்டு வேளை ஒன்றுக்கு ஒருகரண்டி வீதங் கொள்ளத்தீரும்.

4-வது. நொச்சி நிலாவாகை கொன்றை கழற்கொடி ஆதண்டை முருங்கை சிவதை செம்முள்ளி இவைகளின்வேர் பூண்டு இந்துப்பு வகைக்குப்பலம் (க) இவைகளை யரைத்து ஒருபடி சிற்றாமணக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சிக் கள்ளிப் பால் கழஞ்சுகூடவிட்டு வேளையொன்றுக்கு ஒரு கரண்டிவீதங் கொள்ளத்தீரும்.

பித்தகுன்மத்திற்கு.

வில்வவேர் முல்லைவேர் சுக்கு ஏலம் பாசிப்பயறு நெல்லிப் பருப்பு வகைக்குப்பலம் (வ) இடித்து ஒருபடி தண்ணீரிற்போ ட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும் இப்படி (சு) வேளை கொடுக்கத்தீரும்.

2-வது. சுக்குபலம் (வ) மிளகு ஓமம் வகைக்குபலம் (உ) சேங்கொட்டை அக்கிராகாரம் வகைக்குப்பலம் அரைக்கால் இவைகளைவெதுப்பிச் சூரணஞ்செய்து சத்திச்சாரணைவேர் சூர ணம்பலம் (யசு) கூட்டித் திரிகடியளவு வெந்நீரிற் கொள்ளத் தீரும்.

3-வது. முக்காவேளை சமூலம் இடித்துப் பிட்டவித்துக் காற்படி சாறுபிழிந்து திரிகடுகுப்பொடி விராகனிடை (ந) கூட்டி (சு) வேளை கொடுக்கத் தீரும்.

4-வது. சத்திச்சாரணை வேரை ஆவின்பாலிலவித்துலர்த்தி சூரணஞ்செய்து சீனிகலந்து திரிகடிப்பிரமாணம் நெய்யிலாவது தேனிலாவது கொள்ளத்தீரும்.

சத்திகுன்மத்திற்கு.

கரியுப்புபடி (க) பூநீர்படி (க) வெடியுப்புபடி (௨) இவை களைத் தனித்தனியே சலத்திற் கரைத்துவைத்து மறுநாள் தெளிவை யிறுத்துக் கலந்து அதில் (ச) கழஞ்சு பெருங்காயத் தைப் பொடித்துப் போட்டுக் குருகக்காய்ச்சி வேளையொன் றுக்கு ஒருபாக்களவு நீராகாரத்திற் கொள்ளத்தீரும்.

2-வது. இந்துப்புபலம் (க) வெங்காரம் வெள்ளுள்ளி வகைக்குப்பலம் (உ) நவச்சாரம் கழஞ்சி (உ) தேங்காய்ப்பால் படி (ந)கள்ளிப்பால் படி (வ)ஒன்றாய்க்கலந்து காய்ச்சி நெய்வடி த்துக்கொண்டுவேளை யொன்றிற்கு ஒருகாசிடைஉண்ணத்தீரும்

3-வது. திரிகடுகு பூண்டு இந்துப்பு ரசபற்பம் வெங்காரம் கற்காந்தம் இவைகளை ஒர்நிறையாய்க் கள்ளிப்பாலிலரைத்துக் குன்றிப்பிரமாணம் உண்டை செய்து நொச்சியிலையைப் பிட்டவித்துப் பிழிந்தசாற்றில் ஒருண்டை வீதம் (௬) வேளை கொள்ளத்தீரும்.

எரிகுன்மத்திற்கு.

வெள்ளாட்டுப்பால் தேங்காய்ப்பால் வகைக்குப்படி அரைக்கால் ஒன்ருய்க்கலந்து அதில் இந்துப்பு திப்பிலிவகைக்கு விராகனிடை (௧) பொடித்துப்போட்டுக் காய்ச்சி (௬) வேளை உண்ணத் தீரும்.

கழற்சிவேர்சாரணை கொடுவேலி நொச்சி நிலவாகைகொன்றை முருங்கை ஆதண்டை உகாய் வீழி செம்முள்ளி இவைகளின் வேர்ப்பட்டை சிவதைபூண்டு இஞ்சி இந்துப்பு சீந்திற்றண்டுமிளகு திப்பிலி வகைக்குப்பலம் (௧) இவைகளை முடக்கொத்தான் சாறுவிட்டரைத்து அரைப்படி விளக்கெண்ணெயிற் போட்டுக் கள்ளிப்பால் கழஞ்சு கூடவிட்டுக் காய்ச்சி வேளையொன்றிற்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ளத்தீரும்.

(இருபத்தெட்டாவது)

சகலகுன்மத்திற்கும் பொதுமுறை.

1-வது. நொச்சி தழுதாழை மாவிலிங்கம் இவைகளினிலைகளை ஒரளவாய்ச் சிதைத்துப் பிழிந்தசாறு ஆழாக்கு-வெள்ளுள்ளித்தயிலம்-ஆழாக்கு பெருங்காயம் பலம் (௧) பொடித்தும்போட்டுக்குழம்பாய்க் காய்ச்சி ஒருகரண்டியளவு (௰) நாள் கொடுக்கத்தீரும்.

2-வது. ஒமம் இந்துப்பு அதிவிடையம் ஒருதலைப்பூண்டு வகைக்குப்பலம் (௩) கடுகுரோகனி சாதிப்பத்திரி வகைக்கு விராகனிடை (௰) ஆடாதோடை நத்தைச் சூரி சத்திச்சாரணை இவைகளின் வேர் கருவேப்பிர்க்கு பிரண்டை வகைக்கொருபிடி இவைகளைப் பிரண்டைச்சாற்ருலாட்டி ஒரு கருங்கோழி மாமிசத்திற் பிசறி குறுணிப் பிரண்டைச்சாற்றில் வேகவைத்திடித் துலர்த்திச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் தேனிற் கொள்ளத் தீரும். புளி புகையிலை தள்ளவும்.

3-வது. ஒருபடி கரியுப்பில் எருமைமோர் வரிக்குமட்டிக் காய்ச்சாறு வகைக்குப்படி (க) இந்துப்பு வெடியுப்பு சவுட் டுப்பு வளையலுப்பு வகைக்கு விராகனிடை (க) ஒன்ருய்க்கலந்து காய்ச்சி ஒருவிராகனிடை வீதம் நீராகாரத்திற் கொள்ளத்தீரும்.

4-வது. ஒருதுலாம் வேப்பிலையைப் புதுச்சட்டியிற்போ ட்டு எரித்து நீருக்கித் திரிகடிப் பிரமாணம் தேனில் எட்டுநாள் கொள்ளத் தீரும், புளிதள்ளவும்.

5-வது. இருபது வெள்ளைப்பூண்டைத் தோல்நீக்கி ஒரு தேங்காயைத்திருகி அப்பூவுக்குள்வைத்துப் பிட்டவித்துப் பூவைத்தள்ளி அரைத்து வேளை ஒன்றுக்குக் கொட்டைபாக் குப்பிரமாணம் எட்டு நாட்கொள்ளத் தீரும்.

6-வது. மிளகாய் உப்பு எள்ளு இவைகளை ஓர்நிறையாய் வெதுப்பிப் பொடித்துத் திரிகடிப்பிரமாணம் ஆவின்நெய்யிற் கொள்ளத்தீரும். இவைகளெல்லாம் இச்சாபத்தியம்.

7-வது. பெருங்காயம்கழற்பருப்புவெள்ளுள்ளி சுக்குஇவை களை ஓர் நிறையாய்வெதுப்பி மெழுகுபோலரைத்துவேளை ஒன் றுக்கு ஒருகொட்டைப்பாக்குப் பிரமாணங் கொள்ளத்திரும்.

8-வது. சத்திச்சாரணைவேர் பலம் (ட்ரு) சதாவேரிக்கிழங்கு ஆயிற்பட்டை சித்திரமூலம் வெள்ளைப்பூண்டு முருங்கைப் பட்டை சிற்றுமணக்கின்வேர் நெருஞ்சில் வகைக்குப்பலம் (ட்ரு) இவைகளையிடித்து (ட்சு) படி தண்ணீரிற்போட்டு நாலுபடியாய் வற்றவைத்து அதில் திரிகடுகு கோஷ்டம் ஓமம் இந்துப்பு எவாச்சாரம் சவுக்காரம் காயம் திரிபலை ஆனைத்திப்பிலி சத்திச் சாரணைவேர்ப்பட்டை கொத்தமல்லி வகைக்குப்பலம் (உ) அரைத்துப்போட்டு நெய்படி (க) விட்டுக் காய்ச்சிவடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதங் கொள்ளத்தீரும்.

9-வது. இருபதுபலம் ஈருள்ளியில் தண்ணீர் தெளித்து இடித்துப் பிழிந்தசாறு படி 1, நெல்லிக்காய் இஞ்சி வீராணிக் கழங்கு இவைகளின் தனித்தனிச்சாறு பால் இளநீர் வகைக் குப்படி 1, ஒன்ருய்க்கலந்து ஒருபடியாய் வற்றவைத்து அதில் ஆவின்நெய் படி 1, கோஷ்டம் ஏலம் வெங்காரம் இந்துப்பு அரத்தைதிப்பிலி மல்லி கிராம்பு விசவாசி சேங்கொட்டை வகைக்குப்பலம் ஒன்றரை அரைத்துப்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் கொள்ளத்திரும்.

10-வது. வசம் புதிரிகடுகு ஓமம் கருஞ்சீரகம் சண்பகப்பூ அதிமதுரம் அபின் லவங்கப்பட்டை பெருங்காயம் திரிபலை இவைகளை எழு எருக்கிலைத் தொன்னைக்குள்வைத்து மூடி அதை ஒருபடி எருக்கம்பூவுக்கு மத்தியில்வைத்து ஒருபடி தண்ணீர்விட்டு மூடிவைத்து நீர்வற்றினபின் எடுத்து மருந்தையும் பூவையும் பஞ்சலவணமுங்கூட்டி வெந்ததொன்னையைச் சிதைத்துப் பிழிந்த சாற்றாலரைத்துப் பொடித்துத் திரிகடிப் பிரமாணம் (உ௰) நாள் கொள்ளத்தீரும் புளிபுகையிலை கரப்பான் பதார்த்தந் தள்ளவும்.

11-வது. காற்படி உப்பில் வெற்றிலை முருங்கை ஊமத்து இவைகளின் சாறு வெள்ளாட்டுப்பால் வகைக்குப்படி (வ) விட்டுக்கறுவறுத்துப் பொடித்து அதற்கு நிகர் சத்திச்சாரணைவேர்ச் சூரணங்கூட்டித் திரிகடிப்பிரமாணம் மண்டலங்கொள்ளத்தீரும்

12-வது. முருங்கை சத்திச்சாரணை சித்திரமூலம் இவைகளின் வேர்ப்பட்டை முடக்கொத்தான் சமூலம் மிளகு வெள்ளுள்ளி வகைக்குப் பலம் 1, காயம் பலம் கால் இவைகளையிடியிடித்துச் சூரணஞ் செய்துகொண்டு திரிகடிப்பிரமாணம் சிற்றாமணக்கெண்ணெயில் மத்தித்து உட்கொள்ளத் தீரும்.

13-வது. கரியுப்பு வெடியுப்பு இந்துப்பு வளையலுப்பு காந்தம் பெருங்காயம் வகைக்குப்பலம் 1. இவைகளைப்பொடித்து மூன்றுபடி ஆவின்பாலிற் கலந்து சுண்டக்காய்ச்சி யெடுத்துத் திரிகடிவீதம் வெந்நீரிற்கொள்ளத் தீரும்.

14-வது. காற்படி வேலிப்பருத்திச் சாற்றில் இந்துப்பு ஓமம் வகைக்குப்பலம் (க) திப்பிலிபலம் அரைக்கால் காயம் பலம் (வ) போட்டு வறுத்துப் பொடித்துத் திரிகடிப்பிரமாணம் கொள்ளத் தீரும்.

(இருபத்தொன்பதாவது)

சகலவாய்வுகளுக்கும் பொதுமுறை.

1-வது. வேப்பீர்க்கு மூக்கரைச் சாரணைவேர் கருவேப்பீர்க்கு முருங்கையீர்க்கு வகைக்கொருபிடி சுக்கு மிளகு மஞ்சள் வகைக்கு விராகனிடை (ந) இவைகளைச் சிதைத்து இரண்டுபடி சலத்திற் போட்டு அரைக்காற் படியாய் வற்றவைத்து போசனத்தின் பேரில் சாப்பிட்டு வாத்தீரும்.

2-வது. சீரகம் இந்துப்பு ஓமம் திரிகடுகு கருஞ்சீரகம் பெருங்காயம்இவைகளை ஓர்நிரையாய்வெதுப்பிச்சூரணித்துதிரி கடிப்பிரமாணம் தேனிலாவது நெய்யிலாவது உண்ணத்தீரும்.

3-வது. சுக்கு திப்பிலி மிளகுவெள்ளுள்ளி ஓமம் வாலுளு வையரிசி இவைகளை ஓர்நிரையாய்வெதுப்பி பனைவெல்லங் கூட்டி மெழுகுபோலரைத்துக் கொட்டைப்பாக்கு பிரமாணம் சாப்பிட்டு வரத் தீரும்

4-வது நற்சீரகம் கருஞ்சீரகம்திரிகடுகு ஓமம் பெருங்காயம் வகைக்குப்பலம் (வ) வெதுப்பிச் சூரணித்துக் கரியுப்பை எருக் கம்பழுப்புச் சாற்றாலரைத்து (ச) அல்லது (சூ) புடம்போட்டு பஸ்பம் பண்ணி அதைமேற்படி சூரணத்துக்கு நிகர்கூட்டித் திரிகடியளவு (எ) நாள் கொள்ளத் தீரும்.

5 வது. செவியம் கொடிவேலிவேர் திப்பிலி கண்டதிப்பிலி சுக்கு வகைக்குவிராகனிடை (ந) சிதைத்து இரண்டுபடி சலத் திற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து அதில் சாதிலிங் கத்தை உரைத்துக் கொடுக்கத் தீரும்.

6-வது. நற்சீரகம் கருஞ்சீரகம் திரிகடுகு திரிபலை திப்பிலி மூலம் சித்திரமூலம் இந்துப்புசவுட்டுப்பு வாய்விளங்கம் கடுகு ரோகணி இவைகளை ஓர்நிறையாய்ச் சூரணித்துத் திரிகடியளவு தேனிற் கொள்ளத்தீரும்.

7-வது. அசுவகந்தி நற்சீரகம் திரிகடுகு ஏலம் கிராம்பு அக்கிராகாரம் அரத்தை இவைகளை ஓர் நிறையாய் சூரணித் துத் திரிகடிப் பிரமாணம் தேனிற் கொள்ளத் தீரும்.

8-வது. இரண்டுபடி ஆவின்பாலில் (அ) பலம் பனைவெல் லம் போட்டு பாகு செய்து அதில் திரிகடுகு ஏலம் சீரகம் வகைக்குப் பலம் (க) வெதுப்பிப் பொடித்துப் போட்டுக் கிண்டி தேன் நெய் வகைக்குபடி (வ) விட்டு லேகியஞ்செய்து கொண்டு வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாக்குப் பிரமாணம் கொள்ளத் தீரும்.

9-வது. ஏலம் லவங்கம் குங்குமப்பூ சடாமாஞ்சில் மஞ் சிட்டி கடுகுரோகணி திப்பிலிமூலம் சாதிக்காய் லவங்கப்பட் டை வசவாசி சித்தரத்தை சித்திரமூலம் அதிமதுரம் நற்சீரகம் கல்லுப்பு குரசாணி ஓமம் வால்மிளகு வாய்விளங்கம் நிலவா கைவேர் வகைக்கு கழஞ்சு (ந) இவைகளைச் சூரணித்து அத

ற்கு நிகர் சீனிகூட்டித் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவரத் தீரும்.

(முப்பதாவது)

வாயுவுக்கு விரேசனம்.

1-வது. மிளகு இந்துப்பு வகைக்குக் கழஞ்சு (க) நற்சீரகம் (உ) சுக்கு அரியசிவ்தை வகைக்கு விராகனிடை (ரு) ஓமம் கழஞ்சு (ந) திப்பிலி கழஞ்சு (ச) கடுக்காய் கழஞ்சு (கரு) சத்திச் சாரணைவேர்ச் சூரணம் கழஞ்சு (10) இவைகளை நிழலிலுலர்த்திப் பொடித்துத் திரிகடிப்பிரமாணம் கொள்ள விரேசனமாகி வாயுதீரும்.

2-வது. கெந்தகம் இரசம் நேர்வாளம் திரிகடுகு காயம் வெள்ளுள்ளி கருஞ்சீரகம் அசமதாகம் வகைக்குக் கழஞ்சு (க) இவைகளைப் பொடித்து முற்றினதேங்காய்க்குள் ளடைத்துக் கண்ணில்முருங்கைமுளையறைந்துயேழுசீலை மண்செய்து புடம்போட்டு ஓடு நீக்கியறைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் உண்டைசெய்து தேனிற்கொடுக்க விரேசனமாகும் பத்தியம் மோரும் அன்னமும் வெந்நீருங் கொள்ளத் தீரும்.

3-வது. மல்லி வாய்விளங்கம் கடுகுரோகணி கடுக்காய் வாளம் இவைகளை ஓர்நிறையாய் இஞ்சிச்சாற்றாலாட்டிப் பருத்திவிரைப் பிரமாணம் உண்டைசெய்து மேற்படி சாற்றிலாவது மிளகுக் கியாழத்திலாவது கொடுக்கச் சகல வாயுவுந்தீரும்.

4-வது. திரிகடுகு கடுகுரோகணி தேசாவரம் வாய்விளங்கம் வகைக்கு கழஞ்சு (உ) சுத்திசெய்து முளைபோக்கின வாளம் கழஞ்சு (ய) இவைகளை இஞ்சிச்சாற்றால் மைபோலாட்டிக் குன்றிப் பிரமாணம் உண்டைசெய்து இஞ்சிச் சாற்றிலாவது பனைவெல்லத்திலாவது இரண்டுண்டை கொடுத்து வெந்நீர் குடிக்க நன்றாய் விரேசனமாகி சகலவாயுவும் மலக்கட்டுந் தீரும். முன்போற் பத்தியங்கொள்ளவும்.

5-வது. சிவதை பலம் (க) திரிபலை மல்லி கடுகுரோகணி தேசாவரம் இந்துப்பு செவியம் முத்தக்காசு திரிகடுகு கருஞ்சீரகம் நற்சீரகம் சிறுநாகப்பூ அன்னபேதி விலாமிச்சு வேர் வகைக்கு கழஞ்சு (ந) தேவதாரம் லவங்கப்பத்திரி கோஷ்டம் சந்தனம் பொரிகாரம் கஸ்தூரிமஞ்சள் சடாமாஞ்சில் வாய்

விளங்கம் வகைக்கு கழஞ்சு (கஉ) இவைகளை வெய்யலிலுலர்த்திப் பொடித்துத் திரிகடிப்பிரமாணம் இஞ்சிச்சாற்றிலிட சகல வாயு மலக்கட்டுந் தீரும். மற்ற வியாதிகட்கு அதததற்குரிய அனுபானங்களிலிட்டால் குணமாகும் பொரிமிளகுநீரும் அன்னமும் உப்புங்கூட்டிக் கடுகஞ்சியுங் கொள்ளலாம் இரவில் மிளகுக்கியாழம் கொள்ளவும்.

6-வது. சிவதை விராகனிடை (நய) திரிகடுகு வாய்விளங்கம் கிராம்பு லவங்கப்பட்டை கோறைக்கிழங்கு திரிபலை வகைக்கு விராகனிடை (க) வெய்யலிலுலர்த்திப் பொடித்து அதற்கு நிகர் சீனிகூட்டி திரிகடியளவு வெந்நீரிற்கொள்ள மலக்கட்டு நீங்கும் பத்தியம் மோரசனஞ் செய்யவும் இரவில் மிளகுக்கியாழங்கொள்ளவும் சகலவாயு பாண்டு வீக்கம் விஷநீர் கிராணி முதலானதும் நீங்கும்.

7-வது. சிற்றாமணக்கெண்ணெய் படி (உ) ஈருள்ளிச்சாறு தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு பெரும்பேய்க் குமட்டிக் காய்ச்சாறு வகைக்குப்படி (வ) ஒன்றாய்க்கலந்து அதில் கருஞ்சீரகம் சாதிக்காய் சாதிப்பத்திரி கிராம்பு அதிவிடையம் அதிமதுரம் சிறுநாகப்பூ சுக்கு வகைக்கு விராகனிடை (உ) கற்றாழஞ் சருகு வில்வக்கொழுந்து இலந்தங் கொழுந்து முசுமுசுக்கையிலை நீர்முள்ளியிலை வகைக்கு விராகனிடை (ரு) அரைத்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதங் கொள்ள (உ-ரு) விசை பிரவிர்த்தியாகும் பத்தியம் பொரிமிளகுசாறும் அன்னமும் இரவில் சுக்குக்கியாழங் கொள்ளவும் இப்படி (ச-ரு) முறை கொள்ள சகலவாயுவுந் தீரும்.

(முப்பத்தோராவது)

இரத்தவெள்ளைக்கு.

1-வது. ஆவரையரிசி படி அரைக்கால் நற்சீரகம் சந்தனம் சர்க்கரை வகைக்குக் கழஞ்சு (க) இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றாலரைத்துக் கலக்கி மூன்றுவேளை கொடுக்கத் தீரும்.

2-வது. ஆவரை வேர்ப்பட்டை விஷ்ணுகாந்தி சமூலம் வகைக்கு ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அறைத்து ஆவின் பாலிற் கரைத்து சர்க்கரை சேர்த்து மூன்றுநாள் கொள்ளத் தீரும்.

3-வது விஷ்ணுகாந்தி வேரையாவது அம்மான்பச்சரிசியை யாவது அல்லிவிரையையாவது ஒருஎலுமிச்சங்காய்ப் பிரமாணம்அரைத்து ஆவின்பாலிற்கலந்து மூன்றுநாள்கொடுக்கத்தீரும்

4-வது. முருங்கைப்பூச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப் படி அரைக்கால் வெல்லம் விராகனிடை (உ) ஒன்றாய்க் கலந்து மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

5-வது. சிறுகீரைச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப் படி அரைக்காற் கற்சுண்ணாம்புத் தெளிவு படி அரைக்கால் ஒன்றாய்க் கலந்து எட்டுநாள் கொடுக்கத் தீரும்.

6-வது. விடத்தலைக் கொழுந்தும் ஏலமும் அரைத்து எலுமிச்சங்காயளவெடுத்து தயிரிற் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

7-வது. சந்தனம் சண்பகப்பூ வகைக்குக் கழஞ்சி (க) காவிக்கல் பொன்மெழுகு வகைக்குக் கழஞ்சு (உ) இவைகளை முலைப்பால்விட்டரைத்து தூதுளங்காய்ப் பிரமாணம் உண்டை செய்து வேளை யொன்றுக்கு ஒருண்டை வீதம் அரைக்காற்படி முலைப்பாலில் எட்டுநாள் கொடுக்கத் தீரும்.

8-வது. பிரப்பங்கிழங்கு சங்கம்வேர்பட்டை வெள்ளறுகு சிவன்வேம்பு முற்றின வேப்பம்பட்டை வகைக்குப் பலம் (ய) இவைகளை யிடித்துச் சூரணஞ்செய்து திரிகடிப் பிரமாணம் (3) நாட்கொள்ளத் தீரும்.

9-வது. மின்னியிலைச்சாறுபடி அரைக்கால் எலுமிச்சங்காய்ப் பிரமாணம் வெல்லங்கலந்து மூன்றுநாட்கொள்ளத்தீரும்.

10-வது. பருத்தியிலைச்சாறு அரைக்காலில் கல்நார் எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்துப்போட்டு சீனிகலந்து மூன்றுநாட் கொடுக்கத் தீரும்.

11-வது.நெருஞ்சில் வேரை எலுமிச்சங்காய்ப்பிரமாணம் அரைத்து எருமை மோரில் மூன்றுநாட் கொடுக்கத்தீரும்.

12-வது. முருக்கம் வேர்ப்பட்டையை எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்து ஆவின்பாலில்(3) நாள் கொடுக்கத் தீரும்.

13-வது ஓரிலைத்தாமரைச் சாற்றில் சீனிகலந்து வேளை யொன்றுக்குக் காற்படி வீதம் (3) நாள் கொள்ளத் தீரும்.

14-வது. முருங்கைப்பூ கற்றாழஞ்சோறு வெண்ணெய் இவைகளை ஓர் நிறையாயரைத்து வேளை யொன்றுக்கு ஒரு மாங்காயளவு அந்திசந்தி மூன்றுநாள் சாப்பிடத் தீரும்.

15-வது. ஒருபிடி வல்லாரையைக் காற்படி ஆவின்பாலில் அரைத்துக் கலக்கி (ங) நாள் கொள்ளத்தீரும். மேற்படி பிரயோகங்கள் செய்யும்போது உப்புப் புளி நீக்கவும்.

(முப்பத்திரண்டாவது)

சீழ் வெள்ளைக்கு.

1-வது. கலைக்கொம்புஞ் சந்தனமும் வகைக்கு ஒரு கொட்டைப் பாக்களவு மோர்விட்டரைத்துத் தேனிற் குழைத்துண்ணத்தீரும்.

2-வது. வில்வவேரும் நெற்பொரியும் வகைக்குப்பலம்(ய)இடித்து(அ)படி தண்ணீர்பொட்டு ஒருபடியாய் வற்றவைத்துவேளை ஒன்றுக்கு அரைக்காற்படி வீதம் (சு) வேளைகொள்ளத்தீரும்.

3-வது. கோரைக் கிழங்கு விஷ்ணுகாந்தி மிளகு வகைக்குப் பலம் கஉ, ச-படி தண்ணீரிற் போட்டு ஒருபடியாய் வற்றவைத்து வேளை ஒன்றுக்கு அரைக்காற்படி வீதம் (சு) வேளை கொடுக்கத்தீரும்.

4-வது. நெல்லிக்காய் (10) தேற்றா விரை (20) நையத்தட்டி செவ்விளநீரில் ஒருநாள் ஊறப்போட்டு மறுநாள் காலையில் இறுத்து அதில் கலைக்கொம்பைக் கொட்டைப்பாக்களவு அரைத்துக் கலக்கிச் சீனிகலந்து 3-நாள் கொள்ளத் தீரும்.

5-வது. ஈருள்ளிச்சாறும் எலுமிச்சம் பழச்சாறும் நல்லெண்ணெயும் சமமாய்க் கலந்து வேளை ஒன்றுக்கு அரைக்காற்படி வீதம் (ங) நாள் காலையிற் கொள்ளத் தீரும்,

6-வது. ஓரிலைத் தாமரையும் நற்சீரகமும் சமனாய் அரைத்து வேளை ஒன்றிற்குக் கொட்டைப்பாக்களவு ங-நாள் கொள்ளத் தீரும்.

7-வது. நற்சீரகம் ஏலம் சிறுபுள்ளடி இவைகளை ஓர் நிறையாய் ஆவின்பாலால் விட்டிடித்துப் பிழிந்த சாறுபடி (வ) லில் சீனிகலந்து (சு) நாள் சாப்பிடத் தீரும். உப்பு புளி தள்ளவும்.

8-வது. நெருஞ்சில் வேரின் மேற்றோல் ஒருபிடி சுக்குத்தேர் (உ) சிதைத்து அரைப்படி நீரிற்போட்டு அரைக்காற்படி படியாய் வற்றவைத்து அதில் ஒரு விராகனிடை வெங்காரமும் கொஞ்சம் தேனும்கலந்து இப்படி (சு) வேளை சாப்பிடத்தீரும். ஆறுநாள்வரை உப்பு புளி தள்ளவும்.

9-வது ஆவின் நெய் பால் வகைக்குப் படி (க) வாழைப் பூச்சாறு மேற்படி கிழங்குச்சாறு வகைக்குப் படி (உ) ஒன்ருய்க் கலந்து அதில் நற்சீரகம் அமிர்தசர்க்கரை வகைக்குப் பலம் முக்கால் ஆவின்பாலா லரைத்துப்போட்டு மெழுகுபதத்தில் வடித்து நாளொன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உண்ணத் தீரும்.

10-வது பருத்திக்கொட்டைப் பால் படி (க) வெல்லம் பலம் (ச) கோழிமுட்டை (10) நல்லெண்ணெய் படி (வ, ஒன்ருய்க்கலந்து காய்ச்சி 3-நாள் சாப்பிடத் தீரும்.

11-வது ஆவின் நெய் படி (க) கீழ்க்காய் நெல்லிவேர் பலம் (ரு) விரலி மஞ்சள் பலம் (ரு) அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு கரண்டிவீதம் எட்டுநாள் கொள்ளத் தீரும். இவைகட்கு பத்தியம் முன்போற் கொள்ளவும்.

12-வது. மிளகை ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்து நல்லெண்ணெயில் மத்தித்து 3-நாள் சாப்பிடத் தீரும்.

13-வது. அத்திப்பிஞ்சைத் தேங்காய்பால் விட்டிடித்துப் பிழிந்த சாறுபடி அரைக்காலில் வெள்ளைக் குங்கிலியம் விராகனிடை (க) பொடித்துப் போட்டு 3-நாள் சாப்பிடவும்.

14-வது. அதிமதுரத்தைச் சூரணித்துத் திரிகடிப் பிரமாணம் நீராகாரத்தில் பத்துநாள் கொள்ளத் தீரும்

15-வது. குப்பைமேனி யிலையை உப்பில்லாமல் அவித்து மிளகும் அரிசியும் பொரித்துப் பொடித்துத்தூவி ஒரு மாங்காயளவு காலையில் 3-நாள் சாப்பிடப் பிரவிர்த்தியாகும்.

(முப்பத்தி மூன்ருவது)

வெள்ளைக்கு பொதுமுறை.

1-வது. ஒருபலம் சீனிக்காரத்தை ஆவின்பாலாலாட்டி வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து காடைப்புடம் போட்டு வேளை ஒன்றுக்கு ஒரு விராகனிடை வீதம் எலுமிச்சம்பழச்சாற்றில் 3-நாள் கொடுக்க நீங்கும். பத்தியம் மோருஞ்சோறுங்கொள்ளத் தீரும்-

2-வது. சிற்றிலைப் பாலாடையை எலுமிச்சங்காயளவு அரைத்து ஆவின்பாலிற் கலக்கி (ந) நாள் கொடுக்கப் பிரமியந் தீரும்.

3-வது வெள்ளாட்டுப்பால் எலுமிச்சம் பழச்சாறு மாம் பட்டைச்சாறு இவைகளை ஓர் நிறையாய்க் கலந்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

4-வது. ஒருதுட்டிடை வெந்தயத்தை இரவில் ஊறவைத் துக் காலையில் அரைத்து மோரிற் கலக்கி (3) நாள் கொடுக் கத் தீரும்

5-வது. நீர்ப்பூலாக் கொழுந்தை எலுமிச்சங்காயளவு அரைத்து ஆவின்பாலில் (3) நாள் கொடுக்கத் தீரும்.

6-வது. அத்திப்பிஞ்சை தேங்காய்பால் விட்டிடித்துப் பிழிந்து வெள்ளைக் குங்கிலியம் விராகனிடை (க) பொடித்துப் போட்டு வேளை ஒன்றுக்கு அரைக்காற்படி யளவு (3) நாள் கொள்ளத் தீரும்.

7-வது, ஒருபிடி கற்றாழை வேரை இளநீரிலரைத்துக் கலக்கிச் சீனிகலந்து (3) நாள் கொடுக்கத் தீரும்.

8-வது. துளசியிலையைப் பிட்டவித்து அரைக்காற் படி சாறுபிழிந்து அதில் ஒரு எலுமிச்சங்காயளவு வெண்ணெய் சேர்த்து (3) நாள் கொள்ளத் தீரும்.

9-வது. எலுமிச்சம் பழச்சாறு ஈருள்ளிச்சாறு பனங் கருப்புக் கட்டி இவைகளை ஓர் நிறையாய்க் கலந்து இரவில் பனியில் வைத்துக் காலையில் (3) நாள் கொள்ளத் தீரும்.

10-வது. பற்படாகத்தை எலுமிச்சங்காயளவு ஆவின்பா லிற் கலந்து சீனிகூட்டி (3) நாள் கொள்ளத் தீரும்.

11-வது. சுடுதருத்தி யிலைச்சாறும் நல்லெண்ணையும் சம னுய்க் கலந்து வேளை ஒன்றுக்கு அரைக்காற்படி வீதம் (3) நாள் சாப்பிட்டு 6-நாள் பத்தியமிருக்கத் தீரும்.

12-வது. சிவந்த கொட்டாங் கரத்தை ஈருள்ளி வகைக்கு ஒருபிடி வீதம் இடித்துச் சாறுபிழிந்து ஆழாக்கு நல்லெண் ணெய் கலந்து இந்தப்படி உ-நாள் கொள்ளத் தீரும்.

13-வது. வெள்ளைக்குங்கிலியம் பலம்(க)காசுக்கட்டிமேற் றோல் நீக்கின பூண்டு வசம்பு வகைக்குப் பலம் (வ) இவைகளை சிதைத்து ஒருபடி நல்லெண்ணையிற் போட்டு சூரிய புடம் வை த்துவேளை ஒன்றுக்கு ஒருகரண்டிவீதம் (உய)நாள்கொள்ளநாட் சென்ற வெள்ளையும் தீரும். பத்தியம் ஆவின்பால் நெய் தயிர் கூட்டவும்.

14-வது. வெள்ளைக் குங்கிலியம் சர்க்கரை பறங்கிப் பட்டை வகைக்குப்பலம் (ரு) பொடித்து வடிகட்டி நல்லெண் ணெயிலாவது ஆவின்நெய்யிலாவது ரசாயனஞ்செய்து அந்தி சந்தி கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவரத் தீரும்.

15-வது. சுண்ணும்புத் தெளிவு தண்ணீர் நல்லெண்ணெய் வகைக்குப்படி வீசம் ஒன்ருய்க் கலந்துட்கொள்ளத் தீரும்.

16-வது. பொன்னுங்காணி சிறுகீரை இவைகளின் மூலம்வ கைக்குஒருபிடி சிதைத்து அரைப்படி ஆவின்பாலிற்போட்டு அத் துடன் அரைப்படி தண்ணீர்கலந்து தண்ணீர்வற்றக்காய்ச்சிவடி த்து ஒரு எலுமிச்சங்காயளவு வெண்ணெயும் திரிகடிசீனியுங் கலந்து சாப்பிடவும் இந்தப்படி (ங) நாள் (சு)வேளைசாப்பிடத் தீரும். இப்பிரயோகங்களுக்கு முன்போற்பத்தியங்கொள்ளவும்

(முப்பத்திஞன்காவது)

நீர்க்கடுப்பு எரிவுக்கு.

1-வது. சருள்ளிச்சாறுபடி அரைக்காலில்வெங்காரம்விராக னிடை (க) பொரித்துப்போட்டு (ங) நாள் சாப்பிடத்தீரும்.

2-வது. இளநீரைக் கண்திறந்து அதில் சீரகம் சீனி பாசிப் பயறு வகைக்கு விராகனிடை (க) போட்டு ஓரிரவு வூறவைத்துக் காலையிலந்த மருந்தை எடுத்து அரைத்து இளநீரிற்கரைத்துச் சாப்பிடவும் இந்தப்படி (ங) நாள் (சு) வேளை சாப்பிடத்தீரும்.

3-வது. கீழ்க்காய் நெல்லியிலை ஒருபிடி சீரகம் விராக டை (க) அரைத்து எருமைத் தயிரிற்கலக்கி (ங) நாள் கொடு க்கத்தீரும். கடுக்காய் (க) சுக்கு (க) சீரகம் விராகனிடை (க) சருள்ளிப் பூடு (க) கீழ்க்காய் நெல்லி சமூலம்பிடி (க) இவை களை கியாழஞ்செய்துண்ணத் தீரும்.

4-வது. அரைக்காற்படி வெந்நீரில் சந்தனம் ஆவின் வெண் ணெய் வகைக்கு ஒரு கொட்டைப்பாக்களவு போட்டுச்சாப் பிட உடனே நிற்கும். வெந்நீரில் எலுமிச்சம்பழம் பிழிந்து கற் கண்டு கலந்து சாப்பிடத் தீரும்.

5-வது. எலுமிச்சம் பழச்சாறும் நல்லெண்ணெயுங் கலந்து சாப்பிடத் தீரும்.

6-வது. முத்தக்காசு ஆவரைவிரை தேற்ருவிரை புளியங் கொட்டை மேற்ருேல் இவைகளை வகைக்குப் பலம் (க) பொடி

த்து ஒருபடி இளநீரில் ஓரிரவு ஊறவைத்துக் காலமே (௩) தபா சாப்பிடத்தீரும்.

7-வது. மூன்று விராகனிடை நீர்முள்ளி விரையை ஆவின் நெய் விட்டு வெதுப்பிப் பொடித்து அரைக்காற்படி தேங்காய்ப்பாலிற் கலந்து மூன்றுநாள் சாப்பிடத்தீரும்.

8-வது. ஒருசிரங்கை ஆவின்பாலில் ஒரு கொட்டைப்பாக்களவு புத்தான் சோற்றை அரைத்துக் கலக்கிச் சாப்பிட நீர்க்கடுப்பு பிரமேகந்தீரும்.

9-வது. எலுமிச்சங்காயளவு கட்டுக்கொடியிலையை அரைத்துக் காற்படி சலத்திற் கலக்கி அதில் சீரகம் ஏலம் வகைக்கு ஒருவிராகனிடை பொடித்துப்போட்டு ஒரு துட்டிடை சீனி கலந்துண்ணத்தீரும்.

(முப்பத்தைந்தாவது)

கல்லடைப்புக்கு.

1-வது. சங்கிலை ஈருள்ளி பச்சைநெல்லுமி இவைகளை ஓர் நிறையாயிடித்துச் சாறுபிழிந்து வேளை ஒன்றுக்குக் காற்படி சாறு கொடுக்க உடனே கல்தெறித்து நீரிறங்கும்.

2-வது. ஒருபலம் வெடியுப்பைச் சட்டியிலுருக்கி ஒருபடி சலம்விட்டு அரைப்படியாய் வற்றவைத்திறுத்து அதில்கோவைத்தண்டை யிடித்துப் பிசைந்து யிறுத்து ஒருவிராகனிடைவெங்காரத்தைப் பொரித்துப்போட்டு வேளை ஒன்றுக்குக் காற்படியாக இருநேரங்கொள்ளக் கல்தெறித்து நீரிறங்கும்.

3-வது. நெருஞ்சிவேர் பூணைவேர் சிறுகீரைவேர் சீரகம் வகைக்குப் பலம் (க) சிதைத்துப் போட்டுக் கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும்.

4-வது. கோவைத்தண்டை யிடித்துப் பிழிந்தசாறுபடி(௨) பொரித்த சீனிக்காரம் சுண்ணாம்பு வகைக்கு விராகனிடை (க) பொடித்துப் போட்டுக் கொடுக்க கல்தெரித்து நீரிறங்கும்.

5-வது. நெருஞ்சில் சிறுபூளை மாவிலிங்கு பேராமுட்டி இவைகளின் மூலம் வகைக்குப்பலம் (௰) நசுக்கி பத்துபடிநீரிற் போட்டு ஒருபடியாய் வற்றவைத்து நாளொன்றுக்கு கால்படி வீதங் கொடுக்கத் தீரும்.

6-வது. முள்ளிலவு நாவல் பூலா வெட்பூலா முக்தக்காசு நன்னாரி முல்லை சீந்தில் செந்தாமரை சிற்றாமுட்டி சீரா செங்கழு நீர் சிறுகீரை விராலி வெட்டிவேர் விலாமிச்சம்வேர் பொன்னாங்காணி வகைக்குப் பலம் (க) நாலுபடி இளநீரிற்போட்டு அரைப்படியாய்க் கியாழஞ்செய்து கொடுக்கத் தீரும்.

(முப்பத்தாறுவது)

சதையடைப்புக்கு.

1-வது. முற்றினகோழிக் கல்லீரலி லிருக்கிற சிறுகல்லும் வெள்ளரி விரையும் பூநாகமும் வெல்லமும் வகைக்கொரு கொட்டைப்பாக்களவு அரைத்து ஆவின்பாலிற் கலக்கி (சு) வேளை கொடுக்கத் தீரும்.

2-வது. நாயுருவி சிறுநெரிஞ்சில் வாழைச்சருகு எருள்ளி சிறுபூளை இவ்வைகளின் சாம்பல் வகைக்குப்படி அரைக்கால் சலத்திற் கலக்கி தெளிவிறுத்து அதில் பொரிகாரம் அதிமதுரம் வகைக்கு விராகனிடை (உ) பொடித்துப் போட்டு நாளொன்றுக்குக் காற்படி விதம் (ங) வேளைகொடுக்க நீரடைப்பு கல்லடைப்பு சதையடைப்புத் தீரும்.

3-வது. ஆவின்நெய் படி (க)ல் மூக்குவெட்டிச் சுத்திசெய்த சேங்கொட்டை (யு) நறுக்கிப்போட்டுக் காய்ச்சிக் கருப்பாய் வருகிற பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒருகாசிடை வீதம் (யு) நாள் கொள்ளத்தீரும்.

(முப்பத்தேழாவது)

நீரடைப்புக்கு.

1-வது. கற்றாழஞ்சோற்றில் கடுக்காயைப் பொடித்துப் போட்டுக் கொஞ்சநேரம் வைத்திருந்து பிழிந்து வடிகட்டின தண்ணீர்படி (வ) பொரித்த வெங்காரம் விராகனிடை (க) பனைவெல்லம்பலம் (வ) சிதைத்துப்போட்டுக் கொடுக்க விரோசனமாகி நீரிறங்கும்.

2-வது. பசலி நீலக்கத்தரியிலை வகைக்குப்பலம் (ய) பிடித்துக்கியாழஞ்செய்து காற்படிவீதங் கொடுக்கத்தீரும்.

3-வது. குருஞ்சாவிலை கல்லத்திப்பட்டை கடுகுரோகணி திரிகடுகு நாயுருவி கொழுஞ்சிவேர் வகைக்குப்பலம் (க) யிடித்து ஒருபடி சலத்திற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும் இந்தப்படி (ந) வேளை கொடுக்கத்தீரும்.

4-வது. ஆதண்டையிலையை ஆவின்மோர் விட்டரைத்து வூறவைத்துப் பிழிந்து கொடுக்கத்தீரும்.

5-வது. சுறுமீன் தலையிலிருக்கிற இரண்டுகல்லை யெடுத்துலர்த்தி இளவெந்நீரிலுரைத்துக் கொடுக்க உடனே சலமிறங்கும்.

6-வது. கோவைத்தண்டுசாறு தேங்காய்ப்பால் வகைக்குப் படி அரைக்கால் ஒன்றாய்க்கலந்து நற்சீரகம் விராகனிடை (க) பொடித்துப் போட்டுக் கொள்ளத்தீரும்.

7-வது. அண்டத்தோல் வெள்ளரிவித்து எலிப்புழுக்கை வெங்காரம் இவைகளைச் சற்றுவெதுப்பிப் பொடித்து (வ) படி சுரையிலைச்சாற்றிற் கலந்து கொடுக்கத்தீரும்.

8-வது. நீராகாரத்திற் பழங்கூரை வைக்கோலை வூறவைத்துப் பிசைந்திறுத்து கால்படி சாப்பிட நீரடைப்பு கல்லடைப்பு சதையடைப்புத் தீரும்.

9-வது. வெங்காரம் கர்ப்பூர சிலாசத்து வகைக்குப்பலம் (க) எலுமிச்சம் பழச்சாற்றாலாட்டி வில்லைதட்டி சுண்ணாம்புக் குகையில் வைத்துச் சிறுபுடம்போட்டு ஒரு விராகனிடைவீதம் தேனிற் கொடுக்க நீரடைப்பு கல்லடைப்பு சதையடைப்பு வெட்டை நீர் சிருப்பு கடுப்பு பிரமேகம் முதலானவை தீரும்.

10-வது. வெடியுப்பு பொரிகாரம் அண்டத்தோல் சோகி கர்ப்பூர சலாசத்து சீனிக்காரம் வகைக்குப்பலம் (க) எலுமிச்சம்பழச்சாற்றால் மைப்போலாட்டி வில்லை தட்டிக் காயவைத்துக் கற்சுண்ணக் குகையில் வைத்துச் சில்லுபோட்டு மூடி கதுவாலிப் புடம்போட்டு ஒருவிராகனிடை பற்பத்தை மேற்காட்டிய கியாழமுதலானதுகளிலாவது இளநீரிலாவது ஈருள்ளிச் சாற்றிலாவது எலுமிச்சம் பழச்சாற்றிலாவது தேனிலாவது கொள்ள நீரடைப்பு கல்லடைப்பு சதையடைப்பு நீர்ச்சிருப்பு முதலானவைதீரும்.

(முப்பத்தெட்டாவது)

சகலமான மேகவெட்டைக்கு.

காற்படி தேற்றான் விரையை நன்றாய் உரைத்துக் கழுவித்தட்டி ஆவின்பாலில் மூன்றுநாள் ஊறப்போட்டு ஆட்டித் திரட்டி அதனளவு ஆவின் வெண்ணெயுங் கூட்டிப்பிசைந்து அதற்கு நிகர் ஆவின்நெய்யில் வேகவைத்துப் பொன்னிறமாக வருஞ் சமயத்தில் சீரகம் ஏலம் வகைக்குக் கழஞ்சு (உ) சாதிக்காய் சாதிப்பத்திரி குங்குமப்பூ கிராம்பு சிறுநாகப்பூ தாளிசப்பத்திரி அதிமதுரம் கருஞ்சீரகம் லவங்கப்பட்டை சதகுப்பை திரிகடுகு வகைக்கு விராகனிடை (ரு) இடித்து வடிகட்டின சூரணத்தையும் மூன்றுபலம் சீனியையும் தூவிக்கிண்டி வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவரத் தீரும்.

2-வது. ஆவின்நெய் படி (உ௦) யில் பொரித்த நற்சீரகம் பலம் (ரு) கற்கண்டு பலம் (உ௦) பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு வேளை ஒன்றிற்கு ஒருகரண்டி வீதஞ் சாப்பிட்டு வரத் தீரும்.

3-வது. நாயுருவிவேர் பலம் (உ௰) இடித்துப் பத்துபடி தண்ணீரிற் போட்டு நாலுபடியாய் வற்றவைத்து வடித்து அதில் தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு ஆவின்பால் நெய் வகைக்குப்படி (க) கூடவிட்டு முத்தக்காசு நன்னாரிவேர் ஏலம் லவங்கம் அதிமதுரம் கோஷ்டம் திப்பிலி வகைக்குக்கழஞ்சு (உ) அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சிவடித்து சர்க்கரை பலம் (ச) கூட்டி வேளை ஒன்றிற்கு ஒருகரண்டி வீதம் சாப்பிட்டுவரத் தீரும்.

4-வது. ஏலம் அதிமதுரம் சீரகம் சுக்கு திப்பிலி நெல்லிமுள்ளி தாளிசப்பத்திரி மல்லி கோஷ்டம் சந்தனம் பச்சைக்கர்ப்பூரம் கஸ்தூரி குங்குமப்பூ கஸ்தூரி மஞ்சள் சடாமாஞ்சில் சாதிக்காய் இலவம்பிசின் சிறுநாகப்பூ நன்னாரிவேர் தண்ணீர் விட்டான் கிழங்கு நிலப்பனை சந்தனம் அமுக்குறாவேர் முத்தக்காசு வெட்டிவேர் விலாமிச்சம்வேர் நெருஞ்சில்வேர் இவைகளை ஓர் நிறையாய் ரவியிலுலர்த்திச் சூரணித்து அதற்குநிகர் சீனியும் சீந்திற்சர்க்கரையுங்கூட்டித் திரிகடிப்பிரமாணம் ஒருமண்டலங்கொள்ளத்தீரும்.

5-வது. வெள்ளைக் குங்கிலியம் கற்கண்டு வகைக்குப்பலம் (எ) பொடித்துக்கொண்டு வேளைஒன்றுக்கு ஒருபலம்வீதம் அரைப்பலம் நல்லெண்ணெயில் மத்தித்து நாளொன்றுக்கு இருநேரமாக ஏழு நாள் சாப்பிட்டுவர நீரிழிவுவெட்டைதீரும்.

6-வது. தேங்காய்ப்பால் பருத்திவிரைப்பால் ஆவின்பால் வகைக்குப்படி (க) ஒன்றாய்க்கலந்து அதில் பறங்கிப்பட்டை சுக்கு மிளகு நற்சீரகம் வகைக்குப்பலம் (க) பொடித்துப் போட்டு ஒன்றரைப் படியாய் வற்றவைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்குக் காற்படி விகிதம் சாப்பிட்டுவரத் தீரும்.

7-வது. புங்கம்வேர்ப் பால்படி (வ) தேங்காய்ப்பால் ஆவின்பால் வகைக்குப்படி அரைக்கால் ஒன்றாய்க் கலந்து அதில் ஓரிலைத்தாமரை வேரை அரைத்து ஒரு எலுமிச்சங்கா யளவு கரைத்து இந்தப்படி (ங) நாள் சாப்பிடத் தீரும்.

8-வது. பழம் பாசிச்சாறு படி அரைக்கால் நல்லெண் ணெய்படி அரைக்கால் ஒன்றாய்க் கலந்து அதில் நற்சீரகம் ஈருள்ளி வகைக்குப்பலம் (வ) அரைத்துக் கலக்கி இந்தப்படி மூன்றுநாள் சாப்பிடத்தீரும்.

9-வது. கொடிக்கள்ளிக் கொழுந்தை யரைத்து ஒரு எலு மிச்சங்காயளவு மிளகு (ஙஉ) அரைத்து ஒன்றாய்க் கலந்து வேளைஒன்றுக்கு அரைக்கொட்டைப்பாக்களவு (ங) நாள்சாப் பிட பத்தியம் ஆவின்மோரும் அன்னமுங் கொள்ளத்திரும்.

10-வது. ஒருபடி புங்கம்பூவில் ஒருபடி ஆவின்நெய்யைச் சிறுகச் சிறுகவிட்டுப் பொன்னிறமாய் வதக்கிக்கொண்டு அந்தி சந்தி திரிகடியளவு சாப்பிட்டு அன்னத்தில் ஆவின்நெய் மிகுதி யாய்ச் சேர்த்து சாப்பிட்டுவர வெள்ளை வெட்டை மேகவெடி மேகசூலை புண் தீரும்.

11-வது. சிற்றாமணக் கெண்ணெய் படி (உ) ஈருள்ளிச் சாறுபடி (வ) ஒன்றாய்க்கலந்து அதில் பறங்கிப்பட்டை பலம் (ச) கஸ்தூரிப்பட்டை பலம் (எ) கொல்லங் கோவைக்கிழங்கு பலம் (அ) இவைகளை அரைத்துப்போட்டு புளியம்விறகு தவிர மற்ற விறகாலெரித்து பதத்தில்மடித்து ஆள் பலமறிந்து அரசிரங்கை யெண்ணெய் கொடுக்கப் பத்துவிசை பிரவிர்த்தி யாகும், உப்பு புளி நீக்கி நீர்க்கஞ்சி கொள்ளப் பேதிநிற்கும், இந்தப்படி வாரத்துக்கொருவிசை மூன்று முறைகொள்ள மேற்

படி வியாதிகள்தீரும். மேற்படி எண்ணெயைச் சாப்பிடுவதற்கு முதல் நாளிலும் அதைச்சாப்பிட்ட மறுதினத்திலும் விளக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்யவேணும்.

12-வது. பருத்தியிலைச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப் படி அரைக்கால் ஒன்றாய்க் கலந்து அதில் வடிகட்டின சுண்ணாம்பு ஒருபாக்களவு கலந்து இந்தப்படி 3-நாள் சாப்பிடத்தீரும்.

13-வது. பழச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி அரைக்கால் ஒன்றாய்க்கலந்து இந்தப்படி (௫) நாள் காலையில் சாப்பிடத் தீரும்.

14-வது. நாரத்தையிலை மாம்பட்டை வகைக்கு ஒரு தேற்றாவிரைப்பிரமாணம் அரைத்து எருமைத்தயிரிற் கலந்து (௫) நாள் சாப்பிடத் தீரும்.

15-வது நிலக்குமிழி யிலையை ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்து ஈருள்ளி விராகனிடை (௰௫) யும் புதுகலசத்தில் அரைக்காற்படி தண்ணீர் விட்டு அதிற்போட்டு பனியில் வைத்துக் காலையிற் பிழிந்து சாப்பிடவும் இந்தப்படி (௫) நாள் சாப்பிடத்தீரும்.

16-வது. (௱) கதலிவாழைப் பழத்தைத் தோல்நீக்கிக் ஒரு பீங்கானிற்போட்டு அதில் பச்சைமூங்கிலின் மேற்றோலை இடித்த தூள்விளாங்காய்ப் பிரமாணமும் பச்சரிசியுமி ஒரு சிரங்கையும் போட்டுப் பிசைந்து முப்பது நாழிகை வைத்திருந்து அப்பால் இழைத்துணியில் முடிந்து தொங்க விட்டால் நீரிறங்கும் அந்த நீர்படி (க) ஒன்றாய்க்கலந்து சூரியபுடம் ஒரு நாள் வைத்து மற்றாநாள் ஒருபலம் சர்க்கரை கலந்து காய்ச்சிப் பதத்தில் யிறுத்து வைத்துக்கொண்டு வேளை ஒன்றிற்கு அரை வீசம்படி விகிதம் சாப்பிட வெள்ளை வெட்டை நீர்க்கடுப்பு எரிவு தீரும்.

17-வது. மேற்சொல்லிய பழச்சார்படி (க) சற்கண்டு பலம் (௬) ஒன்றாய்க் கலந்து காய்ச்சி ஓயாமற் கிண்டிக் கொடுத்துக் குருகிவரும்போது நெய்படி அரைக்கால் விட்டுக்கிண்டி பாகை ஒருயிலையில் விட்டு ஆற்றித் திரட்டிப்பார்க்க மெழுகுபோலிருந்தால் அந்தப்பதத்தி லிறக்கிவைத்துக் கொண்டு வேளை ஒன்றிற்கு கொட்டைப்பாக்குப் பிரமாணம் பவளபற்பம் வைத்துண்ணத் தீரும்.

18-வது. ஆனையறுகை யிடித்ததூள்படி (ச)ல் பதினறுபடி சலம் விட்டு ஒருநாள் ஊறவைத்துப் பிசைந்து வடிகட்டித்தண் ணீரைத் தெளியவைத்து வடித்துப்போட்டு உரைந்திருக்கிற அடி மண்டியை உலர்த்திய பொடி பலம் (க) சந்தனம் அகிற் கட்டை கிராம்பு சோம்பு ஏலம் லவங்கப்பத்திரி கார்கோலரிசி வெட்பாலையரிசி தேற்றுவிரை சிற்றுமுட்டி அதிமதுரம் வகைக் குப் பலம் க-வீதம் நிழலிலுர்த்திச் சூரணஞ்செய்து திரிகடிப் பிரமாணம் வெண்ணெயிற் சாப்பிட்டுவர மேற்படி ரோகங்கள் தீரும். நீர்க்கடுப்பு உடனே நிற்கும்.

(முப்பத்தொன்பதாவது)

கிரந்தி ரோகத்திற்கு.

1-வது. பரங்கிப்பட்டை நற்சீரகம் கருஞ்சீரகம் திப்பிலிமூ லம் கிராம்பு வகைக்குக் கழஞ்சு க-ஈருள்ளி பலம் ரு-நிலப்பனை க்கிழங்கு புளியமடற்கிழங்கு சத்திச்சாரணைக் கிழங்கு வெருக ங்கிழங்கு சங்கம்வேர் நன்னரிவேர் கரணைக்கிழங்குகஞ்சாவேர் வெள்ளறுகு அமுக்குறாக் கிழங்கு கருஞ்சூரைப்பட்டை வகை க்குப் பலம் உ-இவைகளை யரைத்து ஒருபடி விளக்கெண்ணெ யிற்போட்டுக் காய்ச்சிவடித்து வேளை ஒன்றுக்கொரு கரண்டி வீதம் சாப்பிட்டுவரச் செங்கிரந்தி அரிகிரந்தி பொரிகிரந்தி செவ்வாப்புத் தீரும்.

2-வது. ரசகர்ப்பூரம் கெந்தி கருஞ்சீரகம் பரங்கிப்பட்டை இவைகளை ஓர் நிறையாய் கையாந்தகரைச் சாற்றாலாட்டி தான் றிக்காயளவு உண்டைசெய்து வேளையொன்றுக்கு ஒருண்டை வீதம் சர்க்கரையில் ௧0-நாள் சாப்பிட்டுப் பத்தியம் உப்பு புளி தள்ளி ஆவின்பால் நெய் கூட்டிவரத் தீரும்.

3-வது. பூவரசம்பட்டை ஈருள்ளி சிறுசெருப்படை இவை களின் சாறு வகைக்குப்படி ௨-விளக்கெண்ணெய்ப்படி முக்கால் ஒன்றாய்க்கலந்து அதில் இரதம் இரசகர்ப்பூரம் வீரம் கெந்தகம் கடுக்காய் கஸ்தூரிமஞ்சள் வகைக்கு விராகனிடை ரு-சாரம் துருசு வகைக்கு விராகனிடை உ-இவைகளை யரைத்துப்போ ட்டுக் காய்ச்சிப் பதத்திலிறுத்து வேளை ஒன்றுக்கொரு கரண்டி வீதம் புளி புகை கரப்பன் பதார்த்தம் நீக்கி ௧0 நாட் கொள் ளத் தீரும்.

4-வது. சங்கங்குப்பி யிலைச்சாறு நுணாயிலைச்சாறு கொடிக்கள்ளியை வாட்டிப் பிழிந்தசாறு ஆவின்பால் நல்லெண்ணெய் இவைகளை யோரளவாய்க் கலந்து வேளை ஒன்றுக்கு வ-படிசாற்றில் அரைக்கால் விராகனிடை ரசகர்ப்பூரத்தை உரைத்து ௩-நாள் ரூ-வேளை சாப்பிட்டு ஆவின்பால் வெள்ளாட்டுப் பால் வெந்நீர் கலந்துக்கொண்டு ஏழுநாள் உப்பை வறுத்துக்கூட்ட கிரந்திகளும் ரணங்களும் கைகால் பிடிப்புந் தீரும்.

5-வது. பாங்கிப்பட்டை பலம் ரூ-கருஞ்சீரகம் நற்சீரகம் ஓமம் குருசாணி ஓமம் சாதிக்காய் சாதிப்பத்திரி கிராம்பு அதிவிடையம் திரிபலைசுக்கு திப்பிலிமிளகு சமுத்திராப்பழம் வகைக்குப் பலம் ௨-வெள்ளறுகு அமுக்கிராக்கிழங்கு நில ஆவரைவேர் எருக்கம்வேர் கொடிவேலிவேர் வகைக்குப் பலம் அரை இவைகளை யிடித்துத் திரிகடியளவு பத்தியமாய் மண்டலங் கொள்ளத் தீரும்.

6-வது. ஒருபாண்டத்தில் ஒருபடி தண்ணீர்விட்டு அதின் வாயில் சீலையால் வேடுகட்டி அதின்பேரிற் கள்ளிக்கொழுந்தை வைத்துப் பிட்டவித்து ஒருசிரங்கைச் சாறுபிழிந்து அதில் ஒரு துட்டிடை நல்லெண்ணெய்கலந்து ௩-நாள் கொடுத்து ரூ-நாள் பத்தியமாயிருக்கச் செங்கிரந்தி கருங்கிரந்தி தடிப்புத் தீரும்.

7-வது. வாகைக்கொழுந்தை யிடித்து ௨-படி சாறுபிழிந்து அதில் ஒரு துட்டிடை நல்லெண்ணெய்கலந்து ௩-நாள் கொடுத்து (ரூ) நாள் பத்தியமாயிருக்கக் கள்ளிப்பூக் கிரந்தி தீரும்.

8-வது. மஞ்சணத்திக் கொழுந்தை யிடித்துச்சாறுபிழிந்து வேளை ஒன்றுக்கு அரைக்காற்படிவீதம் மூன்று நாள் சாப்பிட எச்சிக்கிரந்தி தீரும்.

9-வது. ஏரண்டத்தெண்ணெய் படி (க) சங்குங்குப்பி கழற்சி செப்பு நெருஞ்சி சிறுகாஞ்சோரி முருக்கு முருங்கை நீர்முள்ளி இவைகளின்சாறு வகைக்குப்படி (வ) சிறுசெருப்படைச்சாறுபடி அரைக்கால் ஒன்றாய்க் கலந்து அதில் கெந்தி தாளகம் பரங்கிப்பட்டை கடுக்காய் நிலவாகை வேர் செந்தொட்டிவேர் சித்திரமூலம் கருஞ்சீரகம் வசம்பு இவைகளை யரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்துச் சூட்டுடன் (டு) கழஞ்சு சீனிகூட்டி வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒருகரண்டி வீதஞ்சாப்பிட்டு மேற்படி எண்ணெயை ஒன்றைவிட்டொருநாள் ஸ்நானஞ் செய்துவர கிரந்திகரப்பன் சூலை முடக்கு மொளிக்கட்டு ரண

முதலானதுந் தீரும் பத்தியம் கைப்பு புளிப்பு கரப்பன் பதார்த்தம் நீக்கவும்.

10-வது. கழற்சி சுடுதூரத்தி சங்கங்குப்பி நொச்சி கவுதும்பை கண்டங்கத்தரி நிலப்பனைக்கிழங்கு இவைகளின் சாறு சிறுநீர் சிற்ருமணக்கெண்ணெய் வகைக்குப்படி (க) ஒன்ருய்க் கலந்து அதிமதுரம் முத்தக்காசு சாதிக்காய் கிராம்பு கோஷ்டம் கோரோசனை சுக்கு கார்கோலரிசி ஏலம் வகைக்கு விராகனிடை (க) அரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்து வேளை ஒன்றுக்கொரு கரண்டி வீதம் (எ) நாள் சாப்பிடக் கருங்கிரந்தி செங்கிரந்தி கள்ளிப்பூக்கிரந்தி மேகவெட்டை மேகவாயு முதலான மேகரோகங்கள் தீரும் உப்புப் புளி கரப்பன் பதார்த்தந் தள்ளிப் பத்தியம் நீர்க்கஞ்சி கொள்ளவும்.

11-வது. காற்படி நல்லெண்ணெயில் கெந்தகம் அரிதாரம் சாதிலிங்கம் வகைக்கு விராகனிடை (கo) கொடிவேலி தைவேளை நத்தைச்சூரி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு விராகனிடை (ரு) சுத்திசெய்த வாளம் விராகனிடை (க) அரைத்துப் போட்டுக் காய்ச்சி (ந) நாள் காலையில் ஒருகரண்டி விகிதம் கடும்பத்தியமாய்ச் சாப்பிட்டு (ய) நாள் விளக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானஞ்செய்து உப்புவறுத்துக் கூட்டிக்கொள்ளத்தீரும்

12-வது. விளக்கெண்ணெய் படி (க) சங்கு சங்கங்குப்பி வெள்ளறுகு சுடுதூரத்தி சின்னி அவுரி காட்டாமணக்கு கழற்சி வகைக்குச் சாறுபடி (வ) திப்பிலி திப்பிலி மூலம் செவியம் சித்திரமூலம் ஓமம் சீரகம் கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் அரத்தை சுக்கு வகைக்கு விராகனிடை(ரு)பாங்கிப்பட்டை விராகனிடை (உய) இவைகளை யரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து வேளை ஒன்றுக்கொரு கரண்டி விகிதம் (ந) நாள் (சூ) வேளைகொள்ளக்கிரந்திப் புண் சூலைக்கடுப்பு செங்கரப்பன் கட்டுக் கரப்பன் வெடிகரப்பன் அரையாப்புதீரும். பத்தியம் கைப்புப் புளிப்பு தள்ளவும்.

13-வது. சுத்திசெய்த சேங்கொட்டை வெள்ளுள்ளி நாய்வேளைக் கொழுந்து வகைக்குப் பலம் (க) இவைகளெல்லாம் மெழுகுபோ லிடித்துப் பத்துவில்லைகள் செய்து தீயில் வெதுப்பி வேளை ஒன்றுக்கு ஒருவில்லையாக (ரு) நாள் சாப்பிட கிரந்தி பவுத்திரம் யோனிச்சூலை புற்று வெடிசூலை வாதந் தீரும்

பத்தியம் உப்பில்லாமல் நீர்க்கஞ்சி கொள்ளவும் ஒன்பதாநாள் விளக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானஞ்செய்து வரவும்.

(முப்பத்திமூன்றுவது)

சிரங்குக்கு - பிளாஸ்திரி.

1-வது. வெள்ளைக் குங்கிலியத்தையும் வெள்ளை மெழுகையும் ஓர் நிறையாய்ச் சட்டியிலிட்டு உருகும்போது தேங்காய் நெய்வார்த்து உருக்கித் தண்ணீரில் வடிகட்டி எடுத்து வைத்துக்கொண்டு துணியிற்பூசி அனலில் வாட்டிப்போட ரணங்கள் சிரங்குப்புண் தீரும்.

2-வது. வெள்ளைக் குங்கிலியம் பலம் (ரு) ரசகர்ப்பூரம் விராகனிடை (ரு) தேங்காய் நெய்விட்டு அரைத்து அப்பால் தண்ணீர்விட்டு தவளம்போ லாகும்வரை குழவியால் மத்தித்துப் புண்ணிற்போட ஆறும்.

3-வது. ரசம் விராகனிடை (க) கெந்தகம் விராகனிடை (க) மிருதார்சிங்கி நற்சீரகம் வகைக்கு விராகனிடை (உ) கருஞ்சீரகம்விராகனிடை (சு) துத்தம்விராகனிடை அரை இவைகளை வெண்ணெயில் மெழுகுபோலாட்டிச் சிரங்கிற்பூச ஆறும்.

4-வது. நல்லெண்ணெயும் மெழுகும் உருக்கியதில் வங்க செந்தூரம் விராகனிடை (ஙு) காவிக்கல் மிருதார்சிங்கி மிளகு வகைக்கு விராகனிடை (க) துத்தம் விராகனிடை (உ) இவைகளைப்பொடித்துத் தனித்தனியே போட்டுக்கிண்டி எடுத்துக்கொண்டுபோடச் சகலரணமும் நெருப்புப் பட்ட புண்ணும் ஆறும்.

5-வது. தேங்காயெண்ணெயும் வெள்ளை மெழுகையும் சேர்த்துருக்கியதில் ரசகர்ப்பூரம் துருசுமிருதார்சிங்கி சமமாய்ப்பொடித்துத் தூவிக்கிண்டி யெடுத்துப் போடத் தீராச்சிரங்குதீரும்.

6-வது. நல்லெண்ணெயில் (மஉ) விராகனிடை தேன் மெழுகைப்போட்டு உருக்கியதில் வெள்ளைக்குங்கிலியம் விராகனிடை (க) மிருதார்சிங்கி விராகனிடை (கவ) துருசு விராகனிடை (உ) இவைகளை வெவ்வேறே பொடித்துத் தூவிக்கிண்டிக் கல்வத்திட்டு தண்ணீர் விட்டரைத்து நாலாறு தபா கழுவிச் சிமிழில் வைத்துக்கொண்டு துணியிற் றடவிப்போடச் சகலவிதபுண்களும் ஆறும்.

7-வது. எருக்கம் வேர்ப்பட்டை அவுரிவேர்ப்பட்டை வெந்தோன்றிக் கிழங்கு குன்றிமணிப் பருப்பு காஞ்சிரைவிரை தலைச்சுருளிவேர் கஞ்சாயிலை வசம்பு பெருங்காயம் இவைகளை ஓர்நிறையாய் வெள்ளுள்ளித் தயிலத்தாற் களிம்புபோலாட்டிச் சிமிழில் வைத்துக்கொண்டுபூச கண்டமாலை பவுத்திரம் விப்புருதி வீக்கம் புடைப்பு தொடைவாழை அரையாப்பு முதலியவை வற்றும் உடையும்.

8-வது. வேப்பெண்ணெயில் பூண்டு வேம்பாடம்பட்டை துத்தம் கெந்தகம் சூதம் காசுக்கட்டி துருசு நாபிக்கிழங்கு குங்கிலியம் குக்கில் மிருதார்சிங்கி தாரம் இவைகளைப் பொடித்துப் போட்டுக் காய்ச்சி மேற்படி ரணங்களிற்றடவ ஆறும்.

அக்கிக்கு.

ஊமத்திலையை அரைத்து எருமை வெண்ணெயிற் குழைத்து அக்கிமேற் பூசிவர மாறும்.

காதுவளர.

நிலப்பனைக்கிழங்கு அமுக்குருக்கிழங்குஆனைத்திப்பிலிசெங்கழுநீர்க்கிழங்கு இவைகளை ஓர்நிறையாய் எருமை வெண்ணெயில் களிம்புபோலரைத்து காதிற்றடவிவர காது நன்றாய் வளரும்.

மயிர்க்கூறுக்கு.

மயிரைக்கரிக்கி எருமை வெண்ணெயிற் குழைத்துப் போட்டாலும் பசலியிலையை யரைத்து எருமை வெண்ணெயிற் குழைத்துப்போட்டாலும் மஞ்சளைச்சுட்டு நல்லெண்ணெயிலு ரைத்துப் போட்டாலும் நீங்கும்.

(முப்பத்தைந்தாவது)

தீச்சுட்ட புண்ணுக்கு.

1-வது. சுண்ணாம்பும் எருக்கம்பூவும் ஓர் நிறையா யரைத்துப்பூச தீச்சுட்ட காந்தல் நீங்கும், திருவாத்தி யிலையை வறுத்துப்பொடித்துப் புண்ணிற்போட ஆறும். ஒருசட்டியிற்புளித்த தண்ணீர்விட்டு வேடுகட்டி திருவாத்தியிலையையிடித்து அதன்மேல் வைத்துப் பிட்டவித்துப்புண்ணில் வைத்துக்கட்டத்தீரும்

2-வது. வேப்பங்கொழுந்தைச் சிதைத்து ஆமணக்கிலையிற்பொதிந்து உமிக்காந்தலிற் புதைத்து வெந்தபதத்தி லெடுத்துக் கட்டிவரத் தீச்சுட்டப் புண்ணீங்கும்.

பித்த வெடிப்புக்கு.

1-வது. உப்பு செம்மரிச்சாணி அரசம்பட்டை வகைக்குப் பலம் (க) எருக்கம்பூ பலம் (உ) இவைகளையிடித்து வடித்துத் துணியில் முடிந்து ஒத்தணஞ்செய்து சீரகம் விராகனிடை (க) சுண்ணாம்பு விராகனிடை (உ) துருசு விராகனிடை (ரு) இவைகளை எருமை வெண்ணெயிற் களிம்புபோ லரைத்துவெடிப்பிற் போட்டுவர நீங்கும்.

2-வது மருதிலையில் ஆவின்பால் விட்டிடித்துப் பிழிந்த சாற் காற்படி வீதம் (உ) நாள் காலையிற்கொடுத்து பத்தியம் பாலும் அன்னமுங்கொடுத்து ஏழாநாள் தலைக்குத்தண்ணீர் வார்க்கத்தீரும்.

கன்னவீக்கத்திற்கு.

சிற்றகத்தியிலையும் வசம்பும் அரிசியும் ஓர்நிறையா யரைத்துப் பூசினாலும், அமுக்குறாவேரும், அரிசியும் ஓர்நிறையா யரைத்துப் பூசினாலும் வற்றும்.

குத்து-வெட்டு-வில்-உண்டை-கல்லெறி காயத்துக்கு.

எலுமிச்சம் பழத்தை யிரண்டாய் நறுக்கிச் சட்டியிலிட்டு நல்லெண்ணெய் கொஞ்சம் விட்டு முறுகக்காய்ச்சி யெடுத்துத் துணியில்வைத்து ஒத்திட்டு அப்பால் துடரி முட்பூலா நிலக்குமிழ் ஆவாரை சிறுகளா நத்தைச்சூரி நாயுருவி இவைகளின் வேர்ப்பட்டை வேம்பாடம் பட்டை இலந்தைத் தம்பலம் கடுக்காய் கோஷ்டம் அதிமதூரம் செவ்வல்லிக் கொடி கரியபவளம் குங்கிலியம் கரியுப்புசதைகுப்பை சிறுவழுதலை முள்ளிலவம்பட்டை இவைகளை ஓர்நிறையாய் அரைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சிப் போடத்தீரும்.

வெட்டுக் காயத்துக்கு.

சீரா செங்கழுநீர் இலையையாவது சதையொட்டி இலையையாவது சிதைத்து வெட்டுக்காயத்தில் வைத்துக்கட்ட ஆறும்.

மூலிகைமர்மம் நான்காம் பாகம்,

முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

அட்டவணை.

பெயர்.	பக்கம்.
மூலிகையின் விசேடமும்-சாப நிவர்த்தியும்.	3
சாபநிவர்த்தியின் கிரமம்.	4
சாபநிவர்த்தி மூலமந்திரம்.	5
சர்வதொழிலுக்கும் உடற்கட்டு.	5
வசியச் சக்கரம்.	6
குளிசமாடிகையில் கட்டிக்கொள் வதற்குசூட்சுமவசியச்சக்கரம்.	6
வசிய மூல மந்திரம்.	7
ஸ்தம்பனம்.	7
ஸ்தம்பனச் சக்கரம்.	8
ஸ்தம்பன மூலமந்திரம்.	8
மாதமுழுக்கில்லாபெண்களுக்கு.	9
கர்ப்ப விருப்புருதிக்கு.	11
கர்ப்ப வாய்விற்கு.	11
பிள்ளையில்லாத பெண்களுக்கு.	11
பிள்ளைபெற மாட்டாதவர்க்கு.	15
பிள்ளைபெற மாட்டாதவர்களுக்கு முன்ஜாக்கிரதை.	16
வயற்றில்மரித்த பிண்டம் வெளி	16
முலைப்பால் நிருத்த.	17
பாலில்லாத பெண்களுக்கு.	18
ஸ்தனமில்லாத பெண்களுக்கு.	20
திரளாத பெண்களுக்கு	20
பெண்கள் பெரும்பாட்டுக்கு.	22
முலைக்காம்பு ரிணத்திற்கு.	25
தலைப்பேன் சாக.	25
வாயிலும் மூக்கிலும் இரத்தங் கக்குவதற்கு.	26
கண்ணோய்க்கு.	27
விக்கலுக்கு.	28
இரத்த விக்கலுக்கு.	30
பசிதீபனத்திற்கு.	31
பீநிசத்திற்கு.	32
மூளைமூலத்திற்கு.	34
மூலரோகங்களுக்கு மருந்து.	35
மேற்படி வேறுவித மருந்து.	36
சீழ் மூலத்திற்கு.	36
மேற்படி வேறுவித மருந்து.	36
இரத்த மூலத்திற்கு.	36
முளை மூலத்திற்கு.	36
சகலமூலத்திற்கும் பொதுமுறை	37
கிராணிபேதிகளுக்கு மருந்து மூலக்கிராணிக்கு.	39
வாய்வுக்கிராணிகளுக்கு மருந்து	40
அதிசாரபேதிக்கு மருந்துகள்.	41
அண்டவாய்வுக்கு மருந்துகள் மேற்படி வியாதியின் குணம்.	43
சிகிச்சை.	43
வயற்றுக் கடுப்போடு கூடிய பேதிகட்டு.	46
சிகிச்சை.	46
அக்கினிமந்த வாயுபெருமலுக்கு	49
அஜீரணவாயுவுக்கு.	49
மந்தவாய்வுக்கு.	50
பித்தவாய்வுக்கு.	50
ஆனந்த வாயுவுக்கு.	51
குன்மரோகங்களுக்கு மருந்து வாதக்குன்மத்திற்கு.	51
பித்த குன்மத்திற்கு.	52
சத்தி குன்மத்திற்கு.	52
எரிகுன்மத்திற்கு.	53
சகலகுன்மத்திற்குபொதுமுறை	53
சகலவாய்வுகளுக்குபொதுமுறை	55
வாயுவுக்கு விரோசனம்.	57
இரத்தவெள்ளைக்கு.	58
சீழ் வெள்ளைக்கு.	60
வெள்ளைக்கு பொதுமுறை.	61
நீர்க்கடுப்பு எரிவுக்கு.	63
கல்லடைப்புக்கு.	64
சதையடைப்புக்கு.	65
நீரடைப்புக்கு.	65
சகலமான மேகவெட்டைக்கு.	67
கிரந்தி ரோகத்திற்கு.	70
சிரங்குக்கு பிளாஸ்திரி.	73
அக்கிக்கு.	74
காதுவளர.	74
மயிர்க்கூறுக்கு.	74
தீச்சுட்ட புண்ணுக்கு.	74
பித்தவெடிப்புக்கு.	75
கன்ன வீக்கத்திற்கு.	75
குத்து-வெட்டு-வில்-உண்டை கல்லெறி காயத்துக்கு.	75
வெட்டுக் காயத்துக்கு.	75

இங்கிலீஷ் தமிழ்

வைத்திய சிகாமணி.

நமது இந்தியாதேசத்திற்குத் தாய்வீடாகிய சீர்மை என்னும் லண்டன் பட்டணத்தில் அச்சிட்டிருந்த பாக்கெட்சயிஸ் பிரஸ்க்கிரிப்ஷன் புத்தகத்தைக்கொண்டு அதற்கு நேரான அர்த்தம் விளக்கும்படி தமிழ்பாஷையில் மொழிபெயர்த்து இத்துடன் இந்து சமஸ்தான ஆயுர்வேதமுறைகளையும் சிலவற்றை சேர்க்கப்பட்டு 1000. ஆயிரம் முறைகள் ஒரே புத்தகரூபமாயிருப்பதன்னியில் ஒருபக்கத்தில் இங்கிலீஷ் பாஷையிலும் அதற்கு நேர்பக்கத்தில் தமிழ் பாஷையிலும் அச்சிட்டிருப்பதால் இங்கிலீஷ் அல்லது தமிழ் இருபாஷையிலும் ஆண்டனுபவிக்கலாம் ஷை முறைகள் ஒவ்வொன்றையும் எந்த டாக்டர் அல்லது எந்த வயித்தியர்கள் கையாண்டிருந்து இஃது உண்மையானதென்று வெளிவிட்டிருந்தனரோ அவரவர்களின் பெயரா அந்தந்த முறைகளின் பக்கத்திலேயே அச்சிடப்பட்டிருக்கிறது.

உயர்ந்தபதிப்பு இதன் விலை ரூபா-3.

சிவவாக்கியம் ஆயிரம்பாடல்.

சப்தரிஷிகளில் ஒருவராகிய பிருகுமகாரிஷியின் புதல்வரானசிவவாக்கியர் என்னும் யோகமூர்த்தியானவர் திருவாய்மலர்ந்தருளிய பாடல்களில் அச்சுக்கு வராதிருந்த சில நூற்றுக்கணக்கான அனேக பாடல்களும் சிவவாக்கியர் அவதாரஞ்செய்த திவ்வியசரித்திரத்துடன் 1000-ஆயிரம் பாடல்கள் ஒரேபுத்தகமாய் உயர்ந்தகடிதத்தில் அச்சிட்டிருக்கின்றமையால் வேண்டிய புண்ணியவான்கள் எம்முடையவிலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை அணா-8.

நவக்கிரக நவகண்ட ஆரூடம்.

யாதாமொருவர் ஆரூடங் கேட்க வந்தவர்களை 108-ல் குறையச் சொல்லும்படி கேட்க அவர் சொன்ன தொகையை 9-ல் கழித்துமிச்ச லெக்கத்தை முன் சீட்டில் குறித்துக்கொண்டு இந்த லெக்கப்படி புத்தகத்தைப் பார்வையிட்டு பலாபலன் சொல்லச் சரியாயிருக்கும் இத்துடன் அகஸ்தியர் அருளிய பஞ்சபூத ஆரூடமும் அடங்கியிருக்கிறது.

இதன் விலை அணா-8.

சிறுமணவூர். முனிசாமி முதலியார் அண்டு ஸன்ஸ்,

நெ-12. சட்டண நாய்க்கன்வீதி, சூளைபோஸ்டு, மதராஸ்.

கிராமமுன்சீப்கோட்.

கம்ப்ளீட்மானுயல்.

இப்புத்தகம் கிராமமுன்சீப், மணியம், கர்னம் முதலான கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், பூஸ்திதி விசேஷமுடைய பெருந்தன்மையான குடிகளுக்கும், பெரிதனக்காரருக்கும்,இனும்தார், சோத்திரியம்தார்,மிட்டாதார், ஜமீன்தார் முதலான சகல உத்தியோகஸ்தர்களுக்கும் மிகவும் உபயோகமான சட்டங்களும் இந்தியன் பினல்கோட் புதியகிரிமினல் புரோசீடர் கோட் இவற்றில் முக்கியமான பிரிவுகளும் கிராமபொலீஸ்ரூல்களும் ரெவுனியூ லிமிடேஷன் ரிஜிஸ்ட்ரேஷன் பஞ்சாயத்து கோர்ட்டுகெட்டணம் தேவஸ்தான ஆக்ட் முதலியனவும் நாளதுவரையில் செலாமணியாகிய எல்லா சீர்த்திருத்தங்களும் சேர்த்து (கிராம முன்சீப் கோட் கம்ளீட்மானுயல்) என்னும் பெயர்கொடுத்து அச்சிட்டிருக்கிறது-50-பவுன் கிளேஸ் கடிதம் ராயல்சயிஸ் பெரிய பதிப்பு.

இதன் விலை ரூபா 3 0 0

இந்தியா சாட்சி ஆக்ட்டு.

இந்த சாட்சிஆக்டில் முன்சீப் கோர்ட்டு, சிவில் கோர்ட்டு, கிரிமினல் கோர்ட்டு, செஷன் கோர்ட்டுமுதலிய எல்லா கோர்ட்டுகளின் சாட்சி நிபந்தனைகளும் சாட்சிகளின் யோக்கியதா பரீட்சைகளும், இன்னவிதமாய் சாட்சிவிசாரிக்க வேணுமென்கிற அமைதிகளும் அனேகர்கூடிய சாட்சி பரிவர்த்தனைகளும் இன்னசாட்சி கூடும் கூடாதென்பதையும் சுலபமாய் தெரிந்துகொண்டு நடத்த வேண்டிய ரூல்சுகள்யாவும் அடங்கியிருக்கிறது.

இதன் விலை அணு -12.

புதிய ஸ்டாம்பு ஆக்ட்டு.

இந்தியா தேசத்தில் எல்லாஜில்லாக்களும் கண்காணி தோட்டதொழிற சாதனங்களும் கப்பல் வியாபாரிகளுக்குறிய நிபந்தனங்களும் சாதனம் பிரிவினை ஒப்பந்தம் குத்தகை பலவித உடன்படிக்கை தருமநிர்ணயம் சீதனசாசனம் பங்குகள் கூலிகள் வாயதா இன்ஷூரன்சு பவர் ஆப் அடர்னி ரத்துச்சீட்டுகள் ட்ரூன்சுபர் மதிப்புநிர்ணயம் இதரமான யெல்லா விவகாரங்களைக்குறித்தும் ஸ்டாம்புகளும் ஸ்டாம்புகட்டணங்களும் இவ்வளவென்பதை சுலபமாய் தெரிந்துக்கொள்ளலாம்.

இதன் விலை அணு-8.

8-வது ஆக்ட்டு.

குத்தகைத் தொகை வசூல்செய்வதைக்குறித்து நடத்தவேண்டிய நடவடிக்கைகளும், குத்தகைதார்கள் இனும்தார்கள் நடந்துகொள்ளவேண்டிய யோர்ப்பாடுகளும், தாசில்தார் ஜமீன்தார் முதலியவர்கள் நடத்தவேண்டிய நடவடிக்கையைக் குறித்தும், நிலத்துக்குறியோர் மனுசெய்யவேண்டிய அம்சங்களும் அடங்கியது.

இதன் விலை அணு-8.

நாரதர் கலகம் 4 பாகம்.

நேரிசை வெண்பா.

நான்மறையுமாராய்க்கில் நாரதனாதன்கலகம்
மீனினத்தின்மேலாகும் மேதினியில்—கானினம்போல்
யான்பெரிதென்றெள்ளேனு மாற்றலுர வேண்டாங்காண்
நான்முகத்தை நின்முகத்தால் நோக்கு.

4, வேதம் 6, சாஸ்திரம் 18, புராணம் 7, ஸ்மிருதி 2, யிதிகாசம் முதலிய முதநூல் சார்பு நூல் வழிநூல் முழுதும் விடாமற் படித்தாலொழிய நாரதர் கலகங்கள் உலகத்தாருக்குவிளங்காதென்று நீண்டநாள்ஆராய்ச்சிசெய்து சி-முனிசாமி முதலியாரால்யெழுதப்பட்டது இந்த நாரதர்கலகம் 4. பாகமும் படித்தபேர்கள் சகலசாஸ்திரமும் கற்றுணர்ந்த வித்துவானென்பதற்கு ஐயமில்லை. ஆகையால் நான்முகத்தை நின்முகத்தால்நோக்கு என்றெழுதத்துணிபு.

சில சரித்திரங்களின் பெயரை மாத்திரம் இதனடியிற்காண்க.

நாரதர் கலகரகசியம்
நாரதர் க்ருச்சாபம்வந்த வரலாறு
நாரதர் இராமாயணக்கலகம் செய்தது
நாரதர் பத்மாசூரனிடம் கலகம் செய்தது
நாரதர் மிருகண்டேயரிடம் கலகம்செய்தது
நாரதர் ருகமணியிடம் கலகம் செய்தது
நாரதர் உஷாவினிடம் கலகம்செய்தது
நாரதர் அகத்தியரிடம் கலகம்செய்தது
நாரதர் தேவேந்திரனிடம் கலகம்செய்தது
நாரதர் மகாவிஷ்ணுவிடம் கலகம் செய்தது
நாரதர் பார்வதியிடம்கலகம் செய்தது
நாரதர் கெந்தருவரிடம்கலகம் செய்தது
நாரதர் தருமரிடம்செய்தகலகம்
நாரதர் சொன்ன எமசபைச்சிறப்பு
நாரதர் சொன்ன வருணசபைச்சிறப்பு
நாரதர் சொன்னபிரமசபைச்சிறப்பு
நாரதர் சூரியனிடம் செய்தகலகம்
நாரதர் கரகண்டனிடம் செய்தகலகம்
நாரதர் கவுசிகரிடம் செய்தகலகம்
நாரதர் வல்லாளரிடம் செய்தகலகம்
நாரதர் சுக்ரீவனிடம்செய்தகலகம்
நாரதர் பாகவத உற்பத்திசொன்னது
நாரதர் வியாசருக்குஅரிப்பிரபாவம்சொன்னது
நாரதர் சித்திரகேதுவின் சோகந்தீர்த்தது
நாரதர் இந்திரனைத் தூண்டியது
நாரதர் தேவேந்திரனுக்குஆத்மமுத்திகாட்டியது
நாரதர் பரபிரம்ம தெரிசனஞ்செய்தது
நாரதர் இந்திரன் நந்தவனத்திற் கலகஞ்செய்
நாரதர் பூர்வீகபிறப்பும்சாபமும்
நாரதர் லக்ஷ்மி பார்வதி சரஸ்வதிகலகம்செ
நாரதர் எமனிடம் செய்தகலகம்
நாரதர் ஸ்ரீராமரிடம் செய்தகலகம்
நாரதர் திருமூர்த்திகளிடம்செய்தகலகம்
நாரதர் சுகவியாசருக்குபதேசம்செய்தது
நாரதர் ஸ்ரீராமரைக்கண்டது
நாரதர்வியாசரிடம்மாயைவிசாரணைசெய்தல்
நாரதருக்கு குரங்குமுகமானது
நாரதர் விவாகம் செய்துகொண்டது
நாரதருக்கு ஸ்ரீரூபம் லபித்தது
நாரதர் தாலத்துவஜன் மனைவியானது
நாரதர் பழயபடி புருஷரூபம் பெற்றது
நாரதர் பிரமனைக்கண்டது
நாரதர் ஜென்மாந்தரம்
நாரதர் கவிபுருஷனைக்கண்டது
நாரதர் தேவிபூசை சொன்னது
நாரதர் தருமநந்தனரிடம் செய்தகலகம்
நாரதர் ஊர்வசியை நாணச்செய்தது
நாரதர் மாயை மயக்கம்தெளிந்தது
நாரதர் விநாயகருக்கு கலியாணம்செய்தது
நாரதர் வள்ளி கல்யாணம்முடித்தது
நாரதர் பரிச்சித்து மரணத்தை விசாரித்தது
நாரதர் பாண்டவ வம்ச விசாரணை

இம்மாதிரி இன்னும் அனேக சரித்திரங்கள்சேர்ந்தது நான்குபாகமாகும்.

நாரதர்கலகம் முதற்பாகம்	விலை	அணா	6
ஷ இரண்டாம்பாகம்	விலை	,,	6
ஷ மூன்றாம்பாகம்	விலை	,,	6
ஷ நான்காம்பாகம்	விலை	,,	6

ஷ நான்குபாகமும் ஒரே கட்டடம் புல்காலிகோ பைண்டு ரூபா 1 8 0

பிரபஞ்ச உற்பத்தி.

தேவர் மனிதர் விலங்கு வர்ணாஸ்ரமம் உலகம்.

சகலஉற்பத்தியுமடங்கியது 640. சயிட்டு பெரியபுத்தகம்

1. உலகபேதம். பிரபஞ்சமென்னும் உலகவுற்பத்தி, உலகஅளவு, உலகத்தின் வயது, காலப்பிரமாணம், கற்பாந்தப்பிரளயம், நைமித்தியப்பிரளயம், பிராகிருதப் பிரளயம், பதினான்குலோகப்பிரமாணம், அந்தந்தலோகங்களில் வசிக்கும் ஜீவராசிகள் ஆகாயத்தைச் சேர்ந்த அண்டங்களின் அளவு, அந்தந்த அண்டங்களில் வசிக்கும் தேவர்கள் கிரகங்கள் முதலிய ரூபநாம பேதங்கள், சுத்தத்தீவுகளின் விஸ்திரணமும் அண்ட அளவு, பிரமாண்டக்குறிப்பு, முதலியனவும் அடங்கியிருக்கின்றன.

2. மதபேதம். இந்துமதமும் இதிலுள்ள நூறுகணக்கான சைவ வைணவ பேதங்களும், ஆஸ்திகமதம், நாஸ்திகமதம், பௌத்தமதம், சீனதேசமதம், சௌராஷ்டிரமதம், துலுக்குமதம், கிருஸ்து, ரோமர், கிரேக்கர், எகிப்த்து, ஸ்காந்திநேவியர், மெக்சிகோ, கினியா, பெனின், அட்ரூ, கான்கோ, அங்கோலியர், அரக்கான், காப்பிரிகள் தார்த்தாரியர், ஜப்பான், சீயம், பெருவியன் ஜாவா, இலங்கைத்தீவார், டைகொ, பிலப்பியன், போர்னியோ, சுமித்திரா, மலாயா, லாப்லாந்தியர், மிசிசிபி, பிடலாடிரன், சாரபிதீவார்மதம் முதலிய எல்லாமதபேதங்களும் அவரவர் வணங்கும் தெய்வ பேதங்களும் அதுகளுக்குறிய பூசை பலி முதலிய பேதங்களும் ஆலயபேதங்களும் இந்த பிரபஞ்சவுற்பத்தி என்னும் ஒரே புத்தகத்திற் காணலாம்.

3. தெய்வபேதம். பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் முதலிய திருமூர்த்திகளின் அவதாரங்களும், அவர்களின் படை, கொடி, விருது மனைவி முதலிய காரணங்களும், கணேசர், சுப்பிரமணியர், நவக்கிரகங்கள், திக்குப்பாலர்கள், முதலாக முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், அஷ்டவசுக்கள், கருடகாந்திருவர், சித்தவித்தியாதரர், அப்சரஸ்திரீகள் சரித்திரமும் கூறப்பட்டிருக்கின்றது.

இந்த பிரபஞ்சவுற்பத்தி என்னும் சாஸ்திரமானது தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ், துலுக்கு முதலிய எல்லாபாஷைகளிலுமிருந்து மொழிபெயர்த்து எழுதியது. இதை சகல ஜாதியாரும் சர்வமதத்தினரும் வாசிக்கத்தகுந்த பொதுவான்சாஸ்திரமென்றறிக.

ஆதன் விலை ரூபா **2**.

சிறுமணவூர். முனிசாமி முதலியார் அண்டு ஸன்ஸ்,
நெ-12. சட்டண நாய்க்கன்வீதி, சூளைபோஸ்டு, மதராஸ்.